பாண்டகு வண்டினங்கள். பாண் - பாட்டு. பாட்டுக்குத்தகுதியான வண்டினங்கள். அதாவது - பிறப்பே பிடித்து பாட்டேபொழுது வேறொன்றறியாதனவாயிருக்கை. பண்கள் பாடி மதுப்பருக. பிரிதி ப்ரகர்ஷத்தாலே காதாவான பண்களைப் பாடிக்கொண்டு மதுபானம் பண்ணிச் செல்லும்படியாக. தோண்டலுடைய மலை. திருச்சோலைகள் ஒருகாலும் வாடாமல் நித்யவஸந்தமாய்ச் செல்லும்படி ஜலத்தையுடைத்தான மலை. தொல்லைமாலிருஞ்சோலையதே. திருவனந்தாழ்வானே திருமலை யாழ்வானாய் வந்து நிற்கையாலே, அநாதியாய்க்கொண்டு பழையதாய் மாலிருஞ்சோலையென்னும் திருநாமத்தையுடைத்தாயிருக்கிறதுவே- அப்பன் மலை. தோண்டல்- ஜலம் ... ... கூ.

மூ—கனங்குழையாள் பொருட்டாக்கனை பாரித்தரக்கர்தங்கள்
இனங்கழிவேற்றுவித்த வெழிற்றேளெம்மிராமன்மலை
கனம்கொழுந்தெள்ளருவிவந்து சூழ்ந்தகன்ஞாலமெல்லாம்
இனங்குழுவாடுமலை யெழின்மாலிருஞ்சோலையதே. எ.

355

பதவுரை.

கனம்— பொன்னை [கின்றுள்ள
கொழி — கொழித்துக்கொண்டு வரா
தெள்— தெளிந்த
அருவி— அருவியிலே
அகல்— பரம்பின [ரும்
ஞாலம் எல்லாம்— பூமியிலுள்ளாரெல்லா
வந்து சூழ்ந்து— வந்து சூழ்ந்துகொண்டு
இனம் குழு— திரள் திரளாக
ஆடும்— நீராடா நின்றுள்ள
மலை— திருமலையாய்
எழில்— எல்லாநன்மைகளும் வாய்ந்த
மாலிருஞ்சோலை அதே-;
கனம்— பொன்னால் செய்யப்பட்ட
குழையாள் பொருட்டா— காதணியையுடைய பிராட்டிக்காக
கணை— திருச்சரங்களை
பாரித்து— பரப்பிப் பாரித்துக்கொண்டு
அரக்கர் தங்கள் இனம்— ராக்ஷஸகுலத்தை
கழு— அம்புகளாகிற சூலத்திலே
ஏற்றுவித்த— ஏறும்படி பண்ணின
எழில்— வீராஸ்ரீயால்வந்த அழகுமிக்கிருக்கிற
தோள்— தோளையுடையனும்
எம்— எமக்கெல்லா முபகாரகனான
இராமன்— ஸ்ரீராமன் வர்த்திக்கிற
மலை— திருமலையாம்.

வ்யா. ஏழாம்பாட்டு. கனங்குழையாள் பொருட்டா. கனம் - பொன். பொன்னாலே செய்யப்பட்ட காதுப்பணியையுடையவள் காரணமாக. இவள் காதும்காதுப்பணியுமான கோர்த்தி எப்போதும் பெருமாள் திருவுள்ளத்திலே இடக்கும்போலே காணும்; (க) “பெஹா ரஹ ஹகஜுஷ ஷிஷவூகுஷுஜிஷாகஷு” என்று இவர் தம்முடைய காதுப்பணியும் முகமுமான சோத்தியை அநுகூலர்காண ஆசைப்பட்டிருக்குமாபோலே. கணைபாரித்து. அவளைப் பிரிந்தகாள் தொடங்கி, நினைத்தநினைத்தபோதெல்லாம் பிரித்தவர்கள் நிரஸிக்கையிலுண்டான கறுவுதலாலே திருச்சரங்களைத் தெரிந்து பரப்பிப் பாரித்துக்கொண்டிருந்தென்னுதல். அன்றிக்கே, யுத்தகாலத்தன்னிலே “வாளிபொழிந்த” என்கிறபடியே திருச்சரங்களை யுத்தபூமியெங்கும் பரப்பி யென்னுதல். அரக்கர் தங்களினம் கழுவேற்றுவித்த. ராக்ஷஸ

(க) “யேசாருசுபகுண்டலம் - முகந்த்ரக்ஷ்யந்திராமஸ்ய.”

ருடைய திசை, * கூர்வாயம்புகளான கழுக்களிமேல ஏற்றுவித்த. கழுப்போலே உடலைப் பிளந்து பறுபோடிருவ கிற்கையாலே, அப்பை "கழு" என்கிறது. அன்றிக்கே, "கழுகே றுவித்த" என்று பாடமாகில், ராக்ஷஸருடைய திசைக்கொன்று கழுகுகளேறி ஜீவிக்கும் படி பண்ணினவனென்னுமை. எழில்தோளெம்மிராமன்மேல. விரஹாயால் வந்த அழகை யுடைத்தான தோளையுடையனாய், ஜாநியான பிராட்டிக்கு உதவுகையாலே அவளுடைய ப்ரஜைகளான நமக்கெல்லாம் உபகாரகனாய், அழகாலும் குணங்களாலும் ஸர்வரையும் ரமிப்பிக்கையாலே "ராமன்" என்னும் திருநாமத்தையுடையவன், அவதாரத்திற் பிற்பாடார்க்கும் உதவுகைக்காக எழுந்தருளி நிற்கிற மலை.

கனங்கொழிதேள்பாருவி. பொன்னைக்கொழித்துக்கொண்டு வாராநின்றுள்ள தெளிந்த அருவியிலே. வந்துசூழ்ந்தகல் ஞாலமெல்லாம்: ப்ரப்பையுடைத்தான பூமியிலுள்ளாரெல்லாரும் வந்து சூழ்ந்து கொண்டு. இனங்குழுவாடும்மலை. திரள் திரளாக நீர்த்தமாடாநிற்கும் மலையான. எழில்மாலிருஞ்சோலையதே. ஸர்வப்ரகாரவிலக்ஷணமாயிருந்துள்ள மாலிருஞ்சோலையாகிற வதுவே- இராமன் மலை. ... ... எ-

மூ.—எரிசிதறுஞ்சரத்தா லிலங்கையினைத் தன்னுடைய
வரிசிலைவாயிற்பெய்து வாய்க்கோட்டந் தவிர்த்துகந்த
அரையனமருமலை யமரரோடு கோனுஞ்சென்று
திரிசுடர்சூழுமலை திருமாலிருஞ்சோலையதே ஆ.

பதவுரை.

அமரரோடு— தேவர்களோடு [னும்
கோனும்— அவர்களுக்கு ப்ரபுவான இந்த்ர
திரி— இரவும்பகலும் ஸஞ்சரியாநின்றுள்ள
சுடர்— சந்த்ரஸூர்யர்களும்
சென்று— வந்து
சூழும்— ப்ரதக்ஷிணம் பண்ணுநிற்கிற
மலை— மலையாய்
திருமாலிருஞ்சோலை அதே—;
எரி— நெருப்பை
சிதறும்— சிதறுநின்றுள்ள
சரத்தால்— பாணத்தாலே
இலங்கையினை— லங்காபதியான ராவணனின்
தன்னுடைய— தன்னுடைய
வரி— நீண்டிருந்துள்ள
சிலை— ஸ்ரீசார்ங்கத்தின்
வாயில் பெய்து— வாயிலே புகுவித்து
வாய் கோட்டம்— "நகமேயம்" என்று
கிடக்கப்பண்ணின வாய்மதத்தை
தவிர்த்து— நீக்கி
உகந்த— திருவுள்ளமுகந்த
அரையன்— அரசனனவன்
அமரும்— பொருந்தி வர்த்திக்கிற
மலை— திருமலையாம்.

வ்யா. எட்டாம்பாட்டு. எரிசிதறும்சரத்தால். நெருப்பைச் சிதறுநின்றுள்ள அம்பாலே. தொடுத்துவிடும்போதாய்த்து "அம்பு" என்றறியலாவது. தைக்கும்போது உடம்பிலே நெருப்பைச் சொரிந்து கொண்டாய்த்துத் தைப்பது. (க) "தீவ்ரவாவக்நிஜ்வாலாஸஹிதம்" என்றுமினறே. அதாவது - எதிரிகள் மேலேபடும்போது ஜ்வலித்த அக்நியோடு கூல்யங்களாயிருக்கு மென்கை. இலங்கையினை. ‡அந்தகனுங்கூட ப்ரவேசிக்க அஞ்சும்படி-

(க) "தீப்தபாவகஸங்காஸை" ‡ அந்தகன்-யமன்.

யான வூரை. வரங்கொடுத்த ப்ரஹ்மாதிகளும் இவ்வூரின்பேர் கேட்டால் குடல்கரிந்து கிடக்கும்படியாயிறே யிருப்பது. ஆதித்யனும், இவ்வூரில் புழுங்க லுலர்த்துகை முதலான வற்றுக்கு வேண்டுமளவு தன்கிரணங்களை ப்ரகாசிப்பித்து, நடுங்கியொடுங்கிக் கொண்டிறே போருவது; ஆகையாலிறே, ராவணன் பட்டுக்கிடக்கிறபோது, மண்டோதரி-(க)"உத்திஷ்ட தஷ்டகிம்ஶேஷப்ராப்தவபரிபவேவ நவே சுரேந்த்ரலோகாத்ராம் ப்ரவிஷ்டாஸ்ஸூர்யாச்மயீ" என்றது. இப்படியிருக்கிற வூரையாய்த்து மநுஷ்ய ரூபமாய் நின்று சரங்களாலே யழியச்செய்தது. தன்னுடைய வரிசிலை வாயில்பெய்து. தனக்கு அஸாதாரணமாய், அழகுக்குடலான வரியையுடைத்தாயிருந்துள்ள ஸ்ரீசார்ங்கத்தினுடைய வாயிலேபுகுவித்து. வில்லுக்கு வாய் - அம்பிறே. வாயான அம்பிலே புகும்படி ப்ரவேசிப்பித்து. ஸர்ப்பம் நாவாலே விழுங்குமாபோலேயாய்த்து - வில்லும் அம்பாலே க்ரஸிக்கும்படி. இத்தால் - ஈச்வரத்வப் பிடாராலன்றிக்கே, (உ) 'ஸூதாநம்ஶ நஷஂதெந' என்கிற அவதாரத்தில் மெய்ப்பாடு தோன்ற நின்று, அம்புகளாலே அழியச்செய்தபடி சொல்லுகிறது. வாய்க்கோட்டம் தவிர்த்து. வாக்கின், கோடதலுண்டு - விலங்குதல், அத்தைத்தவிர்த்தானுய்த்து. (ரு) "நஷ்டேயம்" என்றிருந்த விருப்பைத் தவிர்த்தானுய்த்து (ச) ["கஸ்யசித்"] இவர் தம்மை இதரஸஜ்ஜாதீயராக்கி வைக்கையாலே "மநுஷ்யர்" என்றேயிருந்தான். "இவரேயன்றிக்கே, 'ஈச்வரன்' என்று சொல்லுகிறவனென்றுன் வந்தாற்றுன் வணங்குவனே" என்றுமாம். ஸ்வரூபம் கைபுகுந்தால் (ரு) 'நஷ்டோ மதுரவர்ஷிநஂ' என்றுய்த்திருப்பது; "மம" என்றிருக்கையாய்த்து ஸ்வரூபவிரோதி. அநுகூலபாஷணம் பண்ணுகை ப்ராப்தமாயிருக்க, "எனக்கு" என்ற பேச்சில் விலங்குதலைத் தவிர்த்தானுய்த்து. உகந்த அரையன். ஈரசு தவிர்த்த பின்பு உகந்தபடி. இவன்றுன் "எனக்கு" என்றிருக்குமத்தைத் தவிர்த்தேகாமாகில், இனி நம்மதேயன்றேவென்று இனியனனன்; இவன் "என்னது" என்றிருக்குமது தவிர்ந்தால், பின்பு உள்ளதட்டையத் திருவிடையாட்டமாயிருக்குமிறே. அரையன். இவன்பக்கல் அல்பாநுகூல்ய மணைகிறது உடையவனுகையிறே. இவன் ப்ராதிகூல்யத்தினின்றும் நிவர்த்தனன வளவுகொண்டு உகக்கும்படியாய்த்து ஸ்வாபாவிக ஸம்பந்தம் இருப்பது. - அமருமலை. இப்படியிருக்கிறவன், பின்பு எல்லாருடையவும் ஸ்வாதந்த்ர்யத்தைப் போக்கி ரக்ஷிக்கைக்காக நித்யவாஸம் பண்ணுகிறமலை.

அமரசோடுகோனும். தேவர்களோடே கூட அவர்களுக்கு நிர்வாஹகனன இந்த்ரனும். திரிசுடரும். லோகோபகாரமாக பகலதாஜ்ஞையாலே இரவுபகல் வெளிச்செறிப்பைப் பண்ணிக்கொண்டு ஸஞ்சரியாநின்றுள்ள சந்த்ர ஸூர்யர்களும். கீழ்ச்சொன்ன ¶ அபிசப்தம் இங்கும் கூட்டிக்கொள்ளக்கடவது. சென்று -சூழும்மலை. வந்து, தங்காமுடைய பதஸ்பர்சத்தார்த்தமாக ப்ரதக்ஷிணம் பண்ணுநிற்கும்மலை. தங்களை நெருக்கிக்கொண்டிருந்த ராவணனை நிரஸித்த உபகாரஸ்ம்ருதியாலும் வந்து ப்ரதக்ஷிணம்பண்ணு நிற்பார்களிறே. திருமாலிருஞ்சோலையதே. இப்படியிருந்துள்ள திருமாலிருஞ்சோலை யாகிறவதுவே - அரையனமரும் மலையென்கை. ... ... அ

(க) "உத்திஷ்டோத் திஷ்டகிம் சேஷேப்ராப்தேபரிபவேவ்வே-அத்யைவநிர்ப்பயம் லங்காம்ப்ரவிஷ்டாஸ்ஸூர்யாச்மயீ" (உ) "ஆத்மாநம்மாநு ஷம்மந்யே."
(ரு) "நஷ்டோமேயம்." (ச) "கஸ்யசித்." "நஷ்டோத்யேவவாதிநீ." ¶ அபிசப்தம்-உம்மை.

மூ.—கோட்டுமண் கொண்டிடந்து குடங்கையின் மண்கொண்டளந்து
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடு விமலன்மலை
யீட்டியபல்பொருள்க ளெம்பிரானுக் கடியிறையென்
றேட்டருந்தண் சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே. கூ.

பதவுரை.

கோட்டு— பெருமிவரும்போது வாரிக்கொண்டுவருகிற
பல்— பலவகைப்பட்ட
பொருள்கள்—பொன், முத்து, அகில் முதலிய பொருள்களெல்லாம்
எம்— எமக்கு
பிரானுக்கு— ஸ்வாமியானவனுக்கு
அடி இறை என்று— ஸ்ரீபாத காணிக்கையென்று
ஓட்டரும்— ஓடிவராநிற்பதாய்
தண்— குளிர்ந்திருந்துள்ள [புடைய
சிலம்பு ஆறு உடை— திருச்சில்பாற்றை
மாலிருஞ்சோலை அதே—;
மண்— ஹிரண்யாசுரனாலே தள்ளப்பட்டு
ப்ரளயங்கதையான பூமியை
இடந்து— அண்டபித்தியில்நின்றுமொட்டு
விடுவித்தெடுத்து
கோடு— தன் திருவயிற்றிலே [தும்
கொண்டு—(வராஹரூபியாய்க்கொண்டு) தரித்
மண்— மஹாபலியாலேதன்னதாக்கிக்கொள்
ளப்பட்டபூமியை
குடங்கையில்— உள்ளங்கையில்
கொண்டு— நீரேற்றுவாங்கிக்கொண்டு
அளந்து— அளந்தும்
மீட்டும்— மறுபடியும்
அது— அந்தபூமியை
உண்டு— தம் திருவயிற்றிலுள்ளேவைத்து
கோக்கியும்
உமிழ்ந்து—(பின்பு) வெளிநாடுகாண உமிழ்
ந்தும்
விளையாடும்— விளையாடாநின்றுள்ள
விமலன்— நிர்மலனானவன் வர்த்திக்கிற
மலை— திருமலையாம்.

வ்யர். ஒன்பதாம்பாட்டு. கோட்டுமண் கொண்டிடந்து. ஹிரண்யாசுரனாலே தள்ளப்பட்டு ப்ரளயகதையான பூமியை, நீருக்கும் சேற்றுக்கும் இருயாக வராஹவேஷத்தைக் கொண்டுபுக்கு அண்டபித்தியினின்றும் ஓட்டவிடுவித்தெடுத்துத் திருவயிற்றிலேகொண்டு. குடங்கையில் மண்கொண்டளந்து. பின்பு மஹாபலியாலே அபஹர்தையாய் அந்யசேஷப்பட்டுக்கிடந்த பூமியை, சரணாகதனான இந்த்ரனுக்கு வாங்கிக்கொடுக்கைக்காக வாமநவேஷ பரிக்ரஹத்தைப் பண்ணி அர்த்தியாய்ச் சென்று "தன்குடங்கை நீரேற்றான்" என்கிறபடியே கொடுத்து வளர்ந்த கையைக்கொண்டு நீரேற்று பரிக்ரஹித்து, கையிலே நீர்விழுந்தவநந்தரம் திருமேனியை வளர்த்து எல்லை நடப்பாரைப்போலே திருவடிகளாலே யளந்து. மீட்டுமதுண்டுமிழ்ந்து. திரியவும் அலாந்தர ப்ரளயத்திலே அழியப்புக, "பெருவெள்ளமுண்ணுமல் தான்விழுங்கி" என்கிறபடியே அந்தபூமியைத் தன்திருவயிற்றிலே வைத்துநோக்கி ப்ரளயாநந்தரம் வெளிநாடுகாண உமிழ்ந்து. விளையாடும். இப்படி லீலைகொண்டாடும். ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் முன்றும் அவனுக்கு லீலையாயிறே யிருப்பது; அத்தைப்பற்ற, ஜகத்ரக்ஷணம் பண்ணின வித்தை லீலையாக அருளிச்செய்கிறார். விமலன். ஹேயப்ரத்யநீகன். அதாவது (க)" ஸகலஹேயப்ரத்யநீகாய " என்கிற திவ்ய மங்கள விக்ரஹத்தை

(க) " ஸகலஹேயப்ரத்யநீகாய. "

இதாலஜாதிய பார்க்குவது, சிறுக்குவது, பெருக்குவதாகா நிற்கச்செய்தே, ஐச்சிகமாகவும் பரார்த்தமாகவும் செய்கையாலே விகாராதி தோஷரஹிதனுயிருக்கை. மலை. ஏவம்பூதனான ஸம்ஸார ப்ரளயகாலத்தை யெதிர்க்கைக்கும், அந்ய சேஷத்வத்தை யறுத்துத் திருவடிகளின் கீழ்புகுவிட்டுக் கொள்ளுகைக்கும், மேல் ஸம்ஸார ப்ரளயத்தில் அகப்படாதபடி நோக்குகைக்குமாக கழுத்தருளி நிற்கிறபடியே.

ஈட்டிய வித்யாதி. பெருகி வரும்போது திருமலையில் இரண்டருகிலுமுள்ள பதார்த்தங்களையும் வாரிக்கொண்டு வருகையாலே, * பொன் முத்து மரியுகிரும் புழைக்கைம்மாகிக்கோடும் அகில் சுமந்து சந்தனமும் முதலாக, தான் திரட்டின பல பதார்த்தங்களையும், வெள்ளையடைய வாரிக்கொண்டு வருகைக்குத் திருமுன்காணிக்கை யென்று இந்தை ஸமர்ப்பிக்கையிலுண்டான த்வரையாலே மிகவும் விரைந்து வராநிற்பதாய், தன்பக்கல் அவகாஹித்தாருடைய ஸகல ப்ரபந்தங்களும் மாறுபடி. குளிர்ந்திருப்பதான திருச்சிலம்பாற்றையுடைய திருமலையிருந்து சேவிக்கிறவனுமாலே - விமலன்மலை. ... ... க.

மூ.—ஆயிரந்தோள் பரப்பி முடியாயிர மின்னிலக
ஆயிரம்பைந்தலைய வனந்த சயன னுளுமலை
358 ஆயிரமாறுகளுஞ் சுனைகள் பலவாயிழும்
ஆயிரம் பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே. ம.

பதவுரை.

ஆயிரம் ஆயுகளும்— பல ஆயுதங்களையும்
பல ஆயிரம்— அனேகமாயிரங்களான
சுனைகளும்— தடாகங்களையும்
நு— அழகிய [களையும்
ஆயிரம் பொழிலும்— அனேகமான சோலை
உடை— உடைத்தாயிருக்கிற
மாலிருஞ்சோலை அதே—;
ஆயிரம்— அனேகமான
தோள்— திருத்தோள்களை

பரப்பி— பரப்பிக்கொண்டும்
முடி ஆயிரம்— ஆயிரம் திருமுடிகளும்
மின் இலக— (திரு அபிஷேகத்தின் ரத்நாதிகளாலே) ஒளிவிடவும்
ஐ— பரந்த
ஆயிரம் தலைய— ஆயிரம் தலைகளையுடைய
அனந்த சயனன்— அநந்தசாயியானவன்
ஆளும்— ஆளுகிற
மலை— திருமலையாம்.

வ்யா. பத்தாம்பாட்டு. ஆயிரம்தோள்பரப்பி. ஆயிரம் திருத்தோள்களையும் பரப்பிக்கொண்டு. முடியாயிரம் மின்னிலக. திருமுடிகளாயிரமும் திருவபிஷேகத்தி லுண்டான ரத்நாதிகளாலே ஒளிவிட. இவ்விடத்தில், "ஆயிரம்" என்றது - ஸஹஸ்ர ஸங்க்யையைச் சொன்னபடியன்று, அநேகத்வ பர்யாயம்; அல்லாதபோது, தோள்கள் ஆயிரமாலும் முடிகள் ஆயிரமாகக் கூடாதமையாலே. "தாளும் தோளும் முடிகளும் சமனிலாத பலபரப்பி" என்றுரிறே-ஆழ்வார். ஆயிரம்பைந்தலைய வனந்தசயன னுளும் மலை. இவ்விக்ரஹத்தினுடைய பரப்பெல்லாம் தன்னுள்ளே யடங்கும்படியாகக் கொண்ட வடிவாகையாலே ஆயிரம் பரந்த தலைகளையுடையதிருவனந்தாழ்வான்மேலேபள்ளிகொண்டருளுகிறவன், அந்தத் திருவனந்தாழ்வானேபோதி, தனக்கபிமதமான வாஸஸ்தாநமாக அபிமாநித்தாளுகிறமலை. அத்திருவனந்தாழ்வான்றானே திருமலையாழ்வாராய் நிற்கையாலே அப்படி அபிமாநித் தருள்க்குறையில்லையிறே.

ஆயிரமித்யாதி. இங்கும் எடுத்தது ஆயிரமாகவருளிச்செய்கிறார்- தம்முடைய ப்ரேமாதிசயத்தாலும் அவற்றினுடைய பன்மையாலும். ஆயிரமாறுகளும். திருச்சிலம்பாறென்றுமிறே கீழ்ச்சொல்லி வந்தது. "சந்தொடு மணியும் அணிமயில்தழையும் தழுவி வந்தருவிகள் நிறைந்து வந்து" என்கிறபடியே திருமலைப் பரப்பிலே பெருகிவரும் காலறுகள் அநேகமாயிறே யிருப்பது. அத்தைப்பற்றச்சொல்லுகிறது. சுனைகள்பலவாயிரமும். திருமலைப்பரப்பிலே பார்த்தால், அவ்வாறுகள் நீர் தேங்கிநிற்கும் திருச்சுனைகளும் அப்படி பலவாயிறே யிருப்பது. திருநாராயணப்பெய்கை, கலந்திகழ்காரணன், ஆராவமுது என்றுற் போலே சொல்லுகிறவை திருமலைவடிவாரத்தி லுள்ளனவையிறே. மேலும் இப்படி அநேக முள்ளது கண்டுகொள்வது. ஆயிரம்பூம்பொழிலும். அந்த ஆறுகளின் நீராலும் சுனைகளின்நீராலும் வளர்ந்து ஸர்வகாலமும் பூமாருமல் செல்லும் திருச்சோலைகளும் அநேகமாயிறேயிருப்பது. "சோலைமலை" என்றிறே திருமலைதனக்கு நிருபகம். ஆயிரமாறுகளுமித்யாதி. (க) "நதீஷ்வ தஸாஹஸ்ரேஷு நிர்ஜ்ஜரேஷு ஸஹஸ்ரஶ: । ஸுகஸுப்த தஸாஸ்ரேஷு ரக்ஷ்யதே நரவம்ருகீ தா" என்கிறே ப்ரமாண ப்ரஸித்தி. உடை. இவையெல்லாவற்றையு முடைத்தாயிருக்கிற திருமாலிருஞ்சோலையாகிற வதுவே-அனந்தசயனனுமம்லே. ... ...

வ்யா. மாலிருஞ்சோலையென்னும் மலையையுடைய மலையை. திருமாலிருஞ்சோலையென்னும் திருநாமத்தையுடைய திருமலையை. பூரீவைகுண்டம் கூடீராப்தி தொடக்கமான ஸ்தலங்கள் ‡ எல்லாவற்றிலுங்காட்டிலுங்காட்டிலும் அபிமதமான வாஸஸ்தலமாகவுடையனுய், இங்கிலையை விரும்புகாலுந்நிலையாமையாலும் வாழ்வில்பெருமையாலும் போக்யதாநிசயத்தாலும் மலைபோலேயிருக்கிறவனே. நாலிருமூர்த்திதன்னே. ஷாட்குண்ய ப்ரகாசகமாயும் அதிலே இவ்விரண்டு குணங்களுக்கு ப்ரகாசகமாயுமிருந்துள்ள வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்தரூபேண நாலுவகைப்பட்டிருக்கிற பெரிய வடிவுகளையுடையவனே. (க) "ம-ஒணெஷுஷ்டிவெஹெ கெகி ரூயாதி.டீதிகு.ஸ்டீ ஷவாஹள கதகூலிஹு ஷ்ஹுஷ்டிஷாம் திரூயாமய ம்ஸ்ஹெஷ்டிகி ஹி.ரஹதி" என்றருளிச்செய்தாரிறே- ஆழ்வான். அதவா, திருவஷ்டாக்ஷர ரூபியானவனே யென்னவுமாம். உ) "வுகூஹிஹுவாஷ ஷாகூஹாஹாரூணஃவுஸ்டி: கஷ்டா கூ.ரூஸ்டிஷ்டிவெண ஃ ஷெவஷ்டவுனிஷதூஷெக" என்னக்கடவதிறே. நால்வேதக்கடலமுத்த. நிகாதிபேதத்தாலே நாலுவகைப்பட்டிருந்துள்ள வேதமாகிற ஸமுத்ரத்தில் ஸாரமான அம்ருதமானவனே; "வேதியர் முழுவேதத்தமுதத்தை" என்னுமாபோலே. அன்றிக்கே, "நால்வேதக்கடலமுது" என்று ஸகல வேதஸாரமான திருமந்த்ரத்தைச் சொல்லுகிறதாய், ஸாமாநாதிகரண்யத்தாலே அத்தை இவனுகச் சொல்லுகிறதாகவுமாம். ஸாமாநாதிகரண்யத்துக்கு நிபந்தநம்-ப்ரதிபாத்யப்ரதிபாதகபாவ ஸம்பந்தம். இவ்விடத்துக்கு இப்படி பொருளாமிடத்தில், "நாலிருமூர்த்திதன்னே" என்கிறவிடத்துக்கு முற்பட்ட யோஜனையொன்றுமேயாகக்கடவது. மேலிருங்கற்பகத்தை. மேலான பெரிய கல்பகத்தை. இத்தால்- ஸ்வர்க்கத்தில் கல்பகத்தில் வ்யாவர்த்தி சொல்லுகிறது. அதாவது- அந்தகல்பகம் தன்னையொழிந்தவற்றைக் கொடுக்குமித்தனையிறே; இது தன்னையுங் கொடுக்குமிறே. அந்த கல்பகம் அபேக்ஷித்தார்க்கிறே கொடுப்பது; இது அநிகாரியையும் முன்டாக்கிக்கொடுத்தும். ஆனகயாலிறே "என்னையாக்கிக்கொண்டு எனக்கே தன்னைத் தந்த கற்பகம்" என்று ஆழ்வாரருளிச்செய்ததும். வேதாந்த விழுப்பொருளின் மேலிருந்த விளக்கை. வேதாந்தப்ரதிபாத்யங்களான சிரிய அர்த்தங்களுக்கெல்லாம் மேலாயிருந்துள்ள ஸ்வயம்ப்ரகாசவஸ்துவானவனே. வேதாந்த ப்ரதிபாத்யமான சிரிய வர்த்தங்களாவன- ங) "ெஷாகூ ஹொமஃ வெரிகாரஹுகூஷா" (ச) "கூஷாம வ்யாநகூஷ்டிகாகூ ஷம்ஹ ஃ: கூஷாதூந வீரஹெஷ்டிவஹகூ:" (ஞ) "வ்யாநகூஷ்டிஜூ வதிம ஃ-ணெஷாஃ :" இத்யாதிகளாலே சொல்லப்படுகிற தத்த்வத்ரயமும். மேலிருந்த வென்றது- இந்த தத்த்வத்ரயத்திலும் வைத்துக்கொண்டு மேலாயிருந்துள்ளவென்றபடி. அதாவது- சேதநாசேதநங்களிரண்டும் ப்ரகாரமாக, தான் ப்ரகாரியாய் (கூ) "நகூஷ்டிஷ்டிஹூஷாஹவு யிகூஷ்டிஜூஷ்டிஷெ" என்னும்படி ஸர்வஸ்மாத்பரனுயிருக்கை. விட்சித்தன் விரித்தனவே. இப்படி யிருக்கிறவனே, * அரவத்தமளிப்படியே திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருக்

---

‡ எல்லாவற்றிலும்- எல்லாவற்றைக்காட்டிலுமென்றபடி. (க) "குணேஷ்வஷ்டப்பிஸ்த்வேதஃ ப்ரதமதரமூர்த்திஸ்தவபபௌததஸ்திஸ்ரஸ்தேஷாம் த்ரியுகயுகளேர்ஹித்ரிபிரபூஃ"

(உ) "வ்யக்தம்ஹி பகவாநேஷ ஸாகூஷாந்நாராயணஸ் ஸ்வயம் - அஷ்டாகூஷரஸ்வரூபேண முகேஷு பரிவர்த்ததே." (ங) "போக்தாபோக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா." (ச) "கூஷரம்ப்ரதாநமம்தாகூஷரம்ஹரஃ கூஷாத்மாநாவீசதே தேவஏகஃ." (ஞ) "ப்ரதாநகூஷ்த்ரஜ்ஞபதிர்குணேசஃ." (கூ) "நதத்ஸமச்சாப்யதிகச்ச த்ருச்யதே."

கையாலே " விஷ்ணுசித்தன் " என்னும் திருநாமத்தையுடைய பெரியாழ்வார் விஸ்தரேண அருளிச்செய்தவை. இதுக்கு பலம் சொல்லாமைக்கடி, இவ்வர்த்தத்தை அறிகிறதுதானே இது கற்கிறதுக்கு ப்ரயோஜநமாகையாலே. ... ... கக

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

(1)

அடிவரவு.—உருப்பிணி கஞ்சன் மன்னு மாவலி பல பாண்டவர்
கன வெரி கோட்டாயிரம் மாலிருஞ்சோலை நாவ.

ஆநிருமொழி கூஉ-க்கு, பாட்டு-கூசள.

நான்காம்பத்து-நான்காந்திருமொழி- நாவகாரியம், ப்ரவேசம்.

அ. கீழ் இரண்டு திருமொழியிலே- ராமக்ருஷ்ணத்வதாரகுண சேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி ஸர்வேச்வரன் திருமலையில் நிற்கிறநிலையை அநுபவியாநின்றுகொண்டு அவன்றன் ப்ராப்யத்தில் ப்ரதமாவதியாகையாலே தச்சரமாவதியான திருமலையாழ்வார்பக்கலிலே திருவுள்ளமுன்றி, திருமலையாழ்வாருடைய வைபவத்தை விஸ்தரேணபேசி யநுபவித்தருளப்ரீதராநின்; அவ்வளவிலே, ஸர்வேச்வரன் திருமலையில்நிற்கிற நிலையிலுங்காட்டில், *பள்ளியிலோதிவந்த தன்சிறுவனை ப்ரஹ்லாதன், திருநாமஞ்சொன்னதுவே ஹேதுவாக, பிதாவானவன் சத்ருவாய்க்கொண்டு, பலமுகமாக நலிய, நலிவுபடுகிற ஆபத்தசையிலே நிருபாதிக பிதாவான பந்தாஸக்தியாலே " அடித்ததோருருவாய் " என்கிறபடியே இரண்டு வடிவைச் சேர்த்துக்கொண்டுவந்து தோன்றி, ப்ரதிகூலனான ஹிரண்யனை நிரஸித்து, பாலனான ப்ரஹ்லாதனை ரக்ஷித்தருளின மஹாகுணம் தோன்றத் திருக்கோட்டியூரிலே எழுந்தருளி நிற்கிற நிலையை இவர்க்கு ப்ரகாசிப்பிக்க; அத்தைக்காண்கையாலும், திருப்பல்லாண்டிலும் * வண்ணமாடத்திலும் செல்வநம்பியோட்டை ஸம்பந்தத்தையிட்டும் (க) க்ருஷ்ணவதாரகந்தமானது கொண்டும்தாம்விரும்பியருளிச்செய்த தேசமாகையாலும், திருக்கோட்டியூரிலே திருவுள்ளம்சென்று அங்கே யெழுந்தருளிநிற்கிறவன்படிகளை யநுபவிக்கிறவிவர், அவ்வநுபவஜநிதஹர்ஷப்ரகர்ஷத்தாலே, அவன் கொடுத்த காணங்களைக்கொண்டு அவனை யநுபவித்து வாழலாயிருக்க த்ரிவிதகரணங்களாலும் அவனோடே ஒட்டற்றுத்திரிகிற பாபகாரிகளாகவர்களைநிந்தித்தும், ஆத்மகுணைபதாரய் ஆசார்யபரமுக்தராய் அவ்வாசார்யன்உகக்கும் விஷயமென்று " நிரதந்தாதிலும் " என்கிறபடியே அவன் பக்கலிலே ப்ரவணராய் அவனை அநுபவியாநின்றுள்ள மஹாத்மாக்களை ச்லாகித்தும் செல்லுகிறார் - இத்திருமொழியில்.

திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் திருமலையிலெழுந்தருளிநிற்கிற நிலையை யநுபவித்த வநந்தரம், ¶ திருக்கோட்டியூரிலெழுந்தருளிநிற்கிற நிலையையிறே யநுபவித்தது. பெரிய திருமடலிலும், " மன்னுமாமலிருஞ்சோலைமணாளனை " என்று திருமலை

(க) க்ருஷ்ணவதாரகந்தம். ¶ 'எங்களெம்மிறை பெருமிரான்' என்கிறதிருமொழியால்

யில் நிற்கிற நிலையை யருளிச்செய்த வநந்தரம், "கொண்ண விலுயாழிப்படையாகைக் கோட்டியூரன்னவருவினரிலை" என்று திருக்கோட்டியூரில் நிற்கிறநிலையையிறே யருளிச்செய்தது. அப்படியே இவரும், திருமலையில் லெழுந்தருளிநிற்கிற நிலையை அநுபவித்தவநந்தரம், திருக்கோட்டியூரிலெழுந்தருளி நிற்கிற்நிலையை யநுபவிக்கிறார்.

இவர்களிருவருமிறே திருக்கோட்டியூர் விஷயமாக ஒரொரு திருமொழி யருளிச்செய்தவர்களும். ... ... *

மூ—நாவகாரியஞ் சொல்லிலாதவர் நாடொறும் விருந்தோம்புவார்
தேவகாரியஞ்செய்து வேதம்பயின்று வாழ்திருக்கோட்டியூர்
மூவர்காரியமுந் தீருத்து முதல்வனைச் சிந்தியாதவப்
பாவகாரிகளைப் படைத்தல னெங்ஙனம் படைத்தான்கொலோ. க.

பதவுரை.

நா அகாரியம்— நாலால் சொல்லலிவாஞ்ஞை அநுசங்களோ
சொல்லிலாதவர்— ஒருநாளும் சொல்லியறியாத ஸ்ரீவைஷ்ணவர்கள்
(அங்கே நித்யவாஸம் பண்ணுமவர்களோ,)
விருந்து — அன்று அமுதுசெய்ய எழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களைப்போலே
நாள்தொறும்— நாள்தோறும்
ஓம்புவார்— ஆதரித்துக்கொண்டிருப்பாராய்
தேவகாரியம் செய்து— பகவத்ஸமாராதநம் பண்ணிக்கொண்டும்
வேதம்—வேதப்ரதிபாத்யனை பரமபுருஷனை
பயின்று — நெருங்க அநுஸந்தித்துக்கொண்டும்
வாழ்— கண்ணாலே கண்டநுபவிக்குமவர்கள் நித்யவாஸம் பண்ணுகிற
திருக்கோட்டியூர்— திருக்கோட்டியூரில்
மூவர்— ப்ரஹ்மருத்ரேந்த்ராகளாகிற மூவர்க்கும்
காரியமும்— * வேதாபஹாரக, குருபாதக, தைத்யபீடாத்பாபத விமோசநங்களாகிற மூன்று காரியங்களையும்
திருத்தும்— செய்தருளின
முதல்வனை— ஸர்வகாரண பூதனை
சிந்தியாத— ஸ்மரிக்கவும் மாட்டாத
அ— அப்படிப்பட்ட
பாவகாரிகளை— பாபம் செய்தவர்களை
படைத்தவன்— ஸ்ருஷ்டித்தவன்
எங்ஙனம்— என்ன ப்ரயோஜநத்துக்காக
படைத்தான் கொல் ஓ— படைத்தானே!
[என்று மனம்தளர்ந்து பேசுகிறார்.]

வ்யா. ¶ முதற்பாட்டு. நாவகாரியம். நாவுக்கு அகார்யமாவது- சபதங்கள் நாரத தளவிலே பர்யவஸிக்கையும், பொய்சொல்லுகையும், பிறர்க்கு க்லேசாவஹமான ஹேதுக்களைச் சொல்லுகையும். ["நாவாயிலுண்டே" இத்யாதி.] அல்லாத திருநாமங்கள் இடையிலே இளைப்பாறவேணும்.

¶ "மேல் நான்குதிருமொழியளவும் ஆச்சான்பிள்ளை வ்யாக்யாநமாயிருக்கும்; அது தான் பூர்ணமாகக் கிடையாமையாலே, ஒரோவிடங்களில் ஒருபாட்டுக்கோ, அரைப்பாட்டுக்கோ, ஓரடிக்கோ, அரையடிக்கோ கிடைத்த வ்யாக்யாநபங்க்திகளோ ஸ்ரீஸூக்திகளாலவத்தாலே மணவாளமாமுனிகள் சேர்த்துக்கொண்டு வ்யாக்யாநித்தருளுகிறரென்று ஸம்ப்ரதாயார்த்தம்" என்று பெரிய அரும்பத விளக்கத்தில் பாசுரம்.

‡ கொங்கிலே திருக்குருகைப் பிரான்பிள்ளா னெழுந்தருளி ஒரு ஸ்ரீவை ஷ்ணவர் திருமாளிகைபிலே விட்டவளவிலே பிறந்த வர்த்தையை ஸ்மரிப்பது.— அனந் தாழ்வான், சரமஸ்லோகத்திலே "பட்டர் உகக்கும் திருநாமமேது" என்றுகேட்க; "அழ கியமணவாளப் பெருமாளென்கிற திருநாமம்" என்றுசொல்ல: "இது †பர்த்ருஹரி க்ஷேத்ர வாம் பண்ணுபாபோலே இராநின்றது, ஆகிலும் பட்டர்விரும்பின திருநாமமன்றே" என்று இத்திருநாமத்தைச்சொன்ன வர்த்தமானத்திலே திருநாட்டுக்குப்போனார். உடையவ ரெழுந்தருளியிருக்கிற காலத்திலே, விகநகப்பெயர்ந்தே ஒரு ஸ்ரீவைஷ்ணவரெழுந்தருளியிரு ந்தி "ஓம் நமோநாராயணாய" என்று இத்தைச்சொல்ல; இத்தைக்கேட்ட நம்பி "நாவ காரியம்" என்று சூழ்ந்திருந்து கடக்கப்போனார். ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் சரமகாலத்திலே உடையவரெழுந்தருளி, "இப்போது திருவுள்ளத்தி லதுஸந்தாநமேது" என்றுகேட்க; "பகவந்நாமங்களாயிருப்பன அநேகம் திருநாமங்களுண்டாயிருக்க, 'திரு வரங்கம்' என்கிற நாலுந்து திருவக்ஷரமும் கோப்புண்டபடியே! என்று நினைத்திருந்தேன் காணும்" என்று அருளிச்செய்ய; அத்தை "ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் விரு ம்பின திருநாமம்" என்று உரையவர் விரும்பியிருப்பர். (க) "ஏஷ தூ சா" என்று ஈச்வரஸங்கல்பம்; *யாதாஜ்ஞம்பற்றி நீங்கும் சரணம் ஸப்ஸாகிகள் வ்ரதம்; "சரணங்கொண் டேத்தும்" என்று முமுக்ஷுக்கள் வ்ரதம்; முமுக்ஷுக்களுக்குக் ‖ கூறுயிறே அர்ச்சாவதா ரமிருப்பது. "அடியோமுக்கே யெம்பெருமானல்லீலோகநீ ரிந்தளூரீரே" என்னக்கடவ தன்றே. "எண்ணேதே யிருப்பாரை யிறைப்பொழுது மெண்ணேமே" என்று கழித்து, "ஆரெண்ணும் மெஞ்சுண்டையா ரவரெம்மை யாள்வாரே". என்று அருளிச்செய்தாரிறே. நம்மாழ்வார், "ஒழிவில் காலமெல்லாம்" என்று அடிமையை யபேக்ஷித்து, *புகழுநல் லொருவனிலே-வாசிகமான அடிமைசெய்து,*மொய்ம்மாம் பூம்பொழிலிலே-அடிமையினிழி யாதாரை நிந்தித்து, *செய்யதாமரைக்கண்ணனிலே - பகவத்ஜ்ஞாநத்தை யுபதேசித்து, *பரிலும் சுடரொளியிலே - பண்டேதிருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டு உகந்தாற்போ லே, இவரும், திருக்கோட்டியூரிலே யெழுந்தருளிநிற்கிற ஸர்வேச்வரனே யதபவித்த வரங் தரம், அவன்திருவடிகளில் அடிமையினிழியாதே அந்யபராய்த் திரிகிறவர்களை நிந்தித்து, அவன் திருவடிகளி லடிமையையுகந்து அவனையநுபவிக்கையே யாத்ரையாயிருக்கும்ஸ்ரீவை ஷ்ணவர்களைக் கண்டுகக்கிறார்.

நா அகாரியம். ["வாழ்த்துவார் பலராக"] ஸர்ஷ்டிக்கு ப்ரயோஜநம் திருநாமம் சொல் லுகையிறே. நாவகாரியம். நாவுக்கு அகார்யமாவது - அஸத்யம்சொல்லுகை; நாக்காலே பக வத்விஷயத்தைச் சொல்லுகை. "ஆவியையரங்கமாலே - எச்சில்வாயால் - தூய்மையில்தொ ண்டனேன்நான் சொல்லினேன் தொல்லைநாமம் - பாவியேன் பிழைத்தவாறு" என்று — "அபேர்க்யன் திருநாமம் சொல்லுகையும் பாபபலம்" என்றுரிறே; "திருவாகம் தீண் டற்றுச்சென்று" என்று - அவனைப்பார்க்குமத்தனையோ, தன்னையும்பார்க்கவேண்டாவோ வென்று திருவுள்ளத்தை கர்ஹித்தாரிறே-. "கொடுமாவினையேன்" என்று-*பொய்நின்ற ஞானந்தொடங்கி; *நெடுமாற்கடிமையளவும் கர்மபலமென்று அநுஸந்தித்தாரிறே; சொல்லி

‡ கொங்கு- ஒரூர். குருபரம்பராப்ரபாவத்திலே ப்ரஸித்தம். †ஹரிஹர க்ஷேத்ரம்போன்றிருத்தலாவது-ஹரிபெயருக்கு ஹரிவின்பேர் சொல்லவொண்ணுமையாலே ரங்கநம்பெருமாள்' 'ஸ்ரீரங்கராஜர்' என்னுமல் பெருமாளுக்கு அஸாதாரணமான 'அழகிய மணவாளப் பெருமாள்' என்ற திருநாமத்தைச் சொல்லுகை.

(க) "ஏதத்வ்ரதம் மம." ‖ கூறு- பாகம். [ஹாமம.]

லாதவர். இவைபுகுந்து கழியாதவர். நாடொறும் விருந்தோம்புவர். நித்யவாஸம் பண்ணுகிற ஸ்ரீவைஷ்ணவர்களை, அப்போது அழகுசெய்ய வெழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களைப் போலே ஆதரிப்பர்கள். தேவகாரியம்செய்து. இவர்களுக்கு உகப்பாக பகவத்ஸமாராதனம் பண்ணிப் போருமவர்கள். "நிரதந்தாகிலும்" என்னக்கடவதிறே. வேதம்பயின்றுவாழ். பகவத்பாகவத கைங்கர்யங்களுக்கு ஏகாந்தமான ப்ரதேசங்களோ நெருங்க அநுஸந்தித்து, வேதப்ரதிபாத்ய வஸ்துவைக் கண்ணாலே கண்டநுபவிக்கிறவர்கள். "ஒன்றின்பொருள் மூடிவமித்தனையே உத்தமன்பேர், எத்தும் நிறமறிமின்" என்னக்கடவதிறே. திருக்கோட்டியூர். இவற்றை நினைத்திறே இவர்தாம் "அல்வழக்கொன்றுமில்லா வணிகோட்டியர்கோ னபிமான துங்கன் செல்வனைப்போலத் நிருமாலை நாணுமனக்குப் பழவடியேன்" என்றது இவரைப்போலே தம்மையும் அங்கீகரிக்கவேணு மென்னும்படியிறே இவர்கள் ஓரம்.

மூவர்காரியமும் திருத்தும். அவர்களுக்குவந்த ஆபத்துக்களைப் பரிஹரிக்கும். (அ) ["வைஷ்ணவாநாம் ஸங்கோ..வாதிக ரோகபீடா தர்ஷயிஷ்யாமி" இத்யாதி.] பகு கைடபர்கள் கையிலே வேதத்தைப் பறிகொடுக்க அந்தை மீட்டுக்கொடுக்கையும், குருவாளி தாஸியுடைய சிரச்சேதம் பண்ணுகையால் வந்த பாதகத்தைப் போக்கிக்கொடுக்கையும், மஹாபலிபோல்வார்கையிலே ராஜ்யத்தைப்பறிகொடுக்க அத்தை மீட்டுக்கொடுக்கையுமாகிற இவையிறே - மூவர் காரியமும் திருத்துகையாவது. முதல்வனே. திருத்துழாய்க்கடி-ஸம்பந்தம். சிந்தியாத அப்பாவகாரிகளே. துர்மாநிகளாய் எதிரிட்டுப் போருகிற இவர்கள்தன்மை பாராதே, இவர்கள் காரியம் செய்த அபராதத்துக்குத் தோற்று அநுஸந்திபாத பாபகர்மாக்களே. படைத்தவனெங்ஙனம் படைத்தான்கொலோ. என்ன ப்ரமாஜ்ஞத்துக்குப் படைத்தான் என்று அறிகிறிலோமீ !. "முற்றேழுலகம் புடைத்த வெம்முகில்வண்ணன்" என்று ஜலஸ்தல விபாகமற வர்ஷிக்குமவனிறே. "சோம்பாதிப் பல்லுருவை யெல்லாம்படர்வித்த" என்னக் கடவதிறே. ... ... க.

மூ.—குற்றமின்றிக் குணம்பெருகிக் குருக்களுக் கனுகூலராய்ச்
செற்றமொன்றுமிலாத வண்கையிரூர்கள் வாழ்திருக்கோட்டியூர்
துற்றியேழுலகுண்ட தூமணிவண்ணன்றன்னைத் தோழாதவர்
பெற்றதாயர்வயிற்றினைப் பெருநோய்செய்வான் பிறந்தார்களே. உ.

361

பதவுரை.

குற்றம் இன்றி— ஒருவகைப்பட்ட அபராதமுமில்லாமல்
குணம்— சமதமாதிகுணங்களை
பெருக்கி— வர்த்திசெய்து
குருக்களுக்கு— தம் தம் ஆசார்யர்களுக்கு
அனுகூலர் ஆய்— அநுகூலர்களாய்
ஒன்றும்— அல்பமேனும்
செற்றம் இலாத— அஸூயை இல்லாதவர்களுமாய்
வண் கையிரூர்கள் — உதாரஹ்ருதயருமாயிருப்பவர்கள்
வாழ்— நித்யவாஸம் பண்ணுகிற
திருக்கோட்டியூரில்;
ஏழ் உலகு— ஏழ்லோகங்களையும்
துற்றி— ப்ரளயம்கொண்டதபடி திரளப்பிடித்து
உண்ட— அமுது செய்தருளின
தூ— பரிசுத்தமான

(அ) "வேதாபஹாரகுருபாதகதைத்ய பீடாத்யாபத்திமோசந."

மணிவண்ணன் தன்னை— நீலரத்நம்போன்ற வடிவையுடையவனை
தொழுதவர்— தலைவணக்கிக்கைகூப்பி ஏத்தாதவர்கள்
பெற்ற— தங்களைப்பெற்ற
தாயர்— தாய்மார்கள்
வயிற்றினை— வயிற்றை
பெருநோய் செய்வான்— மிகவும் நோவுபடுத்துகைக்காக
பிறந்தார்கள்— பிறந்தார்களத்தனை.

வ்யா. இரண்டாம்பாட்டில். குற்றமின்றி. குற்றமாவது-தோஷகுணஹாநிகள். இதில் தோஷமாவது- அர்த்யுகரணம்; குணஹாநியாவது- கர்த்ருகரணம். "இதம் குர்யாத்" "இதம் நகுர்யாத்" என்று விதிநிஷேதாத்மகமாயிறே சாஸ்த்ரந்தானிருப்பது. அதில், விஹிதத்தைச்செய்து, நிஷித்தத்தைத் தவிர்ந்திருப்பாரேயுமே சாஸ்த்ரவச்யனெனவனுக்கு; அல்லாதபோது, (க) "ஸ்ருதிஸ்ம்ருதிமமைவாஜ்ஞா" என்றபடியே பகவதாஜ்ஞாரூபமான சாஸ்த்ரத்தை அதிக்ரமித்தாஜ்ஞைபோலே பகவதபசாரத்துக்கு விஷயமாமிறே; இப்படி யிருந்துள்ள குற்றமின்றிக்கே. குணம்டேருக்கி சமதமாத்யாத்ம குணங்களே மேன்மேலும் அபிவர்த்தமாக்கி. ஆத்மகுணங்களெல்லாவற்றுக்கும் ப்ரதாநம் சமதமங்களிறே; இவையிரண்டு முண்டாஞ்சிறே ஆசார்யன் இவனுக்குக் கைபுகுந்து திருமந்த்ராதிகளை யுபதேசிப்பது; ஆகையால், சமதமங்கள் (உ) "ஜாயமாநம்ஹிபுருஷம்" இத்யாதிப்படியே புண்டான பகவத்கடாக்ஷத்தாலே ஆசார்யாங்கீகாரத்துக்குமுன்னே அங்குரித்து பின்பு ஆசார்யோபதேசாதிகளாலே வர்த்தித்து வரக்கடவதாயிருக்கும்; அவற்றினுடைய அபிவ்ருத்தி இவற்றையுடைய குறிக்கோளடியாக வரக்கடவதாயிருக்கையாலே, "குணம்பெருக்கி", என்று அதிகாரிக்ருத்யமாகச் சொல்லுகிறது. (ங) ["ஸஹஸ்ரசீர்ஷபுருஷம்" இத்யாதி.] குருக்களுக்கணுகலராய். "குருக்கள்" என்கிற பஹுவசநம்- பூஜ்யதையைப் பற்ற வித்தனை. ஆசார்யனுக்கு அநுகூலரா மென்னை. அன்றிக்கே, "அநுகூலராய்" என்று பலரையும் சொல்லுகையாலே, தந்தாமாசார்ய விஷயத்துக்கு அநுகூலரா யென்கிறதாகவுமாம். அநுகூலராகையாவது (ச) "ஒஜஸ்விபரமபுருஷ" என்கிறபடியே பகவத்விஷயத்தோபாதி கௌரவபுத்திபண்ணி ஸேவிக்கும் தங்கள் ஸேவையாலே உகப்பித்துக்கொண்டு போருகை. உபஜீவநமும் பரிபத்திபும் கிஞ்சித்காரமுமெல்லாம் ஒருமடை கொண்டபோதிறே யதாப்ரதிபத்தி விஹிதமாவது. "சேதவுமற்றறியேன்" என்று இருக்கவேணுமிறே. (ரு) "ஞானீ காபுருஷோ ஸாக்ஷாந்மமைவாத்மா விநிஷ்சித:" மஹாத்மாநம்மாம் ப்ரபத்யந்தே" என்றும (சு) "ஸாரீரமாஸ்ரயாவிஜ்ஞாநம் வாஸுதேவாக்ருதாநாம் வாஸுதேவாத்மகாநாம் யுஷ்மாதிஸ்ரேஷ்டாநாம் ஸுதுர்லபோ நதாரிஷ்யதி" என்றும் சாஸ்த்ரங்களிற் சொல்லுகிற சிஷ்யலக்ஷணமெல்லா முடையவனாயிருக்கையிறே குருக்களுக்கு அநுகூலனாயிருக்கையாவது. செற்றமொன்றுமிலாத. செற்றமாவது- பொறுமை. அதாவது பரஸம்பர்த்யஸஹத்வை. ஒன்றுமில்லாமையாவது- முதலிலே அதிலே அன்வயமின்றிக்கே யிருக்கை. கீழ்ச்சொன்னவையெல்லா முண்டானாலும் உண்டாகவிதாயிருப்பதொன்றிறேயிது. வண்கையினர்கள். உதாரமான கொடையையுடையவர்கள் அதாவது ஒருவர்க்கு- ஒன்றைக்கொடுக்குமிடத்தில், கொள்ளுகிறவன் சிறுமையையும் கொடுக்கிறவன் சீர்மையையும் பாராமல் கொடுக்கும்வர்க

(க) "ச்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா" (உ) "ஜாயமாநம்ஹிபுருஷம்" (ங) "சமதமாதியதாத்மா" (ச) "தேவமிவாசார்ய முபாஸீத." (ரு) "ஸ்ரத்திகோதர்மசீலச்ச சிலவாந் வைஷ்ணவச்சுசிஃ- கம்பீரச்சதுரோதீரச் சிஷ்யஇத்யபிதீயதே" (சு) "சரீரம்வஸுதேவஜ்ஞாநம் வாஸுதேர்மகுணாஸ்ரயம் - குர்வாத்மம் தாரயேத்யஸ்து ஸசிஷ்யோநேதரஸ்ஸ்ம்ருத:"

ளென்கை. தர்ஷ்டாதர்ஷ்டங்களிரண்டுக்கும் ஒக்குமிறையிவர்களுக்கிது. வாழ்திருக்கோட்டியூர். இத்தேசவாஸந்தானே இவர்களுக்கு வாழ்வு. "நல்லார்கள் வாழும் நளிராங்கம்" என்றும் "வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்" என்றும் சொல்லக்கடவதிறே. இப்படி யிருக்கிறவர்கள் வர்த்திக்கிற திருக்கோட்டியூரில்.

தூற்றியேழுலகுண்ட. ப்ரளயத்திலழியாதபடி ஸகலலோகங்களையும் திருவயிற்றிலே வைக்கிறவிடத்தில் ஒரொன்றுக வன்றிக்கே, திரளப்பிடித் தமுதுசெய்த. தூமணிவண்ணன் தன்னை. இவற்றை வயிற்றிலேவைத்து நோக்கினபின்பு திருமேனியிற்பிறந்த புகரைச் சொல்லுகிறது. உண்டார்மேனி கண்டால் தெரியுமிறே. பழிப்பற்ற நீலமணிபோலேயிருக்கிற வடிவை யுடையவன்றன்னை. தோழாதவர். இவ்வுபகாரத்துக்குத் தோற்று எப்போது மொக்கத் தொழவேண்டியிருக்க, இவ்விஷயத்தில் தலைவணக்காமல் திரியும் க்ரூரானவர்கள். பெற்றதாயரித்யாதி. பெற்றமாதாவினுடைய உதரத்தை மிகவும் நோவுபடுத்தப் பிறந்தார்களித்தனை. இவன் பகவத்பரனைபோதிறே, (க) "ஜநநீக்ருதாயூ" என்கிறபடியே அவளும் (உ) உத்தரிக்கைக் குறுப்பாவது; அல்லாதபோது, இவனுல் ஒரு ப்ரயோஜநம் அவளுக்கு இல்லாமையாலே, ப்ரஸவ்காலத்திற்பட்ட வேதனையே சேஷித்துவிடுமித்தனையிறே. ... ... உ:

மூ. —வண்ண நன்மணியு மரகதமு மழுத்திநிழலெழும்
திண்ணைசூழ் திருக்கோட்டியூர் திருமாலவன் திருநாமங்கள்
எண்ணக்கண்டவிசல்களா லிறைப்பொழுது மெண்ணகிலாதுபோய்
உண்ணக்கண்டதம் மூத்தைவாய்க்குக் கவளமுந்துகின்றார்களே. ஈ.

பதவுரை.

நல் வண்ணம்— நல்லநிறத்தையுடைய
மணியும்— மாணிக்கங்களையும்
மாதகமும்— மரதகங்களையும்
அழுத்தி— ஒழுங்குபட அழுத்தினதினுல்
நிழல் எழும்— ஒளிவிடாநின்றுள்ள
திண்ணை— திண்ணைகளாலே
சூழ்— சூழப்பட்ட
திரு கோட்டியூர்— திருக்கோட்டியூரி லெழுந்தருளியிருக்கிற
திரு மாலவன்— ஸ்ரீயஃபதியின்
திரு நாமங்கள்— திரு நாமங்களை
எண்ண— எண்ணுகைக்காக
கண்ட— படைக்கப்பட்ட
விசல்களால்— விரற்களாலே
இறைப் பொழுதும்— சூணகாலமும்
எண்ண கிலாது— எண்ணுமல்
போய்— புறம்பேபோய்
உண்ணக்கண்ட— சரீரபோஷணத்துக்கு வேண்டுவனதின்கிற
தம்— தங்களுடைய
ஊத்தை— அசுத்தமான
வாய்க்கு— வாயிலே
கவளம்— சோற்றுத்திரளைகளை
உந்துகின்றார்கள்— தள்ளாநின்றார்கள்.

வ்யா. மூன்றும்பாட்டு. வண்ணநன்மணியும் மரகதமுமழுத்தி. நல்லநிறத்தை யுடைத்தான மாணிக்கங்களையும் அப்படி யிருந்துள்ள மரதகங்களையும் பன்னிரண்டாடையாகக்கொ

(க) "ஜநநீக்ர்தார்த்தா." (உ) உத்தரிக்கைக்கு.

ண்டு ஒழுங்குபட அழுத்தி. நீழலெழும் திண்ணைசூழ். திண்ணைகளைப் பளிங்குபோலே பள்பளக்கும்படி சாந்திட்டுத் தீற்றி அதிலே நிழலெழும்படி இவற்றைப்பதித்துவைப்பர்களாய்த்து. இப்படி தாம் செய்கிற தென்னென்னில்; சொக்கநாராயணர் திருவீதியிலே யெழுந்தருளும்போது அலங்காரமாக. " திருவிழவில் மணியணிந்த திண்ணைதோறும் " என்னக்கடவதிறே. அல்லது, பகவதேகபராயிருக்கிறவர்கள், ஸ்வப்ரயோஜநமாக தந்தாமகங்களை அலங்கரித்துவைக்கிறார்களன்றே. " யான்நீ என்னுடைமையும் நீயே " என்றிருக்குமவர்களாகையாலே. இவர்களுடைய ஆத்மாத்மீயங்களெல்லாம் அங்குத்தைக்கு சேஷமாயிறே யிருப்பது. இப்படி யிருந்துள்ள திண்ணைகளாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரில்,

திருமாலவன் திருநாமங்கள். ஸ்ரீயபதியானவனுடைய திருநாமங்களை. திருநாமத்தில் ஏதேனுமொருபடி அந்வயமுண்டானமாத்ரத்திலே அவன் அபிமாநித்து ரக்ஷிக்கும்படியாகப் பண்ணும் புருஷகாரபூதையான பிராட்டியோடேகூடி யெழுந்தருளியிருக்கிறவனுடைய திருநாமங்களேயென்கை. திருநாமந்தான் ரஸிப்பதும்- இருவருமான சேர்த்தியின் ரஸமறிந்து அநுஸந்திப்பர்க்கிறே. " எனக்கென்றும் தேனும் பாலுமமுதமாய திருமால் திருநாமம் " என்றாரிறே- திருமங்கையாழ்வார். எண்ணக்கண்ட விரல்களால். இப்படியிருந்துள்ள தன்னுடைய திருநாமங்களை எண்ணுகைக்காக வாய்த்த-ஸர்வேச்வரன் இவர்களுக்கு விரற்களை ஸர்ஷ்டித்தது. எண்ணுகையாவது- திருநாமங்களை " இன்னது, இன்னது " என்று பரிசமைக்கை. " ஓராயிரமாயுலகேழளிக்கும் போராயிரங்கொண்டதோர் பீடையன் " என்கிறபடியே ஓரோதிருநாமங்களே ஸஹஸ்ரமுகமாய்நின்று ஜகத்தை யெல்லாவற்றையும் ரக்ஷிக்கவற்றான திருநாமங்களாயிரமுடையனுகையாலேவந்த பெருமையையுடையவனுயிறே அவனிருப்பது. (க) " தெவொ நாமஸஹஸ்ரயாநு " என்னக்கடவதிறே. " போராயிரங்கொண்ட தோர் பீடையன் " என்று, " இவற்றையுடையவன் யார் ? " என்னும் அபேக்ஷையிலே " நாராயணன் " என்றாரிறே. இங்கும், சொக்கநாராயணரிறே யெழுந்தருளியிருக்கிறவர். " நாராயணன் " என்கிற திருநாமம் அவ்வஸ்துவுக்கு நிரூபகமாய், இத்தாலே நிரூபிதமான வஸ்துவுக்கு விசேஷணமாயாய்த்து அல்லாத திருநாமங்கள்தானிருப்பது. ஆகையாலே, " நாமமாயிரமேத்தநின்ற நாராயணா " என்றும். " நாமம் பலவுமுடை நாரணனம்பி " என்றும், " நாரணன்றன் நாமங்கள் " என்றும் எல்லாருமருளிச்செய்தது. இப்படியிருக்கிற திருநாமங்கள்தான் அவனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதி சேஷ்டிதங்களுக்கு வாசகமாயிறே யிருப்பது. அவற்றின் விசேஷமறிந்து ஆதராதிசயத்தாலே " இன்னது இன்னது " என்று பரிகணிக்கையாய்த்து திருநாமங்களேயென்னுகையாவது. இப்படி, இவற்றையென்னுகையே ஸ்வபாவமாயிருக்கக்கடவ விரல்களாலே. இறைப்பொழுது மென்னகிலாது. ஒரு க்ஷணகாலமும் இவற்றையென்னுதே. அநுவாதம் எண்ணவேண்டுமவற்றை க்ஷணகாலமும் என்னுதொழிவதே! என்கை. போய். இந்தைவிட்டுப் புறம்பேபோய். உண்ணக்கண்ட தம் ஊத்தைவாய்க்கு. சரீரபோஷணத்துக்கு வேண்டுவது தின்னக்கடவ தங்களுடைய ஊத்தைவாய்க்கு. கவளமுந்துகின்றார்களே. நரனைகளைத்திரட்டி வாய்க்குள்ளே தள்ளாநின்றார்கள். " கணைநாணிலோவாத் தொழிற்சார்ங்கன் தொல்சீரைநன்னெஞ்சே ஓவாதலுணகவண் " என்று அவன் குணங்களை யநுபவிக்கை உணவாகவும், குணங்களுக்கு வாசகமான

(க) " தேவோநாமஸஹஸ்ரவாந். "

திருநாமங்களை யெண்ணுகை கையில்லிரல்களுக்கு ப்ரயோஜநமாகவுமிறே இவர்தாம் நினைத் திருப்பது.. துல்யந்யாயத் வாயும் திருநாமம்சொல்லக் கண்டதிறே. இப்படியிருக்கிற வாயை, சரீரபோஷணத்துக்கான அது ஜீவிக்கைக்கே காரணமாக்கி, சோற்றை தாரகமாக்கி, கையையும் அதுபிடித்து உண்கைக்கு ஸாதநமாக்குவதே! என்று இன்னுதாகிறார். ... கூ.

மு.—உரகமெல்லணையான் கையி லுறைசங்கம்போன் மடவன்னங்கள்
நிரைகணம் பரந்தேறுஞ் செங்கமலவயற்றிருக்கோட்டியூர்
நரகநாசனை நாவிற்கொண்டழையாத மானிடசாதியர்
பருகுநீரு முடுக்குங்கூறையும் பாவஞ்செய்தனதான்கொலோ. ச.

பதவுரை.

உரகம்— திருவனந்தாழ்வானை
மெல்— ம்ருதுவான [டைய
அணையான்— படுக்கையாக உடையவனு
கையில் உறை— திருக்கையிலுள்ள
சங்கம்போல்— ஸ்ரீபாஞ்சஜந்யம்போலே வெள்ளியதாய்
மடம்— மடப்பத்தையுடைத்தான
அன்னங்கள்— ஹம்ஸங்களானவை
நிரை— ஒழுங்குபட
கணம் பரந்து— திரளவந்து பரவி
ஏறும்— ஏறிவர்த்திக்கிற
செம் கமலம்— செந்தாமரை மலரையுடைய
வயல்— வயல்களாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரிலே;
நரகம்— நரகத்தை
நாசனை— நசிப்பிக்குமவனை
நாவில் கொண்டு— நாவாலே
அழையாத— சொல்லாத
மானிடசாதியர்— பெறுதற்கரிய மநுஷ்ய ஜந்மத்தில் பிறந்தவர்கள்
பருகும்— குடிக்கிற
நீரும்— தண்ணீரும்
உடுக்கும்— உடுக்கிற
கூறையும்— வஸ்த்ரமும்
பாவம் செய்தனதான் கொல் ஓ } பாவம்செய்தனவோ தான்!.

வ்யா. நான்காம்பாட்டு. உரகமெல்லணையான். திருவனந்தாழ்வானை மிருதுவான படுக்கையாக வுடையவன். சைத்யமார்த்தவ ஸௌரப்யங்கள் ப்ரக்ருதியாயிருக்குமிறே-ஸ்ரீப் பஜாதிக்கு. ஆகையாலிறே, திருவனந்தாழ்வான்றன், சேஷியான ஸர்வேச்வரனுடைய திரு மேனியின் மார்த்தவாநுகுணமாக இந்தவடிவைக்கொண்டு திருப்படுக்கையா யிருக்கிறது. அங்குப் பள்ளிகொள்ளுகிறவனுடைய திருநாமம் "உரகமெல்லணையான்" என்றிறே. கை யிலுறைசங்கம்போல். "கைவண்ணம்தாமரை" என்னும்படியான திருக்கையிலே வர்த்தி க்கிற ஸ்ரீபாஞ்சஜந்யம்போலே. மடமித்யாதி. மடப்பத்தையுடைத்தான அன்னங்களான வை ஒழுங்குபடத் திரளவந்து பரந்தேறிவர்த்திக்கிற சிவந்த கமலங்களையுடைத்தான வய லோடுசேர்ந்த திருக்கோட்டியூரிலே. இத்தால்- அன்னங்களானவை தாமரைமேலே யிருக் கும்போது, காண்பார்க்கு திருக்கையும் ஸ்ரீபாஞ்சஜந்யமும்போலே யிருக்குமென்கை. "செ ங்கமலநாண்மலர்மேல் தேனுகருமன்னம்போல்" என்று - திருக்கையும் ஸ்ரீபாஞ்சஜந்யமு மான சேர்த்திக்கு இதுதன்னை தர்ஷ்டாந்தமாகவிறே இவர்திருமகளாரும் அருளிச்செய்தது. (க) ஸர்வதாஸத்ர்சமானவற்றில் தர்ஷ்டாந்த தார்ஷ்டாந்திகங்கள் மாற்றிக்கொள்ளலாயிருக்கு மிறே. "மதயானைபோலெழுந்த மாமுகில்காள்" "திணார்மேகமெனக் கீறிறுசேரும்" இத்யா திகளிலே இது கண்டுகொள்வது.

(க) ஸவ-ப்ரகாஸ்ய.

நரகநாசனை. *நாவில்கொண்டழைப்பார்க்கு பூர்வகர்மானுகுணமாக வரும் நரகத்தை நசிப்பிக்குமவனை. இவனெடு ஓர்வயமுண்டாகவே யமவச்யதை தன்னடையேமாறுமிறே. (க) " நவெலுஹாமயதா யமிஷ்டயாஹுஹ்வே " என்னக்கடவதிறே. நாவில்கொண்டழை யாத. அவனைச் சொல்லுகைக்காக அடியிலே ஸ்ர்ஷ்டமான நாவிலே கொண்டுசொல்லாத; அன்றிக்கே, அஹ்ர்தயமாகவாகிலும் நாவிலேகொண்டு சொல்லாதவென்னவுமாம். மானிட சாதியர். பெறுதற்கரிதான மநுஷ்யஜந்மத்திலே பிறந்துவைத்து வ்யர்த்த ஜந்மாக்களாய்த் திரிகிறவர்கள், இதுக்கு யோக்யமான ஜந்மத்தைப் பெற்றுவைத்து இழந்துபோவதே! என்று வெறுத் தருளிச்செய்கிறார். பருகுநீரு முகேகும்கூறையும் பாவஞ்செய்தனதான்கொலோ. அவர்கள் குடிக்கும் தண்ணீரும் உடுக்கும் புடைவையும் பாபத்தைச்செய்தனவோதா னென் கிறார். (உ) " ஸுதநமஜீவெநாதுநாதந வ்ரவிஷு நாரஸுவெவ்யுசுஸுவரணி " என்று வ்யவஷ்டிஸ்ர்ஷ்ட்யுன்முக பகவத்ஸங்கல்பமாகையாலே நாமரூபவிசிஷ்டமான ஸகல்வஸ்துக்க ளிலும் ஓரோஜீவாதிஷ்டாந முண்டென்று கொள்ளவேணும்.. (ங)கடபடாதிகளாயிருந்துள்ள பதார்த்தங்களில் ஜீவாதிஷ்டாந முண்டென்று தோற்றுதிருக்கிறது - கர்மானுகுணமான ஜ்ஞாநஸங்கோசாதிசயத்தாலே. (ச) " கயாதிரோஹிதகவாஹு ஸ்ரீஃகேதுஜு வஸஜி கா । லடுஹமிதவஷ்மயவாஹு காரதஃரு கவதுடிக " (ஞ) " அவ்ராணிமத்ஸ்ய ஸ்வல்பாஸா ஸ்த்தாவரேஷ்ய தேதாதிகா " என்னக்கடவதிறே. ஆகையாலே, " பாவம் செய்தனதான்கொலோ " என்கிறது. அதாவது இவைபண்ணின பாபமிறே இவர்களுக் கு சேஷமாகைக்கடியென்கை. விலக்ஷணரானவர்களுக்கு சேஷமான பதார்த்தங்களுக்கு அவ்வழியாலே மேலொரு நன்மையுண்டாகவும், ஹேயரானவர்களுக்கு சேஷமானவற்றுக்கு ஒரு நன்மையின்றிக்கே பூர்வபாபபலமேயாய்ப்போ மித்தனையாகவும் சொல்லாநின்றதிறே. (ஞ) " வெடிவிதுரவு தவுஸாதித ஸ்ரு தீரபெஹு ஹரிஸமதி । தீரவதெஹு வஷய ஸ்ரவு யாஹுரிஃ உரிஸாம்மதிழு" என்றும் (எ)"நஷுஸவெவுதஹுவிஷவிபெரிமெ ஷிவஜிழுதி । தீபிர நம்ஸுதிதுஹு கிம்பாதுஷ்ய கம்கு தழு " என்றும் ஸ்ரீவிஷ்ணுதர்ம த்திலே சொல்லப்பட்டதிறே. ... ... ச.

மு.—ஆமையின் முதுகத்திடைக்குதிகொண்டே தூமலர்சாடிப்போய்த்
தீமைசெய்திளவாளைகள் விளையாடுநீர்த் திருக்கோட்டியூர்
நேமிசேர்தடங்கையினானை நினைப்பிலா வலிநெஞ்சுடைப்
பூமிபாரங்களுண்ணுஞ் சோற்றினைவாங்கிப் புல்லெத்தினிமினே. டு.

(க) " நகலுபாகவதா யமவிஷயம் கச்சந்தி. " (உ) " அநேந ஜீவேநாத்மநா தேவ விச்ய நாமரூபே வ்யாகரவாணி. " (ங) வடவடாதி.

(ச) " தயாதி ரோஹிதத்வாச்ச சக்திஃ க்ஷேத்ரஜ்ஞஸம்ஜ்ஞிதா- ஸர்வபூதேஷு பூயா ல தாரதம்யேந வர்த்ததே. " (ஞ) " அப்ராணிமத்ஸ்ய ஸ்வல்பாஸா ஸ்த்தாவரேஷ்ய தேதாதிகா. " (ட) " வேதவித்பாவ்ரதஸ்நாதே ச்ரோத்ரியே க்ர்ஹ்மசாரிதே - க்ரீடந்த் யோஷதயஸ்ஸர்வா யாஸ்யாமஃ பரமாம்கதிம். " (எ) " நஷ்டசௌசே வ்ரதப்ரஷ்டே விப் ரே வேதவிவர்ஜிதே- நீயமாநம் ருதத்யந்நம் விட்மயா துஷ்க்ர்தம்க்ர்தம். "

பதவுரை.

இள— பருவத்தால் இளைய [களானவை
வ்ரளைகள்— 'வாளை' என்னும் மத்ஸ்யங்
ஆமையின் முதுகத்திடை — ஆமையின் முதுகிலே
குதிகொண்டு— சென்றுகுதித்தும்
தூ— தூய்தான
மலர்— (அருகேமலர்ந்து கிடக்கிற) தாமரைமுதலியமலர்களை
சாடி— உழக்கிக்கொண்டும்
போய்— போய்
தீமை செய்து — கூர்த்ரஜந்துக்களைக் கலக்கி ஓட்டுகையாகிற தீம்புகளைச் செய்தும்
விளையாடு— விளையாடா நின்றுள்ள
நீர்— நீர்வளப்பத்தையுடைய
திருக்கோட்டியூரில்;

நேமி— திருவாழியோடே
சேர்— சேர்ந்திருக்கிற
தட— பெரிதான
கையினனே— திருக்கையையுடையவனே
நினைப்பு இலா— ஒருக்காலும் நினையாத
வலி நெஞ்சு உடை— கடோரமான நெஞ்சையுடையராய்
பூமி பாரங்கள்— பூபாரமாயிருந்துள்ள பாபிகளானவர்கள்
உண்ணும்— உண்கிற
சோற்றினை— சோற்றை
வாங்கி— பிடுங்கி [புல்லிக்கொண்டு
புல்லை— அறிவிலிகளான பசுக்கள்தின்கிற
தின்னிமின்— (அவர்கள் வயிற்றைத்) தற்றுவிடுங்கோள்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. ஆமையித்யாதி. ஒருகாலும் ஜலஸம்ர்த்திமாறாதஸ்தலங்களில், ஆமைகளும் மத்ஸ்யங்களும் வர்த்திக்கக்கடவதாய், தாமரை செங்கழுநீர் ஆம்பல் நெய்தல் முதலானபுஷ்பங்களு முண்டாயாய்த்திருப்பது. அதில், மத்ஸ்யங்களிலே கூர்த்ரமத்ஸ்யங்களும் மஹாமத்ஸ்யங்களு முண்டிறே. மஹாமத்ஸ்யமிறை-வாளையாவது. அதுதன்னிலும் முதிர்ந்து வயஸ்ஸுப்புருந்தவை பிறழவும் குதிக்கவும் மாட்டாதே திரியாநிற்கும்; இளையவையாய்த்து - களித்து விளையாடித்திரிவன. அப்படி பருவத்தாலினையதா யிருந்துள்ள 'வாளைகளானவை, செருக்காலே உகளித்து நீருக்குள்ளே முதுகுதோற்றும்படிகிடக்கிற ஆமையின் முதுகிலே சென்றுகுதித்து, பின்பு அருகே மலர்ந்துநிற்கிற தூய்தான தாமரை செங்கழுநீர் முதலான பூக்களை உழக்கிக்கொண்டுபோய் ஒன்றோடொன்று எதிர்பொருது கூர்த்ர ஜந்துக்களைக்கலக்கி ஓட்டி ஸ்வைரஸஞ்சாரம் பண்ணுகையாகிற தீம்புகளைச்செய்து விளையாடாநின்றுள்ள ஜலஸம்ர்த்தியையுடைய திருக்கோட்டியூரில். ப்ராப்யபூமியி லுள்ளதெல்லாம் ச்லாக்யமா யிருக்குமிறே யிவர்க்கு; ஆகையால், இதினுடைய வ்யாபாரத்தை ஹர்ச்சிறப்பாக்கிக்கொண் டருளிச் செய்கிறார்.

நேமிடசேர்தடங்கையினனே. திருவாழியோடே சேர்ந்திருக்கிற பெரிய திருக்கையை யுடையவனே. வெறும்புறத்திலே, திருக்கையினழகுதானே அமைந்திருக்க, அதுக்கு மேலே திருவாழியோட்டைச் சேர்த்தியுமுண்டானால் அழகு இரட்டித்திருக்குமிறே. ஸர்வாபரணங்களும் தானேயாகப் போரும்படியிறே திருவாழிதானிருப்பது. "சக்கரத்தண்ணலே" என்று கையும் திருவாழியுமான அழகை நினைத்தால் தறைப்பட்டுக் கண்ணும் கண்ணீருமாய்க் கிடக்கும்படியாயிறேயிருப்பது. நினைப்பிலா வலிநெஞ்சுடை. இவ்விஷயத்தை ஒருகாலும் நினைத்தல் செய்யாத நிண்ணிய நெஞ்சையுடைய. அரவாத சிந்தாவிஷயமான வித்தை காதாசித்கமாகவும் நினையாதொழிவதே! என்னும் இன்னுபிபாலே யருளிச்செய்கிறார் கையும் திருவாழியுமான சேர்த்திதானும், உபேயபரனெவனுக்கும் உபாயபரனெவ

னுக்கும் வேணுமிறே. உபேயபரனானவனுக்கு அழகுக்குடலாகவேணும்; உபாயபரனானவனுக்கு விரோதநிரஸநத்துக் குடலாகவேணும். "எப்போதும் கைகழலா நேமியான் நம் மேல்வினைகடிவான்" என்னக்கடவதிறே. இப்படி யிருக்கிற விஷயத்தை ஒருகாலும் நினையாதிருக்கைக்கு மேற்பட்ட நெஞ்சில் வன்மையுண்டோ. நெஞ்சில் வலிமைதான் - தானுக நினையாத வளவன்றிக்கே, ஹிதபரரானவர்கள் "ஸதாத்யய விஷயங்காண், ஒருகாலாகிலும் நினைக்கமாட்டாயோ" என்றால், "எனக்கு-நினைக்கைக்கு வேறவிஷயமுண்டுகாண்" என்று உதறிவிடும்படியாயிறே யிருப்பது. பூமிபாரங்கள். இப்படி பகவத்ஸ்மரண கந்தரஹிதரான்கையாலே விச்வம்பரையான பூமியாலும் பரிக்கவொண்ணுத பாரமாயிருந்துள்ள பாபிகளானவர்கள். தாங்களறியாதே யிருக்கச்செய்தேயும் தானறிந்த ஸம்பந்தமே ஹேதுவாகத் தங்களை ரக்ஷித்துக்கொண்டுதரியும் ஈச்வரவிஷயத்தில் கர்தக்நரானவர்களையிறே - பூமிபாரமென்கிறது. உண்ணும் சோற்றினைவாங்கிப் புல்லெத்தினிமினே. "மநுஷ்யயோநியிலே பிறந்துவைத்தே அறிவில்லைகளாகையாலே அந்த (க) ஜந்மபலமில்லாத உங்களுக்கு மநுஷ்யர் ஜீவிக்கிறஜீவந மேதுக்கு?" என்று பறித்து, அறிவில்லாத பசுக்கள் தின்கிற ஜீவந்மான புல்லைக்கொண்டுவந்து தின்னியுங்கோள். ஆஹாரநித்ராதி சதுஷ்டயமும் பசுக்களுக்கும் மநுஷ்யர்களுக்கும் ஸமாநமாயிருக்க, ஜ்ஞாநமிறே பசுக்களிற்காட்டில் இவர்களுக்கு அதிகமான விஷயம்; அந்த ஜ்ஞாநமில்லாதார் பசுஸமரிறே; அத்தைப்பற்ற, மநுஷ்யர் ஜீவிக்கிற சோற்றைத் தின்னுதபடிவாங்கி பசுக்கள் தின்கிற புல்லைத் ‡தின்னியுங்கோ வென்கிறார். "மிண்டர் பாய்ந்துண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமினீரே" என்று தங்கள் திறத்தில் அவன் செய்த உபகாரத்தை யறிந்து அவனெழுந்தருளியிருக்கிற தேசத்தை வாய்புலத்த வேண்டியிருக்க, அது செய்யாதே கர்தக்நராய் முண்டடித்து பலத்தாலே ஜீவித்துத்திரிகிறவர்கள் ஜீவிக்கிறசோற்றைவிலக்கி, ஒருநாள் ஒருபிடிசோற்றிட்டவன் வாசலிற்பற்றிக்கிடக்கும் கர்தஜ்ஞமான நாய்க்கிடுங்கோள் நீங்கள் என்றாரிறே-ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார். இவர்கள் இப்படி "தினிமின்" "இடுமின்" என்கிறது ஆரைக்குறித்தென்னில்; விசேஷஜ்ஞராய் இது செய்கைக்கீடான சக்திமான்களா யிருப்பவரைக் குறித்திறே; இப்படி இவர்கள் தானருளிச்செய்கிறது இதுதன்னைக் கேட்டாகிலும் லஜ்ஜாபயங்களுண்டாய் பகவத்விஷயத்தில் நெஞ்சுபுரிவர்களோ என்னும் நசையாலேயிறே. ... ... கு.

அ. ஆறும்பாட்டு. கீழ் ஐந்துபாட்டாலும் - அவைஷ்ணவர்களுடைய ஹேயதை சொல்லிற்று; இப்பாட்டுத்தொடங்கி மேலைந்துபாட்டாலும் - ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஏற்றம் சொல்லுகிறது.

மூ.—பூதமைந்தோடு வேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால்
ஏதமொன்று மிலாத வண்கையினர்கள்வாழ் திருக்கோட்டியூர்
நாதனேநரசிங்கனே நவின்றேத்துவார்க ளுழக்கிய
பாததூளிபடுதலா லீவ்வுலகம் பாக்கியஞ் செய்ததே. கூ.

பதவுரை.

பூதம் ஐந்தொடு— பஞ்சபூதமயமான சரீரத்தாலும் | வேள்வி ஐந்து — பஞ்சமஹாயஜ்ஞங்களாலும்

(க) ஜந்துவை. ‡ தினியுங்கோள் - தற்றுவிடுங்கள்.

புலன்கள் ஐந்து— ஐம்புலன்களாலும்
பொறிகளால்— ஐம்பொறிகளாலும்
ஏதம் ஒன்றும் இலாத— குற்றமொன்றுமில்
லாதவர்களுமாய்
வண்கையினர்கள்— உதாரர்களுமாயுள்
ளவர்கள்
வாழ்— நித்யவாஸம் பண்ணுகிற
திரு கோட்டியூர்— திருக்கோட்டியூர்க்கு
நாதனை— நாதரான சொக்கநாராயணரையும்
நரசிங்கனை— தெக்காழ்வராயு மெழுந்த
ருளியிருக்கிறவனை
நவின்று— வாயாரச்சொல்லி
ஏத்துவார்கள்— ஸ்துதிக்குமவர்கள்
உழக்கிய— ஸஞ்சரிக்கிற
பாததூளி— திருவடித்தூள்கள்
படுதலால்— படுதலால்
இ உலகம்— இந்தலோகமான து
பாக்கியம் செய்தது— நல்லபாக்யத்தைப்
பண்ணிற்று.

வ்யா. பூதனைமேற்தோடே. இத்தால் - பஞ்சபூதாரப்தமான தேஹத்தைச் சொல்லுகிறது. * மண்ணுநீர் தீவளிகால் மஞ்சுலாவு மாகாசமுமாம் புண்ணுரா க்கையிதே. இத்தோடே வேள்வியைந்து. பஞ்சமஹாயஜ்ஞங்கள். புலன்களைந்து. சப்தாதிகளான விஷயங்களைந்து. "புலன்" என்று - புலப்படும் விஷயங்களைச் சொல்லுகிறது. "பொறிகள்" என்று - ச்ரோத்ராதிகளான இந்த்ரியங்களைந்தையும் சொல்லுகிறது. இவற்றை "பொறி" என்கிறது - இவனை சப்தாதிகளிலே கொடுபோய் விழவிட்டு முடிக்குமதாகையாலே. "புலனைந்துமேயும் பொறியைந்து" என்னக்கடவதிறே. இவற்றில் ஏதமொன்றுமிலாத. இவற்றோடே கூடியிருக்கச்செய்தே தோஷமின்றிக்கே யிருக்கை. பூதனைமேற்து மேதமொன்றுமில்லாத. தேஹாத்மாபிமானத்தனக்கு என்றிருக்கை-ஏதம்; ஈச்வரனுக்கு என்றிருக்கை-ஏதமின்றிக்கே யிருக்கை. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு என்றிருக்கை - ஏதமொன்றுமின்றிக்கே யிருக்கையாவது. வேள்வியைந்துமேற மொன்றுமிலாத. ஸ்வர்க்காதி ஸாதனமாக அநுஷ்டிக்கை - ஏதம்; மோக்ஷஸாதனமாக வநுஷ்டிக்கை - ஏதமின்றிக்கே யிருக்கை; பகவத்பாகவதகைங்கர்யமே என்றிருக்கை- ஏதமொன்று மின்றிக்கே யிருக்கையாவது. புலன்களைந்து மேதமொன்றுமிலாத. சப்தஸ்பர்சரூப ரஸகந்தங்களைத் தனக்கு என்றிருக்கை-ஏதம்; இவற்றை பகவத்விஷயத்துக் கென்றிருக்கை-ஏதமின்றிக்கேயிருக்கை; பாகவதவிஷயத்துக் கென்றிருக்கை- ஏதமொன்று மின்றிக்கே யிருக்கையாவது. பொறிகளைந்து மேதமொன்றுமிலாத. இந்த்ரியங்களை இதரவிஷயங்களில் மூட்டுகை- ஏதம்; பகவத்விஷயத்திலே மூட்டுகை- ஏதமின்றிக்கே யிருக்கை; பாகவதவிஷயத்துக் கென்றிருக்கை - ஏதமொன்று மின்றிக்கே யிருக்கையாவது. வண்கையினர்கள். அதாவது- ஔதார்யம். அதாவது- "பூமி பாரங்களுண்ணும் சோற்றினலாங்கி" என்கிறபடியே அப்படதார்த்தங்கள் நஷ்டமாதபடியாக வாங்குகையும், இவற்றை ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கொடுக்கையும். [ஈச்வரனை மூட்படப்ப பறித்திறே பாகவதகைங்கர்யம் பண்ணிற்று-திருமங்கையாழ்வார்; அதுக்கு உபாயமாகவிறே ஈச்வரன் திருமந்த்ரத்தை யுபதேசித்தது.] "துன்னுசகடத்தாற்புக்க பெருஞ்சோற்றை - தான்தற்றிய தெற்றனவும்" என்று - ஸ்ரீவைஷ்ணவர்களுக்கிடாதே தானே யுண்டானென்றிறே ஆழ்வார் கர்ஹித்தது. "பொதுவாக வெண்பதினப் புக்குநீயுண்டக்கால் சிதையாரோ உன்னுடு" என்று ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானை முட்பட கர்ஹித்தாளிறே பெண்மகள்; அவ்வளவுமன்றிக்கே, "சாதுகோட்டி யுட்கொள்ளப்படுவாரே" என்கிறபடியே - தவ்கள்திரளில்கூட்டாதே * பாஞ்சசன்னியத்தைய் பற்பநாபனோடே கூட்டிவிட்டது. அவதாரத்திலுண்டானவிழவு நிரவிறே அர்ச்சாவதாரத்தில் அமுதுசெய்தாற்போலே குறையாமல் கொடுக்

பிறது. வாழ். கண்ணுலேகண்டு அநுபவிக்கப்பெற்றவர்கள். திருக்கோட்டியூர்நாதனை. 'ஸ்ரீ வைகுண்டநாதன்' 'திருப்பாற்கடல்நாதன்' என்றாலும், " திருக்கோட்டியூர்நாதன் " என் பதிலேறியேற்றம். நாதனையென்றது- சொக்கநாராயணரை. நரசிங்கனை என்றது- தெக்காழ் வாரை. நரசிங்கனை நவின்றேத்துவார்கள். * மார்விரண்டு கூறுகக்கீறிய கோளரியை வேறுக வேத்தி யிருக்குமவர்களிலே இவர்கள். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானை " திருநாமம் சொல்ல லொட்டேன் " என்ற வாயைத் தகர்த்திலே மார்வை இடந்தது. உழக்கியபாததூளி படுத லால் அநுபவஜநிதப்ரீதிக்குப்போக்குவிட்டு ஸஞ்சரிக்கிற தூளிபடுதலால். இவ்வுலகம். * நினைப்பிலாவலி நெஞ்சுடைப்பூமிபாரங்கள் வர்த்திக்கிற இந்தலோகம். பாக்கியம்செய்ததே. திருவுலகளந்த திருவடிகளின் தூளிபட்டதன்று பாக்யம், ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்ரீபாததூளி பட்டது பாக்யம். கல்லிப் பெண்ணைக்கி சரீரத்தைப் பூண்கட்டிற்றித்தனை - அவன்றிருவ டிகள்; * கடல்வண்ணன் பூதங்கள் ஸ்ரீபாததூளிபட்டால்- " போயிற்று வல்லுயிர்ச்சாபம் " என்று ஸ்வரூபத்தைப்பற்றிவரும் விரோதிகளும்போமிறே. *பேர்த்தகரம் நான்குடையான் திருவடிகள் பணிவதிலும் * பேரோதம்நீர்த்தகரர் ஸ்ரீபாததூளி படுகையிறே பாக்யம். சு.

மூ.—குருந்தமொன்றெரிசித் தானேறேஞ்சென்று கூடியாடி விழாச்செய்து
திருந்துநான்மறையோ ரிராப்பகலேத்திவாழ் திருக்கோட்டியூர்
கருந்தடமுகில்வண்ணனைக் கடைக்கொண்டு கைதொழும்பத்தர்கள்
இருந்தவூரி லிருக்குமானிட ரெத்தவங்கள் செய்தார்கொலோ. எ.

பதவுரை.

திருந்து— திருத்தமான
நால் மறையோர்— சதுர்வேதங்களோயுமப் யலித்த ஸ்ரீவைஷ்ணவர்கள்
ஒன்று— ஒப்பற்ற
குருந்தம்— குருந்தமரத்தை
ஒசித்தானேறேஞ்சும்— முறித்தகர்ஷ்ணனேறேஞ்சே
சென்று கூடி— சென்றுகிட்டி
ஆடி— அவன்குணங்களிலே அவகாஹித்து
விழாச்செய்து- உத்ஸாஹத்தையுடையராய்
இரா பகல்— இரவும் பகலும்
ஏத்தி— ஸ்துதித்துக்கொண்டு
வாழ்— வாழ்கிற
திரு கோட்டியூர் — திருக்கோட்டியூரி லெழுந்தருளியிருக்கிற
கரு— கறுத்து
கட— பெருத்திருந்துள்ள
முகில்— மேகம்போன்ற
வண்ணனை— வடிவையுடையவனை
கடைக்கொண்டு — தங்கள் காழ்ச்சியை முன்னிட்டுக்கொண்டு
கை தொழும்— கைதாழாநின்றுள்ள
பத்தர்கள் இருந்த— பக்தர்கள் வர்த்திக்கிற
ஊரில்— ஊரிலே
இருக்கும்— வாஸம்பண்ணுகிற
மானிடர்— மநுஷ்யர்
எ தவங்கள்— எப்படிப்பட்ட தபஸ்ஸை
செய்தார் கொல் ஓ— பண்ணினார்களோ!.

வ்யா. ஏழாம்பாட்டு. குருந்தமொன்று. அத்விதீயமான குருந்தம். பூ முட்டாக் கட்டாற்போலே திருக்கையாலே கர்ஷ்ணன் விரும்பியிருக்கும். "பூங்குருந்தேறியிராதே" என்னக்கடவதிறே. " இதில் கர்ஷ்ணன்வந்து ஏறக்கூடும், பின்னை நலிகிறோம் " என்றி நிறை- அஸுரன் ப்ரவேசித்தது. ஒசித்தான். விரோதிநிரஸநம்பண்ணினான். ஒசித்தானேறே சென்று கூடியாடி விழாச்செய்து. விரோதிநிரஸந சிலனைச்சென்று கிட்டி இருவர்நினைவு மொ ன்றுப் அவன்குணங்களிலே அவகாஹித்து, அநந்தரம் இவர்களுக்கு விக்ரஹாநுபவத்தைக்

கொடுக்கும். அங்கும் *ஸதாபச்யந்தியிறே. திருந்துநான்மறையோர். வேதத்துக்குத் திருத்தமாவது - பகவத்ஸ்வரூபாதிகளை உள்ளபடி ப்ரதிபாதிக்கை. இதில் இவர்கள் செய்வது குணவிக்ரஹாதுபவத்துக்கு ஏகாந்தமான ப்ரதேசங்களில் சொல்லுகிறபடியே அநுஷ்டிக்கை. இராப்பகலேத்தி. வேறு அந்யபரதை யில்லாமையாலே இதுமாறுமல் நடக்கும். வாழ். அநந்யப்ரயோஜநராகையாலே இதுதானே (க) பலமாயிருக்கும். திருக்கோட்டியூர். அவர்கள் வர்த்திக்கிற தேசம். கருந்டமுகில்வண்ணனை. கறுத்துப் பெருத்திருக்கிற முகில்போலே யிருக்கிற திருமேனியை யுடையவனை. கடைக்கொண்டு கைதொழும். தங்கள்கைங்கர்யத்தை முன்னிட்டுத் தொழுமவர்கள். அன்றிக்கே, உத்கர்ஷ்டன்பக்கல் அபகர்ஷ்டன் செய்யுந்தொழில் என்னவுமாம். அன்றிக்கே, "கடை" என்று - முடிவாய், மேல் "விற்கவும் பெறுவார்கள்" என்கையாலும் "தநீயசேஷத்வமே தங்களுக்கு ஸ்வரூபம்" என்றுகொண்டு அவர்களுக்கு உகப்பாக பகவத்விஷயத்தைத் தொழுமவரென்னவுமாம். பத்தர்கள். வைதமாகவன்றிக்கே, ராக(ப்ராப்த)மாதத்தொழுமவர்கள். இருந்தவூரிலிருக்கும்மானிடர் என்கையாலே மநுஷ்ய ஜந்மத்துக்கு ப்ரயோஜநம் ஸ்ரீவைஷ்ணவர்களிருந்த வூரிலிருக்கையென்னுமிடம் காட்டுகிறது. அங்குப்போகிறதும் "வானவர்நாடு" என்றிறே. "சேதநனே தொழுவார் விண்ணுளாரிலும் சீரியர்" என்கையாலே - அவர்களில் இவர்களுக்கு வாசியுண்டானாற் போலே, தேசத்துக்கும் வாசியுண்டு. "இருந்தவூரிலிருக்கும் மானிடர்" என்கையாலே அவர்களெல்லர் உத்தேச்யர், அவர்களிருந்த தேசம். "வைகுந்தமாகும் தம்மூரெல்லாம்."

[ஆழ்வானுக்கு, "ஒரு ஸ்ரீவைஷ்ணவர் திருவடிச்சார்ந்தார்" என்றுவிண்ணப்பம் செய்ய; "பாகவதகைங்கர்யமே யாத்ரையாய்ப்போந்தவரை அப்படி சொல்லலாகாது, 'திருநாட்டுக்குப்போனர்' என்று சொல்லவேணுங்காணும்" என்றருளிச்செய்தாராம். ஸ்ரீவைஷ்ணவர்களை "நீராட" என்றும், ஆசார்யனை "திருமஞ்சனம்பண்ண" என்றும் சொல்லுகிறது - உத்தேச்ய தாரதம்யத்தை யிட்டிறே. [‡]"வடகநம்பி திருநாட்டுக்குப் போனர்" என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவர், அருளாளப்பெருமாளெம்பெருமானருக்கு விண்ணப்பஞ்செய்ய; சிறிதுபோது மோஹித்துக்கிடந்து உணர்ந்தருளி, அவரைப்பார்த்து "திருநாட்டுக்குப்போனர்" என்னலாகாதுகாணும், 'உடையவர் ஸ்ரீபாதத்துக்குப்போனர்' என்னவேணுங்காணும்" என்றருளிச்செய்தாராம்.] ஸ்ரீசபரியும் பெருமாள் திருவடிகளிலே ப்ரார்த்தித்தது இதுவிறே. ஆழ்வான், ஸம்ஸாரத்தில் ஆர்த்தியின் கனத்தாலே கலங்கி, பெருமாள் திருவடிகளிலே, "அடியேனைத் திருநாடேறப் போம்படி திருவுள்ளமாகவேணும்" என்று விண்ணப்பம்செய்ய; பெருமாள் திருவுள்ளமாய், ஆழ்வார் திருவாங்கப் பெருமாளரையர் திருமாளிகையிலே ‡புறவீடுவிட்டிருக்கிறவளவிலே, இத்தை உடையவர் கேட்டருளி பஞ்சுக்கொட்டன் திருவாசலளவாகவெழுந்தருளி, "பெருமாளுக்கு விண்ணப்பஞ்செய்தால் விண்ணப்பம் செய்தது பெருமாளும் செய்தருளுவர், நாமடியாகப்பெருமாள் இரண்டுவார்த்தை யருளிச்செய்தாராக வொண்ணாது" என்று, மீண்டும் ஆழ்வானிருக்கிற விடத்தேற வெழுந்தருளி "ஏன் ஆழ்வான்!" என்ன; "அடியேன் மறந்தேன்" என்று விண்ணப்பம் செய்தார். மறக்கைக்கடி- ஸம்ஸாரத்தில் ஆர்த்தியின் கநம்.

(க) ஹை. ‡ புறவீடுவிடல்- பரஸ்த்காரம் பண்ணுதல்.

எத்தவங்கள் செய்தார்கொலோ. "அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்பும் நில னும் இருளார் வினைகெடச்செங்கோல் நடாவுதிர் - இவற்றின் புறத்தாளென்றெண்ணே" என்கிறபடியே அவன் காவலுக்குள்ளே கிடக்கிறதுதானேயிறே தவமாவது. "நீர் நில்லை நின்ற தவமிதுகொல்" என்று பகவத்விஷயத்தைக் கிட்டுகைக்குத்தவம் ஒன்று; பாகவதவி ஷயத்தைக் கிட்டுகைக்கு அநேகம் தபஸ்ஸுவேணுமிறே. கோலோ. பகவத்விஷயத்தைக் கிட்டுகைக்கு தபஸ்ஸு அறிவர்; பாகவதவிஷயத்தைக்கிட்டும் தபஸ்ஸுக்களிறே இவர்க்கு அறியப்போகாதிருப்பது. ... ... எ.

மூ.—நளிர்ந்தசீல னயாசல னபிமானதுங்கனை நாடொறும்
தெளிந்தசெல்வனைச் சேவகங்கொண்ட செங்கண்மால் திருக்கோட்டியூர்
குளிர்ந்துறைகின்ற கோவிந்தன் குணம்பாடுவோருள்ள நாட்டினில்
விளைந்தநானியமு மிராக்கதர் மீதுகொள்ளகிலார்களே. அ:

பதவுரை.

நளிர்ந்த சீலன் —	குளிர்ந்த சிலத்தையு டையவராய்
நயாசலன்—	நீதிநெறி தவறுதவராய்
அபிமானம்—	பகவதநுபவத்தால் வந்தசெ ருக்கில்
துங்கனை—	உயர்ந்தவராய்
நாள்தொறும்—	நாள்தோறும்
தெளிந்த—	தெளிந்துவர்சா நின்றுள்ள
செல்வனை—	கைங்கர்ய ஸ்ரீயையுடையவ ரான செல்வநம்பியை
சேவகம்கொண்ட—	அடிமைகொண்டவனும்
செம் கண்—	சிவந்தகண்களையும்
மால்—	பிராட்டிபக்கல் வ்யாமோஹத்தையு முடையனான எம்பெருமான் வர்த்திக்கிற திருக்கோட்டியூரில்;
குளிர்ந்து—	திருவுள்ளம் குளிர்ந்து
உறைகின் —	நித்யவாஸம் பண்ணுகிற
கோவிந்தன் குணம் பாடுவார்	கோவிந்தனுடைய கல்யா ணகுணங்களைப்பாடுபவர் கள்
உள்ள—	எழுந்தருளியிருக்கிற
நாட்டினுள்—	நாட்டிலே
விளைந்த—	விளைந்த
தானியமும்—	தான்யத்தையுங்கூட
இராக்கதர்—	ராக்ஷஸர்கள்
மீதுகொள்ளகிலார்கள்	அபஹரிக்கமாட்டார்கள்.

வ்யா. எட்டாம்பாட்டு. நளிர்ந்தசீலன். குளிர்ந்த சிலத்தையுடைய செல்வநம்பி. ஈச்வரன்சீலம் கொதித்திருக்கும். அதுக்கடி, "வாள்கொள் நீள்மழுவாளியுன்னுகத்தான்" என்றும், "ஆளராய்த்தொழுவாரு மமரர்கள்" என்றும்- துர்மாநியான ருத்ரனும், சாவா மைக்கு மருந்துதின்னும் தேவஜாதியுமிறே இவனுக்கடிமை செய்வது. "அக்கும்புலியி னதளுமுடையா ரவரொருவர்பக்கம்நிற்க நின்றபண்பரூர்" என்றும், "தாழ்சடையும் நீண் முடியும் ஒண்மழுவும் சக்கரமும் சூழரவும் பொன்னாணும் தோன்றுமால்" என்றும் - * இர ண்டுருவு மொன்றாயிசைந்து தோற்றுகையாலே, "ஏறுசு மிறையோனும் திசைமுகனும் திருமகளும் கூறனும் தனியுடம்பன்" என்று - இவனுடம்பு தேவதாந்தரமும் திருவிடை யாட்டமுமாயிறே யிருப்பது. இப்படியன்றியே, "காணிலுமுருப்பொலார் செவிக்கினிதி கீர்த்தியார்" என்றிறே - இவனிருப்பது. நயாசலன். நயமென்று - நீதியைச் சொல்லு கிறது. அங்கும், "நீதிவானவன்" என்னக்கடவதிறே. அசலன். நீதிக்குக் குலதனில்

லாதவன். சேஷ்சேஷிபாவஸம்பந்தம், "ஒண்டொடியாள் திருமகளும்நீயும்" என்கிறபடியே அடைவுபட்டிறே அங்கிருப்பது; இங்கு மலையடைவே "யானே யென்றனதே" என்று - அடைவுகெட்டிருக்கும். உக்ரஸ்ரஸ்ஸே முடியைச்சூட்டி ஆஸநத்திலே உயரவைத்து தான் திருக்கையாலே வெண்சாமரம் வீடுமிடமிறே இவ்விடம். "விண்ணுளார் பெருமாற்கடிமை செய்வாரையும் செறுமைப்புலன்" என்று - *மயர்வறமதிநல மருளப்பெற்றவரும் அநிசங்கை பண்ணவேண்டி மிடமிறே யிது. இந்நிலத்திலே குறையாநிருக்கை. பாபம் மாண்டால் பண்ணும் க்ர்மபயமிறே பாபம்வந்தவாறேகூலவது, பாபம் கிடக்கப்பண்ணும் க்ர்மபாகையாலே குலையாது. அபிமானதுங்கன். "என்னில் மிகு புகழார்யாவரே" "மாறு ளேதா- விம்மண்ணின்மிசையே" "யாவர்நிகரகல்வானத்தே." "யான்பெரியன் நீபெரியை யென்பதனே யாரறிவார்" என்று - பகவதநுபவத்தால்வந்த செருக்கும் கர்வமுமிறே அபிமாநிக்கிறது. [புகியுமிருவிசும்பும் நின்னகத்த] இதுவன்றே உன்படி. [நீயும்] சேதநா சேதநங்களை உன்திருவயிற்றிலேவைத்த நீயும். [என்செவியின் வழிபுகுந்தென்னுள்ளாய்] என்று - தத்த்வத்ரயத்தையும் அணுப்பரிமாணனை என்னுடைய நெஞ்சுக்குள்ளேயடக்கின நாமெஞ்ஞாநீயோ பெரியாரென்னும் மிடத்தை, உனக்கு பக்ஷபாதியுமாய்க்கையாலுமாய்க்கைப் பட்டவனேடே விசாரி. "திருமேனியுடைச் சிந்தையுள் மூவுலகும் தன்னெறியா வயிற்றிற் கொண்டு நின்றொழிந்தார்" என்னக்கடவதிறே. "நளிர்ந்தசிலன்" என்று - குணம். "நயாசலன்" என்று- அதுஷ்டாநம். "அபிமானதுங்கன்" என்று- இவற்றால்வந்தசெருக்குக்கடியஞ்ஞாநகார்யமென்கிறது. நாடொறும்தெளிந்த என்று - இச்செருக்கோடே விபரீதச் செருக்குஞ்ஞாநமும் கலசாதென்கிறது. "கலக்கமில்லா நற்றவமுனிவர்" என்று கலங்காதிருக்கைதான் அரிதாயிறேயிருப்பது. "தெளிவுற்று வீவின்றி நின்றவர்" என்கிறபடியே - இத்தெளிவுதான் குலையாதிருக்கைதான் ஏற்றமாயிருப்பது. அன்றிக்கே, நாடொறும் தெளிந்து வாராநிற்குமவர்க்கு. செல்வினை. (க) "அஸ்மதீயா அகிலாபீஷ்டா:" என்றும், (உ) "கஜேந்த்ரஸ்ய கதி ஸ்ரீரஸது" என்றும், (ங) "மதீய நாமவாஸ்ரீரஸது" என்றும் சொல்லுகிற மூன்று ஸ்ரீயுமிவர்க்குண்டு. (க) "அஸ்மதீயா அகிலாபீஷ்டா:" என்று - பெருமாள் ராஜ்யத்தை இழந்தார்; இவர் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெற்றார். *சுற்றமெல்லாம் பின்தொடர எல்லாவடிமையும் பெற்றார். "ஸம்பந்த:" என்கையாலே பாகவதகைங்கர்யபர்யந்தமாகையிறே பூர்த்தி. பகவத்கைங்கர்யம் செய்தது தம்முடைய ஸத்தை பெறுகைக்காக; அந்தஸத்தையை யழியமாறியிறே பாகவதகைங்கர்யம் பண்ணிற்று. (உ) ["கஜேந்த்ரஸ்ய கதி ஸ்ரீரஸது"] பிராட்டியையும் பெருமாளையும் கண்டன்றிறே இவர்படை வீடுவிட்டுப் புறப்பட்டது; ஆகாசமிறே இவர்க்குள்ளது. இளையபெருமாளும் ஸ்ரீவிபீஷணழ்வானும் படைவீட்டை விட்டபின்பிறே ஸ்ரீமான்களாய்த்து. பிராட்டி லங்கைக்குள்ளே எழுந்தருளியிருக்கச்செய்தேயும் ஸஹவாஸதோஷத்தாலே பிராட்டிகடாக்ஷம்பெற்றதில்லை; லங்கையைவிட்டுக் கிளம்பின பின்பிறே "ஸ்ரீமான்"என்றது. (ங)["மதீய நாமவாஸ்ரீரஸது"] என்று ஸ்ரீகஜேந்த்ராழ்வான் ஸ்வரக்ஷணத்தில் ஸ்வவ்யாபாரத்தைப் பொகட்டபின்பிறே ஸ்ரீமானுய்த்து. முதலியல்ல விரோதி, அஹங்காரம். இவற்றால் பலித்தது- ப்ராப்யத்தை லபித்

(க) "லக்ஷ்மணேலக்ஷ்மிஸம்பந்த:." (உ) "அந்தரிக்ஷகதச்ஸ்ரீமான். " (ங) "ஸ்ரு நாகவரச்ஸ்ரீமான். "

தபடியும், ப்ராப்திவிரோதி நிவர்த்தமானபடியும், ப்ராபகவிரோதி நிவர்த்தமானபடியும் சொல்லிற்று. சேவகங்கொண்ட. இவன்செய்தான் என்றால் இவனுக்கு உகப்பாம்; "கொண்ட" என்கையாலே ஈச்வரன் உகப்பனென்கிறது. சேவகங்கொண்டது ஸ்வரூபத்தைக் காட்டியோவென்னில்; அன்று, கண்ணழகைக்காட்டி யென்கிறது. செங்கண்மால். "சேவியேனுன்னையல்லாற் சிக்கனச் செங்கண்மாலே" என்னக்கடவதிறே. திருக்கோட்டியூர் குளிர்ந்துறைகின்ற. பரமபதத்தில் ஸம்ஸாரிகளிழவிலே திருவுள்ளம் குடிபோய் உள்ளுக்கொதித்திருக்கும்; அவ்விருப்பு நித்யமானாலும்; "இருந்தாலும் முள்மேலிருப்பு" என்னக்கடவதிறே; ப்ரீதியோடே பொருந்தி வர்த்திப்பதிங்கேயிறே. "அந்தாமத்தன்புசெய்தென்னுடை சேரம்மானுக்கு" என்று காட்டித்தீயிலே அகப்பட்டவன் தடாகத்திலேவந்து விழுமாபோலேயிறே வந்து விழுந்தது. "வெள்ளத்திலுள்ளானும் வேங்கடத்துமேயானு, முள்ளத்திலுள்ளான்" என்னக்கடவதிறே. "பள்ளிகொள்ளும் சிதனேய தொழுவார் விண்ணுளாரிலும் சீரியர்" என்னக்கடவதிறே. கோவிந்தன் குணம்பாடுவாருள்ளநாட்டிலுள். 'செங்கண்மால்" என்று வாத்ஸல்யம்; "சேவகங்கொண்ட" என்று - ஸௌசீல்யம், 'கோவிந்தன்" என்று - ஸௌலப்யம்; "அவதாரம் பாத்வம்" என்னுமப்படியிறே- அர்ச்சாவதாரஸௌலப்யம். இதுக்கு ஏகாந்தமான குணங்களை ஸ்நேஹத்தோடே சொல்லுவாருள்ள நாட்டிலுள். அவர்களளவல்ல, அவர்கள் ஸம்பந்தமுடையாரளவல்ல, அவர்களிருந்த ஊரளவல்ல, அவ்வூரோடே சேர்ந்தநாட்டிலுள். விளாந்தானியமும் மிராக்கதர் மீதுகொள்ளுகிலார்களே. தனக்கும் தன்பந்துக்களுக்கு மென்னிலிறே அவர்கள் கொள்ளுவது; பகவத்பாகவத விஷயங்களுக் கென்றால் அவர்களுக்குக் கொள்ள சக்தியில்லை. "புனத்துளவக்கிள்ளிப் புதுவையிக்காட்டியுன் பொன்னடிவாழ்க" என்றிறே இவர்களிருப்பது. * அ.

மூ.—கோம்பினர் பொழில்வாய்க் குயிலினம் கோவிந்தன் குணம்பாடேர்ச்
செம்பொனுர்மதிள்சூழ் செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர்
நம்பனைநரசிங்கனை நவின்றேத்துவார்களைக் கண்டக்கால்
எம்பிரான்றன சின்னங்களிவரிவரென் றுசைகளீர்வனே. கூ.

368

பதவுரை.

கொம்பின்— பூங்களாலே
ஆர்— நெருங்கின
பொழில்வாய்— சோலையினிடத்தில்
குயில் இனம்— குயிலினங்களானவை
கோவிந்தன்— கோவிந்தனுடைய
குணம்— குணங்களை
பாடு— பாடாநின்றுள்ளதாய்
சீர்— சிறந்த
செம் பொன்— செம் பொன்னாலே
ஆர்— சமைந்த
மதில்— மதிளாலே
சூழ்— சூழப்பட்ட
செழு— செழுமைதங்கிய
கழனி உடை— கழனிகளையுடைத்தான
திருக்கோட்டியூரில்;
நம்பனை— விச்வஸநீயனும் [னவனை
நரசிங்கனை— நர்ஸிம்ஹாவதாரம் பண்ணி
நவின்று ஏத்துவார்களை } ப்ரீதிக்குப் போக்குவிட்டுச் சொல்லுமவர்களை
கண்டக்கால்— கண்டால்
இவர் இவர்— இவர்கள் [டைய
எம்பிரான் தன — எம்பெருமான்றன்னு
சின்னங்கள் என்று — சிஹ்நங்களென்று கொண்டு
ஆசைகள் தீர்வன்— ஆசைகள் தீர்வேன்.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. கோம்பினுரித்யாதி. பலீகளாலே நெருங்கின சோலையிடத்துக்குயில்கள். "குயிலாலும் வளர்பொழில்சூழ்." கோவிந்தன்குணம்பாடு. குயிலினங்களானவை, "தாழ்ந்த குலத்திலேயவதரித்துத் தாழ்ந்தார்கார்யம்செய்வதே!" என்று அவனுடைய ஸௌலப்யத்தை யநுஸந்தித்து, ப்ரீதிக்குப் போக்குவிட்டுப் பாடாநிற்கும். * கூட்டிலிருந்து கிளியெப்போதும் கோவிந்தா கோவிந்தா என்று சொல்லுவது- சிலர் பயிற்றுவித்தாலிறே; அங்ஙனன்றிக்கே இவை தானேபாடாநிற்கும். "நாராயணனே வரக்கூவாயேலிங்குத்தின்றும்தரப்பன்" என்னும்படி- இதுவொழிந்த நாமாந்தரங்கள் சொல்லுவதில் இங்குநின்றும் போகலமையும் என்னும்படியிறே இவற்றின்படி. "இன்னடிசிலொடு பாலமுதூட்டியெடுத்தவென் கோலக்கிளியை, உன்னெடுதாழமைக்கொள்ளுவன் குயிலே" என்று கைக்கூலிபெற்றுலிறே கூவுவது; இவை அப்படியன்று. சீர்ச்செம்பொனும்மதிள்சூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர். ச்லாக்யமாய்ச்சிவந்தபொன்னிலேசமைந்த மதிள்களாலே சூழப்பட்டு அழகிய கழனிகளையுடைத்தான திருக்கோட்டியூர். உள்ளுப்புக்கநுபவிக்கவேண்டாதபடி கொம்புகளாலே ஆர்ந்த சோலையும், குயில்கள் பாடுகையும், சிவந்த பொன்னிலே சமைந்த திருமதிள்களும், அழகிய கழனிக்கட்டளையும் கண்டநுபவிக்கவேண்டும்படி நிரதிசயபோக்யமாயிருந்துள்ள தேசம். நம்பினேன் விச்வஸநீயனே. நரசிங்கனே. விச்வாஸத்துக்கடி இந்த அபதாநம். "அடித்தேதாருருவாயின்று நீவாராயெங்ஙனந்தேறுவருமர்" என்னக்கடவதிறே. ப்ரஹ்லாதனுக்கு உதவினஸம்ஸாரிகள் விச்வஸிக்கைக்குடல். ஆழ்வார்க்குதவினதிறே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு விச்வஸநீயம். "அங்கப்பொழுதே யவன் வியத்தேதான்றிய, என்சிங்கப்பிரான்" என்று ப்ரஹ்லாதாழ்வானுக்கு விச்வஸிக்கைக்கிறே தோன்றிற்று.

எம்பாரருளிச்செய்யும் வார்த்தை;- "ஈச்வரனுக்குமூன்று ஆபத்துவந்துகழிந்தது" என்றருளிச்செய்வர். அதாவது-த்ரளபதிக்கும் ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கும் ப்ரஹ்லாதனுக்கும்உதவிற்றிலனுகில், ஸம்ஸாரிகள் "ஈச்வரத்வமில்லே" என்றுளமுதிளமுத்திடுவர்களிறே. ஆழ்வாரும் "எங்ஙனந்தேறுவருமர்" என்று தம்முடைய இழவிலும் "ஸ்ரீவைஷ்ணவர்கள் அத்யவஸாயம்குலைகிறதோ" என்றிறே அஞ்சுகிறது. "பிழைக்கின்றதருள்" என்றிறே அஞ்சுகிறது. "பிழைக்கின்றதருளென்று பேதுறுவன்" என்று தம்முடைய இழவுக்கு நோகையன்றியிலே, ஈச்வரனருளுக்கிறே இவர்நோவது. நவின்றேத்துவார்களைக்கண்டக்கால். ப்ரீதிக்குப் போக்குவிட்டுச் சொல்லுவார்களைக்கண்டக்கால், கண்படைத்த ப்ரயோஜநம் பெற்றலாம். "ஈட்டங்கண்டிடக்கூடுமேல் அதுகாணும் கண்பயனுவது" என்னக்கடவதிறே. எம்பிரான்றனசின்னங்களிவரிவரேன்று.(க)சிந்தமென்று அவனுடைய அடையாளம்.இவர்களைக்கண்டக்கால் "அவன் ஸாத்விகஸேவ்யன்" என்று தோன்றும். "அவிநீதப்பர்த்யவர்க்கன்" என்றிறே அவனைக்கழித்தது. "கூராராழிவெண்சங்கேந்தி-வாராய்" என்று அவற்றோடு வாராதபோது "போகாய்" என்றிறே இவரிருப்பது. "என்னவிசோரம்மானுக்கு அந்தாமவாண்முடிசங்காழி நூலாரமுள" என்னக்கடவதிறே. ஆசைகள்தீர்வனே. "ஆசைகள்" என்று-காண என்றும், கிட்ட என்றும், கூடவிருக்க என்றுமிறே இவருடைய ஆசைகள். "அவனைக் காணவேணும்" என்கிற ஆசைதீரும் உகந்தருளின நிலங்களை அநுபவித்

(க) ஸிஹ்ந.

தால். " அடியார்கள் குழாங்களை- உடன்கூடுவதென்றுகொலோ "என்கிற இழவுகள்தீரும் இங்கே ஸ்ரீவைஷ்ணவர்கள்திரளைக் கண்டால். " கண்ணாரக்கண்டு கழிவதோர்காதல் " என்கிறபடியே கண்டவாறே ஆசைகள்தீருமிறே. ஈச்வரனைக்கண்டால் ஆசைகள்தீராது, இவர்களைக்கண்டால் ஆசைதீரும். [" கடிவார்தண்ணந் துழாய்க்கண்ணன்" இத்யாதி.] " அடியேன் வாய்மடுத்துப் பருகிக்களித்தேனே " என்று - பூர்ணாநுபவம் பண்ணினபின்பிறே " அடியார்கள் குழாங்களை உடன்கூடுவதென்று கொலோ " என்று ப்ரார்த்திக்கிறது. " தேர்கடவியபெருமான் கழல்காண்பதென்று கொல்கண்களே " என்று ஆசைகள் தீர்ந்தால் பயிலுஞ்சுடரொளியிலேயிறே. " திருநாவாயலையுள் புகலாவதோர்நாள் " என்று அதிரளிறே உத்தேச்யம். " ஒளிமிழிலிலொலியதிரப்பேணிவரு வேங்கடவாவென்னுள்ளம் புகுந்தாய் " என்று அவன் வருமிடத்திலே அவர்களும் மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு கூடவந்து புகுவர்கள். ... ... ஃ.

மூ.—காசின்வாவாய்க்கரம் விற்கிலுங்கரவாது மாற்றிலிசோறிட்டுத்
தேசவார்த்தைபடைக்கும் வண்கையினர்கள்வாழ்திருக்கோட்டியூர்க்
கேசவாபுருடோத்தமா கிளர்சோதியாய் குறளாவென்று
பேசுவாரடியர்க்க ளெந்தம்மைவிற்கவும் பெறுவார்களே. ய.

369

பதவுரை.

காசின்வாய்— ஓரிடங்காசுக்கு
கரம்— ஒருபிடிநெல்
விற்கிலும்— விற்கும்காலத்திலும் [தூர்ப்பிக்ஷாகாலத்திலுமென்றபடி]
கரவாது — தாம் தேடின பொருள்களை மறைத்துவையாமல்
மாறு இலி— ப்ரத்யுபகார நிரபேக்ஷமாய்
சோறு இட்டு — (தம்மைத் தேடிவந்த விருந்தினர்க்குச்) சோற்றை இட்டு (அத்தாலே,)
தேசம் வார்த்தை— புகழை
படைக்கும்— பெற்றவர்களாய் [ர்கள்
வண் கையினர்கள்— உதாரராயிருக்குமவ
வாழ்— வாழுகிற
திருக்கோட்டியூரில்;
கேசவா— கேசவனே!
புருடோத்தமா— புருஷோத்தமனே!
கிளர்சோதியாய்— மிகுந்த தேஜஸ்ஸையுடையவனே!
குறளா— வாமநவேஷம் பூண்டவனே!
என்று— என்றிப்படி
பேசுவார்— பேசுமவர்களுக்கு
அடியார்கள்— சேஷபூதர்களானவர்கள்
எந்தம்மை— எங்களை
விற்கவும் பெறுவார்கள் — வேண்டினபடி விற்றுக்கொள்ளத்தக்க அதிகாரமும் பெறுவர்கள்.

வ்யா. பத்தாம்பாட்டு. காசின்வாய் கரம்விற்கிலும். *ஓரிடங்காசுக்கு ஒரு பிடிநெல் விற்கும்காலத்திலும். ஸுபிக்ஷமான காலத்தில் அதிதிஸத்காரம் பண்ணிப் போருமதுவே ற்றமன்றிறே; தூர்ப்பிக்ஷகாலத்திலும் தனக்குள்ள அம்சத்தை அதிதிகள்விஷயத்திலே ஸமர்ப்பிக்குமதிறே - ஏற்றமாவது. *காசின்வாய்கரம் விற்கிறதுக்கு மேற்பட்டதொரு தூர்ப்பிக்ஷமில்லையிறே; அத்தைப்பற்ற இப்படி யருளிச்செய்கிறார். கரவாது. தந்தாமுக்குள்ள தநாந்யங்களை " பின்புத்தைக்கு நமக்குவேணும்" என்னும் நினைவாலே மறைத்துவையாதே, ' இக்காலத்துக்கு இவ்விஷயங்களிலே விநியோகப்படுகைக்கன்றே இவைகண்டது" என்று வெளியிட்டுக் கொண்டிருந்தது. மாற்றிலிசோறிட்டு. ப்ரத்யுபகார நிரபேக்ஷமாகச் சோற்றையி

ட்டு. அதாவது - அதிதி ஸத்காரந்தான் விஹிதமாகையாலும், பகவத்விபூதிபூகரன்றே மவ
ன்னும் ப்ரதிபத்தியாலும், எதிர்த்தலையில் தைன்யதர்சநத்தால் வந்த க்ர்பையாலும் இடுகை.
ஸர்வாதிக்யம்பண்ணுமவர்களுக்கு விஷயவிபாகம்பண்ணவொண்ணுதிறே. ஆகையால் லுப்
தர்க்கும் தரித்ரர்க்கும் பரியர்க்கு மெல்லாமிடலேணுமிறே. இவர்கள்விஷயத்தில் ஒரு ப்ர
த்யுபகாரத்தைக் கணிசித்தன்றிறேயிடுவது. ஆகையால் " மாற்றிலிசோறிட்டு " என்கி
றது. " நாடொறும் விருந்தோம்புவார் " என்றுற்போலே இத்தையும் விசேஷவிஷய
மாக்கினாலோவென்னில்; " சோறு " என்றும், " இட்டு " என்றும் சொல்லுகையாலே,
இத்தை வைஷ்ணவவிஷயங்களி லாக்கப்போகாது; ஆனபின்பு, இது ஸாமாந்யவிஷயமா
மித்தனை. இதுதானும் சாஸ்த்ரஸித்தமாகையாலே தேசத்துக்கு ஒருவளப்பம் சொல்லுகை
யிறே இப்போது இவர்க்கு அபேக்ஷிதம். தேசவார்த்தைபடைக்கும். யசஸ்கரமான வார்த்
தைகளைப் படைக்கும். அதாவது - இருந்தாரிருந்த விடங்களிலே தங்களுடைய ஔதார்
யம் க்ர்பைமுதலான குணங்களைச் சொல்லிக் கொண்டாடும்படியாகை. இவர்கள், புகழ்
ந்சிச் செய்யாதிருந்தாலும் தன்னைடையே வந்துண்டாமிறே இது. வண்கையினர்கள்.
உதாரமானகையை யுடையவர்கள். அதாவது - " உள்ளதெல்லாம் யோர்த்தமாகவே விநி
யோகிக்கவேணும் " என்னுமௌதார்ய முடையவர்களென்கை. வாழ்திருக்கோட்டியூர்.
இப்படியிருந்துள்ளவர்கள் இத்தேசவாஸமே தங்களுக்கு வாழ்வாகக்கொண்டு வர்த்திக்கிற
திருக்கோட்டியூர்.

கேசவா. அழகிய திருக்குழற்கற்றையையுடையவனே. புருடோத்தமா. அவ்வழகை
ஆச்ரிதர்க்கு எப்போது மநுபவிக்கக் கொடுக்கும் ஔதார்யத்தையுடையவனே. கிளர்சோ
தியாய். " அது தன்பேறு " என்னுமிடம் தோற்றும்படியான மிக்கதேஜஸ்ஸை யுடைய
வனே. கூறளா. உன்னுடைமை பெறுகைக்கு நீ இரப்பாளனுமவனே. என்றுபேசுவாரடி
யார்கள். என்று இப்படி அவன் ஸ்வபாவங்களுக்குத்தோற்றுப் பேசுமவர்களுக்கு அடிய
ராணவர்கள். இப்படிபேசுமவர்களேயன்று நமக்குஉத்தேச்யர்; இவர்கள் இவ்வாசியறிந்து
பேசுவதே! என்று அவர்கள் ஸ்வபாவத்துக்குத்தோற்று அடிமையா யிருக்குமவர்களே
நமக்கு உத்தேச்யரென்கை. இவர்களுக்கு உத்தேச்யராவது எவ்வளவென்னில், எந்தம்மை
விற்கவும் பெறுவார்கள் என்கிறார்; - இவர்களுக்கு சேஷமாகையே புருஷார்த்தமென்றிரு
க்கும் எங்களை, தங்களுக்கு இஷ்ட விநியோகத்துக் குறுப்பாக விற்றுக்கொள்ளவும் உரிய
வர்கள். (க) " தத்தநிஷ்டம் நஸ்வம் க்ரயவிக்ரயார்ஹம் " என்னக்கடவதிறே. ... ம.

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—சீதநீர்ப்புடைசூழ் செழுங்கழனியுடைத் திருக்கோட்டியூர்
ஆதியானடியாரையு மடிமையின்றித் திரிவாரையும்
கோதில்பட்டர்பிரான் குளிர்புதுவைமன் விட்டுசித்தன்சொல்
ஏதமின்றியுரைப்பவ ரிருடீகேசனுக்காளரே. கக.

(க) " தத்பக்திநிக்நமநஸாம் க்ரயவிக்ரயார்ஹம். "

பதவுரை.

சீதம் நீர்— குளிர்ந்த ஜலத்தாலே
புடை— சுற்றும்
சூழ்— சூழப்பட்டிருப்பதாய்
செழு— செழுமைதங்கிய
கழனி உடை— கழனிகளே உடைய
திரு கோட்டியூர்—திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கிற
ஆதியான்— ஆதிபுருஷனை எம்பெருமானுக்கு
அடியாளையும் — அடிமைசெய்து போருமவர்களையும்
அடிமை இன்றி— கைங்கர்ய வர்த்தியில் அக்வயியாமல்
திரிவாரையும்— விஷயப்ரவணராய்த் திரியுமவர்களையும்
கோது இல்— குற்றமற்றவராய்
பட்டர்— ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு
பிரான்— உபகாரகராய்
குளிர் — ஸம்ஸாரதாபத்தைப் போக்கும் குளிர்த்தியையுடைய
புதுவை— ஸ்ரீவில்லிபுத்தூருக்கு
மன்— நிர்வாஹகரான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
சொல்— புகழ்ந்தும் பழித்தும்அருளிச்செய்த சொல்லான இப்பத்தையும்
ஏதம் இன்றி— குற்றமின்றிக்கே
உரைப்பவர்— சொல்லவல்லவர்கள்
இருடீகேசனுக்கு — ஹ்ருஷீகேசனான எம்பெருமானுக்கு
ஆளர்— அடிமைசெய்யப் பெறுவர்.

வயா. சீதநீரித்யாதி. அகாதமாய் (க) வாதாதப ப்ரவேசத்தால் வரும் உஷ்ணம் தட்டாமையாலே எப்போது மொக்கக்குளிர்த்தி மாறாத ஜலத்தாலே சுற்றும் சூழப்பட்டிருப்பதாய். அழகியகழனிகளையுடைத்தாயிருக்கிற திருக்கோட்டியூரிலே. பார்த்த பார்த்த விடமெங்கும் ஜலஸம்ருத்தியும் விளைகழனியுமாய்க் கிடக்குமாய்த்து. ஆதியானடியாரையும் மடிமையின்றித் திரிவாரையும். கரணகளேபரங்களையிழந்து * அசிதவிசேஷித மாய்க்கிடக்கிற தசையிலே * தயமான மநாவாய்க்கொண்டு,(க)" விவி தாதபஹ்ருதி ரீச்வராய நிவேதிதும்- பூர்வமேவ ராயநிவேதிதும் । வஸுவிசேஷை: சரணம் ஹரந்து ஹ்ருஷீகேசாதிஷமாய தா " என்கிறபடியே தன்னை ஆச்ரயிக்கைக் குறுப்பான கரணகளேபரங்களைக் கொடுத்தருளி, ஆச்ரயணீயத்வே ஸாலபஞ்ஞைக் கொண்டு ஸந்நிஹிதனாய் நிற்கிற காரணபூதனான வனுக்கு, அவன் கொடுத்த கரணகளேபரங்களைக் கொண்டு வ்யபிசரியாதே சேஷபூதராய் அடிமைசெய்து வர்த்திக்கிறவர்களையும், " முதல்வனைச் சிந்திபாதவப் பாவகாரிகள் " என்கிறபடியே அவன் பண்ணின உபகாரத்தையறிந்து அநுஸந்தியாதே பாபகர்மாக்களாய் அவன்றிருவடிகளி லடிமையில் அந்வயமற்று கரணத்ரயத்தையும் அந்ய பரமாக்கிக்கொண்டு திரிகிறவர்களையும். கோதி ஸித்யாதி. கிழ்ச்சொன்ன இரண்டு தலையையும் ச்லாகித்தும் நிந்தித்தும்சொன்ன விதுக்கு அநுரூபமான நிஷ்டை யில்லாமையாகிற குற்றமின்றிக்கே யிருப்பாராய், வைதிகோபகாரகராய், ஸாம்ஸாரிக ஸகல தாபஹரமான குளிர்த்தியையுடைய ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரானபெரியாழ்வாரருளிச்செய்த இப்பத்துப்பாட்டையும். ஏதமின்றியுரைப்பவர். நிர்த்தோஷமாகச்சொல்லுமவர்கள். அதாவது-இவர் திருவுள்ளக்கருத்தையறிந்து அதில் பழுதறச் சொல்லுகை. இருடீகேசனுக்காளேர. இந்த்ரியங்களை அந்யபரமாகாதபடி நியமித்து அடிமை கொள்ள வல்லவனுக்கு அடிமை செய்யுமாளாகப் பெறுவர். ... ... கக.

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

———(o)———

அடிவரவு.—நாவ குற்றம் வண்ண வுரகம் ஆமை பூதம் குருந்தம்
நளிர்ந்த கோம்பின் காசின் சீதநீர் ஆசை.

ஆதிருமொழி கூகூ-க்கு, பாட்டு-கூடுஅ.

(க) வாகாதவ. (க) " விசித்ராதேதஹஸம்பத்தி ரீச்வராய நிவேதிதும்- பூர்வமேவ ர்தாப்ரஹ்மந் ஹஸ்தடாதாதிஸம்யுதா. "

நாற்காம்பத்து- ஐந்தாந்திருமொழி- ஆசைவாய், ப்ரவேசம்.

அ. கீழிற்றிருமொழியிலே- " ஆதியானடியாரையும் அடிமையின்றித் திரிவாரையும் " என்று ஸம்ஸாரிகள் பொல்லாங்கும் ஸ்ரீவைஷ்ணவர்களேற்றமுமிதே சொல்லிற்று; ஸம்ஸாரிகளுக்கும் பகவத்ஸம்பந்த மொத்திருக்க, அவர்களைக்கழிக்கைக்கடி ஸம்பந்தஜ்ஞாநமில்லாமையிறே. " வணக்கொடுமொள்வது வலமே " என்று சரமஸமயத்திலே பகவத்ஸமாச்ரயணம் பண்ணுகை ச்ரேஷ்டமாகையாலே ஸம்ஸாரிகளைப்பார்த்து ஹிதோபதேசம் பண்ணியருளுகிறார். இத்திருமொழியில். ... ... *

அ. முதற்பாட்டு. திருநாமங்களைச் சொல்லுமவர்கள் பெறும்பேறு என்னால் சொல்லப்போகாதென்கிறார்.

மூ.—ஆசைவாய்ச்சென்ற சிந்தையராகி யன்னெயத்தனென் புத்திரர்பூமி
வாசவார்குழலா ளென்றுமயங்கி மாளுமெல்லைக் கண்வாய்திறவாதே
கேசவாபுருடோத்தமாவென்றுங் கேழலாகியகேடிலீயென்றும்
பேசுவாரவ ரெய்தும்பெருமை பேசுவான்புகில் நம்பரமன்றே. க

371

பதவுரை.

என் அன்னை— ' என்னுடையதாய்,
என் அத்தன்— என்தமப்பன்,
என் புத்திரர்— என்பிள்ளைகள்;
என் பூமி— என்னுடையபூமி;
வாசம் வார்— பரிமளம்வீசாநின்றுள்ள
என் குழலாள்— மயிர்முடியையுடைய என் மனைவி '
என்று— என்று வாய்வெருவும்படி
ஆசைவாய்—ஆசையின்வழியே
சென்ற— போன
சிந்தையர் ஆகி— மநஸ்ஸையுடையராய்
மயங்கி— மோஹித்து [கில்
மாளும் எல்லைக்கண்— ப்ராணன் விடுமள

வாய் திறவாதே— அவர்கள்பேரைச் சொல்லியழையாமல்
கேசவா என்றும்— ' கேசவனே! ' என்றும்
புருடோத்தமா என்றும்— ' புருஷோத்தமனே! ' என்றும்
கேழல் ஆகிய— ' வராஹரூபம் கொண்டு தன்னை அழியமாறியும்
கேடு இலீ என்றும் — தன்ஸ்வரூபமொன்றும் கெடாதவனே! ' என்றும்
பேசுவார் அவர்— சொல்லுமவர்கள்
எய்தும் பெருமை— பெறும் பேற்றை
பேசுவான் புகில்— பேசப்புக்கால்
நம் பரம் அன்று— நம்மால் பேசித்தலைக்கட்டப் போகாது.

வ்யா. ஆசையித்யாதி. ஸ்நேஹமிருந்தவிடத்திலே கைகழிந்த மநஸ்ஸையுடையராய். *அன்னையென்று தொடங்கி; *வாசவார்குழலாளளவும் ஆசையிருக்குமிடம். மயங்கி. இவர்கள் பேரும் சொல்லமாட்டாதே மயங்கி. மாளுமெல்லைக்கண். " வைத்தநாள் வரை எல்லை குறுகி " என்கிறபடியே சரமகாலத்திலே. வாய்திறவாதே. அவ்வளவிலே கீழ்ச்சொன்னவர்கள் பேரைச் சொல்லி அழையாதே.

அவர்கள்பேர் சொல்ல வொண்ணுதாகில் பின்னையார்பேரைச் சொல்லுவதென்னில்; கேசவா. உங்கள் மரணவேதனை போகவேணுமாகில் (க) " கெஶவஸ்தேஶ நாஶநஃ "

(க) " கேசவக்லேசநாசநஃ. "

என்னப்பாருங்கோள். "கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன" என்று சொல்லக்கட வதிறே. புருடோத்தமா. ஔதார்யம். அதாவது- அநிஷ்ட நிவர்த்தியும் இஷ்டப்ராப்தி யும் பண்ணுகை. கேழலாகியகேடிலீயென்றும். இவர்கள் கேடுபோலுல் தன்கேடு போச்சு தாக நினைத்திருக்கை. பேசுவாரவரெய்தும் பெருமை. அவர்களேற்றத்துக்குப் பாசுரமிடப் போகாது; "அவர்" என்னுமித்தனையிறே. அவர்கள் பெறும்பேற்றை நம்மால் பேசப் போகாது. பேசுவான்புகில். பேசப்புக்கோமாகில். நம்பரமன்றே. நம்மால் பேசித்தலைக் கட்டப்போகாது. கொடுக்கிறவன்றுனதியுமித்தனை. அதாவது- இதாஸங்கம் குலையப்பெ றுவதாம்; சரமகாலத்தில் அவர்களே அழையாதொழியப் பெறுவதாம்; நம்முடைய போக தனைச் சொல்லப்பெறுவதாம்; "இதென்னவேற்றம்! இதென்னவேற்றம்!" என்று. இதின் ஏற்றமறிந்து ஈடுபடுவானவனிறே. ... ... க.

அ. இரண்டாம்பாட்டு. திருநாமஞ்சொன்னவர்கள் மோக்ஷத்தைப் பெறுவர்களென்கிறார்.

மூ.—சீயினற்சிறந் தேறியபுண்மேற் செற்றலேறிக் குழம்பிருந்தெங்கும்
ஈயினலரிப்புண்டு மயங்கி எல்லிவாய்ச்சென்று சேர்வதன்முன்னம்
வாயினனமோநாரணவென்று மத்தகத்திடைக் கைகளாக்கூப்பிப்
போயினற்பின்னை யித்திசைக்கென்றும் பிணைக்கொடேக்கிலும் போகவொட்டாரே.

பதவுரை.

சீயினல்— சீயாலே
சிறந்து ஏறிய— மிகவும் நிறைந்த
புண் மேல்— புண்ணின் மேலே
செற்றல் ஏறி— ஈ இருந்து முட்டையிட்டு
குழம்பிருந்து — புழுத்துநீராய்ப் பாயும
எங்கும்— ஓரிடம் தப்பாமல் [ளவில்
ஈயினல்— ஈயாலே
அரிப்புண்டு— அரிக்கப்பட்டு [ச்சித்து
மயங்கி— அது பொறுக்கமாட்டாமல் மூர்
எல்லிவாய்— சரமகாலத்தை
சென்று சேர்வ தன் முன்னம் } சென்று கிட்டுவதற்கு முன்னே
வாயினல்— வாயாலே
நமோநாரண என்று— 'நமோநாராயணய' என்று சொல்லிக்கொண்டு
மத்தகத்திடை— உச்சியிலே
கைகளை கூப்பி— கூப்பினகையராய்
போயினல்— போனல்
பின்னை— பிறகு
பிணைக்கொடுக்கிலும்— நித்யமுக்தர்களை உத்தரவாதிகளாக்கினலும்
இத்திசைக்கு— இவ்வுலகத்திற்கு
என்றும்— எப்போதும்
போக ஒட்டார்— பரமபதத்திலுள்ளார், இவர்களைச் செல்லவொட்டார்கள்.

வ்யா. சீயினற்சிறந்தேறியபுண்மேல். சீயானது விஞ்சிப்புடைபட்டபுண்ணின்மேலே. செற்றலேறி. ஈயிருந்து முட்டையிட்டு. குழம்பிருந்து. அவைபுழுத்து நீராய்ப்பாயுமளவிலே. ஈயினலரிப்புண்டு மயங்கி. ஈயினலே அரிப்புண்டு, அதுபொறுக்கமாட்டாமல் மூர்ச்சித்து. எல்லிவாய்ச்சென்று சேர்வதன்முன்னம். சரமகாலத்தைச்சென்று கிட்டுவதுக்குமுன்னே.

வாயினல் நமோநாரணவென்று. வாய்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி. "எனக்கு நானுரியேனல்லேன், உனக்குரியேன்" என்று சொல்லுகையிறே வாய்படைத்ததுக்குப்ரயோ

ஜநம். மத்தகத்திடைக் கைகளைக்கூப்பி. தலைபடைத்த ப்ரயோஜநம் பெற்று. போயினுல். இப்படி செய்துபோனுல். போயினுலென்றது- வழிப்போக்குத்தானே ப்ரயோஜநமென்கை. இவன் ஒருகால்தொழுதால், இதுக்கு பலம்- வழிப்போக்கில், " மற்றெல்லாம் கைதொழப் போய் " என்றும், " தொழுதணருலகர்கள் " என்றும் சொல்லுகிறபடியே இவன் பார்த்த பார்த்தவிடமெல்லாம் அஞ்ஜலிக்காடாயிறே யிருப்பது. அங்கு புக்காலும் (க) " வைஜா ஜலிவுடாஹ்யவஹாஃ " என்றதிறே பலம். இவன் ஒருக்கால் ஆத்மஸமர்ப்பணம் பண்ண, " ஆண்மின்கள் வானகமாழியான்றமர் " என்று த்ரிபாத்விபூதியாக ஸமர்ப்பிப்பர்கள். ஒருக்கால் " நமஃ " என்ன, காலதத்வ முள்ளதனையும் *நமோநாராயணயவென்று சூழ்ந்திருந்தேத்துகையிறே பலம். பின்னையித்திசைக்கென்றும் பிணக்கோடுக்கிலும் போகவொட்டாரே. நித்யமுக்தரைப் பிணையிடிலும் போகவொட்டார்கள். அதுக்கடி- *விண்ணுளார் பெருமாற் கடிமை செய்வாரையும் செறும்தேசமாகையாலே. அவன்றனும் * ஏற்றிவைத்தேணிலாங் குமவனிறே. இத்தால்- கர்மமடியாக மீட்சியில்லையென்றபடி. ... ... உ.

அ. மூன்றும்பாட்டு. ஆத்மஸமர்ப்பணம் பண்ணினார்க்கு யமவச்யதை யில்லை யென்கிறார்.

மூ.—சோர்வினுற்பொருள் வைத்ததுண்டாகிற் சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து
ஆர்வினவிலும் வாய்திறவாதே யந்தகால மடைவதன்முன்னம்
313 மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்னுந் தெய்வத்தைநாட்டி
ஆர்வமென்பதோர் பூவிட வல்லார்க் கரவதண்டத்தி லுய்யலுமாமே. ரூ

பதவுரை.

சோர்வினுல்— புத்திமறதியாலே
பொருள்— பொருள்களை
வைத்தது உண்டாகில்— புதைத்து வைத்ததுண்டானுல்
சொல்லு சொல் என்று— 'அதிருக்குமிடத்தைச் சொல் சொல்' என்று
சுற்றும்— நாற்புறத்திலும்
இருந்து— சூழவிருந்து
வினவிலும்— சுற்றத்தார் கேட்டாலும்
ஆர் (வினவிலும்) — அருமைப்பட்டுத் தேடி சுற்றத்தார் முதலானோர்க்கும் கொடாமல் மறைத்து வைத்த பொருள்கொடுத்து வேட்ட இளையாள் கேட்டாலும்,
வாய் திறவாதே— வாயைத் திறவாதபடி
அந்த காலம்— முடிவுகாலம்
அடைவதன் முன்னம்—வருவதற்குமுன்னே
மார்வம் என்பது— 'மஸ்ஸு' என்று சொல்லப்படுமதாய்
ஓர்— அத்விதீயமான
கோ இல்— பகவத்ஸந்நிதியை
அமைத்து— உண்டாக்கி
மாதவன் என்னும்— 'ஸ்ரீயஃபதி' என்று ப்ரஸித்தமான
தெய்வத்தை— அத்விதீயவஸ்துவை
நாட்டி— நிலை நிறுத்தி
ஆர்வம் என்பது— அன்பாகிற
ஓர் பூ— ஒரு புஷ்பத்தை
இட வல்லார்க்கு— ஸமர்ப்பிக்க வல்லவர்களுக்கு
அரவர்— யமபடர்களுடைய
தண்டத்தில்— தண்டனையினின்றும்
உய்யலும் ஆம்— பிழைக்கவுமாம்.

(க) " பத்தாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டாஃ. "

வ்யா. சோர்வினுல் பொருள்வைத்த துண்டாகில். முன்பு இவன்கையில் கண்டவை யடைய " அட்டைகள்போல் சுவைப்பர் " என்கிறபடியே இவன்கையிலுள்ளவை நிச்சேஷ மாக வாங்கிக்கொள்ளுவர்கள். இவர்களைக்காணுமல் வைத்ததுண்டாகில். சொல்லு சொல் லென்று. ஒருகாற் சொன்னுற்போலே ஒன்பதின்கால் சொல்லி. சுற்றுமிருந்து " இவன் ஒருத்தரை ஒருத்தரறியாமல் கொடுக்கிற்செய்வதென் " என்று விடாதே சுற்றுமிருப்பர்கள். ஆத்ம பந்துக்களாகிவிறே — " திருமாலைப்பாடக்கேட்டு வளர்த்ததனுல் புயன்பெற்றேன் " என்பது. [" தஞ்சும்போதணைமின் " இத்யாதி.] ஆர்வினவிலும் வாய்திறவாதே. பகவத் பாகவத விஷயங்களையும் ஆசார்யனையும் ப்ரக்ருதிபந்துக்களையும் மறைத்துவைத்த அர்த்தங் கொடுத்து லேட்ட இளையாள் வினவிலும் வாய்திறவாதே. இவர்களுக்கும் இவளுக்கும் " இவனையிழக்கப் புகுகிறேமென்கிற பயமன்று, இவன்வைத்த அர்த்தம் ஒருவருமறியா மல் மண்தின்றுபோகிற் செய்வதென் " என்கிறபயம். இவ்வர்த்தத்தை நச்சிவரும்போதும் அக்காலத்திலே " அவன் முகத்திலே விழிக்கவருகிறேறும் " என்றிறேவருவது. ¶ அந்தகால மடைவதன்முன்னம். சரமகாலம் வருவதுக்குமுன்னே.

மார்வமென்பதோர் கோயிலமைத்து. ஹ்ருதயமென்று ப்ரஸித்தமாய் அத்விதீயமான ஸ்தானத்தையுண்டாக்கி. மாதவனென்னும் தெய்வத்தைகாட்டி. ஸ்ரீயஃபதியென்று ப்ரஸித் தமாய் அத்விதீயமான வஸ்துவை ப்ரதிஷ்டிப்பித்து. " திருமாலிருஞ்சோலைமலையென்றே னென்னத் திருமால்வந்தென் னெஞ்சுநிறையப்புகுந்தான் " என்று - இவர் அஹ்ருதயமாகச் சொன்னதை ஸஹ்ருதயமாகக் கொண்டுவந்து புகுந்தான். இவர் இப்போதே " அஹ்ரு தயமாகச் சொன்னேன் " என்னவும்வல்லர். அதுக்குமுன்னே இவர்நெஞ்சில் இடமறப் புகுந்துகொள்ளுங் கிடீரென்று பிராட்டியுங் கூடக்கொண்டுபுகுந்தான். இவர்நெஞ்சு நிரு ந்துவதுக்குமுன்பிறே - அல்லாதவிடங்களில்நிற்பது; [" நின்றதென்தையூரகத்து " இத் யாதி.] உகந்தருளின நிலங்களில் கண்டதுபவிக்குமாபோலே இவர் திருவுள்ளத்திலிருப்ப தும் கண்டதுபவிக்கலாம்படி யிருக்குமிவர்க்கு. " சலசயனத்துள்ளு மெனதுள்ளத்துள்ளு முறைவாரை " என்னக்கடவதிறே. " வந்தாயென்மனம்புகுந்தாய் " என்றிறேபுகுந்தது. " வந்துவந்தென்மனத்திருந்து " என்கிறபடியே இவர் இசையாமல் தட்டினநாளுக்கு ஓர் அவதியில்லையிறே. " அடியார்மனத்தாயோ " " வெள்ளத்தான் வேங்கடத்தானேனும் களிகன்றி உள்ளத்திலுள்ளேயுள்ளன் " என்று - உகந்தருளினநிலங்களோடொக்குமிறே — இவர்திருவுள்ளமும். ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கு. " சோர்வினுல்பொருள் வைத் ததுண்டாகில் " என்று - தேஹபந்துக்களையும் ஆத்மபந்துக்களையும் மறைத்து வைத்தபோ ருளையிட்டுக் கோயில்சமைத்துத் திருவந்தவத்தையு முண்டாக்கித் திருப்பள்ளித்தாமத்தை யும் தேடுவென்று இவனை அரியதேவைகளையிடானிறே. * நாடாதமலர் நாடிநாடோறும் நாரணன்றன் வாடாதுமலரடிக் கீழ்வைக்கவிறே - இவனை †அடியிலே ஸ்ருஷ்டித்தது. இப்படி பூவோடே பூவைச் சேர்க்கவல்லார்க்கு. அரவதண்டத்திலித்யாதி. யமபடராஜ வரும் க்லேசம். அதாவது - " வெஞ்சொலாளர்கள் நமன்றமர்கடியர் கொடியசெய்வனவுள " என்னக்கடவதிறே * நெடுஞ்சொலால் மற்றதக்குபலம் கடுஞ்சொல்கேட்கையிறே. உய்ய லுமாம். ப்ராப்யத்திலும் இதுபோக்கியிறே ப்ரதாநமென்கிறார். ... ... கூ.

¶ அந்தகாலம் - மரணகாலம். † "அடியிலே" என்றது வாஸ்தவம்; 'திருவடிகளிலே' என்றும் 'ஆகியிலே' என்றும்.

அ. காஞ்சிபாட்டு. ப்ரணவார்த்தம் தெரிந்தில்பட்டவர்கள *அடியார்கள் குழாங் களையுடன் கூடுவதென்கிறார்.

மூ.—மேலெழுந்ததோர் வாயுக்கிளர்ந்து மேன்மிடற்றினை யுள்ளெழவாங்கிக்
காலுங்கையும் விதிர்விதிர்த்தேறிக் கண்ணுறக்க மதாவதன்முன்னம்
314 மூலமாகிய வொற்றை யெழுத்தை மூன்றுமாத்திரை யுள்ளெழுவாங்கி
வேலைவண்ணனை மேவுதிராகில் விண்ணகத்தினின் மேவலுமாமே. ச.

பதவுரை.

மேல் எழுந்த / தது ஓர் வாயு } மூர்த்தன்யாஸமான ஓர் வாயு
கிளர்ந்து— மேலெழுந்து
மேல் மிடறு ‡ — தொண்டை.
உள் எழுவாங்கி— கீழே இடியவிழுந்து
காலும் கையும்— கால்களும் கைகளும்
விதிர் விதிர்த்தேறி- பதைபதைத்து
கண் உறக்கம் அது— தீர்க்க நித்திரை
ஆவதன் முன்னம்-உண்டாவதற்குமுன்னே
மூலம் ஆகிய ஒற் / றை எழுத்தை } ஸகல வேதங்களுக்கும் காரணமான திருமந்திரத்தில் [ப்ரணவத்தை]

முன்று மாத்திரை / உள் எழுவாங்கி } அளவெடுத்து உச்சரித்து
வேலை— கடல்போன்ற [மாலை
வண்ணனை — வடிவையுடைய எம்பெருமான்
மேவுதிர் ஆகில் – கிட்டவல்லிதாகில்
விண்ணகத்தினில்— பரமபதத்தை
மேவலும் ஆம்— கிட்டலாம்.

‡ 'இன்' 'ஐ' இவை சாரியைகள்.

வ்யா. மேலெழுந்ததோர் வாயுக்கிளர்ந்து. மேல்மூச்செறிந்து. மேல்மிடற்றினையுள் ளெழவாங்கி. தொண்டை கீழேயிடியவிழுந்து. காலும் கையும் விதிர்விதிர்த்தேறி. ப்ராணவாயு மேல்நோக்கினவாறே காலும்கையும்பதைக்கத்தொடங்கிற்று.கண்ணுறக்கமதாவதன்முன்னம். தீர்க்கநித்ரைகொள்ளுவதற்குமுன்னே. மூலமாகிய ஒற்றையெழுத்தை. ஸகலவேதங்களுக் கும் காரணமான திருமந்த்ரத்தில் ப்ரதமபதத்தை உச்சாரணக்ரமம் தப்பாமல் உச்சரித்து. வேலைவண்ணனை மேவுதிராகில். ஸ்ரீவைகுண்டநாதனைக் கிட்டவல்லிதானாகில். விண்ண கத்தினில் மேவலுமாமே. *அடியார்கள் குழாங்களுடன்கூடலாமென்கிறார். ... ச.

அ. ஐந்தாம்பாட்டு. விரோதிநிரஸநசிலனை யேத்துவார்க்குமுன்பு க்லேசப்பட்டுப் 8 இனிப்போக வேண்டாவென்கிறார்.

மூ.—மடிவழிவந்து நீர்ப்புலன்சோர வாயிலட்டிய கஞ்சியுமீண்டே
கடைவழிவாரக் கண்டமடைப்பக் கண்ணுறக்கமதாவதன்முன்னம்
315 துடைவழியும்மை நாய்கள்கவா சூலத்தாலும்மைப் பாய்வதுஞ்செய்யார்
இடைவழியினீர் கூறையுமிழ்வீ ரிருடீகேசனென் றேத்தவல்லீரே. டு.

பதவுரை.

யமபடரைக்கண்ட பயத்தாலே, / மடி— மடியின் கண் உள்ள } நீர் புலன்வழி வந்து— விஷத்தின் வழியாக / சோர— சிறுநீர் பெருகவும் [வந்து

வாயில்— வாயிலே
அடியுண்ட— பெய்த
கஞ்சியும்— பொரிக்கஞ்சியும்
கண்டம் அடைப்ப— கழுத்தையடைக்க
மீண்டு— மீறுபடியும்
கடைவழி— கடைவழியாலே
வார— வழியாநிற்கவும்
கண் உறக்கமது ஆவதன் முன்னம்;
இருடீகேசன் என்று— 'ஹ்ருஷீகேசன்' என்று
ஏத்த வல்லீர் (ஏல்)— துதிக்கவல்லிகோளாகில்
(யமலோகத்திலே,)

உம்மை— உங்களுடைய
தடைவழி— தடையில்
நாய்கள்— செந்நாய்களானவை
கவரா— கவ்வுதல் செய்யா;
உம்மை— உங்களை
சூலத்தால்— சூலத்தாலே
பாய்வதும்செய்யார்— யமபடர்கள் குத்தவும் மாட்டார்கள்;
நீர்— நீங்கள்
இடை வழியில்— நடுவழியிலே
கூறையும்— வஸ்த்ரத்தையும்
இழவீர்— இழக்கவும் மாட்டீர்கள்

வ்யா. மடிவழிவந்து நீர்ப்புலன்சோர. யமபடரைக்கண்ட பயத்தாலே ஓர்இந்த்ரிய விசேஷத்தாலே ஜலம்ப்ரவஹிக்க. வாயிலட்டியகஞ்சியும் மீண்டே கடைவழிவாரக் கண்டமடைப்ப. பொரிக்கஞ்சியைக் கொடித்தால், கண்டமடைக்கையாலே உள்ளுப்புகாதே மீண்டும் கடைவழியாலே வழியாநிற்கும். கண்ணுறக்கமதாவதன்முன்னம். தீர்க்கநித்ரைகொள்ளுவதற்குமுன்னே.

தடைவழியும்மை நாய்கள்கவரா. "நாயினத்தொடும் தின்னத்திட்டு ஓடியுமுழன்றும்" என்றதுக்கு பலம். சூலத்தாலும்மைப்பாய்வதுஞ்செய்யார். "உயிர்களேகொன்றேன்" என்று ஆயுதத்தாலே நலிந்ததுக்கு பலம். இடைவழியில் நீர்கூறையுமிழவீர். வழியில்நின்று சீரையுரிந்ததுக்கு பலம். என்று என்று சொல்லியிறே அவர்கள் வழியில்நலிவது. இது தப்பவேண்டியிருந்திகோள்ளாகில் இருடீகேசனென்றேத்தவல்லீரே. இந்த்ரியங்களே நியமிக்குமவனென்று ப்ரதியோடேகூட ஸ்தோத்ரம்பண்ணினால் இலைவாரா. யமலச்யத்தைக்கடி இந்த்ரியலச்யதையிறே. இதுக்குஸாதநமாகவிறே பாஹிம்ஸாதிகள் பண்ணுவது. அத்தைக்குலைக்குமவனென்கிறார். ... ... ரு.

அ. ஆறும்பாட்டு. அங்கமித்யாதி. இப்பாட்டில், ஒருக்கால் உபாயவரணம் பண்ணினார்க்கு *ஸதாபச்யந்தி பண்ணலாமென்கிறார்.

மூ.—அங்கம்விட்டவை யைந்துமகற்றி யாவிமுக்கினிற் சோதித்தபின்னைச்
சங்கம்விட்டவர் கையுமறித்துப் பையவேதலை சாய்ப்பதன்முன்னம்
வங்கம்விட்டுலவுங் கடற்பள்ளிமாயனை மதுசூதனைமார்பிற்றங்கவிட்டுவைத்து
ஆவதோர்கருமஞ் சாதிப்பார்க்கென்றுஞ் சாதிக்கலாமே. சு.

பதவுரை.

அவை ஐந்தும்— பஞ்சப்ராணனும்
அங்கம் விட்டு‡ அகற்றி-சரீரத்தைவிட்டுநீங்கி
அவர்— அருகிருந்தவர்கள்
முக்கினில்— மூக்கில் கையைவைத்து

‡ 'அகன்று' என்னுமது-'அகற்றி' என்று கிடக்கிறது.

ஆவி சோதித்த பின்னை— ஆவி இல்லை என் றறிந்த பின்பு
சங்கம் விட்டு— 'இனி இவன் பிழைக்கும்' என்கிற ஆசையைவிட்டு
(அங்கிருந்தவர்களை, ' ஆனபடியென்? ' என்று வந்தவர்கள் கேட்க;)
கையை மறித்து— கையை விரித்து
பையை— மெள்ள
தலைசாய்ப்பதன் முன்னம்— தலையைத் தொங்கவிடுவதற்கு முன்பு,
வங்கம்— மரக்கலங்களானவை
விட்டு உலவும்— இடைவிடாமல் உலாவா நின்றுள்ள
கடல்— கடலில்
பள்ளி— கண்வளர்ந்தருளுகிற
மாயனை— ஆச்சர்ய சேஷ்டிதயுக்தனும்
மது சூதனை— மதுவை நிரஸித்தவனுமான எம்பெருமானை
மார்வில்— நெஞ்சிலே [செய்து
தங்கவிட்டு வைத்து— தங்கும்படி நிற்கச்
ஆவது— ப்ராப்தமுமாய்
ஓர்— ஸுகரமுமான
கருமம்— உபாயவரணம் [கட்டு
சாதிப்பார்க்கு— ஒருக்கால் பண்ணுமவர்
என்றும்— காலமுள்ளதனையும்
சாதிக்கலாம்— அவனை ஸேவித்திருக்கலாம்.

வ்யா. அங்கம்விட்டவையைந்துமகற்றி. பஞ்சவர்த்திப்ராணன் சரீரத்தை விட்ட கன்று. ஆவி'மூக்கினில்சோதித்தபின்னை. இவனுக்கு பராணனில்லையென்று அறிந்தபின்பு. சங்கம்விட்டு. இனி இவன்பிழைக்குமென்கிற ஆசையைவிட்டு. "சங்கம்விட்டு" என்று - *சொல்லுசொல்லென்று சுற்றுமிருக்கிற திரள்குலந்தென்னுதல். அன்றிக்கே, இவனீடேக்கல் சிலகிடைக்குமென்கிற ஆசையை விட்டென்னுதல். கையைமறித்து. அங்கிருந்தவர்களை, "அவன்செய்ததென்" என்று வந்தவர்கள்கேட்க; கையைமறித்து. பையவேதலை சாய்ப்பதன் முன்னம். மெள்ள இவனருகுநின்று மெழுந்திருந்து விடப்போய், இவனை இழந்த இழவுதோற்ற கவிழ்தலைபிட்டிருப்பர்களாய்த்து. வங்கம்விட்லேவும் கடல்பள்ளிமாயனை. மரக்கலமூலாவா நின்றுள்ள கடலில்கண்வளர்ந் தருளுகிறவாச்சர்ய பூதனை. அன்றிக்கே, "மாயனை" என்றது - ஜ்ஞாநமாய், தன்னிச்சையாலே கண்வளர்ந்தருளுகிற வனென்றபடி. "குளைகடல்மேல் அரவணைமேல் குலவரைபோல் பள்ளிகொண்டு" என்னக் கடவதிறே. மதுசூதனை. மதுவைநிரஸித்தாற்போலே ஆச்ரிதவிரோதியைப் போக்குமவனை. "வெள்ளை நீர்வெள்ளத்தணைந்த வரவணைமேல், துள்ளுநீர்மெள்ளத் துயின்றபெருமானே, வள்ளலே உன்றமர்க்கென்றும் நமன்றமர்கள்ளர்போல்" என்னக்கடவதிறே. மார்வில்தங்கவிட்வைத்து. தங்கவிடுகையாவது - ஓரிடத்திலேயிருத்துகை. ஆவதோர்கருமம். ஸுகரமுமாய் ப்ராப்தமுமான ஆத்மஸமர்ப்பணம். "நமவென்னலாங்கடமை" என்னக்கடவதிறே. சாதிப்பார்க்கென்றும் சாதிக்கலாமே. உபாயம் ஸக்ர்த்கர்த்தவ்யம்; உபேயம் ஸதா ப்ராப்தவ்யம். "ஆவதருமம்" என்று - ஸக்ர்த்; "சேவித்திருக்கும்" என்று - ஸதா. ... சு.

அ. ஏழாம்பாட்டு. தென்னவனித்யாதி. இப்பாட்டில், விரோதிநிரஸநசீலனை அநுஸந்திப்பா நித்யஸூரிகள் கார்யத்துக்கும் ஸ்ரீவைகுண்ட நாதனேடே மன்றுடுவர் களென்கிறார்.

மூ.—தென்னவன்றமர் செப்பமிலாதார் சேவதக்குவார் போலப்புகுந்து
பின்னும்வன்கயிற்றூற் பிணித்தெற்றிப்பின் முன்னை விழுப்பதன்முன்னம்
377 —இன்னவனினையா னென்றுசொல்லி யெண்ணியுள்ளத் திருளறநோக்கி
மன்னவன் மதுசூதனனென்பார் வானகத்துமன்றுடனாமே. எ.

பதவுரை.

தென்னவன்— தென்திசைக்குக் கடவுளான யமனுக்கு

தமர்— சேஷபூதராய்

செப்பம் இலாதார்— முக்கரணங்களிலும் ஒரு செவ்வையில்லாதவர்கள்

சே— எருதுகளை

அதக்குவார் போல— அதக்கும் நீசஜாதியரைப் போலே

புகுந்து— புகுந்து

பின்னும்— பின்னையும்

வன் கயிற்றால்— வலிய பாசங்களாலே

பிணித்து— கட்டி

எற்றி— வருந்தப்பண்ணி

பின் முன் ஆக— முகம் கீழ்ப்பட

இழுப்பதன் முன்னம்— யமலோகத்தளவு மிழுக்கிறதற்கு முன்னே

மன்னவன்— தென்னவனுக்கு மன்னவனானவனை

இன்னவன் இனையான் என்று சொல்லி எண்ணி } இன்னான் என்னு மதுக்கு ஏகாந்த குணங்களை அநுஸந்தித்து

உள்ளத்து இருள் அறமோக்கி } நெஞ்சில் அஜ்ஞாநாந்தகாரம் போகப் பார்த்து

மதுசூதனன்— 'மதுவை நிரஸித்தவன்'

என்பார்— என்று சொல்லுமவர்கள்

தாமே— (அத்விதீயராய்) தாங்களே

வானகத்து— பரமபதத்தில்

மன்னுடிகள்— நித்யஸூரிகள் கார்யத்துக்கும் ஸ்ரீவைகுண்ட நாதனுக்கே மன்றுடுவர்கள்.

வ்யா. தென்னவன்தமர். தெற்குத்திக்குக்குக் கடவுளான யமனுடைய சேஷபூதர். செப்பமிலாதார். செவ்வையில்லாதார். கர்ணத்ரயமும் அடைவு கெட்டிருக்குமவர்கள். சேவதக்குவார் போலப்புகுந்து. எருதுகள் தங்கள்வசப் படுகைக்கு இவற்றின் செருக்கைக் குலைக்கும் நீசஜாதிகளைப்போலே புகுந்து துஷ்கரபலம் பண்ணுகிறபடி. பின்னும் வன் கயிற்றால் பிணித்தெற்றி. சேவதக்குவார் அதக்கும் ப்ரகாரம். துஷ்கரபலத்துக்குத் தங்கள் தாரதம்யமாத்ரமே யமைந்திருக்க, பின்னையும் யமபடர், பாசங்களாலே, ¶சூரியிலே வரிவாரிப்போலே வரிந்து. எற்றி. "நமன்தமர் செய்யும்வேதனை" என்கிறபடியே எற்றி. பின்முன்னாக இழுப்பதன்முன்னம். மூக்கும் முகமும் உதடும் பல்லும் தகரும்படி முகம் கீழ்படே யமபுரத்தளவும் இழுப்பதற்கு முன்னே. இன்னவனினையானென்று சொல்லியெண்ணி அவன் இன்னனென்னு மதுக்கு ஏகாந்தமானகுணங்களையு மநுஸந்தித்து, நெஞ்சில் அஜ்ஞாநாந்தகாரம் போகப்பார்த்து. மன்னவன். தென்னவனுக்கும் மன்னவனானவன். மதுசூதனனென்பார். ஆச்ரிதவிரோதிகளைப் போக்குமவன் என்று சொல்லுமவர்கள். வானகத்துமன்னுடிகள்தாமே. பரமபதத்தில் நித்யஸூரிகள் கார்யத்துக்கும் ஸ்ரீவைகுண்ட நாதனுக்கே மன்றுடுவாரிவர்களிறே. தாமே. வேறு ஸஹகாரிகளில்லை.

அ. எட்டாம்பாட்டு. கூடியித்யாதி. இப்பாட்டால் மூன்றெழுத்தை உச்சரிப்பார் ஸ்ரீகைங்கர்யத்துக்கு அவனுக்கு ஆதாரணீயரென்கிறார்.

மூ.—கூடிக்கூடி யுற்றார்களிருந்து குற்றநிற்க நற்றங்கள் பறைந்து
பாடிப்பாடியோர் பாடையிலிட்டு நரிப்படைக்கொரு பாகுடம்போலே
கோடிமூடியெடுப்பதன்முன்னங் கௌத்துவமுடைக்கோவிந்தனே
கூடியாடிய வுள்ளத்தராஞற் குறிப்பிடங்கடந் துய்யலுமாமே. அ.

¶ சூரி—சூரியகத்தி.

பதவுரை.

இவனுக்கு சரமகாலம்வந்தவாறே;
உற்றார்கள்— பந்துக்களெல்லாரும்
கூடிக்கூடி இருந்து— நிரள் நிரளாக இருந்து
குற்றம் நிற்க—இவன்பண்ணின பல ப்ராதி கூல்யம் கிடக்க
நற்றங்கள்— அநுகூலம்மாயுள்ளன சிலவற்றை
பன்றந்து— சொல்லி
பாடிப்பாடி— ப்ரலாபித்து
ஓர்— ஒரு
பாடையில்— ஆசந்தியில்
இட்டு— இவனை இட்டு
நரி படைக்கு— நரிக்கூட்டத்துக்கு
ஒரு பாகுடம் போலே— ஒரு பாகுக்குடத்தைப் பச்சையாகக் கொடுப்பாரைப்போலே
கோடி— கோடிப்புடைவையை இட்டு
மூடி— மூடி
எடுப்பதன் முன்னம்— (காட்டுக்குக்கொண்டு போவதாக) எடுப்பதற்கு முன்னே
கௌத்துவம்— ஸ்ரீகௌஸ்துபத்தை
உடை— தரித்திராநின்ற
கோவிந்தனே— ஸர்வஸ்மாலபனான க்ருஷ்ணனே
கூடி— ஒரு நினைவாய்
ஆடிய— அவன் குணங்களில் அவகாஹித்த
உள்ளத்தா ஆனல் — நெஞ்சையுடைய வரானல்
குறிப்பு— அநுபவித்துப் போக்கக்கடவதான
இடம்— யமபுரத்தை
கடந்து— கடந்து [போகாமல்]
உய்யலும் ஆம்— உஜ்ஜீவிக்கவும்கூடும்.

வ்யா. கூடிக்கூடி யுற்றார்களிருந்து. இவனுக்கு சரமகாலம் வந்தவாறே, பந்துக்களெல்லாரும் திரண்டு நிரள்நிரளாக இருந்து. குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து. இவன் பண்ணின ப்ராதிகூல்யம் கிடக்க, அல்பாநுகூல்யங்களுள்ளவற்றைச் சொல்லாநிற்பர்கள். மஹாராஜர், வ்ருத்தி பட்டவளவிலே, அவன் முன்புபண்ணின ப்ராதிகூல்யங்களை மறந்து, "நான் முற்பட அகப்பட்டபோதே என்னைக் கொல்லலாயிருக்கக் கொல்லாதே விட்டவனையிறே நான் கொல்லுவித்தேன்" என்று அழுதானிறே; அத்தைக்கண்டு; பெருமாளும் சோகித்தாரிறே. பெருமாள், ராவணன், ‡பூசல்தலையில் நிராயுதனாய் நின்றபடியைக்கண்டு கொல்லாதே "இன்றுபோய் நாளைவா" என்றாரிறே. க்ருஷ்ணன், கம்ஸனை நிரஸித்தவநந்தரம் அவன் ஸ்த்ரீகள் படுகிற க்லேசத்தைக்கண்டு, "நான் என்னகார்யம் செய்தேன்!" என்று வெறுத்தானிறே. இப்படி எல்லார்க்கும் க்ருபை ஜநிக்கும்படியாயிறே அத்தசையிருப்பது. பாடிப்பாடி. இவர்கள் ப்ரலாபிக்கும்போது, ஒரு ப்ரபந்தம் பாடினாற்போலேயிருப்பது. ஓர் பாடையிலிட்டு. ஓர் ஆசந்தியிலே இவனை இட்டு. நரிப்படைக்கோரு பாகுடம்போலே. நரிப்படை- நரிக்கூட்டம். பாகுடம்- பாகுக்குடம். கோடிமூடியெடுப்பதன்முன்னம். கோடிப்புடைவையையிட்டு மூடியெடுத்தென்னுதல்; அன்றிக்கே, ஆசந்தியைக்கோடித்தென்னுதல்; இப்படி செய்வதற்கு முன்னே. கௌத்துவமுடைக் கோவிந்தனே. இவ்வாத்மவர்க்கத்தை தரித்தது நிரூபகமாக வுடையனுமாய் ஸர்வஸ்மாலபனுமான க்ருஷ்ணனே. கூடியாடிய உள்ளத்தரானல். ஈச்வரனும் சேதநனும் ஒரு நினைவாய் அவன்குணங்களிலே அவகாஹித்த நெஞ்சையுடையரானல். குறிப்பிட்டங்கடந்துய்யலுமாமே. (க)"ஸுவஸ்ய தஸ்ய வஸுதாவ்ருதஸ்ய" என்கிறபடியே அநுபவ விநாச்யமான தேசத்தைக்கடந்து. உய்யலுமாமே. "உயிரும் தரு

‡ பூசல் தலை - யுத்தரங்கம். (க) "அவச்ய மநுபோக்தவ்யம்."

மனையே நோக்கும்" என்கிற தேசத்தேதறப் போகப்பெறுவர்களென்கிறார். "ஒண்டொடி யாள் திருமகளும் நீயுமே நிலாநிற்பக்கண்டதறிற்" என்னக்கடவதிறே. ... ... அ.

அ. ஒன்பதாம்பாட்டு. வாயித்யாதி. இப்பாட்டில் ஸர்வவித பந்துவாக அவதரிப்பதி னால், பிறவியமவச்யதை இல்லையென்கிறார்.

மூ.—வாயோருபக்கம் வாங்கிவலிப்ப வார்ந்தநீர்க்குழிக்கண்கள் மிழற்றத்
தாயோருபக்கந் தந்தையோருபக்கந் தாரமுமோருபக்க மடித்தத்
தீயோருபக்கஞ் சேர்வதன்முன்னஞ் செங்கண்மாலோடுஞ் சிக்கனச்சுற்ற
மாயோருபக்க நிற்கவல்லார்க் காவதண்டத்தி லுய்யலுமாமே. கூ.

பதவுரை.

வாய்— வாயானது
ஒரு பக்கம் வாங்கி வலிப்ப— வாதனிகாரத் தாலே ஒருக்கடித்து வலிக்கவும்
வார்ந்த— பெருகின
நீர்— நீரையுடைத்தாய்
குழி— உள்ளே இடிய இழிந்த
கண்கள்— கண்களானவை
மிழற்ற— அலமர்ந்து நிற்கவும்
ஒரு பக்கம்— ஒருபக்கத்திலே
தாய்— தாயாரும்
ஒருபக்கம்— மற்றொருபக்கத்திலே
தந்தை— தமப்பனாரும்
ஒருபக்கம்— இன்னொருபக்கத்திலே
தாரமும்— மனைவியும்
அடித்த— கதற
தீ— பொருப்பை
ஒருபக்கம்— ஒருபக்கத்தில்
சேர்வதன் முன்னம்— இவைகற்கு முன்னே
செம்— சிவந்த
கண்— திருக்கண்களையுடையனை
மாலோடும் சிக்கன சுற்றம் ஆய்— ஸர்வேச்வரனை—திருபாதிகமான பந்துவாகக் கொண்டு
ஒருபக்கம்— ஸம்ஸாரிகளோடுள்ள உறவைக் கலசாதே எல்லாமவனேயாக
நிற்க வல்லார்க்கு— பற்றி நிற்கவல்லவர் கட்கு
அவதண்டத்தில்— யமபடர்களுடைய க்ரூரமான தண்டனையில் நின்றும்
உய்யலும் ஆம்— உஜ்ஜீவித்துப் போகலாம்.

வ்யா. வாயோருபக்கம் வாங்கிவலிப்ப. வாதனிகாரத்தாலே வாயானது ஒருக்கடித்து வலிக்க. வார்ந்த நீர்க்குழிக்கண்கள் மிழற்ற. "பந்துக்களைவிட்டுப் போகிறேன்" என்று இவர்கள் பக்கல் ஸங்கத்தாலே அழுகிற வளவிலே, யமபடரைக்கண்டவாறே பயத்தின் கனத் தாலே கண் உள்ளே இடிய இழிந்து அலமாகிற்கும். தாயோருபக்க மித்யாதி. "தன்னை உண்டாக்கினாரும், தானுண்டாக்கினவர்களும், ஓராராருகே யிருந்து கதற. அநந்தரம், தீயோருபக்கம் சேர்வதன் முன்னம். ஸம்ஸரிப்பதற்கு முன்னே. செங்கண்மாலோடும். வாத்ஸல்யத்தையும் வ்யாமோஹத்தையு முடைய ஸர்வேச்வரனை. சிக்கனச்சுற்றமாய். நிரு பாதிக ஸம்பந்த பந்துவுமாகப் பற்ற வல்லாருமாய். ஒருபக்கம் நிற்கவல்லார்க்கு. ஸம்ஸா ரிகளோடுள்ள உறவைக் கலசாதே அவனேயாகப் பற்றி நிற்கவல்லார்க்கு. அவதண்டத்தி லுய்யலுமாமே. யமபடரையும் அவர்கள் க்ரூரமான தண்டங்களையும் தப்பி உஜ்ஜீவித்துப் போகலாம். "மாதாவினைப் பிதாவைத்திருமாலை வணங்குவன்" என்றும், "சேலேய் கண்ணியரும் பெருஞ் செல்வமும் நன்மக்களும், மேலாத்தாய்தந்தையுமவரே" என்றும் பற்றுவர்க்கு உஜ்ஜீவித்துப்போகலா மென்கிறார்.

அ. நிகமத்தில், இத்திருமொழி அப்பளித்தவர்கள், ஸ்ரீயஃபதிபக்கலிலே பெரியாழ்வார்பெற்ற வரிசைகளைப் பெறுவதென்கிறார்.

மூ.—செத்துப்போவதோர் போதுநினைந்து செய்யுஞ்செய்கைக டேவபிரான்மேல்
பத்தராயிறந்தார் பெறும்பேற்றைப் பாழித்தோள் விட்டுசித்தன் புத்தூர்க்கோன்
சித்தநன்கொருங்கித் திருமாலைச்செய்தமாலை யிவைபத்தும் வல்லார்
சித்தநன்கொருங்கித் திருமான்மேற் சென்றசிந்தை பெறுவர்தாமே. ய.

பதவுரை.

செத்துப்போவது ஓர் போது } — இறந்து போம்போது
செய்யும்— யமபடர் செய்யும்
செய்கைகள்— செயல்களை
நினைந்து— நினைத்து
தேவபிரான் மேல்—*அயர்வறு மமரர்களதி பதி பக்கலிலே
பத்தர் ஆய்— பக்தியுக்தராய்
இறந்தார்— பின்பு இறந்தவர்கள்
பெறும் பேற்றை — பெறுகிறபேறுதன்னை
பாழி — ஸம்ஸாரத்தை வென்ற மிடுக்கை யுடையனவான
தோள்— தோள்களையுடையராய்
புத்தூர்— ஸ்ரீவில்லிபுத்தூருக்கு
கோன்— நிர்வாஹகரான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
சித்தம்— கரணத்ரயத்தையும்
நன்கு— நன்றாக
ஒருங்கி— ஒருபடிப்படுத்தி
திரு மாலை— ஸ்ரீயஃபதி விஷயமாக
செய்த— அருளிச்செய்த
மாலை— சொல்மாலையான
இவை பத்தும்— இப்பத்துப் பாட்டையும்
வல்லார்— ஓதவல்லவர்கள்
(ஆழ்வானைப் போலே,)
சித்தம் நன்கு ஒருங்கி—;
திரு மால் மேல்— ஸ்ரீயஃபதி பக்கலிலே
சென்ற— குடிகொண்ட
சிந்தை— மநஸ்ஸை
பெறுவர்— உடையராவார்கள்.

வ்யா. செத்துப்போவதோர்போது- செய்யும் செய்கைகள் - நினைந்து. சரீராவஸாநஸமயத்தில் யமபடர் செய்யும் செயல்களை நினைத்து. தேவபிரான்மேல் பத்தராய். *அயர்வறுமமரர்களதிபதிபக்கலிலே ப்ரேமத்தைப்பண்ணி. இறந்தார் பெறும்பேற்றை. பக்தராய், பின்பு இறந்தார் பெறும்பேற்றை. பாழித்தோள் விட்டுசித்தன். ஸம்ஸாரத்தைவென்ற மிடுக்கையுடைய தோள்களையுடைய ஆழ்வார். புத்தூர்க்கோன். சரமதசையிலே இவர்களைப்போலே பக்தியுண்டாகை யன்றிக்கே, ஸதா மநநாரதம் பண்ணும் நித்யஸூரிகளைப்போலே யிருக்கிற ஆழ்வாரை ஸ்வாமியாகப்பற்றி யிருக்கும் ஸ்ரீவில்லிபுத்தூரையு முடையரானவர். சித்தம் நன்கித்யாதி. "ஆசைவாய்ச்சென்ற சிந்தையராகி" என்கிறபடியே கரணத்ரயமும் புறம்புபோதல் கலந்திருத்தல் செய்யாதே ஸ்ரீயஃபதிவிஷயமாகச் செய்த இப்பத்துப்பாட்டும் அப்யஸித்தவர்கள். சித்தம் நன்கொருங்கித்திருமால்மேல் சென்ற சிந்தை பெறுவர்தாமே. ஆழ்வாரைபபோலே கரணத்ரயமும் ஒரு படிப்பட உடையராய், ஸ்ரீயஃபதிபக்கலிலே சென்ற மநஸ்ஸை யுடையராவார்கள். ... ... ய.

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

அடிவரவு.—ஆசை சீ சோர்வு மேலெழு மடிவழி அங்கம் தென்னவன்
கூடி வாயோரு செத்துக் காசும்.
ஆ திருமொழி கூ-க்கு, பாட்டு-கூ-அ.

(o)

நர்ன்காம்பத்து - ஆருந்திருமொழி - காசுங்கரையுடை, ப்ரவேசம்.

அ. *ஈசாவகாரியத்திலே, பகவத்விமுகராய்த் தம்மாலே நிந்திதராணவர்களையும் விட மாட்டாத பரமக்ர்பையாலே அவர்களைக் குறித்து ஹிதத்தை உபதேசிப்போமென்று பார்த்து, " மாளுமோரிடத்திலும் வணக்கொடுமாள்வதுவலம் " என்கிறபடி மேய்-சரமதசையிலேயாகிலும் பகவத்ஸமாச்ரயணத்தைப் பண்ணினால் தப்பாமல் உஜ்ஜீவிக்கலாம்படி பிருக்கையாலே, இந்தவார்தையை அவர்களுக்கறிவித்தால், சேதநராதையாலே பகவத்ஸமாச்ரயணத்திலே யிழிவர்களென்று திருவுள்ளம்பற்றி, ப்ராக்ர்தவிஷயங்களிலுண்டான ஆசையாலே அவற்றின் பக்கலிலேசென்ற நெஞ்சையுடையராய் அவற்றின் பேரைச்சொல்லி, பின்னை அதுதானும்மாட்டாதே கலங்கி முடிந்து போங்காலத்திலே அவற்றின் பேர்களைச்சொல்லாமல் பகவந்நாமத்தைப் பேசுமவர்கள்பெறும் பேற்றின்காரும் நம்மால்சொல்லித் தலைக்கட்டப்போகாது என்று தொடங்கி, அந்திமதசையில்வரும் க்லேசபரம்பரைகளையும், அத்தசைவருவதற்குமுன்னே ஏதேனுமொருவழியாலேயாகிலும் பகவத்ஸமாச்ரயணத்தைப் பண்ணி சரீரத்தைவிட்டால் அதிக்ரூரமாக யமபடர்பண்ணும் கண்டங்களையும் தப்பி அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலேபோய் பகவதநுபவத்தைப்பண்ணி புநராவ்ர்த்தியின்றிக்கே காலதத்வமுள்ளதனையும் நித்யஸூரிகள் நிரளிலே கூடியிருந்து வாழலாம் என்னுமிடத்தை அவர்கள் நெஞ்சிலே படும்படியாகவுன்ற உபதேசித்தார். கீழிற்றிருமொழியில்; இப்படி இதரவிஷய ஸங்கமற்று பகவத்ப்ரேமபூர்வகமாக அவன் திருநாமங்களைப் பேசத்தக்க பரிபாகமில்லாதாரையும் ஒருவழியால் அவன் திருநாமத்திலே அந்வயிப்பித்து உஜ்ஜீவிப்பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, தர்ஷடப்ரயோஜநங்களை நச்சி, பெற்ற பிள்ளைக்கு ப்ராக்ர்தவிஷயங்களின்பேரை யிடுமவர்களைக்குறித்து, நீங்கள் இப்படி ப்ராக்ர்தவிஷயங்களின்பேரிடடால் இம்மையில் நீங்களாசைப்படுகிற க்ஷுத்ரப்ரயோஜநங்களாகிலும் ஸித்திப்பதுபணியில்லை மறுமைக்குத்தானே யொன்றுக்குமுறுப்பன்று, ஆனபின்பு அத்தைவிட்டு பிரகிருதியைப்புகுந்தாகிலும்ஜீவித்துத் தன் திருநாமத்திலே அந்வயித்தாருடைய ஸகலக்லேசங்களையும் ஸர்வேச்வரனுடையதிருநாமத்தை,நீங்கள்பெற்றபிள்ளைக்கிட்டுவாயாரவாழ்த்திப்ரீதராயிருங்கோள்; இவ்வளவேபற்றாசாக அந்தப்பிள்ளையுடையமாதாவானவள்(க)"ஜநநீ க்ருதகாயம்" என்கிறபடியே நரகத்திற் புகாமல்உஜ்ஜீவித்துப்போமென்று ஒருக்காற்போலே ஒன்பதின்காலுபதேசித்து, பகவந்நாமங்களை யிடும்படியாக அவர்கள் நெஞ்சைத் தெளிவிக்கிறார் - இத்திருமொழியில். ... ... *

மூ.—காசுங்கரையுடைக் கூறைக்குமங்கோர் கற்றைக்கும்
ஆசையினால் லங்கவத்தப் பேரிடுமாதர்காள்
கேசவன்பேரிட்டு நீங்கடெனித் திருமீளே
நாயகனரணன் நம்மன்னை நரகம்புகாள். க.

381

பதவுரை.

காசு (க்கு) ம்— காசுக்கும்
கரை உடை— தலைகளில் நல்லகரையையுடைய
கூறைக்கும்— புடைவைக்கும்
அங்கு— அங்கே
ஓர் கற்றைக்கும்—ஒரு நெல் கற்றைக்கும்
ஆசையினால்— ஆசையாலே

(க) "ஜநநீ க்ர்தார்த்தா"

அங்கு— அவர்களுடைய
அவத்தம்— மிகத் தண்ணிதான
பேர்— பெயர்களை
இடும்— உங்கள் பிள்ளைக்கு இடுகிற
ஆதர்காள் — அறிவுகெடார்களை!
கேசவன்— ஆச்சிதருக்கருள்வர்த்தகனும்
நாயகன்— ஸர்வசேஷியான
நாரணன்— நாராயணனுடைய
பேர்— திருநாமத்தை
இட்டு— உங்கள் பிள்ளைகளுக்கு இட்டு
நீங்கள்— நீங்கள் [ராயிருங்கோள்;
சேதனித்து இருப்பின்— ஸந்துஷ்ட சித்த
கம் ‡ அல்லை— அந்தப் பிள்ளையின்தாய்
நரகம்புகாள்— நரகத்தை அடையமாட்டாள்.

‡ மாதாவைச் சொன்னது — பிதாவுக்கு முபலக்ஷணம்.

வ்யா. முதற்பாட்டு. காசித்யாதி. பிறர்பேரிடுகிறது - அவர்களுக்கு உத்தேச்யராய், ஸ்வயம்ப்ரயோஜநமாகவன்றே; அதர்ஷ்டப்ரயோஜநத்துக்காகவுமன்றே; தர்ஷ்டப்ரயோஜநங்களில் சிலவற்றை நச்சியிறே. ஆகையால், காலிரண்டு காசுகிடைக்கும் என்றும், தலைகளில் கரையையுடைத்தாயிருப்பதொரு சிரைகிடைக்குமென்றும், அங்கே ஒருகட்டுக்கற்றை கிடைக்குமென்றுமுண்டான வாசையாலே. உங்களுடைய ஆசையொழிய அதுதான் ஸித்திக்கிலுமாம், ஸித்தியாதொழியிலுமாம் என்னுமப்படியிறே அவர்கள் லுப்தனையிருக்குமப்படி. அங்கவத்தப்பேரிடும் ஆதர்காள். ப்ராக்தரான இவர்கள்பக்கலுண்டான ஹேயமான நாமங்களையிடும் அறிவுகேடர்காள். "அங்கு" என்று இவர்கள் உபகாரமாக நினைத்திருக்கும் விஷயங்களினுடைய க்ஷுத்ரதையைச் சொல்லுகிறது. அவர்கள் க்ஷுத்ரானாலும் நாமந்தான் நன்றாயிருக்கையன்றிக்கே, அதுவும் தீயதாயிருக்குமென்னுமிடம் சொல்லுகிறது — "அவத்தப்பேர்" என்று. ஆதர் — குருடரும், அறிவிலோருமே. கேசவன்பேரிட்டு. (க) "கஶ்சதிபூஹணேநாம ஈசோஹம் ஸர்வதேஹிநாம் । கு வாஸவாம்ஜ்ஞ ஸ்ரீகேள தஹ்யாதேஷுவ நாசிவாநு" என்கிறபடியே - ஸர்வகாரண பூதனும், (உ) "கேஶவஃக்லேஶ நாஶஃ" என்கிறபடியே - க்லேசநாசனராயிருக்கிறவனுடைய திருநாமத்தையிட்டு "கேசவா" என்றழைத்து. நீங்கள்தேனித்திருமிறே. நீங்கள் அந்தப் பிள்ளையளவிலே ஸ்நேஹித்து ஸந்தோஷத்தோடே யிருங்கள். தேனித்திருக்கையாவது - இனியராயிருக்கை. நாயகன் நாரணன். "நாயகன்" என்றது - ஸர்வசேஷி யென்றபடி. "நாரணன்" என்றது - ஸமஸ்த கல்யாணகுணாத்மக னென்றபடி. இத்தால் - ஆச்ரிதரை ரக்ஷிக்கைக்கீடான ப்ராப்திபையும் குணயோகத்தையு முடையவனென்கை. தம்மன்னே. தாயிரானவளை "தம்ப்லன்" என்னுமாபோலே, "தம்மன்னே" என்கிறது. நரகம்புகாள். பிள்ளைக்கு "நாராயணன்" என்றுபேரானல் அவனைப் பெற்றவளுக்கு எங்ஙனே யமவச்யதை கூடுவது. பிள்ளைபெற்று "நாராயணன்" என்று பேரிட்டது யமவச்யதை கூடாமைக்கோ. பெற்றாளுக்குமேலும், பிள்ளையளவில் ஸ்நேஹம் மிக்கிருப்பதும் மாதாவுக்காகையாலே - இவளை ப்ரதாநையாகச் சொல்லுகிறது. இப்படி பேரிட்டழைத்த பிள்ளையளவிலே ஸ்நேஹித்துப் போரும் பித்ராதிகளுக்கும் இப்பேறு ஒக்குமிறே. ... ... க.

மூ.—அங்கோரு கூறை யரைக்குடுப்பதனுசையால்
மங்கியமானிடசாதிப் பேரிடுமோதர்காள்.

(க) "கதிபாஹமேணாம ஈசோஹம் ஸர்வதேஹிநாம் - ஆவாம்தவாங்கேஸம் பூதௌ தஸ்மாத் கேசவநாமவாந்." (உ) "கேசவஃ க்லேசநாசநஃ." ‡ 'கம் அப்பன்' என்று பிரிப்பதில் திருவுள்ளம்.

செங்கணெடுமால் சிரீதராவென்றழைத்தக்கால்
நங்கைகாள் ஞரணன்றம்மன்னே நரகம்புகாள். உ.

பதவுரை.

அங்கு— செல்வர்களிடத்து
ஓரு கூறை— ஒரு புடைவையைப்பற்றி
அரைக்கு உடுப்ப } அரைக்கு உடுக்கவேணுமென்
தன் ஆசையால் } றும் ஆசையாலே
பங்கிய— அழிந்துகிடக்கிற
மானிடசாதி— மநுஷ்யஜாதியுடைய
பேர் இடம்— பேரை இடுகிற
ஆதர்காள்— குருடர்களே!
நங்கைகாள்— சொல்லிற்றை அறிபவல்ல
மறிவையுடையவர்களே!
செம்— சிவந்திருந்துள்ள
கண்— திருக்கண்களையும்
செடிமால் என்று— மிக்கவ்யாமோஹத்தை
முடையவனே! என்றும்
சிரீதரனென்று— ஸ்ரீதரனே! என்றும் (பேரி
அழைத்தக்கால்— அழைத்தால் ட்டு)
நாரணன்— நாராயணனென்னும் பெயரை
யுடைய அந்தப்பிள்ளையின்
தம் அன்னே நரகம்புகாள்.

வ்யா. இரண்டாம்பாட்டு. அங்கொருகூறை யரைக்குடுப்பத ஞசையால். அங்கே பெற்று ஓருபுடவை அரைக்கு உடுக்கவேணுமென்னும் ஆசையாலே. இவ்விடத்திலும் அங்கு" என்று உபகாரவிஷயத்திலுடைய கூடாத்ரதையைச் சொல்லுகிறது. "ஓரு கூறை" என்றும், "அரைக்குடுப்பது" என்றும் சொல்லுகையாலே, உடுக்கும் சீரைக்கு இணைச்சீரை வேறே தேடவேணுமென்கை. "ஆசையால்" என்கையாலே - அதுதானும் உங்களாசையையுள்ளது, கிடைக்கிலுமாம், கிடையாதொழியிலுமாமென்கை. மங்கியமானிடசாதிப்பேரிடுமாதர்காள், "அஸங்கேய" என்கிறபடியே அழிந்துகிடக்கிற மநுஷ்யஜாதியுடைய பேரையிடாநிற்கும் அறிவுகேடர்காள்.. "ஆன்மிடையேழன்றடர்த்தாற் காளாகு ரல்லாதார் மானிடவரல்லர்" என்னும்படியானவர்கள் பேரையிடுகிறது. தர்ஷ்டத்துக்கும் அதர்ஷ்டத்துக்கும் உறுப்பன்றிக்கே யிருக்கிறவர்கள்பேரை யிடுகிறது உங்களறிவுகேடிறே. செங்கண் நெடுமோல் சிரீதராவென்றழைத்தக்கால். வகுத்த சேஷியானவனுடைய திருநாமத்தைப்பிடி, 'செங்கணெடுமாலே!' 'சிரீதரனே!' என்று அழைத்தால். "செங்கணெடுமால்" என்றது - வாத்ஸல்யப்ரகாசகமான திருக்கண்களையும், ஆச்ரிதவிஷயத்தில் மிக்கவ்யாமோஹத்தையு முடையவனென்கை. அன்றிக்கே, "மால்" என்றது - பெரியோனென்றபடியாய், *நெடுமையால்-ஸர்வாதிகத்வம் சொல்லுகிறதாகவுமாம். அப்போதைக்கு, "செங்கண்" என்றது - ஐச்வர்யஸூசகம். "சிரீதரா" என்றது - கீழ்ச்சொன்ன இரண்டு யோஜனைக்குமுபோது. நீர்மைக்கும் மேன்மைக்கு முட்லாயிறே லக்ஷ்மீஸம்பந்தந்தானிருப்பது. நங்கைகாள்! சொன்னவை யறியத்தக்க பூர்த்தியையுடையவர்களே. நாரணன்றம்மன்னே நரகம்புகாள்! பூர்வவத். ... ...

—உச்சியிலெண்ணெயுஞ் சுட்டியும் வாளியுமுகந்து
எச்சம் பொலிந்தீர்கா ளென்செய்வான் பிறர்பேரிட்டீர்
பிச்சைபுக்காகிலு மெம்பிரான் றிருநாமமே
நச்சுமினரணன் றம்மன்னே நரகம்புகாள். ரு.

பதவுரை.

எச்சம் பொலிந்தீர்காள்— பிள்ளை பெற்று அபிவர்த்தானவர்களே! [எச்சம் - ஸந்தானம்]
உச்சியில்— உச்சியிலே தடவத்தக்க
எண்ணெயும்— எண்ணெயையும்
சுட்டியும்— நெற்றிச் சுட்டியையும்
வளையும்— வளையையும்
உகந்து— விரும்பி
என் செய்வான்— எதுக்காக
பிறர்— எம்பெருமானை பொழிந்தவர்களை
பேர் இட்டீர்— பேரை இட்டீர்? [டைய
பிச்சை புக்கு ஜீவிதும்— பிக்ஷாபண்ணிஜீவித்
தாகிலும்
எம்பிரான்— எம்பெருமானுடைய
திருநாமமே— திருநாமத்தையே (சாத்தி)
நச்சுமின்— விரும்பி அழையுங்கள்;
(இப்படி அழைத்தால்,)
தம் அன்னை நரகப்புகாள்.

வ்யா. முன்றும்பாட்டு. உச்சியிலெண்ணெயும் சுட்டியும்வளையும். பிள்ளைக்கு உச்சியிலே தடவத்தக்க எண்ணெயையும், நெற்றியிலே அலங்காரமாகத்‡தூங்குமாபடி கட்டத்தக்க சுட்டியையும், கைக்கு அலங்காரமாக் இடத்தக்க வளையையும். இத்தால்-பிள்ளைதலைகாயாமல் †தப்புகைக்கு எண்ணெய் பெறலாம், பிள்ளைப் பணிகளானவை பெற்றுப் பூட்டலாமென்றும்-பிறர்பேரிடுகையிலிழிகிறது. உகந்து. இவற்றை யாசைப்பட்டு. இவர்களாசையேயொழிய இதுதானும் கிடையாதபடியிறே எதிர்த்தலையில் ஓபததை பார்த்தாலிருப்பது. எச்சம்போலிந்தீர்காள். பிள்ளைபெற்று அபிவர்த்தானவர்களே !. எச்சம் - ஸந்தானம். என்செய்வான் பிறர்பேரிட்டீர். இந்தப் பிள்ளையை முழுக்க ரக்ஷித்துத் தலைக்கட்ட வல்லரொன்றிலை; உங்கள் ‖மிடிதீர்க்க வல்லரென்றிலை; அதர்ஷ்டத்துக்குத்தான் உறுப்பாவரென்றிலை; எதுக்காகப் பிறர்பேரிட்டீர். பிச்சைபுக்காகிலும். நாடு பரப்புண்டே, அதிலே பிக்ஷையைப் புகுந்து ஜீவித்தாகிலும். எம்பிரான்றிருநாமமே நச்சுமின். எனக்கு ஸ்வாமியானவனுடைய திருநாமத்தையே விருப்பத்தோடே சாத்தியழையுங்கோள். " ஒரு ப்ராஹ்மணன், தன்பிள்ளையைப் பேரிடுகிற ஸமயத்திலே, 'ஐச்வர்யம் தரவல்லானெருவன் பேரிடவேணும்' என்ன; 'வைச்ரவணன் பேரையிடு' என்ற வளவிலே, 'ஐளிபிளி' என்று இட்டு அழைத்து ஜீவிப்பதில் 'நாராயணன்' என்கிற திருநாமத்தைச் சாத்தி, பிக்ஷாபுக்கு ஜீவிக்கவமையுமென்றான் " என்று ஆச்சான்பிள்ளை யருளிச்செய்ததாகப ¶பிள்ளைய ருளிச்செய்வர்; இத்தால் - பிக்ஷையைப் புகுந்தாகிலும் என்னுடைய நாதனானவனுடைய திருநாமத்தையே நான் சொன்னபடியே உங்கள் பிள்ளைக்கு விரும்பியிடுங்கோள்; பிக்ஷாபுகவேண்டாதபடி தர்ஷ்டமும் அவன் ப்ரஸாதத்தாலே தன்னடையே ஸித்திக்கு மென்று கருத்து. நாரணம் தம்மன்னை நரகம்புகாள்.. ஆகையாலே அதர்ஷ்டத்தில் தானே குறையில்லையென்கை.

மூ.—மானிடசாதியிற் றோன்றிற்றோர் மானிடசாதியை
மானிடசாதியின்பேரிட்டான் மறுமைக்கில்லை
வானுடைமாதவா கோவிந்தா வென்றழைத்தக்கால்
நானுடைநாரணன்றம்மன்னை நரகம்புகாள். ச.

384

‡ தூங்கும்படி - தொங்குமாபடி. † தப்புகை - கடவுகை. ‖ மிடி - வறுமை.
¶ பிள்ளை - திருவாய்மொழிப்பிள்ளை.

பதவுரை.

மானிடசாதியில்— மநுஷ்யஜாதியில்
தோன்றிற்று— தோன்றின
ஓர்— ஒரு
மானிடசாதியை— மநுஷ்யஜாதியை
மானிடசாதியின்— கர்மபலமநுபவிக்கப் பிறந்த மநுஷ்யஜாதியின்
பேர் இட்டால்— பெயரை இட்டால்
மறுமைக்கு— மோக்ஷத்துக்கு
இல்லை— உடலாகாது

நானுடை— என்னுடைய
நாரணன்— நாராயணன் பேரை இட்டு
ஞான உடை— பரமபதத்தைக் கல்லிருக்கை யாகவுடைய
மாதவா— ஸ்ரீமானே!
கோவிந்தா— கோவிந்தனே!
என்று— என்றிப்படி சொல்லி
அழைத்தக்கால்— அழைத்தால்
தம் அன்னை நரகம்புகாள்.

வ்யா. நான்காம்பாட்டு. மானிடசாதியில் தோன்றிற்றேறர் மானிடசாதியை. மநுஷ்ய ஜாதியில் உத்பந்நமானதொரு மநுஷ்ய ஜந்துவை. ஆத்மா கர்மாநுகுணமாக தேவாதியோநிகள்தோறும் பிறக்கக்கடவனுகையாலே, புண்யபாபங்களிரண்டையும் அநுபவிக்கைக்கும் ஆர்ஜிக்கைக்கு முறுப்பாகவாய்த்து மநுஷ்யயோநியிலே பிறந்தது. ஆகையால் இப்படியிருக்கிற மநுஷ்யஜாதியிலே உத்பந்நமானதொரு ஜந்துவை. மானிடசாதியின் பேரிட்டால் மறுமைக்கில்லை. தர்ஷ்ட ப்ரதியோஜநத்தைநச்சி, கர்ஹ்யவச்யமான மநுஷ்யஜாதியிலே ஒன்றின் பேரிட்டால் இஹிகத்தில் சில ப்ரதியோஜநம் ஸித்திக்கிலும் மறுமைக்கு ஒருப்ரயோஜநமில்லை. மறுமையாவது - அத்ருஷ்டம். வானுடையித்பாதி. தன்னோடு ஸம்பந்தித்தாரை உத்தரிப்பிக்கும் ஸ்வேவச்ல்வனுடைய திருநாமத்தையிட்டு, 'நித்ய விபூதியையுடைய ஸ்ரீமானே, லீலாவிபூதியையிரும்பி ரக்ஷிக்கிற கோவிந்தா!' என்று அழைத்தால். நானுடை நாரணன். என்னுடைய நாராயணன். "மானிடசாதி" என்று எடுத்தவதுக்கு நாலாமடியாகையாலே "என்னுடை" என்கிற ஸ்தாநத்திலே,‡ "நானுடை" என்கிறது; "ஊனுடைச் சுவர் வைத்து" என்கிறப்பாட்டிலே, "நானுடை" என்னுமாபோலே. பகவந்நாமமிட்ட பிள்ளையைச் சொல்லுகிறதாயிருக்கச்செய்தே, "நாயகன் நாரணன்" என்றும் "நானுடை நாரணன்" என்று மருளிச்செய்கிறது, பகவத்விஷயத்தில் தமக்குண்டான ப்ரேமாதிசயத்தாலே. தம்மன்னை நரகம்புகாள். ... ... சு.

மூ.—மலமுடையூத்தையிற் றோன்றிற்றேறர் மலவூத்தையை
மலமுடையூத்தையின் பேரிடான் மறுமைக்கில்லை
குலமுடைக்கோவிந்தா கோவிந்தாவென்றழைத்தக்கால்
நலமுடைநாரணன்றம்மனை நரகம்புகாள். ரு.

பதவுரை.

மலம் உடை— மலத்தையுடைத்தாய்
ஊத்தையில்— ஹேயமான சரீரத்திலே
தான்றிற்று ஓர்— தோன்றினதொரு

மலம் ஊத்தையை— தானும் அப்படியான சரீரத்தோடே கூடியிருக்கிற ஜந்துவுக்கு
மலம் உடை— (கீழ்ச்சொன்னபடியே) மலத்தையுடைத்தாய்

‡ எதுகைக்குச் சேரவேணுமென்று கருத்து.

வூத்தையின்— வேறயமான சரீரத்தையு
டைத்தாயிருப்பதொரு ஜந்துவின்
பேர்— பேரை
இட்டால்— இடலால்
மறுமைக்கு— அதர்ஷ்டத்துக்கு
இல்லை— ஒருப்ரயோஜந முண்டாகாது,

குலம் உடை — எல்லா உயர்த்தியையு
முடைய
'கோவிந்தா! கோவிந்தா!!' என்று
அழைத்தக்கால்-;
நலம் உடை நாரணன் தம் அன்னை.
நரகட்புகாள்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. மலமுடையூத்தையில் தோன்றிற்றேர்மல வூத்தையை. (க) "உமஸ்வுகூ பவிஜ்ஜந்து, வூய-உஜ்ஜாவ்ஹிஸ்ஸ்ஹதள । டெவெஹ" என்கிறபடியே மாம்ஸாஸ்காதி மலயுக்தமாய் வேறயமாயிருக்கிற சரீரத்திலே தோன்றினதொன்றாய், தானும் அப்படியான சரீரத்தோடே கூடியிருக்கிற ஜந்துவை. காரணகுணமாயிறே காரியமிருப்பது. உத்பாதகரான மாதாபிதாக்களுடைய சுக்ல சோணிதங்களாலே பரிணதமான தாகையாலே, உத்பந்நமான ஜந்துவினுடைய சரீரமும தத்ஸ்வரூபமாயிருக்குமிறே; அத்தைத் திருவுள்ளம்பற்றியாய்த்து இப்படியருளிச்செய்தது. மலமுடையூத்தையின் பேரிட்டால் மறுமைக்கில்லை. கீழ்ச்சொன்னபடியே மலத்தையுடைத்தாய் வேறயமாயிருந்துள்ள சரீரத்தைப் பரிக்ரஹித்துக்கொண்டிருக்கிறதொரு கர்மவச்ய ஜந்துவின் பேரிட்டால், இம்மையில் சில ப்ரயோஜநங்களுண்டாய்த்ததாகிலும், மறுமையாகிற அதர்ஷ்டத்துக்கு ஒரு ப்ரயோஜநமில்லை. குலமுடையபித்யாதி. வேறயப்ரதிபடனனவனுடைய திருநாமத்தையிட்டு, கோபகுலத்திலேபிறந்து கோவிந்தாபிதைகம் செய்த கோவிந்தா! கோவிந்தா!! என்றழைத்தக்கால். நலமுடை நாரணன். திருநாமம் சொன்னரை உத்தரிப்பிக்கும் நன்மையுடையனன நாரணன். அன்னிக்கே, இப்படி கோவிந்தா கோவிந்தாவென்றழைக்கும் ஸ்நேஹத்தையுடைய திருவுடையனான - நாயனன்தம்மனை என்று மேலே கூட்டவுமாம். ... ... - இ.

மூ.—நாடுநகருமறிய நாட்டுமானிடப் பேரிட்டுக்
கூடியழுங்கிக் குழியில் வீழ்ந்து வழுக்காதே
சாடிறப்பாய்ந்த தலைவா தாமோதரா வென்று
நாடுமிரணன் றம்மன்னை நரகம்புகாள். கூ.

பதவுரை.

நாடும்— அவிசேஷஜ்ஞருமி
நகரும்— விசேஷஜ்ஞருமி
அறிய— 'இவன் உயர்ந்தவன்' என்று
அறியும்படி
நாடு மானிடர் பேர் இட்டு— க்ஷத்ரமநுஷ்
யர்கள் பெயரை இட்டு
கூடி— அவர்களோடே கூடி
அழுங்கி— அவர்கள் பக்கல் காற்றாழ்ந்து

குழியில் வீழ்ந்து — அவர்கள் வீழுந்த
குழியிலே விழுந்து
வழுக்காதே— தவறிப்போகாமல்
சாடு— 'சகடாஸுரன்
இற— முறியும்படி
பாய்ந்த தலைவா என்று-பாய்ந்த பெருமைமன்
மையை உடையவனே!' என்றும்

(க) "மாம்ஸாஸ்க்ருய விண்மூத்ரஸ்நாயுமஜ்ஜாஸ்த்தி ஸம்ஹதள - தேவேஹ"

தாமோதரா என்று— 'தாமோதரனே!' என்றும்
நாடுமின்— வாழ்த்திக்கொண்டு திரியுங்கள்;
(இங்ஙன் செய்தால்,)
நாரணன்தம் அன்னே நரகம்புகாள்.

வ்யா. ஆறும்பாட்டு. நாடித்யாதி. நாட்டிலுள்ளாரோடு நகரத்திலுள்ளாரோடு வாசியற எல்லாரும் "இவன் அஸாதாரணன்" என்று அறிவுப்படி சூத்ரமநுஷ்யர்பேரையிட்டு, அவர்களோடேகூடி அவர்கள் பக்கலிலே கால்தாழ்த்து அவர்கள் விழுந்த குழியிலே விழுந்து தவற வர்த்தியாதே. சாதிறவித்யாதி. லக்ஷ்மீஸ்வரனுடைய திருநாமத்தையிட்டு, சகடாஸுரனைமுறியப் பாய்ந்த தலைவனே! தாமோதரனே! என்று வாயாரவாழ்த்திக்கொண்டு திரியுங்கோள். நாரணன்தம்மன்னே. நாராயணனுக்கு வகுஷையுடைய மாதாவானவள் நரகம் புகாள். ... ... கூ

மூ.—மண்ணிற்பிறந்து மண்ணதுமான்ட் டிடிட்டங்
கெண்ணமொன்றின்றி யிருக்குமேழை மனிசர்காள்
கண்ணுக்கினிய கருமுகில்வண்ண னமபே
நண்ணுமி நாரணன்தம்மன்னே நரகம்புகாள். எ.

பதவுரை.

மண்ணில் பிறந்து— மண்ணில்பின்றுமுன்
டாய்
மண் ஆகும்— மண்ணாய்விடுகிற
மானிடர் பேர் இட்டு—மநுஷ்யருடையபேரை இட்டுக்கொண்டு
அங்கு— அதிஷ்டபலத்திலே
எண்ணம் ஒன்று இன்றி இருக்கும் }—ஒரு விசாரமற்றிருக்கிற
ஏழை— அறிவிலிகளான
மனிசர்காள்— மநுஷ்யர்களே!
கண்ணுக்கு— கண்ணுக்கு
இனிய— இனிதாயிருந்துள்ள
கரு— கறுத்த
முகில்— மேகம்போன்ற
வண்ணன்— வடிவைபுடையவனுடைய
நாமம்— திருநாமத்தை
நண்ணுமின்— நண்ணுங்கோள்
நாரணன் தம் அன்னே நரகம்புகாள்—.

வ்யா. ஏழாம்பாட்டு. மண்ணிற்பிறந்து. "மண்ணைப் பிளைக்கால் மஞ்சுலாவுமாகாசமுமாம் புண்ணாக்கை" என்கிறபடியேதேஹாபாதாநம் பூதபஞ்சகமேயாகிலும்ப்ரசுரமாயுள்ளது ப்ரதிவித்ரவ்யமாகையாலே அதில் நின்றும் தேஹத்துக்கு உத்பத்தியாக அருளிச்செய்கிறார். மண்ணதும். தேஹாரம்பகங்கள் உருக்குலைந்தால், கார்யத்துக்குக்காரணத்திலே லயமாகையாலே, மீளவும் மண்ணாய்ப்போகக் கடவதிறே; அத்தைப்பற்ற அருளிச்செய்கிறார். மானிடப்பேரிட்டு. ஆக இப்படி மண்ணிலே பிறந்து மண்ணாய்ப்போகாநிற்கும் சூத்ரமநுஷ்யருடைய பேரையிட்டு, இத்தால் அவர்கள் பரிக்ரஹித்திருக்கிற சரீரத்தினுடையபொல்லாங்கையும் அஸ்த்திரதையையும் சூத்ரதையையும் சொல்லி, இப்படியிருக்கிறவர்கள் பேரையிடுவதே! என்கிறார். அங்கெண்ணமொன்றின்றி யிருக்குமேழைமனிசர்காள். அவ்விஷயத்திலே ஒரு விசாரமற்றிருக்கிற அறிவில் மநுஷ்யர்காள். அதாவது - முன்பு அப்படிசெய்தால், பின்பு தத்விஷயமாக ஒரு விசாரமுண்டாய் "என்னகார்யம்செய்தோம்" என்று அநுதபிக்கலாமிறே. அதின்றிக்கே நிர்ப்பராய்இருக்கிறது உங்களறிவுகேடிறே யென்கை. கண்ணுக்கினிய. கண்டகண் வாங்காதே கண்டுகொண்டிருக்கும்படி தர்ஷணீயமான

காளமேகம்போன்ற வடிவையுடையனு யிருக்கிறவனுடைய திருநாமத்தை நண்ணுங்கோள். அதாவது - அவன் திருநாமத்தை உங்கள் பிள்ளைக்கு இட்டு அழையாநின்று கொண்டு, அத் திருநாமத்தில் செறிவுடையராய்ப்போருங்கோளென்கை. அந்தநாரணன் தம்மன்னை நரகம் புகாள். ... ...எ.

அ. எட்டாம்பாட்டு. நம்பியித்யாதி. லோகத்தில் இன்னநம்பி இன்னநம்பியென்று ஒரு க்ராமத்துக்கும் ஜநபதத்துக்கும் ப்ரதாநராய் ப்ரஸித்தராயிருக்குமவர்களுடைய நாமங்களை, தர்ஷடப்ரயோஜநங்களை நச்சி, பிள்ளைகளுக்கு இட்டுத்திரியுமவர்களைப்பார்த்து கருளிச் செய்கிறார்.

மூ.—நம்பிபிம்பியென்று நாட்டுமோனிடப்பேரிட்டால்
நம்பும்பிம்புமெல்லா நாலுநாளி லழுங்கிப்போம்
செம்பெருந்தாமரைக்கண்ணன் பேரிட்டழைத்தக்கால்
நம்பிகாணரணன்றம்மன்னை நரகம்புகாள். அ.

பதவுரை.

நம்பி பிம்பி என்று — 'நம்பி' என்றும் 'பிம்பி' என்றும்
நாடு— நாட்டிலுண்டான
மானிடர்— மநுஷ்யருடைய
பேர் இட்டால்— பெயரை இட்டால்
நம்பும் பிம்பும் எல்லாம்— 'நம்பி' 'பிம்பி' என்கிற பேருக்கடியான முதன்மை யெல்லாம்
நாலு நாளில்— நாலுபோதில்
அழுங்கி போம்— நசித்துப்போம்;
நம்பிகாள்— பூர்ணர்காள்!
செம்— சிவந்து
பெரு— பெருத்த
தாமரை— தாமரை மலர்போன்ற
கண்ணன்— திருக்கண்களையுடையவனுடைய
பேர் இட்டு — திருநாமத்தை இட்டு
அழைத்தக்கால்— அழைத்தால்
நாரணன் இத்யாதி.

வ்யா. நம்பிபிம்பியென்று நாட்டுமோனிடப்பேரிட்டால். பிம்பிக்கு ஒரு பொருளுண்டாகிலாய்த்து- நீங்கள் சொல்லுகிற நம்பிக்கும் ஒருபொருளுண்டாவது ! என்று சேஷபித்து, நம்பிக்கு எதிர்த்தட்டாக ஒருபிம்பியையருளிச்செய்கிறார். இப்படி சிலநாட்டிலுண்டானசூத்ரமநுஷ்யருடைய பேரையிட்டால். நம்பும் பிம்புமெல்லாம் நாலுநாளிலழுங்கிப்போம். 'நம்பி, பிம்பி' என்கிற பேருக்கடியான முதன்மையெல்லாம் நாலுபோதில் நசித்துப்போம். அதாவது கர்மநிபந்தநமாக வந்ததாகையாலே, "வாழ்ந்தார்கள் வாழ்ந்தேநிற்ப ரென்பதில்லை" என்கிறபடியே அழிந்துபோம். பின்னை யார்பக்கலிலே நாங்கள் ஜீவநம் பெற்று ஜீவிப்பதென்ன; செம்பெருமித்யாதி. சிவந்து பெருத்த தாமரைபோலே யிருக்கிற திருக்கண்களையுடையவனுடைய திருநாமத்தை யிட்டு அழைத்தக்கால். அதாவது திருநாமம் சொன்னவர்களுக்கு ஸகலஸம்பத்துக்களு முண்டாம்படி கடாக்ஷிக்கும் திருக்கண்களையுடையவன் திருநாமத்தை உங்கள் பிள்ளைக்கிட்டு ஆதரம் தோற்ற அழைத்தக்காலென்கை. நம்பிகாள்.*அறிவினல் குறைவில்லாத பூர்ணர்காள். நாரணன் தம்மன்னை நரகம்புகாள். ... அ.

மூ.—ஈத்தைக்குழியி லமுதம்பாய்வது போலுங்கள்
முத்திரப்பிள்கோயை யென்முகில்வண்ணன் பேரிட்டே

கோத்துக் குழைத்துக் குணலமாடித் திரிமினே
நாத்தகுநாரணன் றம்மனை நரகம்புகாள். கூ.

பதவுரை.

ஊத்தை குழியில்— அசுத்தமான குழியில்
அமுதம்— அம்ர்தமானது
பாய்வதுபோல்— பாய்ந்தாற்போலே
உங்கள்— உங்களுடைய
மூத்திரம் பிள்ளையை } — சுக்லசோணித பரிணமரூபனை பிள்ளைக்கு
என்— எனக்குக்கீழ்ப்படிந்தவனுய்
முகில்— மேகம்போன்ற
வண்ணன்— திருநிறத்தையுடையவனுடைய
பேர் இட்டு— பேரையிட்டு
கோத்து— ஸர்வேச்வரனுடொரு கோவையாகக்கூடி
குழைத்து— கலந்து [கோள்;
குணலம் ஆடி திரிமின்— களித்துத் திரியும்
பிள்ளைக்குத் திருநாமத்தை இட்டு,
அத்தைப்பலகாலும் சொல்லுகை,
நா— உங்கள் நாவுக்கு
தகும்— தகுந்திருக்கும்.
நாரணனித்யாதி.

வ்யா. ஒன்பதாம்பாட்டு. ஊத்தைக்குழியில் அமுதம் பாய்வதுபோல். அசுத்தமாய் யோக்யர்க்கு ஸ்பர்சிக்கைக்கு அர்ஹமல்லாதபடி யிருக்கும் ஊத்தைக்குழியிலே, பரிசுத்தமாய் யோக்யர்க்கு போக்யமாயிருக்கும் அம்ர்தமானது பாய்ந்தாற்போலே. உங்கள் மூத்திரப் பிள்ளையை, உங்களுடைய சுக்லசோணித பரிணமரூபனை பிள்ளையை. என்முகில்வண்ணன் பேரிட்டு. எனக்கு பல்யனும் காளமேக நிபச்யாமமான வடிவையுடையவனுனவனுடைய விலக்ஷணபோக்யமான திருநாமத்தையிட்டு. இத்தால் அத்திருநாமமிடுகிற விஷயத்தினுடைய வைபவமருளிச்செய்தாராய்த்து. ஊத்தைக்குழியிலே அம்ர்தம் பாய்ந்தால், தானும் அசுத்தமாய் யோக்யர்க்கு போக்யமாகாதபடியாய்ப்போம்; இங்கு அத்திருநாமம் $ஸ்பர்சவேதியாகையாலே, தன்க்கு ஒரு ஸ்பர்சதோஷமின்றிக்கே, தான் புக்கவிடத்தைப் பரிசுத்தமாக்கி, விலக்ஷணபரிக்ரஹ்யமாம்படி பண்ணும். இதில், த்ர்ஷ்டாந்தமான அம்ர்தத்திற்காட்டில் தார்ஷ்டாந்திகமான திருநாமத்துக்குள்ள வாசி. கோத்துக் குழைத்துக்குணலமாடித்திரிமினே. ஸர்வேச்வரனுடே ஒரு கோவையாகக் கூடிக் குணலியிட்டுத் திரியுங்கோள். அதாவது பிள்ளைபெற்றுத் திருநாமமிட்டபோதே நீங்கள் பகவத்பரிக்ரஹமாய்விடுகையாலே, அந்த ஸம்பந்த மடியாக அவனுடே கூடிக்கலந்து களித்துத்—திரியுங்கோளென்னை. நாத்தகும் பிள்ளைக்குத் திருநாமத்தையிட்டு அத்தைப் பலகாலும் சொல்லுகையாகிறவிது உங்கள் நாவுக்குச்சேரும். திருநாமஞ்சொல்லுகைக்கிறே நாக்கண்டது. அன்றிக்கே, "நாத்தகுநாரணன்" என்று மேலேகூட்டி (க) "ஸாஜிஹ்வாயா ஹரிம்ஸ்மரதி" என்கிறபடியே நாவுக்கு அநுரூபவிஷயம் நாராயணனென்னவுமாம். நாரணன் தம்மன்னை நரகம்புகாள். ... கூ.

நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம் சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—சீரணிமால் திருநாமமே யிடத்தேற்றிய
வீரணி தொல்புகழ் விட்டுசித்தன் விரித்த

$ ஸ்பர்சவேதி—சேரும்பொருள் தன்மையதாகை.
(க) "ஸாஜிஹ்வாயா ஹரிம்ஸ்மரதி."

ஓரணியொண்டமிழோன்பதோ டொனறும் வல்லவர்
பேரணி வைகுந்தத்தென்றும் பேணியிருப்பரே. ஔ.

பதவுரை.

சீர்— கல்யாண குணங்களை
அணி— ஆபரணமாகவுடையனும்
மால்— ஆச்ரித வ்யாமுக்தனுபவமுடைய
திரு நாமமே— திருநாமங்களையே
இடை— தந்தாம் பிள்ளைகளுக்கு இடும்படியாக
தேற்றிய — தெளிவித்த
வீரம்— இந்த்ரியங்களை வெல்லுகையாகிற
வீரப்பாட்டை
அணி— ஆபரணமாகவுடையராய்
தொல்— அநாதிஸித்தமான
புகழ்— கீர்த்தியையுடையரான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
விரித்த— விஸ்தரித்துச் சொன்னதாய்
(அப்யஸித்தவர்களுக்கு,)
ஓர்— ஒப்பற்ற
அணி— ஆபரணமாய்
ஒண்— தன் பொருளை விளக்குமதாய்
தமிழ்— தமிழ்பாஷையான
ஒன்பதோடு ஒன்றும்— பத்துப்பாட்டையும்
வல்லவர்— ஓதவல்லவர்
பேர்— பெரிய
அணி— அழகையுடைய
வைகுந்தத்து— ஸ்ரீவைகுண்டத்திலே
என்றும்— எப்போதும்
பேணி இருப்பர் — ஆதரத்தோடே வர்த்திக்கப் பெறுவர்கள்.

வ்யா. சீரணிமால். குணங்களை ஆபரணமாக வுடையனும் ஆச்ரித வ்யாமுக்தனுபவனுடைய. "சீரணி" என்றது - குணங்களினுடைய திரளையுடையவனென்றுமாம், அக்குணங்கள் புறம்பொரு வ்யக்தியில் கிடவாமையாலே, கல்யாணகுணங்களுக்கெல்லாம் ஆச்ரயமானவனென்னவுமாம். (க) "யாதஸ்ய நாஸ்தி மெளலெ ரூபா மணா தாரகோரஹாரு" என்னக்கடவதிறே. மால் - பெரியவன்; ஸர்வேச்வரனென்னவுமாம். திருநாமமேயிடத்தேற்றிய இதரநாமங்களை மாற்றி * நாணன்றன் நாமங்களை தாந்தாம் பெற்ற பிள்ளைகளுக்குச் சாத்தும்படியாகப் பலவேதுக்களாலும் தெளிவித்து. வீரணிதோல்புகழ் விட்டுசித்தன் விரித்த. ஜிதேந்த்ரியத்வமாகிற வீரப்பாட்டை ஆபரணமாக வுடையராய், ஸ்ரீகளைப்போலே அநாதிஸித்த மங்களாசாஸநப்புகழை யுடையரான பெரியாழ்வார் பரப்பின. ஓரணியித்யாதி. அப்யஸித்தார்க்கு அத்விதீயமான ஆபரணமாய், அர்த்தப்ரகாசகமாய், ஸர்வாதிகாரமான த்ராவிடரூபமாயிருந்துள்ள இப்பத்துப்பாட்டையும் ஸாபிப்ராயமாக வல்லவர்கள். பேரணி வைகுந்தத்து. பெரிய அழகையுடைய ஸ்ரீவைகுண்டத்திலே. அதாவது- பகவதநுபவ கைங்கர்யங்களுக்கு அநுரூபமாகையாலே மிகவும் விலக்ஷணமான தேசத்திலேயென்கை. என்றும் பேணியிருப்பரே. ஸர்வகாலமும் ஆதரத்தோடே வர்த்திக்கப்பெறுவர். அதவா, பேணுகையாவது- ஈச்வரனைப்பேணுகையாய், மங்களாசாஸநபரராய் வர்த்திக்கப் பெறுவரென்னவுமாம். ... ... ஔ.

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

அடிவரவு—காசு மங்கோரு வுச்சியில் மானிட மலமுடை நாடே
மண்ணில் நம்பி ஊத்தை சீரணி தங்கையை.
ஆதிருமொழி-நாடு-க்கு, பாட்டு-நாளை.

(க) "தாதுநாமிவ சைலேந்த்ரோ குணநாமாகரோ மஹாந்."

நான்காம்பத்து - ஏழாந்திருமொழி — தங்கையழுக்கும், ப்ரவேசம்.

அ. பகவத்வைமுக்யாதி சேதாஷமடியாகத்தம்மாலே நிஷ்டிதரான ஸம்ஸாரிசேதநரை யும் விடமாட்டாத தம்முடைய பரமக்ருபையாலே, அவர்களைத் திருத்தியாகிலும் உஜ்ஜீவிப் பிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, அவர்கள் திருந்துகைக் குறுப்பான ஹிதத்தை உபதேசித்தருளினர்- கீழிரண்டுதிருமொழியாலே; அது செய்து தலைக்கட்டின வநந்தரம், 'முன்பு திருமலை திருக்கோட்டியூரில் அநுபவித்தாற்போலே இன்னமும் அவன் உகந்தரு ளின நிலங்களிலே எழுந்தருளிநிற்கிற நிலையை அநுபவிக்கவேணும்" என்னுமாசைகிளர்ந்து "வடதிசை மதுரை சாளக்ராமம்" இத்யாதிப்படியே தனக்கு அபிமதமான தேசங் கள் பலவற்றிலுமுள்ள விருப்பத்தை எல்லாவற்றையும் ஒருமடைகொள்ளப் பண்ணி வர்த் திக்கிற ஸ்தலமாய், திருவுலகளந்தருளுகிறபோது தன்திருவடிகளில்பிறந்த ஏற்றத்தாலே (க)ஸகலலோகபாவநபூதையாய்க்கொண்டு ஸர்வகாலமும் ப்ரவஹியாநிற்கிற கங்கையினுடைய கரையிலேயுள்ளதான திருக்கண்டங்கடி நகரிலே அநேகாவதார குணசேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி எழுந்தருளி நிற்கிற புருஷோத்தம சப்தவாச்யனை ஸர்வேச்வரனை அநுப விப்பாநின்றுகொண்டு, அவனிலுங்காட்டில் அவன் வர்த்திக்கிற தேசமே ப்ராப்யத்தில் சர மாவதி யாகையாலே அத்தேசத்தினுடைய வைபவத்தையும் பஹுமுகமாகப்பேசியநுபவிக் கிறார் - இத்திருமொழியில். ... ... *

மூ.—தங்கையழுக்குந் தமையனைத்தலையுந் தடிந்தவென் தாசரதிபோய்
எங்குந்தன்புகழா லிருந்தசாண்ட வெம்புருடோத்தம னிருக்கை
கங்கைகங்கையென்ற வாசகத்தாலே கடுவினைகளைந்திட நிற்கும்
கங்கையின்கரைமேற் கைதொழுநின்ற கண்டமென்னுங் கடிநகரே. க.

பதவுரை.

தங்கை— ராவணன் தங்கையான சூர்ப்ப ணகையின்
மூக்கும்— மூக்கையும்
தமையன்- அவள்தமையனானராவணனுடைய
தலையும்— தலையையும்
தடிந்த— அறுத்துப் பொகட்ட
எம்— நம்முடைய
தாசரதி— சக்ரவர்த்தி திருமகன்
போய்— திருவயோத்தியை யிலெழுந்தருளி
எங்கும்— எல்லாவிடத்திலும்
தன் புகழா — தன்கீர்த்தியே யாம்படி
இருந்து — பதிநாயிரம் ஸம்வத்ஸர மிருந்து
அரசு ஆண்ட— ராஜ்யம் நிர்வஹித்தருளின
எம்— நம்முடைய
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
இருக்கை— வாஸஸ்தாநமாம்.
கங்கை கங்கை என்ற வாசகத்தாலே — (உலகத்தார் நீராடும் தீர்த்தங்களை கங்கை யாக ப்ரதிபத்திபண்ணி ஸ்நாநம் செய்வா ர்களேயானால்,) 'கங்கை, கங்கை' என் கிற சப்தத்தைச் சொல்லுமத்தாலே
கடுவினை— அவர்களுடைய க்ரூரமான பாபங்களை
களைந்திட நிற்கும்— கழிக்கவல்ல
கங்கையின் கரைமேல்— கங்காதீரத்தில்
கை தொழ நின்ற— ஆச்ரிதர் கைகூப்பித் தொழும்படிநின்ற
கண்டம் என்னும்— 'கண்டம்' என்கிற
கடி— சிறப்பையுடைத்தான
நகர்— நகரமானது;

(க) ஸகலலோகபாவநபூதையாய்.

வ்யா. முதற்பாட்டு. தங்கையை மூக்கும் தமையனைத் தலையுந்தடிந்த. தங்கையான சூர்ப்பணகையுடைய மூக்கையும், தமையனான ராவணனுடைய தலையையுமறுத்த. "வாளரக்கன் முடியும் தங்கை பொல்லாதமூக்கும் போக்குவித்தான் பொருந்துமலை" என்று திருமலையில் நிற்கிறநிலையில் கண்டநுபவித்த ராமாவதாரகுணத்தை, திருக்கண்டங்கடிநகரில் நிற்கிறநிலையிலும் கண்டநுபவிக்கிறார். (க) "கூமாதாலயஜகலோகா நாராயணாவேஹரிஃபிதா" என்று ஸர்வலோகத்துக்கும் மாதாவும் பிதாவுமாய்க்கொண்டிருக்கும் மிதுநத்தை முறையிலே விரும்பாமல் முறைகெட விரும்புவார் பெறும்பேறு இது என்னுமிடம் தோற்றவிறே *தங்கையை மூக்கும் தமையனைத் தலையும் தடிந்தது. அதாவது- முக்யவிசேஷணபூதையான பிராட்டியை உபேக்ஷித்து, விசேஷ்யபூதரான பெருமாளை விரும்பின சூர்ப்பணகைக்கு முக்யாங்கஹாநியே பலமாய்த்து; அவளுக்கு விசேஷ்யபூதராய்க்கொண்டு ஸர்வர்க்கும் ப்ராணனுயிருக்கிற பெருமாளை உபேக்ஷித்து, விசேஷணபூதையான பிராட்டியை, விபரீத (உ)புத்யாவிரும்பின ராவணனுக்குப்ராணஹாநியே பலமாய்விட்டதென்கை. இவ்வர்த்தத்தை ப்ரகாசிப்பிக்கைக்காகவாய்த்து- இவர் பலவிடங்களிலுமருளிச்செய்தது. எம்தாசரதி. "எம்" என்று ஆச்ரிதரெல்லாரையுங் கூட்டிக்கொண்டு அருளிச்செய்கிறார். இவ்வர்த்தத்தை வெளியிட்டருளினது ஆச்ரிதரெல்லார்க்கு மொக்குமிறே. "தாசரதி" என்றது ராவணவதாநந்தரம் ப்ரஹ்மாதி தேவர்கள் வந்து (ங) "ஜயாஜாராயணாவேஃ" என்றது அஸஹ்யபமய், (ச) "சூத்தாநம்போதஷம்பிதஃ ராம்ஜராயாதஜி" என்று நின்றநீர்மையை ப்ரகாசிப்பிக்கைக்காக. போயெங்கும் தன்புகழா விருந்தசார்ண்ட. ராவணவதாநந்தரம் லங்கையில்நின்றும்மீண்டு திருவயோத்தையிலே எழுந்தருளித்திருவபிஷேகம்பண்ணியருளி (ஞ) "ராஜோராஜோராஜஉதி வ்ருஜா நாஜவவுகயஃ । ராஜஸ்ய தம்ஜமஹஸ்ய ஊராஜோராஜ்ஞ் ஜ்ருஜாஜதி" என்கிறபடியே நாடடங்கத் தன்னுடைய குணங்களிலே வாய்புலத்தி ராமாத்வைதமாம்படி பண்ணுகையாலே எல்லாவிடத்திலும் தன்னுடைய கீர்த்தியேயாம்படி பதினாராயிரம் ஸம்வத்ஸரமிருந்து ராஜ்யம்பண்ணியருளின. எம்புருடோத்தமனிருக்கை. "எம்" என்று ஆச்ரிதரெல்லாரையும் கூட்டிக்கொண்டருளிச்செய்கிறார். "புருடோத்தமன்" என்றது ஸர்வஸ்மாத்பரனென்றபடி. (ட)" யஸ்மாத்க்ஷராதீதோஹ மக்ஷராதபிசோத்தமஃ । அதோஸ்மிலோகேவேதேச ப்ரதிதஃ புருஷோத்தமஃ" என்றருளிச்செய்தானிறே தானே. தாசரதியான புருஷோத்தமனென்கையாலே மநுஷ்யத்வபரத்வம் சொல்லுகிறது. "இருக்கை" என்றது- வாஸஸ்த்தலமென்றபடி.

கங்கையித்யாதி. ஏதேனுமோரிடத்திலே ஸ்நாநம்பண்ணுமவர்கள் அவகாஹிக்கிற ஜலத்தை கங்கையாகநினைத்து, "கங்கை கங்கை" என்கிற சப்தத்தைச்சொல்ல, இந்த வாசகத்தாலே, அவர்களுடைய *அவச்யமநுபோக்தவ்யமான பாபத்தைப்போக்கவல்ல. கங்கையின்கரைமேல் கைதொழுநின்ற. இப்படியிருந்துள்ள கங்கையினுடைய கரையிலே விசேஷ்ஞரெல்லாரும் கையெடுத்துத் தொழும்படியாய்நின்ற. கண்டமென்னும் கடிங்கே. கண்

(க) "த்வம்மாதா ஸர்வலோகாநாம் தேவதேவோ ஹரிஃபிதா." (உ) வைபரீத்ய. (ங) "பவாந்நாராயணோதவ:." (ச) "ஆத்மாநம் மாநுஷம்மந்யே ராமம் தசரதாத்மஜம்." (ஞ) "ராமோ ராமோ ராமஇதி ப்ரஜாநாமபவந்கதாஃ - நீமபூதம் ஜகதபூத்ராமே ராஜ்யம் ப்ரசாஸதி." (ட) "யஸ்மாத்க்ஷர மதீதோஹ மக்ஷராதபிசோத்தமஃ - அதோஸ்மி லோகே வேதேச ப்ரதிதஃ புருஷோத்தமஃ."

டமென்கிற சிறப்பைப்புனைத்தான நகரம். கடி - சிறப்பு. இத்தால் - ப்ராப்யபூதனை புரு ஷோத்தமனிலுங்காட்டில் அவன் வர்த்திக்கிற தேசமே சரமாவதியாகையாலே, அத்தேசத் தை வர்ணித்துக்கொண்டநுபவிக்கிறார். ... ... க.

மூ.—சலம்பொதியுடம்பிற் றழலுமிழ்பேழ்வாய்ச் சந்திரன்வெங்கதிரஞ்ச
மலர்ந்தெழுந்தணவு மணிவண்ணவுருவின் மால் புருடோத்தமன்வாழ்வு
நலந்திகழ்சடையான் முடிக்கொன்றைமலரு நாரணன்பாதத்துழாயுங்
கலந்திழிபுனலாற் புகர்படுகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. உ.

பதவுரை.

சலம் திகழ் - கங்கையை முடியில் தரிப் பதால் வந்த நன்மை விளங்குகிற
சடையான்— ஜடையை தரியாநின்றுள்ள ருத்ரன்
முடி— சிரஸ்ஸில் அணிந்த
கொன்றை மலரும்— (சிவந்தநிறமுடைய) கொன்றைப் பூவோடும்
நாரணன் — அவனுக்கு சேஷியான நாரா யணனுடைய
பாதம்— திருவடிகளில் பூணைந்த
துழாயும்— (பசுமை நிறமுடைய) திருத் துழாயோடும்
கலந்து— கலந்து
இழி— ஆகாசத்தில் நின்றும் கீழ்இழியா நின்றுள்ள
புனலால்— ஜலத்தாலே
புகர் படு— ஒளிவிடாநின்றுள்ள
கங்கை— கங்கைக்கரையிலுள்ள
கண்ட மென்னும் கடிநகர்—;
சலம்— ஜலத்தை
பொதி— பொதிந்து கொண்டிருக்கிற
உடம்பின்— வடிவையுடைய
சந்திரன்— சந்தரனும்
தழல்— நெருப்பை
உமிழ்— உமிழாநின்றுள்ள
பேழ்— பெரிய
வாய்— கிரணங்களையுடையனும்
வெம்— வெப்பத்தை இயல்வாகவுடைய
கதிர்— ஸூர்யனும்
அஞ்ச— அஞ்சும்படியாக
மலர்ந்து— பரம்பிக்கொண்டு
எழுந்து— கிளர்ந்து
அணவு— அவர்களிருப்பிடத்தைச் சென்று கிட்டின
மணி— நீலரத்நம்போன்ற
வண்ணம்— நிறத்தையுடைய
உருவின்— வடிவையுடையனும்
மால்— வ்யாமுக்தனை
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
வாழ்வு— ப்ராப்யதேசமாம்.

வ்யா. இரண்டாம்பாட்டு. கலமித்யாதி. அம்தகிரணஞ்கையாலே ஜலத்தைப் பொதிந்துகொண்டிருக்கிற வடிவையுடைய சந்த்ரனும், உஷ்ண கிரணஞ்கையாலே அக்நிய உமிழாநின்ற பெரிய கிரணங்களையுடையனும் வெம்மையே ஸ்வபாவமாகவுடைய ஆதித்ய னும், திருவுல களந்தருளுகிறபோது அதர்ஷ்டபூர்வமாய் அநேக புஜாயுதமாய் அதிசிக்ர மாக வளருகிறபடியைக் கண்டு " என்ஞகிறதோ ! " என்று அஞ்சும்படியாக. மலர்ந்தெ ழுந்தணவு மணிவண்ண வுருவின். " எண்டிசையும் போற்றகர நான்குடையான் " என்கிற படியே - அதிஸ்த்தமாய்க்கொண்டு கிளர்ந்து அவர்களிருப்பிடங்களைச் சென்று கிட்டின நீலரத்நத்தின் நிறத்தையுடைத்தான வடிவையுடையவனும். மால். " ஒண் மிதியில் புன அருவி ஒருகால்நிற்ப " என்கிறபடியே - கீழ்மிதித்த திருவடிகளாலே பூமிமுதலாகக் கீழ்

ள்ள லோகங்களெல்லாவற்றையும், [ஒருகாலுமித்யாதி.]அப்படி மேலெடுத்ததிருவடியாலே ஊர்த்வலோகங்க ளெல்லாவற்றையும் பெறுப்பேறு பெற்றுப்போலே பதறி யளந்துகொண்ட வ்யாமோஹத்தை யுடையனை. புருடோத்தமன்வாழ்வு. இந்த வ்ருத்தாந்தத்தாலே- எல்லா ருடைய அந்யசேஷத்வ ஸ்வஸ்வாதந்த்ர்யங்களைப் போக்கி எல்லாஜகத்துக்கும் தானே சேஷி யென்னுமிடம் தோற்ற நின்ற ஸர்வாதிகனை புருஷோத்தமனுக்கு ப்ராப்யமானதேசம்.

நலந்திகழ்சடையான் முடிக்கோன்றைமலரும். (க) "வாவநாயும் ஜடாதியெ பொதெஹ்ரீ கதியார்ஸாகெ" என்கிறபடியே திருவடி விளக்கின தீர்த்தத்தை தரித் நுக்கொண்டிருக்கிற நன்மை விளங்காநின்ற ஜடையையுடைய ருத்ரனுடைய சிரஸ்ஸில் கொ ன்றைப்பூவும். நாரணன்பாதத்துழாயும். அவனுக்கு சேஷியும் சரீரியுமான நாராயண னுடைய திருவடிகளில் திருத்துழாயும். கலந்திழி புனலால். சிவந்த நிறத்தையும் பசுத்தநிற த்தையு முடைத்தான அவை யிரண்டோடும் கலந்து ஆகாசத்தில் நின்றும் பூமியிலே யிழி ந்து ப்ரவஹிக்கிற ஜலத்தாலே. புகர்படுகங்கை. ஒளியையுண்டத்தா யிருந்துள்ள கங்கையி னுடைய கரையில். கண்டமென்னுங்கடிநகரே. "கண்டம்" என்று - தேசத்துக்குத் திரு நாமம். கடி - பெருமை. நகரென்கிறது - புருஷோத்தமனும் தானுமிருக்கிறதேச மாகையாலே. "அரங்கமாநகர்" என்னுமாபோலே. ... ... உ.

மூ—அதிர்முகமுடைய வலம்புரிகுமிழ்த் தழலுமிழாழி கொண்டெறிந்தங்
கெதிர்முகவசுரர் தலைகளோயிடறு மெம்புருடோத்தம னிருக்கை
3ஏ3 சதுமுகன்கையிற் சதுப்புயன்முளிற் சங்கரன்சடையினிற் றங்கிக்
கதிர்முகமணிகொண் டிழிபுனற்கங்கைக் கண்டமென்னுங் கடிநகரே. கூ.

பதவுரை.

(திருவடி விளக்குகிறபோது,)

சதுமுகன்— ப்ரஹ்மாவினுடைய
கையில்— கையிலும்
சதுப்புயன்— சதுர்ப்புஜனை த்ரிவிக்ரம (வாமன) னுடைய
தாளில்— திருவடிகளிலும்

(பின்பு,)

சங்கரன்— ருத்ரனுடைய
சடையினில்— ஜடையிலும்
தங்கி— தங்கி
கதிர்— ஒளியையுடைத்தா
முகம்— சிற்றிருந்துள்ள
மணி— ரத்நங்களை
கொண்டு— கொழித்த
இழி— இழிகிற
புனல்— ஜலத்தையுடைய,
கங்கை— கங்கையின் கரையிலுள்ள
கண்டம் என்னும் கடிநகர்—;
அதிர்— த்வநியா நின்ற
முகம் உடைய— முகத்தை யுடைய
வலம் புரி— ஸ்ரீபாஞ்சஜந்யத்தை
குமிழ்த்து— திருப்பவளத்தில் வைத்து ஊதியும்
அழல்— நெருப்பை
உமிழ்— உமிழாநின்றுள்ள
ஆழி கொண்டு— திருவாழியைக்கொண்டு
எறிந்து— எறிந்தும்
அங்கு— அவ்விடத்திலே
எதிர்— பொருவதாக எதிர்த்த
முகம்— முகத்தையுடையரான
அசுரர்— அஸுரர்களுடைய
தலைகளை— தலைகளை

(க) "பாவநார்த்தம் ஜடாமதயே யோகயோஸ்மீதியவதாரணத."

இடறும்— உருட்டினவனுப்
எம்— நம்முடைய

புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
இருக்கை— வாஸஸ்தானமாம்.

வ்யா. மூன்றும்பாட்டு. அதிர்முகமுடைய. திருவுலகளந்தருளுகிறபோது கழுசி ப்ரப்ருதிகளான அஸுரர்கள் ப்ரதிபந்திக்கையாலே கறுத்பாகின்றுள்ள முகத்தை யுடைத் தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்திலே வைத்தாதி, செருப்பை உமிழாநின்றுள்ள திருவாழியைக் கொண்டெறிந்து, அவ்விடத்திலே யுத்தோத்யுக்தராய்க்கொண்டு எதிர்ந்த முகத்தையுடையரான அஸுரர்களுடைய தலைகளை யுருட்டினவனுப், ஆச்ரிதரான நமக்கு ப்ராப்யபூதனான புருஷோத்தமனுடைய வாஸஸ்தானம்.

சதுமுகனித்யாதி. (க) "ஸ்ருஹீக்ஷா யஜுவாதீபம் வாஜ்ஞாயஸ்ய தம்வதியா ஷாவிகம் வராயாஹத்ரா வாஜ்ரிவ்ருஹிணி ரவிதுத்ர." என்கிறபடியே திருவடிகள் விளக்குகிறபோது, அது சதுர்முகனை ப்ரஹ்மாவின் கையிலுட, அந்தரம் விளக்கப்பட் டது சதுர்ப்புஜனான ஸர்வேச்வரன் திருவடிகளிலுட், அந்தரம் (உ) "தஜ்ஞவ்வதிதம ஜூஷ்ட தயாஸுரிராஹ ஹராஃ" என்கிறபடியே திருவடிகளினின்றும் விழுகிற வித்தை சிரஸ்ஸாலே தரித்த ருத்ரனுடைய ஜடையிலுட் தட்டி. கதிரித்பாதி. ஒளியையுடைத்தாய் ச்ரேஷ்டமாயிருக்கிற ரத்நங்களைக் கொழித்துக்கொண்டு இழிகிற புனலையுடைத்தான கங் கையினுடைய கரையிலே. கண்டமென்னுங்கடிநகரே. ... ... ங.

மூ—இமையவரிறுமாந் திருந்தசாள வேற்றுவந்தெதிர்பொருசேனை
நமபுரணுக நாந்தகம் விசிறு நம்புருடோத்தம னகர்தான்
394 இமவந்தந்தொடக்கி யிருங்கடலளவு மிருகரை யுலகிரைத்தாடக்
கமையுடைப் பெருமைக் கங்கையின் கரைமேற் கண்டமென்னுங்கடிநகரே.

பதவுரை.

இமவந்தம் தொடங்கி— ஹிமவானுடைய உச்சிமுதல்
இரு— பெரிய
கடல் அளவும்— கடல்வரைக்கு முள்ள
உலகு— உலகத்திலுள்ளவர்
இரு கரை— இரண்டு கரையிலும்
இரைத்து— ஆரவாரித்துக்கொண்டு
ஓட— நீரோட
கமை உடை— அவரவர்கள் பாபங்களைப் பொறுக்கும் பொறையுடைமையால்வந்த பெருமை— பெருமையையுடைத்தான கங்கையின்கரைமேல் கண்டம் என்னும் கடிநகர்;
இமையவர்— இந்த்ரன்முதலிய தேவர்கள்
இறுமாந்து இருந்து— செருக்கியிருந்து
அரசு ஆள— ராஜ்யம் நிர்வஹிக்கும்படியாக
எற்றுவந்து— என்றுசொண்டுவந்து (அவர்கள்மேலும், அவர்களுக்கு ரக்ஷகனன் தன்மேலும்,)
எதிர் பொரு— எதிர்ந்து பொருகிற
சேனை— ஸைந்யமானது

(க) "க்ருஹீத்வாதர்மபாநியம் பாதம் நாதஸ்ய ஜுஷ்டயே-ஜ்ஞாளிதம் ப்ரயாபக்தீர பாத்யார்க்யாதிபி ரர்ச்சிதம்." (உ) "ததம்புபதிதம் தாஷ்டுவா தஜாரசிரஸா ஹரஃ."

நமபுரம்— யமபுரத்தை
நலுக— கிட்டும்படியாக
நாந்தகம்— நந்தகவாளை
விசிறு— வீசாநின்றுள்ள
நம்— நம்முடைய
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
நகர்— வாஸஸ்தாநமாம்.

வ்யா. நான்காம்பாட்டு. இமையவ ரிறுமாந்திருந்தரசாள. இந்த்ராதி தேவர்கள் ப்ரதிபக்ஷபயமற்று மாலையிட்டு மார்வந்தாளும் பார்த்து கர்வோத்தராயிருந்த ராஜ்யம் பண்ணுப்படியாக. ஏற்றுவந்தித்யாதி. அவர்கள் ஜீவிக்கிறதுகண்டு பொறுக்கமாட்டாமல் அழியச் செய்வதாக ஏல்றுகொண்டுவந்து, அவர்கள் மேலும் அவர்களுக்கு ரக்ஷகனான தன் மேலும் எதிர்ந்து பொருகிற அஸுராராக்ஷஸ ஸேனையானது. நமபுரம்நலுக நாந்தகம் விசி றும். யமபுரத்தை ப்ராபிக்கும்படியாக ஸ்ரீநந்தகமென்கிற திருநாமத்தை யுடைத்தான * கொற்ற வொள்வாளோவீசும். நம்புருடோத்தமன் நகர்தான். இப்படி ஆச்ரிதரக்ஷணம் பண் ணும்ஸ்வபாவனான நம்முடைய புருஷோத்தமனுடைய நகர்தான்.

இமவந்தமித்யாதி. ஹிமவானுடைய உச்சிதொடங்கி பெரிய கடலளவும், இரண்டு கரையிலுள்ள லோகத்தாரும் ஆரவாரித்துக்கொண்டு தீர்த்தமாட. கமையுடைப் பெருமைக் கங்கையின் கரைமேல். க்ஷமாவத்தையால் வந்த பெருமையையுடைத்தான கங்காதீரத்தில். அதாவது- ஸ்வர்லோகரும் பாபக்ஷயார்த்தமாக வந்து தன்னுடைய ஜலத்திலே அவகாஹித் தால் அவையெல்லாவற்றையும் பொறுத்து அவர்களைப் பரிசுத்தராக்கிவிடும் பெருமையைச் சொல்லுகிறது. கண்டமென்னும் கடிநகரே. ... ...

மூ.—உழுவதோர்படையு முலக்கையும்வில்லு மொண்சுடராழியுஞ் சங்கும்
மழுவோடுவாளும் படைக்கலமுடைய மால்புருடோத்தமன் வாழ்வு
395 எழுமையுங்கூடி யீண்டியபாவ மீறைப்பொழு தளவினிலெல்லாங்
கழுவிடும்பெருமைக் கங்கையின் கரைமேற்கண்டமென்னும் கடிநகரே. (இ.

பதவுரை

எழுமையும்— எழுஜந்மங்களிலும்
கூடி— கூடி
ஈண்டிய— திரண்ட
பாவம் எல்லாம்— பாவங்களையெல்லாம்
இறைப்பொழுதளவினில்-க்ஷணகாலத்திலே
கழுவிடும்— கழுவிவிடாநிற்கிற
பெருமை—பெருமையையுடைய [நகர்—]
கங்கையின்கரைமேல் கண்டம் என்னுங்கடி
உழுவது ஓர் படையும்— கலப்பையையும்
உலக்கையும்— உலக்கையையும்
வில்லும்— ஸ்ரீசார்ங்கத்தையும்
ஒண்— அழகிய
சுடர்— தேஜஸ்ஸை உடைத்தான
ஆழியும்— திருவாழியையும்
சங்கும்— ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
மழுவொடுவாளும்—கோடரியையும் ஸ்ரீநந்
தகவாளையும்
படைக்கலம் உடைய—ஆயுதமாகவுடையனாய்
மால்—ஸர்வேச்வரனான
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
வாழ்வு— வாஸஸ்தாநமாம்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. உழுவதோர்படையும். கலப்பையும். உலக்கையும். மூஸலும். வில்லும். ஸ்ரீசார்ங்கமும். ஒண்சுடராழியும். அழகிய தேஜஸ்ஸையுடைத்தான திருவாழி யும். சங்கும். ஸ்ரீபாஞ்சஜந்யமும். மழுவொடுவாளும். பாதவும், நந்தகமும். படைக்க

முடைய. இவற்றை ஆயுதமாகவுடைய. மால்புருடோத்தமன் வாழ்வு. ஆச்சரிதவிரோதிநிர ஸநஸாதநங்களான இவற்றையுடையனன தாமின தனக்குப் பெருமையாயிருக்கும் புரு ஷோத்தமனுக்கு ப்ராப்யமான ஸ்த்தலம்.

எழுமையுங்கூடி யீண்டியபாவம்-எல்லாம். அநேகஜந்மங்கூடித்திரண்ட பாபங்களெல் லாவற்றையும். இறைப்பொழுதளவினில் கழுவிடும்பெருமைக் கங்கையின் கரைமேல். தன் னுடைய ஜலத்திலே அவகாஹித்தவர்களுக்கு க்ஷணகாலமாத்ரத்திலே கழுவி விடாநிற்கும் பெ ருமையையுடைத்தான கங்கையினுடைய கரையின்மேல். கண்டமென்னும் கடிநகரே. ... நி.

மூ.—தலைப்பெய்துகுமுறிச் சலம்போதிமேகஞ் சலசலபொழிந்திடக் கண்டு
மலைப்பெருங் குடையான் மறைத்தவன் மதுரைமால்புருடோத்தமன்வாழ்வு
அலைப்புடைத்திரைவா யருந்தவமுனிவ ரவபிரதங்குடைந்தாடக்
கல்பைகள் கொழிக்குங் கங்கையின்கரைமேற் கண்டமென்னுங் கடிநகரே. சூ

396

பதவுரை.

அலைப்பு உடை— கரையெறியா நின்றுள்ள
திரைவாய்— அலையினிடத்திலே
அரு— அரிய
தவம்— தபஸ்ஸுக்களை யுடையனுய்
முனிவர்— மநநசீலராயிருக்குமவர்கள்
அவபிரதம் குடைந்துஆட }—அவப்ருதஸ்நாநம்பண்ண
(அத்தாலே,)
கலப்பைகள்— யாகபூமியிலுள்ள கலப்பை முதலிய கருவிகளையெல்லாம்
கொழிக்கும்- தள்ளிக்கொண்டுபோகாநிற்கிற
கங்கையின் கரைமேல் கண்டம்
என்னும் கடிநகர்-;
சலம்— கடல்நீரை
பொதி— பொதிந்துகொண்டிராநின்ற
மேகம்— மேகங்களானவை [கிட்டி
தலைப்பெய்து- (திருவாய்ப்பாடியிலே)வந்து
குமுறி— இடித்து முழக்கி
சல சல— சளசளவென்று
பொழிந்திட— வர்ஷிக்க
கண்டு— கண்டு
மலை— கோவர்த்தநகிரியாகிற
பெரு— பெரிய
குடையால்— குடைபோலே
மறைத்தவன்—ஒருவன்மேல் ஒருதுளிவிழா தபடி மறைத்தவனுய்
மதுரை— ஸ்ரீமதுரையில்
மால்— வ்யாமுக்தனன
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
வாழ்வு— வாஸஸ்தாநமாம்.

வயா. ஆறும்பாட்டு. தலைப்பெய்நிக்யாநி. சலம்போதிமேகம்-தலைப்பெய்து குமுறி. இந்த்ரன் ஏவற்படியே ஸமுத்ரம் தரையாம்படி ஜலத்தையெல்லாம் தனபக்கலிலே பொதிந்து கொண்ட மேகங்களானவை திருவாய்ப்பாடியிலே வந்து கிட்டி, கேட்டவர்கள் குடல் குழம் பும்படி யிடித்து முழக்கி. தலைப்பெய்கை - கிட்டுகை. சலசலபோழிந்திட. சலசலவென், குடமிட்டுச் சொரிந்தாற்போலே வர்ஷிக்க. சலசலவென்கிறது - அநுகாரத்வநி. கண்டு. மேகங்களினுடைய பகைப்பையும், திருவாய்ப்பாடியிலுள்ளார் எளிமையையுங்கண்டு. மலைப் பெருங்குடையால் மறைத்தவன். மலையாகிற பெரிய குடையாலே, ஒருதுளி ஒருகல் ஒரு இடி என்கிற விவை ஒருவர்மேலேவிழாதபடி மறைத்தவன். மதுரைமால். விரோதியான கம்ஸனை யழியச்செய்து மாதாபிதாக்களைச்சிறையைவிடித்து உக்ரஸேநனை அபிஷேகம்பண் ணி அங்குவர்த்தமாநரானவர்களெல்லாரையும்வாழ்வித்து நோக்கிக்கொண்டு போரும்படி இரு

வவதரித்தீதசமான பூரீபதுரையில் வ்யாமோஹத்தையுடையவன். புருடோத்தமன் வாழ்வு. இப்படி தான்வளர்ந்தஇடத்தீதாடி பிறந்தவிடத்தீதாடி வாசிபற இரண்டிடத்திலுள்ளாரையும் ரக்ஷித்தருளின னறறத்தையுடையனை புருஷோத்தமனுக்கு நிரதிசயபோக்யமான தேசம்.

அலைப்புடைத்திரைவாய். அலைகிற நிரையிடத்திலே. அருந்தவமுனிவர். அரியதபஸ் ஸுக்களையுடையராய் பகவன்மகாரிலராயிருக்குமவர்கள். அவிர்தம் குடைந்தாட. பகவத்ஸ மர்பிதகர்மரூபங்களான யாகங்களை அவிகலமாக அநுஷ்டித்து, அதினுடைய சமாதிவஸத்திலே புவர்க்கலாகத்திலேபய. கலப்பைகள் கோழிக்கும். அகந்தரம் பெருக்காறாய் யாகபூமியிலு ள்ளான கலம்பை முதலான உபகரணங்களெல்லாவற்றையும் வடித்துத் தள்ளிக்கொண்டு போகிறபடி. கம்பகையின் கரைமேல் கண்டமென்னும் கடிநகரே. ... ...கூ.

மூ.—விற்பிடித்திறுத்து வேழத்தைமுறுக்கி மேலிருந்தவன்றலைசாடி
மற்டோருதெழுப்பாய்ந் தரையனையுதைத்த மால்புருடோத்தமன் வாழ்வு
397 அற்புதமுடைய வைராவதமதமும் மவரிளம்படிய சோண்சாந்தும்
கற்பகமலருங் கலந்திழிகங்கைக் கண்டமென்னும் கடிநகரே. எ.

பதவுரை.

அற்புதம் உடைய— யாவருமாச்சர்யப்படத் தக்க
ஐராவதம்—'ஐராவதம்' என்னும் யானையின்
மதமும்— மதநீரும்
அவர்—ஸ்வர்க்கவாஸிகளான தேவர்களாலே ஆசைப்படத்தக்கவர்களாய்
இள படியர்—அந்தப்பதமுள்ளவளவும் யௌவனப்பருவம் குலையாத தேவஸ்த்ரீகள் அணிந்த
ஓண்— சிறந்த
சாந்தும்— சந்தனமும்
கற்பகம் மலரும்—அவர்கள் குழலில் சொருகின கல்பகப்பூக்களும்
கலந்து—சேர்ந்து
இழி— இழியாநின்றுள்ள
கங்கை— கங்கையின்கரையில்
கண்டமென்னும் கடிநகர்—;
வில் பிடித்து— வில்லைப்பிடித்து
இறுத்து— முறித்தும்
வேழத்தை முறுக்கி } குவலயாபீட களிற்றின் கொம்பை முறித்தும்
மேல் இருந்தவன்—யானைப்பாகனுடைய
தலை— தலையை
சாடி— அந்தக்கொம்பாலே சிதற அடித்தும்
மல் பொருது — சாணூர முஷ்டிகர்களாகிற மல்லருடல்கள் நெரியும்படி போர்செய்தும்
அரையனை— (உயர்ந்தகட்டிலிலிருந்த) ராஜாவான கம்ஸனை
(மயிரைப்பிடித்திழுத்துக் கீழேதள்ளி,)
எழப்பாய்ந்து— அவன்மேலேகுதித்து
உதைத்த— திருவடிகளாலே உதைத்தும்
(இவற்றால் வந்த)
மால்— பெருமையுடையனை
புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு
வாழ்வு— அபிமதமான தேசம்.

வ்யா. வ்ழாம்பாட்டு, விற்பிடித்திறுத்து. கம்ஸன் "வில்விழவுக்கு" என்று உறவிலே அழைத்துவிட, தானும் அதுக்கென்னப்போகிறானாய் மதுரையிலேசென்று அவனுடைய ஆயுதசாலையிலே புக்கு அவனுக்கு அபிமதமான வில்லைப்பிடித்து முறித்து. வேழத்தைமுறுக்கி. அநந்தரம் "புகுவாய்நின்ற போதகம்" என்கிறபடியே- அவனுடைய க்ரஹத்வாரத்

திலே நின்று தன்மேலே படர்ந்துவந்த மத்தகஜமான குவலயாபீடத்தை சீர்ங்கபங்கம் பண்ணி. மேலிருந்துவன்தலைசாடி. கொப்புழுறிந்து தளர்ந்து விழுந்ததை சிஷ்டபலத்தா லே எழுப்பி அதின்மேலேயிருந்து நடத்திக்கொடுவந்த பாகனுடைய தலையை அந்த ஆனைக் கொம்பாலே சிதறவடித்து. மற்பொருது. ஆனையின் கொம்பையும் கையிலே கொண்டு உள் ளே புகுந்தவளவிலே அந்த செருக்குப் பொறுமல் வந்தெதிர்ந்த சாணூரமுஷ்டிகரான மல்ல ருடல்கள் நெரிந்துவிழும்படியாக அவர்களோடே பொருது. எழுப்பாய்ந்தரையனை யுதைத்த. அநந்தரம், கம்ஸனிருக்கிற மஞ்சத்தின் முற்றவெளியிலேசென்று (க) 'தஂஜ்ஜிதுவ)வஷ்டி கஂ' என்கிறபடியே உயர்ந்தமஞ்சத்திலே யிருக்கிறவனைக்கண்டு· அவனிருக்கிறவிடத்திலே இள ரக்குதித்து, ராஜாவாய்க்கொண்டு அபிஷேகமும் தானுமாயிருக்கிறவனை, (உ)"ஂஸ்ரொஷ்ட கூஷ்ட)விமஉ த்ஷீ டிஉவ நீ கமு । வஸ்கு)ஹாவாகபாரோஷ கிலை)" வரிவவாகஉ ' என்கிறபடியே அபிஷேகத்தைத்தட்டிப் பொகட்டு மயிரைப்பிடித்திழுத்து மஞ்சத்துக்குக் கீழேதள்ளி அவன்மேலே குதித்துத் திருவடிகளாலேஉதைத்த. மால்பருடோத்தமன்வாழ்வு. இப்படி ஆஸுரப்ரக்ருதியான கம்ஸனை நிரஸித்த பெருமையையுடையனை புருஷோத்தமனு க்கு அபிமதமான தேசம்.

அற்புதமுடைய ஐராவதமதமும். ஆச்சர்யமான ரூபசேஷ்டிதாதிகளையுடைய ஐராவ தத்தினுடைய மதஜலமும். அவரிளம்படியரோண்சாந்தும். ஸ்வர்க்கவாஸிகளான தேவர்க ளுக்கு அபிமதைகளாய், அந்தப்பதமுள்ளவளவும் யௌவநம் குலையாத வடிவையுடைய ரான தேவஸ்த்ரீகள் தங்களுக்கு அலங்காரமாகவணிந்த சாந்தும். கற்பகமலரும். அவர்கள் குழலில் சொருகின கற்புகப் பூக்களும். கலந்திழிகங்கை. இவற்றை யெல்லாம் சேர்த்துக் கொண்டு இழியாநிற்கிற கங்கையினுடைய கரைமேல். கண்டமென்னும் கடிநகரே. ... எ.

மூ.—திரைபொருகடல்சூழ் திண்மதிட்டுவரைவேந்து தன்மைத்துனன்மார்க்காய்
அரசினையவிய வரசினையருளு மரிபுருடோத்தமனமர்வு
நிரைநிரையாக மெடியனையூப நிரந்தரமொழுக்குவிட்டிரண்டு
கரைபுரைவேள்விப் புகைகமழ்கங்ஙைக் கண்டமென்னும் கடிநகரே. அ.

பதவுரை.

நிரை நிரை ஆக—ஒழுங்காய்
நெடியன—நெடியவையாயிருந்துள்ள
(பசுக்கள் கட்டப்படுகிற)
யூபம்—யூபஸ்தம்பங்களானவை
நிரந்தரம்—இடைவிடாமல்
ஒழுக்குவிட்டு—நெடுகச்சென்றிருப்பதாய்
வேள்வி புகை—யாகதூமமான து
இரண்டுகரைபுரை—இரண்டு கரையு மொத்து
கமழ்—கந்தியாநின்றுள்ள
கங்கை—கங்கைக்கரையில்
கண்டமென்னுங் கடிநகர்—;
திரைபொரு—அலையெறியாநின்றுள்ள
கடல்—கடலாலே
சூழ்—சூழப்பட்ட
திண்—திண்ணிதான
மதிள்—மதிளையுடைத்தாயிருக்கிற
துவரை—த்வாரகைக்கு
வேந்து—அரசனான கண்ணன்

(க) "தங்கமஞ்சவ்யவஸ்தித:" (உ) "கேசிசஷ்வாக்ஷ்யவிகளத்திரீடமவதீ தலே, ஸகம்ஸம்பாதயாமாஸ தஸ்யோபரிபபாத ச."

தன் — தன்னுடைய
தன்மைத்துனன்மார்க்கு – தன்மைத்துனன்மாரான பாண்டவர்களுக்கு
நின்ற— பக்ஷபாதியாய் நின்று
அரசனை– துர்யோதனன்முதலான அரசர்களை
அழிய— அழித்து
அரசினை— ராஜ்யத்தை
அருளும் – பாண்டவர்களுக்குக்கொடுத்தரு [ளுமவனுய்
அரி— பாபஹரனான
புருடோத்தமன் – புருஷோத்தமன்
அமர்வு—பொருந்திவர்த்திக்கும் ஸ்தலமாம்.

வ்யா. எட்டாம்பாட்டு. திரைபொருகடல்சூழ் திண்மதிர் துவரைவேந்து. கடலைச் ‡செறுத்துப் படைவீடு செய்ததாகையாலே *திரைபொருகடலாலே சூழப்பட்டிருப்பதாய், திண்ணியதான மதிளையுடைத்தாயிருக்கிற ஸ்ரீமத்த்வாரகைக்கு ராஜாவானவன். * வண்டு வாபதிமன்னனிறே. தன்மைத்துனன்மார்க்காய். (க) “ க்ருஷ்ணாஸ்யாஃ க்ருஷ்ணபலாஃ க்ருஷ்ணநாதாச்ச பாண்டவாஃ ” என்கிறபடியே தன்னையே தஞ்சமாகவும் பலமுமாகவும் பற்றியிருக்கிற தன் மைத்துனன்மாரான பாண்டவர்களுக்கு பக்ஷபாதியாய் நின்று. அரசனையழிய அரசினையருளும். *பொய்ச்சூதிலே அவர்களைத்தோற்பித்து அவர்கள் ராஜ்யத்தைத் தாங்கள் பறித்துக்கொண்டு, பத்தூர் ஒரூர் கொடுக்கச் சொன்னவிடத்திலும் கொடோமென்று தாங்களே அடையபுஜிப்பதாகவிருந்த துர்யோதநாதி ராஜாக்கள்விளக்குப்பிணம்போலே விழுந்து போகப்பண்ணி ராஜ்யத்தைப் பாண்டவர்களுக்குக் கொடுத்தருளும். அரிபுருடோத்தமன் அமர்வு. (உ) “ ஸஹ த்யாவஹி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவான்ஹரிஃ ” என்று ஆபத்தசையிலே ஸ்மரிக்கப்படுமவனாக ஸ்ரீவஸிஷ்டபகவானாலே த்ரௌபதிக்குச் சொல்லப்பட்டவனாய், (ங) “ ஹரிஹரதிவாவாபி ஹ்ருஷீகேசே ஸவிஸ்ரயஃ ” என்கிறபடியே ஸ்மரித்தவர்களுடைய ஸகலபாபங்களையும் போக்குமவனான புருஷோத்தமன் பொருந்தி வர்த்திக்கிற ஸ்தலம்.

நிரைநிரையாக நெடியனயூபம். ஓரோ ரொழுங்காய்க்கொண்டு நெடியதாயிருந்துள்ள, பசுக்கள் பந்திக்கிற யூபங்களானவை. நிரந்தரமொழுக்குவிட்டு. இடைவிடாமல் நெடுகச்சென்றிருப்பதாய். இரண்டேகாவுரை வேள்விப்புகைகமழ் கங்கை. இருகரையும் மொத்தயாகதூமம் கந்தியாநிற்கிற கங்கையினுடைய கரையில். கண்டமென்னுங்கடிநகரே. ... ...அ

மூ.—வடதிசைமதுரை சூளக்கிராமம் வைகுந்தந் துவரையயோத்தி
இடமுடைவதரியிடவகையுடைய வேம்புருடோத்தமனிருக்கை
தடவரையதிரத் தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக் கரைமரஞ்சாடிக்
கடலினைக் கலங்கக்கடுத்திழி கங்கைக் கண்டமென்னும் கடிநகரே.

பதவுரை.

நெடு வரை–மந்தரமுதலான பெரியமலைகளா [ன்னவை
அதிர— சலிக்கவும்
தரணி— பூமியானது
விண்டு— பிளவுபட்டு

‡ செறுத்து- அணைகட்டி. (க) “ க்ருஷ்ணச்ரயாஃ க்ருஷ்ணபலாஃ க்ருஷ்ணநாதாச்ச பாண்டவாஃ. ” (உ) “ மஹத்யாபதிஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவான்ஹரிஃ ” (ங) “ ஹரிர்ஹரதிபாபானி துஷ்டசித்தைரபிஸ்மர்தஃ ”

இடிய— இடிந்துவிழவும்
தலைப்பற்றி — மரங்களினுடைய தலையளவும் செல்லக்கிளம்பி
கரை — கரையில் நிற்கிற
மரம் — மரங்களை
சாடி — மோதி முறித்தும்
கடல்—ஒன்றாலும் கலங்காத கடலுங்கூட
கலங்க— கலங்கும்படி
கடுத்து— வேகமாய்க்கொண்டு
இழி— இழியாநின்றுள்ள
கங்கை— கங்காதீரத்தில்
கண்டம் என்னும் கடிநகர்—;
வட திசை— உத்தரதிக்கிலுள்ள
மதுரை— ஸ்ரீமதுரையும்
சாளக்கிராமம்— ஸ்ரீஸாளக்ராமமும்
வைகுந்தம்— ஸ்ரீவைகுண்டமும்
துவரை— ஸ்ரீத்வாரகையும்
அயோத்தி— திருவயோத்தியையும்
இடம் உடை— இடமுடைத்தாயிருந்துள்ள
வதரி— ஸ்ரீபதரிகாச்ரமமுமாகிற இவற்றை
இடம் வகை உடைய— வாஸஸ்த்தாநமாக வுடையனை
எம் — எமக்கு ஸ்வாமியான
புருடோத்தமன் — புருஷோத்தமனுடைய
இருக்கை— இருப்பிடமாம்.

வயா. ஒன்பதாம்பாட்டு. வடதிசைமதுரை. வடக்குதிக்கில் மதுரை. தென்திசை மதுரை உண்டாகையாலே விசேஷிக்கிறது. சாளக்கிராமம். புண்யக்ஷேத்ரங்களில் ப்ரதாநமாகளண்ணப்படும் ஸ்ரீஸாளக்ராமம். வைகுந்தம். அப்ராக்ருதமாய் நித்யவாஸஸ்த்தலமான ஸ்ரீமத்வைகுண்டம். துவரை. * பதினாறுமாயிரவர் தேவிமார்பணிசெய்ய மணவாளராய் வீற்றிருந்த ஸ்ரீமத்த்வாரகை. அயோத்தி. "அயோத்திநகர்க் கதிபதி" என்கிறபடியே ராமாவதாரஸ்தலமாய் அத்யந்தாபிமதமாயிருந்துள்ள திரு அயோத்தியை. இடமுடைவதரி. நாராயண ரூபியாய்க்கொண்டு திருமந்த்ரத்தை வெளியிட்டருளி உகப்புடனே யெழுந்தருளியிருக்கும் ஸ்த்தலமாய், இடமுடைத்தாயிருந்துள்ள ஸ்ரீபதரி. இடவகையுடைய. இவற்றை வாஸஸ்த்தாநமாக வுடையனை. எம்புருடோத்தமனிருக்கை. ஆச்ரிதரான நமக்கு இனியனை புருஷோத்தமனுடைய இருப்பிடம்.

தடவரையித்யாதி. பகீரதன் தபோபலத்தாலே இறக்கிக்கொடுவருகிறபோது வந்திழிகிற வேகத்தைச் சொல்லுகிறது.

தடவரையதிர. உயர்ந்த நிலத்தில் நின்றும் வந்திழிகிற வேகத்தாலே மந்தராதிகளான பெரிய மலைகள் சலிக்கும்படியாக. தரணிவிண்டிடிய. பர்வதத்தில் நின்றும் பூமியிலே குதிக்கிற வளவில் பூமி விண்டு இடிந்துவிழ. தலைப்பற்றிக்கரைமரஞ்சாடி. வ்ருக்ஷங்களினுடைய தலையளவும் செல்லக் கிளம்பி, கரையில்நிற்கிற மரங்களை மோதிமுறித்து. கடலினைக் கலங்கக்கடத்திழி கங்கைக்கண்டமென்னும் கடிநகரே. ஒன்றாலும் கலங்காத கடலும் கலங்கும்படி வேகித்துக்கொண்டு இழியாநின்ற கங்கையினுடைய கரைமேலே, கண்டமென்னும் கடிநகரே. ... ... ஈ.

மூ.—மூன்றெழுத்ததனை மூன்றெழுத்தத்தனை மூன்றெழுத்தாக்கி மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க் கிரக்கமன்குடைய வெம்புருடோத்தமனிருக்கை
மூன்றடிநிமிர்த்து மூன்றினிற்றேரன்றி மூன்றினில் மூன்றுருவானை
காண்டடம்பொழில்சூழ் கங்கையின் கரைமேற் கண்டமென்னும் கடிநகரே. ஐ.

பதவுரை.

கான்— நன்னிறம் கமழாநின்றுள்ள
கடை— பெரிய
பொழில்— பொழில்களாலே
சூழ்— சூழப்பட்டிருப்பதாய்

கங்கையின்கரைமேல்— கங்காதீரத்திலுள்ள கண்டமென்னும் கடிநகர்—;

மூன்று அடி நிமிர்த்து — திருமந்த்ரத்தை மூன்றுபதமாகவளர்த்து

மூன்றினில் — அந்த மூன்றுபதத்திலும்

தோன்றி— † ஆகாரத்ரயத்தையும் தோன்றுவித்து

மூன்றினில்— சேதநனுடைய ஆகாரத்ரயத்துக்கும் ப்ரதிஸம்பந்தியாக

மூன்று உரு: ஆனன்—சேஷித்வ, சரண்யத்வ ப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயத்தையுமுடையனுப்

மூன்று எழுத்து அதனை— அகார, உகார, மகாரங்களாகிற மூன்றெழுத்துக்களை

மூன்று எழுத்து அதனுல்— 'நிருக்தம்' என்னும்பேரையுடைய மூன்றெழுத்துக்களாலே

மூன்று எழுத்து ஆக்கி— மூன்றெழுத்துக்கு வாசகமாயிருக்கும் மூன்றெழுத்தாகப் பிரித்து

மூன்று எழுத்தை— அம்மூன்றெழுத்தையும்

ஏன்று கொண்டு இருப்பார்க்கு— } 'நமக்குத்தஞ்சம்' என்று தங்கள் நெஞ்சிலே தரிக்கு மவர்களுக்கு

நன்கு இரக்கம் உடைய— தன்பேறுகச் செய்யும் தனையை உடையனுப்

எம்— எமக்கு ஸ்வாமியான

புருடோத்தமன்— புருஷோத்தமனுக்கு

இருக்கை— வாஸஸ்தானமாம்.

† ஆகாரத்ரயம்— அந்யார்ஹ சேஷத்வம், அநந்யசரணத்வம். அநந்யபோக்யத்வம்.

(க) "பூரிதி ருக்வேதாதஜாயத" (உ) "ஆதயந்து தீர்யக்ஷாம்ப்ரஹ்ம தீர்யி யஸ்மிந் ப்ரதிஷ்டிதா - ஸகுஹ்யோந்ய ஸ்தாவிர்த்வேதோ யஸ்தம்வேத ஸவேதவித்."

வ்யா. பத்தாம்பாட்டு. மூன்றெழுத்தினை. (க) "ஸவிதிதிஹ்ரூஹஉஜாயத" இத்யாதிப்படியே வேதாத்யயநத்தினின்றும் வ்யாஹ்ருதித்ரயத்தையும் தோன்றுவித்து, பரிசுத்தமான வ்யாஹ்ருதித்ரயத்தையும் ஸ்வஸங்கல்பத்தாலே பொன் ஓடவைக்குமாபோலே ஓடவைத்து, அந்த வ்யாஹ்ருதித்ரயத்தினின்றும் அகார உகார மகாரங்களாகிற அக்ஷரத்ரயத்தையும் ஸம்ஹிதாகாரத்தாலே "ஓம்" என்று ஏகாக்ஷரமாக்கப்பட்ட தாகையாலே அக்ஷரத்ரயாத்மகமாயிருக்கிற அந்த ப்ரணவத்தை. "அதனை" என்றது அதினுடைய கௌரவத்தைப்பற்ற. (உ) "ஆதயந்து தீர்யக்ஷாம்ப்ரஹ்ம தீர்யி பஸ்மிந் ப்ரதிஷ்டிதா । ஸகுஹ்யோந்ய ஸ்தாவிர்த்வேதோ யஸ்தம்வேதஸவேதவித்" என்னும்படியிறே இதினுடைய வைபவம். மூன்றெழுத்தினால். பதஸமதிகமேஹ தாவாய் "நிருக்தம்" என்றுமூன்றுஅக்ஷரமான பேரையுடைத்தாயிருக்கிறவதினாலே. மூன்றெழுத்தாக்கி. ப்ரக்ரியைபண்ணும் க்ரமத்தாலே ப்ரக்ரியை பண்ணி, மூன்றுபதமாய் மூன்றர்த்தத்துக்கு வாசகமாயிருக்கும் மூன்றெழுத்தாகப்பிரித்து. ப்ரணவந்தான் ஸம்ஹிதாகாரத்தாலே மூன்றக்ஷரமாய்மூன்றுபதமாய்மூன்றர்த்த ப்ரதிபாதகமாயிறே யிருப்பது. மூன்றெழுத்தை யேன்றுகொண்டிருப்பார்க்கு. அந்த மூன்றெழுத்தையும், 'நமக்குத் தஞ்சமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற தாகையாலே நமக்கு உத்தேச்யம்' என்று தங்கள் நெஞ்சிலே தரிக்குமவர்களுக்கு. அதாவது அகாரமானது ஸ்வரூபேணவும் தாதர்நிஷ்பந்நரூபேணவும் ப்ரத்யயவேஷேணவும் ஈச்வரனுடைய காரணத்வ ரக்ஷகத்வ சேஷித்வங்களையும், அர்த்த பலத்தாலே ஸ்ரீயஃபதித்வத்தையும் ஏவம்பூதனான ஈச்வர விஷயத்தில் சேதநனுடைய சேஷத்வத்தையும் ப்ரதிபாதிக்கையாலும், உகாரமானது

அவதாரணவாசகமர்ய்க்கொண்டு. அந்த சேஷித்வத்திலுடைய அநந்யார்ஹதையை ப்ரதிபாதிக்கையாலும், மகாரமானது (க) "மந-ஜ்ஞாநே" என்கிற தாதுவிலே நிஷ்பந்நமாய்க்கொண்டு ஜ்ஞாநவாசியுமர்ய், அநந்யார்ஹ சேஷத்வத்துக்கு ஆச்ரயமான ஆத்மாவிலுடைய தத்தாதிரிக்தாதிகளை ப்ரதிபாதிக்கையாலும், அகாரத்ரயமும் நமக்குத் தஞ்சமான அர்த்தத்தையே சொல்லுகிறதென்று தங்கள் நெஞ்சில் எப்போதும் அநுஸந்தித்திருக்கை. இரண்டாம் நன்குடையவெம்புருடோத்தமனிருக்கை. இவர்களளவிலே தன்பேறாக க்ர்பை பண்ணுமவனுய் எனக்கு ஸ்வாமியான புருஷோத்தமனுடைய வாஸஸ்தாநம்.

மூன்றடி நிமித்தம். இந்தப்ரணவந்தான் (உ) "ஓமித்யேகாக்ஷராவ்யாஹரந்" என்கிறபடியே பதத்ரயாத்மகமான திருமந்த்ரத்தில் ப்ரதமபதமாகையாலே இத்தோடுகூட மேலிரண்டு பதத்தையுங் கூட்டி மூன்று பதமாக வளர்த்து. மூன்றினிற்றொன்றி. அந்த மூன்று பதத்திலும் ஆத்மாவினுடைய அநந்யார்ஹசேஷத்வம் அநந்யசரணத்வம் அநந்யபோக்யத்வமாகிற ஆகார த்ரயத்தையும் தோன்றுவித்து. "தோன்றி" என்றது - தோன்றுவித்து என்றபடி. மூன்றினில் மூன்றுருவானவன். பதத்ரய ப்ரதிபாத்யனான சேதநனுடைய ஆகாரத்ரயமும் விஷயமாக தத்ப்ரதிஸம்பந்திதயா, தானும் சேஷித்வ சரண்யத்வ ப்ராப்யத்வங்களாகிற ஆகாரத்ரயத்தையு மூடையனானவன். இம்மந்த்ரத்தை பதத்ரயாத்மகமாய் சேதநனுடைய ஆகாரத்ரயத்தையும் தன்னுடைய ஆகாரத்ரயத்தையும் ப்ரதிபாதிக்குமிப்படி அவன் தன் அடியிலே உண்டாக்கி வைத்தான். ஈச்வரனுகையாலே இவை யெல்லாவற்றையும் அவன் செயலாக வருளிச் செய்கிறார். கான் தடம்போழில்சூழ் கங்கையின் கரைமேல். "கான்" என்று நாற்றம். தடம்என்று- பெருமை. நறுநாற்றத்தையுடைய பெரிய பொழில்களாலே சூழப்பட்டிருப்பதாய், கங்கையினுடைய கரையிலேயான. கண்டமென்னுங்கடிநகரே....மி.

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலஞ்சொல்லித் தலைக்கட்டுகிறார். *

மூ.—பொங்கொலி கங்கைக்கரைமலி கண்டத்துறை புருடோத்தமனடிமேல்
வெங்கலிநலியா வில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன் விருப்புற்றுத்
தங்கியவன்பாற் செய் தமிழ்மாலை தங்கிய நாவுடையார்க்குக்
கங்கையிற்புனிதமால் கழலிணைக்கீழே குளித்திருந்த கணக்காமே.

பதவுரை.

பொங்கு—ஜலத்தின் கொழிப்பால்வந்தசேர்த்தியையுடைத்தாய்	புருடோத்தமன் – புருஷோத்தமனுடைய
ஒலி— கோஷத்தையுடைத்தான	அடிமேல— திருவடிகளிலே
கங்கை கரை – கங்கையின்கரையிலேயாய்	வெம்— சொடிய
மலி– எல்லாப்படியாலுமுண்டான ஏற்றத்தையுடைத்தாயிருக்கிற	கலி— கலியால்வந்த
கண்டத்து — திருக்கண்டங்கடிநகரிலே	நலியா— நலிவொன்றில்லாத
உறை — நித்யவாஸம் பண்ணுகிற	வில்லிபுதூர்கோன் } ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான
	விட்டுசித்தன்– பெரியாழ்வார்

(க) "மந-ஜ்ஞாநே" (உ) "ஓமித்யேகாக்ஷராவ்யாஹரந்" என்பது.

விருப்பு உற்று— விரும்பி
தங்கிய— நிலைநின்ற
அன்பால்— அன்பினாலே
செய்— செய்த
தமிழ் மாலை— தமிழ்த்தொடையான இது
தங்கிய— ஒருக்காலும் நீங்காதிருக்கிற
நா உடையார்க்கு—நாவையுடையவர்களுக்கு
கங்கையில்— கங்காநதியிலே
குளித்து— நீராடி
திரு மால்— ஸ்ரீயஃபதியினுடைய
இணை— ஒன்றுக்கொன்றொப்பான
கழல் கீழ்— திருவடிகளின்கீழே
இருந்தகணக்கு ஆம்—நிரந்தரசேவைபண்ணி யிருந்ததொருப்ரயோஜநத்தைத்தாடொக்கும்.

வ்யா. பொங்கித்யாதி. ஜலத்தினுடைய கொழிப்பால் வந்த கிளர்த்தியையும் கோ ஷத்தையு முடைத்தான கங்கையினுடைய கரையிலேயாய், ஸர்வ ப்ரகாரத்தாலுமுண்டான வற்றத்தை யுடைத்தாயிருக்கிற திருக்கண்டங்கடிநகரிலே நித்யவாஸம்பண்ணுகிற புருஷோத்தமனுடைய திருவடிகளிலே. வேங்கலி நலியா வில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன் விருப்புற்று. விபரீதஜ்ஞாநாதிகளை ஜநிப்பிக்கும் க்ரூரமான கலியுகத்தால் வந்த நலிவென்ப தொன்றில்லாத ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகரான பெரியாழ்வார் ஆசைப்பட்டு. தங்கியவன் பால்செய் தமிழ்மாலை. நிலைநின்ற ப்ரேமத்தாலே செய்த தமிழ்த்தொடையாணவிது. தங்கிய நாவுடையார்க்கு. ஒருகாலும் நீங்காதே வர்த்திக்கும்படியான நாவை யுடையவர்களுக்கு. அதாவது - எப்போதும் இத்தையே சொல்லிக்கொண்டு திரியுமவர்களுக்கென்றபடி. கங்கையிலித்யாதி. கங்கையில் - குளித்து - திருமால் கழலிணைக்கீழே - இருந்த கணக்காமே. அதாவது- இத்திருமொழி தங்கின நாவுடையவர்களுக்கு ஏதேனுமோரிடத்திலே இருந்தாலும், ஸர்வேச்வரன் திருவடிகளில் பிறப்பால்வந்த ஏற்றத்தையுடைய கங்கையிலே ஸ்நாநம்பண்ணி, திருக்கண்டங்கடிநகரிலே எழுந்தருளி யிருக்கிற ஸ்ரீயஃபதியானவன் திருவடிகளின்கீழே நிரந்தரசேவைபண்ணி யிருந்ததோடு ப்ரயோஜநமொக்குமென்கை. பகவத்ப்ராப்தியிலே அதுக்குப்ரயோஜநம்; அது இவர்களுக்கு மொக்குமென்றதாய்த்து. ... ... கக

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

அடிவரவு.—தங்கையை சல மதிர் இமையவ ருழு தலை வில் திரை
வடதிசை முன்றெழு பொங்கொலி மாதவ.

ஆ திருமொழி-நிக-க்கு, பாட்டு-நஅசு.

——(o)——

நான்காம்பத்து - எட்டாந்திருமொழி - மாதவத்தோன், ப்ரவேசம்.

அ. "போகத்தில்வழுவாத புதுவையர்கோன்" என்கிறபடியே திருவவதார ஸமயமே தொடங்கி க்ர்ஷ்ணவதார குணசேஷ்டிதங்களையெல்லாம் முற்றூட்டாக வநுபவித்துக்கொண்டு வந்த விவர், *என்னுதன் தேவியிலே அந்தக்ர்ஷ்ணவதார. சேஷ்டிதங்களோடே ராமாவதாரகுண சேஷ்டிதங்களையும் அநுபவிக்கையி லுண்டானவாசையாலே இரண்டையும் ஒன்றுக்கொன்று எதிராக்கிப்பேசி நின்று அநுபவித்து,பின்பு *கதிராயிர மிரவியிலே ராம

க்ர்ஷ்ணவதார குணசேஷ்டிதங்களையும் அவதாராந்தர குணசேஷ்டிதங்களையும் கலப்பிலே அநுபவித்தவநந்தரம் இவ்வவதாரகுணசேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி உகந்தருளின நிலங்களிலே எழுந்தருளிநிற்கிற நிலைகளை யநுபவிக்கவேணுமென்னு மாசை பிறந்து ப்ர தமம், ராமக்ர்ஷ்ணத்யவதாரகுண சேஷ்டிதங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி: திருமலையிலே யெழுந்தருளிநிற்கிற அழகரையும், அவரிலுங்காட்டில் ப்ராப்யத்தில் சரமாவதியான திருமலை யாழ்வாரையு மநுபவித்து, பின்பு திருக்கோட்டியூரிலே நிற்கிற நிலையையும் அநுபவிக்கை யிலே ப்ரவர்த்தரான விவர்; அங்கேயெழுந்தருளி நிற்கிற நிலையில் தங்களுக்கு ஆதரணீய மன்றிக்கே அந்யபரராய்த்திரிகிற ஸம்ஸாரிகளை நிந்தித்தும், அந்நிலையின் வாசியறிந்து ப்ரவ ணரா யநுபவிக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களை ச்லாகித்தும், இப்படி யிருந்துள்ள செருக்கோடே கூடியநுபவித்து, தாம்நிந்தித்தவர்களையும் விடமாட்டாத பரமக்ருபையாலே அவர்களைக்குறி த்து இரண்டு திருமொழியாலே பரோபதேசத்தைப்பண்ணி, மீளவும்உகந்தருளின நிலங்க ளிலே நிற்கிற நிலையை யநுபவிக்கையிலுள்ள வாசையாலே " வடதிசை மதுரை " இத்யா திப்படியே அநேக தேசத்திலுண்டான விருப்பத்தையெல்லாம் பண்ணிக்கொண்டு திருக் கண்டங்கடி நகரிலே அவதாரகுண சேஷ்டிதங்கள் எல்லாம் ப்ரகாசிக்கும்படி எழுந்தருளி நிற்கிறபடியையும், அத்தேசவைபவத்தன்மையையும் அநுபவித்து இனியராய் நின்றார்-கீழ்; அ வையெல்லாம்போலன்றிக்கே, " வடிவுடை வானேர்தலைவனே " என்றும், " கடலிடங் கொண்ட கடல்வண்ணா " என்றும், " கட்கிலீ " என்றும், " காகுத்தா கண்ணினை " என் றும் சொல்லுகிறபடியே- பரத்வாதிகளிலுண்டான குணங்களெல்லாம் ப்ரகாசிக்கும்படி வர்த் திக்கிற ஸ்தலமாய், " பொங்கோதஞ் சூழ்ந்தபுவனியும் " இத்யாதிப்படியே உபயவிபூதி யையும் தனிக்கோல் செலுத்துகிறதும் இங்கேயிருந்தே என்று தோற்றும்படி யிருப்பதாய் " மாலிருஞ்சோலை மணாளனார்.பள்ளிகொள்ளுமிடம் " என்றும், "பொன்னிசூழரங்கருள் முனிவன் - திருமாலிருஞ்சோலைநின்றான் " என்றும், " பயின்றதரங்கம் திருக்கோட்டி " " தேனார் திருவரங்கம் தென்கோட்டி " என்றும் சொல்லுகிறபடியே முன்பு அநுபவித்த திருமலை திருக்கோட்டியூரில் நிலைகளுக்கு வேர்ப்பற்றான விடமுமாய், " ஆராமஞ்சூழ்ந்த வரங்கம்" என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாம் பகலிருக்கை என்னும்படி ஆச்ரித ரக்ஷணத்துக்கு ஏகாந்தமானவிடமென்று நித்யவாஸம் பண்ணுகிற ஸ்தலமான * திருவரங் கந்திருப்பதியிலே; " வன்பெருவானகம் " இத்யாதிப்படியே ஸகல தேசத்திலுள்ளாரும் உஜ்ஜீவிக்கும்படியாகவும், " தென்னுடும் வடநாடும் தொழுகின்ற " என்றும், " யாவரும் வந்தடிவணங்க " என்றும் சொல்லுகிறபடியே ஸகல தேசத்திலும் ருஷிபிறந்தவர்களெல்லா ரும் வந்து அநுபவிக்கும்படியாகவும் ஆச்ரயிக்கும்படியாகவும், " அன்பொடு தென்திசை நோக்கி " என்கிறபடியே * மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண் வைத்து, "திருவாளனினிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற" என்கிறபடியே ஸ்ரீ: பதியாகையால் வந்தபெருமை தோற்றத் திருவுள்ளத்திலுகப்புடனே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள்புக்கலிலே, விசேஷித்து க்ர்ஷ்ணவதாரகுணசேஷ்டிதங்களும் ராம்வதார குணசேஷ்டிதங்களும் அவதாராந்தரகுணசேஷ்டிதங்களுமெல்லாம் ஒருமடைகொள்ள ப்ரகா சிக்கிறபடிகளை * திருவரங்கமதனைச்சென்று அநுபவியாநின்றுகொண்டு, அவர் தம்மிலுங் காட்டில் அவர் விரும்பிக் கண்வளர்ந்தருளுகிற தேசமே பரமப்ராப்யமாகையாலே அத்தேச த்திலுண்டாயிருக்கிற வைபவத்தையும் பஹுமுகமாகப்பேசி அநுபவித்து ப்ரீதராகிறார்- இத் திருமொழியில்.

அ. முதற்பாட்டு. ஸாந்தீபிபுத்ராகயஞம் பண்ணினவன் வர்த்திக்கிற தேசமிது வென்கிறார்.

மூ.—மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை
ஓதுவித்ததக்கணையா வுருவுருவே கொடுத்தானூர்
தோதவத்தித் தூய்மறையோர் துறைபடியத் துளும்பியெங்கும்
போதில்வைத்ததேன்சொரியும் புனலரங்கமென்பதுவே. க.

பதவுரை.

தோதம்— பரிசுத்தமாய்தோய்த்து உலர்த்தின
வத்தி— வஸ்த்ரங்களை யுடுத்துமவராய்
தூய்— தூய்தான [குற்றமற்ற]
மறையோர்— வேதத்தையே தங்களுக்கு நிரூபகமாகவுடைய ஸ்ரீவைஷ்ணவர்கள்
துறை— காவிரியில் திருமுகத்துறை முதலிய துறைகளிலே
படிய— திரள்திரளாக நீராட
(அதனாலே)
எங்கும்— எங்கும்
துளும்பி— அலையெறிந்து
(பூக்களின் நாளங்களையலைக்க,)
போதில் வைத்த— அந்தப்பூக்களில் வைத்த
தேன்— தேனானது
சொரியும்— சொரியும்படியான
புனல்— புனலையுடைத்தாய்
அரங்கம் என்பது— 'திருவரங்கம்' என்னும் திருநாமத்தையுடைய திவ்யதேசமானது—;
மறி— திரைமறிகிற
கடல்வாய்— கடலிடத்திலே
போய்— புகுந்து [ண்டவனை
மாண்டான்— முதலிலவாயிலகப்பட்டு மாண்
மாதவத்தோன்புத்திரனை— மஹாதபஸ்ஸையுடைய ஸாந்தீபினியின் பிள்ளையை,
ஓதுவித்த— (ஸாந்தீபினி) தன்னை அத்வரம் பண்ணுவித்ததுக்கு
தக்கணையா— தக்ஷிணையாக
உரு உருவே— அந்த புத்ரன் இறந்தபோதிலிருந்த வடிவின்படியே
கொடுத்தான்— கொண்டுவந்து கொடுத்தவன் நித்யவாஸம் பண்ணுகிற
ஊர்— தேசம்.

வ்யா. மாதவத்தோன் புத்திரன்போய் மறிகடல்வாய் மாண்டானை. மஹாதபஸ்ஸையுடையனஸாந்தீபினிபுத்ரன், நெடுங்காலத்திலே, திரைமறிகிற கடலிடத்திலே புகுந்து மடிந்தவனை. ஓதுவித்த தக்கணையா. அத்வரம் பண்ணின வுந்தரம் குருதக்ஷிணைகொடுக்கத் தேடுகிறவனவிலே, இவனுடைய அதிமாநுஷ சேஷ்டிதங்களை அறிந்தவனுகையாலே "காதலெண்மகன் புகலிடம் காணேன் கண்டு நீ தருவாயெனக்கு" என்று முன்பே ஸமுத்ரத்தில் மீர்தனை என்புத்ரனைக்கொண்டு வந்து தரவேணும் என்று அபேக்ஷிக்க, "அப்படியே செய்கிறேன்" என்று, அவன் அத்வரம் பண்ணுவித்ததுக்கு தக்ஷிணையாக. உருவுருவே கொடுத்தானூர். (க) "தம்பாலம் யாதநா ஸம்ஸ்தம் யதாபூர்வசரீரிணம்-பித்மரோபாதிதவாந்க்ருஷ்ணம்" என்கிறபடியே பூர்வதேஹத்தில் ஒன்றும் விசேஷமறக் கொண்டுவந்து கொடுத்தவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

தோதவத்தித் தூய்மறையோர். ஸமாசாரபரராகையாலே, பரிசுத்தமாகத்தோய்த்து உலர்த்தின வஸ்த்ரங்களை தரித்துக்கொண்டிருப்பாராய், தூய்தானமறையையே தங்களுக்கு

(க) "தம்பாலம் யாதநா ஸம்ஸ்தம் யதாபூர்வசரீரிணம்-பித்மரோபாதிதவாந்க்ருஷ்ணம்"

நிரூபகமாகவுடையராயிருக்குமவர்கள். மறைக்குத் தாய்மையாவது–அபௌருஷேயமாய், நித்ய நிர்த்தோஷமாயிருக்கையாலே ஸர்வப்ரமாணவிலக்ஷணமாய், பகவத்ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளபடி ப்ரதிபாதிக்கவற்றாயிருக்கை. இத்தை இவர்கள் நிரூபகமாகவுடையராயிருக்கையாவது (க) "ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" என்கிற விதிப்ரகாரம் தப்பாமல் அத்யயநம்பண்ணி, அதில் அர்த்தஜ்ஞாநத்தையும் அதுக்கு அநுரூபமான அநுஷ்டாநத்தையுமுடையராயிருக்கையாலேவைதிகர் என்றேநிரூபகமாம்படியிருக்கை. துறைபடிய. "கங்கையிற் புனிதமாய காவிரி" என்கிறபடியே * கலந்திழி புனலான கங்கையிலுங்காட்டில் பரிசுத்தமான காவேரியிலே, பெரியபெருமாளுடைய திருக்கண்மோக்கான திருமுகத்துறை முதலான துறைகளிலே, திரள்திரளாக அவகாஹித்து ஸ்நாநம்பண்ண. துளும்பியித்யாதி. அப்படி அவர்கள் திரள்திரளாகப்புகுந்து ஸ்நாநம்பண்ணுகையாலே எங்கும்அலையெறிந்து, ஆஸந்நமான புஷ்பங்களின் நாளங்களையலைக்க, அந்தப்பூக்களில் வைத்தமதனது சொரியும் படியான புனலையுடைத்தாய், திருவரங்கம் என்கிற திருநாமத்தை யுடைத்தாயிருக்கிற திவ்யநகரி. (உ) "க்ஷீராப்தேருத்தரே பார்ச்வே நாம் பரிநாம ஸுபோஷிதா ரங்கமிதி ஸுப்ரஸித்தா ஹரேர்யத்ர ஸந்நிதிர்நித்ய ஸ: " என்கிற ஏற்றத்தையுடைத்தாயிருக்கையாலே "அரங்கமென்பதுவே" என்று ப்ரஸித்திதோற்றவருளிச்செய்கிறார். ... ... க.

அ. இரண்டாம்பாட்டு. வைதிகபுத்ராநயநம் பண்ணினவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மூ.—பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும்
இறைப்பொழுதிற் கொணர்ந்துகொடுத் தொருப்படுத்தவுறைப்பனூர்
மறைப்பெருந்தீ வளர்த்திருபபார் வருவிருந்தை யளித்திருப்பார்
சிறப்புடைய மறையவர்வாழ் திருவரங்கமென்பதுவே. உ.

பதவுரை.

மறையவர்— வேததாத்பர்ய மறிந்திருக்குமவர்கள்
வாழ்— பகவதநுபவத்தாலே வாழாநின்றுள்ள
திரு அரங்கம் என்பது—; [யே
பிறப்பு அகத்தே— ஸம்ஸாரக்ருஹத்திலே
மாண்டு ஒழிந்த— மாண்டுபோய் விட்ட
பிள்ளைகள் நால்வரையும் — நாலுபிள்ளைகளையும்
இறை பொழுதில்— ஒருநொடிப்பொழுதில்
கொணர்ந்து— பரமபதத்தில் நாய்ச்சிமார் கையில் நின்றும் வாங்கிக்கொண்டு வந்து

மறை— வேதத்தில் சொல்லிப்போந்தபடியே
பெரு— சிறந்த
தீ— மூன்று அக்நிகளையும்
வளர்த்து இருப்பார்— வளர்க்குமவர்களாய்
வரு— தந்தாம் திருமாளிகைக் கெழுந்தருளுகிற
விருந்தை— அதிதிகளான ஸ்ரீவைஷ்ணவர்களை
அளித்து இருப்பார்— ஆதரித்துக்கொண்டு போருமவர்களாய்
சிறப்பு உடைய— இவ்வகையான நன்மைகளையுடையராய்

(க) "ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" (உ) க்ஷீராப்தேருத்தரே பார்ச்வே நாம் பரிநாம ஸுபோஷிதா ரங்கமிதி ஸுப்ரஸித்தா ஹரேர்யத்ர ஸந்நிதிர்நித்ய ஸ:"

கொடுத்து- தந்தைதாயர்கையிலே கொடுத்து ஒருப்படுத்த— 'எங்கள் பிள்ளைதான்' என்று ஸம்மதிபண்ணுவித்த

உறைப்பன்— சக்தியையுடையவன் வர்த்திக்கிற

ஊர்— தேசம்

வ்யா. பிறப்பித்யாதி. "ஒருப்ராஹ்மணனுக்கு முன்பே மூன்றுபிள்ளைகள், பிறந்தபோதேதக்காண்வொண்ணுதபடி போய்விடுகையாலே, நாலாம்பிள்ளையை ஸ்த்ரீ ப்ரஸவிக்கத் தொடுகிறவளவிலே, க்ருஷ்ணன்பக்கலிலே வந்து, 'இந்தவொருபிள்ளையையும் தேவரீர் ரக்ஷித்தருளவேணும்' என்று அபேக்ஷிக்க; க்ருஷ்ணனும், 'அப்படியே செய்கிறோம்' என்று அநுமதிசெய்த வநந்தரம், ஏகாஹதீக்ஷையானக்ரதுவிலே தீக்ஷிதராயிருக்கிறவிவர் எழுந்தருளவொண்ணாது என்னு மத்தைப்பற்ற, 'நான்போய் ரக்ஷிக்கிறேன்' என்று அர்ஜுநன் என்றுகொண்டு ப்ராஹ்மணனையுங் கூட்டிக்கொண்டுபோய் ஸ்தம்பிகாக்ருஹத்தைச்சுற்றும் காற்றுமுட்பட ப்ரவேசிக்கவொண்ணுதபடி சரக்கூடமாகக் கட்டிக் காத்துக்கொண்டு நிற்கச்செய்தே, அந்தப் பிள்ளை பிறந்தவளவிலே பழையபடியே காணவொண்ணுதபடி போய்விட்டவளவிலே, ப்ராஹ்மணன்வந்து அர்ஜுநனை 'க்ஷத்ரியாதமா! உன்னாலேயன்றோ பிள்ளை போகவேண்டிற்று, க்ருஷ்ணனெழுந்தருளி ரக்ஷிக்கிறவித்தை நீயன்றோ கெடுத்தாய்' என்று பர்த்ஸித்து, க்ருஷ்ணனபக்கலிலே தள்ளிக்கொண்டுவர; க்ருஷ்ணன் இத்தைக்கண்டு மந்தஸ்மிதம் பண்ணி, 'அவனை விடு, உன்பிள்ளை நாம்கொண்டுவந்து தருகிறோம்' என்று ப்ராஹ்மணனுக்கு அருளிச்செய்து, போனபிள்ளைகளை மீளக்கொண்டுவந்து கொடுத்தான்" என்கிற கதையை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

பிறப்பகத்தே மாண்டொழிந்த பிள்ளைகளை நால்வரையும். "என்னுடைமனவி காதல் மக்களைப் பயத்தலுங்காணுள்" என்கிறபடியே பெற்றவளுமுட்பட முகத்தில் விழிக்கப்பெறுதபடி ஸ்தம்பிகாக்ருஹத்திலே, "இன்னவிடத்திலே போய்த்து" என்று தெரியாதபடி மாண்டுபோய்விட்ட நாலுபிள்ளைகளையும். இறைப்பொழுதில் கொணர்ந்து கொடுத்து. தீக்ஷிதனுய்நிற்கிற காலமாகையாலே ப்ராதஸ்ஸவநம் தலைக்கட்டி மாத்யந்திகஸவநத்துக்குமுன்னை அல்பகாலத்திலே, "எல்லாவுலகுங்கழியப் படர்புகழ்ப்பார்த்தனும் வைதிகனுமுடனேறத் திண்டேர்கடவி" என்கிறபடியே ப்ராஹ்மணனையும் அர்ஜுநனையுங்கூடத் தேரிலே கொண்டேறி, அர்ஜுநனைத் தேரைநடத்தச்சொல்லி, அண்டத்துக்குள்ளுண்டான லோகங்களும் ஆவரணங்களுமாகிற எல்லாவற்றுக்கும் அவ்வருகு படும்படியாக, கார்யரூபமானதோர் காரணரூபமான தத்வங்களுக்குள்ளே போகிறவிடத்தில் உருக்குலையாமல் தேருக்குத்திண்மையைக்கொடுத்து நடத்திக்கொண்டுபோய், தமஸ்ஸளவில் சென்றவாறே தேரையும் இவர்களையும் நிறுத்தி, "சுடரொளியாய்நின்ற தன்னுடைச்சோதி" என்கிறபடியே ஜலத்திலே மத்ஸ்யமூலாவுமாபோலே தேசிகரே ஸஞ்சரிக்க வேண்டும்படி நிரவதிகதேஜோரூபமான பரமபதத்திலே, தன்னிலமாகையாலே தானேபோய்ப்புக்கு, நாய்ச்சிமார், தங்கள் ஸ்வாதந்த்ர்யம் காட்டுகைக்காக அங்கே அழைப்பித்திட்டுவைத்த அந்தப்பிள்ளைகளை அங்குநின்றுமெடுத்துக்கொண்டுவந்து மாதாபிதாக்கள் கையிலேகொடுத்து. ஒருப்படுத்த உறைப்பனூர் "தாயொடுகூட்டிய" என்கிறபடியே பூர்வரூபத்தில் ஒன்றும் குலையாமல், "என்னுடைய பிள்ளைகள்" என்று தாயார் எடுத்தணைத்து உச்சிமோந்துகொள்ளும்படி சேர்த்துவிட்ட சக்ரிமாணனவன் வர்த்திக்கிற தேசம்.

மறைப்பெருந்தீ வளர்த்திருப்பார். வேதோக்தமான மஹாக்ரதுக்களை பலஸாதநமாகவன்றிக்கே பகவத்ஸமாராதநபுத்தியாலே அவிச்சிந்நமாக வளர்த்துக்கொண்டிருக்குமவர்கள். வரு

விருந்தை யளித்திருப்பார். வரும்விருந்தினரை ரக்ஷித்துக்கொண்டிருப்பார். அதாவது நாலாம் திருமாளிகையிலே எழுந்தருளின ஸ்ரீவைஷ்ணவர்களை, ஸ்வரூபாநுரூபமாக ஆதரித்து அமுது செய்யப்பண்ணுகை. சிறப்புடையமறையவர்வாழ். இப்படி வைதிகசிரோமணிகளான ஆத்தையும் பகவத்ஸமாராதநத்தையும் அநந்யப்ரயோஜநமாகச் செய்கையாகிற நன்மையையுடையராய், இதுக்கு உடலாக வேததாத்பர்யத்தை யறிந்திருக்குமவர்கள், பெரும்பாலையநுபவித்துக்கொண்டு வாழாநிற்கிற திருவரங்கமென்பதுவே. ... ... உ.

அ. மூன்றும்பாட்டு. கரிக்கட்டையைப் பிள்ளையாக்கியும், பாண்டவர்களுடைய தேஹம் பாரதயுத்தத்தில் அழியாதபடி நோக்கியும் செய்தவன்வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மூ.—மருமகன்றன் சந்ததியை யுயிர்மீட்டு மைத்துனன்மார்
உருமகத்தேவீழாமே குருமுகமாய்க் காத்தானூர்
திருமுகமாய்ச் செங்கமலந் திருமுகமாய்க் கருங்குவளைப்
பொருமுகமாய்நின்றலரும் புனலரங்க மென்பதுவே. ரு.

பதவுரை.

செங்கமலம்— செந்தாமரை மலரானது
திருமுகம் ஒய்— பெரியபெருமாள் திருமுகத்துக்குப் போலியாய்
கரு— கறுத்த
குவளை— உத்பலமானது
திருநிறம் ஒய்— அவருடைய திருநிறத்துக்குப் போலியாய்
பொரு— ஒன்றுக்கொன்று எதிர்பொருகிற
முகம் ஒய் நின்று— முகத்தையுடைத்தாய்க்கொண்டு
அலரும்— அலராநின்றுள்ள
புனல்— நீர்வளப்பத்தையுடைய
அரங்கம் என்பது—;
மருமகன் தன்— மருமகனை அபிமந்யுவினுடைய
சந்ததியை— புத்ரனுய், கரிக்கட்டையாய்க்கிடந்த பரிக்ஷித்தின் சரீரத்தை (திருவடிகளாலே ஸ்பர்சித்து,)
உயிர் மீட்டு— உயிர்பெறும்படி பண்ணி
மைத்துனன்மார்— மைத்துனன்மாரான பாண்டவர்களுடைய
உரு— சரீரமானது
மகத்து— பாரதயுத்தமாகிற ரணமேதத்திலே
வீழாமே— விழுந்து நசித்துப் போகாமல்
குருமுகம் ஒய்— குருமுகமாய் நின்று (ஹிதோப தேசங்களைப்பண்ணி)
காத்தான்— ரக்ஷித்தவன் வர்த்திக்கிற
ஊர்— தேசம்.

வ்யா. மருமகனித்யாதி. மருமகனை அபிமந்யுவினுடைய புத்ரனை பரிக்ஷித்தின் ப்ராணனை மீட்டு; அதாவது- கரிக்கட்டையாய்ப்போனவனை (க) "யதிதேஹே ப்ரஹ்மசர்யம் ஸ்யாந்மயிஸத்யஞ்ச திஷ்டதி । அவ்யாஹதம்மமைஹ ஸ்வர்யம் தேநஜீவது பாலகஃ" என்றருளிச்செய்து, (உ) "பாதேநகமலாபோக ப்ரஹ்மருத்ராப்திதேநச - ப்ஸ்பர்சத்புண்டரீகாக்ஷஃ ஜீபாததலமஸ்தகம்." என்கிறபடியே திருவடிகளாலே சரீரத்தை எங்கும் மொக்க ஸ்பர்சித்து, மீளவும் உயிர் பெறுத்துகை. மைத்துனன்மாருருமகத்தே வீழாமே.

(க) "யதிதேஹே ப்ரஹ்மசர்யம் ஸ்யாந்மயிஸத்யஞ்ச திஷ்டதி - அவ்யாஹதம்மமைஹ ஸ்வர்யம் தேநஜீவது பாலகஃ" (உ) "பாதேநகமலாபோக ப்ரஹ்மருத்ராப்திதேநச - ப்ஸ்பர்சத்புண்டரீகாக்ஷஃ ஜீபாததலமஸ்தகம்."

னமத்துனன்மாரான பாண்டவர்களுடைய தேஹமும் பாரதயுத்தமாகிற ராஜஸயஜ்ஞத்திலே விழுந்து நசித்துப்போகாமே. மகம்- யஜ்ஞம். குருமுகமாய்க்கர்த்தான். குருமுகமாய்நின்று ஹிதோபதேசாதிகளைப் பண்ணி ரக்ஷித்தவன். இத்தால்- " எல்லாச்சேனையு மிருநிலத்த வித்த " என்கிறபடியே உபயஸேனையிலும் பூபாரமானவர்களை எல்லாம் நசிப்பிப்பதாக ப்ரவர்த்திக்கப்பட்டதாய், *மண்ணின்பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தவனுடைய திருவுள்ளத்துக்கு உகப்பாக விருக்குமதானையாலே- பாரதயுத்தத்தை ராஜஸயஜ்ஞமாக அருளிச் செய்தது. இதில் இவர்கள்விழுந்து நசியாமலிருந்தது- அடியேபிடித்து இவர்களை அபிமாநித்துக்கொண்டு குருமுகமாய் நின்று, வர்ஸ்த்தமானகாலத்தோடு புரஸ்த்தான காலத்தோடு வாசியற ஹிதத்தையே உபதேசித்துக்கொண்டு தீயவழிகளிலே போகாமல் விலக்கி நல்லவழிகளிலே நடத்தி இப்படி அபிமாநியாய் நின்று ரக்ஷித்துக்கொண்டு போருகையாலே என்னுமிவ்வர்த்தத்தை வெளியிட்டருளினராய்த்து. ஊர். இப்படி குருமுகமாய் நின்று பாண்டவர்களை ரக்ஷித்தவன், தன்னபிமாநத்திலே ஒதுங்கினவர்களெல்லாரையும் தீயவழி போய் நசியாமல் ரக்ஷிக்கைக்காக நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

திருமுகமாய்ச் செங்கமலம். செங்கமலமான்து, பெரிய பெருமாளுடைய திருமுகத்துக்குப் போலியாய். திருநிறமாய்க்சருங்குவளை. கருங்குவளையானது அவருடைய திருநிறத்துக்குப் போலியாய். பொருமுகமாய் நின்றலரும் புனலரங்கமென்பதுவே. பரபாகத்தாலே ஒன்றுக்கொன்று எதிர்பொருகிற முகத்தையுடைத்தாய்க்கொண்டு விகஸிக்கும்படியான ஜலஸம்ர்த்தியையுடைய அரங்கமென்பதுவே. ... ... கூ.

அ. நான்காம்பாட்டு. கைகேயிவசமடியாக நாட்டைவிட்டுக் காட்டிலேபோய் கண்டகரான ராக்ஷஸனை நிரஸித்தவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மூ.—கூன்றொழுத்தை சிதகுசைப்பக் கொடியவள்வாய் கடியசோற்கேட்
டூன்றெடுத்த தாயரையு மிராச்சியமு மாங்கொழியக்
கான்றெடுத்த நெறிபோகிக் கண்டகரைக் களைந்தானூர்
தேன்றொடுத்த மலர்ச்சோலைத் திருவரங்கமென்பதுவே. சு.

பதவுரை.

தேன் தொடுத்த— தேன்மாறாத
மலர்— மலர்களையுடைய
சோலை— சோலைகளாலே சூழப்பட்ட
திரு அரங்கம் என்பது—,
கூன்— கூனியாகிற
தொழுத்தை— அடியாட்டியானவள்
சிதகு— திருவபிஷேக மஹோத்ஸவத்துக்கு அழிவான கடுஞ்சொற்களை
உரைப்ப— சொல்ல
(அத்தையுட்கொண்டு பெருமாளைக் காடேற எழுந்தருள்ப்சொன்ன)
கொடியவள்— கொடியளான கைகேயியின்
வாய்— வாயிலுண்டான [கேட்டு
கடிய சொல் கேட்டு— வெட்டிய சொல்லைக் [ந்தருளி
ஊன்று எடுத்த தாயரையும்— பெற்றதாயான ஸ்ரீகௌஸல்யாரையும்
இராச்சியமும்— ராஜ்யத்தையும்
ஆங்கு ஒழிய— கைவிட்டு
கான் தொடுத்த— காடு அடர்ந்திருந்துள்ள
நெறி— வழியே [ந்தருளி
போகி— ஸ்ரீதண்டகாரண்யத்துக்கு எழுகண்டகரை— கண்டகராய் ஜநஸ்தாநவாஸிகளான ராக்ஷஸரை
களைந்தான்— நிரஸித்தவன் வர்த்திக்கிற
ஊர்— தேசம்.

வ்யா. கூன்தொழுத்தை சிதகுரைப்ப. கூனியாகிற அடியாட்டியானவள் திருவபி ஷேக மஹோத்ஸவத்துக்கு அழிவான துருக்திகளைச்சொல்ல. அதாவது (க) "ஜ்ஞாதிதாஸீ ஹீப தொஜாதா கைகேயீயாஸ்து ஸமேஹராஷிதா ப்ராஸாதம் சந்த்ர ஸங்காஶ மாருரோஹ யதர்ச்சயா" என்கிறபடியே ஜ்ஞாதிதாஸியானவிவள் யாதர்ச்சிகமாக மாளிகைத்தளத்திற்மேல் ஏறிப்பார்த்தவாறே, பெருமாளுடைய திருவபிஷேகத்துக்குத் திருப்படைவீடெல்லாம் கோடித்துக்கிடக்கிற படியையும், (உ) "ப்ரஹ்ருஷ்ட ஜநஸம்பாதா" என்கிறபடியே திரள் திரளாக வந்துகிடக்கிற ஜநஸம்மர்த்தத்தையும் மங்களவாத்ய கோஷங்களையுமெல்லாங் கண்டு ஸஹிக்கமாட்டாதே தளத்தினின்று மிறங்கிவந்து கைகேயியை பர்த்ஸித்து, "உன் மாற்றுட்டிமகன் அபிஷேகம் செய்யத்தொடுகிறான், உன்மகன் அவனுக்கு இனி இழிதொழில் செய்திருக்கு மித்தனையிறே, இத்தைப் பார்த்துக்கொண்டு நீ யிருக்கிறதே, அவனுடைய அபிஷேகத்தைக் குலைத்து உன்மகனை அபிஷேகம் பண்ணுவிக்கும்படி ராஜாவோடே சொல்லு; அதுக்கு உபாயம்,-முன்பே உனக்குத் தந்திருப்பது இரண்டுவரமுண்டே, அவை இரண்டையும்- உன் மகனை அபிஷேகம்பண்ணுவிக்கையும், ராமனைக் காடேறப்போக விடுகையும், என்று வேண்டிக்கொள்; ஸத்ய தர்மபரரான ராஜாவால் செய்யாதொழியப்போகாதுகாண்". என்று திருவபிஷேகத்துக்கு விக்நமான துருக்திகளைச் சொன்னளிறே. கோடியவள் வாய்க் கடியசொல்கேட்டு. இப்படி குப்ஜை சொன்ன வார்த்தையாலே கலங்கி, பின்பு ராஜாவுடனே "முன்புசொன்ன வரண்டுவரமும் எனக்கு இப்போது தரவேணும்; அதாவது- என்மகனை அபிஷேகம் பண்ணுவிக்கையும், ராமனைப் பதிநாலு ஸம்வத்ஸரம் வநவாஸார்த்தமாகப் போகவிடுகையும்" என்ன; இத்தைக்கேட்டு ராஜா இதுக்கு இசையாமை தோற்றவிருக்க; "அறு பதினாயிரம் ஸம்வத்ஸரம் ஸத்யதர்மத்தைத்தப்பாமல் நடத்திப் போந்தவன் இப்போது ஸத்யத்தை அதிக்ரமிக்கிறான், ஸகலதேவதைகளும் இத்தை அறியுங்கோள்" என்று இவள் கூப்பிட்டவாறே; அவன்செய்யலாவதற்று அநுமதிபண்ணி; அவ்வளவிலே, அவள்ஸமந்த்ரணைப் போகவிட்டு பெருமாளை அழைத்துவிட, அவர் எழுந்தருளி வந்து, சக்ரவர்த்தி கலங்கிக்கிடக்கிற படியைக்கண்டு, "இதுக்கடியென்?" என்று இவளைக்கேட்க, இச்செய்திகளையெல்லாம் சொல்லி, "உம்மைக்காடேறப்போகவிடுவதாக அழைத்துவிட்டார், உம்மைக்கண்டவாறே சொல்லமாட்டாமல் கிடக்கிறாரித்தனை; உங்கள் ஐயர் ஸத்யதர்மத்தை நோக்கவும் நீர் அவர்க்கு ப்ரியம் செய்யவும் வேண்டியிருந்தீராகில் அவர் நினைவு நான் சொல்லுகிறேன், நீர் கடுகக் காடேறப்போம்" என்று சொன்ன கொடுமையையுடையளான கைகேயி வாயில் இந்த வெட்டிய சொல்லைக்கேட்டு, தன்றெடுத்த தாயரையும் இராச்சியமும் மாங்கொழிய. "ஏகபுத்ரையான நான் உம்மைப் பிரிந்திருக்கமாட்டேன், கூடப்போருமித்தனை" என்று பின்றொடர்ந்த பெற்றதாயாரான கௌஸல்யாரையும், ஸ்த்ரீவாங்களோடு ஜங்கமங்களோடு வாசியறத் தன் குணங்களிலேயீடுபட்டு, பிரியில் தரிக்கமாட்டாதபடியிருக்கிற ராஜ்யத்தையும் கைவிட்டு. கான்தொடுத்த நெறிபோகி. (ஊ) "தேவதேவ நமஸ்தே" என்கிறபடியே காட்டோடு காடு தொடுத்துக்கிடக்கிறவழியே, "நெய்வாயவேல் நெடுங்கண்நீரிழிய மிளங்கோவும் பின்புபோக" என்கிறபடியே-பிராட்டியும் இளையபெருமாளும் பின்னே ஸேவித்துக்கொண்டு

(க) "ஜ்ஞாதிதாஸீயதோஜாதா கைகேய்யாஸ்து ஸமேஹராஷிதா ப்ராஸாதம் சந்த்ர ஸங்காஶ மாருரோஹ யதர்ச்சயா" (உ) "ப்ரஹ்ருஷ்ட ஜநஸம்பாதயாயம்" (ஊ) "தேவதேவ நமஸ்தே வநம்கத்வா."

வர ஸ்ரீதண்டகாரண்யத்திலே எழுந்தருளி. கண்டகரைக் களைந்தான். (க) " வஹிபச்ய ஸரீராணி " என்கிறபடியே ராக்ஷஸர் தின்ற உடம்பைக்காட்டி வந்துநின்ற தண்டகாரண்ய வாஸிகளான ரிஷிகளுக்காக, அவர்களை நித்யபீடை செய்துபோந்த கண்டகராய் ஜநஸ்தான வாஸிகளான ராக்ஷஸர் முதலானரை நிரஸித்தருளினவன். ஊர். ஏவம் பூதனனவன் இங் கமைத்த விரோதிகளை நிரஸித்து ஆச்ரித ரக்ஷணம் பண்ணுகைக்காக நித்யவாஸம் பண்ணு கிற தேசம்.

தேனித்யாதி. தேன்மாறுத மலர்களை யுடைத்தான சோலை. அன்றிக்கே, " தேன் " என்று- வண்டாய், வண்டுகள் மாறுமல் படிந்து கிடக்கிற புஷ்பங்க ளை யுடைத்தான சோலை என்னுதல்; " கோல்தேன் பாய்ந்தொழுகும் " என்கிறபடியே- கொம்புகளில் தேன் வைக்கப்பட்டிருப்பதாய்ப் பூமாறுத சோலை யென்னுதல். இப்படி யிருந்துள்ள சோலைகளையுடைய திருவரங்கமென்னும் திருநாமத்தையுடைய வதுவே. ...ச.

அ. ஐந்தாம்பாட்டு. ராவணவதம் பண்ணி, இந்த லோகத்தை ரக்ஷித்தருளினவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மு.—பெருவரங்க ளவைபற்றிப் பிழக்குடைய வீராவணனை
உருவரங்கப் பொருதழித்திவ் வுலகினைக் கண்பெறுத்தானூர்
408 குரவரும்பக் கோங்கலரக் குயில்கூவுங் குளிர்பொழில்சூழ்
திருவரங்கமென்பதுவே யென்றிருமால்சேர்விடமே. ரு.

பதவுரை.

பிழக்கு உடைய—தேவர், ரிஷிகள்முதலானு
ரிடத்து பிழைசெய்கையையே இயல்வாக
வுடைய
இராவணன்— ராவணனுடைய
உரு— ரூபமானது
அரங்க— சிந்நம் பிந்நமாம்படி
பொருது— போர்செய்து
அழித்து— ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே ப்ராண
னை யழித்து
இ உலகினை— இந்தலோகத்தை
கண்பெறுதான்— காத்தவனுய்
என— என்னுடைய
திரு மால்— ஸ்ரீயஃபதியானவன்
சேர்வு இடம்— விரும்பிச்சேரு மிடமான
ஊர்— தேசம்.

குருவு— குருவுகளானவை
அரும்ப— அரும்பிச்செல்லவும்
கோங்கு— கோங்குகளானவை
அலர— அலர்ந்து செல்லவும்
குயில்— குயில்களானவை
கூவும்— களித்துக் கூவும்படியான
குளிர்— குளிர்ந்த
பொழில்— சோலைகளாலே
சூழ்— சூழப்பட்ட
திரு அரங்கம் என்பது—;
பெரு— பெரிய [வரங்களானவற்றை
வரங்கள் அவை— ப்ரஹ்மாதிகள்கொடுத்த
பற்றி— தனக்கு பலமாகக்கொண்டு

வ்யா. பெருவரங்களவைபற்றி. ப்ரஹ்மாதிகள் கொடுத்த பெரிய வரங்களானவற் றைத் தனக்கு பலமாகக்கொண்டு. இந்த வரபலமாய்த்து இவனை அடித்து அழிவுசெய்து

(க) " வஹிபச்ய சரீராணி "

திரிகைக்குமேஹது. பிழக்குடைய விராவணனை. " இவ்வரமுள்ள வளவும் நமக்கு ஓரழிவு வாராது " என்று நினைத்து தேவதைகள் ரிஷிகள் முதலானுரெல்லாரளவிலும் செய்து திரிந்த பிழைகளை யுடையனை ராவணனை. பிழக்கு - பிழை. "ராவணனேனு கூராவணனு" என்கிறபடியே லோகத்தையெல்லாம் பட அடித்துக் கிடந்து கூப்பிடும்படி பண்ணியிறே இவன் திரிவது. உருவரங்கப் பொருதழித்து. இப்படியிருக்கிறவனை அழியச்செய்யு மிடத்தில், " தோள்கள்தலை துணிசெய்தான் " என்கிறபடியே - " அகப்படாதவன் அதப்பட்டான், தப்பாமல் கொன்றுவிடுவோம் " என்று பாராதே, தோள்களைக்கழித்தும் தலையைச் சிரைத்தும் போதுபோக்காக நின்று கொல்லுகையாலே ரூபமான அவயவங்கள் சிந்தும் பிந்துமாம்படி பொருது, பின்பு ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே ப்ராணபர்யந்தமாக அழித்து. இவ்வுலகினைக் கண்பெறுத்தான். இந்த லோகத்தைக் கண்பெறுவித்தவன். " கண் " என்று - நிர்வாஹக வஸ்துவைச் சொல்லுகிறது. இத்தால் - விரோதியான ராவணனை நிரஸித்து, அவனுலே நெருக்குண்ட ப்ராணிகளெல்லாம் ரக்ஷிக்கையாலே, இந்தலோகத்துக்குத் தானே ரக்ஷகனென்னுமிடத்தை யறிவித்தவனென்கை.

குரவித்யாதி. குரவுகளானவை அரும்பிச் செல்லவும், கோங்குகளானவையலர்ந்து செல்லவும், குயில்களானவை ஹர்ஷத்தாலேயிருந்து கூவும்படியான குளிர்ந்த சோலைகளாலே சூழப்பட்டிருக்கிற. திருவரங்கமென்பதுவே. திருவரங்கமென்று ப்ரஸித்தமாயிருக்கிற வதுவே. இத்தால் - அநேக புராண ப்ரசஸ்தமாகையாலும் ஆழ்வார்களெல்லாரும் ஒருமிடறுக அருளிச்செய்கையாலு முண்டான ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. என்திருமால் சேர்விடமே. ராவணவதாநந்தரம் " திருமகளோடு இனிதமர்ந்த " என்கிறபடியே— பிராட்டியோடே கூடி ரஸோத்தரனுயிருந்த என்னுடைய ஸ்ரீயஃபதியானவன் பரமபதாதிகளெல்லாவற்றிலுங்காட்டில் விரும்பி, ¶ விடாயர் மடுவிலே சேருமாபோலேசேருகிற ஸ்த்தலம்.

" இவ்வுலகினைக் கண்பெறுத்தானை என்திருமால் சேர்விடமான ஊர் திருவரங்கமென்பதுவே " என்று அந்வயம். ... ... இ.

அ. ஆரும்பாட்டு. பாதாளவாஸிகளான அஸுரர்களை, தேவர்களுக்காகத் திருவாழியை யேவி, இழங்கெடுத்துப் பொகட்டவன் வர்த்திக்கிற தேச மிதுவென்கிறார்.

மு.—கீழுலகிலசுரர்களைக் கிழங்கிருந்து கிளராமே
ஆழிவிடுத்தவருடைய கருவழித்த வழிப்பனூர்
தாழைமடலூடுசென்சித் தவளவண்ணப் போடியணிந்து
யாழினிசைவண்டினங்க ளாளம்வைக்கு மரங்களே. சுரி

பதவுரை.

யாழ்— வீணையினிசைபோன்ற
இன்— இனிய
இசை— இசையையுடைய
வண்டு இனங்கள்—வண்டின் திரள்களான்வை
தாழை மடலூடு—மலரத்தொடங்குகிறதாழம்பூ மடலினுள்ளே

(க) " ராவணேலோகராவணஃ. " ¶ விடாயர் - தாஹித்தவர்கள்.

உரிஞ்சி— உடம்பை உரோசிக்கொண்டு (அதிலுண்டான)

தவள வண்ணம்—வெளுத்தநிறத்தை யுடை

பொடி— சுண்ணத்தை [த்தான

அணிந்து—உடம்பெங்கு மணிந்துகொண்டு

ஆளம் வைக்கும்— (அந்தக் களிப்பாலே) 'தென தென' என்று ஆளத்திவைபா நின்றுள்ள

அரங்கம்— அரங்கமா நகரானது-;

கீழ் உலகில்— பாதாளலோகத்திலுள்ள

அசுரர்களை— அஸுரர்களை

கிழங்கிருந்து— அடிக்கிடந்து

கிளராமே— கிளராதபடியாக

ஆழி— திருவாழியாழ்வானை

விடித்து— ஏவிவிட்டு

அவருடைய— அவர்களுடைய

கரு— கர்ப்பமளவாக

அழித்த— அழித்துப்பொகட்ட

அழிப்பன்— சத்ருநிரஸனைகஸ்வபாவனனை வன் வர்த்திக்கிற

ஊர்— தேசம்.

வ்யா. கீழலகிலசுரர்களை. பாதாளலோக வாஸிகளான அஸுரர்களை. பாம்புக்குப் புற்றுப்போலே, என்றுமொக்க அஸுரர்களுக்கு வாஸஸ்தானமாயிறே பாதானந்தானிருப்பது. இப்படி யிங்கே யிருந்துவந்து தேவர்களோடே யுத்தம் செய்யாநிற்பர்களாய்த்து. அப்படி அவர்கள் வந்து தேவர்களை அடர்க்குங்காலத்தில், தேவர்களுக்காக நின்று அவர்களை அழியச்செய்யக் கடவனையிறே ஸர்வேச்வரன்றானிருப்பது. இப்படி பலகாலும் வர, அழியவிடச்செய்தேயும், பின்னையும் அடிக்கெடாமல் கிளர்ந்து வரப்புக்கவாறே. கிழங்கிருந்து கிளராமே. அப்படி அடிக்கிடந்து கிளராதபடியாக. ஆழிவிடித்து அவருடைய கருவழித்தவழிப்பன். * கருதுமிடம் பொரும் திருவாழியாழ்வானை யேவிவிட்டு, அவர்களுடைய கருவளவாக அழித்துப் பொகட்ட ப்ரதிபக்ஷ நிரஸந ஸ்வபாவன். ஊர். பின்பும் அங்ஙனேத்த விரோதிகளை நிரஸிக்கைக்காக நித்யவாஸம் செய்கிற தேசம்.

தாழைமடலூடுரிஞ்சி, மலரத்தொடங்குகிற காழம்பூமடலினுள்ளே பரிமளத்தில் லோபத்தாலே உடம்பை உரோசிக்கொண்டு புகுந்து. தவளவண்ணப் பொடியணிந்து. அதிலுள்ளிலுண்டான வெளுத்த நிறத்தையுடைத்தான சுண்ணத்தை உடம்பெங்கும் அணிந்துகொண்டு. யாழினிசை வண்டினங்கள் ஆளம் வைக்கும். அந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே, யாழோசைபோலே யிருக்கிற இனிய இசையையுடைய வண்டினுடைய திரள்களானவை பாடுகைக்கு அடிக்கொண்டு "தென, தென" என்று ஆளத்தி வையாநிற்கு மரங்களே. ... கூ.

அ... ஏழாம்பாட்டு. லோகபீடை பண்ணித்திரியும் பாபரான அஸுரர்களை நசிப்பித்துப் பொகட்டவன்வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மூ:—கோழிப்புலையே செழுங்குருதி கோழித்திழிந்து குமிழ்த்தெறியப்
பிழக்குடைய வசுரர்களைப்பிணம்படுத்த பெருமானூர்
தழுப்பரிய சந்தனங்கள் தடவரைவா யீர்த்துக்கொண்டு
தெழிப்புடைய காவிரிவந் தடிதொழுஞ் சீரரங்கமே.

பதவுரை.

தட— பெரிய
வரைவாய்—மலையிடத்தில்(வளருகையாலே)

தழுப்பு அரிய— ஒருவர் இருவரால் தழுவ அரிதாம்படி யிருக்கிற

சந்தனங்கள்— சந்தனமரங்களை
ஈர்த்துக்கொண்டு—(வேரோடே பிடுங்கி) இழுத்துக்கொண்டு
தெழிபபு உடைய— 'இத்தைகொண்டருள வேணு' மென்னுமாப்போலே யிருக்கிற த்வனியை யுடைய
காவிரி— காவேரியானது
வந்து— பூரவாரித்து வந்து
அடி— திருவடிகளை
தொழும்— தொழாநிற்கிற
சீர்— சிறப்பையுடைத்தான
அரங்கம்— திருவரங்கமானது:
கொழுப்பு உடைய— கொழுப்பையுடைத்தாய்
செழு— செழித்திருந்துள்ள
குருதி— ரக்தமானது
கொழித்து— ஊற்றுமாறுமல் கிளர்ந்து
இழிந்து— அருவிகுதித்தாற் போலே நிலத்திலே இழிந்து
குமிழ்த்து— குமிழிகளம்பி
எறிய— அலையெறியும்படியாக
பிழக்கு உடைய— லோகத்தை வருத்துகையாகிற பிழையையுடைய
அசுரர்களை— அஸுரர்களை
பிணம்படுத்த— நாசமாக்கிவிட்ட
பெருமான்— ஸர்வேச்வரன் நித்யவாஸம் பண்ணுகிற
ஊர்— தேசமாம்.

வ்யா. கொழுப்புடைய செழுங்குருதி. ஊட்டுப்பன்றிபோலே தினம் கொழுக்கும்படி போஷகபதார்த்தங்களை ஜீவித்து உடம்பை வளர்த்துக்கொண்டு திரிகையாலே, ரக்தமும் கொழுப்புடைத்தாய் அழகதாயிருக்குமிறே; அத்தைப்பற்ற "கொழுப்புடைய செழுங்குருதி" என்று அருளிச்செய்கிறார். கொழித்திழிந்து குமிழ்த்தெறிய. இப்படி யிருந்துள்ள ரக்தமானது ஊற்று மாறுமல் கிளர்ந்து அருவி குதித்தாற்போலே நிலத்திலே யிழிந்து குமிழி கிளம்பி அலையெறியும்படியாக. பிழக்குடைய வசுரர்களை. லோகத்தை யடைய பீடித்துக்கொண்டு திரியும் பிழைகளை யுடையரான அஸுரர்களை. இத்தால் அஸுர யோனியில் பிறந்தாரெல்லாரையும் நிரஸிக்கவேணுமென்னும் நிர்ப்பந்தமில்லையிறே; அவர்கள் செய்த பிழைகளைக் கணக்கிட்டே நிரஸிக்குமென்னுமிடம் தோற்றுகிறது. பிணம்படுத்த பெருமானூர். இப்படி யிருக்கிறவர்களை நிரஸிக்கிற விடத்தில், அங்கவைகல்யங்களைப் பண்ணிவிடுதல், குற்றுயிராக்கி விடுதல்செய்கையன்றிக்கே, நிரன்வயவிநாசமாக்கிவிட்ட ஸர்வேச்வரன் நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

தழுப்பரிய சந்தனங்கள் தடவரைவாயீர்த்துக்கொண்டு. பெரிய மலையிடத்திலே வளர்ந்து, ஒருவரிருவரால் தழுவ வரிதாம்படி யிருக்கிற சந்தனமரங்களை வேர்ப்ராட்ட அகழ்ந்து இழுத்துக்கொண்டு. தெழிப்புடைய காவிரிவந்தடிதொழும். "இத்தைக்கைக்கொண்டருளவேணும்" என்னுமாபோலே யிருக்கிற முழக்கின தவனியையுடைய காவேரியானது, ஆதரத்தோடே வந்து தன்கொண்டுவந்த சாத்துப்படியையும் பெரியபெருமாளுக்கு ஸமர்ப்பித்துத் திருவடிகளைத் தொழுதிற்கும். சீரரங்கமே. இப்படியிருந்துள்ள சிறப்பை யுடைத்தான அரங்கமே.

அ. எட்டாம்பாட்டு. ஸ்ரீவராஹமும் ஸ்ரீநரஸிம்ஹமுமாய் பூம்யுத்தாரணமும் ஹிரண்ய விதாரணமும் பண்ணினவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்

மூ.—வல்லெயிற்றுக் கேழலுமாய் வாளெயிற்றுச் சீயமுமாய்
எல்லையில்லாத் தரணியையு மவுணனையு மிடந்தா ரூர்
எல்லியம்போ திருஞ்சிறைவண் டெம்பெருமான் குணம்பாடி
மல்லிகைவெண் சங்கூது மிளாரங்க மென்பதுவே. அ.

பதவுரை.

இரு— பெரிய
சிறை— சிறகையுடைய
வண்டு— வண்டான்து
எல்லியம்போது— அந்திப்போதிலே
எம்— ஸர்வஸ்வாமியான
பெருமான்— பெரிய பெருமாளுடைய
குணம்— திவ்யகுணங்களை
பாடி— மிக்க அன்போடே பாடிக்கொண்டு
மல்லிகை— மல்லிகைப் பூவாஸிற
வெண் சங்கு— வெள்ளிய சங்கை
ஊதும்— ஊகாநின்றுள்ளதாய்
மதில்— மதிளையுடைத்தான
அரங்கம் என்பது—;

வல்— வலிதான
எயிறு— எயிற்றையுடைய
கேழலும் ஆய்— வராஹமுமாய்
வாள்— ஒளியையுடைய
எயிறு— பற்களையுடைய
சீயமும் ஆய்— (நர) ஸிம்ஹமுமாய்
எல்லை இல்லா— எல்லையில்லாத
தரணியையும்— பூமியையும்
அவுணனையும்— ஹிரண்யாஸுரனையும்
இடந்தான்— திரு எயிற்றாலும், திரு உகிராலும் மடித்தவன் வர்த்திக்கிற
ஊர்— தேசமாம்.

வ்யா. வல்லெயிற்றுக் கேழலுமாய். வலிதான எயிறுகளையுடைய வராஹமுமாய். * எயிற்றுக்கு வன்மையாவது - "ஊன்றியிடந்தெயிற்றிற்கொண்ட" என்கிறபடியே அண்டபித்தியிலே ஒட்டின பூமியை மறுபாடுருவக்குத்தி யிடந்தெடுத்து, தன்பக்கலிலே தரிக்கத்தக்க பலம். * கேழலாகவேண்டிற்று, ப்ரளயங்கதையான பூமியை யெடுக்கும் போது நீருக்கும் சேற்றுக்கும் இறுயாதவடிவுகொண்டு எடுக்கவேண்டுகையாலே, நீரும் சேறும் காணப் பணைக்கும்படியிறே வராஹஜாதியிருப்பது. (க)" ஆய் " என்றது-அவ்வவதாரத்தில் புரையற்றிருக்கை. மாயாமர்க்கத்தை மோந்துபார்த்து " ராக்ஷஸகந்தமுண்டு " என்று வெருவியோடிப் போயிற்றினவிறே மற்றுண்டானமர்க்கங்கள்: அப்படியன்றிக்கே, ஸஜாதீயங்கள் மோந்துபார்த்து " தன்னினம் " என்று விச்வஸிக்கும்படியிருக்கை. மநுஷ்யயோநியிலே அவதரித்தவிடத்தில் ஈச்வரத்வாபிமாநகந்தமற்று, (க) " ஸூகரதாமரஸமிவ நு " என்றிருந்தாற் போலேயாய்த்து திர்யக்யோநியிலே அவதரித்தாலுமிருக்கும்படி. " மாநமிலாப்பன்றியாம் " என்றுமிறே-இவர்திருமகளார். *மாநமிலாமையாவது-ஈச்வரத்வாபிமாநம் மறந்தும் இல்லாதபடியிருக்கை. " வராஹகல்பம் வாசியாநிற்கச்செய்தே, ' ஸ்ரீவராஹநாயநார்க்கு முத்தக்காதை யமுதுசெய்விப்பது ' என்று கிடந்ததாய், ' இதென்ன மெய்ப்பாடுதான்! " என்று நஞ்சீயர் வித்தராயருளுவர் " என்று ப்ரஸித்தமிறே. வாளெயிற்றுச் சீயமுமாய். ஒளியையுடைத்தான எயிறுகளையுடைய ஸிம்ஹமுமாய். கீழ், " வல்லெயிறு " என்றார்; பூமியை யெடுக்கத்தக்கபலம் சொல்லுகைக்காக; இங்கு, " வாளெயிறு " என்றார் - அழகுக்குடலாகையாலே. " அலர்த்தபழ்வாய் வாளெயிற்

(க) " ஆதமாநம் மாநுஷம் மந்யே "

ர்ரூர் கோளரியாய்" "ஏய்ந்தபேழ்வாய் வாளெயிற்ரூர் கோளரியாய்" என்று இவ்வவ நாரத்துக்கு எயிறு சொல்லுமிடமெல்லாம் அழகுக் குடலாகவிறே சொல்லுவது. "சியம்" என்றது - நரஸிம்ஹமமென்றபடி. "தேவாதிசதுர்வித ஜாதியில் ஒன்றிலும் படக்கடவே னல்லேன்" என்று அவன் கொண்டவரத்துக்கு விரோதமற அழியச்செய்கைக்காகவிறே இவ்வவதாரமாகவேண்டிற்று. (க)" நரஸ்யார்த்த நாஸ்ரூக்ர்ஹி ஸ்ரூ ஸ்யார்த்த நாஸ்ரூயா" என்னும்படியிறே அப்போது அவதரித்தது. ஆகையாலே தேவலம் ஸிம்ஹமமென்றிலும் நரஸிம்ஹமமென்னுமிடம் அர்த்தாத்ஸித்தமாய் வரும். "ஆப்" என்கிறவிது - இப்படி இரண்டுவடிவையும் சேர்த்துக்கொண்டு வந்தவிடத்தில் சேராச்சேர்த்தியா யிருக்கையன் றிக்கே, சேர்ப்பாலும் கண்டசர்க்கரையும் சேர்ந்தாற்போலே ஒன்றுக்கொன்று ரஸாவஹ மாய்ச் சேர்ந்து, அநுபவிப்பார்க்கு அத்யந்தபோக்ய மாயிருக்கையாலே. "அழகியான் காணேயினியுருவன்ரூனே" என்றருளிறே திருமழிசையாழ்வார். அங்காந்தவாயும் மொறுந்த மூகமும் நா மடிக்கொண்டவுதடும் குத்தமுறுக்கினகையும் அதிர்ந்த அட்ட ஹாஸமுமாயிரு க்கிற விருப்பிறே இவர்க்கு அழகிதாய்த் தோற்றுகிறது. ஆச்ரிதவிரோதி நிரஸநார்த்த மாகக்கொண்ட வடிவாகையாலே, அவ்வடிவும் அதிலுண்டான வ்யாபாரங்களுமெல்லாம், பகவத் குணஜ்ஞாந முடையவர்களுக்கு அழகுக்குடலாய்த் தோற்றுமிறே. எல்லையில்லாத் தரணியையு மவுணனையும். எல்லையில்லாத பரப்பையுடைய பூமியையும், எல்லையில்லாத பெருந்தவத்தை யுடையனான ஹிரண்யாஸுரனையும். பூமிக்கு எல்லையில்லாமையாவது - த்வீபங்களும் ஸமுத்ரங்களும் போலன்றிக்கே, எல்லாம் தன்னுள்ளேயாம்படி பஞ்சாசத் கோடி விஸ்தீர்ணையாயிருக்கை. ஹிரண்யனுடைய தபஸ்ஸுக்கு எல்லையில்லாமையாவது - இவன்கொண்டவரம் ஒருொன்றே அவதி காணவொண்ணாதபடியிருக்கை. இடந்தான். திரு வெயிற்ரூலும் திருவுகிராலும் இடந்தவன். திருவெயிற்ரூலே பூமியை யிடக்கையாவது - அண்டபித்தியினின்றும் ஒட்டுவிடுவித்தெடுக்கை. திருவுகிராலே ஹிரண்யனையிடக்கையா வது - "பொன்னன் பைம்பூண்நெஞ்சிடந்து" என்கிறபடியே - தேவர்களுடைய வரபல க்தாலே பூண்கட்டியிருக்கிற மார்வை, அகவாயில் ரக்தம் குடிகொண்டு "இவ்வையமூடு பெருநீரில் மும்மைபெரிது" என்கிறபடியே எங்கும் பெருகும்படியாக "பிளவெழுவிட்ட கூட்டம்" என்னும்படி இருபிளவாக்குகை. ஆக, ஹிரண்யாக்ஷனும் ஹிரண்யனும் ப்ரணயிநியான பூமிப்பிராட்டிக்கும் பக்தனான ப்ரஹ்லாதனுக்கும் வந்த ஆபத்துக்களை, இரண்டவதாரமாய் வந்து போக்கினபடி சொல்லிற்று. ஸ்ரீவராஹமாய் ஸ்ரீபூமிப்பிராட் டிக்குப் பண்ணின ரக்ஷணம், அல்லாத ரக்ஷணங்கள் போலன்றிக்கே முக்யமான ரக்ஷண மிறே எல்லார்க்குமேல. ஸ்ரீநரஸிம்ஹமாய் ப்ரஹ்லாதனுக்குப் பண்ணின ரக்ஷணமும், எல்லார்க்கும் கண்டு தெளியலாம்படி யிருக்குமிறே. ஊர்: இப்படி நித்யாச்ரிதையான பிராட்டியோடு இன்று ஆச்ரயித்த ப்ரஹ்லாதனோடு வாசியற தன்னை அழியமாறிவந்து ரக்ஷித்தவன், பின்புள்ளாரையும் ரக்ஷிக்கைக்காகவந்து வாஸம்பண்ணுகிற தேசம்.

எல்லியம்போதிருஞ் சிறைவண்டு எம்பெருமான் குணம்பாடி. "அறுகால்வரிவண்டுக ளாயிரமாமஞ்சொல்லி, சிறுகாலைப்பாடும்" என்ரூரே அங்கே; இங்கே இப்படி யருளிச் செய்கிறார். இத்தால்- திவ்யதேசங்களில் வர்த்திக்கும் வண்டுகளானவை, காலாநுகுண மாக, பண்களிலே, பகவத்குணங்களை, நியமேந பாடும்படி சொல்லுகிறது. எல்லியம்போது அந்தியம்போதிலே. இருஞ்சிறைவண்டு - பெரியசிறகை யுடைத்தான வண்டுகளாஞவை.

(க) "நரஸ்யார்த்ததநும் க்ர்த்வா ஸிம்ஹஸ்யார்த்ததநும்ததா."

பகவத்ப்ரவணமான விஷயங்களினுடைய ரூபகுணங்களும் உத்தேச்யமென்று ஓருக்குமவ ராகையாலேயிதே இவற்றினுடைய சிறகை வர்ணித்துக்கொண்டருளிச்செய்கிறார். எம்பெரு மான் குணம்பாடி. ஸர்வஸ்வாமியான பெரியபெருமாளுடைய, கீழ்ச்சொன்ன ஆச்ரிதரக்ஷ ணங்களா லுண்டான திவ்யகுணங்களை ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பாடி. மல்லிகை வேண்சங் கூதும். மல்லிகைப்பூவாகிற வெள்ளிய சங்கை ஊதாநிற்கும். அதாவது-ஸாயங்கால புஷ்ப மான மல்லிகையினுடைய பூவை அது இருந்து ஊதும்போது, அந்தப்பூவானது அலரு வதுக்கு முன்பு தலைகுவிந்து மேல்பருத்து காம்படிதோர்ந்து வெளுத்த நிறத்தையுடைத் தாய் சங்குபோலே யிருக்கையாலே, வெள்ளிய சங்கை இருந்து ஊதுமாபோலே யிருக்கு மாய்த்து. அத்தைப்பற்ற இப்படி யருளிச்செய்கிறார். மதிளரங்க மென்பதுவே. இப்படி யிருந்துள்ள சொலிச் சிறப்பை யுடைத்தாய் அரணைகப்போரும்படியான திருமதிளையுடைத் தாயிருக்கிற திருவரங்கமென்பதுவே. ... ... அ

அ. ஒன்பதாம்பாட்டு. அநேக தர்ஷ்டாந்தமிட்டுச் சொல்லவேண்டும்படியான விக்ரஹ வைலக்ஷண்யத்தை யுடையனும் ஆச்ரித வ்யாமுக்தனனவன் வர்த்திக்கிற தேச மிதுவென்கிறார்.

மூ.—குன்றுடு கொழுமுகில்போற் குவளைகள்போற் குரைகடல்போல்
நின்றுடு கணமயில்போல் நிறமுடைய நெடுமாலூர்
குன்றுடு பொழில்நுழைந்து கொடியிடையார் முலையணவி
மன்றுடு தென்றலுலா மதிளரங்க மென்பதுவே கூ.

பதவுரை.

தென்றல்— தென்றல் காற்றினது
குன்று— மலயபர்வதத்திலுள்ள
பொழிலூடு— பொழில்களினிடையிலே
நுழைந்து— நுழைந்து
கொடி— வஞ்சிக்கொடிபோன்ற
இடையார்— இடையையுடையரான ஸ்த்ரீ களுடைய
முலை— கலவைச்சாந்தணிந்த முலைகளை
அணவி— ஸ்பர்சித்து
மன்றூடு— நாற்சந்திகளினூடே
உலா— உலாவா நின்றுள்ளதாய்
மதிள— மதிள்களையுடையதுமான
அரங்கம் என்பது—;
கொழு— கழுத்தே கட்டளையாக நீரைப் பருகின
முகில்போல்— மேகம்போன்ற குளிர்த்தி யையுடையனும்
குவளைகள் போல்— கருநெய்தல்போன்ற பளபளப்பையுடையனும்
குரை— கோஷியா நின்றுள்ள
கடல்போல்— கடல்போன்ற காம்பீர்யத் தையுடையனும்
நின்றுடு— களிப்பாலேநின்று ஊடா நின்றுள்ள
கணம் மயில் போல்— மயில்திரள்போன்ற புகரையுடையனும்
நிறம் உடைய— அழகையுடையனுமான
நெடுமால்— ஆச்ரிதவ்யாமுக்தனன எம் பெருமான் வர்த்திக்கிற
ஊர்— தேசமாம்.

வ்யா.—குன்றுடு கொழுமுகில்போல்.. கழுத்தே கட்டளையாக நீரைமுகந்து, போகமா ட்டாதே மலையின் உச்சியிலேசாந்தமேகம்போலேயும். குவளைகள்போல். கண்ணுலேமுகந்

தறபஷிக்கும் குவளைகள்போலேயும். கூரைகடல்போல். அறபவித்து முடிக்கவொண்ணு மைக்கு கோஷிக்கிற கடல்போலேயும். நின்றுகேணமயில்போல். வைத்தகண் வாங்கவொ ண்ணுமைக்கு ஹர்ஷத்தாலே நின்று ஆடாநின்றுள்ள மயில்நிரள்போலேயும். நிறமுடைய. வடிவழகையுடைய. நிறம்- அழகு. அன்றிக்கே, திருமேனிநிறந்தன்னையே சொல்லிற்றுன போது, கண்டகண் மயிர்க்குச்சிவிடும்படியான குளிர்த்திக்கு-நீர்கொண்டெழுந்த காளமேக த்தின் நிறத்தையும், நெய்ப்புக்கு-குவளைப்பூவின் நிறத்தையும், இருட்சிக்கு-கடலின் நிறத் தையும், புகர்ப்புக்கு - மயில் கழுத்தின் நிறத்தையும் த்ருஷ்டாந்தமாகச் சொல்லுகிற தென்று நியமித்துக்கொள்ளவேணும். ஒன்றே உபமானமாகப் போருவதல்லாமையாலே அங்கும்இங்கும் கதிர்¶பெறுக்கிச் சொல்லுகிறார். நெடுமாலார். (க) " ஹே நாத " என்கிற படியே-இவ்வடிவழகை ஆச்ரிதர்க்கு முற்றூட்டாகக்கொடுக்கும் நிரதிசய வ்யாமோஹத்தை யுடையவன் நித்யவாஸம்பண்ணுகிறதேசம்.

குன்றித்யாதி. " தென்னன்பொதியில் செழும் சந்நின்தாகூனந்து " என்கிறப டியே மலயபர்வதத்தில் சந்தன வ்ருக்ஷங்களையுடைய பொழில்களுடே நுழைந்து அங்குண் டான பூக்களின் தாதுகளை அளந்து அரிமிதிபான பரிமளத்தைக் கொய்துகொண்டு டோ ந்து. கோடியிடையார் முலையணவி. கோர்மைக்கும் துடங்குதலுக்கும் கொடிபோலேயிருக் கும் இடையையுண்டையான ஸ்த்ரீகளுடைய சந்தன குங்குமாத்யலங்கார யுக்தமான முலைகளை ஸ்பர்சித்து அங்குண்டான பரிமளத்தையும் அளந்துகொண்டுபோந்து. மன்றுடுதென்றலுலா. அது கைபுகுந்த கர்வத்தாலே வெளிநிலத்திலே புறப்பட்டு மன்றுகளிலுடே தென்றலா னது உலாவா நிற்கும். மதிளரங்கமென்பதுவே. இப்படி தென்றலுலாவுமாய் அரணை கப் போரும் மதிளையுடைத்தானதுமான அரங்கமென்பதுவே. ... ... கூ.

அ. நிகமத்தில், இத்திருமொழியைக்கொண்டு பெரியபெருமாளை யேத்துமவர்கள் விஷயத்தில் தமக்குண்டான சேஷத்வப்ரதிபத்தியை யருளிச்செய்கிறார்.

மூ.—பருவரங்க ளைவைபற்றிப் படையாலித் தெழுந்தானைச்
செருவரங்கப் பொருதழித்த திருவாளன் றிருப்பதிமேல்
திருவரங்கத் தமிழ்மாலை விட்டுசித்தன் விரித்தனகொண்டு
இருவரங்க மெரித்தானை யேத்தவல்லா ரடியோமே. ய.

பதவுரை.

பரு— பெரிய
வரங்கள் அவை பற்றி-ப்ரஹ்மாதிகள் கொடு
த்தவரங்களை பலமாகக்கொண்டு
படை ஆலித்து எழுந்தானை-யுத்தவிஷயமா
கக் கர்வித்துக் கிளர்ந்துவந்த ராவணனை
செரு— யுத்தத்திலே
அரங்க— அவன்பிராணனெல்லாமழியும்படி
பொருது— போர்செய்து
அழித்த அழித்துப்போகட்ட
திரு ஆளன்—வீரஸ்ரீயையுடையவனுடைய
திரு பதி மேல்-திருப்பதிவிஷயமாக
விட்டுசித்தன்— பெரியாழ்வார் [யாய்
விரித்தன—விஸ்தரித்து அருளிச்செய்தவை
திரு அரங்கம்— பாட்டுத்தோறும் ' திருவர
ங்கம்' என்கிறதிருநாமத்தையுடைத்தாய்

¶— (ப) " கதிர்பொறுக்கி. " (க) " பக்தாகூம். "

தமிழ்மாலை கொண்டு—தமிழ்த்தொடையான இப்பதிகத்தையுங்கொண்டு

இருவர்—மதுகைடபர்களாகிறஇருவருடைய

அங்கம்—சரீரத்தை

எரித்தானை—திரு வனந்தாழ்வானுடைய மூச்சு வெப்பத்தாலே கொளுத்திப் பொகட்டவனை

ஏத்த வல்லார்—துதிக்க வல்லவர்களுக்கு

அடியோம்—நாங்கள் சேஷபூதர்.

வ்யா. பருவங்களைவபற்றி. ப்ரஹ்மாதிகள் பக்கலிலே பெற்ற பெரியவரங்களான வற்றைத் தனக்கு பலமாகப்பிடித்து. படையாலித்தெழுந்தானை. "தான்போலுமேன்றெழுந் தவன்" இத்யாதிப்படியே தன்னைப்போரப்பொலிய நினைத்து, யுத்தவிஷயமாக கர்வித்துக் கொண்டுவந்த ராவணனை. செருவரங்கப் பொருதழித்த. யுத்தத்திலே அவனுடைய அபிமானமெல்லாமழியும்படி. பொருது முடித்துப் பொகட்ட. திருவாளன் திருப்பதிமேல். வீரநீரையுடையவன் நிருப்பதிவிஷயமாக. தேசிகரான பெருமாளைச் சொன்னதெல்லாம் உலகுமிகாழியிலையாய், அந்தேசமெய்யாய்த்து இத்திருமொழிக்கு விஷயம். திருவரங்கத்தமிழ் மாலையிதுபாடி. பாட்டுத்தோறும் திருவரங்கமென்கிற திருநாமத்தை யுடைத்தான தமிழ்த் தொடையாக, பெரியாழ்வார் விஸ்தரிக்ஷ வருளிச்செய்த இப்பதிகத்தையுங்கொண்டு. இருவரங்க மெரித்தானை. மதுகைடபர்களாகிற இருவருடைய சரீரத்தையும் திருவனந்தாழ்வானுடைய ச்வாஸநிச்வாஸத்தாலே தக்தமாக்கிப் பொகட்டவனை. "காய்ந்திருளோமாற்றிக் கதிரிலகுமா மலிகதிர், எய்ந்தபணைக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப, வாய்ந்த, மதுகைடபரும் வயிறுருகிமாண்டார்" என்னக்கடவதிறே. ஏத்தவல்லாரடியோமே. இத்திருமொழியைக்கொண்டு, இப்படி விரோதிநிரஸநசீலரான பெரியபெருமாளை, வாய்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி ஏத்தவல் லவர்களுக்கு அடியராயுள்ளவர்கள் நாங்களென்று தம்முடைய ஸம்பந்திகளையும் கூட்டிக் கொண்டு அருளிச்செய்கிறார். இத்தால் இத்திருமொழியைக்கொண்டு பெரிய பெருமாளை யேத்துமவர்கள் விஷயத்தில் தமக்குண்டான ப்ரதிபத்தி விசேஷத்தை யருளிச்செய்தாராய்த்து. ... ...

தத்விஷயத்திலும் தத்விஷயமே உத்தேச்யமென்னும் ப்ரதிபத்தியாலே அவர் விரும்பி வர்த்திக்கிற திவ்யதேசமான திருவரங்கம் திருப்பதியினுடைய வைபவத்தை பலபடியாகப் பேசி யநுபவித்தார்; இப்படி யநுபவித்திருக்கச்செய்தேயும் இவ்வளவில் தமக்கு பர்யாப்தி பிறவாமையாலே மீளவும் ததுபயவிஷயாநுபவதத்பராய், முன்பு அநுபவித்தப்ரகாரமன்றியே முகபேதேந பெரிய பெருமாளுடைய திவ்யசேஷ்டித ரஸவிசேஷங்களை அத்யாதரேண அநுபவித்து விதராகா நின்றுகொண்டு தத்ஸம்பந்திதயா பரமப்ராப்யமான திருவரங்கம் திருப்பதியினுடைய வைபவ விசேஷங்களையும், முன்பு உக்தமான ப்ரகாரமன்றிக்கே ப்ரகாராந்தரேண பேசி யநுபவித்து ப்ரீதராய்ச் செல்லுகிறார்- இத்திருமொழியில். ... *

அ. முதற்பாட்டு. மீண்டு எழுந்தருளுமதுக்கு விச்வாஸமாக ஸ்ரீபரதாழ்வானுக்குத் திருவடிநிலைகளைக் கொடுத்துப்போய், தேவர்களுக்கு விரோதியான ராவணநிகரை நிரஸித்து மீண்டுவந்து லோகத்தைபாண்டருளினவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

உ.—மரவடியைத்தம்பிக்கு வான்பணயம் வைத்துப்போய் வானோர்வாழச்
செருவுடையதிசைக்கருமந் திருத்திவந்துலகாண்ட திருமால்கோயில்
திருவடிதன்திருவுருவந் திருமங்கைமலர்க்கண்ணுங் காட்டிநின்று
உருவுடையமலர்நீலங் காற்றூட்டவோசலிக்கு மொளியரங்கமே. க.

பதவுரை.

உரு உடைய— அழகையுடைய
நீலம் மலர்— கருநெய்தல் மலரானது
திரு அடிதன்— பெரிய பெருமாளுடைய
திரு— அழகிய
உருவும்— திருமேனி நிறத்தையும்
திருமங்கை— பெரிய பிராட்டியாருடைய
மலர்— விகஸிதமான
கண்ணும் — திருக்கண்களின் நிறத்தையும்
காட்டி நின்று—ப்ரகாசிப்பித்து நின்றதாய்
காற்று ஊட்ட— காற்று அசைக்க
ஓசலிக்கும்— அசையா நின்றுள்ள
ஒளி— ஒளியையுடைத்தான
அரங்கம்— திருவரங்கமான்து;—
தம்பிக்கு — (சித்ரகூடத்தில் ப்ரபத்தி பண்ணின்) தம்பியான ஸ்ரீபரதாழ்வானுக்கு
மரம் அடியை— திருவடி நிலைகளை
வான்பணயம் வைத்து — மீண்டெழுந்தருளுவர் என்று மிகவும் நம்புகைக்கு அடுகாக வைத்து
வானோர்— ராக்ஷஸரால் நலிவுபட்ட தேவர்கள்
வாழ— அலைச்சலற்று வாழும்படியாக
போய்— சித்ரகூடத்தினின்றும் அவ்வருகேபோய்
செரு உடைய—யுத்தம்செய்கைக்கு இட்டுப் பிறந்த
திசை— தக்ஷிணதிக்கிலே சென்று
கருமம் திருத்தி— ராவணநிகரை நிரஸித்து விபீஷணழ்வானை ராஜ்யாபிஷேகம் பண்ணிவைத்து
வந்து— பிராட்டியோடேகூட திருவயோத்யைக்கு எழுந்தருளி
உலகு— லோகத்தை
ஆண்ட— ஆண்டருளின
திரு மால்— ஸ்ரீயஃபதியாகிற
கோ— எம்பெருமானுக்கு
இல்— வாஸஸ்தாநமாம்.

வ்யா. மரவடியைத்தம்பிக்கு வான்பணயம் வைத்துப்போய். கைகேயி, "ராஜ்ய" என்ற ஸ்வாதந்த்ர்யத்தை ஆசாபித்துவார்த்தை சொன்னபோதே பிடித்து தத்கதசித்தனு யிருந்து, சக்ரவர்த்திக்கு சாஸ்த்ரார்த்தங்களைப் பண்ணிஷிட்ட வரந்தரம் தன்னை அபிஷேகம் செய்வதாக உத்யோகித்துக் கொண்டிருந்த ராஜலோகத்திலுள்ளாரும் பௌரஜானபதங்களு மாயுள்ள ஸபாமத்யத்திலேவந்து, தன்னுடைய ஆற்றுமைமேதாற்ற ப்ரலாபித்து, புரோஹி தனை ஸ்ரீவஸிஷ்ட்ட பகவானையும் கர்ஹித்து, "பெருமாளுக்கு சேஷபூதனை நான் முடி சூடி ராஜ்யம் பண்ணுகைக்கு அர்ஹனல்லேன்" என்னுமிடத்தை யறிவித்து, பின்பு எல் லாரையுங் கூட்டிக்கொண்டு திருச்சித்ரகூடத்திலேவந்து தன்னுடைய ஆர்த்திதோற்றத் திருவடிகளிலே விழுந்து சரணம்புகுந்து, தான் விண்ணப்பம்செய்தது மாறுமல் தெய்கைக் கிடான ப்ராப்திகளையெல்லாம் புரஸ்கரித்து, "தேவரீர் மீண்டெழுந்தருளித் திருவபிஷே கம்பண்ணி பரிபாலனம் பண்ணவேணும்" என்று கண்ணும் கண்ணீருமாய்க்கொண்டு ப்ரார்த்திக்க தம்பி யான ஸ்ரீபரதாழ்வானுக்கு; "பிள்ளாய்! நீ நம்மை நிர்ப்பந்திக்கக் கடவையல்லை, உன்னை ஸ்வதந்த்ரனாக்கி வார்த்தைசொன்னோமதிலே உன் ஸ்வரூபானுரூபமான பாரதந்த்ர்யத்தைப் பெற்று நீபோ, நாம் பதினாலு ஸம்வத்ஸரமும் கழிந்தாலொழிய மீளுவதில்லை" எனறு ஒருபடிப்பட அருளிச்செய்கையாலே; "திருவுள்ளக்கருத்து இது, ஆனபின்பு நாம் இனி நிர்ப்பந்திக்கக் கடவோமல்லோம்" என்று மஸ்ஸுமீண்டு, "அடியேனுடைய ஸ்வா தந்த்ர்ய நிவர்த்திக்கும், தேவரீர் மீண்டெழுந்தருளும் விச்வாஸத்துக்கும் ஹே துவானதுதானே" என்ன; "இரண்டுக்குமாக இத்தைக்கொண்டுபோ" என்று திரு வடிநிலைகளைக் கொடுத்து. (க) "வாஹுகேவாஹ்யராஜ்யாய க்யாஸம் தத்வாபுரஃபுரஃ நிவர்த்தயாமாஸததோ பர தம் பரதாக்ரஜஃ" என்கிறபடியே இத்தைப் பலகாலு மருளிச்செய்து ஸ்ரீபரதாழ்வானை உகப்பித்து மீளவிட்டு எழுந்தருளுகையாலே "மரவடி யைத் தம்பிக்கு வான்பணயம் வைத்துப்போய்" என்கிறார். பணயமாவது - விச்வாஸ ஹேதுவாயுள்ளது. "வான்பணயம்" என்கையாலே - மஹா விச்வாஸ ஹேதுவாயுள்ள தென்னுமிடம் தோற்றுகிறது. ".வான்" என்று - வலியாதல்; பெருமையாதல். போய் அவனை மீளவிட்டபின்பு திருச்சித்ரகூடத்தினின்றும் அவ்வருகே யெழுந்தருளினபடி யைச் சொல்லுகிறது. இத்தால் - தண்டகாரண்யத்திலே யெழுந்தருளினது முதலாக லங்காபர்யந்தமாக் எழுந்தருளின தூரமெல்லாம் சொல்லுகிறது.

வானோர்வாழ.(உ) "ஸஹிதேதவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபிஃ - ஆர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ்ஸநாதநஃ" என்கிறபடியே - ராவணனாலே பீடி தராய் தத்விஷயார்த்திகளாய்ச் சரணம்புகுந்து அவதரிப்பித்த தேவர்களானவர்கள் தந்தாம் பதங்களிலே அலைச்சலற்றிருந்து வாழும்படியாக. செருவுடைய திசைக்கருமம் திருத்தி- "செரு" என்று - யுத்தம். "செருவுடைய திசை" என்று - தக்ஷிணதிக்கைச் சொல் லுகிறது. இத்திக்கிலேயிறே - ராவணாதி ராக்ஷஸரெல்லாருங் கூடிக்கொண்டிருந்தது. இங்

(க) "பாதுகேசாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் தத்வாபுரஃபுரஃ நிவர்த்தயாமாஸததோ பர தம் பரதாக்ரஜஃ."

(உ) "ஸஹிதேதவைருதீர்ணஸ்ய ராவணஸ்ய வதார்த்திபிஃ - ஆர்த்திதோ மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ்ஸநாதநஃ"

தத் இல்சக்கருமம் திருத்துகையாவது - "நாட்டை நலியுமரக்கரை நாடித்தடிந்திட்டு" என்கிறபடியே - தன்னுடைய அபிமாநாந்தர்ப் பூதமான நாட்டை நலிந்து திரிகிற ராக்ஷஸ ராணவர்களை, இருந்த விருந்தவிடங்களிலே தேடிச்சென்று கொன்று, ஜநஸ்தாநத்திலிருந்த ராக்ஷஸரை முதலறமுடித்த விசேஷத்தைக்கேட்டு, ராவணன்வந்து, தண்டகாரண்யத்திலே எழுந்தருளியிருக்கச்செய்தே பிராட்டியைப் பிடித்துக்கொண்டுபோக, அது நிமித்தமாக, (க) "கரிஷ்யேமைதிலீ ஹேதோராபிசாசமராக்ஷஸம்" என்று ஸங்கல்பித்து அவர்களைத் தேடித்திரியச்செய்தே, ராஜ்யதாரங்களை யிழந்து சுரமண்டலத்துகிடந்த மஹாரா ஜரைக்கண்டு அவரோடே உறவுகொண்டு அவருக்கு சத்ருவான வாலியை நிரஸித்து அவ ரை ராஜ்யதாரங்களோடே கூட்டி, பின்பு அவரையும் அவருடைய பரிகரத்தையும் துணையாகக் கொண்டு கடலை யணைசெய்து, "மறுகரை யதனிலேறி" என்கிறபடியே - அவ்வழியாலே லங்கையிலே போய்ப்புக்கு, "எரிநெடுவே லரக்கரோடு மிலங்கைவேந்த னின்னுயிர்கொண்டு" என்கிறபடியே - * இலங்கை பாழாளாம்படி, ராவணனுடைய பரிகரமான ராக்ஷஸரை யடை யக் கொன்று, பின்பு ராவணன்றன்னையும் முடித்து, லங்கைக்கு ராஜாவாக விபீஷணழ்வானை அபிஷேகம் பண்ணிவைக்கை.

வந்து. ராவணவதாநந்தரம் பிராட்டியோடே கூடியருளி, (உ) "வதகூடிஸஹி வஷிணு வடிவுகொடி ரவமதயழி । நதிகுலபீயதிகுவாஜ வுவெகுர்ரிஜ ஹ• தாஸநழி" என்று ப்ரதிஜ்ஞை பண்ணிப்போன ஸ்ரீபரதாழ்வானை அழியக் கொடுக்கவொ ண்ணாது என்று புஷ்பகவிமாநத்திலேயேறி பெரிய த்வரையோடேமீண்டு திருவயோத்தை யிலே யெழுந்தருளி. உலகாண்ட. எழுந்தருளினப்போலே திருவபிஷேகம் பண்ணியருளி பதிநலாண்டுபிரிந்து உருவிக்கிடந்த திருவயோத்தையிலும் கோஸல ஜநபதத்திலுமுள்ள ப்ராணிகளானவை வாழும்படியாகவும், (ங) "ஸகிகிய நவஸுவெகொ நாஹுஹிம்வ நுவஸுஸுழி" என்கிறபடியே - சிறியத்தைப்பெரியது நலியாதபடியாகவும், (ச) "ஸாகொ ஸாகொஸுஉதி வுஜா நாகிஹ்வநு கயாஃ" என்கிறபடியே - நாடடங்கத் தன்னுடைய குணஜிதராய்த் திருநாமமேசொல்லி வாய்புலத்தும்படியாகவும், (ஞ) "ஞஷகு ஹஹ ஸ்ராணி ஞஷகுஞ கதிகிவ। ஸாகொவாஜு கிவாஹிகா" என்கிறபடியே - பதிநே ராயிரம் ஸம்வத்ஸரமிருந்து லோகத்தை ஸவிநயமாக ஆண்டருளினை. திருமால்கோயில். இப படி ராஜ்யத்தை நிர்வஹிக்கிறவளவில், பிராட்டியைப்பிரிந்து நெடுங்காலமிருந்த இழவுதீர "திருமால்" என்னும்படி பின்பு அவளோடே கூடினவன், ஆச்ரித ஜநங்களை யெல்லாம் ரக்ஷிக்கைக்காக நித்யவாஸம் பண்ணுகிறகோயில்.

திருவடியிதயாதி. "ஸாவஸ்வாமியான பெரிய பெருமாளுடைய அழகிய திருமேனி நிறத்தையும், பெரிய பிராட்டியாருடைய விகஸிதமான திருக்கண்களின் நிறத்தையும் ப்ரகா சிப்பித்து நின்று, அழகையுடைத்தான நீலமலானது, காற்று அசைக்க அசையாநிற்கும் ஒளியையுடைத்தான திருவரங்கம். "ஓ சலிக்கும்" என்கிறவிடத்தில், ஓகாரம் - சிறப்பி

(க) "கரிஷ்யேமைதிலீ ஹேதோராபிசாசமராக்ஷஸம்." (உ) "சதுர்த்தசேஹி ஸம்பூர்ணே வர்ஷேஹநி ரகூத்வஹம்-நத்ரக்ஷ்யாமிய தித்வாந்து ப்ரவேக்ஷ்யாமி ஹுதாசநம்." (ங) "ராமமேவாநு பச்யந்தோ நாப்யஹிம்ஸந்பரஸ்பரம்." (ச) "ராமோராமோராம இதிப்ர ஜாநாமபவந்கதாஃ" (ஞ) "தசவர்ஷஸஹஸ்ராணிதசவர்ஷசதாநிச-ராமோராஜ்யமுபாஸித்வா"

லேபாதல்; அவ்யய்மாதல். " அரங்கமே " என்கிறவிடத்தில், ஏகாரம் - அவதாரணவாசகமாய், ஸ்தலாந்தரங்களை வ்யாவர்த்திக்கிறதாதல்; ஈற்றசையாதல். ... ...க.

அ. இரண்டாம்பாட்டு. புருஷகாரபூதையான * பிராட்டிதானே சிதகுரைக்கிலும் அவளோடே மறுதலித்துநின்று ஆச்ரிதரை ரக்ஷித்தருளும் பெரியபெருமாள் குணத்தை யருளிச்செய்து, : இப்படி யிருக்கிற விவர்க்கொழிய வேறொருவர்க்காளாவரோ வென்கிறார்.

மூ.—தன்னடியார் திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ் சிதகுரைக்குமேல்
என்னடியாரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தாரென்பர்போலும்
மன்னுடையவிபீடணற்காய் மதிளிலங்கைத்திசைநோக்கி மலர்க்கண்வைத்த
என்னுடையதிருவரங்கர்க்கன்றியு மற்றொருவர்க்காளாவரே. உ.

பதவுரை.

தாமரையாள் ஆகிலும் — புருஷகாரபூதையான பிராட்டியாரேயாகிலும்
தன் அடியார் திறத்தகத்து — தனக்கு அடிமைப்பட்டவர் விஷயத்திலே
[தனக்கு - எம்பெருமானுக்கு]
சிதகு — அவர்கள் குற்றங்களை
உரைக்கும் ஏல் — கணக்கிட்டுச் சொல்லத் தொடங்கினாளேயாகில்
என் அடியார் — 'எனக்கு சேஷபூதரான வர்கள்
அது — பேர்சொல்லவுங் கூடக் கூசவேண்டும்படியான அக்குற்றங்களை
செய்யார் — செய்யமாட்டார்கள்'
செய்தார் ஏல் — (பொறுக்கைக்கு எம்பெருமானுண்டு என்னும் நினைவாலே, பராமாதிகமாகச்) செய்தார்களேயாகிலும்
நன்று செய்தார் — அவைநற்றங்களே
[அவை எனக்கு போக்யங்களே என்றபடி.]
என்பர் போலும் — என்றாற்போலே சில உதாஸீநோக்திகளை அவளோடே மறுதலித்து வாய்திறந்து சொல்லுமவராய்
மன் உடைய — செல்வம்மாறுத
விபீடணற்காய் — ஸ்ரீவிபீஷணழ்வானுக்காக
மதிள் — மதிளையுடைத்தான
இலங்கை திசை நோக்கி — இலங்கை முகமாக
மலர் கண் வைத்த — குளிர்ந்தகண்களும் நானுமாய்ப் பள்ளிக்கொண்டருளுமவனுய்
என்னுடைய — எனக்கு ஸ்வாமியான
திரு அரங்கர்க்கு அன்றியும் — பெரிய பெருமாளை யொழிய
மற்று ஒருவர்க்கு — வேறொருவருக்கு
ஆள் ஆவரே — அடிமை செய்வரோ?.

வ்யா. தன்னடியாரித்யாதி. †பிராட்டி சிதகுரைத்தாலும் " குணத்தை தோஷமாகப்ரமித்தாயோ " என்றிறே அவன் பாசுரம். பெரிய பெருமாளுடைய ஆச்ரிதபக்ஷபாதத்விசயஞ் சொல்லுகிறது. இருவரும் ‡ இசலி ஆச்ரிதரை நோக்கும்படி சொல்லுகிறது. "என்னடியா ரதுசெய்யார் " என்பதிலும், " சிதகுரைக்கும் " என்கிறதிறே உத்தேச்யம்;— கைக்கொள்ளுகைக்குச் சொல்லும் வார்த்தைபோலன்றிறே கைவிடாமைக்குச் சொல்லும் வார்த்தை. " அடியார் " என்று - ஸ்வாதந்த்ர்யநிவ்ருத்தி; " தன்னடியார் " என்று - அந்யசேஷத்வ நிவ்ருத்தி. " அடியார் " என்பது - சேஷியும் உபாயமும் உபேயமும் தானுகப்

† இப்பாட்டை * சென்னியோங்கு வ்யாக்யாநத்திலே பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநித்த ப்ரக்ரியைக்கிணங்க வ்யாக்யாநித்தருளுகிறாரென்று கண்டுகொள்வது.

‡ இசலி ஸ்பர்த்தித்து.

பற்றினவர்களே. " அடியார் " என்று நிரூபகம்-இவர்களுக்கு; குல சரண கோத்ராதிகள் நிரூபகம் மற்றையார்க்கு. ஔபாதிகமுமாய் அநித்யமுமாயிருக்கும் அது; நிரூபாதிகமுமாய் நித்யமுமாயிருக்கும் இது, " பலசதுப்பேதிமார் " என்று நிரூபகம் அவர்களுக்கு; " திருநாரணன் தொண்டர் " என்றிறே இவர்களுக்கு நிரூபகம். ஒரு மிதுநம் சேஷியானால் " தம்மடியார் " என்னவேண்டாவோவென்னில்; " தன் " என்கிறதுக்குள்ளே, தானும் அந்தர்ப்பூதையாகையாலே, அவன் ஸ்வரூபரூபகுணவிபூதி யித்தனையும் இவள் கோதாயல் வாசியிறே யென்னுதல்; " அடியார் " என்பதுக்குள்ளே அடிமையில் அந்தர்ப்பாவம் தனக்கு முண்டாகையாலே யென்னுதல்; இத்தால் - நாரகோடிகடிதையென்கை. (க) " மித்ர ஹாவெந " என்றும் " உகந்தமிதாழன்" என்றும் அவன்நிஜவாகையாலே அவன்முன்னே " நம்மடியார் " என்னமாட்டாளே, தானும் (உ) " மித்ரளவயிகழ் " என்றாளே, அத்தாலேயென்னுதல். " அடியார் " என்கிற பஹுவசநம்- ஊர் இரண்டிட்டவாறே அடியாரு மிரண்டிட்டமே. " மேலாத்தேவர்களும் நிலத்தேவரும் " என்று -இந்நிலத்தேவர்விஷயமாகவிறே சிதகுரைப்பது. * அருள்புரிந்த சிந்தை அடியார்மேல்வைத்துப் பொருள்தெரிந்து காண்குற்றவப்போது இருள் தெரிந்துநோக்கின அடியார்விஷயமிறே இது. திறத்தகத்து - அவர்விஷயமாக. தாமரையாளாகிலும்-பெரிய பிராட்டியாரேயாகிலும். அபிசப்தம்-ஆச்சிதவிச்லேஷம் பொறுக்கமாட்டாத மார்த்தவபரம்; " தன்னடியார் " என்னுப்படி காட்டிக்கிகாடுக்கையாலும் சொல்லக்கூடாது. வெந்நீரைக் குளிர்நீராக்குமத்தனையல்லது தான் சுடக்கூடாதிறே; அப்படியே இவள் சிதகுரைக்கக்கூடுமோ. " தன்னகத்திருமங்கை தங்கியசீர்மார்வன் " என்று - தான் ஸத்தைபெறவிறே அவளநுபவிப்பது; இப்படி ஸத்தைபெறும்படியான போகத்திலே புருஷகாரமாம்போது தெளிவுண்டாகவேணும்; அப்போது ப்ரணயித்வத்துக்கு நமஸ்காரமிறே. ஆனால் புருஷகாரமும் போகமும் சேரும்படி யென்னெனில்; இவளைப்போலே அவன்றானும் " பித்தர் பனிமலர்மேற் பாவைக்கு " என்று-இவள் விஷயத்தில் ப்ரேமம்கனத்திருக்கும். இருவர்க்குமுண்டான ப்ரேமம் இவர்கள்பாசுரத்திலே தெரியுமிறே. (கு) " நஜீவெயம் க்ஷணமபி " என்னும் ஒருதலை; " இறையும்- அகலகில்லேன் " என்னும் ஒருதலை. அவன் வைச்வரூப்யமெல்லாங்கொண்டு இவளைநுபவிக்கவிழிந்தானும், தன் குணரூப சேஷ்டிதங்களாலே குமிழிநீருண்ணப்பண்ணும்; இவ்வநுபவஜநிதப்ரீதிக்குப் போக்குவீடாக " உனக்கென்செய்கேன் " என்று ஒன்று கொடுத்தல்லது தரிக்கமாட்டாதவளவிலே, " நாம் இவன்பக்கலிலே ஒன்று கொள்ளாதபோது இவன் முடியும்" என்று பார்த்து, அவன் " உனக்குவேண்டுவதென்? " என்றவளவிலே, " சேதநாபராதத்தைப் பொறுக்கவேணும் " என்ன; தன் ஸ்வாதந்த்ர்யத்தையும் இவர்கள் அபராதத்தையும் சாஸ்த்ர மர்யாதையையும் மறந்து " பொறுத்தேன் " என்ன; " இவன் பொறுத்தது நமக்காகவோ, இவர்களுக்காகவோ, தன் போகத்துக்காகவோ " என்று ஆராயகைக்கச்சிதகுரைக்கத் தொடங்கினளாகில்; " என்னடியாரதுசெய்யார்" என்னும் அவன்; நீ சிதகுரைக்கக் கூடாதாப்போலே அவர்கள் செய்யவுங்கூடாது, " ஸாக்ஷியுண்டு " என்னினும் அவர்கள் செய்யக்கூடாது, உன் ப்ரமமாமித்தனை. என்னடியாரதுசெய்யார். ஸ்வதந்தரரும் அந்யசேஷபூதரும் செய்யுமத்தை என்னடியாரும் செய்வார்களோ. " செய்தார்கள் " என்று நிர்ப்பந்தித்தாயாகில்; அவர்கள் என்னடியாராகிறார், உன்னடியாரன்றே, நீ சொல்லநில்லு. அதுசெய்யார். ஆச்ரயணத்துக்கு முன்பு இவள் மன்றுடும், பின்பு அவன் மன்றுடும். " அன்

(க) " மித்ரபாவேந. " (உ) " மித்ரமௌபயிகம். " (கு) " நஜீவேயமக்ஷணமபி "

26-11-09

நின்ஞதனசெய் சிசுபாலன்" என்ருற்போலேயும், "இவள் சிதகுரைக்கும்" என்ருற்போ லேயும், ஈச்வரனும் "அதுசெய்யார்" என்று அதின் பேர்சொல்லக் கூசினபடி. செய்தா சேல் நன்ருசெய்தார். "நாமுண்டு" என்றும், "ஒருப்ரமாணமுண்டு" என்றும், "நாம் பொறுப்போம்" என்றும் நினைத்துச் செய்தார்களாகில் அழகிதாகச்செய்தார்கள். ஒருகா மாதர்மறும் பரலோகமுமில்லை"என்றுசெய்தார்களன்றே. "ப்ராமாதிகத்துக்கு நாமுளோம்" என்றன்றேசெய்தது. அதாவது- மடலெடுக்கையும், காமன்காலிலே விழுகையும். ["செய் யுங் கிரிசைகள்" இத்யாதி.] என்பர். "நாம்நெஞ்சாலே பொறுத்து இவளுக்கு முகம் கொடுத்துக்கேட்கில் இவள் இன்னமும் குறைசொல்லக்கூடும்" என்று, வாய்திறந்தருளிச் செய்வர். போலும். "ஒங்கான், போ" என்ருற்போலே உதாஸீநோக்கி.

மன்னுடைய விபீடணர்க்காய். கீழ் அருளிச்செய்த அர்த்தத்தை முதலிக்கிறார். ஐச் வர்யம்மாறுத விபீஷணர்க்காக. பிராட்டியையும் விட்டுப் பற்றவேண்டும்படியான மஹாராஜ னையும் விட்டு, "விபீடணற்கு வேறுக நல்லானை" என்னும்படியிறே விபீஷணபக்ஷபாதம். ஆகையாலே சேர்க்கைக்கீடான பாசுரங்கேட்குமித்தனை யொழிய பிரிப்பார்பாசுரங் கேளா னென்கிறது. "குற்றமுண்டு" என்ற மஹாராஜரையும், "குற்றமில்லை" என்ற திரு வடி இளையபெருமாளையும் பூர்வபக்ஷமாக்கி, "குற்றமுண்டு, நான்கைக்கொள்ளக்கடவேன்" என்றதிறே பெருமாள். "சிதகுரைக்கும்" என்றது மஹாராஜர் கோடி; "என்னடியார் அதுசெய்யார்" என்றது திருவடி இளையபெருமாள்கோடி. சிதகுரைக்கை புருஷகாரகர்த் யம்; "அடியார் அதுசெய்யார்" என்றது சரணாகத க்ர்த்யம்; "நன்றுசெய்தார்" என்றது சரண்ய க்ர்த்யம். மதிளிலங்கைத் திசைநோக்கி. விபீஷணனையும் லங்கையையும் மதிளையும் அத்திக்கையும் நோக்கியிறே கண்வளர்ந்தருளுகிறது. மலர்க்கண். பெரியபெருமாள் திருக் கண்கள் ஆச்ரிதரைக்கண்டவாறே மலர்ந்தபடி. மலர்க்கண். *கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செல்வரியோடி நீண்டதிறே திருப்பாணழ்வாரைக் கண்டவாறே. என்னுடைய திரு வரங்கர்க்கு. இச்செயலுக்குத் தோற்று அடிமைபுக்கு எழுதிக்கொடுக்கிறார். மற்றொருவர்க் காளாவரே. "மற்றொன்றினைக்காணு" என்கிறபடியே பெரியபெருமாளையொழிய வேறொ ருத்தர்க்கு ஆளாவரோ. ஆகையாலே, சிதகுரைத்தார் ஸ்ரீரங்கநாயகியாரும் "நன்று செ ய்தார்" என்று மன்றுடனர் பெரியபெருமாளாயுமிருந்ததிறே. *அன்றேதந்தையும் தாயுமா வார்-திருவரங்கத்துள்ளோங்கு மொளியுளார்தாமேயிறே. ஆளாவரே. "ஆட்கொள்வானம ருமூரணியரங்கம்" என்று ஆட்கொள்வார் பெரியபெருமாளிறே. "அணியார்பொழில் சூழ் அரங்கநகரப்பா." ... ... உ.

அ. மூன்றும்பாட்டு. விரோதிநிரஸநசீலனுய், அடியாரானவர்களை புநராவர்த்தி யில்லாதபடி பரமபதத்திலே கொடுபோய் வைத்து அடிமைகொள்ளுமவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மு.—கருளுடைய பொழின்மருதுங் கதக்களிறும் பிலம்பனையுங் கடியமாவும்
உருளுடைய சகடரையு மல்லரையு முடையவிட் டோசைகேட்டான்
இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்து டேற்றிவைத்தேணிவாங்கி
அருள்கொடுத்திட்டடியவரை யாட்கொள்வா னமருமூ ரணியரங்கமே. ங.

414

பதவுரை.

கருள் உடைய— அகவாயில், 'இவனை நலியவேணும்' என்கிற சீற்றத்தை யுடைத்தாய்

பொழில்— (பார்த்தவர்கள் மதிமயங்கும் படி) புறம்பில் சோலைசெய்து நிற்கிற

மருதும்— இரட்டை மருதமரங்களையும்

கதம்— மிக்கசோபத்தாலே எதிர்ந்துவந்த

களிறும்— குவலயாபீடத்தையும்

பிலம்பனையும்— ப்ரலம்பாஸுரனையும்

கடிய— மஹாக்ரூரமான

மாவும்— கேசியாகிற அஸுரனையும்

உருள் உடைய— உருண்டு வந்த

சகடரையும்— சகடாஸுரனையும்

மல்லரையும்— சாணூர முஷ்டிகர்களாகிற மல்லர்களையும்

உடையவிட்டு— சிந்நபிந்நமாக்கி

ஓசை கேட்டான்— அவற்றை நிரஸித்த ப்ரகாரங்களை அறிவுடையார் ஸ்தோத்ரம் பண்ணும் ப்ரஸித்தியைக் கேட்டவன்

அடியவரை— சேஷபூதர்களை

இருள்— அந்தகாரத்தை

அகற்றும்— நீக்கா நின்றுள்ளவனும்

எறி— வீசுகின்ற [தியனுடைய

கதிரோன்— கிரணங்களையுடையனான ஆதி

மண்டலத்தூடு— மண்டலத்தூடே கொண்டுபோய்

ஏற்றி வைத்து— பரமபதத்திலே நித்யஸூரிகளோடு கூடவைத்து

ஏனை வாங்கி— தன்னுடைய உபாயபாவத்தை நிவர்த்திப்பித்து

அருள் கொடுத்திட்டு— (மறுபடி மீளாமைக்கும் கைங்கர்யலாபத்துக்கு முறுப்பாக) தன்னுடைய ப்ரஸாதத்தை இவர்களுக்குக் கொடுத்து

ஆட்கொள்வான்— அடிமைகொள்ளுமவன்

அமரும்— அமர்ந்துவர்த்திக்கிற

ஊர்— ஊராவது

அணி அரங்கம்.

வ்யா. கருளுடைய பொழில்மருதும். "கருள்" என்று - கறுப்பாய், அத்தாலே சீற்றத்தைச் சொல்லுகிறது. "கறுப்பும் சிவப்பும் வெகுளிப்பொருள்" என்னக் கடவதிறே. அகவாயில் "இவனை நலியவேணும்" என்னும் சீற்றத்தையுடைத்தாய், புறம்பு ஆகர்ஷகமாம்படி சோலைசெய்துநின்ற யமளார்ஜுநங்களையும். கதக்களிறும். மதகரமான த்ரவ்யங்களைத் தீற்றிப்பிச்சேற்றி நிறுத்துகையாலே அதிகுபிதமாய்வந்த குவலயாபீடத்தையும். பிலம்பனையும். ஸம்பிரமுத்தபிராணம்தானும் இடைப் பிள்ளைகளோடேகூடி விளையாடா நிற்கச்செய்தே அவர்களுக்குள்ளே ஒருவனுக்கலந்துவந்து தன்னோடொக்க விளையாடி நலியநினைத்த ப்ரலம்பாஸுரனையும். கடியமாவும். (க) 'யுஷ்மாந் தாவயந்தம் மஹாரிஷ்டம்" என்கிறபடியே ஸ்ரீப்ருந்தாவநத்துக்குப் போகிறவழியிலே நலிகைக்காக அதிக்ரூரமாய் வாயை அங்காந்துகொண்டுவந்த கேசியாகிற அஸுரனையும். உருளுடைய சகடரையும். கண்வளரா நிற்கச்செய்தே நலிவதாக உருண்டுவந்த சகடாஸுரனையும். மல்லரையும். குவலயாபீடத்தினுடைய ச்ருங்கபங்கத்தைப்பண்ணி, ரங்கமத்யத்திலே வந்துபுகுந்த செருக்குக்கண்டு பொறுக்கமாட்டாமல் மேலிட்டுவந்த மல்லரையும். உடையவிட்டு. சிதிலராக்கி. நிரஸநப்ரகார பேதமுண்டானாலும் நிரஸநமொத்திருக்கையாலே "உடையவிட்டு" என்று ஒருசொல்லாலே யருளிச்செய்கிறார். "உடையவிட்டு" என்கையாலே - பசுங்கல முடைத்தாற்போலே நிரஸித்த அநாயாஸத்தைச் சொல்லுகிறது. ஓசைகேட்டான். இவ

(க) "வ்யாதிதாஸ்யோமஹாரௌத்ரஃ"

ற்றை நிரவித்த ப்ரகாரங்களைச்சொல்லி, விசேஷஜ்ஞர் ஸ்தோத்ரம் பண்ணுகிற ப்ரவித்தி யைக் கேட்டான்.

மேலை - மோக்ஷப்ரதத்வமிறே சொல்லுகிறது. அதுதான் விரோதி நிரஸந பூர்வ கமாயிறேயிருப்பது. "அவித்யா கர்மவாஸநா ருசி ப்ராப்தி ஸம்பந்தங்கள்" என்ற - விரோதிகள்தான் அநேகமிறே. (க) "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று அவற்றையெல்லாம் ஏகாத்மோபாதேக நிரவித்துப் போகட்டிறே கொடுபோவது. ஆகையால் கீழ்ச்சொன்ன ¶ விரோதிநிரஸநமதுக்கு ஸஹகம். இருளகற்று மெறிகதிரோன் மண்டலத் தூடேற்றி. திமிரதுரமாய்க்கொண்டு வீசுகிற கிரணங்களை யுடையனான ஆதித்யனுடைய மண்டலத்தூடே கொடுபோய் பரமபதத்திலேயேற்றி. ஆதித்ய மண்டலத்தூடே: கொடு போய் எற்றுவிது - "அர்ச்சிராதி மார்க்கத்தாலே கொடுபோம்" என்னுமதுக்கு உபல க்ஷணம். "போம்வழியைத்தரும்" என்கிறபடியே - அங்குப்போய் அநுபவிக்கு மநு பவம் பரிச்சிந்நமென்னுமிடமிறே அர்ச்சிராதி மார்க்கத்தில் அநுபவஸ்தாகம். ஆகையாலே முந்துற இத்தனையத்தை அநுபவிப்பித்துக்கொண்டாய்த்து ப்ராப்யபூமியான பரமபதத்தில் வற்றுவது. வைத்து. "மாமணிமண்டபத் தந்தமில் பேரின்பத் தடியரோடிருந்தமை" என்கிறபடியே ஆநந்தமயமான திருமாமணி மண்டபத்திலே நிரதிசய ஆநந்தயுக்தராய்க் கொண்டு சித்பஸ்ரிகளோடே கூடியிருக்கும்படிவைத்து. எணிவாங்கி. எணியாவது - ஏறுகைக்கு ஸாதகமாயுள்ளதிறே; அத்தை வாங்குகையாவது - இவர்கள் விஷயத்தில் தன் னுடைய உபாயபாவத்தை நிவர்த்திப்பிக்கை. ப்ராப்தியளவுமிறே உபாயமாகவேண்டுவது; மேல் உபேயபரமாயிருக்கிற அநுபவிப்பிக்கு மித்தனையிறே. அருள்கொடுத்திட்டு. புராவ்ருத்த யபாவத்துக்கும், நித்யகைங்கர்யலாபத்துக்கு முடலான தன்னுடைய ப்ரஸாதத்தை இவர் களுக்குக் கொடுத்து. அடியவரை. சேஷத்வமே நிரூபகமாகவிருக்கிற இவர்களை. ஔபா திகமான நிரூபகங்களெல்லாம் ஸம்ஸார தசையில்வந்து கழிந்துபோம்வையிறே. ஆவிர்ப் பூதஸ்வரூபனனுல் சேஷத்வமே நிரூபகமாகவிறே யிருப்பது. ஆட்கொள்வான். ஸ்வரூ பாநுரூபமான வ்ருத்தி விசேஷத்தைக் கொள்ளுமவன். "அடியுவரை யாட்கொள்வான்" என்கையாலே - ராஜபுத்ரன்தலையிலே முடியைவைக்குமாபோலே, சேஷபூதரான விவர் களுக்கு கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைக் கொடுக்கும்படி சொல்லுகிறது. அவன்றனக்கும் ஸ்வரூபஸித்தி - ஆட்கொள்ளுகையாலேயிறே. இவன், அடிமைசெய்து ஸ்வரூபம்பெறும்; அவன், அடிமைகொண்டு ஸ்வரூபம்பெறும். சேஷபூதனுக்கு ஸ்வரூபஸித்தி ஞாநித்கார த்தாலே யானற்போலே, சேஷிக்கு ஸ்வரூபஸித்தி ஞாநித்கார ப்ரதிஸம்பந்திதையாலே யிறே. அமருமூர். அப்படிசெய்யுமவன், அதுக்கு உறுப்பாக சேதநனைத் திருத்தும்படி நித்யவாஸம் பண்ணுகிறவூர். அணியரங்கமே. "அணி" என்று - ஆபரணமாய், ஸம் ஸாரத்துக்கு ஆபரணமான தேசமென்கை. அன்றிக்கே, "அணி" என்று - அழகாய், மாடங்களும் மாளிகைகளும் திருமதில்களும் திருக்கோபுரங்களும் திருச்சாலைகளும் முத லானவற்றாலேட்கூடி தர்சநீயமா யிருக்கும்படியைச் சொல்லுகிற தாகவுமாம்.

"பிள்ளை திருநறையூரரையரும்பட்டரும் ப்ரதக்ஷிணம்பண்ணுநிற்க பின்னேலவித்துக் கொண்டுபோனேன்; அல்லாதா ரெல்லாரும் கடுங்குதிரைபோலே வாராநிற்க, இவர்கள் திருக்

¶ (பா) "விரோதி நிரஸநத்துக்கு" (உ) "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி"

கோபுரங்களையும் திருமாளிகைகளையும், கண்ணாலே பருகுவாரைப்போலே பார்த்து வாழ்ந்து கொண்டு வருகிறபடியைக்கண்டு, ' அல்லாதார்க்கும் இவர்களுக்கும் செயல் ஒத்திருக்க இவர்களான வாசிதோற்ற விருந்தபடியென்! என்று இருந்தேன்காணும் ' என்று நஞ்சீயர் நம்பிள்ளைக்கு அருளிச்செய்தார் " என்று ப்ரஸித்தமிறே. ப்ராப்யபூமியி லுள்ளவை யெல்லாம் விசேஷஜ்ஞரானவர்களுக்கு போக்யமாயிறே யிருப்பது. ... ... கூ.

அ. நான்காம்பாட்டு. ஸ்ரீமத்த்வாரகையிலே * பதினாறுமாயிரவர்தேவிமார் பணி செய்யவிருந்தவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மூ.—பதினாறுமாயிரவர் தேவிமார் பணிசெய்யத் துவரையென்னு
மதினயகராகி வீற்றிருந்த மணவாளர் மன்னுகோயில்
புதுநாண்மலர்க் கமல மெம்பேருமான் பொன்வயிற்றிற் பூவேபோல்வான்
பொதுநாயகம்பாவித் திறுமாந்து போற்சாய்க்கும் புனலரங்கமே. சு.

பதவுரை.

துவரை என்னும் அதில்— ஸ்ரீத்வாரகை யென்கிற திருப்பட்டை வீட்டிலே

பதினாறாயிரவர் தேவிமார் } கோபகந்நிகைகளான பதினாறாயிரம் தேவி மாரானவர்கள்

பணி செய்ய— நித்யகைங்கர்யம் பண்ண

நாயகர் ஆகி— அவர்களுக்கு நாயகராய்க் கொண்டு

வீறு— தன்பெருமை தோற்ற

இருந்த— எழுந்தருளியிருந்த

மணவாளர்— மணவாளரானவர்

(அழகியமணவாளப் பெருமாளாய்க் கொண்டு)

மன்னு— நித்யவாஸம் பண்ணுகிற

கோ இல்— கோயிலாவது;

நாள்— அப்போதலர்ந்த

புது— செவ்வி குன்றாத

கமலம் மலர்— தாமரைப் பூவானது

எம்பெருமான்— எம்பெருமானுடைய

பொன்— ஸ்ப்ருஹணீயமான

வயிற்றில்— திருநாபியிலுள்ள

பூவே— பூவைபோல

போல்வான்— போன்றிருக்கைக்காக

பொது நாயகம் பாவித்து } ஸர்வ நிர்வாஹகத்வத்தை உடைத்தானதாக நினைத்து

இறுமாந்து— (அத்தாலே) கர்வித்து

பொன்— மற்றுண்டான தாமரைகளின் அழகை

சாய்க்கும்— தள்ளிவிடா நின்றுள்ள

புனல்— நீர்வளப்பத்தையுடைய

அரங்கமே— திருவரங்கமேயாம்.

வ்யா. பதினாறுமாயிரவர்தேவிமார் பணிசெய்ய. நரகாஸுரன் திரட்டிவைத்த ராஜகந்நிகைகளாய், அவனை நிரஸித்தவநந்தரம் அங்கு நின்றும் கொண்டுவந்து திருமணம் புணர்ந்தருளின பதினாறாயிரந் தேவிமாரானவர்கள் தங்களுடைய ப்ரேமாநுகுணமாகவும் ப்ராப்யாநுகுணமாகவும் நித்யபரிசர்யை பண்ண. துவரையென்னுமதில். ஸ்ரீமதுரையிலே எழுந்தருளியிருக்கச்செய்தே இங்குள்ளாரெல்லாரையும் அங்கே கொடுபோய்வைக்கத் திருவுள்ளம் பற்றி, ஸ்வஸங்கல்பத்தாலே உண்டாக்கினதாகையாலே அத்யந்தவிலக்ஷணமாய், ஸ்ரீமத்த்வாரகையென்று ப்ரஸித்தமாயிருந்துள்ள திருப்பட்டைவீட்டிலே. நாயகராகிவீற்றிருந்தமணவாளர். அவர்களுக்குத்தனித்தனியே " என்னையொழியவறியார், என்னையொழியவறியார் " என்னும்படி நாயகராய்க்கொண்டு, தம்முடைய வ்யாவர்த்திதோற்ற எழுந்தருளியிருந்தமண

வளரானவர். மன்னுகோயில். *எட்டிழையாய் மூன்றுசரடாயிருக்கும் மங்களஸூத்ரத்தை தரித்து, தமக்கு அநந்யார்ஹராய் அநந்யபோகராயிருக்குமவர்களோடே கலந்து அடிமை கொள்ளுகைக்காக அழகியமணவாளப் பெருமாளாய்க்கொண்டு, அவ்தாரம்போலே நித்யவாஸம் பண்ணுகிற கோயில்.

புதுநாண்மலர்க்கமலம். அப்போதலர்ந்த செவ்விந்தாமரைப்பூவானது. எம்பெருமான் பொன்வயிற்றில் பூவேபோல்வான். ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரனுடைய ஸ்பர்ஹணீயமான திருவயிற்றில் பூவையொப்பான். பூவையேபோல்வதாக வென்றபடி. போது நாயகம்பாவித்து. ஸர்வநிர்வாஹகத்வத்தை பாவித்து. அதாவது- ஜகத்காரணதயா ஸர்வநிர்வாஹகமாயிருக்கிற விருப்பைத் தானுமுடையதாக பாவித்தென்கை. இறுமாந்து. இந்தநிர்வாஹகத்வத்தை கர்வித்து. பொன்சாய்க்கும். மற்றுண்டான - தாமரைகளினுடைய அழகைத்தள்ளிவிடாநிற்கும். புனலரங்கமே. இப்படியிருந்துள்ள ஜலஸம்ருத்தியையுடைத்தாயிருந்துள்ள திருவரங்கமே. ... ... ச

அ. ஐந்தாம்பாட்டு. ஸ்ரீநாரதபகவானுக்குத் தன்வைபவத்தை ப்ரகாசிப்பித்த ஸர்வேச்வரன், அவன் பக்கலிலே ஸ்தோத்ரம் பண்ணி வணங்க, கண்வள்ர்ந்த தேசமிதுவென்கிறார்.

மு.+ஆமையாய்க் கங்கையா யாழ்கடலாயவனியா யருவரைகளாய்
நான்முகனுய் நான்மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த் தானுமானுன்
4 6 சேமமுடைநாரதனுர் சென்றுசென்று துதித்திறைஞ்சக் கிடந்தான்கோயில்
பூமருவிப்புள்ளினங்கள் புள்ளரையன் புகழ்குழறும் புனலரங்கமே. டு.

பதவுரை.

புள் இனங்கள்— அன்னங்கள் முதலிய பக்ஷி ஸமூஹங்களானவை
பூ— நீர்ப்பூமுதலிய பூக்களில்
மருவி— பொருந்தி நின்று
புள் அரையன் — தங்கள் ஜாதிக்கு ராஜாவான பெரிய திருவடியினுடைய
புகழ்— கீர்த்தியை [ள்ள
குழறும்— அநக்ஷரஸமாகப் பேசா நின்று
புனல்— நீர்வளப்பத்தையுடைய
அரங்கம்— திருவரங்கமானது;
ஆமை ஆய் — கங்கார்ஜலத்துக் குள்ளே ஆமையாயும்
கங்கை ஆய்— அந்த ஆமைமுதலிய ஸத்வங்களுக்கு வாஸஸ்தலமான கங்கையாயும்
ஆழ்— அகாதமாயிருந்துள்ள
கடல் ஆய்— (கங்கைமுதலிய நதிகளுக்குப் புகலிடமான) ஸமுத்ரமாயும
அவனி ஆய்— பூமியாயும்
அரு வரைகள் ஆய் — பெரியமலைகளாயும்
நான்முகன் ஆய்— சதுர்முக ப்ரஹ்மாவாயும்
நால் மறை ஆய்— நான்கு வேதங்களாயும்
வேள்வி ஆய்— யாகங்களாயும்
தக்கணை ஆய்— (அந்தயாகங்களுக்கு வீர்யத்தைக் கொடுக்கும்) தக்ஷிணையாயும்
தானும் ஆனான் — அந்ததக்ஷிணைகள் முகமாக எல்லார்க்கும் அவரவர்கள் விரும்பின பலத்தைக் கொடுக்கும் அஸாதாரண விக்ரஹ விசிஷ்டனான தானுமானவன்

சேமம் உடை— ப்ரஹ்மபாவநாதிஷ்டை
யாகிற ரக்ஷையுடைய
நாரதனர்— ஸ்ரீநாரதபகவான்
சென்று சென்று— பலகாலும் வந்து
துதித்து— ஸ்தோத்ரங்கள் பண்ணி
இறைஞ்ச— மேலிக்குப்படியாக
கிடந்தான்— கண்வளர்ந்தருளுமவனுடைய
கோயில்— வாஸஸ்தாநமாம்.

வ்யா. துர்யோதநாதிகளுடைய யாகத்தில்வந்த ராஜாக்களெல்லாரும், ஸ்ரீமத்வாரகைபோகிற திருப்படை வீட்டிலுண்டான அரணும் அதிலுண்டான ஸம்பத்தியும் அங்குக்கிருஷ்ணனெழுந்தருளியிருக்கிற மதிப்புமெல்லாம் துர்யோதநாதிகள் சொல்லக்கேட்டு, "கிருஷ்ணனோடே நாம் உறவுசெய்துகொண்டு இருக்கவேணும்" என்னுமத்தைப்பற்றி, துர்யோதநாதிகளும் பாண்டவர்களும் தாங்களுமெல்லாரும் தந்தாமுடைய பரிவாரங்களோடே கூடவந்து "ரைவதகம்" என்கிறபர்வதத்தைச் சூழவிட்டிருந்து, தாங்கள் மேலவார்த்தமாகவந்த செய்தியை கிருஷ்ணனுக்குவிண்ணப்பஞ்செய்து போகவிட; கிருஷ்ணனும், "இவர்கள் ஸபரிகராய்த்திரளவருகைக்குமேறநுவென்" என்று சிந்தித்து, கம்பிமூத்தபிரான், ஸாத்யகியாழ்வான், இவர்கள்முன்னாக, ஸபரிகராய் ஸாயுதராய்க்கொண்டு இவர்களிருக்கிற விடத்திலே எழுந்தருளி எல்லாரையும் குசலப்ரச்நம்பண்ணி, அவர்களுடைய மநோரதங்களுக்கும் பலங்களுக்கும் மதிப்புக்களுக்குமநுகுணமாக ஆஸநமிடவேண்டுவார்க்கிடவல்ல மாஸநமிடுவித்து, தாமும் தமக்கநுகுணமானதொரு திவ்யஸிம்மாஸநத்திலே எழுந்தருளியிராநிற்கச்செய்தே, ஸ்ரீநாரதபகவான் வந்துசேவித்து, (க) "கூஷ்ணாயணோவஸுதேவாயதீமஹி வஸுதேவாயதீமஹி தேவகீநந்தநாயதீமஹி யநஸ்ஸ விஷ்ணுப்ரசோதயாத்" என்று விண்ணப்பம் செய்ய. (உ) "வாஸுதேவகுலிதம்பூக்வா வ்ருஷ்ணீவாஸீ நரர்ஷபஃ। கூஷ்ணஸ்ஸர்வஸ்ய நஸ்ஸு ஹ்ருஷீணாம் ஹ்ருஷீகேஸ்வரஃ" என்று இப்படி மஹர்ஷிசொன்னதைக்கேட்டு ஸ்மிதம்பண்ணி, மஹர்ஷியைப்பார்த்து "தக்ஷிணைகளோடேகூட, நான் ஆச்சர்யனாகவும் தந்யனாகவும் சொல்லப்பட்டவன்" என்று அருளிச்செய்ய: இத்தைக்கேட்டு ஸந்தோஷித்து, (ங) "வாஸுதேவோ நிஸ்ருஷ்டிம் வ்ரஹ்மயேஉக்தீக்ருதவாந் । கூஷ்ணவாஸுதேவ ஜெ வஸ்து ஸிஷ்டிராயியயாமகதே" என்று- "இருக்கிற ராஜாக்களுடைய மத்யத்திலே தேவரீரருளிச்செய்தவாக்யத்திலுலே நான்பர்யாப்தனுகாநின்றேன், இனிவந்தவழியே போகிறேன்" என்று விண்ணப்பம் செய்து போகப்புக; இப்படி போகத்தேடுகிற நாரதபகவானைக்கண்டு, அவராலே சொல்லப்பட்ட இந்த ரஹஸ்யத்தைத் தாங்களறியாமையாலே, கிருஷ்ணனுடைய திருமுகமண்டலத்தைப்பார்த்து, "'ஆச்சர்யராகாநின்றீர் தந்யராகாநின்றீர்' என்று மஹர்ஷி சொன்னவளவிலே 'தக்ஷிணைகளோடேகூட, இப்படியே' என்று தேவரீரருளிச்செய்த இந்த மஹாரஹஸ்ய மெங்களுக்குத் தெரிகிறதில்லை, இத்தை யருளிச்செய்யவேணும்" என்ன; 'மஹர்ஷிதன்னைக் கேளுங்கோள், அவர் உங்களுக்குச் சொல்லக்கடவர்' என்று அருளிச்செய்து, அவரையும் 'நீர் இவர்களுக்குச் சொல்லும்' என்ன; அவரும் இவர்களைப்பார்த்து, "ஆனல் கேட்கலாகாதோ" என்று சொல்லி

(க) "ஆச்சர்யம்கலுமேதவாந்ந மேகஸ்த்வம் புருஷோத்தம - தந்யச்சாஸி மஹாபாஹோ லோகேகநாந்யோஸ்தி கச்சந" (உ) "ஏவமுக்த ஸ்ஸ்மிதம்க்ருத்வா ப்ரத்யுவாச முநிம்ப்ரபும்- ஆச்சர்யச்சைவ தந்யச்ச தக்ஷிணாபிஸ்ஸமோஹரிதம்" (ங) "ஏவமுக்தோ முநிச்ரேஷ்டம் ப்ராஹமத்யே மஹீக்ஷிதாம் - க்ருஷ்ணபர்யாப்த வாக்யோஸ்மி கமிஷ்யாமி யதாகதம்"

(க) "கஹாகதாஸித் கங்காயா ஸ்தீரேத்ரிஷவணதிபி:" என்று தொடங்கி, நான் ஒருகால்கங் கைக்கரையிலே த்ரிஷவணை என்னாதிராஜப்பெண்ணை வர்த்தியாகிற்கச் செய்தேன், ஒருநாள் ராத்ரிபோய், ஆதித்யனுதித்தவளவிலே, கூப்பிடுவழியகலமும் அதிஸ்ரட்டு தீபாமுடாய்த் தீரு க்குள்ளே நனைந்து உடம்படைங்கும் பாசிபற்றி. கண்ணுக்கு ப்ரியமாயிருப்பதொரு கூர்மத் தைக்கண்டு (உ) "கூர்மாஸ்ரூபஸ்ரீமந்நாராயணஸ்ய கூர்மதஸ்யோபரிஸ்தாத் யஸ்மின் ஸர்வே தேவாஸ்ஸர்வே ஸாத்யாஸ்ஸர்வே ஆதித்யாஸ்ஸர்வே வஸவஸ்ஸர்வே ருத்ராஸ்ஸர்வே விஸ்வேதேவாஸ்ஸர்வே ஹிரண்யகர்ப்பாஸ்ஸர்வே ரிஷயஸ்ஸர்வே ஸித்தாஸ்ஸர்வே ஸாத்யாஸ்ஸர்வே ஸாத்விகாஸ்ஸர்வே ராஜஸாஸ்ஸர்வே தாமஸாஸ்ஸர்வே ஸ்தாவரஜங்கமாஸ்ஸர்வே ஸர்வாணி பூதானி ஸர்வே வேதாஸ்ஸர்வே யஜ்ஞாஸ்ஸர்வே ஸர்வஸ்ரஷ்டாரம் ஸர்வஸ்ரஷ்டாரம் ஸர்வஸ்ரஷ்டாரம்

அவற்றினுடைய வைபவங்களைச்சொல்லி ஸ்துதித்துக்கொண்டு, "நீங்களன்றோ தங்யரும் ஆச்சர்யபூதருமே" என்ன; அந்தமஹர்ஷிகள், என்னைப்பார்த்து, "நாங்கள் யஜ்ஞார்த்தமாக ஸ்ரீபகவந்தனுபவம்பண்ணுவதற்காக, ஆகையாலே அஸ்மத்பராயணங்களாயிருக்கிற யஜ்ஞங்களுக்குன்றோ அவையிரண்டுமுள்ளது" என்ன; அகந்தரம், நான் அந்த யஜ்ஞங்களைப்பார்த்து ஸ்தோத்ரம்பண்ணிக்கொண்டு, "லோகத்தில் உங்களிற்காட்டில் தங்யங்களுமில்லை; ஆச்சர்யங்களுமில்லை" என்ன; அந்த யஜ்ஞங்கள், என்னைப் பார்த்து, (க) "ஆச்சர்யஸப்ததாஸ்மாஸு தங்யசப்ததாபிவாமுனே। ஆச்சர்யம்பரமம்விஷ்ணுஸ்ஸஹ்யஸ்மாகம்பாரதம்॥ யதாஜ்யம்வயமச்சீமோ ஹ்ருதமக்நிஷ்டுபாவதம்। தத்ஸர்வம்புண்டரீகாக்ஷோலோகமூர்த்திம்ப்ரயச்சதி" என்று - "ஆச்சர்யசப்தமும் தங்யசப்தமும் எங்களிடத்தேயில்லை, விஷ்ணுவாயிருக்கும் பரமமான ஆச்சர்யம்; அவனேயாயிருக்கும் எங்களுக்கு பரமாயான கதி; அக்நிகளில் ஹ்ருதமாயிருந்துள்ள யாதொரு ஆஜ்யத்தை நாங்கள் புஜிப்பாரின்றோம், அதினுடைய †பாத்தையெல்லாவற்றையும், புண்டரீகாக்ஷனாய் லோகமூர்த்தியான பகவன்தானே கொடுக்கிறான்" என்ன; இந்தைக்கேட்டு, நான் பூமியிலேவந்து, உங்கள்நிருஷ்டத்துக்கு கதியேயிருக்கிற க்ருஷ்ணனைக்கண்டு ஸேவித்து, "நீர் ஆச்சர்யருமாகாநின்றீர், தங்யருமாகாநின்றீர்" என்றுகொண்டு என்னுடைய விண்ணப்பம் செய்யப்பட்டவார்த்தை யாதொன்று; அதுக்கு ப்ரத்யுத்தரமாக; (உ) "தக்ஷிணாபிஸ்ஸஹிதம்" என்றுசொல்லி, க்ருஷ்ணனருளிச்செய்தவார்த்தை எனக்கு பர்யாப்தமான வசநம்.

என்னானேயென்னில்; (க) "யஜ்ஞாநாம்ஹிமதிர்விஷ்ணுஸ்ஸர்வேஷாஞ்சஸதக்ஷிணம்। தக்ஷிணாபிஸ்ஸஹிதம்யஜ்ஞம்ப்ரயந்தம்நஸஹதேஸுரா" என்று - எல்லா யஜ்ஞங்களுக்கும் தக்ஷிணைகளோடுகூடியிருந்துள்ள ஸர்வேச்வரன் கதியாகையாலே, (உ)"தக்ஷிணாபிஸ்ஸஹிதம்" என்கிற இதினாலே என்னுடைய ப்ரச்நமானது பரிஸமாப்தமாய்த்தமிதன்று சொல்லி; (ங) "கூர்மேதுணாஹிஸர்வம்தமவந்தம் வாஸுதேவஸ்யாதிஹாஸமதம்। யத்தக்ஷிணம்ஸ்ம்ருதம்ப்ரோக்தம் தத்ஸர்வம்ப்ரதிபாதிதம்" என்று கூர்மத்தாலே முன்பு சொல்லப்பட்டதாய், பாரம்பர்யத்தாலே இவ்வளவும் வந்திருப்பதாய், "ஆச்சர்யனுமாகிறாய், தங்யனுமாகிறாய்" என்கிறவாக்யம், ஸதக்ஷிணனான க்ருஷ்ணனிற இந்தப்புருஷன்பக்கலிலே என்னாலே ப்ரதிபாதிக்கப்பட்டது. (ச) "யந்நஸ்ஸவஹ்நிஷ்டுஹுதீ வாகூஸ்ஸாஸ்யஹிணாதிபயாமதம்। தத்தத்தஸ்யாதிவாக்யம்ஸாயயாதிபயாமதம்" என்று இந்தவாக்யத்தினுடைய பாதொருநிர்ணயத்தை நீங்கள் ப்ரச்நம்பண்ணினிகோள், அதெல்லாம் என்னாலே சொல்லப்பட்டது; இனி நான் வந்தவழியேபோகிறேன் என்று ஸ்ரீநாரத

(க) "ஆச்சர்யசப்தாதா நாஸ்மாஸு தங்யசப்தாதாபிவாமுனே-ஆச்சர்யம்பரமம்விஷ்ணுஸ்ஸஹ்யஸ்மாகம்பாரதம்॥ யதாஜ்யம் வயமச்நீமோ ஹ்ருதமக்நிஷ்டுபாவதம் - தத்ஸர்வம் புண்டரீகாக்ஷோ லோகமூர்த்திம்ப்ரயச்சதி" † ஹரி. (உ) "தக்ஷிணாபிஸ்ஸஹிதம்" (ங) "யஜ்ஞாநாம்ஹி கதிர்விஷ்ணு ஸ்ஸர்வேஷாஞ்ச ஸதக்ஷிணம்॥ - தக்ஷிணாபிஸ்ஸஹிதத்யேவம் ப்ரச்நோமம ஸமாப்தவான்" (ச) "தக்ஷிணாபிஸ்ஸஹிதத்யேவம்" (ஞ) "கூர்மேணாஹிதம்பூர்வம் பாரம்பர்யாதிஹாகதம் - ஸதக்ஷிணேஸ்மிந் புருஷே தத்வாக்யம்ப்ரதிபாதிதம்" (ட) "யந்மாம்பவந்தம் ப்ரச்சந்தி வாக்யஸ்யாஸ்யச நிர்ணயம் - தேதத்தத் ஸர்வமாக்யாதம் நாதயாமி யதாகதம்"

பகவான் சொன்னதாக, ஸ்ரீஹரிவம்சத்திலே நூற்றைம்பத்தொன்பதா மத்யாயத்திலே சொல்லப்பட்டகதையை இப்பாட்டிலே இவர் ஸங்க்ரஹண வருளிச்செய்கிறார்.

ஆமையித்யாதி. ஸ்ரீநாரதபகவானுக்குத் தன்னுடைய ஸர்வாதிகத்வத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக, ப்ரதமம் கங்காஜலத்துக்குள்ளே ப்ரஹ்மரூபமாய் ப்ரியகரமாய் ஆச்சர்யமாயிருப்பதோ ராமையாய்; அநந்தரம், அந்த ஆமைக்கும் அநேகமாயிரம் ஸத்வங்களுக்கும் வாஸஸ்தலமாம்படியான பெருமையையுடைய கங்கையாய்; அந்தகங்கைக்கும் மற்றும்அநேகமாயிருந்துள்ள நதிகளுக்கும் புகலிடமாய்க்கொண்டு, அகாதமாயிருக்கும் பெருமையையுடைய ஸமுத்ரமாய்; அநந்தரம், அந்தஸமுத்ரந் தனக்கும் தன்னுள்ளே வாஸஸ்தாநமாம்படியான பெருமையையுடைய பூமியாய்; அநந்தரம், அந்தபூமிக்கும் ஆதாரங்களான பெருமையையுடைய பர்வதங்களாய்; அநந்தரம், சதுர்த்தசபுவநஸ்ரஷ்டாவான பெருமையையுடைய சதுர்முகனுய்; அநந்தரம், அவன்றனக்கும் அந்தபதவித்திமுதலான வற்றுக்கடியான பெருமையையுடைய சதுர்வேதங்களாய்; அநந்தரம், அந்தவேதங்களும் தன்னைப்பற்றவே ஸ்ருஷ்டங்களாய்த்தின என்னும்படியாய், ஸகலர்க்கும் பலஸாதநமான பெருமையையுடையயாகங்களாய்; அநந்தரம், அவற்றுக்கும் வீர்யத்தைக் கொடுக்கும் பெருமையையுடைய தக்ஷிணையாய்; அநந்தரம், அந்த தக்ஷிணைகளுடைய த்வாரா, ஸர்வர்க்கும் தத்த தமோக்ஷாநுகுணமாக ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கும் பெருமையையுடையனுய் அஸாதாரண விக்ரஹவிசிஷ்டனான தானுமானவன். இதில் ப்ரதமோக்தமான கூர்மம், இவன்றன்னுடைய ஆஸ்ரிப்பால விசேஷமாகையாலே, இவன்றனைச் சொல்லிற்று. நடுவேசொன்னவை யெல்லாவற்றுக்கும் ஒன்றுக்கொன்று அதிகமாகச் சொன்ன மாஹாத்ம்யம் இவனுடைய புத்ய தீநமாகையால், தங்நிர்வாஹ்ய நிர்வாஹக ஸம்பந்த நிபந்தநமான ஸாமாநாதிகரண்யத்தாலே அவற்றை யெல்லாம் இவனுகச் சொல்லிக்கொடு போந்தது.

சேமமுண்ட நாரதனுர் சென்றுசென்று துதித்திறைஞ்ச. இது கீழோடும் மேலோடும் அந்வயித்துக்கிடக்கிறது. சேமம் - ரக்ஷை. சேமமுடையனுகையாவது - கர்மபாவனையன்றிக்கே, ப்ரஹ்மபாவநா நிஷ்டனுயிருக்கை. "நாரதனுர்" என்றது (க) "ஸவ்ஷுஸ்வபாய நிஷு ஷ்தோ நாரத ஸ்ஸுஷுயதிஷுஸி" என்கிற ஜ்ஞாநாதிக்யத்தாலும், பகவத்ஸந்நிதியிலே வந்தவாறே ஆடுவது பாடுவதாகாநிற்கும் ப்ரேமாதிசயத்தாலு முண்டான கௌரவாதிசயத்தாலே. "சென்றுசென்று துதித்திறைஞ்ச" என்றது- கீழோடே அந்விதமானபோது, கூர்மாதிகளான வ்யக்திகள்தோறும் சென்று அவற்றினுடைய ஆச்சர்ய தந்யதைகளைச் சொல்லிஸ்துதித்தநுபவித்துக்கொண்டு போந்தபடி சொல்லுகிறது; மேலோடே அந்வயித்தபோது, "சென்றுசென்று" என்கிற வீப்ஸை பல்காலும்வந்து ஸேவிக்கும்படியைச் சொல்லுகிறது. "இன்பத்தும்புருவும் நாரதனும் இறைஞ்சியேத்த" என்றும், "தும்புருநாரதர்புகுந்தனர்" என்றும் இந்தஸ்தலத்திலே பலகாலும் வந்து ஸேவிக்கும்படியைச் சொல்லிற்றிறே. துதிக்கையாவது-வீணுபாணியாய்க்கொண்டு ஸந்நிதியிலேவந்து (உ) காநமுகேந ஸ்தோத்ரம் பண்ணுகை. இறைஞ்சுகையாவது- தன்னுடைய சேஷத்வத்துக்கும் ஏதிர்த்தலையில் சேஷித்வத்துக்கும் அநுகுணமாகத் திருவடிகளிலே ப்ரணமாதிகளைப் பண்ணுகை. கிடந்தான் கோயில்.

(க) "ஸர்வஸம்சயநிர்மூலஸ்தோ நாரதஸ்ஸர்வதர்மவித்" (உ) மாநஸ-வந்த.

இப்படி ஸ்ரீநாரதபகவான் ஸேவிக்கும்படியாகவும், ருஷியுடையாரெல்லார்க்கும் கண்ணாலே கண்டு ஆச்சர்யிக்கைக்கும் அநுபவிக்கைக்கு முடலாகவும், " கிடந்தமாதார்கிடக்கை " என்கிறபடியே கிடையழகால்வந்த மிலுக்கம் தோற்றும்படியாகக் கண்வளர்ந்தருளினவலுடைய தேசம்.

பூமருவிப்புள்ளினங்கள். " நீர்ப்பூ நிலப்பூ மரத்திலொண்பூ " என்கிற பூக்களின் குளிர்த்தியாலும் மார்த்தவத்தாலும் பரிமளத்தாலும் மதுவாலுமுண்டான போக்யதையாலே விடமாட்டாதே பொருந்தி, அன்னங்கள் வண்டுகள் முதலான பக்ஷிஸமூஹங்களானவை தங்களுடைய ஜாதிக்கு ராஜாவான பெரியதிருவடியுடைய புகழை, அநுரூபஸ்துதிப் பேசர் நிற்கும்படியாய், அவற்றுக்கு போக்யமான புஷ்பங்கள் மிகவுமுண்டாகைக்கடியான ஜலஸம்பத்தியை யுடைத்தாயிருக்கிற திருவரங்கமே. கிழ்ச்சொன்னபடியே ஸ்ரீநாரத்பகவானுக்குத்தன்னுடைய ஸர்வாதிகத்வத்தை ப்ரகாசிப்பிக்கைக்காக, கூர்மாதிகளான வ்யக்திகள்தோறும் அவன்வந்து ஸ்துதித்திறைஞ்ச பரம்பரையாலவந்து தானுமன்னவனுய், பின்பு அவனுக்கும் பலகாலும் ஸேவ்யனுய்க்கொண்டு கண்வளர்ந்தருளினவலுடைய கோயில்- திருவரங்கம் என்றந்வயம். ... ... ரு.

அ. ஆரும்பாட்டு. த்ரௌபதியைக் குழல்முடிப்பித்து, பாண்டவர்களையே ராஜாக்களாக்கி, உத்தராதநயனையும் உஜ்ஜீவிப்பித்தவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசமிதுவென்கிறார்.

மு.—மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித் தவர்களையே மன்னராக்கி
உத்தரைதன் சிறுவனையு முய்யக்கொண்டவுயிராள னுறையுங்கோயில்
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும் பரந்தநாடும்
சித்தர்களும் தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய் நிற்கின்ற திருவரங்கமே. சு.

பதவுரை.

மைத்துனன்மார் — மைத்துனன்மாரான பாண்டவர்களுக்கு
காதலியை — அபிமதையான த்ரௌபதியை
மயிர் முடிப்பித்து — குழல் முடிப்பித்து
அவர்களையே — அவர்களையே
மன்னர் ஆக்கி — அரசாளவைத்து
உத்தரைதன் — அபிமந்யுவின்மனைவியான உத்தரையென்பவளுடைய
சிறுவனை — பிள்ளையாய், கர்ப்பத்திலிருக்கிறபோதே அச்வத்தாமனால் ப்ரயோகிக்கப்பட்ட ப்ரஹ்மாஸ்த்ரத்தினால் கிடந்த பரீக்ஷித்தை
உய்யக்கொண்ட — திருவடிகளாலே ஸ்பர்சித்து, உயிர்பெற்றெழுந்திருக்கும்படி பண்ணினவனுய்
உயிராளன் — எல்லா உயிர்களுக்கும் நாதனானவன்
உறையும் — நித்யவாஸம்பண்ணுகிற
கோயில் — ஸ்தானம்.

பத்தர்களும் — பக்தர்களும்
பகவர்களும் — ஸந்ந்யாஸிகளும்
பழமொழி — பழமொழியாயிருந்துள்ள வேதத்தை
வாய் — வாக்கிலேயுடையரான
முனிவர்களும் — ரிஷிகளும்
பரந்த — விஸ்தீர்ணமான
நாடும் — நாட்டிலுள்ளாரும்
சித்தர்களும் — நித்யமுக்தரும்
தொழுது — அஞ்ஜலிபண்ணி [படி
இறைஞ்ச — ஸாஷ்டாங்கப்ரணாமம்பண்ணும்
திசை — எல்லாதிக்குக்களுக்கும்
விளக்கு ஆய் நிற்கின்ற } விளக்காய் நிற்கிற
திரு அரங்கம் — அரங்கமாநகரானது;

வ்யா. மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்து. மைத்துனன்மாரான பாண்டவர்களுக்கு அபிமதையான த்ரௌபதியைக் குழல் முடிப்பித்து. (க) " ஸாஹம்கேசக்ரஹம்ப்ராப்தா பரிக்லிஷ்டாஸபாகதா " என்கிறபடியே துச்சாஸநன்வந்து மயிரைப்பிடித்திழுக்க, அன்றுமுதலாக " என்னை யிதுசெய்தவனையும் இதுக்கு ப்ரவர்த்தகரானவர்களையும்கொன்று களப்படுத்தினலொழிய குழல் முடியேன் " என்றிறே யிவளிருந்தது. பதிநலு ஸம்வத்ஸரம் காட்டிலே திரிந்தகாலத்தோடு மீண்டு நாட்டிலே வந்தகாலத்தோடு வாசியற, இவள், விரித்ததலையுந் தானுமாய்த் திரிகிறபடியைக்கண்டு, " இவள் ஸங்கல்பத்தின்படியே கார்யம் செய்துகொடுத்து இவள் குழல்முடித்தவன்றிறே நாம் சரணகதராகுகினென்னும் பேர்படைப்பது " என்றிறே க்ருஷ்ணன் திருவுள்ளமிருந்தது. தூதுபோனதும், ஸாரத்யம் பண்ணிற்றும், பரமரஹஸ்யமான ப்ரபத்தியை உபதேசித்தது மெல்லாம் இதுக்காகவிறே. எங்ஙனேயென்னில்;- தூதுபோனது, * பொய்ச்சூதற்றம் பேசிச்சென்று பேதஞ்செய்தெதங்கும் பிணம்படுத்துகைக்காக. ஸாரத்யம்பண்ணிற்று, " ஆயுத மெடுக்க வொண்ணாது " என்கையாலே, * கொல்லாமாக்கோல் கொலைசெய்து எல்லாச்சேனையு மிருநிலத்து அவிக்கைக்காக. ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்று, (உ) "ஸர்வ நஷ்டஹகாரணே யதிர்யதிர்யிபாகரனெய், (ங) " நகரிஷ்ய விஜயம்க்ருஷ்ண " என்று காண்டீவத்தையும் பொகட்டு யுத்தாந் நிவர்த்தனுவனை, (ச) " கரிஷ்யுவச நம்கிவ " என்று யுத்தே ப்ரவர்த்தனும்படி பண்ணுகைக்காக. ஆகையால் இவையெல்லாம் இவள் குழலை முடிப்பிக்கைக்காகச் செய்தவையென்னக் குறையில்லை. (ஞ)"'உஷ்ணதே மஹாபாஹோ திஷ்வ்யகஸ்யாபி' என்றிவோபாதி. (ஸ) 'ஊஹெ நாதிவஜ்ராய" என்கிறவிதுவும் முன்னே சொல்லிக்கொள்ளிறே யிடப்பது; அங்ஙன்செய்யாதே, முந்துற, அர்த்தத்தை யருளிச்செய்து வைத்து, பின்னை இத்தை யருளிச்செய்வானென்? ' என்று ஜீயர் பட்டரைக்கேட்க; " த்ரௌபதி குழல் விரித்துக்கிடக்கையாலே செய்வதறியாமல், மூலையில்கிடந்தாரை முற்றத்திலே யிடுவாரைப்போலே, பரமரஹஸ்யமானத்தை வெளியிட்டுக்கொண்டு நின்றான்; பின்னை அர்த்தத்தின் கிர்மையை $ அநுஸந்தியா, ' கைப்பட்ட மாணிக்கத்தைக் கடலிலே பொகட்டோம்! ' என்று பதறி பதணென்றான்காணும் " என்றிறே யருளிச்செய்தது.

அவர்களையே மன்னராக்கி. கீழே, " மைத்துனன்மார் " என்கையாலே, " அவர்களையே " என்று பராமர்சிக்கிறார். " நாடுடைமன்னர் " என்கிறபடியே - ராஜ்யப்ராப்தரிவர்களாயிருக்க, * பொய்ச்சூதிலே தோற்பித்து, இவர்கள்ராஜ்யத்தைத் தாங்களே வாங்கிக்கொண்டு, இவர்களைக்காட்டிலே தள்ளிவிட்டு, மீண்டு நாட்டிலே வந்தவிடத்திலும், " இவர்களுக்கு ஒரு கோல்குத்து நிலமும் கொடோம் " என்று தாங்களே எல்லாம் ஆளுவதாக இருந்த துர்யோதநாதிகளைக் கிழங்கெடுத்துப்பொகட்டு, ராஜ்யத்துக்குப்ராப்தரான விவர்களையே ராஜாக்களாக்கி. உத்தரைதன் சிறுவனையு முய்யக்கொண்ட. கீழ் - "மருமதன்றன் சந்ததி " என்றார்; இங்கு - " உத்தரைதன் சிறுவன் " என்கிறார். அங்கு - பித்ர்ஸம்பந்தத்தை யிட்டுச்சொன்னார்; இங்கு - மாத்ர்ஸம்பந்தத்தை யிட்டுச்சொல்லுகிறார். பிதா

(க) " ஸாஹம்கேசக்ரஹம்ப்ராப்தா பரிக்லிஷ்டாஸபாகதா " (உ) " அஸ்த்தாகஸ்நேஹகாருண்ய தர்மாதர்மஜ்ஞியாகுல " (ங) " நகாங்க்ஷேவிஜயம்க்ருஷ்ண " (ச) " கரிஷ்யே வசநந்தவ " (ஞ) " இதந்துதேகுஹ்யதமம்ப்ரவக்ஷ்யாமி " (ஸ) " ஊஹெதாதவஜ்ராய "

$ அநுஸந்தியா - அநுஸந்தித்து என்றபடி.

வான அபிமன்யு யுத்தத்திலே பட்டுப்போகையாலே, "இவனே யிழந்தோம்" என்னும் க்லேசம் அவனுக்கு இல்லையிறே; மாதாவிறே இருந்து க்லேசப்படுகிறவள்; இப்ப்ரஜை பிழைத்தால் உள்ளப்ரியமும் அவளுக்கேயிறே; அத்தைப்பற்றச் சொல்லுகிறது. உய்யக்கொண்டாரிக்கட்டையாய்ப் போனவனையும், ஸத்ய வசநத்தாலும் திருவடிகளினுடைய ஸ்பர்சத்தாலும், போனவுயிரை மீட்டு எழுந்திருக்கப்பண்ணின. உயிராளன். ஸர்வாத்ம ஸாதாரணநாதனுன்வன். உறையும்கோயில். அவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம் பண்ணுகிற கோயில்.

பத்தர்களும். "மாலியுற்றெழுந் தாடிப்பாடித்திரிந்தரங்க னெம்மானுக்கே, மாலியுற்றிடும் தொண்டர்" என்கிற பக்தர்களும். பகவர்களும். "சிற்றெயிற்று முற்றல்மூங்கில் முன்று தண்டரொன்றின ரற்றபத்தர்" என்கிறஸந்ந்யாஸிகளும். பழமொழிவாய் முனிவர்களும். அபௌருஷேயமாய் நித்யமாயிருக்கையாலே பழமொழியா யிருந்துள்ள வேதத்தை எப்போதுமொக்க வாக்கிலேயுடையரா யிருக்கும் ரிஷிகளும். பரந்தநாடும். "தென்னுடும் வடநாடும்" என்னும்படி விஸ்தீர்ணமான நாட்டிலுள்ளாரும். சித்தர்களும். நித்யவிபூதியிலே ஆநந்த நிர்ப்பரராயிருக்கும் நித்யமுக்தரும். தொழுதிறைஞ்ச. அஞ்ஜலிப்ரணாமங்களைப் பண்ணும்படியாக. திசைவிளக்காய் நிற்கின்ற. ஸர்வதிக்குக்களுக்கும் ப்ரகாசகமாய்க்கொண்டு நிற்கிற. எதேனு மோரிடத்திலே இருந்தாலும் அத்திக்கைநோக்கி வணங்கும்படியிறே இதினுடைய ப்ரகாசமிருப்பது. (க) "தெஸாஸாமதாவாபி தீவாஸ ஸாமதோவிவா ஸ்ரீஸஹரிஸ்-வொமஸுவா வுணிவ்ரத ஸவீதி" என்னக்கடவதிறே. திருவரங்கமே. இப்படியிருந்துள்ள திருவரங்கமே-உயிராளனுறையுங் கோயில். கூ.

அ. ஏழாம்பாட்டு. ஸ்ரீவாமநனுய் மாவலியைக்குறும்பதக்கி ராஜ்யத்தை வாங்கி அவனைப் பாதாளத்திலே வைத்தவன் வர்த்திக்கிற தேசமிதுவென்கிறார்.

மூ.—குறட்பிரமசாரியாய் மாவலியைக் குறும்பதக்கி யரசுவாங்கி
இறைப்பொழுதிற் பாதாளங் கலவிருக்கை கொடுத்துகந்த வேம்மான்கோயில்
எறிப்புடைய மணிவரைமே லிளநாயிறெழுந்தாற்போ லரவணையின்வாய்ச்
சிறப்புடைய பணங்கண்மிசைச் செழுமணிகள் விட்டெறிக்குந் திருவரங்கமே.

பதவுரை.

எறிப்பு உடைய— மிக்க ஒளியையுடைத்தா யிருப்பதொரு
மணி வரைமேல்—நீலரத்ந பர்வதத்தின்மேல்
இள ஞாயிறு— பாலஸூர்யர்கள்
எழுந்தால் போல் — உதித்தாற்போலே
அரவு அணையின் வாய் — திருவனந்தாழ்வா னிடத்தில்
சிறப்பு உடைய— அழகிதான
பணங்கள்மிசை— படங்கள்மேலுண்டான
செழு— செழுமைதங்கிய
மணிகள்— ரத்நங்களானவை
விட்டு எறிக்கும்—மிகவும்விளங்காநின்றுள்ள திரு அரங்கம்;—
மாவலியை— மஹாபலியிடத்திலே

(க) "தேசாந்தரகதோவாபி தீவீபாந்தரகதோபிவா-ஸ்ரீரங்காபிமுகோபூத்வாப்ரணிபத்யஸீததி"

குறள் பிரமசாரி ஆய்— வாமநப்ரஹ்மசாரியாய்ச் சென்று

குறுப்பு அதக்கி — அவனுடைய செருக்கை அடக்கி

அரசு — ராஜ்யத்தை

வாங்கி— நீசேற்று வாங்கி

இறை பொழுதில்— கூடினகாலத்திலே

பாதாளம்— பாதாள லோகத்தை

கலவிருக்கை கொடுத்து — அவனுக்கு இருப்பிடமாகக் கொடுத்து

உகந்த— இந்த்ரன் மஹாராஜ்யத்தைத் தனக்கு கட்டிக் கரப்பெற்றோமென்று ஸந்தோஷித்த

எம்மான்—என்ஸ்வாமியானவன் வர்த்திக்கிற

கோயில்— கோவில்.

குறட்பிரமசாரியாய். வாமநப்ரஹ்மசாரியாய். குறள். கோடியைக் காணியாக்கினாற் போலே, பெரியவடிவைக் கண்ணுக்கு முகந்து அநுபவிக்கலாம்படி சுருக்கினபடி. சேர்ப்பால் சுருங்கினதனையும் ரஸிக்குமாபோலே, வடிவம் சுருங்கினதனையும் ரஸாவஹமாயிருக்குமாய்த்து. "புலங்கொள்மாணுப்" என்றுமேற ஆழ்வார். இவ்வடிவழகுமேலேயேற மஹாபலியை வசீகரித்தது. பிரமசாரியாய். அதுக்குமேமேல ஒருவசீகாரஸாதகமேறியிது. "பொங்கிலங்குபுரிநூலும் மேகலுந்தாழ" என்கிறபடியே—யஜ்ஞோபவீதமும் க்ருஷ்ணாஜினமும் முஞ்ஜிமானஞ்ஞீதமேவஸ்த்ரம். இந்த்ரன், "என்னுடையராஜ்யத்தையிழந்தேன், அதைமீட்டுத்தரவேணும்" என்று கண்ணும் கண்ணீருமாய்வந்து சரணம்புகுந்து நின்றான்; "ப்ரபலனுமிருப்பா னொருவனுடையராஜ்யத்தைப் பறித்துக்கொண்டான், ராவணாதிகளைப்போலே அழியச்செய்யப் போகாதாய்த்து ஔதார்யமென்றொரு குணமிலசத்தை யேறிட்டுக்கொண்டிருக்கையாலே, இனிஇரண்டுக்கும் அவிருத்தமாகச்செய்வதென்" என்றுபார்த்து, "அவன் கொடுக்க உகந்திருக்குமாகில் நாம்சென்று இரக்கக்கடவோம்" என்றிறே இரப்பில் தகனேறின ப்ரஹ்மசாரியாய்த்து. மாவலியை. "கோவாகியமாவலியை" என்கிறபடியே—ஸர்வேச்வரன் இந்த்ரனுக்குக்கொடுத்த த்ரைலோக்யைச்வர்யத்தை பலத்தாலேபறித்துக்கொண்டு, ஒருத்தர்கீழடங்காமல் தன்னரசாயிருந்த மஹாபலியை, குறும்பதக்கி, கள்ளர், பள்ளிகள், லாதுக்களுடைய ஸ்வத்தை அடித்துத் தங்களதாக்கிக்கொண்டு ஒருத்தர் கீழடங்காதேயிருக்குமாபோலே, ப்ரஸ்வாபஹாரத்தைப்பண்ணி அதில் ஒரு பயமற்று, தன்னுடைமையைத் தான்ஜீவிக்குமாபோலே ஜீவித்திருந்த, குறும்பையடக்கி—செருக்கைவாட்டி, அரசுவாங்கி. கீழ்ச்சொன்ன வடிவழகையும் விநீதவேஷத்தையும் முன்னிட்டுக்கொடுசென்று அவனை சித்தாபஹாரம்பண்ணி, "கொள்வன், நான், மாவலி, மூவடி, தா" என்று சில அந்விதபாஷண்ங்களைப் பண்ணி, இந்த மௌக்த்யத்தாலும் அவன் நெஞ்சை இளகப்பண்ணி, சுக்ராதிகள், "இவன் தேவகார்யம் செய்யவந்தான், உன்ஸர்வஸ்வத்தையும் அபஹரிக்கவந்தான்" என்று சொல்லுகிற வார்த்தையும் அவன் செவியில் பட்டாமல் உதகம்பண்ணித் தரும்படியாக்கி, "பொற்கையில் நீரேற்று" என்கிறபடியே கொடுத்துவளர்ந்த பொலிவையுடைத்தான கையிலே உதகத்தையேற்று, இந்த்ரன்தன் ராஜ்யத்தை அவன்பக்கல்நின்றும் வாங்கி. இறைப்பொழுதில். இதுதான் செய்கிறவளவில், காலதாத்க்யமன்றிக்கே, அல்பகாலத்திலேசெய்து. பாதாளம்கலவிருக்கைகொடுத்து. "மூன்றடி" என்று வாங்கி, இரண்டடியாலே லோகத்தையுமளந்து, "ஒன்றும் தருகிலனே மாவலியைச் சிறையில்வைத்த" என்கிறபடியே மற்ற ஓரடியும் தருமளவும், சிறைவைப்பாரைப்போலே, பாதாளத்தில அவனுக்கு இருப்பிடமாக்கி. பாதாளத்தே தள்ளி. "கலவிருக்கைகொடுத்து" என்றது- அவ்விருப்பு சிறையிருப்பாகவன்றிக்கே போகபூமியாகக் கொடுத்தபடியைப்பற்ற. கலவிருக்கையாவது - ஒரு

ஞ்சு கலந்திருக்கும் இருப்பிதே. கலிருக்கையாகக் கொடுத்தென்றபடி. உகந்த. இலனுக்கு இவ்விருப்பைக்கொடுத்து, இந்த்ரனுக்கு அவனிழந்த ராஜ்யத்தைக்கொடுத்து, " சரணகத னைவவிழுவுரப்பிபற்றிரும் " என்றுப்ரிதனனன். எம்மன்கோயில். என்னுடைய ஸ்வாமி யானவன் அருச்யப்ரியாஜ ராணவர்களுக்குத் தன்னைக்கொடுக்கைக்காக நித்யவாஸம் பண் ணுகிறகோயில்.

எறிப்புடையமணிவரைமேல். அதிப்ராகாசமாயிருப்பதொரு நீலரத்ந பர்வதத்தின்மேல். இளாயிறெழுந்தாற்போல். பாலாதித்யர்கள் உதித்தாற்போலே. அரவணையின்வாய் சிறப்புடைய பணங்கள்மிசைச் செழுமணிகள் விட்டெறிக்கும். திருவனந்தாழ்வானிடத்தில் அழகிய பணங்க ளின்மேலுண்டான பெரிய ரத்நங்களானவை மிகவும் ப்ரகாசியாநிற்கும். இத்தால்-திருவரவ ணைமேலே, * பச்சைமாமலைபோலே யிருக்கும் திருமேனியையாடே பள்ளிகொண்டரு ளுகிற பெரியபெருமாளே யநுபவிப்பார்க்கு அத்திருவனந்தாழ்வானுடைய ஒளிதானே ப்ர காசமாயிருக்கும்படி. சொல்லுகிறது. திருவரங்கமே. கிழ்ச்சொன்ன விதுவேயாய்த்து இத் தேசத்துக்குச் சிறப்பு. ... ... எ.

அ. எட்டாம்பாட்டு. அதிக்ரூரனை ஹிரண்யனை யடர்த்துப் பிடித்து நிரஸித்த வன் வர்த்திக்கிறதேச மிதுவென்கிறார்.

மு.—உரம்பற்றியிரணியனை யுகிர்நுதியா லொள்ளிய மார்புறைக்கவுன்றிச்
சிரம்பற்றி முடியிடியக் கண்பிதுங்க வாயலர்த் தெழித்தான் கோயில்
உரம்பெற்ற மலர்க்கமல முலகளந்தசேவடிபோ லுயர்ந்துகாட்ட
வரம்பற்ற கதிர்ச்செந்நெல்தாள்சாய்த்துத் தலைவணக்குந் தண்ணரங்கமே. அ

பதவுரை.

உரம் பெற்ற— செழிப்பை யுடைத்தான
கமலம் மலர்— தாமரைப் பூவானது
உலகு அளந்த — திருவுலகளந்தருளின
போது உயரவெடுத்த
சே அடிபோல்— திருவடிகளைப்போலே
உயர்ந்து காட்ட—ஸர வளர்ந்துப்ரகாசிக்க
வரம்பு உற்ற— வரம்பு சேர்ந்து விளைந்து
நிற்கிற
கதிர்— கதிரையுடைத்தான
செந்நெல்— செந்நெற்களானவை
தாள் சாய்த்து— தாள்களை நீட்டி
தலை வணக்கும் — தலைவளையாநின்றுள்ள
தண்— குளிர்ந்த
அரங்கம்— திருவரங்கமானது;
உரம் பற்றி— தேவர்களால் பெற்ற வரபலத்
தை யுடைய
இரணியனை— ஹிரண்யனை
உகிர் நுதியால்-திருவுகிர்களின் கூர்மையால்
ஒள்ளிய மார்பு — அவனுடைய அழகிய
மார்விலே
உறைக்க— மறுபாடுருவும் படியாக
ஊன்றி— ஊன்றி
முடி— கிரீடமானது
இடிய— பொடிபடும்படியாகவும்
கண்— கண்களானவை
பிதுங்க— பிதுங்கும்படியாகவும்
வாய் அலர்— வாய் அலரும்படியாகவும்
சிரம் பற்றி— தலையைப்பிடித்து நெரித்து
தெழித்தான்— ஆரவாரம் செய்தவன் வர்
த்திக்கிற
கோயில்— கோயில்.

வ்யா. உரம்பற்றி யிரணியனை. தேவர்கள்கொடுத்த வரபலங்களையும் தன்னுடைய புஜபலத்தையும் நினைத்து, " ஒருவராலுமோரழிவில்லை " என்று, வரங்கொடுத்த தேவர் களோடு அல்லாதாரோடு வாசியற எல்லாரையும் மருக்கித்தன்கீழ்யாக்கி, " தன்னுடைய நாமமேயொழிய பகவந்நாமம் அத்தேசத்தில் கடக்கவொண்ணாது" எனறுவிலக்கி, திருநாமம் செய்ன்னதுமே தேவ்தேவாக; * பள்ளியிலோதிவந்த தன்சிறுவனை ப்ரஹ்லாதனை வாசா மகோசரமான பிடைகளைப்பண்ணின ஹிரண்யன், " பிள்ளாய், நீசொல்லுகிறவன் எங்கே யுளன்?" என்று கேட்டபோது, " எங்குமுளன் " என்று ப்ரஹ்லாதன்கொல்ல, " இக்கு முளனே " என்று *தானளந்திட்ட தூணிலேயடிக்க, " ஆங்கேவளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங் கவுருவாய் " என்கிறபடியே - தேவர்கள் கொடுத்த வரத்தில் அகப்படாதபோரு வடிவைக் கொண்டு, அத்தூணைப் பிளந்துகொண்டு புறப்பட்டு, " அடித்தகை பிடித்தபெருமாள் " என்னும்படி அத்தூணில் அடித்தகை வாங்குவதற்கு முன்னே பலத்தாலேவந்து அமுக்கிப் பிடித்து. உகிர்நுதியால். " அஸ்த்ர சஸ்த்ரங்க ளொன்றுமும் படக்கடவேனல்லேன்" என்று வரங்கொள்ளுகையாலே, அவற்றால் நிரஸிக்கப்போகாமையால் திருவாழிதொடக்கமானவை யும் அழுக்குடலா யிருந்துவிட, திருவுகிரை ஆயுதமாக்கிக்கொண்டு அதினுடைய கூர்மை யாலே. ஒள்ளியமார்புறைக்கவுன்றி. ஆபரணங்களாகாதிகளாலே அலங்கரித்து, அவன் பலகாலும்பார்த்து அநுபவித்துக் கொண்டிருந்த அழகியமார்விலே மறுபாடுருவும்படியாக வுன்றி. சிரமித்யாதி. அபிவேஷ்கமானது பொடிபடும்படியாகவும், கண்கள் பிதுங்கும்படி யாகவும், வேதனைகள் பொறுமல் வாய் அலரும்படியாகவும், தலையைப்பிடித்து நெரித்து, " ப்ரஹ்லாதனுடைய விரோதி போகப்பெற்றோம் " என்னும் ப்ரீதியாலே ‡ ஊர்ப்பர்வம் செய்தவன் இங்ஙனெத்த விரோதிகளைப்போக்கி ஆச்ரிதரக்ஷணைக்காக நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

உரம்பெற்றவித்யாதி. சேற்றுவாய்ப்பாலே உரம்பெற்றிருக்கிற தாமரைப்பூவானது திருவுகளந்தருளினபோது மேலெடுத்த திருவடிகளைப்போலே இளரவளர்ந்து ப்ரகாசியா நிற்க. வரம்புற்ற வித்யாதி. அப்போது, (க) " ஸதெஷ்வஹ-ரணாழி " என்கிறபடியே தேவர்கள்முதலானவர்கள் திரண்டு காலைநீட்டித் தலையவணங்கித் தண்டனிட்டுக் கிடந்தாற் போலே, வரம்புசேர்ந்து விளைந்துநிற்கிற செந்நெற்களான்வை தாள்களைநீட்டித் தலையை வணங்கும் சிறப்பையும், ஸர்வர்க்கும் தாபஹரமான குளிர்த்தியையு மூடைத்தான் திரு வரங்கமே. ... ... அ

அ. ஒன்பதாம்பாட்டு. தசாவதாரமாய்க்கொண்டு ஜகத்ரக்ஷணம் பண்ணுமவன் நித்யவாஸம்பண்ணுகிற தேசமிதுவென்கிறார்.

மூ.—தேவுடையமீனமா மாமையா மேனமா ரியாய்க் குறளாய்
மூவுருவி லிராமனுய்க் கண்ணனுய்க் கற்கியாய் மூடிப்பான் கோயில்.
சேவலோடு பேடையன்னஞ் சேங்கமலமலரேறி யூசலாடிப்
பூவினணமேல் துதைந்தேழ் செம்பொடியாடி விளையாடும் புனலரங்கமே. கூ.

‡ ஊர்ப்பரவம்= ஊர்வாசம். (க) " ஸங்ஜகஸ்ஸ-ராஜனம்."

பதவுரை.

சேவலொடு— புருஷஹம்ஸத்தோடே
பெடை அன்னது— அன்னப் பேடானது
செம் கமலம் மலர்— செந்தாமரைப் பூவி
ன்மேலே
ஏறி— ஏறியிருந்து
ஊசல் ஆடி— அத்தை அசைத்து ஊசலாடி
பூ அணைமேல்— புஷ்பசயனத்தின் மேலே
தூதைந்து— ஒன்றுக்கொன்று பிணங்கி
எழு— கிளர்ந்த (அதனாலே,)
செம்பொடி— சுண்ணமாகிற சிவந்த பொ
டி— மூழ்கி [டியிலே
விளையாடும்— விளையாடா நின்றுள்ள
புனல்— நீர்வளப்பத்தையுடைய
அரங்கம்— திருவரங்கமான தூ;

தேவ உடைய— தேஜஸ்ஸையுடைய
மீனம் ஆய்— மத்ஸ்யமாயும்
ஆமை ஆய்— கூர்மமாயும்
ஏனம் ஆய்— வராஹமாயும்
அரி ஆய்— நரஸிம்ஹமாயும்
குறள் ஆய்— வாமநனாயும்
மூ உருவில் } பரசுராமனாயும் ஸ்ரீராமனாயும்
இராமன் ஆய் } பலராமனாயும்
கண்ணன் ஆய்— ஸ்ரீகிருஷ்ணனாயும்
கற்கி ஆய்— கல்கியாயும் (அவதரித்து)
முடிப்பான்—அஸுராராக்ஷஸாதிகளை முடித்து
சோ— எம்பெருமானுக்கு
இல்— வாஸஸ்தானமாம்.

வ்யா. தேவுடைய. தேஜஸ்ஸையுடைய இது, ஸகலாவதாரவிசேஷணம். சேதநருடைய ஜன்மம், கர்மநிபந்தநமாய் ஸ்வார்த்தமாயிருக்கையாலே பிறக்கப்பிறக்க ஒளிமழுங்கி வாராநிற்கும்; ஈச்வரனுடைய ஜன்மம், இச்சாமாத்ர பரார்த்தமாயிருக்கையாலே பிறக்கப் பிறக்க ஒளிபெற்று வாராநிற்கும். " பல்பிறப்பாய் ஒளிவரும் " என்றருளிச் செய்தாரிறே. (க) " ஸுதேஜஸே ரவயே நம: " என்னக்கடவதிறே. உகாரம் அவதாரண வாசகமாய்ப், 'ஸ்ரேயாந்' என்றபடி. அதாவது-அல்பீன ஜாயமாநனுய்க்கொண்டு ச்ரேயாநாகாநின்றவனென்கை. அவதாரணத்தாலே சேதநனை வ்யாவர்த்திக்கிறது. மீனமாய் *வாமநரளவும் முதுமுந்நீர் வளர்ந்தகாலம் வந்துய்யக்கொண்ட மத்ஸ்யாவதாரமாய். ஆமையாய். தேவகார்யார்த்தமாக அம்ருதமதநம் பண்ணுகிறபோது மந்தாநமான மந்தரத்துக்கு ஆதாரமான கூர்மாவதாரமாய். ஏனமாய். ப்ரளயங்கதையாய் அண்டபித்தியிலே சேர்ந்த பூமியை உத்தரிக்கைக்கீடான வராஹாவதாரமாய். அரியாய். " தேவாதி யோநிகளொன்றுமம் படக்கடவேனல்லேன் " என்று வரங்கொண்ட ஹிரண்யனை நிரஸிக்கைக்கீடான நரஸிம்ஹாவதாரமாய். குறளாய். மஹாபலியாலே அபஹ்ருதமான ராஜ்யத்தை இந்த்ரனுக்கு வாங்கிக்கொடுக்கைக்கீடாக வாமநாவதாரமாய். மூவுருவிலிராமனுய். அதாவது-துஷ்டக்ஷத்ரிய நிரஸநார்த்தமாக பரசுராமாவதாரமாய், ராவணவதார்த்தமாக தசரதாத்மஜ ராமாவதாரமாய், ஆஸுரப்ரக்ருதிகளான க்ஷத்ரியாதிகளை நிரஸநத்துக்காக பலபத்ர ராமாவதாரமாய். இதில் நடுச்சொன்ன ராமாவதாரம் முக்யம்-ஸ்வஸ்மை பணுவதரித்ததாகையாலே. பூர்வோத்தரங்களிரண்டும் கௌணம்- ஆவேசாவதாரங்களாகையாலே. ஆனால் இவைதன்னை முக்யாவதாரங்களோடேகூட பரிகணிப்பானென்னென்னில்; ஸ்வரூபாவேசமாகையால் வந்த உத்கர்ஷத்தாலே; இவற்றில் பரசுராமாவதாரம், அஹங்கார யுக்தஜீவனை அதிஷ்டித்து நிற்கிறதாகையாலே, முமுக்ஷுக்களுக்கு அநுபாஸ்யம்; பலபத்ர ராமாவதாரம், அஹங்கார கந்தரஹிதமாய் ஈச்வரனுக்கு அத்யந்தாபிமத விஷயமாயிருக்கையாலே, முக்யாவதாரங்களோ

(க) " ஸுச்ரேயாந் பவதிஜாயமாநம் "

பாதி உபாதேயம். அநுபாஸ்யமான் அவதாரந்தன்னை இவரருளிச்செய்வா னென்னில்; தசாவதாரமு மருளிச்செய்கிறவராகையாலும், அவ்வவதாரத்தில் பண்ணின விரோதி நிரஸநம் தமக்கு அபிமதமாயிருக்கையாலு மருளிச்செய்தார். ''மன்னடங்க மழுவலங்கைக் கொண்ட விராமரும்பி'' என்றிறே மேலும் இவரருளிச்செய்தது. கண்ணனுய். பூபாரநிரஸ நார்த்தமாக க்ருஷ்ணனுய். கற்கியாய். கலிகல்கதூஷிதரான துஷ்டரை நிரஸிக்கைக்காக கல்க்யவதாரமாய். முடிப்பான். இப்படி இவ்வவதாரங்களாய்க்கொண்டு துஷ்கர்த்துக்களை முடிக்குமவன். கோயில். அவதாரத்துக்குப் பிற்பாடரானவர்களையும் ரக்ஷிக்கைக்காக நித்யவாஸம் பண்ணுகிற தேசம்.

சேவலித்யாதி. அபிமதவிஷயமான சேவலோடே கூட அநுதனக்கு அபிமதமாயி ருந்துள்ள பெடையன்னமானது, சிவந்த தாமரைப்பூவின்மேலே ஏறியிருந்து, ஸ்வவ்யாபா ரங்களாலே முழுகி, அத்தை யசைத்து ஊசலாடி. பூவணையித்யாதி. பூப்படுக்கையின் மேலே பரஸ்பர ஸம்ச்லேஷ கார்யரூபமான உழறுதலைச்செய்து, அத்தாலே அதினின்றும் கிளர்ந்த சுண்ணமாகிற சிவந்த பொடியிலே முழுகி, இப்படி யிருந்துள்ள லீலாவ்யாபாரங்க ளைப் பண்ணும்படியான ஜலஸம்ர்த்தியையுடைய திருவரங்கமே. ... ... கூ.

அ. பத்தாம்பாட்டு. ஸர்வநிர்வாஹகனுய் ஸ்ரீயஃபதியானவன் ஸரஸமாகக் கண்வள ர்ந்தருளுகிற தேச மிதுவென்கிறார்.

மூ.—செருவாளும்புள்ளாளன் மண்ணாளன் செருச்செய்யுநாந்தகமென்னு
மொருவாளன் மறையாள னேடாதபடையாளன் விழுக்கையாளன்
இருவாளன் பகலாள னென்னையாள னேழுலகப் பெரும்புரவாளன்
திருவாளனினிதாகத் திருக்கண்கள் வளர்கின்ற திருவரங்கமே. கூ.

பதவுரை.

செரு ஆளும்— தானேபோர் செய்யவல்ல
புள்— பெரிய திருவடியை
ஆளன்— ஆளுமவனுய்
மண்— லீலாவிபூதியை
ஆளன்— ஆளுமவனுய்
செரு செய்யும்— ஆச்ரிதவிரோதிகள்மேலே பூசல்செய்யாநிற்பதாய்
நாந்தகம் என்னும்— 'நந்தகம் என்று பே ரையுடைத்தாய்
ஒரு— ஒப்புற்ற
வாளன்— கொற்றவொள்வாளையுடையனுய்
மறை ஆளன்— நான்கு வேதங்களையு மாரு மவனுய்
ஒடாத— யுத்தத்தில் முதுகுகாட்டியோடாத
படை ஆளன்— இப்படிப்பட்ட பரிகரத்தை யுடையனுய்
விழு— சீர்மையோடேகூடின
கையாளன்— கர்ட்டையை யுண்டையனுய்
இரவு ஆளன் / பகல் ஆளன் } இரவு பகலாகிய காலங்களுக் குத் தலைவனுய்
என்னை ஆளன்— என்னை ஆளுமவனுய்
ஏழு உலகம்— ஸப்தலோகங்களாகிற
பெரு— பெரிய
புரவு— ஸம்ரக்ஷணத்ரங்களை
ஆளன்— ஆளுமவனுய்
திரு ஆளன்— பெரியபிராட்டியாரை நித்ய மஹிஷியாக உடையனுமானவன்
இனிதாக— திருவுள்ளத்தில் உகப்போடே
திரு கண்கள் வளர்கின்ற } திருக்கண் வளர்ந்தருளுகிற
(கோயில்)
திரு அரங்கமே.

வ்யா. . செருவாளரும்புள்ளாளன். யுத்தத்தை ஸ்வயமேவ நிர்வஹிபாநிற்கும் பெரிய திருவடியை ஆளுகிறவன். ஆச்ரித விரோதிகளான அஸுராராக்ஷஸரோடே யுத்தம்பண்ணு மிடத்தில், அந்த யுத்தத்தைப் பெரியதிருவடிதானே நடத்த, இவன் காணவந்த சோழரோ பாதி ஆத்தைக் கண்டுகொண்டு அவன் தோளிமேல இருக்குமத்தனையாய்த்து. " பாறிப்பாறி அசுரர்தம்பல்குழாங்கள் நீறெழப்பாய் பறவையொன்றேறி வீற்றிருந்தாய் " என்கிறரே ஆழ்வார், அதாவது- அஸுரவர்க்கத்தினுடைய பலவகைப்பட்ட குழாங்களானவை; பாறிப்பாறி நீறெழுந்துபோம்படியாக,ப்ரதிபக்ஷத்தின்மேலே பாயாநின்றுள்ள அத்விதீயமான பெரியதிருவடியை மேற்கொண்டு தன்னுடைய வ்யாவர்த்திதோற்ற விருந்தவனென்றபடி. " புகழ்கின்ற புள்ளூர்தி " என்று விரோதி நிரஸநத்தால்வந்த புகழடங்கலும் இடப்பது அவன்பக்கலிலே. " அவனே வாஹநமாகவுடையனென்கிறதே அவனுக்கேற்றம் " என்றருளிச்செய்தாரிறே.

மண்ணுளன். நித்யஸூரிகளில் தலையான பெரியதிருவடியை வாஹநமாகவுடையனென்கையாலே நித்யவிபூதியையாளுமவனென்னுமிடம் சொல்லிற்றாய், இத்தால் லீலாவிபூதியை ஆளும்படி சொல்லுகிறது. ஆச்ரிதாநாச்ரித விபாகமற மண்ணிலுள்ளாரெல்லாரையும் ஆளுகிறவன். ஆச்ரிதரை, " நம்மோட்டை ஸம்பந்தமறிந்தவர்கள் " என்று ஆளும்; ஆநாச்ரிதரை, தானறிந்த ஸம்பந்தத்தாலே ஆளும். பூமியைச்சொன்னவிது அல்லாத லோகங்களுக்கு முபலக்ஷணம். செருச்செய்யும் நாந்தகமென்னு மொருவாளன். கீழ், " புள்ளாளன் " என்று- ஆச்ரிதரக்ஷணத்துக்குடலான வாஹநத்தைச் சொல்லிற்று; இங்கு, ஆயுதத்தைச் சொல்லுகிறது. ஆச்ரிதவிரோதிகள்மேலே பூசலிச்செய்யாநிற்பதாய், நாந்தகமென்னும் திருநாமத்தையுடைத்தாய், அத்விதீயமாயிருந்துள்ள கொற்றவாள்வாளையுடையவன். திவ்யாயுதங்கள்தான் ஸர்வஜ்ஞமாய், நினைவறிந்து கார்யம்செய்யுமவையாயிறே யிருப்பது.

மறையாளன். இப்படி ஆயுதத்தாலே அழியச்செய்யவொண்ணாத பாஹ்யகுதர்ஷ்டி மதங்களை யழியச்செய்கைக்கு பரிகரமான வேதத்தை ஆளுகிறவன். சஸ்த்ரத்தாலும்சாஸ்த்ரத்தாலும் நிறேப்ரதிபக்ஷநிரஸநம்பண்ணுவது. சஸ்த்ரத்தாலேநிரஸிக்குமளவில், சரீரவிநாசபர்யந்தமாம்; சாஸ்த்ரத்தாலே நிரஸிக்குமளவில், அவர்களுடைய விபரீத ஜ்ஞாநாதிகள்போய், இச்சரீரந்தன்னோடேயிருக்கச்செய்தே திருந்தியுஜ்ஜீவிக்கைக்கு உறுப்பாம். இது இரண்டிக்கும் விரோதம். ஓடாதபடையாளன். யுத்தத்தில் புகுந்தால் பிற்காலியாதபடியாயுதிகரத்தையுடையவன். அன்றிக்கே, (க) " ஸஸங்கவ்யுபரதநிரவத்ய நிரதிசயகல்யாணதிவ்யாயுத " என்கிறபடியே லோகத்தில் வழங்காத ஆயுதவிசேஷங்களையுடையவனென்னவுமாம். விழுக்கையாளன். (உ) " வரிஜநவரிஷ்வஹபூ ஹலிபுஷ்ணாதி " இத்யாதிப்படியே ஆத்மாத்மீயங்களடைய ஆச்ரிதார்த்தமாக்கிவைக்கும் சீர்மையையுடையவன். விழுக்கை- சீர்மை. அன்றிக்கே, விழுப்பத்தையுடைத்தான கையையுடையவன்-சீர்மையோடேகூடின கொடையையுடையவனென்றபடி. (ஊ) " ஸஸவபூ நயிபூ நரபூஷ்வா ஸஹிதவ்ய கிநஜ்ஞவ " என்னக்கடவதிறே.

(க) " அஸங்க்யேயநித்யநிரவத்ய நிரதிசயகல்யாண திவ்யாயுத " (உ) " பரிஜந பரிபர்ஹாபூஷணாதி " (ஊ) " ஸஸர்வாந்தரோதர்ஷ்டவா ஸமேத்யப்ரதிபந்நச "

இரவாளன் பகலாளன். நிவாரத்ருபமான காலத்துக்கு நிர்வாஹகனானவன். இத்தால் சேதநர்க்கு ஜ்ஞாநஸங்கோச ஹேதுவாயும ஜ்ஞாநவிகாஸ ஹேதுவாயுமிருந்துள்ள காலங்களை ஸ்வாதீநமாக உடையவனென்கை. என்னையாளன். "எயிற்றிடை மண்கொண்ட வெந்தை யிராப்பகலோதுவித்தெந்நைப் பயிற்றிப் பணிசெய்யக்கொண்டான்" என்கிறபடியே தானே திருத்தி, நிவாரத்ரவிபாகமற என்னையாளுகிறவன். ஏழுலகப்பெரும்புரவாளன். ஸமஸ்தலோகங்களுமாகிற பெரிய புரவை ஆளுகிறவன். புரவு - ஸ்ரீகூரம். இத்தால் ஸமஸ்தலோகங்களையும் ஆளுமிடத்தில், அல்பக்ஷேத்ரவாஸனைவன் இரவுபகல் நோக்கி ஆளுமாபோலே ஆண்டுகொண்டு போருமவனென்கை. "பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகு மங்காதுந்ந சோராமேயாள்கின்ற" என்னக்கடவதிறே.

திருவாளன். பெரியபிராட்டியாரை நித்யமஹிஷியாக உடையவன். கீழ்சொன்ன லோகத்தையெல்லா மாளுவது இருவருமான சேர்த்தியிலேயாய்த்து. இனிதாகத்திருக்கண்கள் வாழ்கின்ற திருவரங்கமே. "கூரார்ந்த தொடக்கமான ஸ்தலங்களெல்லாவற்றிலுங்காட்டில் அபிமதவிஸ்தீர்ணமான தேசம்" என்று திருவுள்ளத்திலுகப்போடேகூடக் கண்வளர்ந்தருளுகிற கோயில், திருவரங்கமே. (க) "கூரோவிஷ்வக்ஸேநோ ஹரிரிதி நாமஹ்ரதயா யதவ்யாத்ரா ரங்கிமஹிகாஹ சிபதி தஸ்ய ஸ்ரீரிதிஷ்ட்யதி" என்னக்கடவதிறே. ... ம.

அ. நிகமத்தில், இத்திருமொழிகற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—கைங்காகத்திடர் கடிந்தகனலாழிப் படையுடையான் கருதுங்கோயில்
தென்னுடும் வடநாடுந் தொழநின்ற திருவரங்கத் திருப்பதியின்மேல்
மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன் விரித்ததமிழ்மைக்கவல்லார்
எஞ்ஞான்று மெம்பெருமா னிணையடிக்கீ ழிணைபிரியா திருப்பர்தாமே. கக.

பதவுரை.

கை— பெரிய துதிக்கையையுடைய
நாகத்து— ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய
இடர்— துக்கத்தை
கடிந்த— நீக்கினதாய்
கனல்— ஜ்வலியாநின்றுள்ள
ஆழி— திருவாழியை
படை உடையான்— ஆயுதமாக வுடையவன்
கருதும்— விரும்பி வர்த்திக்கிற
கோயில் — கோயிலாய்
தென் நாடும்— தென்னாட்டி லுள்ளாரும்
வடநாடும்— வடநாட்டிலுள்ளாரும்
தொழ - தொழும்படியாக
நின்ற— நின்றருளின
திரு அரங்கம் } 'திருவரங்கம்'என்னும்
திரு பதியின்மேல் } திருப்பதி விஷயமாக
மெய் நாவன் — மெய்யேசொல்லும் நாவை யுடையவராயும்
மெய் அடியான்— அநந்யப்ரயோஜநமாக அடிமைபூண்டவராயு மிருக்கிற
விட்டுசித்தன் — பெரியாழ்வார்
விரித்த— விஸ்தரித்து அருளிச்செய்த
தமிழ்— தமிழ்மாலையான இத்திருமொழியை
உரைக்கவல்லார்தாம்— சொல்லவல்லவர்கள்
எம் பெருமான்—ஸ்ரீவைகுண்ட நா[illegible]ய

(க) கூராப்தேர்மண்டலாத்பாநோ ர்யோகிநாம்ஹ்ர்தயாதபி- ர்திம்கதோஹரிர்யத்ர தஸ்மாத்ரங்கமிதிஸ்ம்ர்தம்"

இணை— ஒன்றுக்கொன்றொப்பான
அடி கீழ்— திருவடிகளின்கீழே
எஞ்ஞான்றுமே— எக்காலத்திலும்

இணை பிரியாது— *அடியார்கள்குழாங்களோ
டே இணைபிரியாமல்
இருப்பர்— இருக்கப்பெறுவர்கள்.

வ்யா. கைந்நாகத்திடர்சடிந்த. ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய துக்கத்தைப் போக்கின. "ஆனைக்கும் தனக்குத்தக்க வாதம்" என்னுமாபோலே வடிவின் கநத்துக்குத் தக்கபடியிறே துக்கத்தின் கநமிருப்பது. "ஆனையின் துயரம்" என்றுமிறே. ஆனைக்கு வாசகமான சப்தங்கள் பலவுமுண்டாயிருக்க, "கைந்நாகத்திடர்" என்றது - "கைம்மாதுன்பம்" என்கிறபடியே துதிக்கையை முழுத்தின ஆபத்தென்று தோற்றுகைக்காக. அதாவது - நெடுங்காலம் வர்ஷாபாவத்தாலே வரண்டு, லோகத்தில் ஒருபூக் காணக்கிடையாதபடியாகையாலே, "எங்கே யொரு திருப்பள்ளித்தாமம் கிடைக்குமோ" என்று தடுமாறுதிற்க, "மொய்ம்மாம் பூம்பொழிற் பொய்கை" என்கிறபடியே - தூரத்திலே குளிர்ந்தசாலையும் பூத்தபொய்கையுமாய்த் தோற்றக்கண்டு, பெரிய ஆபிநிவேசத்தோடே ஓடிச்சென்று, "உள்ளே துஷ்டஸத்த்வங்கிடக்கிறது" என்றறியாமல் பொய்கையிலே யிழிந்து பூவை வாரிப்பறித்துக் கரையிலேயேறத் தேடுகிறவளவிலே, முதலைவந்து காலைப்பிடிக்க; "ஒரு நீர்ப்புழு நிமித்தமாக ஈச்வரனே யழைக்கலாவதுமோ, நாமே தள்ளிப்போகிறோம்" என்று போகப்பார்த்தவளவில்; பிடித்தமுதலை ப்ரபலமாகையாலே (க) "ஸ ஜக்ராஹ கஜேந்த்ரம் தீவ்ர ஸ்ராஹ க்ராஹ க்ருஹீத ஜலே" என்கிறபடியே இங்கனே ஆயிரம் தேவஸம்வத்ஸரம் சென்றவளவில்; முதலைக்கு தன்னிலமாகையாலும் அபிமதலாபத்தாலும் "முழுவலிமுதலை" என்கிறபடியே பலம் அபிவ்ருத்தமாய், ஆனைக்கு தன்னிலமல்லாமையாலும் அபிமதாலாபத்தாலும் பலம் க்ஷீணமாகையாலே துதிக்கைமுழுத்தும்படியாய்த்தறிறே; இப்படியானவாறே தன்னுற்செயலற்று, (உ) "ஸ நஸ்மரா விக்லவயா கிரிம்" என்கிறபடியே ஸர்வேச்வரனையே ரக்ஷகனாக வநுஸந்தித்து, "நாராயண ஓ மணிவண்ண நாகணையாய் வாராய்" என்ன; இந்த ஆர்த்தத்வநி செவிப்பட்டவாறே, (ங) "க ஏஷ்யதி தவாபீஷ்டம் ப்ரஹ்மாத்ய ஹ்யாதி'இத்யாதிப்படியே, (ச) "ஸமவதஸ்தூராதவ்யதநம்" என்று - அறிவுடையார் ஈடுபடும்படி பெரியத்வரையோடே மடுவின்கரையிலே வந்து, ஆனையை ஒருகையாலும் முதலையை ஒருகையாலுமாக எடுத்தணைத்துக்கொண்டு கரையிலேறி, கையில் திருவாழியாலே முதலையின் வாயைப் பிளந்து விடுவித்து, சாத்தியருளின திருப்பரிபட்டத் தலையைச்சுருட்டித் திருப்பவளத்திலேவைத்து அதினுடைய புண்வாயை வெதுகொண்டு, நெடுநாள்பட்ட க்லேசமெல்லாம் தீரும்படி திருக்கையாலே குளிரஸ்பர்சித்துத் திருக்கண்களாலே குளிரக்கடாக்ஷித்து, அதின் கையில் பூவைத்திருவடிகளிலே யிடுவித்துக்கொண்டு அதினுடைய துக்கத்தைப் போக்கினபடியைச் சொல்லுகிறது - "இடர்கடிந்த" என்று. கனலாழிப்படையுடையான். ஜ்வலியாநின்றுள்ள திருவாழியை ஆயுதமாகவுடையவன்.

"இட்கடிந்த கனலாழிப்படையுடையான்" என்கையாலே - கையும் திருவாழியுமாய்க் கொண்டுவந்து தோற்றியாய்த்து முதலையை விடுவித்ததும் ஆனையை ரக்ஷித்ததும்.

(க) "கஜ ஆகர்ஷமததீவ க்ராஹ ஆகர்ஷதஜ்ஜலே" (உ) "மநஸாசிந்தயத்தரிம்" (ங) "அதக்ருத்ரிதசமுபதிப்ராஹிதஹஸ்தம்" (ச) "பகவதஸ்த்வராயைநமஸ்"

" தொழுங்காதல் களிறளிப்பான் - மழுங்காதவை நுதிய சக்கரால் வலத்தையாய் - தோன்றி னீயே " என்று அறிவுடையார் ஈடுபடும்படியிறே அப்போதுவந்து தோன்றினபடி. கருதுங்கோயில், பரமபதம் க்ஷீராப்தி தொடக்கமான ஸ்தலங்களெல்லாவற்றிலுங்காட்டில், ஆச்ரிதரை அநுபவிப்பிக்கைக்கும் கூழிக்கைக்கு முடலானஸ்தலம் என்று விரும்பி வர்த்திக்கும் கோயில். தென்னாடும் வடநாடும் தொழுகின்ற. [illegible] ஸ்ரீ ஸ்க்ருத பாஷாப்ரதாநமான வடநாடும், இருந்தமிழ்நாடுடையாகத் தொழும்படிநின்ற. திருவரங் கத்திருப்பதியின்மேல். திருவரங்கமென்கிற திருநாமத்தையுடைத்தான திருப்பதிவிஷயமாக.

மெய்ஞ்ஞாவன். மெய்யேசொல்லும் நாவையுடையவன். அஸத்யமென்பது ஒன்றுமிலாத நாவையுடையவனென்கை; " பொய்ப்மொழி யொன்றில்லாத மெய்ம்மையாளன் " என்னுமாபோலே. இத்தால்- பகவத்வைபவம் தேசவைபவம் கிழருளிச்செய்தவற்றில் ஒன்றிலும் ஒருபொய் யில்லாமை சொல்லுகிறது. பெய்படியான். அநந்யப்ரயோஜநனை வடியான். " அடியான் " என்று பேரிட்டு ப்ரயோஜநத்துக்கு மடிமேற்குமவர்கள் பொய்படியாரிறே; சேஷத்வம் ஸ்வரூபமாஞல் சேஷிக்கு அதிசயத்தை விளைக்குமிதாழிய, ஸ்வாதி சயந்தேடுகை சேராதிறே. அங்ஙனன்றிக்கே, சேஷிக்கு மங்களத்தை ஆசாஸித்துக்கொண்டி ருக்கையும் ஸ்வபாவமாகையாலே, தம்மை " மெய்ப்படியான் " என்கிறார். இவையிரண்டும் தாமருளிச்செய்த வசநங்களை அப்யஸிப்பார்க்கு ஆப்தர்க்குடலாக வருளிச்செய்தாராய்த்து விட்டுசித்தன். * அரவத்தமளிப்படியே - ஸர்வேச்வரனைத் திருவநந்தாழ்வான்மேல் வைத்துக்கொண்டிருக்கிறவர். விரித்த தமிழ்மறைக்கவல்லார். விஸ்தரேண ப்ரதிபாதித்த க்ராவிடரூபமான இத்திருமொழியைச் சொல்ல வல்லவர்கள். எஞ்ஞான்றுமித்யாதி. எல்லாக்காலத்திலும், எனக்கு சேஷியான ஸ்ரீவைகுண்டநாதனுடைய, ஒன்றுக்கொன்றொப்பான திருவடிகளின் கீழே விச்லேஷரஹிதராய், * அடியார்கள் குழாங்களோடே தாங்களிருக்கப் பெறுவர். [illegible]

பெரியஜீயர் திருவடிகளேசரணம்.

அடிவரவு—மரவடி தன் கருள் பதிஞறு ஆமை மைத்துனன்
குற ளுரந் தேவு செரு கைங்காகத் துப்பு.

———(o)———

ஆ திருமொழி-கக-க்கு, பாட்டு-ச்ச்[410]o.

கான்காம்பத்து- பத்தாந்திருமொழி-துப்புடையாரை, ப்ரவேசம்.

அ. கீழ் இரண்டு திருமொழியிலே - பெரியபெருமாளுடைய திவ்ய வைபவத்தையும், பெரியகோயிலான திருவரங்கத் திருப்பதியினுடைய வைபவத்தையும், பெரிய அபிநிவேசத்தோடே பேசி யநுபவித்துப்போந்தார்; " தன்னடியார் " இத்யாதியில் சொன்னபடியே - புருஷகாரபூதையான பிராட்டிதானே சிதகுரைக்கிலும் அவளோடே மறுதலைத்து ஆச்ரிதரக்ஷணம்பண்ணும் வாத்ஸல்யாதிசய யுக்தராய். " இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூடேற்றி " இத்யாதிப்படியே - ஆநந்யப்ரயோஜநராய், திருவடிகளை ஆச்ரயித்த

வர்களை அர்ச்சிராதிமார்க்கத்தாலே அபுநராவர்த்திலக்ஷணமான பரமபதத்திலேகொடுபோய் * அருள்கொடுத்திட்டு அடிமைகொள்ளும் ஸ்வபாவரான பெரிபெருமாளுடைய திவ்ய குணத்தை யநுஸந்தித்தவராகையாலே, அவர்க்கும் நிருந்நின சேதநரை இங்குநின்றும் கொடுபோய் அடிமைகொள்ளுகை திருவுள்ளமாகையாலே, " நாம்இனி அங்கேபோய் அடிமைசெய்யவேணும் " என்னும் அபேக்ஷையிறந்து, அதுக்கு சேஷஸம்பந்தமற்றுப்போக வேண்டுமென்பதை அநுஸந்தித்து, இந்தப்ரஸங்கத்திலே சரீரவிச்லேஷஸமயத்தில் ஸம்ஸாரிகளானவர்களுக்கெல்லாம் யமபடரால்வரும் நலிவைநினைத்து, " அது நமக்கு வாராதொழியுமசீபாது ஸர்வேச்வரனவனே போக்கித் தந்தருளவேணும் " என்று அத்யவஸித்து, " அதுதன்னை எற்கவே அவன் திருவடிகளிலே விழுந்து அர்த்திக்துச் செய்வித்துக்கொள்வோம் " என்று ஒருப்பட்டு, சரமதசையில் கர்மாநுகுணமாக யமபடர்வந்து என்னை நலியும்போது, அந்த க்லேசத்தாலே தேவரீருடைய திருவடிகளை ஒருபடியாலும் நினைக்கவும் ஒன்று சொல்லவும் கூடமனல்லேன் என்று அத்தைப்பற்ற அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்; ஆனபின்பு, அக்காலத்தில் அவர்கள் என்னைநலியாதபடி தேவரீர் ரக்ஷித்தருளவேணும் என்று பெரியபெருமாள் திருவடிகளிலே சரணம்புக்கு விண்ணப்பம்செய்து செல்லுகிறார் - இத்திருமொழியில்.

இதுதானிருந்தபடியென்?:- (க) " நவது ஹ மகு யவிஷபம்ஹ ஹுஹி " என்று சாஸ்த்ரம் சொல்லுகையாலும், " வேண்டாமைமன்றமென்றமரை வினவப்பெறுவாரலர் " என்கிற பகவதுக்தியாலும், " உன்றமர்க்கென்றும் நமன்றமர் கள்ளர்போல் " என்று அபியுக்தர் சொல்லுகையாலும், (உ) " வரிஹரமதுஸ்ய ஸதந பூவஹாநு " என்று யமன்றூனே சொல்லுகையாலும், பாகவதரானவர்களுக்கு யமவச்யதைவரக்கூடாதென்னுமிடம் ப்ரஸித்தமாயிருக்க, " சரமதசையிலே யமபடர்வந்து நலிவர்கள் " என்று பயப்பட்டுத் திருவடிகளிலே சரணம்புகுந்து, " அத்தசையிலே என்னைரக்ஷித்தருளவேணும் " என்று இவர் அர்த்திக்கிறவிது, கீழ்ச்சொன்ன வசநங்களோடு விருத்தமன்றே வென்னில்; ஆழ்வார்கள் தாங்கள், * மயர்வறமதிநல மருளப்பெற்று அவனை உள்ளபடியறிந்து அநுபவியா நிற்கச்செய்தே ஓரோ தசைகளிலே வந்தவாறே, அநாதிகாலம் ஸம்ஸரணஹேதுவாய்க்கொண்டு போந்த கர்மபலத்தையும், அந்த கர்மாநுகுணமாகவே நிர்வஹித்துக்கொண்டு போந்தவனுப் பந்தமோக்ஷோபய நிர்வாஹகனாயிருக்கிற ஈச்வரனுடைய ஸ்வாதந்த்ர்ய பலத்தையு மநுஸந்தித்து, " நிரங்குச ஸ்வதந்த்ரனனவன் இன்னம் நம்மை ஸம்ஸரிப்பிக்கில் செய்வதென் " என்று, " மக்கள்தோற்றக்குழி தோற்றுவிப்பாய் கொல் " என்றும், " இன்னம் ஆற்றங்கரை வாழ்மரம்போ லஞ்சுகின்றேன் " என்றும், " வைத்த சிந்தை வாங்குவித்து நீங்குவிக்க நீயின்னம் மெய்த்தன்வல்லை- உய்த்துநின்மயக்கினில் மயக்கலென்னைமாயனே " என்றும் அவனைக்குறித்து விண்ணப்பம் செய்யும் ப்ரகாரத்திலே; இவரும், ஈச்வரஸ்வாதந்த்ர்யத்தையும், அநாதிகாலம் அவன் திருவடிகளைக் கிட்டாதபடி அகலவடித்த கர்ம்பலத்தையும் அநுஸந்தித்து, " ஸ்வதந்த்ரனனவன் நம்முடைய கர்மாநுகுணமாக விட்டு உபேக்ஷித்திருக்குமாகில், முன்புபோலே யமபடரால்வரும் நலிவு நமக்குவரில் செய்வதென் " என்று அஞ்சி, அவன் திருவடிகளிலே சரணம் புகுந்து, அத்தசையில் என்

(க) " நகலுபாகவதாயமவிஷயம்கச்சந்தி " (உ) " பரிஹரமதுஸ்ய தநம்ரபந்நாந் "

னை ரக்ஷித்தருளவேணும் என்று அர்த்திக்கிறார். ஆகையால், இந்த பயமும் ப்ரார்த்தனையும் இவருடைய அதிசங்காமூலமான கல்பிதமடியாக வந்ததாகையாலே, ஸ்ரீசொன்ன வஸ்துவோடு விரோதமில்லை. ... ... *.

மூ.—துப்புடையாரை யடைவதெல்லாஞ் சோர்விடத்துத் துணையாவரென்றே
ஒப்பிலேலுகிழு நின்னடைந்தே னெனக்குநீ யருள்செய்தமையால்
எய்ப்பெண்ணை வந்து நலியும்போதங்கே துனுன்னை நினைக்கமாட்டேன்
அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தே னரங்கத் தரவணைப்பள்ளியானே.க

பதவுரை.

அரங்கத்து அரவு அணை பள்ளியானே!—, அரங்கத்தில் திருவனந்தாழ்வானாகிற திருப்பள்ளியிலே பள்ளிகொண்டருளுகிறவனே!
துப்பு உடையாரை—அடுத்தவரைக் காக்கும் திறமுடைய உன்னை
அடைவது— அடைக்கலம்புகுவது
எல்லாம்—என்னுடைய காரணங்களெல்லாம்
சோர்வு இடத்து— சோர்ந்தகாலத்திலே
துணை ஆவர் என்று—நீ துணையாவாயென்று'
(என்று ஆழ்வார் சொல்ல;— 'அதுதான்செய்வது ஒருக்கால் ப்ரபத்தி பண்ணினுக்கன்றோ' என்று எம்பெருமான் திருவுள்ளமாக,
ஒப்பு இலேன் ஆகிலும்—'அப்படிப்பட்ட அதிகாரிகளுக்கு நான் ஒத்தவனல்லேனாகிலும்
நின்— உன்னை
அடைந்தேன்— சரணமாகவடைந்தேன்'
(என்ன; 'நாம் ஆரை ரக்ஷிக்கக்கண்டு நம்மை வந்தடைந்தீர்?' என்ன;)
நீ— 'தேவரீர்
ஆனைக்கு— ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு
அருள் செய்தமையால்— க்ருபைபண்ணினமையாலே'
(என்ன; அப்போது வந்து ரக்ஷிக்கிறேனுமென்ன;)
எய்ப்பு— 'மூன்றுமேதாஷத்தாலு முண்டான இளைப்பானது
என்னை— என்னை
வந்து— வந்து கிட்டி
நலியும்போது—வருத்துங்காலத்திலுண்டான
அங்கு— அவ்வவஸ்தையில்
நான்— அடியேன்
ஏதும்— சற்றுமேனும்
உன்னை— தேவரீரை
நினைக்கமாட்டேன்— ஸ்மரிக்கமாட்டேன்;
அ போதைக்கு—அக்காலத்துக்காக
இ போதே— காரணகளேபரங்கள் தெளிவுபெற்றிருக்கிற இப்போதே
சொல்லி வைத்தேன்— சொல்லிவைத்தேன்.' என்கிறார்.

வ்யா. முதற்பாட்டு. துப்புடையாரை யடைவது. துப்பு- ஸாமர்த்த்யம். ரக்ஷண ஸாமர்த்யமுடையாரை ஆச்ரயிப்பது. இது முன்னிலைப் படர்க்கையாய், சேச்வரன்றன்னையே சொல்லுகிறது. பஹுவசநம் பூஜார்த்தம். ரக்ஷண ஸாமர்த்த்யந்தான் வ்யக்த்யந்தரத்திலே இல்லையிறே; (க) "நஸம்பதாம்ஸமாஹாரே விபதாம்விநிவர்த்தநே ஸம்பத்தேர்தாத்ச்யேந கச்சித்தம் விநாபுருஷோத்தமம்" (உ) "நஹிபாலநஸாமர்த்ய மந்தேநஸ்ரீவேச்வரம்ஹரிம் ஸந்நிதேள ஸ்ந்நிதம்மஹாத்மாநம் பவத்யந்யஸ்ய கஸ்யசித்" என்கிறபடியே.

(க) "நஸம்பதாம்ஸமாஹாரே விபதாம்விநிவர்த்தநே-ஸம்பத்தேர்தாத்ச்யேந கச்சித்தம் விநாபுருஷோத்தமம்" (உ) "நஹிபாலநஸாமர்த்ய மந்தேநஸ்ரீவேச்வரம்ஹரிம்- ஸந்நிதேள ஸ்ந்நிதம்மஹாத்மாநம் பவத்யந்யஸ்ய கஸ்யசித்"

எல்லாம்சோர்விடத்து. இந்திரியங்களடைய அழிந்து மநஸ்ஸும் அழிந்தவிடத்து. அந்திம தசையைச் சொன்னபடி. துணையாவரென்றே. * நாஷ்ட்டபாஷாண ஸந்நிபமாய்க்கிடக்கிற தசையில் (க) "அஹம்ஸ்மராமி" என்கிறபடியே துணையாவரென்றே. அது நாம்செய்வது, தங்களுடைய இழவு பேறுகள் நம்மதாம்படி யிருக்கும் நம்மோட்டை ஸம்பந்தத்தை யறிந்து நம்பக்கலிலே (உ) "ஸ்மர்த்தா" என்கிறபடியே ஸக்ர்த்கரண ப்ரபத்தியைப்பண்ணினவர்களுக்கன்றே, நீர் அவர்களுக்கு ஒப்போவென்ன; ஒப்பிலேனாகிலும் நின்னடைந்தேன். அவர்களுக்கு ஸதாசனல்லனாகிலும், என்னுடைய துஷ்க்ருதிசயத்தாலே, அந்த துஷ்க்ருதிவர்த்திக் குறுப்பாக, எதிர்த்தலையில் யோக்யதைபாராதே ரக்ஷிக்கும் உன்னே சரணமாக அடைந்தேன். நாம் இப்படி யாசை ரக்ஷித்ததுகண்டு நீர் நம்மை யடைந்தென்ன; ஆனைக்கு நீயருள்செய்தமையால். ஆர்த்தியும் அநந்யகதித்வமு மொழிய வேறொரு யோக்யதையு மின்றிக்கே யிருக்கிற ஆனைக்கு நீயருள்பண்ணினபடியினாலே. ஆனால் அவ்வானையோபாதி, நீரும் உமக்குத் தளர்த்திவந்தபோது நினையும், அப்போது வந்து ரக்ஷிக்கிறோம் என்ன; எய்ப்பென்னைவந்து நலியும்போது அங்கேதும் நானுன்னை நினைக்கமாட்டேன். வாதபித்த சிலேஷ்ம தோஷத்ரயமும் ஒக்க உல்பணித்து நெருக்குகையாலுண்டான இளைப்பானது என்னே வந்து நலியும் காலத்தில், அவ்வவஸ்தையில் ஏகதேசமும் நான் உன்னை நினைக்கமாட்டேன். ஆனால் செய்பவடுப்பதென் என்ன; அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன். அக்காலத்துக்கு உடலாக, கரணகளேபரங்கள் இளைப்பற்றுத் தெளிந்திருக்கிற இப்போதே சொல்லிவைத்தேன். இப்படி நீர் சொல்லிவைத்தால் இதை நினைத்திருந்து உம்மை ரக்ஷிக்கவேண்டும் நிர்ப்பந்தமேது நமக்கு என்ன; அரங்கத் தரவணைப் பள்ளியானே. இப்படி ரக்ஷிக்கைக்காகவன்றே, தேசவிப்ரக்ர்ஷ்டமான க்ஷீராப்திபோலன்றிக்கே, கோயிலிலே திருவனந்தாழ்வானுகிற திருப்படுக்கையின்மேலே கண்வளர்ந்தருளுகிறது. அந்த யோகநித்ரைபோலேயோ இந்த யோகநித்ரை; தாழ்ந்தாரை ரக்ஷிக்கைக்கன்றே. ... க.

மூ.—சாமிடத்தென்னைக் குறிக்கொள்கண்டாய் சங்கொடு சக்கரமேந்தினனே
நாமடித்தென்னை யனேகதண்டஞ் செய்வதாநிற்பர் நமன்றமர்கள்
போமிடத் துன்றிறத்தேத்தினையும் புகாவண்ண நிற்பதோர் மாயைவல்லே
ஆமிடத்தேயுன்னைச் சொல்லிவைத்தே னரங்கத் தரவணைப்பள்ளியானே. உ.

பதவுரை.

சங்கொடு— ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடு
சக்கரம் — திருவாழியாழ்வானையும்
ஏந்தினனே — திருக்கையிலே தரித்தவனுய்
அரங்கத்து— திருவரங்கத்திலே,
அரவு — திருவனந்தாழ்வானுகிற
அணை — திருப்படுக்கையிலே
பள்ளியானே— பள்ளிகொண்டருளுமவனே!
நமன் தமர்கள்— யமபடர்கள்
நா — நாக்கை [கொண்டு
மடித்து— (மிக்ககோபத்தாலே) மடித்துக்
என்னை— மஹாபாபியான என்னை
அநேக தண்டம்— அநேகதண்டங்களை
செய்வதா— செய்யக்கடவதாக
நிற்பர்— நில்லாநிற்பர்களாய் [மளவில்
போம் இடத்து— இழுத்துக்கொண்டு போ

(க) "அஹம்ஸ்மராமி" (உ) "ஸ்மர்த்தா"

(இவ்வாத்மாவின் மநஸ்ஸானது)
உன்நிறத்து— உன்விஷயத்திலே
எத்தனையும்— எகதேசமாயினும்
புகாவண்ணம்— உள்புகுராதபடி
நிற்பது— உன்னைக்கொண்டு மறைகையாகிற
ஓர்— ஒப்பற்ற
மாயை — வஞ்சகையில்
வல்லே— ஸமர்த்தராகாநின்றீர்;
ஆதலால்— ஆதலால்

ஆம் இடத்தே— காரணங்கள் என்வசமாய்ச்
செல்லத்தக்க இக்காலத்திலேயே,
சாம் இடத்து— 'சரீரவிச்லேஷஸமயத்தில்
என்னை— உன்னை நினைக்கமுடியாத என்னை
குறிக்கொள கண்டாய் திருவுள்ளம்பற்றி
யருளவேணும்'
(என்று)
உன்னை சொல்லிவைத்தேன்—உன்னைக்குறித்
துச் சொல்லிவைத்தேன்.

வ்யா. இரண்டாம்பாட்டு. சாமிடத்து. சரீரவிச்லேஷ ஸமயத்திலே. கீழ் "எல்லாம் சொல்லிடம்" என்றதை இங்கே ஸ்பஷ்டமாக வருளிச்செய்கிறார். என்னை. தோஷத்ர யெளல்டண்யத்தாலே கலங்கி, உன்னை நினைக்க சக்தமனன்றிக்கே யிருக்கிற என்னை. குறிக் கொள்கண்டாய். நான் கலங்கிக் கிடந்தேன் என்னை நீ உபேக்ஷித்திராதே திருவுள்ளம்பற்றி யருள்கிடாய். அன்றிக்கே, யமபடராலவந்த கலிவுக்கு அஞ்சி, திருவடிகளிலே இப்போது சரணம் புகுந்த வென்னை, அப்போது திருவுள்ளம்பற்றி யருள்கிடா யென்னவுமாம். சங் கோடு சக்கர மேந்தினானே. ஆச்ரித ரக்ஷணத்தில் விளம்பாஸஹத்வத்தாலே அநவரதம் ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையும் திருவாழியையும் திருக்கையிலே ஏந்திக்கொண்டிருக்கிறவனே. ரக்ஷ்ய ரக்ஷகபாவத்தைபாராதே, அவனுக்குத் தாம் மங்களாசாஸநம் பண்ணும் ஸ்வபாவராய், திவ்யா யுதங்களையும் அழகுக்குடலாக நினைத்து அவற்றுக்கு மங்களாசாஸநம் பண்ணுமவர், இப் போது, ரக்ஷகனுகவும் திவ்யாயுதங்களை ரக்ஷணபரிகரமாகவும் அநுஸந்திக்கும்படியாய்த்துச் செல்லுகிற பயம். பயஹேதுதன்னை யருளிச்செய்கிறார் நாமடித்திதயாதி. க்ரோதாதிசயத் தாலே நாவைமடித்துக்கொண்டு, என்னை கர்மாநுகுணமாக அநேக தண்டங்களைச் செய்யக் கடவதாக நில்லாநிற்பர் யமபடரானவர்கள். சரீர விச்லேஷ ஸமயத்தில் வேறொருவர்க்குத் தோற்றாமல் இச்சேதந னொருவனுக்குமே தோன்றும்படி இப்படி வந்து புகுந்து நில்லாநிற் பர்களாய்த்து.

போமிடத்து. அவர்கள் இழுத்துக்கொண்டு போமளவில். உன்திறத் தெத்தனையும் புகாவண்ணம் நிற்பதோர்மாயைவல்லே. இவ்வாத்மாவினுடைய மநஸ்ஸை உன்விஷயத்தில் ஏக தேசமும் உள்புகுராதபடி உன்னைக்கொண்டு மறைய நிற்பதொரு வஞ்சநத்தை வல்லே. ஆமி டத்தே யுன்னைச் சொல்லிவைத்தேன். ஆனபின்பு, காரணங்கள்என்வசமாய்ச்செல்லலான தசை யிலே, "சாமிடத்தென்னைக் குறிக்கொள்கண்டாய்" என்று உன்னைக்குறித்துச் சொல்லிவைத் தேன். அரங்கத்தரவணைப் பள்ளியானே. இவ்வாத்மாக்களுடைய ரக்ஷணார்த்தமாக முற் கோலி வந்து, இவர்தம்முடைய ரக்ஷணசிந்தையைப் பண்ணிக்கொண்டு, திருவரங்கத்திருப் பதியிலே திருவரவணையின்மேலே பள்ளிகொண்டருளுகிறவனே. ... ... உ.

மூ.—எல்லையில்வாசல் குறுகச்சென்று லெற்றி நமன்றமர் பற்றும்போது
நில்லுமினென்ன வுபாயமில்லே நேமியுஞ் சங்கமுமேந்தினானே [ண்டென்றும்
சொல்லலாம்போதே யுன்னுமமெல்லாம் சொல்லினேனென்னைக் குறிக்கொ
அல்லல்படாவண்ணங் காக்கவேண்டே மரங்கத் தரவணைப் பள்ளியானே. ஈ

பதவுரை.

அரங்கத்தரவணைப் பள்ளியானே!-;
நேமியும்— திருவாழியையும்
சங்கமும்— ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
ஏந்தினனே— திருக்கையி லேந்திக்கொண் டிருக்கிறவனே!
எல்லையில்— அடியேனுடைய ஆயுஸ்ஸின் எல்லையான சரமதசையிலே
வாசல்— யமபுரத்துக்குப் போம்வழி
குறுகச்சென்றால்— கிட்டினால்
நமன் தமர்— யமபடரானவர்கள்
எற்றி— அடித்து
பற்றும்போது— பிடிக்குங்காலத்தில்
நில்லுமின் என்ன—'கடக்கநில்லுங்கோள்' என்று தகைகைக்குத்தக்க
உபாயம்— ஒருபாயமும்
இல்லை— என்கையிலில்லை;
(ஆதலால்,)
சொல்லலாம்போதே—சொல்லுகைக்கு யோக்யதை யுண்டானகாலத்திலேயே
உன்— தேவரீருடைய
நாமம் எல்லாம்— திருநாமங்களெ யெல்லாம்
சொல்லினேன்— சொன்னேன்;
என்னை— என்னை
என்றும்— எப்போதும்
குறிக்கொண்டு— திருவுள்ளம்பற்றி
அல்லல்படாவண்ணம்—யமபடர்கையி லகப பட்டு வருந்தாதபடி
காக்கவேண்டும்— ரக்ஷித்தருளவேணும்.

வ்யா. மூன்றும்பாட்டு. எல்லையில். ஆயுஸ்ஸினுடைய எல்லையான மரணதசையில். வாசல் குறுகச்சென்றால். வாசல்-வழி. (க) யாம்யமார்க்கததி இனி ஆலந்நம் என்னுமளவாகச் சென்றால். எற்றி நமன்றமர் பற்றும்போது. யமபடரானவர்கள் பிடிப்பதற்கு முன்னே மதி மயங்க எற்றிவந்து பிடிக்கும்போது. பிடித்தல்ல அடிப்பது, அடித்தாய்த்துப் பிடிப்பது. இப்படி யமபடர் வந்து கொடுபோவதாகப் பிடிக்குங் காலத்தில். நில்லுமினென்ன வுபாய மில்லை. "நில்லுமின்" என்று அவர்களைத் தகைகைக்குத்தக்க உபாயமொன்றும் என்கையி லில்லை. இத்தால் தம்முடைய ஸர்வோபாய சூன்யதையைச் சொல்லுகிறார். நேமியும் சங்கமு மேந்தினனே. விரோதி நிரஸநபரிகரமான திவ்யாயுதங்களை ஸர்வகாலமும் திருக்கையிலே ஏந்திக்கொண்டிருக்கிறவனே. இப்படி யிருக்கையாலே, *பற்றிலார்பற்ற நின்றனையிருக்கிற தேவரீரையொழிய எனக்கொரு ரக்ஷகரில்லை யென்கை. கீழே- "சங்கொடு சக்கர மேந்தி னனே" என்றார்; இங்கே- "நேமியும் சங்கமு மேந்தினனே" என்கிறார். இதுவாய்த்து இவர் †கைகண்டிருக்குமுபாயம். "எப்போதும் கைகழலாநேமியான்" என்றிறே இவர்களிருப் பது. "நில்லுமினென்ன வுபாயமில்லை" என்பானென், நம்முடைய நாமங்களை எப்போ தும் சொல்லாநின்றீரே, அதுதான் உபாயமானாலோவென்ன; அது நான் ஸாதநமாகச்சொ ன்னேனே? சொல்லலாம்போதே யுன்னுமமெல்லாம் சொல்லினேன். கரணங்கள் வசவர்த்தியா யிருக்கிறபோதே உன்திருநாமங்களையெல்லாம் ப்ராப்யமாக வநுஸந்தித்த வித்தனையன்றே, மங்களாசாஸந பரனாய் உன்னுடைய ஸம்ச்தியை ஆசாஸித்துக்கொண்டு திரியும் நான் என் னுடைய ஸம்ச்தைக்கு உறுப்பாக ஏதேனுமொன்று செய்கைக்கு யோக்யதையுண்டோ, நீ யறிய உன்னை ரக்ஷகனாக அநுஸந்தித்திருக்கிற விதனாலும் என்னுடைய செயலறுதியாலே இப்போது செய்கிற வித்தனையன்றே. என்னைக் குறிக்கொண்டென்றும். இப்படியிருக்கும் ஸ்வபாவனான என்னை, ஸர்வகாலமும் திருவுள்ளம்பற்றி. அல்லல்படாவண்ணம் காக்க

(க) யாம்யசாமஞ்ஞி. † இது ஆடு.

வேண்டும். என்னுடைய புருஷார்த்தத்துக்கு விரோதியான யமபடரால் வரும் நலிவிலே அகப்பட்டு துஃகப்படாதபடி ரக்ஷித்தருளவேணுமே. அரங்கத்தரவணைப் பள்ளியானே, இதுக் காகவன்றே தேவரீர் அணித்தாக வந்து கண்வளர்ந்தருளுகிறது. ... ... கூ.

மூ.—ஒற்றைவிடையனு நான்முகனு முன்னையறியாப் பெருமையோனே
முற்றவுலகெல்லா நீயேயாகி மூன்றெழுத்தாய முதல்வனேயோ !
அற்றதுவாணு ளிவற்கென்றெண்ணி யஞ்ச நமன்றமர் பற்றலுற்ற
வற்றைக்கு நீயென்னைக் காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே சு.

பதவுரை.

ஒன்று— ஒப்பற்ற
விடையனும்— ரிஷபவாஹநனுருத்ரனும்
நால் முகனும்— சதுர்முக ப்ரஹ்மாவும்
உன்னை— தேவரீரை
அறியா— அறியவொண்ணாத
பெருமையோனே-பெருமையையுடையனுய்
முற்ற— ஒன்றொழியாதபடி
உலகு எல்லாம்— ஸகலலோகங்களும்
நீயே ஆகி— நீயேயாய்
மூன்று எழுத்து ஆய } அகாரத்ரயாத்மகமான ப்ரணவத்துக்கு வாச்ய னுய்க்கொண்டு
முதல்வனே— ஸர்வகாரண பூதனுயிருக் குமவனே !

அரங்கத்தரவணைப்பள்ளியானே!;-
நமன் தமர்— யமபடரானவர்கள்
இவற்கு— 'இவனுக்கு
வாழ் நாள்— ஆயுஸ்ஸு
அற்றது என்று எண்ணி— } முடிந்தது' என்று நினைத்து
அஞ்ச—பிடிக்கிறபிடியிலே அஞ்சும்படியாக
பற்றல் உற்ற அற்றைக்கு } பிடிக்கையிலே ஒருப்பட்ட வன்றைக்கு
நீ— ஆச்ரிதரக்ஷகனான நீ
என்னை— என்னை
காக்கவேண்டும்— அவர்கள்கையில்காட்டிக் கொடாதே ரக்ஷித்தருளவேணும்.

வ்யா. நான்காம்பாட்டு. ஒற்றைவிடையனும். "தூண்ணுணர்வில் நீலார் கண்டத் தம்மானும்" என்கிறபடியே ப்ரஹ்மபாவனை தலையெடுத்தபோது, அல்லாதாரைப்போ லன்றிக்கே, தத்வத்தை யதாவாத தர்சிக்கவல்ல ஸூக்ஷ்ம ஜ்ஞாநத்தையுடையனை அத் விதீய ரிஷபவாஹநனும். "ஒற்றைவிடையனும்" என்றது - லோகவ்யாவர்த்த மாகை யாலே அத்விதீயமாய் அவனுக்கு அபிமதமாயிருக்கு மென்னுமிடம் தோற்றுகைக்காக. இத் தையிறே, அவன் தனக்கு பெருத்த வுடைமையாக நினைத்திருப்பது. நான்முகனும். (க) "யொஸ்ஸுஹ்ராணம் விதயாதிபூர்வம் யொவைவேதாம்ஸ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்கிறபடியே அவ்யவதாநேந திருநாபீகமலத்திலே பிறந்து, பிதாவான தேவரீர்தம்மாலே கொடுக்கப்பட்ட நாலுவேதங்களிலும் முடையனுய், "அமரர்க்குமறிவியந்து" என்கிறபடியே இவ்வருகுள்ளார்க்கெல்லாம் ஜ்ஞாநப்ரதனுமாயிருக்கு மேற்றத்தையுடைய சதுர்முகனும். உன்னையறியாப் பெருமையோனே, ஸர்வகாரணபூதனுய் ஸர்வரக்ஷகனுய் ஸர்வசேஷியாய் ஸர் வசரீரியாயிருக்கு முன்னே, உள்ளபடி யறியவொண்ணாதிருக்கும் பெருமையையுடையவனே,

(க) "யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம் யோவைவேதாம்ச்ச ப்ரஹிணோதிதஸ்மை"

(க) "யஸ்தேவாதிர்நயோ நவாஹ்ரு தயஸ்ஸர்வே, ஜாதஸ்திவாரேசஸ்ரீ கஸ்திஷ்டோ ஹரிஸ்வதி" என்று விஷ்ணுவினுடைய பரமமான ஸ்வரூபத்தைத் தானும் ருத்ரனும் மற்றுமுண்டான தேவர்களும் ரிஷிகளும் அறியார்களென்னுமிடம் ப்ரஹ்மாதானே சொன்னதிறே. "கார்செறிந்த கண்டத்தான் எண்கண்ணன் காணன் அவன்வைத்த பண்டைத்தானத்தின்பதி" என்று - அவனெழுந்தருளி யிருக்கிற தேசத்தையுமுட்பட அவர்க ளறியமாட்டார்க ளென்றிறே திருமழிசைப்பிரா னருளிச்செய்தது.

மூற்றவுலகெல்லாம் நீயேயாகி. ஸ்வ வ்யதிரிக்த ஸமஸ்தவஸ்துக்களும் ப்ரகாரமாகத் தான்ப்ரகாரியா யிருக்கையாலே, ஒன்றொழியாதபடி ஸகலலோகங்களும் நீயேயாய். (உ) "ஸர்வம்வஷ்டிஹ்ரு ஹ" (ரு) "வாஸுதேவஸர்வமிதம் ஸவஷ்டி" என்னக்கடவதிறே. மூன்றெழுத்தாய முதல்வனே. அக்ஷராத்மகமான ப்ரணவத்துக்கு வாச்யனாய்க்கொண்டு ஸர்வகாரணபூதனா யிருக்கிறவனே. "மூன்றெழுத்தாய" என்கிற ஸாமாநாதிகரண்யம், வாச்யவாசக பாவஸம்பந்த நிபந்தநம். ப்ரணவந்தான் சப்தப்ராதான்யத்தாலே ஜீவபரமாய் அர்த்தப்ராதான்யத்தாலே பகவத்பரமாயிறே யிருப்பது. (ச) "ஓஜ்ரு ரோ மமவாநிஷ்ட:" என்றும், (ஞ) "ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்மவ்யாஹரந்மாம நுஸ்மரந்" என்றும் சொல்லக்கடவதிறே. அதில் ப்ரதமாக்ஷரத்தில் ப்ரக்ருத்யர்த்தமிறே ஸர்வகாரணத்வம். ஓ. இப்படி நீயே நிர்வாஹகன்என்று இருப்பாரிடத்தில் யமபடராலவரும் நலிவு வரக்கடவதோ! என்று விஷண்ணராகிறார். அற்றதுவாழ்நா ளிவற்கென்றெண்ணி. ஜீவிக்குங் காலமெல்லாம் பொகட்டிருந்து இவனுக்கு ஆயுஸ்ஸு அற்றதென்றெண்ணி. அஞ்சநமன்றமர் பற்றவுற்ற வற்றைக்கு. மேல் ஒருவேதனை செய்வதுக்குமுன்னே பிடிக்கிறபிடியிலே அஞ்சும்படியாக யமபடரானவர்கள்வந்து, பிடிக்கையிலே யொருப்பட்ட வன்றைக்கு. நீ யென்னைக் காக்க வேண்டும். ஸர்வாதிகனுய் சரணகதரக்ஷகனான நீ, உனக்குப் பரிக்ரஹ்யமாய்க்கொண்டு ஸர்வாதிகனுய் சரணகதரக்ஷகனான நீ, உனக்குப் பரிக்ரஹ்யமாயிருக்கும் என்னை அவர்கள்கையிலே காட்டிக் கொடாதே ரக்ஷித்தருளவேணும். அரங்கத்தரவணைப் பள்ளியானே. ஆச்ரிதரை ரக்ஷிக்கைக்காகவன்றோ அணித்தாகவந்து கோயிலிலே சாய்ந்தருளினிற்று. ... ...

பையரவினணைப் பாற்கடலுட் பள்ளிகோள்கின்ற பரமமூர்த்தி
உய்யவுலகு படைக்கவேண்டி யுந்தியிற்றோற்றினுய் நான்முகனை
வையமனிசரைப்-போய்யென்றெண்ணிக் காலனையு முடனேபடைத்தாய்
ஐயனியென்னைக் காக்கவேண்டு மரங்கத்தரவணைப் பள்ளியானே. டு.

பதவுரை.

பால கடலுள்ளு— க்ஷீராப்திமேலே	அரவு இன் அணை—திருவனந்தாழ்வானுகிற
பை— பாந்தட்படங்களையுடைய	இனிய படுக்கையின்மேலே

(க) "யந்நாதேவாநமுநயோ நசாஹம்நச சங்கர:- ஜாநந்திபரமேசஸ்ய தத்விஷ்ணோ:பரமம் பதம்" (உ) "ஸர்வம்கல்விதம் ப்ரஹ்ம" (ரு) "புருஷஏவேதம்ஸர்வம்" (ச) "ஓங்காரோ பகவாந்விஷ்ணு:" (ஞ) "ஓமித்யேகாக்ஷரம் ப்ரஹ்மவ்யாஹரந்மாம நுஸ்மரந்"

பள்ளிகொள்கின்ற—கண்வளர்ந்தருளுகிற
பரமமூர்த்தி—பரமசேஷியானவனே!
அரங்கத்தரவணைப்பள்ளியானே!—;
உய்ய—ஸகலாத்மாக்களும்தன்னை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கைக்குறுப்பாக
உலகு—லோகங்களை
படைக்கமேவண்டி—ஸ்ருஷ்டிக்கவிரும்பி
நால் முகனை—சதுர்முக ப்ரஹ்மாவை
உந்தியில்—திருநாபீகமலத்திலே
தோற்றினாய்—தோற்றுவித்த நீ
வையம்—‘பூமியிலுள்ள
மனிசர்—மநுஷ்யர்கள்
பொய் என்று எண்ணி—நம்முடைய சுட்டோயான சாஸ்த்ரமர்யாதையில் நிற்க மாட்டார்கள்’ என்றுதிருவுள்ளம்பற்றி
காலனையும்—அவர்கள்மீறி நடக்கும் காலத்தில் ரக்ஷிக்கைக்கீடான காலனையும்
உடனே—உடனே
படைத்தாய்—ஸ்ருஷ்டித்தாய்;
ஐய—பரமபந்துவானவனே!
இனி—இனி [யமனை
என்னை—மங்களாசாஸநைகபரனை அடி
காக்கவேண்டும்—யமபடரால் வரும் நலிவில் அகப்படாதபடி ரக்ஷித்தருளவேணும்.

வ்யா. ஐந்தாம்பாட்டு. பையரவினணைப் பாற்கடலுள் பள்ளிகொள்கின்ற பரமமூர்த்தி. திருப்பாற்கடலிலே ஸ்வல்பர்ச்சத்தாலே விகஸிதமான பணங்களையுடையனுய், மென்மைகுளிர்த்தி நாற்றங்களோ ப்ரக்ருதிபாகவுடைய திருவனந்தாழ்வானுகிற படுக்கையின்மேலே, “உள்ளப் பல்யோகு செய்தி” என்கிறபடியே ஸம்ஸாரிகளான ஆத்மாக்களை உஜ்ஜீவிப்பிக்கைக் கீடான பல உபாயங்களையும் திருவுள்ளத்திலே சிந்தித்துக்கொண்டு கண்வளர்ந்தருளாநின்ற பரமசேஷியானவனே. மூர்த்நிசப்தம் ஐச்வர்யத்துக்கும் விக்ரஹத்துக்கும் வாசகமாகையாலே, இவ்விடத்தில் ஐச்வர்யவாசகமாய்க்கொண்டு சேஷித்வத்தைச் சொல்லுகிறது. இத்தால் இவை அறியாதிருக்க, தான் அறிந்ததாக இவற்றினுடைய ரக்ஷணேபாயசிந்தை பண்ணுகைக்கடியான ப்ராப்திபையச் சொல்லுகிறது. இப்படி ஸ்ருஷ்டமான ஜகத்துக்கு ரக்ஷணைத் தமாகவன்று கண்வளர்ந்தருளின வளவன்றிக்கே, ஜகத்துக்கு, தன்னை முதலிலே ஸ்ருஷ்டித்தருளின உபகாரந்தன்னை யநுஸந்தித்துக்கொண்டு உய்யவித்யாதி. காண களேபர விதுரராய் போகமோக்ஷகுண்யராய் *அசிதவிசேஷிதராய்க் கிடக்கிற ஆத்மாக்கள் காணகளேபரங்களைப் பெற்று, திருவடிகளை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கைக்குறுப்பாக லோகத்தை ஸ்ருஷ்டிக்கையிலே விருப்பத்தை யுடையனுய், வ்யஷ்டி ஸ்ருஷ்டிக்கு கர்த்தாவான சதுர்முகனைத் திருநாபீகமலத்திலே தோற்றுவித்தவனே.

வையமித்யாதி. ஜகத்ஸ்ருஷ்டி பண்ணுகிறபோதே, “பூமியிலுண்டான மநுஷ்யர் நம்முடைய ஆஜ்ஞாரூபமான சாஸ்த்ரமர்யாதையில் நிற்பார்சிலரல்லர், க்ருத்ரிமமாய் விபரீதப்ரவர்த்தராமவர்கள்” என்று திருவுள்ளம்பற்றி, “அப்படி அநுப்ரவர்த்தரான தசையில் அதுக்கீடாக நிகஹித்தாகிலும் ரக்ஷிக்கவேணும்” என்று காலனையுமுடனே ஸ்ருஷ்டித்தவனே. “பொய்யர்” என்கிறவித்தை, “பொய்” என்று குறைத்துக்கிடக்கிறது. ஐய ஐயனே!;— பரமபந்துவானவனே. இத்தால், ரக்ஷிக்கைக்கீடான ப்ராப்திபையச் சொல்லுகிறது. இனி யென்னைக் காக்கவேண்டும். அந்த வையத்திலுள்ளார் படியன்றிக்கே, உன்னுடைய அங்கீகாரவிசேஷத்தாலே வ்யாவர்த்தனுய் உனக்கு மங்களாசாஸநம் பண்ணியன்றி தரியாதபடியான பின்பு, இப்படியிருக்கிற வென்னை, என்னுடைய புருஷார்த்தத்துக்கு விரோதியான யமபடரால்வரும் நலிவில் அந்வயமில்லாதபடி ரக்ஷித்தருளவேணும். அரங்கத்தரவணைப் பள்ளியானே. ஜகத்ஸ்ருஷ்டியைப்பண்ணி, ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணைத்தமாகத் திருப்பாற்கடலிலே-கண்வளர்ந்தருளின வளவன்றிக்கே, இங்குலந்து சாய்ந்தருளிற்று- அநந்யகதிகளாய் ஆர்த்தராய்த் திருவடிகளிலேவந்துவிழுந்தாரை ரக்ஷிக்கைக்காகவன்றே. ...இ.

மூ.—தண்ணனவில்லே நமன்றமர்கள் சாலக்கோடுமைகள் செய்யாநிற்பர்
மண்ணெடுநீரு மெரியுங்காலு மற்றுமாகாசமு மாகிநின்றாய் [டென்றும்
எண்ணலாம்போதே யுன்னுமமெல்லா மெண்ணினே னென்னைக்குறிக்கொண்
அண்ணலே நீயென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப்பள்ளியானே. சு.

பதவுரை.

நமன் தமர்கள்— யமபடரானவர்கள்
தண்ணன இல்லே—தயையில்லாதவர்களாய்க் கொண்டு
சால— மிகவும்
கொடுமைகள்— கொடியதண்டங்களை
செய்யாநிற்பர்— பண்ணுநிற்பர்கள்;
மண்ணெடு நீரும்— பூமியும் ஜலமும்
எரியும்— அக்நியும்
காலும்— வாயுவும் [ரும்
ஆகாசமும்— ஆகாசமுமாகிற பஞ்சபூதங்க
மற்றும்— கார்யரூபமானஜகத்துத்தாலும்
ஆகி— உனக்குப்ரகாரமாக
நின்றாய்—அவற்றுக்கு ப்ரகாரியாய்க்கொண்டு நின்றவனாய்
அண்ணலே— ஸர்வஸ்வாமியானவனே !
அரங்கத்தரவணைப்பள்ளியானே !—;
எண்ணலாம்போதே— அநுஸந்திக்கயோக்யதையுண்டான காலத்திலே
உன்— உன்னுடைய
நாமம் எல்லாம்— திருநாமங்களையெல்லாம்
எண்ணினேன் — எனக்கு தாரகமாகவும் போக்யமாகவு மநுஸந்தித்தேன்;
என்னை— பல்லாண்டு பாடுமவனென என்னை
நீ— தேவரீர்
என்றும்— எப்போதும்
குறிக்கொண்டு—திருவுள்ளம்பற்றி என்னை—;
காக்கவேண்டும்— ரக்ஷித்தருளவேணும்.

வ்யா. ஆரும்பாட்டு. தண்ணனவில்லே. மெத்தனவில்லே. உக்தி வர்த்தகளெல்லாம் கடிநமாயாய்த்திருப்பது. "கடுஞ்சொலார் கடியார்" என்னக்கடவதிறே. அன்றிக்கே, தண்ணனவாவது- தண்ணிதலாய், அது இல்லேயென்கையாலே- நளிகையில் ஒவுதவில்லாமையைச் சொல்லுகிறது. ஒருகால்விட்டுப் பற்றுவதில்லேயென்கை. நமன்றமர்கள். ப்ரதாநனான யமன்முனகில் கண்குழிவுகண்டவாறேஒருக்காலாக விட்டிருக்கவுங்கூடும்; இவர்கள் அவனுடைய படராகையாலே "அவன்சொன்னதில் ஒன்றும் தப்பாதே செய்யவேணும்" என்னும் நினவாலே கண்பாராதே க்ரூரமாக நலியாநிற்பர்களாய்த்து. சாலக்கோடுமைகள் செய்யாநிற்பர். மிகவும் கொடிதான தண்டனைகள் பண்ணுநிற்பர்கள். அதாவது- இந்த தேஹவிச்லேஷத்துக்குமுன்னே, சிவந்தமயிரும் எரிந்த விழியும் பொறிபறக்கிற முகமும் நாமடிக்கொண்ட ஆதடுமான உக்ரவேஷத்தோடே, * சேவதக்குவாரைப்போலே, கையும் சூலமும் பாசமும் முதலானவற்றோடே வந்துநிற்கும் நிலதன்னிலே வயிறு எரிகொளுந்தும்படி பண்ணுகையும், "நமன்றமர் பாசம்விட்டால் அலைப்பூணுண்ணும்" என்னும்படி இந்தசரீரத்தன்னை விடுவிக்கிறலம்பத்தில் அலைச்சல் படுகையும், பின்பு யாதநாசரீரத்திலே புகுரச்சொல்லி மோதுகையும், "பின்னும் வன்கயிற்றால் பிணித்தெற்றிப் பினமுன்னுகவிழுப்பதன்முன்னம்" என்கிறபடியே வலியகயிற்றால் காலிலேகட்டித் தியங்கவடித்து தலைபின்னும் கால்முன்னுமாக யாம்யமார்க்கத்தாலே யிழுத்துக் கொண்டுபோகையும், நாய்களேயேவித் துடைவழித்வருவிக்கையும், சூலத்தாலே பாய்கையும், முதலாகச்செய்யுங் கொடுமைகளுக்கு ஒரு முடிவில்லையிறே. "செய்யாநிற்பர்" என்கிற வர்த்தமாநத்தாலே உத்தரோத்தரஞ் செய்யும் கொடுமைகளையெல்லாம் சொல்லுகிறது.

மண்ணித்யாதி. பூமியேர்டே ஜலமும் அக்நியும் வாயும் ஆகாயமுமாகிற ஐந்தான மூதபஞ்சகமுமாய், மற்றும் கார்யரூபமான ஜகத்துக்குள்ளே "நீ" என்கிற ஜீவனுக்குள்ளே அடங்கும்படி உனக்கு ப்ரகாரமாக இவற்றுக்கு ப்ரகாரியாயிக்கொண்டு நின்றவனே. இத்தால் ஸர்வகார்ணபூதனாய் ஸர்வப்ரகாரியாயிருக்கையாலே உனக்கு விரோதமில்லாதபடியான்று இல்லையிறே. ஆனபின்பு இந்த யமபடராலுண்டான கலியை நீயே மாற்றவேணும். என்னலாம்போதே யுன்னுமமெல்லா மென்னினேன். இத்தால் தம்முடைய ப்ராப்யநிஷ்டையைச் சொல்லுகிறார். கரணங்கள் விதேயமாய் அநுஸந்திக்கலானபோதே, உன்னுடைய திருநாமமெல்லாம் எனக்கு தர்ஸகமாகவும் போக்யமாகவும் அநுஸந்திக்கிறேன். நாராயணாய நமவென்கிற மந்தரத்துக்குள்ளே ஸகலநாமங்களும் மந்தர்ப்பூதமாகையாலே, அதிலொன்றையும் சொல்லினால் எல்லா நாமங்களையும் சொன்னாராவரிறே. இவர்தாம் அதிதாழிய வேறொன்றறியாரிறே. "நன்மைதீமைகளொன்றுமறியேன் நாரணவென்னும் மித்தனாபல்லால்" என்றும், "ஒளதே நமோநாரணு வென்பன்" என்றுமிறே இவரிருப்பது. மங்களாசாஸநத்துக்கும் இதுதானேயிறே இவர்க்கு வாசகம். "நமோநாராயணயவென்று- பரமாத்மனைச் சூழ்ந்திருந்த பல்லாண்டு- ஏத்துவர்" என்றாரிறே. ஆகையால், இத்திருநாமமொழிய ஒருக்ஷணமும் தரிக்கமாட்டார். "உண்ணுநாள் பசியாவதொன்றில்லை- நமோநாரணவென்றெண்ணுநாள்- எனக்கு- பட்டினிநாள்" என்னுமவரிறே. ஆக, இப்படி உன்னுமமெல்லா மென்னினேன்.

என்னைக் குறிக்கொண்டு. இப்படி உன்திருநாமத்தைச் சொல்லி உனக்கு மங்களாசாஸநம் பண்ணுதபோது க்ஷணகாலமும் தரிக்கமாட்டாதவென்னைத் திருவுள்ளம்பற்றி. என்றும். ஸர்வகாலத்திலும். இங்நிலைதான் இவர்க்கு காதாசித்கமன்றே. அண்ணலே. ஸர்வஸ்வாமியானவனே. இத்தலையிழவுபேறுகள் உன்னதாம்படியன்றோ குடற்றுடக்கிருப்பது. நீயென்னைக் காக்கவேண்டும். இப்படி யிருந்துள்ள நீ, கீழ்ச்சொன்ன புருஷார்த்தநிஷ்டையை யுடையேனை வென்னை, இப்புருஷார்த்தத்துக்கு விரோதியாக் யமபடராலுண்டாம் கலியில் அகப்படாதபடி ரக்ஷித்தருளவேணும். அரங்கத்தரவணைப் பள்ளியானே. இதுதான் நான் இன்று விண்ணப்பம் செய்யவேணுமோ, இதற்கு முற்சோலிவந்தன்றோ தேவரீரிங்கே வந்து கண்வளர்ந்தருளுகிறது. ... ... கூ.

மூ.—செஞ்சோன் மறைப்பொருளாகிநின்ற தேவர்கணாயகனே யெம்மானே
எஞ்சலிலென்னுடை யின்னமுதே யேழுலகுமுடையா யென்னப்பா
வஞ்சவுருவி னமன்றமர்கள் வலிந்து நலிந்தென்னைப் பற்றும்போது
அஞ்சலமென்றென்னைக் காக்கவேண்டு மரங்கத்தரவணைப் பள்ளியானே. எ.

பதவுரை.

செம்— செவ்விய	எம்மானே— எனக்குஸ்வாமியானவனே!
சொல்— சொல்லையுடைத்தான்	எஞ்சல் இல்— சுருங்குதலில்லாததாய்
மறை— வேதத்துக்கு	இன்— பரமபோக்யமாய்
பொருள் ஆகிநின்ற—ப்ரதிபாத்யனுய்க்கொண்டுநின்றவனுய்	என்னுடை அமுதே — அம்ருதம்போலே எனக்கு ரஸாவஹனாய் நின்றவனுய்
தேவர்கள்— நித்யஸூரிகளுக்கு	ஏழ் உலகும் உடையாய்— ஸப்தலோகங்களுக்கும் ஸ்வாமியாய்
நாயகனே— தலைவனுய்	

என்— எனக்கு
அப்பா— உபகாரகனானவனே!
அரங்கத்தரவணைப் பள்ளியானே!—;
வஞ்சம் உருவில்— ஒருவர்க்கும் தெரியாத படி மறைத்துக் கொண்டிவரும் ரூபத்தையுடைய
நமன் தமர்கள்— யமபடர்கள்
வலித்து— பலாத்காரித்து
நலித்து— ஹிம்ஸித்துக்கொண்டுவந்து
என்னை— என்னை
பற்றும்போது— பிடிக்குங்காலத்திலே
அஞ்சலம் என்று— 'அஞ்சாதே கொள்' என்று
என்னை காக்கவேண்டும்.

வ்யா. ஏழாம்பாட்டு. செந்சொல் மறைப் பொருளாகிநின்ற. செவ்விய சொல்லையுடைத்தான வேதத்திலுடையர் அர்த்தபூதனாய்நின்ற. சொல்லுக்குச் செவ்வையாவது - யதாபூதவாதித்வம். நாஸ்திகர் பிரமாணத்தை மறைக்கையாலே, இத்தை "மறை" என்கிறது. இதுதான் பூர்வபாகமென்றும் உத்தரபாகமென்றும் இரண்டுகூறாய், அதில் பூர்வபாகம் கர்மப்ரதிபாதகமாய், உத்தரபாகம் ப்ரஹ்ம ப்ரதிபாதகமாயிருந்தீதபாதிலும், ஆராதந ஸ்வரூபத்தையும் ஆராத்யஸ்வரூபத்தையும் சொல்லுகிறதாகையாலே, (க) "வேதைச்ச ஸர்வை ரஹமேவவேத்ய:" என்கிறபடியே எல்லா வேதங்களுக்கும் இவனே ப்ரதிபாத்யன் என்னத்தட்டில்லையிறே. (உ) "ஸர்வேவேதாயத்பதமாமநந்தி" என்னக்கடவதிறே. பூர்வபாகத்தில், இவனே ஸத்வாரகமாக ப்ரதிபாதியாநிற்கும்; அத்தைப் பற்றவிறே (ங) "ஸ்ருதிசிரஸிவிதிவ்ய" என்றருளிச்செய்தது. தேவர்கள்நாயகனே. (ச) "யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்தி தேவா:" என்கிற நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவனே. அவர்களுக்கு நிர்வாஹகனாகையாவது-(ஞ) அஹ்ர்த ஸஹஜ தாஸ்யராகையாலே தன்னுடைய அநுபவகைங்கர்யங்களேயொழிய அரைக்ஷணமும் செல்லாதபடியாய், *அஸ்தர் நே பயசங்கிகளாய்க்கொண்டு மங்களாசாஸநபரர்ராய்ப் போருகிறவர்களுடைய ப்ரக்ருதி யறிந்து விநியோகங்கொண்டு போருகை. எம்மானே. அவர்களைப்போலே என்னையும் உன் திருவடிகளுக்குப் பரிவனாக்கி அடிமைகொண்டு போருகிறவனே. எஞ்சலி லென்னுடை யின்னமுதே. ப்ராக்ருதமான அம்ருதத்தில் வ்யாவர்த்தி. எஞ்சல் - சுருங்கல். "இல்" என்பது இல்லாமை. அநாவது - தேசகாலங்களால் வரும் ஸங்கோசரஹிதமாயிருக்கை. அது எல்லாதேசத்திலும் மின்றிக்கே எல்லாக் காலத்திலும் புஜிக்கவொண்ணாதபடியா யிருக்குமிறே. "என்னுடையமுது" என்கையாலே - பஜித்தார்க்கு, உடம்பைப் பூண்கட்டுமது போலன்றிக்கே உயிரைப் பூண்கட்டுமதாயிருக்கை. "இன்னமுது" என்கையாலே - புஜித்தார்க்கு, தர்ப்திஜனகமாய் பிறப்பிக்குமது போலன்றிக்கே, "அப்பொழுதைக் கப்பொழுதென்னாவமுதம்" என்கிறபடியே-புஜிக்கபுஜிக்க மேன்மேலன தர்ஷணத்தை விளைக்குமதாயிருக்கை. கீழ்ச்சொன்ன நித்யஸூரிகளும், "அப்பால் முதலாய்நின்ற அளப்பரியவாரமுது" என்று-இவ்வம்ருதத்தையிறே புஜிப்பது. அவ்வம்ருதந்தான் "அரங்கமேய வந்தணன்" என்னும்படி ஆஸந்நமாய்த்தே இவர்க்கு. எழிலதுமுடையாய். இதால் - லீலாவிபூதி யோகத்தைச் சொல்லுகிறது. (ஞ) "வதிம்விஷ்ணு" என்கிறபடியே - ஸமஸ்த லோகங்களுக்கும் கடவனான ஸ்வாமியானவனே. என்னப்பா. இங்கும் ஒரு கூறுண்டே இவர்க்கு. ஆங்

(க) "வேதைச்ச ஸர்வை ரஹமேவவேத்ய:" (உ) "ஸர்வேவேதாயத்பதமாமநந்தி" (ங) "ச்ருதி சிரஸிவிதீப்தே" (ச) "யத்ரபூர்வேஸாத்யாஸ்ஸந்தி தேவா:" (ஞ) "பதிம் விச்வஸ்ய."

ராஜாபாகையாலே இரண்டுடத்திலும் படியை முன்னிடுகிறது. * பொருளல்லாத வென்னைப் பொருளாக்குகையாலே எனக்கு ஸ்வாமியானவனே. வஞ்சகருடைய நெஞ்சுகள். தங்கள் வாயாலே ஒருவருக்கும் தெரியாதபடி ரூபத்தை மறைத்துக்கொண்டு வரும் யமபடரானவர்கள். வலிந்து கலிக்கிறதென்னைப் பற்றும்போது. பலாத்காரித்து பிடித்துக்கொண்டுவந்து என்னைப் பிடிக்குமிடத்தில். அஞ்சலமென்றென்னைக் காக்கவேண்டும். 'அஞ்சாதேமிகாள்' என்று உன் திருவுள்ளத்தில் ஓலை கேட்கும்படி யருளிச்செய்து, கீழ்ச்சொன்னபடியே உன்னை யநுபவித்து உனக்கு மங்களாசாஸநம் பண்ணுகிறபடி தரிக்கமாட்டாத வென்னை, இப்புருஷார்த்தத்தைக் கலக்கும் யமபடரில்லாதபடி ரக்ஷித்தருளவேணும். அரங்கத்தரவணைப் பள்ளியானே. இப்படி ரக்ஷித்தலைக்காகவன்றோ கீழ்ச்சொன்ன இரண்டு விபூதியிலும் வ்யாப்தனாய்க்கொண்டு நித்யவிபூதியான திருவரங்கத் திருப்பதியிலே வந்து கண்வளர்ந்தருளுகிறது. ... ...எ.

மு.—நானேதுமுன் மாயமொன்றறியேனமன்றமர்பற்றி நலிந்திட்டிடந்த
ஊனேபுகையென்று மோதும்போதங்துன்னை நானென்று நினைக்கமாட்டேன்
வானேய்வானவர்தங்களீசா மதுரைப்பிறந்த மாமாயனேயென்
ஞானஞ்ஞி யென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப் பள்ளியானே. மு.

பதவுரை.

நான்— அடியேன்
உன்— ஸர்வசக்தனானுன்னுடைய
மாயம்— மாயைகளில்
ஏதும் ஒன்றும்— யாதொன்றும்
அறியேன்— அறியமாட்டேன்;
நமன் தமர்— யமபடரானவர்கள்
பற்றி— பிடித்து
நலிந்திட்டு— இந்தசரீரத்தைநலியத்
தக்க தெல்லாம் நலிந்து
(பின்பு,)
இந்த ஊன்— 'இந்த யாதநாசரீரத்திலே
புகு என்று— ப்ரவேசி'என்று
மோதும்போது— அடிக்குங்காலத்திலே
அங்கு — அத்தசையில்
உன்னை— தேவரீரை
நான்— அடியேன்
ஒன்றும்— ஒருவகையாலும்
நினைக்கமாட்டேன் — ஸ்மரிக்கமாட்டேன்;
வான்— பரமபதத்திலே
ஏய்— பொருந்திவர்த்திக்கிற
வானவர்தங்கள்— நித்யமுக்தர்க்கு
ஈசா— தலைவனுய்
மதுரை— ஸ்ரீமதுரையிலே
பிறந்த— அவதரித்தருளின
மா மாயனே — மிகவாச்சர்யசக்தியையுடையனுய்
என்— எனக்கு
ஆனாய்— பாகன்வசப்பட்டொழுகும்யானை போலேவசிக்கின்றனுய்
அரங்கத்தரவணைப்பள்ளியானே!-;
ஞ—ஸர்வாகாரகனான ஞ
என்னை காக்கவேண்டும்.

வ்யா. எட்டாம்பாட்டு. நானித்யாதி. அதீதாநாகதங்களில் ஒன்றுமறியாத நான் ஸர்வசக்தியான உன்னுடைய மாயைகளிலேதேனு மொன்று மறியேன். இப்போது இவர் "உன்மாயம்" என்கிறது, "போமிடத்தும் நிறத்தெத்தனையும் புகாவண்ணம்நிற்பதோர் மாயவல்லி". என்று சொன்னதுபோலே யிருக்குமவற்றையிறே. அதாவது - கர்மாநு

குணமாக இச்சேதநர் விஷயத்தில் அவன் பண்ணிவைக்கும் வஞ்சநங்க ளநேகங்களிறே; அவையெல்லாம் அவன்றனறியு மத்தஜ்ஞையொழிய, எநிர்த்தலைக்குத் தெரியாதபடியிறே யிருப்பது; அத்தைப்பற்ற வருளிச்செய்கிறார். நமன்றமர்பற்றி நலிந்திட்டு. கர்மங்களைப் பத்தும்பத்தாகக் கணக்கிட்டு நலியக்கடவ யமபடரானவர்கள், வந்து பிடிக்கிறபோதே எல்லா தூக்கங்களும் விளையும்படி வந்துபிடித்து, வாசாமகோசரமாம்படி, இந்த சரீரத்தோடே நலி யத்தக்கதெல்லாம் நலிந்து. இந்தவூனைபுகே யென்று மோதும்போது. அநந்தரம் யாதநாசரீ ரத்தைக்காட்டி "இந்த சரீரத்திலேபுகு" என்பர்களாய்த்து. "இந்தவூன்" என்று விட்ட சரீரத்திற்காட்டில் ப்ரவேசிக்கிற சரீரத்தினுடைய கொடுமையைச் சொல்லுகிறது. அதாவது-(க)சேதநரோபதநாதிகளிலும்விடக்கடவதன்றிக்கே அத்யந்ததூக்காவஹமாயிருக்கு மிறே; அத்தைப்பற்றவிறே "யாதநாசரீரம் என்று பேராய்த்து. (உ) "யாதநாதீவ்ர வெதநா" என்னக்கடவதிறே. இப்படி யிருக்கிற சரீரத்தைக்காட்டி "இதிலேபுகு" என்றால், இவன் வெருவிப்பிற்காலியா நிற்குமிறே. "இதிலேபுகு" என்று கண்பாராதே மோதாநிற்பர்களாய்த்து. அதிலே ப்ரவேசிப்பிக்கவேணுமே யவர்களுக்கு, மேலுண்டான தூக்கங்களையெல்லாம் இவனே யநுபவிப்பிக்க. இப்படி "இதிலேபுகு" என்று அவர்கள் மோதுங்காலத்தில். அங்குன்னை நாளென்றும் நினைக்கமாட்டேன். அவ்விடத்தில், ஆபத்வி மோசகனை உன்னை நான் ஒருப்ரகாரத்தாலும் ரக்ஷகனாக நினைக்கமாட்டேன். "அங்கே னும் நாளுன்னை நினைக்கமாட்டேன்" என்று பாடமானபோது- அவ்விடத்தில் ஏகதேசமும் நாளுன்னை நினைக்க மாட்டேனென்று பொருளாகக்கடவது. அவர்கள் நலிகிறநலிவிலே அகப்பட்டு மநஸ்ஸுகலங்குகிற தசையிலே தேவரீரை நினைக்கப்போமோ. வானெய்வான வர் தங்களீசா. பரமபதத்திலே பொருந்தி வர்த்திக்கிற நித்யமுக்தர்க்கு, ஸ்வரூபாநுரூப மான வடிமைகொள்ளும் நியந்தாவானவனே. ஏய்கை - பொருந்துகை. மதுரைப்பிறந்த மாமாயனே. "அப்படி ஸர்வஸ்மாத்பரனு யிருந்துவைத்து இங்குள்ளாரை ஆட்கொள்ளுகை க்காக ஸ்ரீமதுரையிலே இதரஸஜாதீயனுப் வந்தவதரித்த ஆச்சர்யபூதனே. அங்கு நியந்தா வாய் நின்று ஆட்கொள்ளும்; இங்கு நியாம்யனுயிருந்து ஆட்கொள்ளும். "ஆட்கொள் ளத் தோன்றிய ஆபத்தம்கோ" என்றுமிறே. என்னுனுய். தன்னுடைய ஸ்வாபாவிகமான பலத்தால் வந்த பெருமதிப்பைப்பாராதே, அல்பபலவிசிஷ்டனான பாகன்கையிலே வசிக்கி மான மத்தகஜம்போலே, மங்களாசாஸநபரனை வெனக்கு வசிக்தனனவனே. நீயென்னைக் காக்கவேண்டும். ஸர்வரக்ஷகனான நீ, உனக்கு மங்களாசாஸநம் பண்ணதபோது க்ஷண காலமும் தரிக்கமாட்டாத வென்னை, இதுக்குவிக்நமாக யமபடர்பண்ணும் நலிவால்வந்த கல க்கத்தில் அந்வயியாதபடி ரக்ஷித்தருளவேணும். அரங்கத்தரவணைப் பள்ளியானே. / பயிர்த் தலையிலே குடில்கட்டிக் கிடக்குமாபோலே, பரமபதாதிகளைவிட்டு கோயிலிலேவந்து கண்வளர்ந் தருளுகிறது, அபிமாநாந்தர்ப் பூதரானவர்களை அழிவற நோக்குகைக்காக வன்றே. ... ... அ.

மூ.—குன்றெடுத்தானிரை காத்தவாயா கோனிரைமேய்த்தவனே யெம்மானே
அன்றுமுதலின்றறுதியா வாதியஞ்சோதி மறந்தறியேன்
நன்றுங்கொடிய நமன்றமர்கணலிந்து வலிந்தென்னைப் பற்றும்போ
தன்றங்குநீ யென்னைக்காக்கவேண்டு மரங்கத்தரவணைப் பள்ளியானே. கூ.

(க) ஹேதநஹேதுநாஶி. (உ) "யாதநாதீவ்ரவேதநா"

பதவுரை.

குன்று— கோவர்த்தனபர்வதத்தை
எடுத்து— குடையாக எடுத்து
ஆநிரை— பசுக்களின் நிரை
காத்த— ரக்ஷித்தருளின
ஆயா— ஆயரஞ்
கோ நிரை— பசுநிரையை
மேய்த்தவனே— மேய்த்தவனுஞ்
எம்மானே— எனக்குஸ்வாமியானவனுஞ்
ஆய்ந்து நோக்கில்லாப்பல்லியாண்டு!-;
அன்று முதல்— உனக்குப்பல்லாண்டுபாடு
பல்லாண்டென்றுதொடங்கி
இன்று அறுதியா— இன்றளவாக
ஆதி—ஸ்வகாரணபூதனான உன்னுடைய
அம்— விலக்ஷணமான
சோதி— தேஜஸ்ஸையுடையதிவ்யமங்க
ளவிக்ரஹத்தை
மறந்தறியேன்— ஒருகாலும்மறந்ததில்லை;
நன்றும் கொடிய — மிகவும்கொடியரான
நமன் தமர்கள்— யமபடரானவர்கள்
என்னை— என்னை
நலிந்து— ஹிம்ஸித்து
வலிந்து— பலாத்காரித்து
பற்றும்போது— பிடிக்குங்கால்மான
அன்று— அப்போது
அங்கு— அத்தசையிலே
நீ என்னைக்காக்கவேண்டும்.

வியா. ஒன்பதாம்பாட்டு. குன்றித்யாதி. இந்த்ரன் ப்ரஹ்மோபதத்தாலே கல்வர்ஷத்தை வர்ஷித்தபோது, நின்றதொருமலையைக் குடையாகவெடுத்து, அந்த வர்ஷாபத்தில் ||ஈடுபடாதபடி பசுநிரையை ரக்ஷித்தவுயனுன்வனே. இதுதான்; கோபகோபீஜநங்களை ரக்ஷித்தருக்கு முபலக்ஷணம். ஆனால் அவர்கள்தன்னைச் சொல்லாதே, "ஆநிரைகாத்த ஆயா" என்று இத்தைச்சொல்லுவா னென்னென்னில்; எல்லாவற்றிலும் ப்ரதாந ரக்ஷ்யவர்க்கம் இவையேயாகத் திருவுள்ளம்பற்றி யிருக்கையாலே. ஆயா: *ஆயனையன்றுகுன்ற மொன்றெடுத்தான் அரங்கமாநகாமர்ந்தானிறை. கோநிரைமேய்த்தவனே. ஆபத்தசையில் ரக்ஷித்தவனவன்றிக்கே, அவ்தசாத்தின் மெய்ப்பாட்டுக்கீடாக அல்லாத இடையரோபாதி கையிலே கோலெடுத்துப் பசுநிரைமேய்த்தவனே. "திவத்திலும் பசுநிரைமேய்ப்புவத்தி" என்று பரமபதத்திலிருப்பிலுங்காட்டில் பசுநிரைமேய்க்க உகந்திறேயவதரித்தது. எம்மானே. இந்த குணசேஷ்டிதங்களாலே என்னை எழுதிக்கொண்டவனே. "அம்மானே" என்று பாடமாகில், ஸர்வஸ்வாமியானவனே என்று பொருளாகக்கடவது. அப்போது, கீழ்ச்சொன்ன ரக்ஷணத்துக்கடியான ப்ராப்திபையச் சொல்லுகிறது. அன்றுமுதல். *கருவரங்கத்துள் கிடந்தவன்றுமுதலென்னுதல்; திருப்பல்லாண்டுபாட நீவிஷயீகரித்தவன்றுமுதலென்னுதல்: இன்றறுதியா. இன்றளவாக. ஆதியஞ்சோதி மறந்தறியேன். ஸர்வகாரணமாய் விலக்ஷணதேஜோரூபமான உன்னுடைய விக்ரஹத்தை மறந்தறியேனென்னுதல்; ஸ்வகாரணபூதனான உன்னுடைய, விலக்ஷணமான தேஜஸ்ஸையுடைய விக்ரஹத்தை மறந்தறியேனென்னுதல். நன்றுங் கொடியநமன்றமர்கள். மிகவும் கொடிய யமபடரானவர்கள். "நன்றும்" என்றது- மிகவும் என்றபடி. நலிந்துவலிந்தென்னைப் பற்றும்போது. நலிந்துகொண்டு பலாத்காரித்து என்னைப் பிடிக்கும்போது. அன்றங்குநீ என்னைக் காக்கவேண்டும். அவர்கள் நலியுங்காலத்திலே, அவ்விடத்திலே சேஷியாய் ரக்ஷகனான நீ; உன்பக்கல் விஸ்ம்ருதியின்றிக்கே, மங்களாசாஸநபரனுக்கொண்டு போருமென்னை, இப்புருஷார்த்தத்துக்கு விரோதியானவர்கள் நலிவில் அகப்

|| ஈடுபடாதபடி - துவளாதபடி.

படாதபடி. ரக்ஷித்தருளவேணும். அரங்கத்தரவணைப் பள்ளியானே. '' அரவணைமேல் பேராயற்காட்பட்டார்பேர்-நமன்றமராலாராயப்பட்டறியார் '' என்னுப்படி. ' நமன்றமரென்றமரை வினவப்பெறுவாரலர் ''என்று அபிமானித்து நோக்கிக்கொண்டுபோரும் தேவரீருடைய அபிமானாந்தர்ப்பூதரானவர்களுக்கு இதுதான் வருகைக்கு ப்ரதிபந்தகமுண்டோ. என்னுடைய அநிசங்காமூலமான கலக்கத்தால்வந்த பயத்தாலே அடியேன் விண்ணப்பம்செய்த. வித்தனையன்றே. ... ... கூ

அ. நிகமத்தில், இத்திருமொழி கற்றார்க்கு பலம்சொல்லித் தலைக்கட்டுகிறார்.

மூ.—மாயவனை மதுசூதனனை மாதவனை மறையோர்க ளேத்தும்
ஆயர்களேற்றினை யச்சுதனை யரங்கத்தரவணைப் பள்ளியானை
வேயர்புகழ் வில்லிபுத்தூர் மன் விட்டுசித்தன்சொன்ன மாலைபத்தும்
தூயமனத்தனாகி வல்லார் தூமணிவண்ணனுக் காளர்தாமே. ய.

பதவுரை.

மாயவனை— ஆச்சர்யகுணசேஷ்டிதங்களை யுடையவனும்
மதுசூதனனை— மதுவை நிரஸித்தவனும்
மாதவனை— ஸ்ரீயஃபதியாய்
மறையோர்கள்— வைதிகர்களால்
ஏத்தும்— ஸ்துதிக்கும்படியானவனும்
ஆயர்கள்— இடையர்களுக்கெல்லாம்
ஏற்றினை— தலைவனனமேனணிப்பையுடையனும்
அச்சுதனை— அடுத்தாரை ஒருக்காலும் நழுவவிடாதவனும்
அரங்கத்து— திருவரங்கத்திலே
அரவு— திருவனந்தாழ்வானென்கிற
அணை— திருப்படுக்கையிலே
பள்ளியானை—பள்ளிகொண்டருளுகிற அழகிய மணவாளன் விஷயமாக
வேயர்— தாம்திருவவதரித்தகுடியிலுள்ளாரெல்லாரும்
புகழ்— புகழுமிடியாயிருப்பாராய்
வில்லிபுத்தூர்— ஸ்ரீவில்லிபுத்தூருக்கு
மன்— நிர்வாஹகரான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
சொன்ன— அருளிச்செய்த
மாலை— சொல்மாலையான
பத்தும்— பத்துப்பாட்டையும்
தூய— பரிசுத்தமான [கொண்டு
மனத்தனர் ஆகி— மநஸ்ஸையுடையராய்க்
வல்லார்தாம்— அப்யஸிக்கவல்லவர்கள்
தூ— பழிப்பற்ற
மணி— நீலரத்நம்போன்ற
வண்ணனுக்கு — வடிவழகையுடையவனுக்கு
ஆளர்— அடிமைசெய்யப்பெறுவர்.

வ்யா.. மாயவனை. ஆச்சர்யரூபகுண சேஷ்டிதங்களையுடையவனை. இத்தால் விக்ரஹகுணமான ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களாலும், ஆத்மகுணமான வாத்ஸல்ய ஸௌசீல்ய ஸௌலப்யாதிகளாலும் ஆச்ரிதர்க்ஷணைத்தமானமநோஹாரிசேஷ்டிதங்களாலும் அநுபவித்தக்களான ப்ரேமயுக்தர்க்கு அநவரதமங்களாசாஸநம் பண்ணவேண்டும்படியான வைலக்ஷண்யத்தையுடையவனென்கை.மதுசூதனனை. அநுபவிப்பார்க்குவரும் விரோதிகளை, மதுவை நிரஸித்தாற்போலே நிரஸித்துக்கொடுக்குமவனை. இத்தால் அநுபவவிரோதியான யமவச்யதைக்கு

அஞ்சவேண்டாதபடியான விஷயமில்லை. (க) " வரிஹரஸ்ய ஸுதஸ்ய நப்த்ருஸ்தவ " என்று யமன்முனும் நடுக்கும்படியான விஷயமிதே. மாதவனே. அரிகாளனுக்கு உபாயதசையில் புருஷகாரபூதையாய், உபேயதசையில் ப்ராப்ய பூதையாயிருக்கும் பெரிய பிராட்டியாருக்கு வல்லபனனவனே. இத்தால் அச்சேர்த்திக்கு என்னதிறதிதா ! என்று லர் வகாலமும் " வடிவாய் நின்வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு " என்று மங்க ளாசாஸநம் பண்ணவேண்டும்படி யிருக்குமவனென்னை.

மறையோர்களேத்து மாயர்களேற்றினே. அபிளருஷயமாய் நித்ய நித்தியாஸாய் பகவத்வைபவயாதாத்ம்ய ப்ரதிபாதகமாயிருக்குள்ள வேதத்திலுடைய தாத்பர்யத்தையறிந் திருக்குமவர்கள், பாத்வத்திலுங் காட்டில் நிர்மையிலேயிடப்பட்டு அகவாநம் ஸ்ரீநிருப்பு ரூரீரங்கநாதர் திருமகனுப்க்கொண்டி, கோபர்க்கெல்லாம் தலைவனுமகபால்வந்த பேருனி ப்பை யுடையவனே. மேன்மைக்கு :" அமரேறு " என்னுமாபோலேயிதே, நிர்மைக்கு " ஆயர்கோளறு " என்கிறனிது. பெரியபெருமாளே கிண்ணவதாரமாகவிதே கம் பூவா சார்யர்கள் அநுஸந்திப்பது. " கொண்டல்வண்ணனைக் கோவலனுப் வெண்ணெய்யுண்டவா யன் என்னுள்ளங் கவர்ந்தானே " என்றருளிதே திருப்பாணழ்வார். நிருப்பவளத்தை மோ ந்துபார்த்தால் இப்போதும் வெண்ணெய் மணக்கு மாப்போது. (க) " கமலவ்யாஸ்ரீ நவ வரிஷ்டவ்ருஸ்தலமதீயமொரோநஜா ளௌஷ்ரீவாஸரணாயிகம் நஸ்ஷாபியிதாதி " என்று - " யசோதைப்பிராட்டி பிள்ளைப்பணியாகச்சாத்தின திருவாபரணம் இப்போதும் பெரியபெருமாள் திருக்கழுத்திலே கிடக்கிறது " என்று கண்டநுபவித்தாரிதே பட்டர். ஆகையால் இவ்விடத்தில் " மறையோர்கள் " என்கிறது - திருப்பாணழ்வார், பட்டர் போல்வாரானவர்களை. அச்சுதனே. ஆச்ரிதரை ஒருத்காலும் நழுவவிடாதவனே. " பச்சை மாமலைபோல்மேனி பவளவாய்கமலச்செங்கணச்சுதா " என்றருளிதே - தொண்டரடிப்பொடி யாழ்வார். " அச்சுதா " என்றவநந்தரம், " ஆயர்தங்கொழுந்தே " என்று மருளிச்செ ய்தாரிதே. அரங்கத்தரவணைப் பள்ளியானே. உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பர தாநமாய், பெரியபிராட்டியார்க்கு நித்ய ஸந்நிதாநமாகையாலே " ரங்கம் " என்கிற திரு நாமத்தை யுடைத்தாயிருக்கிற கோயிலிலே, மென்மை குளிர்த்தி நாற்றங்களை ப்ரகர்திபாக வுடைய திருவனந்தாழ்வானுகிற படுக்கையிலே, கீழ்ச்சொன்ன குணங்களெல்லாம் ப்ரகாசிக் கும்படி பள்ளிகொண்டருளுகிறவனே. வேயர்புகழ் வில்லிபுத்தூர்மன் விட்டுசித்தன். தாம் திருவவதரித்த குடியிலுள்ளாரெல்லாரும், தம்முடைய வைபவத்தைச்சொல்லிப் புகழும்படி யாயிருப்பாராய், ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நிர்வாஹகராய், ஸர்வஜ்ஞபகனை ஸர்வேச்வரனை, * அரவத்தமணிப்படியே தந்திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டு, * உறகலுறகல்படியே மங்களாசாஸநம் பண்ணும் பெரியாழ்வார். தொண்ணூலபத்தும். அநுபவத்துக்கும் மங் களாசாஸநத்துக்கும் விரோதியான்வற்றைப் போக்கிக் கொள்ளுகைக்காக அருளிச்செய்த சப்தஸந்தர்ப்ப ரூபமான இப்பத்துப்பாட்டையும். தூயமனத்தனராகிவல்லார். ப்ராப்யாந் தரத்திலும் ப்ராபகாந்தரத்திலும் அந்வயமில்லாமையாலே நிர்த்தோஷாந்தஃகரணராய், இவ ரபிமாநத்திலே யொதுங்கி அப்யஸிக்கவல்லவர்கள். தூமணிவண்ணனுக் காளர்தாமே.

(க) " பரிஹாரமதஸ்ஸித நப்ரபந்நாந் " (உ) " கூர்பவ்யாக்ரீநகபரிமிளத்பஞ்ச ஹேதியசோதா நத்தாமெளக்த்யா பரணமதிகம் நஸ்ஸமாதிந்திநோதி "

பழிப்பற்ற நீலமணிபோலேயிருக்கிற வடிவழகை யுடையவனுக்கு, " மணிவண்ணனே வுன் சேவடி செவ்வித்திருக்காப்பு " என்று ஸர்வகாலமும் மங்களாசாஸநம் பண்ணுமவர்கள் தாங்களாவார். இங்கிருந்த காலும் பெரியபெருமாள் திருவடிகளிலே மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டிருந்து, சரீராவஸாநத்தில் பரமபதத்திலேபோய் நித்யஸூரிகள் திரளிலேபுகுந்து " சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டு " என்கிறபடியே அங்கே யெழுந்தருளியிருக்கிற விருப்பை யநுபவித்து, காலதத்வ முள்ளதனையும் மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டிருக்கப் பெறுவரென்கை. ... ... ๑.

பெரியஜீயர் திருவடிகளே சரணம்.

அடிவரவு.—துப்புச் சாமிடம் எல்லே ஒற்றைப் பையர தண்ணன
செல்சோல் நானேது குன்று மாய வாக்கு.

ஆகிருமொழி-சரி-க்கு, பாட்டு-சஉ๐.

ஐந்தாம்பத்து.

——(๐)——

கீழில் திருமொழியிலே— "சொல்லலாம்போதே யுன்னுமமெல்லாம் சொல்லினேன்" என்று திருநாமத்தின் போக்யதையை யநுபவித்து, " இத்தை அநாதிகாலம் இழக்கைக் கடியேன் " என்று நிரூபித்தவாறே, அதுக்கு ஹேது, " இதரவிஷயங்களிலே ' ஆவியே யமூதே ' என்று திரிகையாலே யிழந்தது " என்று வெறுத்து, இப்போது " ஆவியையரங்கமாலே " என்றும், " ஆவியேயமூதே யென்றனுருயிரனைய வெந்தாய் " என்றும், தப்பைப் பொறுத்தருளவேணும் என்று, பெரியபெருமாள் போக்யதையிலே தம்முடைய காணத்ரயமும் மேல்விழுகிறபடியைச் சொல்லுகிறது. ... ... *

மூ.— வாக்குத்தூய்மை யிலாமையினாலே மாதவாவுன்னை வாய்க்கொள்ளமாட்டேன்
நாக்குநின்னையல்லா லறியாது நானதனுக்குவ னென்வசமன்று
மூர்க்குப்பேசுகின்றனிவனென்று முனிவாயேலுமென் னாவினுக்காற்றேன்
காக்கைவாயிலுங் கட்டுரைகொள்வர் காரண கருளக்கோடியானே. க.

பதவுரை.

மாதவா— ஸ்ரீயஃபதியானவனே!
உன்னை— உன்னை
தூய்மை—ஸ்தோத்ரம்பண்ணத்தக்கபரிசுத்தி
வாக்கு— என் வாக்குக்கு
இலாமையினாலே— இல்லாமையாலே
வாய்க்கொள்ளமாட்டேன் – உன்னைஸ்தோத்ரம்பண்ண சக்தியற்றவனாயிராநின்றேன்;
நாக்கு— ரஸஜ்ஞமான நாக்கோவென்றால்
நின்னை அல்லால்—உன்னை அல்லது
அறியாது – வாய்க்கொள்ளவறியாது;

அது— அந்த நாக்கின் தோஷத்தை நினைத்து
நான்— நான்
அஞ்சுவன்— பயப்படாநின்றேன்;
என்வசம் அன்று— அந்தநாக்கானது எனக்கு வச்யமன்று;
இவன்— ' இவன்
மூர்க்கு பேசுகின்றன் } மூர்க்கர்பேசும் பாசுரத்தைப் பேசா நின்றான்,
என்று
முனிவாய் எய்தும்— கோபித்துக்கொள்வாயே யாகிலும்
என்— என்னுடைய
நாவிற்கு— நாக்குக்கு
ஆற்றேன்— ஸஹிக்கப்போகாது;
காக்கை— காக்கையினுடைய
வாயிலும்— வாயினிடத்தில் உண்டாகும்சொற்களையும்
கட்டுரை— (நங்களுக்கு) நல்லசொற்களாக
கொள்வர்— (அறிவுடையார்) கொள்ளாநின்றார்கள்;

(அப்படியே,)

காரணா— ஸர்வகாரணபூதனாய்
கருளன்— பெரியதிருவடியை
கொடியானே— த்வஜமாகவுடையவனே;
நீயுமென்சொல்லைக்கொண்டருள வேணுமென்கிறார்

வ்யா. முதற்பாட்டு. வாக்சித்யாதி. வாக்குக்கு அசுத்தியாவது-பகவத்ஸந்நிதியிலே அனுக்தம் சொல்லுகையும், ப்ரயோஜநத்தைக் ‡கணிசிக்கையும், பரஸ்தோத்ரம் பண்ணுகையும். "பாவியேன் பிழைத்தவாறு". வாக்கு- சொலவு. மாதவாவுன்னை வாய்க்கொள்ளமாட்டேன். திருநாமம் சொல்லுகைக்கு முடிந்தவதிகாரிகள் பிராட்டியும் நித்யஸூரிகளுமிறே. ["பாதனுக்நம்பி" இத்யாதி.] உன்போக்யதைக்குத்தோற்று பெரியபிராட்டியார் தொடக்கமானோர் சொல்லும் பாசுரத்தை, இதரவிஷயங்களின் போக்யதைக்குத்தோற்று ஸ்தோத்ரம் பண்ணின நாக்காலே சொல்லமாட்டேன். "மாட்டீராகில் தவிரும்" என்ன; நாக்குநின்னையல்லாலறியாது. ரஸமறிந்தநாக்கு, * ஸர்வரஸனான நின்னையல்லாலறியாது. "அத்தால் வரும் குற்றமும் உம்மதன்றே" என்ன; அது விஷயதோஷம். "அகலகில்லேன்" என்றது மார்வின் குற்றமாறப்போலே. "ஆனால் நீரும் நாக்கோடேகூடிச்சொல்லும்" என்ன, நான்அதஞ்சுவன். நாக்கின்தோஷத்தை யநுஸந்தித்து நான் அஞ்சாநின்றேன். அது ரஸஜ்ஞதாலேயாலே மேல்விழாநின்றது, காணியான உம்முடைய வசமாக்கினாலோவென்ன; அது என்வசமன்று. உன்வசம். "நாக்கு நின்னையல்லாலறியாது" என்பது, "நானதஞ்சுவன்" என்பதாகாநின்றீர், இதுமூர்க்கர்சொல்லும் பாசுரமாயிராநின்றதே! என்ன; மூர்க்குப்பேசுகின்றனிவனென்று முனிவாயேலும். என்பாசுரத்தைப் பார்த்தால் மூர்க்கர்சொல்லும் பாசுரம்போலே தோற்றி, முனிகைக்கு யோக்யதையுண்டு; ஆகிலும் என்னுவினுக்காற்றேன். உன்முனிவுக்கு ஆற்றலாம், என்னுவுக்கு ஆற்றப்போகாது. ஆனால் அது நமக்கு அவத்யமாகாதோவென்ன; காக்கைவாயிலும் கட்டுரைகொள்வர். அறிவுடையார், குற்றமாகாதவளவன்றிக்கே குணமாகவும் கொள்ளுவர்கள். அது ஓரிடத்தேயிருந்து தனக்கு வேண்டினது பிதற்றிப்போகவும், அத்தை அறிவுடையார், "நமக்கு நன்மை சொல்லுகிறது" என்று கொள்ளுவர்களிறே. கட்டுரை- நற்சொல்லு. அப்படியே நான்வேண்டிற்றுச் சொன்னத்தையும் குணமாக்கிக்கொள்ளவேணுமென்ன: "நான் கைக்கொள்ளவேண்டுகிறதென்" என்ன; நீலாபேசுநாகையாலே யென்கிறார். மேல்-காரணா! கருளக்கொடியானே. ஜகத்தையுண்டாக்கிற்று

‡ இனிமேல்தொடங்கி பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யானம்.

அவர்கள் பக்கலிலே ஒருகார்யங் கொள்ளுகைக்கிறே. [(க) "விசித்ரா தேஹஸம்பத்திஃ" "வாழ்த்துவார்பல்லாக" இத்யாதி.] ரக்ஷகத்வத்துக்குக் கொடிக்கட்டியன்றே கிடக்கிறதென்கிறார்- காரணகருளக்கொடியானே. உடையவனுகையாலே எல்லாம் பொறுக்கவேணும். க.

மூ.—சழக்குநாக்கோடு புன்கவிசொன்னேன் சங்குசக்கரமேந்து கையானே
பிழைப்பராகிலுந் தம்மடியார்சொற்பொறுப்பது பெரியோர்கடனன்றே
விழிக்குங்கண்ணிலே னின்கண் மற்றல்லால் வேறொருவரோடென்மனம்பற்றாது
உழைக்கோர்புள்ளி மிகையன்றுகண்டாய் ஊழியேழல குண்டுமிழ்ந்தானே. உ.

பதவுரை.

சங்கு— ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும்
சக்கரம்— திருவாழியாழ்வானையும்
ஏந்து— தரித்த
கையானே— திருக்கைகளையுடையவனே!
சழக்கு— உன்னையொழிந்தாரைஸ்துதிக்கும்குற்றமுடைய
நாக்கொடு— நாக்கோடேகூட
புன்— குற்றங்கள் நிறைந்த
கவி— கவிகளை
சொன்னேன்— சொன்னேன்;
பிழைப்பர் ஆகிலும்— தப்பு செய்தார்களேயாகிலும்
தம் அடியார்— தம் அடியாருடைய
சொல்— சொல்லை
பொறுப்பது— பொறுத்துக்கொள்வது
பெரியோர்— பெருந்தன்மை யுடையவர்களுக்கு
கடன் அன்றே— கடமையன்றே;
நின்— தேவரீருடைய
கண் அல்லால்— கடாக்ஷமொழிய
மற்று விழிக்கும் கண் இலேன் } வேறொருருக்ஷகரை உடையேனல்லேன்;
(அன்றியும்,) [லிலே
வேறு ஒருவரோடு— மற்றொருவர் பக்க
என் மனம்— என்னுடைய மநஸ்ஸானது
பற்றாது— பொருந்தமாட்டாது;
உழைக்கு— புள்ளிமானுக்கு
ஓர் புள்ளி மிகை அன்று கண்டாய் } ஒரு புள்ளி ஏறினுல் அதிகமாகாதுகிடாய்;
(இப்படி நீர் என்னை நிர்ப்பந்திக்கிறதென்? என்ன;)
ஊழி— ப்ரளயகாலத்தில்
ஏழ் உலகு— ஸப்தலோகங்களையும்
உண்டு— திருவயிற்றிலேவைத்து நோக்கி
உமிழ்ந்தானே— (பின்பு வெளிநாடுகாண) உமிழ்ந்தவனே!
இப்படி என்னையும் நோக்கவேணுமென்கிறார்.

வ்யா. இரண்டாம்பாட்டு. சழக்கு. பொல்லாங்கு. நாக்குக்கு தோஷமாவது- ஸ்வோத்கர்ஷம் சொல்லுகையும், பகவத்பாகவத ஸந்நிதியிலே அஸத்யஞ் சொல்லுகையும், பரஸ்தோத்ரம் பண்ணுகையும். புன்கவிசொன்னேன். ¶ கவிக்குக் குற்றமில்லை, நான்சொல்லுகையாலே குற்றம். சொன்னேன். நெஞ்சாலே நினைக்கையேபிடித்து அவத்யமாயிருக்க; சொல்லுவதுஞ் செய்தேன். சங்குசக்கரமேந்துகையாலே. இப்படி அநுபபிக்கைக்கடி- உன் ஸர்வாதிகத்வம்; அதுக்கு அடையானமிறே- கையிலேந்தின ஆழ்வார்கள். பிழைப்பராகிலுமித்யாதி. நம்பெருமையையும் உம்முடைய சிறுமையையும் பார்த்தால், பின்னைச்

(க) "விசித்ரா தேஹஸம்பத்திஃ" ¶ 'கவிக்கு' என்றது-கவிசொன்ன சொலவுக்கு என்றபடி.

சொல்லப் பெறுவீரோ வென்ன; பிழைப்பராகிலும். தப்பச்செய்தார்களேயாகிலும். தம் மடியார்சொல். அங்ஙார்ஹசேஷபூதர் சொன்ன சொல்லாகையாலே பெரியோர்க்குப் பொறுக்கைக்கு உசிதம், அடியாராகையாலும் பொறுக்கவேணும், பெருமையாலும் பொறுக்கவேணும். நாம் பொறுக்கிறோம், நம்மையொழிய ரக்ஷகர் உமக்குப் புறம்பு அற்றிருந்ததோவென்ன; விழிக்குங்கண்ணிலேன் நின்கண்மற்றல்லால். உன்னுடைய கடாக்ஷமொழிய, வேறு நோக்குகைக்கு ஒரு மறுவிழியுடையேனல்லேன்; உன்னையொழிய வேறொரு ரக்ஷகரையுடையேனல்லேன். நம்மைப்போலே ரக்ஷகருமாய் போக்யருமா யிருப்பாருண்டானால் பற்றக்குறையில்லையே என்ன; வேறொருவரோடென்மனம் பற்றாது. குணக்ததாஸ்ய மன்றிக்கே ஸ்வரூபப்ரயுக்தமான தாஸ்யமாகையாலே, புறம்புபோகாது. உமக்குப் புறம்பு போக்கில்லையாகில், உம்மைக் கைக்கொண்டவாறே நமக்கு அவத்யமாகாதோவென்ன; உழைக்கோர்புள்ளி மிகையன்றுகண்டாய். புள்ளிமானுக்கு, ஒருபுள்ளி ஏறியென், குறைந்ததென்; ஸர்வாத்மாக்களுடையவும் அபராதங்களைப் பொறுக்கிற வுனக்கு என்னுடைய அபராதம் பொறுக்கை அவத்யமாகப் புகுகிறதோ. குற்றவாளரை அங்கீகரிக்கையன்றே உனக்கு நிரூபகம். "நாம் அப்படி அங்கீகரித்ததுண்டோ" என்ன; உண்டென்கிறார்- ஊழியேழுலகுண்டுமிழ்ந்தானே. ஸம்ஸாரிகளில் உனக்கு அபராதம் பண்ணுகிறுப்பாரொருவருண்டோ, அவர்களபராதங்களைப் பாராதேயன்றே அவர்களை வயிற்றிலேவைத்து ரக்ஷித்தது; அப்படியே என்னை ரக்ஷிக்கவேணுமென்கிறார். ... ... உ

அ. மூன்றும்பாட்டு. நன்மைதீமையித்யாதி. "காரணு" என்று - நம்முடைய ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் "வாழ்த்துவார் பலராக" என்றீர், அதுவும் மாகூணும்படியன்றே நம்முடைய படியென்ன; அது ஒக்கும்; அப்படியன்றே நான், "கோயிலில்வாழும் வைட்டணவன்" என்னும் வன்மைகண்டாயென்கிறார்.

மூ.—நன்மைதீமைக ளொன்றுமறியே னரணுவென்னு மித்தனையல்லால்
புன்மையாலுன்னைப் புள்ளுவம்பேசிப் புகழ்வானன்று கண்டாய்திருமாலே
உன்னுமாறுன்னை யொன்றுமறியே னெவாதேநமோநாரணவென்பன்
வன்மையாவதுன் கோயிலில்வாழும் வைட்டணவனென்னும் வன்மைகண்டாயே.

435

பதவுரை.

திருமாலே— ஸ்ரீயஃபதியானவனே!
நாரண என்னும் இத்தனை அல்லால் } 'நாரண' என்கிற இதொன்றெழிய
நன்மை தீமைகள் ஒன்றும்— வேறொரு நன்மை தீமைகள் ஒன்றும்
அறியேன்— அறியமாட்டேன்:
உன்னை— தேவரீரை
புன்மையால்— ப்ரயோஜநத்தில் நசையாலே
புள்ளுவம் பேசி — வஞ்சநோக்திகளைச் சொல்லி
புகழ்வான் அன்று கண்டாய்— துதிக்குமவனன்றுகிடாய்;
உன்னை— உன்னை
உன்னும் ஆறு ஒன்றும்— நினைக்கத்தக்க வழியொன்றும்
அறியேன்— அறிகிறிலேன்;
ஓவாதே— நிரந்தரமாக
நமோநாரண என்பன்— 'நமோநாராயணாய' என்னுகின்றேன்;
(என்ன;- 'நீர் இங்ஙனே சொல்லா நின்றீர்; இது நல்லவன்மையாயிருந்ததே!' என்ன;
வன்மை ஆவது — (எனக்குண்டான வன்மையாவது

உன்— உன்னுடைய
கோயிலில்— கோயிலிலே
வாழும்— வாழ்கிற
வைட்டணவன் என்னும்— ஸ்ரீவைஷ்ணவன் என்கிற
வன்மைகண்டாய்— வன்மைகிடாய்என்கிறார்

வ்யா. நன்மையித்யாதி. நான் திருநாமம் சொல்லுகை அத்தலைக்கு நன்மையாய்த் தலைக்கட்டுகிறதோ, தீமையாய்த் தலைக்கட்டுகிறதோ, அறிகிறிலேன். இவனைப்பார்த்தால் தோஷமாய், அவனைப்பார்த்தால் குணமாயிருக்கும்; இத்தலையைப்பார்த்தால் அபராதமாய், அத்தலையைப் பார்த்தால் அபராதஸஹமாயிருக்கும். நாரணவென்னு மித்தனையல்லால். "நல்கத்தாளுகாதோ நாரணனைக் கண்டக்கால்" என்று - அபராத ஸஹத்வத்தைக் காட்டும் திருநாமமிறே. ஸம்ஸாரிகள் குற்றங்களைப் பொறுத்து, விடமாட்டாதே நிற்கிறவிடமிறே. புன்மையால். தன்மையாலே. உன்னை. ஸ்வாதிகனனவுன்னை. புள்ளுவம்பேசி. க்ர்த்ரிமஞ்சொல்லி. * என்கொள்வ லுன்னைவிட்டென்னும் வாசகங்கள் சொல்லுகிறேனல்லேன். புன்மை - ப்ரயோஜநத்தை ஆசைப்படுகை; நன்மை - மோக்ஷத்தை ஆசைப்படுகை. "பெருமக்கள்" என்று - * போளன் பேரோதும் பெரியோரிறே. "மாகுணவான் கோலத்தமரர்கோன்." திருமாலே. "மைதிலியும் துதிசெய்ய நின்ற" என்று - ஸ்தோத்ரத்துக்கு அதிகாரி பிராட்டியிறே. ப்ரீதிக்குத்தோற்றுச் சொல்லுமவளிறே. "தன்னுகத்திருமங்கை" என்று - அவளுக்கு அநுபவம் ஸத்தாஸித்தியானாற்போலே, எனக்கும் திருநாமஞ்சொல்லுகை ஸத்தாஸித்தி. அன்றிக்கே, ஸ்வாதிகத்வம்; "வானவர்சிந்தையுள் வைத்துச் சொல்லும்செல்வன்." ப்ரயோஜநத்தோடே சொல்லில் பகவந்மந்த்ரங்களும் கழியுண்கிறதிறே, இதரபலங்களைவிட்டு மோக்ஷத்துக் குறுப்பாகச் சொல்லப்பாரும் என்ன; உன்னுமாறுன்னை யொன்றுமறியேன். சாஸ்த்ரோக்தமான நிரந்தர ஸ்மர்திபண்ண வறியேன். ஓவாதே நமோநாரணவென்பன். ப்ரயோஜநம் பெற்றவாறே குலையும் ஐச்வர்யகாமர்க்கு; அங்கு கைப்பட்டவாறே குலையும் உபாஸகர்க்கு; இதுதானே ப்ரயோஜநமாகையாலே, ப்ரபந்நர்க்குக் குலையாது. ஓவாதே. இதுமாறினால் எனக்கு ஸத்தைகுலையும். சொல்லாதபோது ஸத்தை குலையுமென்பது, சொல்லில் உனக்கு அவத்யம் என்பதாகாநின்றீர், நல்லவன்மையாயிருந்ததீ! என்ன; அவ்வன்மைக்குக் குறையென் என்கிறார்மேல் - உன்கோயிலித்யாதி. வன்மை - மிடுக்கு. "கோயிலில்வாழும்" என்று - புறம்புள்ள அபிமாநம் குலைகையாதும், தாம் அநந்யப்ரயோஜநராகையாதும், இவருடைய ராஜகுலமிருக்கிறபடி. கோயிலில்வாழும். (க) "மகதீஷ்டபவாஹி நஃ" "இவற்றின் புறத்தாளென்றெண்ணே" என்று - பகவதபிமாநமுள்ள தேசத்தே கடக்கையிறே தங்களுக்குப் பேறுகநினைத்திருப்பது. ¶ உன்னல் - நினைத்தல். ... ...

அ.—நான்காம்பாட்டு. நேடுமை. கீழிற்பாட்டிலே "புன்மையாலுன்னைப் புள்ளுவம்பேசிப் புகழ்வானன்றுகண்டாய்" என்ற தம்முடைய அநந்யப்ரயோஜநத்வத்தை மேலிரண்டு பாட்டாலே யருளிச்செய்கிறார். கீழ - ப்ராப்தியையும் ரக்ஷகத்வத்தையுஞ் சொல்லிற்று; இப்பாட்டில் - அநந்யப்ரயோஜநத்வம் சொல்லுகிறது.

(க) "பவத்விஷயவாஸிநஃ" ¶ "உன்னுமாறு" என்கிறவிடத்தில்.

மூ.—நெடுமையா லுலகேழுமளந்தாய் நின்மலா நெடியாயடியேனைக்
குடிமைகொள்வதற் கையுறவேண்டா கூறைசோறிவை வேண்டுவதில்லை
அடிமையென்னுமக்கோயின்மையாலே யங்கங்கே யவைபோதருங்கண்டாய்
கொடுமைக்கஞ்சனைக்கொன்று நின்றுதைகோத்தவன்றோ கோள்விடுத்தானே.

பதவுரை.

நெடுமையால்— த்ரிவிக்ரமாவதாரத்தாலே
உலகு ஏழும்— உலகங்களேயெல்லாம்
அளந்தாய்— திருவடிகளாலளந்து கொண்டவனே!
நின்மலா— பரிசுத்தனே!
நெடியாய்— ஸர்வாதிகனனவனே! [னன
கொடுமை— க்ரூரகர்மங்களைச் செய்யுமவ
கஞ்சனை— கம்ஸனை
கொன்று— உயிர்க்கொலையாகக் கொன்று
நின்— உன்னுடைய
தாதை— தமப்பனாரான வஸுதேவருடைய
கோத்த— காலிலே பூட்டப்பட்ட
வன்— வலிய
தளை கோள்— விலங்கின் பூட்டை
விடுத்தானே— அறித்துப் போகட்டவனே!

அடியேனை— சேஷபூதனான என்னை
குடிமை கொள்வதற்கு— அடிமை கொள்வதற்கு
ஐயுறவேண்டா— ஸந்தேஹிக்கவேண்டா;
கூறை சோறு இவை— கூறையும் சோறுமாகிற இவற்றை
வேண்டுவது இல்லை— உன்னிடத்துப்பெற வேணுமென்று விரும்புகிறதில்லை,
அடிமை என்னும் — 'தாஸ்யம்' என்கிற
அ கோயின்மையாலே— அப்படிப்பட்ட ராஜகுலம் புகுகையாலே
அவை— அந்தக் கூறையும் சோறும்
அங்கு அங்கே— அவ்வவ ஐச்வர்யங்களிலே
போதரும் கண்டாய்— வருங்கிடாய்.

வ்யா. நெடுமையா லுலகேழுமளந்தாய். அபேக்ஷிக்கைக்குச் சிறியனனைறப்போலே, அளக்கைக்கு நெடியனனபடி. [" ஓங்கியுலகளந்த " இத்யாதி.] ஏகரூபமான வடிவையிறே பரிணமிக்கப்பண்ணிற்றும், கொடுக்கும் கையைக்கொண்டு ஏற்றதுவும். நெடுமையான திருவடிகளைக் கொண்டல்லகாணும் அளந்தது, நெடுமையால். நின்மலா, பரப்ரயோஜநமாகையாலே கீழ்ச்சொன்ன விரண்டுதோஷமுமில்லை. நெடியாய். இந்நிலையிலே அநாச்ரிதர்க்குக் கிட்டவொண்ணுதே ஆச்ரிதர்க்குக் கிட்டலாயிருக்கும். [அமார்க்கரியாணத் தமர்கட்கெளியாணை] ப்ரயோஜநாந்தரபரர்க்கு அரியனுய் அநந்யப்ரயோஜநர்க்கு எளியனுயிருக்கும். அடியேனை. மஹாபலியைப்போலே ஔதார்ய மாசைப்பட்டவனல்ல, இந்த்ரனைப்போலே த்ரைலோக்யமாசைப்பட்டவனல்ல, என்ஸ்வரூபம் ஸபலமாக்கவமையும். குடிமை அடிமைகொள்வதற்கு. என் ஸ்வரூபாநுரூபமான சேஷவ்ருத்தியைக் கைக்கொண்டருள வேணும். கொள்ளுமிடத்தில் ஐயுறவேண்டா. ஸ்வாதந்த்ர்யமும் ஸ்வப்ரயோஜநமும் முண்டென்று ஸந்தேஹிக்கவேண்டா, நான் அநந்யப்ரயோஜநன் என்ன; நீர் அநந்யப்ரயோஜநரானபடியென்? உமக்கு தேஹம் கிடந்ததாகில், அந்தபோகாதிகள் தாரகமாயிரா நின்றதாகிலென்ன; கூறைசோறிவை வேண்டுவதில்லை. நான் ராஜகுலம் புகுகையாலே, எனக்கு, அவ்வவகைங்கர்ய ரஸத்துக்குள்ளே எல்லா ரஸங்களுமுண்டு;—தன் ஸ்வரூபத்தை யாதாம்ருக நினைத்தான், அதுக்கீடாகவிறே தாரக போஷகாதிகளிருப்பது. தேஹாதிவிலக்ஷணனுகையாலே சப்தாதிகள் புருஷார்த்தமாக மாட்டாது, பரதந்த்ரனுகையாலே ஸ்வாதுபவம் புருஷார்த்தமாக மாட்டாது, ஸ்வரூபம் நித்யமாகையாலே ஸ்வரூபவிச்சேதம் புருஷார்

த்தமாகமாட்டாது, நித்யஜ்ஞாக குணகைகையாலே குணநாசம்புருஷார்த்த மாகமாட்டாது. இனி சேஷபூதனுக்கு சேஷவ்ர்த்தியே புருஷார்த்தமென்கிறார். ஆனால் நாம் உமக்குச் செய்யவேண்டுவதென் என்ன; அவற்றின் ஸங்கங்களையும் அதுக்கடியான கர்மங்களையும் போக்க வேணுமென்கிறார் மேல். இரண்டுக்கும் இரண்டு த்ர்ஷ்டாந்தம் - கோடுமைக் களிற ஹைக்கொன்று. * மக்களறுவரைக் கல்லிடைமோதின க்ரூரார்த்மாவைக் கொன்றுற்போலே அவற்றின் ஸங்கங்களைப் போக்கவேணும். நின் தாதை. * தந்தைகாலில் விலங்கறவந்து தோன்றினாற்போலே, அதுக்கடியான கர்மங்களையும் போக்கியருளவேணும். இவ்விடத்தில், கர்மங்களாவன - அவித்யா கர்ம வாஸநாருசிகளாலே கட்டுண்டிறே ப்ரக்ருதி கிடக்கிறது, அத்தைவிடுவித்துத் தந்தருளவேணு மென்கிறார். கூறைசோறிவை வேண்டுவதில்லை. ஆசைப்படுவதில்லை யென்னுதல்; உன்னை அபேக்ஷிப்பதில்லை யென்னுதல். நீர் ஆசைப்படுவதும் அபேக்ஷிப்பதுமேதென்னில்; * அடிமையென்னுமக் கோயின்மையே ஆசைப்படுவதும் அபேக்ஷிப்பது மென்னுதல். கோயின்மை - வேண்டப்பாடு; புருஷார்த்தம். அங்கங்கே - கூறைசோறிவை - போதரும். அங்கங்கே. எங்கேயிருக்கிலென்; தேவமநுஷ்யாதி ஜந்மங்தோறு மென்றுமாம். " அடிமை - போதரும் " என்று - யதாந்வயந்தானே பொருளாகவுமாம். " நின்னையேதான்வேண்டி " இத்யாதி. ... ... சு.

அ.—ஐந்தாம்பாட்டு. தோட்டமித்யாதி. கீழிற்பாட்டில் – " கூறைசோறிவை வேண்டுவதில்லை " என்று - தாரகபதார்த்தம் கைங்கர்ய ரஸத்துக்குள்ளே உண்டென்றார்; இப்பாட்டில் - போஷக போக்யங்களும் உன் திருவடிகளை அநுபவிக்கிற ரஸத்துக்குள்ளே உண்டென்கிறார்.

மூ.—தோட்டமில்லவ ளாத்தொழுவோடைத் துடவையுங்கிணறு மிவையெல்லாம்
வாட்டமின்றியுன் டொன்னடிக்கீழே வகுப்பதும்வகுத்துக்கொண்டிருந்தேன்
நாட்டுமோனிடத்தோடெனக்கரிது நச்சுவார்பலர் கேழலொன்றுகிக்
கோட்டுமெண்கொண்ட கோள்கையினனே குஞ்சரம்வீழக் கொம்பொசித்தானே.

பதவுரை.

கேழல் ஒன்று ஆகி — ஒப்பற்ற வராஹ ரூபியாய்க்கொண்டு
கோடு— தன் தம்ஷ்ட்ரையினாலே
மண்— பூமியை
கொண்ட— உயர எடுத்தருளின [யனுய்
கொள்கையினனே— ஸ்வபாவத்தையுடை
குஞ்சரம்— குவலயாபீடகஜமானது
வீழ— முடிந்துவிழும்படி
கொம்பு— அதன் கொம்பை
ஒசித்தானே— முறித்தவனே!
உன்— தேவரீருடைய
பொன்அடி கீழ்— அழகிய திருவடிகளிலே,
தோட்டம்— தோட்டமும்
இல்லவள்— மனையாளும்
ஆ— பசுக்களும்
தொழு— பசுக்கள் கட்டும் தொழுவமும்
ஓடை— குளமும்
துடவையும்— விளைநிலமும்
கிணறும்— கிணறும்
இவை எல்லாம் வாட்டம் இன்றி } இவற்றிலொன்றும் குறையாமல்
அகம்— நான்
வகுப்பு வகுத்துக் கொண்டு இருந்தேன் } நிரவகுத்துக்கொண்டிருந்தேன்;
எனக்கு— இப்படி 'எல்லாம்நீயே' என்றிருக்கிற எனக்கு
நாடு— நாட்டிலுள்ள

மானிடத்தோடு— . மநுஷ்யரோடு
ஆரிது— ஸஹவாஸம் செய்வது கஷ்டம்;
பர்— பலரிடர்
நச்சுவார்— இத்தை விரும்பா நிற்பர்கள்.

வ்யா. தோட்டம். கார்ஹஸ்த்யதர்ம மநுஷ்டிக்கைக்காக க்ருஷிபண்ணுந் தோட்டம். இல்லவள். : க்ருஹிணி. ஆ. பசு. தொழு. பசு நிற்கிற ப்ரதேசம். ஓடை. குளம். துடவை. விளைநிலம். : விளைநிலத்துக்கு ஹேதுவிறே குளம். கிணறும். தோட்டத்துக் குறுப்பாகச்சொன்னதும். ' இவையெல்லாம் வாட்டமின்றி. இவற்றிலொன்றும் குறையாமல். உன் பொன்னடிக்கீழ். நிரதிசயரிபாக்யமான உன்திருவடிகளிலே, இவற்றிலொன்றும் குறையாமல் நிரள, வகுத்துக்கொண்டிருந்தேன் - என்னெஞ்சாலே வஹித்துக்கொண்டிருந்தேன். அகம்- நான். வகுத்து - பிரித்து. இனி உமக்கொரு குறையில்லையே யென்ன; ஒரு குறையுண்டு - நாட்டுமானிடத் தோடென்கரிது. உன்னை யொழியப்புறம்பே தாரகபோஷக போக்யங்களா யிருப்பாரோட்டை ஸஹவாஸம் எனக்கு துஸ்ஸஹம்; இத்தை ஆசைப்படுவார் பலர். கேழ்லொன்றுகீக் கோட்டுமண்கொண்ட. ஸர்வலோகங்களும் ப்ரளயத்திலே அகப்பட * ஊன்றி யிடந்தெடுத்து " தானத்தே வைத்தானல்" என்கிறபடியே ஸ்வஸ்தாநத்திலே வைத்தானென்கை. கோள்கையிலுன். இதுதானே ஸ்வபாவமானவனென்கை. குஞ்சரமித்யாதி. குவலயாபீடத்தை நிரஸ்தமாம்படி கொம்பை யொசித்தவனே. இத்தால் பணித்தது - ஸம்ஸாரிகள் பக்கல் நின்றுமெடுத்து, ஸ்வஸ்தாநமான உன்திருவடிகளிலே வைத்து, அதுக்கு விரோதியான கர்மங்களையுங் கழித்துத் தரவேணுமென்கிறார். நி.

அ. ஊறும்பாட்டு. கண்ணுவித்யாதி. கீழிற் பாட்டில்- தாரகாதிகளெல்லாம் அவன் திருவடிகளே என்றார்; ப்ரக்ருதி கிடக்க, அதுசெய்யப்போமோவென்ன; அதில் தமக்கு அந்வயமில்லாதபடியை இப்பாட்டிலே யருளிச்செய்கிறார்.

மூ.—கண்ணு நான்முகனைப்படைத்தானே காரணுகரியா யடியேனுன்
உண்ணுநாள் பசியாவதொன்றில்லை யோவாதே நமோநாரணுவென்
றெண்ணுநாளு மிருக்கெசுர்ச் சாமவேதநாண்மலர்கொண்டேபாதம்
நண்ணுநாளவை தத்துறுமாகிலன்றெனக்கவை பட்டினிநாளே. கூ.

பதவுரை.

கண்ணு— ஸர்வஸுலபனை க்ருஷ்ணனுய்
நால் முகனை— சதுர்முகப்ரஹ்மாவை
படைத்தானே— ஸ்ருஷ்டித்தவனுய்
காரணு— ப்ரஹ்மாவுக்கு முன்புண்டான
ப்ராக்ருத ஸ்ருஷ்டியைப் பண்ணினவனுய்
கரியாய் — நீலமேகச்யாமளனுயிருக்கு
மவனே!
அடியேன் நான்— உனக்கு அநந்யார்ஹ
சேஷபூதனான நான்
உண்ணு நாள்- உண்ணுதவன்று
பசி ஆவது ஒன்று இல்லை- யசி உண்டா
வதில்லை;
ஓவாதே— நிரந்தரமாக
நமோநாரணு என்று— 'நமோநாராயண
ய' என்று
எண்ணு நாளும்- எண்ணுத நாளும்
இருக்கு எசுர் சாமவேதம்- ரிக்யஜுஸ்
ஸாமங்களாகிற வேதங்களைச்சொல்லி
நாள்— அப்போதலர்ந்த
மலர்கொண்டு- புஷ்பங்களைப்பணிமாறி

உன பாதம்— உன் திருவடிகளே
நண்ணு நாள்— நண்ணுதற் காட்சிகளும் (
[உண்ணு நாள்— (எனக்கு) உண்ணுதற் காலமும்,]
அவை — மந்த்ராநுஸந்தானமும், புஷ்ப ஸமர்ப்பணமுமாகிற அவை
தத்துறும் ஆகில்— தட்டுப்பட்டால்
அன்று— அப்போது
அவை— அந்தநாடகள்
எனக்கு— எனக்கு
பட்டினி நாள்— பட்டினி விட்ட நாளாகும்.

வ்யா. கண்ணு. " க்ருஷ்ணனுப் வந்தவதரித்துத் கல்லியமோடே நின்றான் " என்னும்படி ஸுலபனானவனே. நான்முகனைப் படைத்தானே. இப்படி ஸுலபனானவன் தானே என்னில்; ப்ரஹ்மாவைத் திருவுந்தியிலே ஸ்ருஷ்டித்தவன். காரண ப்ரஹ்மாவுக்கு முன்புண்டான ப்ராக்ருத ஸ்ருஷ்டியைப் பண்ணினவனே. கரியாய். காரணதவமும் ஸௌலப்யமும் மன்றிக்கே, துர்லபனுமாய் விடவொண்ணாதவடிவழகு. " காரண-நான்முகனைப் படைத்தானே- கண்ணு- கரியாய் " என்றந்வயம். இது என்ஸ்வரூபம், உம்முடைய ஸ்வரூபமிருந்தபடி யென்னென்ன; அடியேன்தான். உனக்கு அநந்யார்ஹ சேஷபூதனானான். ஆனாலும் தேஹாவஸ்தையினுலே இதுக்கு தாரகமென்னென்னில்; உண்ணுநாள்பசியாவதோன்றில்லை. பசிப்பதெப்போதோ வென்னில்; ஓவாதே. மாறாதே. நமோநாரணு வென்றேண்ணுநாளும். " நமோநாரணு " என்கையாலே- தேஹாத்மாபிமானத்தையுங் குலைத்துக்கொண்டு திருநாமத்தை யநுஸந்திக்கிறார். இருக்கெளர்ச் சாமவேத நான்மலர்கொண்டு. " நமோநாரணு " என்றது போராமே, பெருந்திருப்பாவாடையிலே மண்டுகிறார். திருமந்த்ரம் ஸங்க்ரஹமும், வேதம் விவரணமுமாயிறே யிருப்பது. " மாதவன்பேர் சொல்லுவதே ஒத்தின் சுருக்கு. " " அவைதத்துறுமாகில் " என்கையாலே அவை கூடாது. " உண்ணுநாள் பசியாவதோன்றில்லை " என்கையாலும், " ஓவாதே நமோநாரணு " என்கையாலும் கூடாது; கூடில், நாளும் அது, பட்டினியும் அது. நான்மலர்கொண்டு நண்ணுகைக்கு ப்ரமாணம் - வேதம். " நாடாதமலர்நாடி ". தர்ஷ்டாதர்ஷ்ட மிரண்டும் புறம்பே-ஸம்ஸாரிகளுக்கு; உபாயோபேய மிரண்டும் புறம்பே- ஸம்ஸாரிகளுக்கு; உபாஸகர்க்கு உபாயம் தங்கள் கையிலே; உபேயம் ஈச்வரன். உண்ணுநாள், உனபாதம் நண்ணுநாள்;- உண்ணும் நாள், உனபாதம் நண்ணும் நாள். பசியாவது பசிப்பதென்றபடி; ஓவாதேநண்ணும்நாள் பசிகெடுவது. ஓவாதேயெண்ணுநாள் இருக்கெளர்ச்சாமவேத நான்மலர்கொள்ளாநாள், அவன் கொள்ளாநாள் அவைதத்துறுமாகில் அன்றேனக்கவை பட்டினிநாளே. தத்துறுகை- தட்டுப்படுகை. இத்தால்- மாறுமாகிலென்றபடி. தத்துறுமாகில்- மாறுட்டப்படுமாகி லென்னவுமாம். மாறுட்டப்படுகையாவது-அநந்யப்ரயோஜநமாகையன்றிக்கே, ப்ரயோஜநாந்தரங்களைக் கணிசிக்கை. ... கூ.

அ. - ஏழாம்பாட்டு: வேள்கோவேள்ளம். கீழிற்பாட்டில் " உண்ணுநாள் பசியாவதோன்றில்லை " என்றார்; இப்பாட்டில்- " துயிலணைகொள்ளேன் " என்கையாலே- உறக்கமுந்தானில்லை யென்கிறார்.

வேள்கோ வேள்ளத்தின்மேலொரு பாம்பை மெத்தையாக விரித்ததன்மேலே
தள்ளுநித்திரை கொள்கின்றமார்க்கங் காணலாங்கோலென் னுசையினுலே
உள்ளுஞ்சோர வுகந்தெதிர்விம்மி யுரோமகூபங்களாய்க் கண்ணீர்கள்
துள்ளுஞ்சோரத் துயிலணைகொள்ளேன் சொல்லாயானுன்னைத் தத்துறுமாறே.

பதவுரை.

வெள்ளை— ‘நிர்மலமான
வெள்ளத்தின் மேல்— ஜலத்தின் மேலே
ஒரு— ஒப்பற்ற
பாம்பை— திருவனந்தாழ்வானை
மெத்தை ஆக விரித்து — படுக்கையாக விரித்து
அதன்மேலே— அந்தப்படுக்கையின்மேலே
கள்ளம் நித்தி } யோகநித்திரை கொள்
ரை கொள்கின்ற } ளா நிற்கிற
மார்க்கம்— ப்ரகாரத்தை
காணலாம் கொல்— பார்க்கலாகுமோ’
என் ஆசையினாலே— என்கிற ஆசையாலே
உள்ளம் சோர— நெஞ்சழியவும்
உகந்து— மிகக் களித்து
எதிர்— எதிரே
விம்மி— விம்மியும்
உரோம கூபங்கள் ஆய்— உடம்பெல்லாம் மயிர்க்குழி யெறியவும்
(அநுஸந்திக்கையாலே, உரு வெளித் தோற்றமாகிக் கையைநீட்டி அணைக்கத்தேடி, காணுமையால் வந்த அவஸாதத்தாலே,)
கண்ண நீர்கள்— கண்ணீரானது
துள்ளம் சோர— துளிசோர்ந்து
அணை— படுக்கையிலே
துயில் கொள்ளேன்— நித்ரைகொள்ளமாட்டாதவனா யிராநின்றேன்;
யான்— அடியேன்
உன்னை— தேவரீரை
தத்துறும் ஆறு— கிட்டும்வழி
சொல்லாய்— அருளிச்செய்யவேணும்.

வ்யா. வெள்ளைவெள்ளத்தின்மேல். நிர்மலமான ஜலத்தின்மேலே. ஒருபாம்பை. நாற்றம் மென்மை குளிர்த்தி தொடக்கமான குணங்களுக்கு ஆச்ரயமாகையாலே அத்விதீயமான பாம்பைப் படுக்கையாக விரித்து. அதன்மேலே. ப்ரஹ்ம ருத்ராதிகள், ‘படுக்கைவாய்ப்பாலே யுறங்குகிறான்’ என்னும்படியாய், “உலகெல்லாம் நன்கொடுங்கோபோகணைவான்” என்னும்படி- கள்ளநித்திரைகொள்கின்ற. கண்வளராநின்ற, மார்க்கம் - வழி. அதாகிறது- இன்னது என்று அறிகிற ஜ்ஞாநம். காணலாங்கொலென் ஆசையினாலே. காணவேணுமென்கிற ஸ்ப்ருஹத்தினாலே. உள்ளஞ்சோர. நெஞ்சழிய. “பாலாழிநீகிடக்கும் பண்பை யாங் கேட்டேயுங், காலாழும் நெஞ்சழியும்.” உகந்தெதிர்விம்மி. ப்ரீத்யதிசயத்தாலே வார்த்தை சொல்லவொண்ணாதபடி எதிரே விம்மி. உரோமகூபங்களாய். உடம்பெல்லாம் மயிர்க் குழியெறிந்து இவ்வநுஸந்தாநம் ப்ரத்யக்ஷம் போலே ப்ரகாசித்து, கையைநீட்டி யணைக்கத்தேடிக் காணுமையால் வந்த இழவாலே கண்ணீர் துளிசோர்ந்து. துயிலணைகொள்ளேன். படுக்கைச்சேர்த்தியை யநுஸந்தித்தேன், படுக்கையி லெனக்குப் பொருந்துகிறதில்லை. சொல்லாய் யானுன்னைத் தத்துறுமாறே. தத்துறுமாறு - கிட்டும்வழி. “கண்ணீர்கள் துள்ளஞ்சோர” என்று அழுகைபோவது, அநுபவத்தாலே; அநுபவிப்பது, கிட்டினால்; கிட்டுகைக்கு உபாயம் சிந்திக்கிறதீ, நான் கிட்டுகைக்கு சிந்திக்கிற உபாயம் சொல்லாய். நான் விமுகனானதசையிலும் என்னைச் சேர்த்துகொள்ளுகைக்கு உபாயம் சிந்திக்கிறதீ, நான் அபிமுகனான இத்தசையில் உன்னைக் கிட்டும் விரகு சொல்லலாகாதோ. “பாற்கடல்யோக நித்திரை சிந்தைசெய்த வெந்தாய் உன்னைச் சிந்தைசெய்துசெய்தே” என்று இவர் நினைவுக்கு அவன் நினைவிதே. ... ... எ.

அ.—எட்டாம்பாட்டு. வண்ணமால்வரையே. கீழிற்பாட்டிலே - கிட்டும்ப்ரகாரஞ் சொல்லாயென்றார்; இப்பாட்டில் - கிட்டுந்தனையும் ஸ்தோத்ரம் மாறுதபடி பண்ணியருள வேணுமென்கிறார்.

மு.—வண்ணமால்வரையே குடையாக மாரிகாத்தவனே மதுசூதா
கண்ணனே கரிகோள் விடுத்தானே காரண கணிறட்டபிரானே
எண்ணுவாரிடரைக் களைவானே யெத்தரும்பெருங் கீர்த்தியினானே
கண்ணனிராவுன்னை யடைவுறுமத்து நன்மையே யருள்செய்யும்பிரானே. அ.

பதவுரை.

காரணை— ஜகத்காரண பூதனும்
எண்ணுவார் — எப்போதும் முன்னேயே
த்யாநிக்குபவர்களுடைய
இடரை— துன்பங்களை
களைவானே— போக்குபவனும்
மதுசூதா— மதனை நிரஸித்தவனும்
கரி— ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய
கோள்— (முதலியால்வந்த) ஆபத்தை
விடுத்தானே— நீக்கினவனும்
கண்ணனே— ஸ்வஸுலபனான க்ருஷ்ணனும்
வண்ணம்— பலவகைப்பட்ட காவிக்கற்களை
யுடைத்தாய்
மால்— பெரிதான
வரை— கோவர்த்தந பர்வதத்தை
குடை ஆக— குடையாக எடுத்து
மாரி— வர்ஷாபத்தில் நின்றும்
காத்தவனே— ரக்ஷித்தவனும்
களிறு— குவலயாபீடகஜத்தை
அட்ட— முடித்த
பிரானே— உபகாரகனும்
வக்க அரக்கர்— ஸ்ரமநிரஸ முடியாதவனும்
பொடி— ப்ரதிசய போக்யமான
கீர்த்தியினானே— கீர்த்தியையுடையனும்
பிரானே— ஸர்வோபகாரகனானவனே;
நான்— அடியேன்
உன்னை— தேவரீரை
நண்ணி— ஆச்ரயித்து
நாள்தோறும்— எப்போதும்
ஏத்தும்— ஸ்துதிக்கைக்கீடான
நன்மை— நன்மையை
அருள்செய்யும்— தந்தருளவேணும்.

வ்யா. வண்ணமால்வரையே. நாநாவர்ணமான தாதுக்களையுடைத்தான பெரிய மலையே உபாயமாக. "ஆபந்நாருப்பித்த வடிசிலுண்டதும்" என்று நினைத்த மலையே குடையாகக் கல்வர்ஷத்தைக் காத்தவனே. மதுசூதா. முதல்களையான மதுவை நிரஸித்தவனே. கண்ணனே. ஸ்வஸுலபனே. கரிகோள்விடுத்தானே. ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆபத்தைப் போக்கினவனே. காரண. ஜகந்நாதன் ஸ்ருஷ்டித்திறே வந்தவதரிப்பது. ["இருவர் முதல்வன் காண்" இத்யாதி.] களிறட்டபிரானே. குவலயாபீடத்தை நிரஸித்தவனே. எண்ணுவாரிடரைக்களைவானே. யுகலக்ஷத்தாக விரோதியைப் போக்குகிறவனே. "பரபக்தி பாஜநாக பரமபக்த்யாதிகளே இவன் தேவனுமென்று என்னினபோதே இவற்றுக்கு விரோதியானவற்றைப் போக்குமவனே. எத்தரும்பெருங்கீர்த்தியினானே. அபரிச்சேத்யமாய் நிரதிசயபோக்யமான குணங்களையுடையவனே. நண்ணியிராவுன்னை. உன்னைக் கிட்டினவன்றே கிட்டாத வன்றேநிவாஸியற. ஏத்தும்படிக்கீடான அருளைத் தந்தருளவேணும்.

"காரண - எண்ணுவாரிடரைக் களைவானே - மதுசூதா - கரிகோள்விடுத்தானே - கண்ணனே - வண்ணமால்வரையே குடையாக மாரிகாத்தவனே - களிறட்டபிரானே

தல்களை—ப்ரதமவிரோதி.

யுக்தரும்பெருந் தித்தியிரனே, கன்னிராணுல்லை யாடியுலகுக்குந் தன்மையபரும் செய்யும், பிரானே" என்று அர்த்தம். ஆக, இப்பாட்டில் அவதாரமஹிமத்தும் முக் ஸ்வஸ்வரூபத்வமும் ப்ராப்யத்வமும் சொல்லிற்றாயிற்று. ... ... அ.

அ. ஒன்பதாம்பாட்டில். நம்பனே. இப்பாட்டில்-ஸ்வதாரண ஸுலப்யத்வமும் அஸாதாரண ஸுலப்யத்வமும் சொல்லுகிறார்; இப்படியில் சரமகாலத்தில் நிருவாமஞ் சொல்லவல்லே னென்பது. பண்ணிரஹஸ்யங்களிலுமுள்ளதிறே; விச்வஸநீயனென்ற ஸுலப்யத்வமுமென்கிறார்.

மூ—நம்பனேகவின் நேத்தவல்லார்க ணுதினை நரசிங்கமதானுய்
உம்பர்கோ னுலகேழுமளந்தா யூழியாயினு யாழிமுன்னேந்திக்
கம்பமாகரி கோள்விடுத்தானே காரணு கடலிக்கடைந்தானை
எம்பிரா னென்னையாளுடைத்தேவினை யேழையே னிடரைக்களையாயே. 5.

பதவுரை.

நம்பனே— எல்லார்க்கும் விச்வஸநீயனும்
நவின்று— வாயாரச் சொல்லி [கொண்டு
வுத்தவல்லார்கள் — ஸ்துதிக்க வல்லவர்
நாதனை— நாதனும்
நரசிங்கம் அது ஆனுய்— நர்ஸிம்ஹாவதாரம் செய்தருளினவனும்
உம்பர்— நித்யஸூரிகளுக்கு
கோன்— நிர்வாஹகனும்
உலகு ஏழும்— ஸகலலோகங்களையும்
அளந்தாய்- அளந்து கொண்டவனும்
ஊழி- ப்ரளயகாலத்துக்குப் பின்பு (சேத நோஜ்ஜீவநார்த்தமாக)
ஆயினும்- உலகங்களைப்படைத்தவனும்
முன்— முன்னே
ஆழி— திருவாழியாழ்வானை
எந்தி— திருக்கையிலேந்தி
மா கம்பம்— மிக்க மதத்தையுடைந்த
கரி— பூர்ண கஜேந்த்ராழ்வானுடைய
கோள்— முதலையால்லந்த நலிவை
விடுத்தானை— நிவர்த்தவனும்
காரணு— ஜகத்காரணபூதனும்
கடலை— க்ஷீராப்திய்ை
கடைந்தானை— கடைந்தவனும்
எம்பிரான்— எனக்கு உபகாரகனும்
என்னை— என்னை
ஆளுடை— அடிமைகொண்டவனும்
தேவினை- நின்போலே போக்யனானவனை!
ஏழையேன்- சபலனான என்னுடைய
இடரை— துன்பத்தை
களையாய்— களைந்தருளவேணும்.

வ்யா. நம்பனே. விச்வஸநீயனே. தனக்கு தானும் ரக்ஷகனன்று, பிறரும் ரக்ஷக னன்று. தான் "நன்மை" என்று ப்ரமித்துப் பண்ணும் நன்மை, தீமையாய்த் தலைக்கட் டும். பிறர் தந்தாமுக்கு நன்மை தேடிவரு மித்தனையல்லது இவனுக்கு நன்மைதேடார்கள். நவின்றேத்தவல்லார்கள் நாதனே. ஸ்மரணபூர்வகமாக ஏத்தவல்லவர்களுக்கு ஸ்வாமியான வனே. தன்னுடைமையாகையாலே அவர்களை நழுவவிடாதவனே. நரசிங்கமதானுய். ஈச் வரனையொழிய, பிதாவாகிலும் ரக்ஷகனாக நம்பப்போகாதென்கிறது. விச்வஸநீயனுமாய் ஸ்மரணாத்ரங்களிலுமே நெருங்க ஏத்துவதற்கு ப்ரதிபாத்ய ஸ்வாமியுமாய் ஸர்வகாரணமுமான வனைப் பேர்சொல்லப் பொறுத்திலனிறே ஹிரண்யன். நவின்றேத்த வல்லார்கள் நாதனே நரசிங்கமதானுய். "நம்பனை நரசிங்கனை நவின்றேத்துவார்களைக் கண்டக்கால் எம்பிரான் றனசின்னங்கள்" என்றும், * நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய பாததூளி படுதலால் பாக்கியம் பண்ணப்பெற்றேம்" என்றும் கொண்டாடவேண்டினவிடத்திலிறே

ஹிரண்யன் அபராதம்பண்ணிற்று. உம்பர்கோன். இங்குள்ளார் ஸ்வரூபத்துக்கு அஞ்சியும் தண்டத்துக்கு அஞ்சியுமிறே ஏத்துவது. "பரிவான்வரைத்த நின்றபரமனை" என்று ராகப்ராப்தமாக ஏத்துவார் அங்குள்ளாரிறே. உலகேழ மளந்தாய். "ஏத்த மேவுழலுகுன் கொண்ட." உம்பர்கோனுலகேழ மளந்தாய். இந்த்ரனுக்காக உலகேழுமளந்தாயென்னுதல்; "நான்முகனுர் பெற்றநாடு" என்கிறபடியே – ப்ரஹ்மாவதான சதுர்த்தச புவநத்தையு மளந்தாயென்னுதல். ஊழியாயினுய். ஊழி - காலம். ஸர்வஷ்டி. ["வாழ்த்துவார் பலராக" இத்யாதி.] ஆழிமுன்னேந்தி. விரோதிவருவதற்கிசைந்தவே திருவாழியைதரித்து. கம்பமா கரிகேள்விடுத்தானை. "கோள்முதலை துஞ்சக்குறித்தெறிந்த சக்கரம்" என்கிறபடியேதிரு வாழியைக்கொண்டு கார்யங்கொண்டபடி. கம்பம்–நடுக்கம். நடுங்காநின்றவர்களை யென் னுதல்; அசையாநின்றவர்களை யென்னுதல். முதலை நீரிலேயிழுக்க, ஆனை கரையிலேயிழு க்கப்பட்ட அசைவென்னுதல். மா–பெருமை. துடக்கம் பாடாற்றமாட்டாமைக்கு விரோதி யைப் போக்கினவனை. "தடமலர்ப்பொய்கைபுக்கு காகத்தின் நடுக்கம்தீர்ந்தாய்," "என் னுரிடரைநீக்காய்." கோள்–சிறை. "கோள்விட்டது" என்னக்கடவதிறே. காரண. மூன்றுபத்திலே ஒன்றிறே இது. இப்போது காரணத்வம் - ஸ்ரீ கஜேந்த்ராழ்வானைப் பெற்றதும்; ஈச்வரத்வம் நிலைநின்றதும் இப்போதென்கை.

கடலைக் கடைந்தானை. "அமரர்கள் தொழுதெழ அலைகடல் கடைந்த" என்கிற படியே ஸ்துத்யனுய்க்கொண்டுநின்று கடைந்தபடி. எம்பிரான். அச்சேஷ்டிதங்களிலே என்னை யெழுதிக்கொண்டவனை. என்னையாருடை. என்னை இவ்வளவு புகுராநிறுத்தினவனை. தேனை. எனக்குத்தேன்போலே ரஸிகயைபோக்யனானவனை. என்னையாளுடைத் தேனை. போக்யதைக்குத் தோற்றபடி. "தேட்டருந்திறல் தேவனை." ஏழையேன். சபலன். இதுக்கு முன்பு விஷயங்களில் சபலன்; இப்போது போகரூபமான திருநாமங்களிலே சப லன். இடரைக்களையாயே. இவர்க்கு இடராவது- சரமகாலத்தில் திருநாமஞ்சொல்லமாட் டாதிருக்கையிறே. இதுக்கு அஞ்சினிறே "அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்" என்றும் "ஐயார்கண்டமடைக்கும் நின்கழல் எப்போதேத்த" என்றும் ப்ரார்த்தித்து வைப்பது. இவர்க்கு க்லேசம்-அப்போதை வேதனையன்று, திருநாமஞ்சொல்லப்போகாதி ருக்கில் செய்வதென் என்கிற படியிறே திருவுள்ளத்திற் செல்லுகிறது. ... ... கூ.

அ. நிகமத்தில், இப்பத்தை அப்யஸித்தவர்கள், இவரைப்போலே சரமகாலத்திலே திருநாமஞ்சொல்லவேணுமென்று கரையவேண்டா, இப்பாசுரமாத்ரமே யமையுமென்கிறார். இத்திருமொழிதான், "மாதவா, நாரண" இத்யாதியாலே திருநாமமிறே சொல்லிற்று.

மூ.—காமர்தாதை கருதலர்சிங்கங் காணவினிய கருங்குழற்குட்டன்
வாமன னென்மரதகவண்ணன் மாதவன் மதுசூதன்றன்னைச்
சேமநன்கமரும் புதுவையர்கோன் விட்டுசித்தன் வியன்றமிழ்பத்தும்
நாமமென்றுநவின் றுரைப்பார்கள் நண்ணுவாரோல்லை நாரணனுலகே.

பதவுரை.

காமர் தாதை—	காம்புனக்கு ஜநகனுய்	காண —	தன்னைப்பூற்றினர் கண்டுகளிக்கைக்கு
கருதலர்—	தன்னை நினையாதார்க்கு		
சிங்கம்—	ஸிம்ஹமம்போலே கிட்டவரியனுய்	இனிய—	இனியனுய்

கரு— கறுத்த
குழல்— திருக்குழலியுடைய
குட்டன்— சிறுக்கனுய்
வாமனன்— * குறட்பிரமசாரியாய்
என்— எனக்கு பவ்யனுய்
மரகதம்— மரதகப்பச்சை போன்ற
வண்ணன்— வடிவழகையுடையனுய்
மாதவன்— ஸ்ரீயஃபதியாய்
மதுசூதன் தன்னை — மதுஸூதனனை
எம்பெருமான் விஷயமாக
சேமம் நன்கு அமரும்— ரக்ஷணம் நன்முகப்
பொருந்தின
புதுவையர்— ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளார்க்கு
கோன்— நிர்வாஹகரான [செய்த
விட்டுசித்தன்— பெரியாழ்வார் அருளிச்
வியம்— ஆச்சர்யமான
தமிழ்— தமிழ்பாஷையான
பத்தும்— பத்துப்பாட்டையும்
நாமம் என்று— ' திருநாமம் ' என்று
நவின்று— நெஞ்சார நினைத்து
உரைப்பார்கள் — வாயார வாழ்த்துமவர்கள்
நாரணன் உலகு— ஸ்ரீவைகுண்டத்தை
ஒல்லை— சடக்கென
நண்ணுவார்— கிட்டப் பெறுவர்கள்.

வ்யா. காமர்தாதை. இவரகப்பட்ட துறை யிருக்கிறபடி. * தெரிவைமாருருவமே மருவிப்போந்த விவரைமீட்டது " காமனுர்தாதை " என்கிறவடிவிறே. கருதலர்சிங்கம். இவ்வடிவு காணவேண்டாதார் சத்ருக்களிறே. " அலைவலைமைதவிர்த்தவழகன் " என்று-ப்ரதிகூலரையும் அதுகூலனுக்கிச் சேர்த்துக்கொண்ட வழகிறே. காணவினியகருங்குழற் குட்டன். காணவினிய. ராவணதிகளுக்குமகப்பட, (க)" ராஜநீயஸ்வி க்ரஹெ" என்று கண்டபோதே ரஸிக்கை. " கண்ணுக்கினியான் " " மனத்துக்கினியான் " என்றும் — உட்கண்ணுக்கும் புறக்கண்ணுக்கும் இனியவிஷயமிறே. கருங்குழற்குட்டன். அழகுக்கு முற்படவெடுப்பது " குழலழகர் " என்றிறே. குட்டன். அவ்வடிவை அமைத்துக்கொ டுத்து அநுபவிக்கும்படி பண்ணுகை. " காணவினியகருங்குழல் " என்று - குழலுக்கே விசேஷணமாகவுமாம். வாமனன்.." கரியகுழல்செய்ய வாய்முகத்து- வ்மனனம்பீவருக" என்னக்கடவதிறே. என்மரதகவண்ணன். குளிர்ந்த திருமேனியையுடையவன். " உல களந்தமாணிக்கமே யென்மரதகமே " என்னக்கடவதிறே. மாதவன். இவ்வடிவைத் தலை நீர்ப்பாட்டிலே அநுபவிப்பாள் பிராட்டியிறே. " வடிக்கோல வாணெடுங்கண் மாமலாள் செல்விப் படிக்கோலங் கண்டகலாள் " என்னக்கடவதிறே. மதுசூதன்றன்னை. அநுப்வ விரோதியைப் போக்கினபடி. " வானுர்சோதிமணிவண்ண மதுசூதா நீயருளாய் " என் னக்கடவதிறே.

சேமநன்கமரும்புதுவையர்கோன். ரக்ஷைபொருந்தின ஸ்ரீவில்லிபுத்தூராழ்க்கு நிர் வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த பத்தும். நாமமென்று. திருநாமமென்று. " நாமமா யிரம் " என்றுற்போலே. நவின்றுரைப்பார்கள். ஸ்நேஹத்தோடே ஸ்தோத்ரம்பண்ண வல்லவர்கள். நண்ணுவாரோல்லை நாரணனுலகே. பரமபதத்தைச் சடக்கெனக் கிட்டப் பெறுவர்கள். அதாவது - ஈச்வரனுக்குப் பரிவராய்ப் போருகை. " சேமநன்கமரும் " என்று சொல்லிற்றும் இவ்வர்த்தத்தையிறே. சேமத்துக்கு நன்மையாவது - அத்தலைக்கு மங்களாசாஸநம் பண்ணுகையிறே. இவ்வர்த்தம் இவ்வூரிலே நடக்கை. " பொன்றிகழ் மாடம் பொலிந்துதோன்றும் பதுவை " என்று - பொன்னுலகோடொக்கத் திருப்பல்லா

(க) " ராஜநீயஸ்ய விக்ரஹெ "

ண்டு பாடுகையிறே. " ஒல்லை " என்றது - " ஓவாதேநமோநாரண " என்று சொல்லு கையாலே ஒருக்காற்சொல்லி அநந்தரம்சொல்லுகைக்கு உத்வ அங்கேயாம்படிவைக்கை. நாரணனுலகே. இங்கிருந்தநாள் * நாரணவென்னு மித்தனையல்லால் வழிப்போக்கிலும் (க)வாயெபவஞ்ரீகாசூ நாஸஜீகஞ நாஸ்ரு சழ; வழியிலுள்ளார்கண்டு உகப்பதும் " நாரணன்றமர் " என்றிறே; அங்குப்புக்கால்லும் * நமோநாராயணயவென்று சூழ்ந்திரு ந்திறே பேத்துவது. இங்கிருந்தநாளொடு வழிப்போக்கோடு திவ்யதேசப்ராப்தியோடு வாசியற இதுவேயிறே பலம். வியம்தமிழ் - விஸ்மயநீயமான்னதமிழ். " வியந்தமிழ் " என்றபோது, " அமரர்க்குமறிவியந்து " என்னுமாபோலே, வியந்ததமிழென்னவுமாம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அடிவரவு.—வாக்குச் சழக்கு நன்மை நெடுமை தோட்டம்
கண்ணு வெள்ளை வண்ண நம்பன் காமர் நெய்.

ஆதிருமொழி-சக-க்கு, பாட்டு-சங0.

ஐந்தாம்பத்து- இரண்டாந்திருமொழி - நெய்க்குடம், ப்ரவேசம்.

அ. கீழே, " அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன் " என்று - 'அந்திம காலத்திலே யமபடர் நலியும்போது ஸ்தோத்ரம் பண்ணவொண்ணுதென்று ஏற்கவே சொ ல்லிவைத்தேன்' என்ற இவர், " சழக்குநாக்கொடு புன்கவிசொன்னேன் " என்று - தம் முடைய அயோக்யதையை அநுஸந்தித்தகல, அவர் காணங்கள்மேல் விழுந்தபடி கண்டு க்ஷமைகொள்ள, இவர் தோஷம்பார்த்து க்ஷமைகொள்ளவேண்டுவது நாம் கடக்க நிற்க லன்றே என்று தான் மேல்விழுந்து வந்து புகுந்து கிடந்தபடி சொல்லுகிறார் - இத்திரு மொழியில். ... ... *

அ. முதற்பாட்டு. " அப்போதென்றும் இப்போதென்றும் உமக் கிரண்டு காலமுண்டோ " என்று அவன்வந்து கைக்கொண்ட பின்பு, அவித்யையையும் காமத்தையும் வ்யாதி களையும் இந்த்ரியங்களையும் யமபடரையும் பார்த்து, " பண்டை தேஹமும் ஆத்மாவும் " என்றிருக்கவேண்டா, அவன் உகந்தருளின நிலங்களில் புண்ணும் விருப்பத்தை யெல்லாம் எம்தேஹத்திலும் ஆத்மாவிலும் பண்ணிக்கொடுவந்து புகுந்தான், நீங்கள் உஜ்ஜீவிக்கவே ண்டி யிருந்தீராகில் போகப்பாருங்கோ என்கிறார்

மூ—நெய்க்குடத்தைப்பற்றி யேறுமெறும்புகள் போனிரந்தெங்கும்
கைக்கொண்டுநிற்கின்ற நோய்காள் காலம்பெற வய்யப்போமின்
மெய்க்கொண்டுவந்து புகுந்து வேதப்பிராளர் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணையோடும் பண்டன்று பட்டினங்காப்பே.

(க) " பாதேயம்புண்டரீகாசூ நாமஸங்கீர்த்தநாம்தம் "

பதவுரை.

நெய் குடத்தை— நல்ல நெய்வைத்திருக்கும் குடத்தை
பற்றி — பற்றிக்கொண்டு
ஏறும்— ஏறுகின்றுள்ள
எறும்புகள் போல்— எறும்புகளைப்போலே
எங்கும் நிரந்து— எங்கும் பரந்து
கைக்கொண்டு நிற்கின்ற— உடன் வந்தியாயிருக்கிற
நோய்காள்— வயாதிகளே!
உய்ய— நீங்கள் உஜ்ஜீவிக்கைக் குறுப்பாக
காலம்பெற போமின்— சடக்கெனப் போய்விடுங்கோள்;
வேதம் பிரானர்— ப்ரஹ்மாவுக்குவேதத்தை உபகரித்தருளின ஸ்ரீவேச்வரன்
பைக்கொண்ட— பாந்த
பாம்பு அணை யோடும்— திருவனந்தாழ்வானுகிற தருப்பள்ளியோடு கூட
மெய்— என் சரீரத்தை
கொண்டு— போக்யமாகக் கொண்டு
வந்து புகுந்து கிடந்தார்-;
(ஆதலால்,)
பண்டு அன்று — என் சரீரமும் ஆத்மாவும் பழையபடியிலமையை யுடையதன்று;
பட்டினம்— இவ்வாத்மாவானது
காப்பு— ஸ்ரீவச்வரனுல் காப்புற்றது;
ஆதலால் உங்களுக்குப் புகுரவிடமில்லை யென்கிறார்.

வ்யா. நெய்க்குடத்தைப்பற்றி யேறுமெறும்புகள்போல். அக்நிஹோத்ர ஸமாராதநயோக்யமாய் போக்யமுமான பதார்த்தமிருக்கிற (க)கடத்தை ஸ்பர்சித்துக்கொண்டேறுகிற க்ஷுத்ர ஜந்துக்களைப்போலே. நிரந்து. பரந்து. இடைவிடாதே. எங்கும். தர்மபூத ஜ்ஞாநமுள்ள விடமெங்கும் (உ) "வாதேஹிவேதாந சிரஸிமேலகம்" கைக்கொண்டே. உடன்வந்திபோலே; கைக்கூட்ட மிட்டாற்போலே யென்னவுமாம். நிற்கின்ற. போக்குவரவின்றியிலே. அவஸரப்ரதீக்ஷமாய்க்கொண்டு நிற்கிறவென்னவுமாம். நோய்காள். தர்ஷ்டாந்தத்தில் ஏறுமெறும்புகள்போலே நோய்களும் பலவிறே. "கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்" என்று - பகவதாஜ்ஞையாலே உள்ளுப்புகப்பெறாதே நின்றுலும் வேதனை ஸ்வரூபஸ்பர்சியிறே. விசிஷ்டவேஷத்தில் தர்ஷ்டாந்தத்தில் ஏறும்பால் (க)கடத்துக்குவருவதொரு துஷ்கமில்லை. "மோய்த்தவல்வினை" என்கிறபடியே. காலம்பெற, சடக்கெனப் போமின். அநாதிகாலம் வாஸனை பண்ணின் நாங்கள் போகிறதென் என்ன; உங்களுக்கு உஜ்ஜீவநார்த்தமாகப் போங்கோளென்ன; ஆனல் மெளளப் பேர்கிறேமென்ன; காலம்பெற, கடுகப்போங்கோள். "மடியடக்கி நிற்பதனில் - ஈண்டடி யெடுப்பதன்றேவுழகு" என்கிறார். (ஈ) "உவதிஷ்ணு ஸ்மரணமே வ்யாயுவோவஹ்நிர்ஹரிம் ஸ்ரயேத் ஸநைர்ஜஹ்யாத் ஸ்ரீஹரி" என்று - இவர்க்கு நிணமில்லையிறே. "வேங்கடத் துறைவார்க்குநம" என்றபோதே கடங்கள் வெந்தறிறே. போங்கோளென்னவும்வேண்டா; இவர், பிணமெழுந்து கடிக்கிறதோ என்னு மதிசங்கையாலும் பூர்வவாஸனையாலும் பயப்பட்டுச் சொல்லுகிறார்தனை. இப்போது நாங்கள் போகிறது என் என்ன; ஹேதுசொல்லுகிறார்மேல்;— மெய்க்கொண்டுவந்துபுகுந்து. என்னுடைய தேஹத்தை போக்யமாகக்கொண்டு, அதுக்குமேலே வந்து, அதுக்குமேலே புகுந்து, அதுக்குமேலே கிடந்தார். கிடந்தவர்தாம் ஆரென்னில்; வேதப்பிரானர். வேதத்திலேகேட்டுப் போகிற தன்னை நான் கண்ணாலே கண்டு அநுபவித்

(க) வ - (உ) "பாதேமேவேதநா சிரஸிமேலகம்" (ஈ) "உபதிஷ்டேத்ர மாம் ஸ்ரீவல்யாதயோ பூர்வஸஞ்சிதாஃ - அந்ருணோகந்துமிச்சாமி"

கலாம்படி. என்னை உபகரித்தவன். * வந்தாய், அதுக்குமேமேல நின்றாய், அதுக்குமேமேல மன்னிநின்றாய், அதுக்குமேமேல் என்மனம்புகுந்தாய். அதுக்குமேமேல போயறியாய்! என்றிறே இவர்களீடுபடுவது. "பிரான்" என்று - உபகாரகத்வம். அதாவது - ப்ரமாண ப்ரமேயங்களை உபகரிக்கையாலே. பைக்கொண்டபாம்பணையோடும். பகவதநுபவத்தால் வந்த விகாஸமன்றிக்கே, ஆழ்வாரை அங்கீகரித்த ப்ரீதியால்வந்த விகாஸம். பாம்பணையோடும். அந்தப்புரபரிகரத்தோடும். * திருமாற்கரவிறே. பண்டன்று. பழையதேஹமும் பழைய ஆத்மாவுமென்று நினையாதேயென்ன; "அதுக்கடியேன்" என்ன; பட்டினங்காப்பே. "பட்டினம்" என்கிறது - பத்தநமென்றபடி. அதாவது - நிதிகிடக்குமிடம்; ராஜதானி. இங்கு, ஈச்வரனுக்கு நிதியாவது - ஆத்மாவிறே. காப்பே. ஆளிட்டுக்காவாதே தானே காத்துக்கொண்டு கிடக்கையாலே பண்டன்று. அவன் இவரைக் காத்துக்கொண்டு கிடக்கையாலே பண்டன்று. அவன் இவரைக் காத்துக்கொண்டு கிடக்குமாபோலே இவரும் * வைத்தமா நிதியையிறே காப்பது. ... ... க.

அ.—இரண்டாம்பாட்டு. மேலே "நில்லுமினென்னவுபாயமில்லை" என்று அஞ்சினவர் உபாயமறிந்து அச்சம்கெட்ட படியைச் சொல்லுகிறது இப்பாட்டில்.

மூ.—சித்திரகுத்தனெழுத்தாற் றென்புலக்கோன் பொறியோற்றி
வைத்தவிலச்சினைமாற்றித் தூதுவரோடியோளித்தார்
முத்துத்திரைக்கடற்சேர்ப்பன் முதறிவாளர்முதல்வன்
பத்தர்க்கமுதனடியேன் பண்டன்றுபட்டினங்காப்பே. உ.

பதவுரை.

தென் புலம் கோன் —	தென்திசைக்குத் தலைவனான யமன்
பொறி ஒற்றி —	மேலெழுத்திட்டு [டிருந்த
இலச்சினை வைத்த —	முத்திரை வைக்கப்பட்ட
சித்திரகுத்தன் —	சித்ரகுப்தன் என்னும் கணக்கனுடைய
எழுத்து —	கணக்குச் சுருணையை
மாற்றி —	சுட்டுப்பொகட்டு
தூதுவர் —	அவனுடைய தூதர்கள்
ஓடி —	ஓடிப்போய்
ஓளித்தார் —	ஓளித்துக் கொண்டார்கள்;
முத்து —	முத்துக்கள்
திரை —	திரையெறிகிற
கடல் —	கடலிலே
சேர்ப்பன் —	கண்வளர்ந்தருளுமவனுய்
முது அறிவாளர் —	முதிர்ந்த அறிவை புடைய நித்யஸூரிகளுக்கு
முதல்வன் —	தலைவனுய்
பத்தர்க்கு —	பக்தர்களுக்கு [னுக்கு
அமுதன் —	நிரதிசய போக்யனுயிருக்கு மவ
அடியேன் —	நான் சேஷபூதன்;
பண்டன்று பட்டினம் காப்பு.	

வ்யா. சித்திரகுத்தனெழுத்தால். ஸர்வாத்மாக்களும் பண்ணும் புண்யபாபங்கள் பதினாலுபேர் ஸாக்ஷியாக, யமனுடையகணக்கன் பட்டோலைபட்டிறே இடப்பது. தென்புலக்கோன் பொறியோற்றி. தெற்குத்திக்கிலேயான யமபுரத்துக்கு ஸ்வாமியானயமன் இவனெழுதின பட்டோலைக்கு மேலெழுத்திட்டபடி. வைத்தவிலச்சினைமாற்றித் தூதுவரோடியோளித்தார். அனாதிகாலார்ஜிதங்களான புண்யபாபங்கள் எழுதின கணக்குச் சுருணையை இலச்சினையோடே சுட்டு ஓடியொளித்தார்கள். "வள்ளலே யுன்றமர்க்கென்றும் நமன்றமர

கள்ளர்போல் " என்னக்கடவதிறே. " நமன்முதலாலாயப் பட்டறியார்கண்மூர் " என் றபடியே இலன்பட்டோலே புரட்டிப் பாரா தவளவன்றிக்கே சட்டுப் போரச்சளாய்த்து. " உயிருண்ணுமவனையே நோக்கும் " என்றபடியே பருப்பருத்த ப்ரஹ்மாதிகளையொழிய ஸர்வாத்மாக்களும் யமவச்யராயிறேயிருப்பது. இத்தயமவச்யதைதகுலைவது பின்னை ஆர்க் தென்னில்; " நமன்தமர்சென்றமரா வினவப்பெறுவாரலர் " என்று அவன் அபிமானித்தார்க் கிறே. முத்துத்திரைக்கடல்சேர்ப்பன். முத்துக்கனத் திரையானது கொண்டுவந்து கரையிலே சேராநின்றுள்ள கடலிலே கண்வளர்ந் தருளுகிறவன். * வெள்ளநீர் வெள்ளத்தணைந்து *கள்ளநித்திரைகொள்கின்ற மார்க்கங்காண்கையிறே இவர்க்குமநோரதம். முதறிவாளர்முதல் வன். * அபர்வறுமமரர்களதிபதி. பத்தர்க்கமுதன். ஆச்ரிதர்க்கு நிரதிசயபோக்யனானவன். " அடியேன்மெலி யமர்கின்றவமுதே. " அடியேன். " முதறிவாளர் முதல்வன் " என்று நித்யவிபூதியோகஞ் சொல்லி, " முத்துத்திரைக்கடற்சேர்ப்பன் " என்று - லீலாவிபூதி யோகஞ்சொல்லி, " அடியேன் " என்று - உபயவிபூதிநாதனுடைய போக்யதையிலே தோற்ற வடியேன் என்கையாலே பண்டன்று. யமவச்யதை குலைகையாலே, பண்டைதே ஹமும் ஆத்மாவுமல்ல. பட்டினங்காப்பே. ஆத்மாவுக்கும் தேஹத்துக்கும் சைலூயுண்டா ய்த்து. இனி நீங்கள்போகப் பாருங்கோளென்கிறார். ... ... உ.

அ. மூன்றுப்பாட்டு. வயிற்றில்தொழுவைபிரித்தாதி. கீழிற்பாட்டிலே - யமவச்ய தை யில்லையென்றார்; இப்பாட்டிலே - அதுக்கடியான தேஹாந்வயமும் இல்லை யென்கி றார். அதவா, " முதறிவாளர் முதல்வன் " என்றார் - கீழ்; இதில் - தமக்கு அறிவைப்பிற ப்பித்தபடி சொல்லுகிறு சென்றுமாம். " அடியேன் " என்றார் - கீழ்; இதில் - அடிமைகொ ண்டபடி சொல்லுகிறுசென்றுமாம்.

மூ—வயிற்றிற்றொழுவைப்பிரித்து வன்புலச் சேவையதக்கிக்
கயிற்றுமக்காணிகழித்துக் காலிடைப் பாசங்கழற்றி
எயிற்றிடைமண்கொண்டவெந்தை யிராப்பக லோதுவித்தென்னைப்
பயிற்றிப்பணிசெய்யக் கொண்டான் பண்டன்று பட்டினங்காப்பே. உ.

பதவுரை.

மண்— பூமியை
எயிற்றிடை— தன் கொம்பினிடத்திலே
கொண்ட— எடுத்துக்கொண்டருளின
எந்தை— என் ஸ்வாமியானவன்
வயிற்றில் தொழுவை— கர்ப்பவாஸமாகிற சிறைக்கூடத்தை
பிரித்து— கழித்து
புலம்— இந்த்ரியங்களாகிற
வன் சேவை— வலிய ரிஷபங்களை
அதக்கி— நெருக்கி
கயிறும்— கரம்பும்
அக்கும்— எலும்புமான
பூணி— ஸ்தூல சரீரத்தை
கழித்து— நீக்கி
காலிடை பாசம்— * ஹரிணீகுரமாத்ரமான சர்மவிசேஷ விஷய ஸ்நேஹத்தை
கழற்றி— போக்கி
இரா பகல்— இரவும் பகலும்
ஓதுவித்து— 'சேஷத்வமே ஸ்வரூபம்' என்னுமிடத்தை எனக்குறிவித்து
பயிற்றி— அத்தை அநுஷ்டானத்தில் பர்யந்தமாக்கி
பணி செய்ய — நித்ய கைங்கர்யம் பண்ணும்படி
என்னை — என்னை
கொண்டான்— கைக்கொண்டருளினன்;
பண்டன்றித்யாதி பூர்வவத்.

வ்யா. வயிற்றில்தோழைவப்பிரித்து. கர்ப்பவாஸமாகிற சிறைக்கூடத்தைக்கழித்து. தோழ - விலங்கு. விலங்கிலே ஒருவிசேஷமிறே தொழுவிலே யடைக்கையும். வன்புலச் சேவையதக்கி. இந்த்ரியங்களாகிற வலியசேக்களை, அதக்கி - நெருக்கி. " சேவதக்குவார் போல " என்னக்கடவதிறே. " காவலில் புலனைவைத்து. " கயிற்றுமக்காணிகழித்து. சரம் பும் எலும்புமான சரீரத்தில் நசையறும்படிபண்ணி. அக்கு - எலும்பு. காலிடைப் பாசம் கழற்றி. யமபடர் கையும்பாசமுமாய்வந்துபுகுந்து, இவன்காலிலே துவக்கி முகம் கீழ்பட விழாதபடிபண்ணி. " பின்முன்னை விழுப்பதன்முன்னம் " என்னக்கடவதிறே. அன்றிக்கே, " காலிடைப்பாசம்கழற்றி " என்றது, " கால் " என்று - காற்றாய், "பாசம்" என்றது - ஆக்மாவை வரிந்துகொண்டிருக்கிற ஸூக்ஷ்மசரீரமாய், இச்சரீரம் பஞ்சவர்த்திப்ரா ணனிலே ப்ரோதிதமாயிருக்கும். "அக்காணி" என்றது-ஸ்தூலசரீரம்; "காலிடைப் பாசம்" என்றது-ஸூக்ஷ்மசரீரம். ஆக, (க) " ஸ்தூலஸூக்ஷ்மசரீரவாம விஸ்ரஜ்ய " என்கிறபடியே உபயசரீரப்ராப்திய மறும்படிபண்ணி. " காலிடைப்பாசம் " என்று-காற்கட்டான ஸ்நே ஹமென்னவுமாம். அன்றிக்கே, " காலிடைப்பாசம்" என்று-*ஹரிணீகுரமாத்ரமானசர்ம விசேஷவிஷயஸ்நேஹமென்னவுமாம். எயிற்றிடைமண்கொண்ட வெந்தை. ப்ரளயார்ணவத்தி லே யகப்பட்டுக்கிடக்கிற பூமியை யெடுத்தாற்போலே, சரீரவச்யனை வெண்ணெ யெடுத்த ஸ்வாமி. இராப்பகலோதுவித்து. திவாராத்ரவிபாகமற ஸர்வகாலமுமென்றபடி. ஓதுவித்து. சிக்ஷிப்பித்து. அதாவது கர்ப்பவாஸமும், இந்த்ரியவச்யத்வமும், கர்மவச்யத்வமும், யம வச்யத்வமும் க்யாஜ்யமென்னுமத்தை யறிவித்து. கீழிற்பாட்டிற்சொன்ன தன்னுடைய ஸர்வசேஷித்வத்தையும், நிரதிசயபோக்யதையையும், தமக்கு சேஷத்வம் ஸ்ரூபம் என்னுமி டத்தையுமாய்த்து ஓதுவித்தது. பயிற்றி. இத்தை அநுஷ்டாநபர்யந்தமாக்கி. [" செய் வேல் நீவினையென்று " இத்யாதி.] பணிசெய்யக் கொண்டான். ஓதுவித்த ப்ரயோஜநம் பெற்றபடி. " நித்யகைங்கர்யங் கொள்ளக்கடவோம் " என்று திருவுள்ளத்தாலே அறு தியிட்டு, கொண்டபடி. பண்டன்று. இந்த்ரியங்களுக்கு சேஷவ்ருத்தி பண்ணிப்போந்த பண்டுபோலன்று. " என்னையாளும் வன்கோ " என்னக்கடவதிறே. பட்டினங்காப்பே. இன்று ரக்ஷ்யமுண்டாகையாலே. " என்கோலாடி குறுகப்பெரு " என்கிற அர்த்தத்தைச் சொல்லுகிறது. " இராப்பகல் " என்று-மூதறிவாளர்படியாய், திவாராத்ர விபாகமற்ற படியால் அகாலகால்யமான தேசம்போலே யென்றபடி. கூ.

அ. நான்காம்பாட்டு. மங்கிய. நீங்கள், ஹிரண்யன்பட்டது படாதே போகப்பா ருங்கோளென்கிறார்.

மூ—மங்கியவல்வினை நோய்காளுமக்குமோர் வல்வினை கண்டீர்
இங்குப்புகேல்மின்புகேல்மி னெளிதன்று கண்டீர்புகேல்மின்
சிங்கப்பிரானவனெம்மான் சேருந்திருக்கோயில் கண்டீர்
பங்கப்படாதுய்யப்போமின் பண்டன்று பட்டினங்காப்பே. சு.

பதவுரை.

மங்கிய-உருத்தெரியாதபடி மங்கிக்கிடக்கிற	வினை- பாபத்தால்வந்த
வல்— வலியதாயிருந்துள்ள	நோய்காள்- வ்யாதிகளே!

(க) " ஸ்தூலஸூக்ஷ்மரூபாம் விஸ்ரஜ்ய "

உமக்கும்— உங்களுக்குங் கூட
ஓர்— ஒரு
வல்— வலிய
வினை கண்டீர்— பாபபலமான நோயாயிரா
நின்றது! பார்த்தீர்களே!!,
இங்கு— எங்களிடத்தில்
புகேல்மின் புகேல்மின்— வாராதேகொள்
ளுங்கோள்! வாராதேகொள்ளுங்கோள்!!;
எளிது அன்று கண்டீர்— நீங்களெங்களைக்
கிட்டுகை ஸுலபமன்று கிடிகோள்;
புகேல்மின்— கடக்க நில்லுங்கோள்;
சிங்கம்— நர்ஸிஹ்மாவதாரியாய்
பிரான்— உபகரித்தருளினவனுய்
எம்மான் அவன்— எனக்கு ஸ்வாமியானவன்
சேரும்— நித்யவாஸம் பண்ணுகிற
திரு கோயில் கண்டீர்— திருக்கோயிலாயிரா
நின்றது கிடிகோள்;
(ஆதலால்,)
பங்கப்படாது— பரிபவப்படாமல்
உய்ய போமின்— பிழைத்துப் போங்கோள்;
பண்டன் றித்யாதி பூர்வவத்.

வ்யா. மங்கியவல்வினைநோய்காள். தெரியாதபடி மங்கிக்கிடக்கிற வலியபாபங்களால் பலிதமான நோய்காள். விபஜிக்க வொண்ணுதபடி மங்கிக்கிடக்கை. "சார்ந்தவிருவல் வினைகள்" என்னுமாபோலே. "இங்குப்புகேல்மின் புகேல்மின்" என்று ப்ரதிஷேயங் காட்டுகிறார். ஆத்மாவை மங்கப்பண்ணுமதாய், இவனல் கழித்துக்கொள்ள வொண்ணுத துமாய், அவனை கழிக்கவேண்டும்படியான நோய்காள். உமக்குமோர் வல்வினைகண்டீர். ம்ர்த்யுவுக்கும் ம்ர்த்யுவென்கிறார். இங்குப்புகேல்மின் புகேல்மின். இவற்றின் நெஞ்சிலே படுகைக்காகப் பலகாற்சொல்லுகிறார். இங்கு. "'இங்கு' என்று - திருப்பல்லாண் டோடே அந்வயமுடையாரெல்லாரையும் கூட்டிக்கொள்ளுகிறார்" என்று பட்டர். எளி தன்று. உங்களுக்குப் பண்டுபோலெளிதன்று. 'ஆவதென்' என்ன; கண்டீர். ஹிரண்யன் பட்டபடி கண்டிகோளே. புகேல்மின். நில்லுங்கோள். புகுராமையென்னென்ன - சிங்கப் பிரானவனெம்மான் சேருந்திருக்கோயில்கண்டீர். ஸிஹ்மங்கிடந்த முழஞ்சிலே புகுவாருண் டோ. "ப்ரஹ்லாதன் விரோதியைப் போக்கினதும் தமக்கு" என்றிருக்கிறார். ஹிரண் யன்பட்டது படாதே போகப்பாருங்கோள். பங்கம். பரிபவம். பிழைத்துப்போங்கோள் பண்டுபோல் உங்களுக்கு எளிதன்று, உறைப்பான காவலுண்டாய்த்து. ... ச

அ.—ஐந்தாம்பாட்டு. மாணிக்குறளுருவாய. தேவகார்யம் செய்யவந்தாற்போலே என்கார்யம் செய்யவந்தான்; நம்மிசுக்ராதிகள்பட்டது படாதேபோங்கோளென்று இந்த ரியங்களுக்குச் சொல்லுகிறார். கீழிற்பாட்டில் - "புண்ணிரந்த" என்றார்; இப்பாட்டில்- மண்ணிரந்தவனுகச் சொல்லுகிறார்.

மூ.—மாணிக்குறளுருவாய மாயனேயென்மனத்துள்ளே
பேணிக்கோணர்ந்து புகுதலைத்துக் கோண்டேன்பிறிதின்றி
மாணிக்கப்பண்டாரங் கண்டீர் வலிவன்குறும்பர்களுள்ளீர்
பாணிக்கவேண்டாநடமின் பண்டன்று பட்டினங்காப்பே. டு.

பதவுரை.

மாணி— அழகுமிக்கிருந்துள்ள [தருளிய
குறள் உரு ஆய— வாமநாவதாரம் செய் | மாணிக்கம் / பண்டாரம் } மாணிக்கங்களுக்கு இருப்பிடமான

மாயனை— ஆச்சர்ய பூதனை
பேணி— விரும்பி
கொணர்ந்து— கொண்டுவந்து
என் மனத்துள்ளே— என் நெஞ்சினுள்ளே
புகுத— புகுருமபடி
பிறிது இன்றி— பிரிவில்லாமல்
வைத்துக் கொண்டேன் கண்டீர் } நிலைநிறுத்திக் கொண்டேன் காணுங்கோள்;
வலி வன்— மிகவும் வலிதான
குறும்பர்கள்— மூலபடியே நடந்துதிரியும் இந்திரியங்களே!
உள்ளீர்— பிழைக்க நினைத்தீர்களாகில்
பாணிக்கவேண்டா— தாமஸிக்கவேண்டா;
நடமின்— கால்வாங்கிப் போகப்பாருங்கோள்;

பண்டன்றித்யாதி பூர்வவத்.

வ்யா. மாணிக்குறளுருவாய மாயனை. இரப்பிலேதகமேறி, நிரதிசயபோக்யனுமாய் தன்னுடைய தேஹகுணங்களாலும் ஆத்மகுணங்களாலும் அவனைவசிகரித்தபடி. மாணி - அழகு. குறள் - சேர்ப்பால்போலே. உருவாயமாயனை. மாயன்தான் ஒரு வடிவுமிகாண்டாற் போலேயிருக்கை. அழகுதான் ஒருவடிவுமிகாண்டு உலாவுமாப்போலே யிருக்கை. உரு - வடிவு. பேணி. ஸ்நேஹாதிசயத்தாலே, கொடுவந்து என்னெஞ்சுக்குள்ளே வைத்துக் கொண்டேன். பேணி - ஆசைப்பட்டு; ஆதரித்தென்னவுமாம். பிறிதின்றி. திருவுலகளந்தருளினவன்று அவன் ஸாபேக்ஷனுப் நான் நிரபேக்ஷனுகையாலே பிரிவுண்டாய்த்து; இன்று இருவரும் ஸாபேக்ஷராகையாலே பிறிதின்றி. இரண்டின்றி. மாணிக்கப்பண்டாரங் கண்டீர். மாணிக்குறளுருவாயமாயன் - மாணிக்கப்பண்டாரம். "உலகளந்தமாணிக்கம்" என்னக்கடவதிறே. வலிவன்குறும்பர்களுள்ளீர். மிகவும் வலிதாய் மூலபடியே நடந்து திரிகிற குறும்பர்களாயுள்ளீர். குறும்பர்கள் - இந்திரியங்கள். வலி - பலம்; வன்மை - தொன்மைக்கேடு. "வன்கையர்" என்னக்கடவதிறே. குறும்பர்கள் - கள்ளர்கள். (க) "வனஷஉம் ஜியடஸ்யூஅ நாழ" "கோவாயைவரென் மெய்குடியேறி" என்று இவர்களதிறே குடியிருப்பு. இவர் குடிமைசெய்கிறே போந்தது. உள்ளீர். உண்டாகில். பாணிக்கவேண்டா. விளம்பிக்கவேண்டா. நடமின். கால்வாங்கிப் போகப்பாருங்கோள். "ஈண்டடியெடுப்பதன்றே வழகு." அதுக்கடியென் என்ன; பண்டன்று. நீங்கள் மெய்ருடியேறின காலமன்று, இன்று வ்யாவ்ருத்தி புண்டென்கிறார். ... ... நு.

மு.—உற்றவுறுபிணி நோய்காளுமக்கொன்று சொல்லுகேன் கேண்மின்
பெற்றங்கண் மேய்க்கும்பிரானுர் பேணுந்திருக்கோயில்கண்டீர்
அற்றமுரைக்கின்றேனின்ன மாழ்வினைகா ளுமக்கிங்கோர்
பற்றில்லைகண்டீர் நடமின் பண்டன்று பட்டினங்காப்பே. கூ.

பதவுரை.

உற்ற— மிகக்கொடிய
நோய்காள்— வ்யாதிகளே!
உறு— மறுபாடுருவக் கொண்ட
பிணிகாள்— ‡ நோய்களே!
உமக்கு— உங்களுக்கு

‡ "நோய்களே இரண்டுதர மடைமொழி யிட்டனழப்பது - அவற்றின் கொடுமை பைப்பற்ற.

(க) "ஏஷ இந்த்ரியதஸ்யூநாம்"

ஒன்று— ஒருவார்த்தை
சொல்லுகேன்— சொல்லா நின்றேன்
கேள்மின்— கேளுங்கோள்;
பெற்றங்கள்— பசுக்களை
மேய்க்கும்— மேய்க்கின்ற
பிரானர்— உபகாரகரானவர்
பேணும்— விரும்பி வர்த்திக்கிற
திரு கோயில் கண்டீர் — திருக்கோயிலா
யிரா நின்றது காணுங்கோள்;
ஆழ்— பிறவிக்கடலில் ஆழப்பண்ணின
வினைகாள்— பாபங்களே!
இன்னம்— மீண்டும் [கிறேன்;
அற்றம் உரைக்கின்றேன்— அறுதிசொல்லு
உங்க்கு— உங்களுக்கு
இங்கு— இங்கு
ஓர் பற்று இல்லை கண்டீர்— ஒரு ப்ரயோஜ
மில்லை கிடிகோள்;
நடமின்— (இனி) நடவுங்கோள்;
பண்டன்றித்யாதி பூர்வவத்.

வ்யா. உற்றவுறுபிணிநோய்காள். அநாதிகாலமே பிடித்து என்னைவிடாதே நலிவு செய்கிற நோய்காள். உற்ற- நோய்காள், உறுபிணிகாள். அஸாதாரண மென்னும்படியான நோய், மறுபாடுருவக்கொண்டபிணி. உங்களுக்கு ஒருவார்த்தை சொல்லுகிறேன், புத்தி பண்ணிக்கேளுங்கோள். அதென்னென்ன; பேற்றங்கள்மேய்க்கும் பிரானர்பேணும் திருக் கோயில்கண்டீர். யசோதைப்பிராட்டிக்கு பல்யனுய்வந்தவதரித்தாற்போலே எனக்கு பல்ய னுய் வந்து உபகரித்தபடி. பேணுந்திருக்கோயில். தம்முடைய திருமேனியை விரும்பிவந்து புகுருகையாலே, உகந்தருளின நிலங்களோடொக்க அருளிச்செய்கிறார். கண்டீர். இது ப்ரத்யக்ஷமன்றே. இன்னம்-அற்றமுரைக்கின்றேன். இன்னம்- மீண்டும், உங்களுக்கு அறுதி சொல்லுகிறேன். ஆழ்வினைகாள். அநாதிகாலம் ஈச்வரனைவிட்டுத் தறைப்பட்டுப்போம்படி பண்ணினவர்களே. ஆழ்வினை. தூரவகாஹமான வினையென்றுமாம். உமக்கிங்கொரு ப்ர யோஜநமில்லை கண்டீர். பேற்றங்கள் மேய்க்கிறவரைக் கண்டிகோளே. தாம் கண்டவாறே இவையும் கண்டதாக நினைத்திருக்கிறார். நடமின். போகப்பாருங்கோள். பண்டன்று. *மாயன்படைத்த மயக்கிலே அகப்பட்ட பண்டுபோலன்று. (க) “ மாயஸ்ருஷ்டி ” என்கிற வின்று, ஸ்வபாபங்களும் * மோக்ஷயிஷ்யாமியிலே அன்வயித்தது. ... ... சு.

அ. ஏழாம்பாட்டு. கோங்கைச்சிறுவரை யித்யாதி. யமவச்யத்தைக்கடி இந்த்ரிய தை யென்கிறார்.

மூ.—கோங்கைச்சிறுவரையென்றும் பொதும்பினில் வீழ்ந்துவழுக்கி
அங்கோர்முழையினிற் புக்கிட்டழுந்திக் கிடந்துழல்வேனை
வங்கக்கடல்வண்ண னம்மான் வல்வினையாயின மாற்றிப்
பங்கப்படாவண்ணஞ் செய்தான் பண்டன்று பட்டடினங்காப்பே. எ.

பதவுரை.

கோங்கை என்றும்— ‘முலைகளிருக்கும் படி யே!’ என்றும்
சிறு அரை என்றும்— ‘ சிற்றிடையிருக்கும் படியே!’ என்றும் கொண்டாடி

(க) “ மாகசஷி ”

பொதும்பினில்-அல்குலாகிற ஒருகுழியிலே
வழுக்கி வீழ்ந்து— வழுக்கி விழுந்து
(அதனாலே,)
ஓர்— ஒப்பற்ற
முழையினில்— நரகத்திலே
புக்கிட்டு— புகுந்து
அங்கு— அவ்விடத்தில்
அழுந்தி கிடந்து— அழுந்தியிருந்து
உழல்வேனை—ஸஞ்சரியாநின்றுள்ள என்னை
வங்கம்— மாக்கல முலாவா நின்றுள்ள
கடல்— கடல்போன்ற
வண்ணன்— திருநிறத்தையுடையனான
அம்மான்— எம்பெருமான்
வல் வினை ஆயின— க்ரூரகர்மங்களா யிருக்
குறவற்றை
மாற்றி— போக்கி
பங்கப்படாவண்ணம் } பரிபவப்படாதபடி
செய்தான்— } பண்ணினான்;
பண்டன்றித்யாதி: பூர்வவத்.

வ்யா. கொங்கைச்சிறுவரையென்றும். கவித்வம்தோற்ற முலைமலை என்கிறார்: "முலை மலைமேல்நின்றும் ஆறுகளாய்" என்னக்கடவதிறே. பொதும்பினில் வீழ்ந்துவழுக்கி. குழியிலே வழுக்கிவிழுந்து. குழியென்றது- இவனை ஆழப்பண்ணுமது. இவன் தானேகவிழுந்திலன், அதுதான் விழப்பண்ணிற்று. அங்கோர்முழையினில் புக்கிட்டு. சாஸ்த்ராஞ்சொல்லும் ஸ்த்தாநத்திலேபுக்கு. அழுந்திக்கிடந்துழல்வேனை. அதிலேகிடந்து க்லேசிக்கிறவென்னை. அங்கு, ஓர் என்றது- அத்விதீயம். இவன்தப்பிலும் தப்பவொண்ணாதபடி தன்வசத்திலே இழுத்துக்கொள்ளுகை. அதவா, கொங்கை- முலை; சிறு அரை- சிற்றிடை; பொதும்பு; அக்ராம்யமான அந்தஸ்த்தாநத்தைச் சொல்லுகிறார். "என்றும்" என்று - முலையிருக்கும்படியே! இடையிருக்கும்படியே! என்று முந்துற இவற்றையிறே கொண்டாடுவது. பொதும்பு- விஷயப்ராவண்யஸ்த்தாநம். அக்கோர்முழை. பின்னை அதொருமுழஞ்சிறே. "முழை" என்று- நரகம். விஷயப்ராவண்யத்தால் பலிப்பது நரகமிறே. அழுந்திக்கிடந்துழல்வேனை. பின்னை, கர்ப்பவாஸத்திறாடு யமகர்த்தமத்திறாடு ஸஞ்சரியாநிற்கு மத்தனையிறே. வங்கமித்யாதி. * தெரிவை மாருருவமேமருவி * அவரவர் பணைமுலையைத் துணையென்றிருந்த விவரை யெடுத்தது வடிவழகாலேயிறே. அம்மான். அதுக்கடி உடையவனுகையிறே. வங்கத்தையுடைத்தான கடலின்நிறம்போலேயிருக்கிற திருமேனியையுடைய ஸர்வேச்வரன். 'வங்கமாமுந்நீர்' என்னக்கடவதிறே. வல்வினையாயினமாற்றி. இதுக்கடியான கர்மங்களைப் போக்கி. பங்கப்படாவண்ணஞ்செய்தான். என்னை எளிவரவுபடாதபடி பண்ணினன். பங்கம்-பரிபவம். கடலுக்கு வங்கம்போலே இவன்வடிவழகை அநுபவிப்பார்க்கு திவ்யாயுதங்களிலேநின்று அநுபவிக்கைக்கு ஒரு த்ருஷ்டாந்தம்.

அதவா, கொங்கையித்யாதி. இதுதன்னை கர்ப்பவாஸமென்றுஞ் சொல்லுவர்கள். எ. "அங்கோர்" என்று கர்ப்பவாஸம். ... ...

அ.—எட்டாம்பாட்டு. ஏதம். கீழிற்பாட்டிலே - * மாதரார் கயற்கணென்னும் வலையில்பட்ட விவரைமீட்டது வடிவழகென்றார்; இப்பாட்டில் - * ஐயப்பாடறுத்ததும் அழகென்கிறார். அன்றிக்கே, கீழே "இராப்பகலோதவித்து" என்றது சாஸ்த்ரமுகத்தாலேயோ, ஈச்வரமுகத்தாலேபோ, ஆசார்யமுகத்தாலேயோ வென்னில்; ஆசார்யமுகத்தாலே யென்கிறது - இப்பாட்டில்.

மூ.—ஏதங்களாயினவெல்லா மிறங்கலிடுவித்தென்னுள்ளே
பீதகவாடைப்பிரானார் பிரமகுருவாகிவந்து

போதிற்கமலவன்னெஞ்சம் புகுந்து மென்சென்னித்திடரிற்
பாதவிலச்சினைவைத்தார் பண்டன்று பட்டினங்காப்பே. அ

பதவுரை.

பீதகம் ஆடை } : திருப்பீதாம்பரத்தையுடை
பிரானர்— } ய ஸர்வேச்வரன்
பிரமகுரு ஆகி வந்து – ப்ரஹ்மோபதேஷ்
டாவான ஆசார்யனுய் வந்து
போது— அறிவுக்கு
இல்— இருப்பிடமாய்
வல்— உள்ளிருப்பவனை அறியவொட்டாத
வலிமையையுடைய
நெஞ்சம்— ஹ்ருதயமாகிற
கமலம்— தாமரை மலரிலே
புகுந்தும்— புகுந்தும்
என்— என்னுடைய
உள்— மநஸ்ஸிலுள்ள
ஏதங்கள் ஆயின எல்லாம்–தேஹாத்மாபிமா
நி தோஷங்களையெல்லாம்
இறங்கலிடுவித்து– நீங்கப்பண்ணி
என்– என்னுடைய
சென்னித்திடரில்— உத்தமாங்கத்திலே
பாதம்— திருவடிகளாகிற
இலச்சினை— முத்ரையை
வைத்தார்– வைத்தருளினன்;
பண்டன்றித்யாதி பூர்வவத்.

வ்யா. ஏதங்கள். ஏதம் - குற்றம். ஏதங்களானவையெல்லாம். தேஹாத்மாபிமானமும், ஸ்வாதந்த்ர்யமும், அந்யசேஷத்வமும், ஸ்வரக்ஷணமும், ஸ்வப்ரயோஜநமும். பூர்வாகமும், உத்தராகமும், ப்ராரப்தமுமென்னவுமாம். நிஷ்க்ர்தியில்லாதவையும் நிஷ்க்ர்தியுள்ளவையு மென்றுமாம்.(க)[யொவ்வுமெவ ஸ-ஸாவெஉ]ஸூத்ரமானவையும் சுஷ்கமானவையு மென்றுமாம். இறங்கலிடுவித்து. இவை போம்படி பண்ணி. என்னெஞ்சுக்குள்ளே. பீதகவாடைப்பிரானர். ஸர்வேச்வரத்வ சிஹ்நமுமாய் புருஷோத்தமத்வ லக்ஷணமுமாயிருக்கும் திருப்பீதாம் பரத்தையுடைய ஸர்வேச்வரன். பிரமகுருவாகிவந்து. ப்ரஹ்மதத்தை யுபதேசிக்கிறவன். (உ)“ உதாஹரணஜ்ஞாநவிசிஷ்டோ மநுஷ்யாஜ்ஞாநஹேதுஃ ” என்னக்கடவதிறே. ப்ரஹ்மசப்தம் ஜ்ஞாநவாசி. ஈச்வரத்வப் பிடார்கொண்டு திருத்தமிவாண்ணுமல் ஆசார்யனுயிறே திருத்துவது. போதில்கமலவன்னெஞ்சம்புகுந்தும். போது - அறிவு. இல் - இருப்பிடம். “ கமலம் ” என்று - ஹ்ருதயகமலம். வன்மை - அந்தர்யாமியையும் அறியவொட்டாதவலிமை. ஜ்ஞாநப்ரஸாதவாரமான நெஞ்சை யிருப்பிடமாகவுடைய கமலம். புகுந்தும். இப்படிக்கொத்த நெஞ்சுக்குள்ளே புகுந்து திருத்தினபடி. பீதகவாடைப்பிரானர் பிரமகுருவாகிவந்து போதில்கமலவன் னெஞ்சம்புகுந்து - ஏதங்களாயினவெல்லா மிறங்கலிடுவித்து. “ ஏதங்கள் ” என்றது - மகாரத்தாலே - தேஹாத்மாபிமாநத்தைக்கழித்து, சதுர்த்தியாலே - ஸ்வஸ்வாதந்த்ர்யத்தைக் கழித்து, உகாரத்தாலே - அந்யசேஷத்வத்தைக் கழித்து, நமஸ்ஸாலே - ஸ்வயத்நத்தைக் கழித்து, நாராயணபதத்தாலே - ஸ்வப்ரயோஜநத்தைக் கழித்தபடி. ஈச்வரனுக்குப் பிரிவின்றிக்கேயிருக்க, “ பிரிந்தான் ” என்கைக்கடி அந்த ஜ்ஞாநமில்லாமையிறே. ஜ்ஞாநமில்லாதபோது (ங) “ ஸஹஜ்ஞவ ” என்றும், ஜ்ஞாநமுண்டானவாறே (ச)“ ஸஜ்ஞநெ நழ ” என்னவுங்கடவதிறே. ஈச்வரனுய்ச்செய்யு

(க) “ கோக்நேசைவஸ-ராபேச ” (உ) “ உத்பாதகப்ரஹ்ம பித்ரோர்கரீயாந் ப்ரஹ்மதஃ ” (ங) “ ஆஸ்நேவ ” (க) “ ஸந்தமேநம் ”

மதன்று, ஆசார்யனுப்வந்து செய்யவேணும். இவனுக்குத் திருத்தலாவது - இவன்பண்ணும் க்ர்த்யங்கள் ஒரொன்றே ஸத்தையை நசிப்பிக்கப் போராதிருக்க, அத்தைப்பொறுத்து ஸத்தையை நோக்கிப் போருகையாகிலுமிறே இன்று இவனுக்கு உபதேசிக்கலாகிறது. " ஒத்தார்மிக்காரை யிலையாயமாமாயா " என்று படாதனவெல்லாம் பட்டானும் * அறியாதன வறிவித்திறே திருத்துவது. ஸாபேக்ஷனல்லாதவன் காலுவகைப்பட்ட ஜந்மத்திலே வந்தவதரித்து ஸத்தையைநோக்கி, உபதேசத்துக்கு யோக்யமான கரணப்ராகாத்தையும் பண்ணி, அதுக்கு யோக்யமான சரீரத்தையும் உண்டாக்கி, மாதா பிதாக்களுக்கு அந்தர்யாமியாய் நின்றும் ஆசார்யனுமாய் நின்றும் உபதேசித்த உபகாரத்தை நினைத்து " பிதகவாடைப்பிரானார் " என்கிறார். என்தென்னிலங்கைக்கோமானே. என் உத்தமாங்கத்திலே. திருவடிகளாகிற இரண்டுகாலும் வரிப்பாயாதமேடிமேல். " நின்கழல சென்னிபொருமே " என்று பூசல்பொருகிறே * பாதவிலச்சினை வைத்தது. பிதாவுக்குத் திருவாழிபோலே தலைக்குத் திருவடிநிலை (க) " கூவ நயனாயுதம் " இத்யாதி. டண்டன்று. இந்த்ரியங்களுக்குப் பொதுவான பழையகாலம்போலன்று. திருவாழிக்கல் காட்டித் திருவிடையாட்டமாய்த்து. " ஒருகாலிற்சங் கொருகாலிற் சக்கரமுள்ளடி பொறிக்கு " என்னக்கடவதிறே. காலுமும் படைத்தது. ... ... அ.

அ. ஒன்பதாம்பாட்டு. கீழ் - ஈச்வரன் தமக்குக்காவலானபடி கொண்டார்; இடையாட்டில் - தாம் அவனுக்குக் காவலானபடி யருளிச்செய்கிறார்.

மூ.—உறகலுறகலுறக லொண் சுடராழியேசங்கே
அறவெறிந்தகவாளே யழகியசார்ங்கமேதண்டே
451 இறவுபடாழலிருந்த வெண்மருலோகபாலீர்காள்
பறவையரையாவுறகல் பள்ளியறை குறிக்கொண்மின். கூ.

பதவுரை.

ஒண்— அழகியதாய்
சுடர்-ஜ்யோதிஸ்ஸையுடைத்தாயிருந்துள்ள
ஆழியே— திருவாழியாழ்வானே!
சங்கே— ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானே!
அற— சத்ருக்களுடலறும்படி
எறி— எறிகிற
நாந்தகம்— ஸ்ரீநந்தகமென்கிற
வாளே— திருக்குற்றுடைவாளே!
அழகிய சார்ங்கமே!—;
தண்டே— ஸ்ரீகதையே!
இருந்த-ஈச்வரன்வைக்க இருக்குமவர்களாய்
எண்டிசை உலோகபாலீர்காள்— அஷ்டதிக்பாலகர்களே!
இறவுபடாமல்— தப்பாமல்
உறகல் உறகல் உறகல்— உறங்காதே தொள்ளுங்கோள்!, உறங்காதேகொள்ளுங்கோள்!, உறங்காதே கொள்ளுங்கோள்;
பறவை அரையா—பக்ஷிராஜனே!
உறகல்— உறங்காதே கொள்ளும்;
(நீங்கள் எல்லாரும்)
பள்ளி அறை— அவனுடைய திருப்பள்ளி அறையான என்சரீரத்தை
குறிக்கொள்மின்— குறிக்கொண்டு நோக்குங்கோள்.

வ்யா. உறகலுறகலுறகல். அவர்கள் புத்திபண்ணி நோக்குகைக்காகப் பலகாலும் மருளிச்செய்கிறார். ஆரைத்தான் உறங்காதிருக்கச் சொல்லுகிறதென்னில், அநிமிஷஸ்ரு

(க) " கதாபுரச்சங்காதாங்க "

யாய்த்து. ப்ரயோஜநாந்தரபரரான் மஹாராஜருமகப்படப் பரியும்விஷயத்துக்கு நித்யர்பரி யக் கேட்கவேண்டாவிறே. அவர்களோடு மகப்பட, உறங்காதே கொள்ளுங்கோள் என்னும் படியிறே இவர்பரிவு. இவர்களுக்கு உறக்கமாவது - குணவித்தராய் நஞ்சுண்டாரைப் போலே தந்தாமையறியா திருத்தல்; அநுபவத்திலே யிழிந்து கைங்கர்யபராயிருத்தல். ஒண்சுடராழியேசங்கே. அழகிதான நிறத்தையும் ஒளியையும் [illegible] காதே, ரக்ஷகற்கு உறுப்பாக்கப் பாருங்கோள். அற்வெறிநாந்தகவாளே. சத்ருக்கள் சரீர மறும்படியாக எறிகிற, நாந்தகம் - நந்தகமென்கிற திருநாம்மலன்வாளுக்கு. அழகியசார்ங் கமே. அழகாவது - ஈச்வரன் ஒருகால்நோக்கினால், பின்பு " சார்ங்கமுதைத்தசரமழை " என்னும்படி சர்வர்க்ஷமாகச் சொரியும். தண்டே. விசோகவர்க்கத்திலே எப்போதும் ஒங் கினபடியே யிருக்கும். நித்யவிபூதியிலுள்ளாரைக் காவலடைத்து, லீலாவிபூதியிலுள்ளா ரைக் காவலடைக்கிறார்மேல் இறவுபடாமலிருந்த வேண்மருலோக பாலர்காள். இறவுபடாமல்-- தப்பாமல், ஈச்வரன் வைக்கவிருந்த எட்டுத்திக்குக்குங் காவலான லோகபாலகர்காள். பால நஸாமர்த்யத்தை நிரூபகமாகவுடைய நீங்கள், உங்கள் பெருமைக்கீடாகக் காக்கவேணும். பறவையரையா. இவர்களெல்லாம் தாம்தாம் நின்றநின்றவிடங்கள் குலையாதே நின்றிறே காப்பது. ஓரிடத்தில் நில்லாதே எங்கும் வ்யாபரித்து நோக்கும் பெரியதிருவடியை, உறங்காதேகொள் என்கிறார். * நீண்டவசுரருயிரெல்லாந் தகர்த்துண்டுழலும் புள்ளிறே. பள்ளியறைகுறிக்கொள்மின். தம்முடைய திருமேனியைக் குறிக்கொண்டு நோக்குங்கோ ளென்கிறார். ... ... கூ.

அ. பத்தாம்பாட்டு. தம்முடைய திருமேனி திருப்பள்ளி யறையானபடி சொல் லுகிறார் - இப்பாட்டில்.

மூ.—அரவத்தமளியினேடு மழகியபாற்கடலோடும்
அரவிந்தப்பாவையுந்தானு மகம்படிவந்துபுகுந்து
பரவைத்திரைபல மோதப் பள்ளிகொள்கின்ற பிரானைப்
பரவுகின்றுன்விட்டுசித்தன் பட்டினங்காவற்பொருட்டே. ஐ.

பதவுரை.

அரவம்— திருவனந்தாழ்வானுகிற
அமளியினேடும்— படுக்கையோடும்
அழகிய— அழகிய
பால் கடலோடும்— க்ஷீராப்திபோடும்
அரவிந்தம் பாவையும் தானும்— செந்தாமரை மலரைப் பிறப்பிடமாகவுடைய பிரா ட்டியும் தானும்
அகம்படி— அடியாரோடே
வந்து புகுந்து— வந்துபுகுந்து
பல— பல
பரவை திரை மோத— ஸமுத்ரத் திவலைகள் மோத
பள்ளிகொள்கின்ற— (தம்திருவுள்ளத்திலே) பள்ளிகொள்ளுகிற
பிரானை— உபகாரகனை
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
பட்டினம்— தமது சரீரத்தை
காவல்பொருட்டு— காக்கும்படிக்கோக
பரவுகின்றுன்— போற்றுகிறுன்.

வ்யா. அரவத்தமளியினேடும். திருவனந்தாழ்வானுகிற படுக்கையோடும், திருப் பாற்கடலோடும், நிரதிசயபோக்யதையையுடையளாய் நிருபாதிகஸ்த்ரீத்வத்தையு முடைய ளான பிராட்டியோடும். தானும். உபயவிபூதி விசிஷ்டனை தானும். அகம்படி வந்து புகுந்து. * அடியார்கள் குழாங்களோடே வந்துபுகுந்து. பரவையித்யாதி. தான்; இவர்

திருவுள்ளத்திலே கண்வளர்ந்தருளுகிற படிக்கு ஸ்மாரகமாக, அலமேகட்குட்படி கண்வளர்ந்தருளுகிற உபகாரத்துக்குத் தோற்று, பரவுகின்றன் விட்டுசித்தன். தம் ஸத்தைக்காகப் போற்றுகையன்றிக்கே, காவலுக்குறுப்பாகப் போற்றுகிறார். பட்டினங்காவல் பொருட்டே ரக்ஷையின்பொருட்டு.

ஆக இத்திருமொழியால்- திருப்பல்லாண்டிலர்த்தத்தை நிகமிக்கிறார். "சேவடி செவ்வி திருக்காப்பு" என்றவர்த்தம், *உறகலுறகலிலே நிகமித்தார், "அடியோமோடும் கின்னேடும்" என்கிற பாட்டினர்த்தத்தை *அரவத்தமளியிலே நிகமித்தார். ... ஏ.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அடிவரவு.—நெய் சித்திர வயிற்றில் மங்கிய மாணி உற்ற
கோங்கை ஏத முறகல் அரவத் துக்க.

ஆ திருமொழி-ரக-க்கு, பாட்டு-சரo.

ஐந்தாம்பத்து - மூன்றாந்திருமொழி - துக்கச்சுழலை, ப்ரவேசம்.

அ. கீழிற்றிருமொழியிலே-¶*திருமாலிருஞ்சோலைமலையிலும் *சூழ்விசும்பணிமுகிலும் சொன்ன அர்த்தத்தைச் சொல்லிற்று; இத்திருமொழியிலே *முனியேநான்முகனில் ஒன்பதுபாட்டிற் சொல்லுகிறவர்த்தத்தைச் சொல்லுகிறது; *சென்னியோங்கில் - பத்தாம் பாட்டிலர்த்தத்தைச் சொல்லும். "பரவுகின்றன் விட்டுசித்தன்" என்று- ஸத்தைக்கும் போகத்துக்கு மன்றிக்கே ரக்ஷைக்கு உறுப்பாகச்சொல்லுகை பலம் என்றீர்; "அரவத்தமளியிலேறும்" என்று நாம் உம்முடைய உடம்பிலே புகுந்து அநுபவித்தோமாகில் இனிப் போக வமையாதோவென்ன; இனிப்போகமொட்டோமென்கிறார். கீழில் திருமொழியிலே "நெய்க்குடத்தைப்பற்றி" என்று தொடங்கி, "நோய்காள்" என்று அநிஷ்டநிவர்த்தியைச் சொல்லி, இதில் இஷ்டப்ராப்தி யைப்பண்ணித் தரவேணுமென்று திருவாணையிட்டுத் தடுக்கிறரென்றுமாம். ... ... *

மு.—துக்கச்சுழலையைச் சூழ்ந்துகிடந்த வலையை யறப்பறித்துப்
புக்கினிற்புக்குன்னைக் கண்டுகொண்டே னினிப்போக விடுவதுண்டே
மக்களறுவரைக் கல்லிடைமோத விழுந்தவடன்வயிற்றில்
சிக்கனவந்து பிறந்துநின்றாய் திருமாலிருஞ்சோலை யெந்தாய். க.

பதவுரை.

மக்கள் அறுவரை— இதுக்கு முன்பிறந்த ஆறுபிள்ளைகளையும்
கல்லிடை— கல்லிலே
மோத— மோதி முடிக்க
இழந்தவள்தன் வயிற்றில் — இழந்த தேவகிப்பிராட்டி வயிற்றிலே

¶ "திருமாலிருஞ்சோலைமலையென்றேனென்ன" என்கிற திருவாய்மொழியிலுமென்றபடி.

சிக்கன— சடக்கென [நின்றவனுப்
வந்து பிறந்து நின்றாய்— வந்தவதரித்து-
திருமாலிருஞ்சோலை- திருமாலிருஞ்சோலை
மலையிலெழுந்தருளியிருக்கிற
எந்தாய்— என் ஸ்வாமியானவனே!
சுழலை— சுழலாறுபோலே வளையவளைய
வருகிற
துக்கத்தை— துன்பத்தை
சுற்றுதுகிடந்த— சுற்றிக்கொண்டிருக்கிற
வலையை— சரீரத்தை
அற பறித்து- ஸவாஸநமாகப் போக்கி
புக்கினில்- புகுமிடங்களிலெல்லாம்
புக்கு— புகுந்து
உன்னை— உன்னை
கண்டுகொண்டேன்- கண்ணுரக்கண்டேன்;
இனி— இனிமேல [வேணு?
போக விடுவது உண்டே - போகவொட்டு
போகவொட்டே னென்றபடி.

வ்யா. முதற்பாட்டு. துக்கச்சுழலையை. வ்யாதிகளுக்கெல்லாம் கொள்கலமான சரீரம். வ்யாதிகள்கிடப்பது சரீரத்தைப்பற்றியிறே. "நோயெலாம் பெய்தமேதாராக்கை" என்னக்கடவதிறே. சுழலாறுபோலே வளையவளைய வருகிறதுக்கத்தை. (க) "சூலெஸ்ட கூவபூலஜீஜ ஸ" "மொய்த்தவல்வினை" என்கிறபடியே இவனைச்சுற்றிக்கிடக்கிற துக்கங்களேயென்னவுமாம். "தாயே-நோயே, தந்தையே- நோயே, தாமே- நோயே, இனியே-நோயே, மக்களே- நோயே" என்னக்கடவதிறே. சூழ்ந்துகிடந்தவலையை. துக்கத்தைத் தப்பவொண்ணாதபடி வீசிக்கிடக்கிற சரீரத்தை. "வலை" என்கிறது தப்பவொண்ணுமையைப்பற்ற. வலையாவது- கயிறுமணியுமாயிருப்பதொன்று; இதுவும் நரம்புமெலும்புமாயிருப்பதொன்று. அதவா, ஆத்மாவைச்சுற்றிக்கொண்டுகிடக்கிற அவித்யாகர்ம வாஸநாருசிகளென்னவுமாம். இவற்றை "வலை" என்கிறது- ஒன்றுக்கொன்று காரணமுமாய் கார்யமுமாயிருக்கையாலே. அறப்பறித்து. ருசிவாலனைகளோடேகூடப் போம்படிபண்ணி. புக்கினில் புக்குன்னைக் கண்டுகொண்டேன். புக்கவிடமெல்லாம் புக்கு உன்னைக் கண்டுகொண்டேன். அந்தர்யாமித்வம் பரத்வம் வ்யூஹம் விபவம் அர்ச்சாவதாரமளவாக. "அறப்பறித்து" என்று அநிஷ்ட நிவர்த்தியும், "கண்டுகொண்டேன்" என்று இஷ்டப்ராப்தியும் பண்ணித்தந்தோமாகில், இனிப்போய் வரவமையாதோவென்ன; இனிப்போகவிடுவதுண்டே. இனிப்போகவிடுவதுண்டோ. "அறப்பறித்து" என்றும் "கண்டுகொண்டேன்" என்றும் தாம்செய்தாராகைக்கடி- பிதா தேடின் அர்த்தத்தை "தன்னது" என்னும் புத்ரனைப்போலே இனிப்போய் வரவமையாதோவென்ன; இனிப்போகவிடுவதுண்டே. விரோதியிலே சிறிது கிடத்தல், காட்சியிலே சிறிதுகிடத்தல், இவையிரண்டுக்கும் மூலமான ஸ்ரீக்ர்தம் என்கையிலே கிடத்தல் செய்யிலன்றே நான்போகவிடுவது. உன்னுலே பெற்றநான் என்னுலே இழப்பேனே, பேறு உன்னுலே, இழவு இவனுலே; அவன்பெறுகைக்கு க்ஷிபண்ணும். இவனுடைய அநுமதி பேற்றுக்கு ஹேதுவல்லாதாற்போலே அவனுடைய அநுமதியும் இழவுக்கு ஹேதுவன்று. போகவிடுவதுண்டே. "இனிநான் போகலொட்டேன்" என்று-போக்குமுண்டாய், "ஓட்டேன்" என்கையன்றிக்கே, போகவென்று ஒரு பொருளுண்டோவென்கிறார். உண்டே. உனக்குத்தெரியாதோ போகைக்கு ஹேது உண்டாகில் என்று அவனைக் கேட்கிறராகவுமாம். போகாதபடி பெற்றுத் தம்மிழவு தீர்ந்தமையை அருளிச்செய்கிறார். மக்களறுவரைக் கல்லிடைமோத இழந்தவள்

(க) "ஆஸ்தேகார்ப்பாஸபீஜவத்"

சிக்கன— சடக்கென [நின்றவனுய்
வந்து பிறந்து நின்றுய்— வந்தவதரித்து-
திருமாலிருஞ்சோலை- திருமாலிருஞ்சோலை
மலையிலெழுந்தருளியிருக்கிற
எந்தாய்— என் ஸ்வாமியானவனே!
சுழலை— சுழலாறுபோலே வளையவளைய
வருகிற
துக்கத்தை— துன்பத்தை
சூழ்ந்துகிடந்த— சுற்றிக்கொண்டிருக்கிற
வலையை— சரீரத்தை
அற பறித்து- ஸவாஸநமாகப் போக்கி
புக்கினில்- புகுமிடங்களிலெல்லாம்
புக்கு— புகுந்து
உன்னை— உன்னை
கண்டுகொண்டேன்- கண்ணுரக்கண்டேன்;
இனி— இனிமேல [வேணு?
போக விடுவது உண்டே - போகவொட்டு
போகவொட்டே னென்றபடி.

வ்யா. முதற்பாட்டு. துக்கச்சுழலையை. வ்யாதிகளுக்கெல்லாம் கொள்கலமான சரீரம். வ்யாதிகள்கிடப்பது சரீரத்தைப்பற்றியிறே. "நோயெலாம் பெய்தமேதாராக்கை" என்னக்கடவதிறே. சுழலாறுபோலே வளையவளைய வருகிறதுக்கத்தை. (க) "சூலெஸ் காவ்ராஸஜீ.ஸ்" "மொய்த்தவல்வினை" என்கிறபடியே இவனைச்சுற்றிக்கிடக்கிற துக்கங்களையென்னவுமாம். "தாயே-நோயே, தந்தையே- நோயே, தாமே- நோயே, தனியே- நோயே, மக்களே- நோயே" என்னக்கடவதிறே. சூழ்ந்துகிடந்தவலையை. துக்கத்தைத் தப்பவொண்ணுதபடி வீசிக்கிடக்கிற சரீரத்தை. "வலை" என்கிறது தப்பவொண்ணுமையைப்பற்ற. வலையாவது- கயிறுமணியுமாயிருப்பதொன்று; இதுவும் நசம்புமெலும்புமாயிருப்பதொன்று. அதவா, ஆத்மாவைச்சுற்றிக்கொண்டுகிடக்கிற அவித்யாகர்ம வாஸநாருசிகளென்னவுமாம். இவற்றை "வலை" என்கிறது- ஒன்றுக்கொன்று காரணமுமாய் கார்யமுமாயிருக்கையாலே. அறப்பறித்து. ருசிவாலனைகளோடேகூடப் போம்படிபண்ணி. புக்கினில் புக்குன்னைக் கண்டுகொண்டேன். புக்கவிடமெல்லாம் புக்கு உன்னைக் கண்டுகொண்டேன். அந்தர்யாமித்வம் பரத்வம் வ்யூஹம் விபவம் அர்ச்சாவதாரமளவாக. "அறப்பறித்து" என்று அநிஷ்ட நிவர்த்தியும், "கண்டுகொண்டேன்" என்று இஷ்டப்ராப்தியும் பண்ணித்தந்தோமாகில், இனிப்போய் வரவமையாதோவென்ன; இனிப்போகவிடுவதுண்டே. இனிப்போகவிடுவதுண்டோ. "அறப்பறித்து" என்றும் "கண்டுகொண்டேன்" என்றும் காம்செய்தாராகைக்கடி- பிதா தேடின அர்த்தத்தை "தன்னது" என்னும் புத்ரனைப்போலே, இனிப்போய் வரவமையாதோவென்ன; இனிப்போகவிவேதுண்டே. விரோதியிலே சிறிது கிடத்தல், காட்சியிலே சிறிதுகிடத்தல், இவையிரண்டுக்கும் மூலமான ஸ்வீகர்த்தம் என்கையிலே கிடத்தல் செய்யிலன்றே நான்போகவிடுவது. உன்னுலே பெற்றநான் என்னுலே இழப்பேனே, பேறு உன்னுலே, இழவு இவனுலே; அவன்பெறுகைக்கு க்ருஷிபண்ணும். இவனுடைய அநுமதி பேற்றுக்கு ஹேதுவல்லாதாற்போலே அவனுடைய அநுமதியும் இழவுக்கு ஹேதுவன்று. போகவிவேதுண்டே. "இனிநான் போகலொட்டேன்" என்று-போக்குமுண்டாய், "ஒட்டேன்" என்கையன்றிக்கே, போகவென்று ஒரு பொருளுண்டோவென்கிறார். உண்டே. உனக்குத்தரியாதோ போகைக்கு ஹேது உண்டாகில் என்று அவனைக் கேட்கிறராகவுமாம். போகாதபடி பெற்றுத் தம்மிழவு தீர்ந்தமையை அருளிச்செய்கிறார். மக்களாறுவரைக் கல்லிடைமோத இழந்தவள்

(க) "ஆஸ்தேகார்ப்பாஸபீஜவத்"

ன்வயிற்றிற் சிக்கனவந்து பிறந்து. இழந்தவளிழவு தீர்த்தாற்போலே என்னுடைய இழவு தீர்க்கவேணுமென்கிறார். தேவகிப்பிராட்டிக்கு அஷ்டமகர்ப்பமிறே கர்ஷணன். காலதாமிறே பாடே ஸம்பந்தமுடையராய், ஹிரண்யராக்ஷனாலே பாதாளத்திலே வர்த்திப்பார் ஆறு ராக்ஷஸரை யோகநித்ரையாலே ப்ரவேசிப்பிக்க, தேவகியார்வயிற்றிலே பிறந்த ஆறு ராக்ஷஸரை. கல்லிடைமோத. கம்ஸனாலே நிரஸிக்கப்பட, ஏழாம் கர்ப்பமான கம்பி மூக்தபி ரானே ரோஹிணியார் வயிற்றிலே அவதரிப்பித்து, தான் எட்டாம் கர்ப்பமாயிறே வந்தவ தரித்தது. இழந்தவள்தன்வயிற்றில். அவள் முன்பு இழந்த இழவுதீரவந்து சிக்கனவந்து பிறந்து நின்றுய் திருமாலிருஞ்சோலே யெந்தாய். அங்கு - ஆச்ரிதபாரதந்த்ர்யம்; இங்கு ஸ்வாமித்வம். தேவகிப்பிராட்டியார் வயிற்றில் க்ர்ஷ்ண னெழுந்தருளியிருந்த இருப்புப் போலேயிறே * பீடறைகோயிலில் அழகரெழுந்தருளியிருந்த விருப்பும் இவர்க்கு. ... ...க.

அ. இரண்டாம்பாட்டு. வஞ்சித்துவைத்தேதன். கீழிற்பாட்டிலே - உன் ஸ்வரூபம் பெறவேண்டி யிருந்தாயாகில் என்கார்யம் செய்யவேணுமென்றார்; இப்பாட்டில் - உன் ப்ர ணயித்வ குணம்பெறவேண்டி யிருந்தாயாகில் என்கார்யஞ் செய்யவேணுமென்கிறார். *

மூ.—வஞ்சித்துவைத்தேனினிப் போகலொட்டே னுன்றனிந்திரஞாலங்களா
லொளித்திடில் நின்றிருவாணைகண்டாய் நீயொருவர்க்குமெய்யனல்லே
அளித்தெங்குநாடு நகரமுந் தம்முடைத் தீவினைதீர்க்கலுற்றுத்
தெளித்துவலஞ்செய்யுந் தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய். உ.

பதவுரை.

நாடும்— அவிசேஷஜ்ஞரையும்
நகரமும்— விசேஷஜ்ஞரையும்
எங்கும்— உற்றாரையும் மற்றையானையும்
அளித்து— ரக்ஷித்து
தம்முடை— அவர்களுடைய
தீ வினை— க்ரூரமான பாபங்களை
தீர்க்கல் உற்று— தீர்க்கையில் ஒருப்பட்டி ருப்பதாய்
தெளித்து— தெளிவையடைத்தாய்
வலம் செய்யும்— ‡ பலத்தைக் கொடுக்கு மதான
தீர்த்தம் உடை— தீர்த்தத்தையுடைய
திருமாலிருஞ்சோலை எந்தாய்—;
வஞ்சித்து வைத்தேன்— உன்னைச் சூழ்த் துக் கொண்டேன்;
இனி— உன் ரஸமறிந்தபின்பு-
போகலொட்டேன்— (உன்னைப்) போக விடமாட்டேன்;
உன்தன்— உன்னுடைய [யாலே
இந்திரஞாலங்களால்— இந்த்ரஜாலஸித்தை
ஒளித்திடில்— உன்ஸ்வரூபத்தை மறைத் தாயாகில்
நின் திரு ஆணை கண்டாய்— உனக்கு சேஷ பூதையான பெரியபிராட்டி யாராணைகிடாய்;
நீ— (“நீர் வஞ்சிப்பது முதலியவை செ யக்கைக்கு ஹேதுவென்?” என்று கேட்கிற) நீ.
ஒருவர்க்கும்— ஒருவருக்கும்
மெய்யன் அல்லே— உண்மைபேசுமவனல்லே.

‡ ‘எல்லாரும் ப்ரதக்ஷிணம் பண்ணும் படியான’ என்றும் பொருள் பணிப்பர் சிலர்.

வ்யா. வளைத்துவைத்தேன். உதாரர்வாசலிலே தரித்ரருமாய்(க) அந்தருமாயிருப்பார், "பெற்றன்றிப்போகோம்" என்று கிடக்குமாபோலே, வளைத்துக்கிடக்கிறார். ஸ்ரீபரதாழ்வான் பர்ணசாலைவாசலிலே வளைத்துக்கிட்டானிறே. இனிப்போகலேர்ட்டேன். உன்சுவடறிந்தபின்பு போகவிடுவதேனை. உன்றனிந்திரஞாலங்களா லொளித்திடில். அதாவது பொய்யை மெய்யென்னும்படி ப்ரமிப்பிக்கை; அபோக்யங்களை போக்யமாக்குகை. (உ) "ஜ்ஜோயா ஜ்ஜ கு"பா." ஒளித்திடில். *அற்பசாரங்களவை சுவைத்தல் மறக்கப்பண்ணுகை. "அகற்ற நீவைத்த மாயவல்லிம்புலன்களாமவை" என்னக்கடவதிறே. அவைதான் *இன்னமுதென்னளிறே தோற்றுவது. அகற்றுகையாவது - பகவத்ஸம்பந்தத்தையுங் குலைத்து, கர்ப்பவாஸத்தையும் விளைத்திறே யிருப்பது. ஒளித்திடில். நீமறையநிற்கில். நின்றிருவாணைகண்டாய். உனக்கு அநந்யார்ஹசேஷபூதையுமாய் நிரதிசயபோக்யபூதையுமாயிருக்கிற பெரியபிராட்டியாணைகிடாய். ["மாயஞ்செய்மேல்" இத்யாதி.] நீர், வளைப்பது, திருவாணையிடுவது, "ஒளித்திடில்" என்பதாகிறதென் என்ன; நீ பொய்பலுகையாலே என்ன; நாம் ஆளவிலே பொய்செய்தோமென்ன; நீயொருவர்க்கும் மெய்யனல்லை. ["கருமலர்க் கூந்தல்" இத்யாதி.] அளித்திடாதி. அஜ்ஞரோடு விசேஷஜ்ஞரோடு அநுகூலரோடு ப்ரதிகூலரோடு வாசியற ரக்ஷித்து. தம்முடைத்தீவினை தீர்க்கவுற்று. தந்தாமாலே பண்ணப்பட்ட துஷ்கர்மங்களைப் போக்குகையிலே ஒருப்பட்டிருக்கிற தீர்த்தங்களை. தெளித்துவலஞ்செய்யும். அவ்கருக்குத் தீர்க்கவுற்ற தீர்த்தங்களை யுடைத்து உன்றிருமலை. அதிலே வர்த்திக்கிற நீ என்கார்யஞ்செய்யவேணுமென்கிறார். ... ... உ.

அ. மூன்றுப்பாட்டு. ஸ்வரூபம் பெறவேண்டி யிருந்தாயாகில் ரக்ஷியென்றார்-முதற்பாட்டில்; இரண்டாம்பாட்டில்- ப்ரணயித்வம்; இப்பாட்டில் உனக்கு தேஹோஹாநிவாராமல் ரக்ஷி யென்கிறார்.

மூ.—உனக்குப்பணிசெய்திருக்குந் தவமுடையேனினிப் போயொருவன்
றனக்குப்பணிந்து கடைத்தலைநிற்கை நின்சாயை யழிவுகண்டாய்
புனத்தினைக்கிள்ளிப் புதுவலிக்காட்டியுள் பொன்னடிவாழ்கவென்
றினக்குறவர் புதியதுண்ணுமெழின்மாலிருஞ் சோலையெந்தாய். ரு.

பதவுரை.

இனம் குறவர்— திரள்திரளாய்ச் சேர்ந்த குறவர்கள்
உன் பொன் அடி வாழ்க என்று— 'உன்பொன்னடி வாழ' என்று பல்லாண்டுபாடி
புனம்— புனத்திலுண்டான
தினை— (புதிய) தினைகளை
கிள்ளி— கிள்ளிக்கொணர்ந்து
புது அவி— புதிய ஹவிஸ்ஸை
கட்டி— அமுதுசெய்யப்பண்ணி
புதிய துண்ணும்— புதியதுண்கிற
எழில்— அழகையுடைத்தான மாலிருஞ்சோலை எந்தாய்!—;
உனக்கு— சேஷியான உனக்கு
பணிசெய்து— கைங்கர்யம் செய்து
இருக்கும்— ஸத்தைபெற்றிருக்குமவனுக்
தவம் உடையேன்— உன்திருவருள்பெற்ற வனுமான அடியேன்

(க) ஈயூ. (உ) "ம்மமாயாதுரத்யயா.

இனி— இனிமேல்
போய்— புறம்பேபோய்
ஒருவன் தனக்கு பணிந்து— ப்ரஹ்மாமுத
லானரில் ஒருவனைப்பணிந்து
கடைத்தலை— அவனுடைய கடைத்தலையிலே
நிற்கை— இருத்தல்
நின்— உன்னுடைய
சாயை— தேஜஸ்ஸுக்கு
அழிவு க்ண்டாய்— அழிவன்றே?.

வ்யா. உனக்குப் பணிசெய்திருக்கும் தவமுடையேன். முதலில் சேஷத்வஜ்ஞாநம் பிறந்து, பின்பு சேஷவ்ருத்தியிலே ஆசைபிறந்து, கைங்கர்யமே யாத்ரையாய், அது செய்யா தபோது ஸத்தைகுலையும்படியாயிருக்குமே; இவைநாலும் ஸம்ஸாரிகளுக்கில்லை. நமக்கு உபா யமநுஷ்டித்து உபேயத்தி லாசையுமேயுள்ளது. ஆழ்வார்களுக்கு இவை நாலுமுண்டு. தவமுடையேன். உன் ப்ரஸாத முடையேன். இனிப்போய். இந்நாலுதசையும் பிறந்த பின்பு இவற்றைப்போகட்டுப் புறம்பேபோய். போகையாவது- இந்த்ரஜாலங்கள் காட்டிப் புறம்பே தள்ளினபோதிலும். ஒருவன்றனக்குப்பணிந்து. ப்ரஹ்மாமுதலாக பிரீலிகாந்தமாக அதிக்ருதரிறே; அவர்களிலே ஒருத்தனுக்கு. கடைத்தலைநிற்கை. "உன்கடைத்தலையிரு ந்துவாழும்" என்கிறசையலே அங்கேகைங்கர்ய எனக்கு அவத்யமிறே. உன்சாயையழிவுக்கண் டாய். உனக்கு தேஜோஹாநியிறே. எனக்கு இது புதுமையன்று புனர்நவீகரணம். புனர் நில் புதுக்கினையைமுறித்து ஹவிஸ்ஸுக்காட்டிப் புதிய தாக்குதலைசெய்யப்பண்ணி. இப்படி அமுதுசெய்யப்பண்ணினால் வேண்டிக்கொள்ளும்படியேதன்னில்; உன்பொன்னடிவாழ்க வென்று. இந்தமேதசந்தான், "அமுதுசெய்திடப்பெறில் பின்னுமாளுஞ்செய்வன்" என் னும் தேசமிறே. இப்படி சொல்லுகிறாரென்னில்; இனக்குறவர். "புருஷர்களோடு ஸ்த் ரீகளோடு வ்ர்த்தர்களோடு வாசியற எல்லாரும் *பல்லாண்டொலி செல்லாநிற்கும். * குற மாதர்கள்பண்குறிஞ்சிப் பாவொலிபாடும் தேசமிறே. புதியதுண்ணும். பிதாவுக்குப்போ ருந்தும்நாள் பார்த்திறே புத்ரன்புதியதுண்பது. எழில்மாலிருஞ்சோலை. எழில் - அழகு. திவ்யதேசங்களுக்கு அழகாகிறது அநுப்பரயோஜநராய் அத்தலைக்கு மங்களாசாஸநம் பண் ணுமவர்கள் வர்த்திக்கை. எந்தாய். புத்ரஸம்பந்தமிருக்கிறபடி. ["ஒண்டொடியாள்" இத் யாதி.] "நின்னலா லறிகின்றிலேன்", "உனக்குப் பணிசெய்திருக்கும்." ... கூ.

அ. நான்காம்பாட்டு. காதம்பலவும். * இனிப்போ யொருவன்றனக்குப்பணிந்து நிற்கைக்கும் போகைக்கு மிடமுண்டோ உன்திருவடிகளை யொழிய வென்கிறார்.

மூ.—காதம்பலவுந் திரிந்துழன்றேற்கங்கோர் நிழலில்லைநீரு மில்லையுன்
பாதநீழலல்லான் மற்றேருயிர்ப்பிடகாணெங்குங் காண்கின்றிலேன்
தூதுசென்றுய் குருபாண்டவர்க்காயங்கோர் பொய்ச்சுற்றம் பேசிச்சென்ற
பேதைஞ்செய்தெந்தும் பிணம்படுத்தாய் திருமாலிருஞ்சோலை யெந்தாய். ச.

பதவுரை.

குரு— குருவம்சத்தில் பிறந்த
பாண்டவர்க்கா— பாண்டவர்களுக்காக
தூது சென்றாய் — தர்யோதநாதிகளிடத்
திலே தூதுபோன்வனாய்
அங்கு— அவர்களிடத்தில்
ஓர்— ஒரு
பொய் சுற்றம் பேசி சென்ற- } 'எனக்கு உங்களோடு பாண்டவர்களோடு வாசியில்லை' என்றுற்போலே பொய்யுறவு சொல்லி

பேதம் செய்நு-- ஆர்ரித சென்றும் அநாச்
ரிதர் என்றும் பேதத்தையுண்டாக்கி
எங்கும்— தூர்யோதநாதிகளி லொருவர்
தப்பாமல்
பிணைப் படுத்தாய்—பிணையாய்ப் பட்டினியும்
படி செய்தவனுய்
திருமாலிருஞ்சோலை எந்தாய்!—;
காதம் பலவும்— நெஞ்சுக்கும் கண்ணுக்கு
மெட்டின விடமெல்லாம்
உழன்று— வருந்தி
திரிந்தேற்கு— திரிந்த எனக்கு
அங்கு— அவ்விடத்தில் ஓரடிநிலத்துக்கு
ஓர் நிழல் இல்லை— ஒருநிழலில்லை;
(அன்றியும்)
நீரும்— தாபந்தீர்க்கும் தண்ணீரும்
இல்லை— கண்டதில்லை;
(ஆராய்ந்து பார்த்த விடத்தில்,)
உன் பாதம் நிழல் அல்லால்— உன் திருவடி
நிழ லொழிய
மற்று ஓர் உயிர்ப்பு இடம்— } மற்றொரு மூச்சு விடு மிடம்
நான் எங்கும் காண்கின்றிலேன்.

வ்யா. காதம்பலவுந் திரிந்துழன்றேற்கு. நெஞ்சுக்கும் கண்ணுக்குமெட்டின விடமெல்லாம் அலமர்ந்து திரிந்தவிடத்து. ஸம்ஸாரத்துக்குள், அலமாவாத இடமில்லை - படாத க்லேசமில்லை, அவ்விடத்தில் ஒருநிழலாதல், துளிநீராதல் கண்டிலேன். உண்டாகில் உள்ளது டாரிகாஜலமிறே. நிழலும், விஷவ்ருக்ஷநிழலிறே. உன்பாதமித்யாதி. "அவனடிநிழல்தடம்" என்னக்கடவதிறே. * வாஸுதேவ தருச்சாயையொழிய வேறுநிழலுண்டோ; மூச்சுவிடுகைக்கு ஓரிடங்காண்கிறிலேன் உன்திருவடிகளை யொழிய. தூதுசென்றுய்குருபாண்டவர்க்காய். திருவடிகளைப் பற்றினார்க்குக் கார்யஞ்செய்தபடி சொல்லுகிறது. குருவம்சத்தில் பிறந்த பாண்டவர்களுக்காகக் கார்யம் செய்தகில்லையோ. பொய்ச்சுற்றம். பொய்யுறவு சொல்லுகை. பேதஞ்செய்து. ஆர்ரிதரென்றும் அநாச்ரிதரென்றும் இரண்டிட்டு. "எங்களுக்குப்பிணங் காதொழியப்பெறில் ஒரூரமையும்" என்றவர்களை, "பத்தூர் பெறுது" என்னும்படி பண்ணி அவர்களுறவைக்குலைத்து * எல்லாச்சேனையு மிருநிலத்தவித்தவெந்தைவர்த்திக்கிற தேசம் திருமலை. ... ... ச

அ. ஐந்தாம்பாட்டு. காலுமெழா. திருவடிகளை யொழிய புகலில்லையென்றார் - கீழ்ப்பாட்டில்; இப்பாட்டில் - தாம்பெற்ற பேற்றை யருளிச்செய்கிறார். பெற்ற அம்சத்தில் க்ர்தஜ்ஞதை வேணுமிறே மேலும் கார்யம்செய்கைக்கு.

மூ.—காலுமெழாகண்ணநீருநில்லா வுடல்சோர்ந்து நடுங்கிக்குரல்
மேலுமெழாமயிர் கூச்சுமருவென தோள்களும் வீழ்வொழியா
மாலுகளாநிற்கு மென்மனமேயுன்னை வாழத்தலைப் பெய்திட்டேன்
சேலுகளாநிற்கு நீள்சுனைசூழ் திருமாலிருஞ் சோலையெந்தாய். நு.

பதவுரை.

சேல்— சேல் மத்ஸ்யங்கள் [துள்ள
உகளாநிற்கும்— துள்ளிவிளையாடா நின்ற
நீர்— பரப்பையுடைய
சுனை— சுனைகளாலே
சூழ்— சூழப்பட்ட
திருமாலிருஞ்சோலை எந்தாய்!—;
என— என்னுடைய
காலும்— கால்களும்
எழா— அடிபெயருகிறனவில்லை;
கண்ணநீரும்— கண்ணீரும்
நில்லா— இடைவிடாமல் பெருகாநின்றது;
உடல்— சரீரமானது

பேதம் செய்நு-- ஆர்ரித சென்றும் அநாச்
ரிதர் என்றும் பேதத்தையுண்டாக்கி
எங்கும்— தூர்யோதநாதிகளி லொருவர்
தப்பாமல்
பிணைப் படுத்தாய்—பிணையாய்ப் பட்டினியும்
படி செய்தவனுய்
திருமாலிருஞ்சோலை எந்தாய்!—;
காதம் பலவும்— நெஞ்சுக்கும் கண்ணுக்கு
மெட்டின விடமெல்லாம்
உழன்று— வருந்தி
திரிந்தேற்கு— திரிந்த எனக்கு
அங்கு— அவ்விடத்தில் ஓரடிநிலத்துக்கு
ஓர் நிழல் இல்லை— ஒருநிழலில்லை;
(அன்றியும்)
நீரும்— தாபந்தீர்க்கும் தண்ணீரும்
இல்லை— கண்டதில்லை;
(ஆராய்ந்து பார்த்த விடத்தில்,)
உன் பாதம் நிழல் அல்லால்— உன் திருவடி
நிழ லொழிய
மற்று ஓர் உயிர்ப்பு இடம்— } மற்றொரு மூச்சு விடு மிடம்
நான் எங்கும் காண்கின்றிலேன்.

வ்யா. காதம்பலவுந் திரிந்துழன்றேற்கு. நெஞ்சுக்கும் கண்ணுக்குமெட்டின விடமெல்லாம் அலமர்ந்து திரிந்தவிடத்து. ஸம்ஸாரத்துக்குள், அலமாவாத இடமில்லை - படாத க்லேசமில்லை, அவ்விடத்தில் ஒருநிழலாதல், துளிநீராதல் கண்டிலேன். உண்டாகில் உள்ளது டாரிகாஜலமிறே. நிழலும், விஷவ்ருக்ஷநிழலிறே. உன்பாதமித்யாதி. "அவனடிநிழல்தடம்" என்னக்கடவதிறே. * வாஸுதேவ தருச்சாயையொழிய வேறுநிழலுண்டோ; மூச்சுவிடுகைக்கு ஓரிடங்காண்கிறிலேன் உன்திருவடிகளை யொழிய. தூதுசென்றுய்குருபாண்டவர்க்காய். திருவடிகளைப் பற்றினார்க்குக் கார்யஞ்செய்தபடி சொல்லுகிறது. குருவம்சத்தில் பிறந்த பாண்டவர்களுக்காகக் கார்யம் செய்தகில்லையோ. பொய்ச்சுற்றம். பொய்யுறவு சொல்லுகை. பேதஞ்செய்து. ஆர்ரிதரென்றும் அநாச்ரிதரென்றும் இரண்டிட்டு. "எங்களுக்குப்பிணங் காதொழியப்பெறில் ஒரூரமையும்" என்றவர்களை, "பத்தூர் பெறுது" என்னும்படி பண்ணி அவர்களுறவைக்குலைத்து * எல்லாச்சேனையு மிருநிலத்தவித்தவெந்தைவர்த்திக்கிற தேசம் திருமலை. ... ... ச

அ. ஐந்தாம்பாட்டு. காலுமெழா. திருவடிகளை யொழிய புகலில்லையென்றார் - கீழ்ப்பாட்டில்; இப்பாட்டில் - தாம்பெற்ற பேற்றை யருளிச்செய்கிறார். பெற்ற அம்சத்தில் க்ர்தஜ்ஞதை வேணுமிறே மேலும் கார்யம்செய்கைக்கு.

மூ.—காலுமெழாகண்ணநீருநில்லா வுடல்சோர்ந்து நடுங்கிக்குரல்
மேலுமெழாமயிர் கூச்சுமருவென தோள்களும் வீழ்வொழியா
மாலுகளாநிற்கு மென்மனமேயுன்னை வாழத்தலைப் பெய்திட்டேன்
சேலுகளாநிற்கு நீள்சுனைசூழ் திருமாலிருஞ் சோலையெந்தாய். நு.

பதவுரை.

சேல்— சேல் மத்ஸ்யங்கள் [துள்ள
உகளாநிற்கும்— துள்ளிவிளையாடா நின்ற
நீர்— பரப்பையுடைய
சுனை— சுனைகளாலே
சூழ்— சூழப்பட்ட
திருமாலிருஞ்சோலை எந்தாய்!—;
என— என்னுடைய
காலும்— கால்களும்
எழா— அடிபெயருகிறனவில்லை;
கண்ணநீரும்— கண்ணீரும்
நில்லா— இடைவிடாமல் பெருகாநின்றது;
உடல்— சரீரமானது

சோர்ந்து— பரவசமாய்
நடுங்கி— தடுமாறி
குரலும்— மிடற்றொலியும்
மேல் எழா— மேல் எழுகிறதில்லை,
மயிர் கூச்சும்— மயிர் கூச்செறிதலும்
அறு— ஒழிகிறதில்லை;
தோள்களும்— தோள்களும்
வீழ்வு ஒழியா— நிர்விகாரமாயின,

என் மனம்— என் மநஸ்ஸானது
மால் உகளாநிற்கும்— (உன் உபகாரத்தை நினைத்துப்) பிச்சேறுகின்றது,
(இப்படியிருக்க,)
உன்னை— உன்னை
வாழ— அநுபவித்து வாழ்கைக்கு
தலைப்பெய்திட்டேன்- முடிசூடாநின்றேன்.

வ்யா. காலுமெழா. "காலாழும்" என்று- பரவசமானபடி. கண்ணீரும்நில்லா. "கண்சுழலும்" என்றபடி. உடல்சோர்ந்து. சரீரமானது பரவசமாய். நடுங்கி. தடுமாறி. குரல்மேலுமெழா. "நெஞ்சழியும்" என்கிறபடியே கூப்பிடுகைக்கும் கூசமமல்ல. மயிர் கூச்சுமறு.மயிர்க்குழிகளெறிந்து புளகித காத்ரமாயிருக்கும். எனதோள்களும் வீழ்வோழியா. நிர்விகாரமாய். மால்உகளாநிற்கு மென்மனமே. என்மநஸ்ஸானது உன்னுபகாரத்தை நினைத்து மேன்மேலும் பித்தேறுகின்றது; உன்னை யநுபவித்து வாழுகையிலே மூர்த்தாபிஷிக்தனானேன். இவர்க்கு வாழ்ச்சியாவது இவ்வவஸ்தைகள் பிறக்கை. * உன்தாளிணைக்கீழ் வாழ்ச்சியென்கிறதும் இத்தையிறே. சேலுகளாநிற்கும். சேல் உகளும்படி பரப்பையுடைத்தாயிருக்கும் தடாகங்கள் சூழப்பட்டிருக்கிற திருமலையிலே வர்த்திக்கிற. இத்தால் ஜலத்தைப்பிரிந்த மத்ஸ்யம்போலே உன்னைப்பிரிந்து ஆற்றமாட்டே னென்கிறார். ... நி

அ. ஆறும்பாட்டு. எருத்துக்கோடியுடையானும். கீழிற்பாட்டில் - * உன்பாத நிழலல்லால் மற்றோரிடம் மூச்சுவிட இல்லையென்றார்; ப்ரஹ்மருத்ராதிகளோ வென்ன; அவர்களுடைய அசக்திபைச் சொல்லுகிறார். அதவா, "உன்னைவாழத் தலைப்பெய்திட் டேன் - என்மனம் - மால் உகளாநிற்கும்" என்றார்; அது ஸம்ஸாரத்திலிருப்பிலே பிறந்த தொன்றுகையாலே அத்தையும் அநுசந்தைபண்ணி, அதுக்கு விரோதியான ஸம்ஸாரத்தை யறுத்து * உன்கடைத் தலையிருந்து வாழப் பண்ணவேணு மென்கிறாராகவுமாம்.

மூ.—எருத்துக்கோடி யுடையானும் பிரமனுமிந்திரனும் மற்று
மொருத்தருமிப் பிறவியென்னு நோய்க்குமருந்தறிவாருமில்லை
மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணா மறுபிறவிதவிரத்
திருத்தியுன்கோயிற் கடைப்புகப்பெய் திருமாலிருஞ் சோலையெந்தாய். சு.

பதவுரை.

திருமாலிருஞ்சோலை யெந்தாய்!—,
எருது கொடி உடையானும்— ரிஷபத்வஜனனான ருத்ரனும்
பிரமனும்— அவன் தந்தையானப்ரஹ்மாவும்
இந்திரனும்— இந்த்ரனும்
மற்றும் ஒருத்தரும்— மற்றுமொருவரும்
இ— இப்படிப்பட்ட
பிறவி என்னும் நோய்க்கு— ஜந்மமாகிற வ்யாதிக்கு
மருந்து— ஔஷதத்தை
அறிவார் இல்லை— அறிபவரில்லை, [நின்ற
மருத்துவன் ஆய் நின்ற— ஆசார்யனாய்
மா— சிறந்த
மணி வண்ணா— நீலமணிபோன்ற திருமேனியையுடையவனே!

மறு பிறவி— எனக்கு இனிவரும் ஜன்மத்தை
தவிர திருத்தி— நீக்கிவிட்டு
உன் கோயில்— உன் கோயிலினுடைய
கடை— கடைக்கதவிலே
புக— இருக்கி வாய்ப்படி
பெய்— ஆக்கியருளவேணும்.

வ்யா. எருத்துக்கொடி யுடையானும். அறிவுகேட்டுக்கு எல்லைநிலமான ரிஷபத்தைத் த்வஜமாகவுடையருத்ரனும். [காரணகருளக் கொடியாரென] ஸம்ஸார காரணமான அவித்யையைப் போக்குகையிலே கொடிகட்டினை யென்கையாலே, இவன்கொடிஜ்ஞாநஹீநமான கொடியாகையாலே - காமஸேதவதை யென்கிறது. பிரமனும். அவனுக்கும் பிதாவாய், " அமரர்க்குமறிவியந்து " என்கிறபடியே - ஜ்ஞாநமுடைய ப்ரஹ்மாவும். இந்திரனும். த்ரைலோக்யத்துக்கு ராஜாவான இந்த்ரனும். மற்றும். முழுகூழைக்களாக பாலித்திருக்கிற தேவஜாதியும். ஒருத்தரும். ஒருதேசதருநம், இஜ்ஜந்மமாகிற வ்யாதிக்கு ஔஷதமறிவாரில்லை. ஸம்ஸாரத்துக்கு மருந்தறியுமித்தனை. அத்தை வெளியிடுகைக்காகவாய்த்து - கைலாஸயாத்ரையிலே சண்டாகர்ணனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்து, ருத்ரன்பக்கலிலே பிள்ளைவண்டிச் சென்றது. யுகையாலே, ஸம்ஸாரவர்த்தகர். பின்னை * உருவுருவே கொடுத்தவனைப்போலே கொடுக்கப் பெற்றதில்லையே; அங்கநீகமாகவிறே கொடுத்தது. ஸம்ஸாரத்துக்கு மருந்தாவது - ஸர்வேச்வரனே உள்ளபடி அறிகையிறே. இவர்கள் அவனை அறிபார்களென்றபடி. * கடிக்கமலத் துள்ளிருந்தும் கண்ணனடிக் கமலந்தன்னைக் கண்டிலனென்றபடி.. * கார்கொறிந்த * நீறுடிகான்வளைக்கும் போளவிறே சொல்லுவது. மருத்துவனுய்நின்ற மாமணிவண்ணனே. மருந்தாயிருக்கை யன்றிக்கே மருந்து அறிவதுந்தெய்யும். இதுகான் * மலைமேல் மருந்தாய் ஏகமூலிகையுமாய் ஸர்த்தேஸவ்யஸ்தமாய், பலியாதமருந்து பலகால்சேளித்தாலும் பலியாதே. இவ்வௌஷதகந்தான் வேறொரு ஔஷதத்தைப் பொறுக்கவள்வன்றிக்கே, மீண்டு தன்னையும் பொறுது. " மருத்துவன் " என்று ஆசார்யன். " ஆய் " என்று ஏறிட்டுக்கொண்டானென்றது. ஆகையாலிறே * பீதகவாடைப் பிராட்டிப்போது இவரை * இராப்பகலோதவிடாதது. மாமணிவண்ணனே. மருந்திருக்கிறபடி.(க)" மணிமந்த்ரௌஷதபழி " என்னக்கடவதிறே. மணியும் மந்த்ரமும் ஔஷதமும் காட்டுக்கு வுவ்வேவறிறே. இங்கு, எல்லாம் ஒருதலைத்தவிஷயம். " அஷ்டாக்ஷரமாட்டங்திலைத்த மந்திரம் " என்று - நெஞ்சுக்கு இனியமந்த்ரமும் * மற்றவாத மந்த்ரமும் * வாழும் மந்த்ரமும் இதுவிறே. * அச்சுதனமலனிறே * நச்சுமாமருந்தம். நழுவவிடாதது மாய் ஹேயத்தைக் கழிக்குமதுவாய் ஆசைப்படும் மருந்திறே. " வைப்பாம்மருந்தாம் " என்று - இரண்டும் ஒன்றுனமருந்திறே. " மருந்தும்பொருளு மமுதமும்தானே " என்று- மூன்றும் ஒன்றுன மருந்திறே. [பொருள்] உபாயம். (உ) "ஸமஸ்தவஸ்துஹீநோபி ஸர்வதோபாவழி." [மருந்து] விரோதிநிவர்த்தகம். " பந்தம்றுப்பதோர்மருந்து " என்னக்கடவதிறே. என்றும் ஒன்றுனமருந்திறே. [நீர்மருந்தில்லா வைத்தியோய்க்கு ஆர்மருந்தாகுவார்] " மருந்து " என்று அஞ்சவேண்டாதபடி நீர்மருந்தான மருந்திறே. [தீர்க்கும்மருந்து] ஊருகிறபாம்புக்குத் தடையிடுமாபோலே, வருகிற நரகத்தைத் தீர்க்கும் மருந்து. " அற்றவர்கட் கருமருந்து " என்னக்கடவதிறே. ஆனை தன்பலமறியாதாப்போலே; " அருமருந்தாவதறியாய் " என்னக்கடவதிறே. ஆர்க்குமறிய வொண்ணாத

(க) " மணிமந்த்ரௌஷதம் " (உ) "ஸமஸ்தவஸ்துஹீநோபி- அம்ருதம் ப்ராப்யம்'

ப்ரமவ்யாதியு மகப்படத் தீருமென்னும்படி கைகண்டமருந்திறே. "போகமகிழ்ச்சிக்கு மருந்து" என்று - ஒருவிபூதியாகக் கொண்டாடும் மருந்திறே. மறுபிறவி தீர்க்கும்மருந்து. மருத்துவனைச்சொல்லி, மருந்துசெய்யுங் கார்யஞ் சொல்லுகிறதுமேல். வருகிற ஜந்மங்களைப் போக்கித் தவிர்க்கையாவது - வீடுறுக்கை. "மறுமைக்குமருந்தினை" என்று சொல்லக்கடவதிறே. "மன்மவைக்கத்திருத்தி" என்னுமாபோலே திருத்துகை உபாயக்கர்த்வம். உன்கோயில் கடைப்புகப்பெய். "கொடியணிநெடுமதில் கோபுரங்குறுகினர்" என்னக்கடவதிறே. * உன் கடைத்தலையிருந்து வாழ்மதுகாணையிறே ப்ரயோஜநம். "உன்கோயிலில்வாழும் வைட்டணவன்" என்னக்கடவதிறே. திருமாலிருஞ்சோலையெந்தாய். "மங்களவொட்டு" இத்யாதி. ... ... கூ.

அ. ஏழாம்பாட்டு. அக்கரை. ஜ்ஞாநத்தைப் பிறப்பித்தாற்போலே ப்ராப்திபையும் பண்ணித் தரவேணுமென்கிறார்.

மூ—அக்கரையென்னு மநத்தக்கடலுள்முழ்தீ யுன் பேரருளால்
இக்கரையேறி யிளைத்திருந்தேனை யஞ்சேலென்று கைகவியாய்
சக்கரமுந் தடக்கைகளுங் கண்களும் பீதகவாடையோடும்
செக்கர்நிறத்துச் சிவப்புடையாய் திருமாலிருஞ்சோலை யெந்தாய். எ.

பதவுரை.

சுக்கர்முமை— திருவாழியாழ்வானும்
தடம்— தடவிதான
கைகளும்— திருக்கைகளும்
கண்களும்— திருக்கண்களும்
பீதகம் ஆடையோடும்— திருப்பீதாம்பரத்தோடும்கூட
செக்கர் நிறத்து— செவ்வான நிறம்போன்ற
சிவப்பு உடையாய்— திருநிறத்தையுடைய
திருமாலிருஞ்சோலை எந்தாய்!—; [ஞய்
அநத்தம்— அர்த்தத்தை விளைக்குமதான
அக்கரை என்னும்— ஸம்ஸாரமாகிற
கடலுள்— ஸமுத்ரத்துக்குள்ளே
அழுந்தி— தறைப்பட்டு
உன்— உன்னுடைய
பேர் அருளால்— பரமக்ருபையினாலே
இக்கரை ஏறி— நித்யவிபூதியை நினைத்து
இளைத்து இருந்தேனை— இளைத்துக்கிடக்கிற என்னை
அஞ்சேல் என்று — 'பயப்படாதேகொள்' என்று
கைகவியாய்— அபயப்ரதாநம்பண்ணியருள வேணும்.

வ்யா. அக்கரை. ஸம்ஸாரத்திலே யிருக்கச்செய்தே ஜ்ஞாநம்பிறந்தபோது அது தூரமானபடி. விபீஷணனுக்கு அக்கரை இக்கரை யாய்த்திறே. ஸம்ஸாரம் அர்த்தமென்னும் ப்ரஸித்தி. (க) "விஷயாக்ராஹகவெகவாழி" அழுந்தி. தறைப்பட்டு. (உ) "ஹ்ருஷீகவாண ழிவொடொ - வதிதழி". உன்பேரருளால். * விஷ்ணுபோதமிறே. இரண்டு கரையு மொத்திருக்கும். இக்கரை. என்றது - தமக்கணித்தானபடி. இளைத்திருந்தேனை. மரஸோபவாஸி சோற்றை விரும்புமாபோலே, ப்ராப்தி கிடையாதவிளைப்பு. சேஷத்வ ஜ்ஞாநம் பிறந்தால் சேஷிசெய்தபடி கண்டிருந்க வொட்டாதே பதறப்பண்ணுகிறது. தான

(க) "விஷயாக்ராந்தசேதஸாம்" (உ) "பீமபவார்ணவோதரே- பதிதம்"

டியாக பகவத்ஜ்ஞாநம் பிறந்த்தாகிலிறே ஆறியிருக்கலாவது. ஜ்ஞாநலாபத்தைப் பண்ணித் தந்தாற்போலே ப்ராப்தியையும் பண்ணித் தரவேணுமென்கிறார். உபாயத்துக்கு (க) "ஸாஸ்த்ரஸ்ய" என்றுப்போலே, உபேயத்துக்கும் (க) "ஸாஸ்த்ரஸ்ய" என்ன வேணும் ஸம்ஸாரமாகிற கடலிலே விழுந்தாரை யெடுப்பது- திவ்யாயுதங்களாலும் வடிவழகாலுமிறே [" ஆவாராத்துணை " இத்யாதி.] " அங்கைத்தலத்திடை யாழிகொண்டான். " வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியிறே திருக்கையிலழகு; அதிலே ஆழ்வார்களுமாலே சொல்லவேண்டாவிறே. " அஞ்சுடராழியுன் கையகத்தேந்துமழகா " என்னக்கடவதிறே. க்ர்பைக்கு நிரூபகமான திருக்கண்களும், பெருக்காற்றிலே தெப்பத்தைப்பறிப்பாரைப் போலே அநுபவபரிகரமான நெஞ்சைப் பறித்துக்கொள்ளுந் திருப்பீதாம்பரமும்; " அரைச் சிவந்தவாடை ". சேக்கர்நிறத்துச் சிவப்புடையாய். திருவாழியில் சிவப்பும், திருமேனியில் நிறமும், கை வாய் கண் அவயவங்களில் சிவப்பும், *ஸந்த்யாராகரஞ்ஜிதமான ஆகாசம் போலே திருநிறத்தை யுடையையாய்க்கொண்டு திருமலையிலே நிற்கிறவேற்றம். " முடிச் சோதி " " கலந்துமணியிமைக்குங்கண்ணு. " திருமாலிருஞ்சோலை. அழகருடைய வடிவழகுக்கு ப்ரகாசகமான திருமலை. எந்தாய். விரோதியில் அருசியும், உபாயமும், ஜ்ஞாநமும், ப்ராப்தியில் ஆர்த்தியும், ப்ராப்யத்தில் போக்யதையும் த்வரையும் விளைப்பித்தவனே. ...எ.

அ. எட்டாம்பாட்டு. எத்தனை. * அநத்தக்கடலு ளழுந்திக்கிடந்த காலத்தின் பெருமையைச் சொல்லுகிறார். கடந்தகாலத்துக் கொரு முடிவுண்டோவென்கை.

மூ—எத்தனைகாலமு மெத்தனையூழியு மின்றெறு நாளையென்றே
யித்தனைகாலமும் போய்க்கிறிபட்டே னினியுன்னைப் போகலொட்டேன்
மைத்துனன்மார்களை வாழ்வித்துமாற்றலர் நூற்றுவரைக் கெடுத்தாய்
சித்தநின்பால தறிதியன்றே திருமாலிருஞ்சோலை யெந்தாய். அ.

பதவுரை.

திருமாலிருஞ்சோலை எந்தாய்!—;
இன்றெறு நாளை என்று— இன்றென்றும் நாளைடுயென்றும் நேற்றென்றும் கழிந்தகாலம்
எத்தனை காலம்— எவ்வளவு காலமோ,
எத்தனை ஊழியும்— எத்தனை மஹாப்ரளயங்களோ,
இத்தனை காலமும்— திநமாயும்பக்ஷமாயும் மாஸமாயும் ஸம்வத்ஸரமாயு முள்ள கல்பகாலமெல்லாம்
போய் நிறபட்டேன்— தப்பவொண்ணாத (ஸம்ஸார) யந்த்ரத்திலேபோய் அகப்பட்டேன்;
இனி— இது உன்மாயமென்றறிந்தபின்பு
உன்னை— ஸர்வரக்ஷகனான உன்னை
போகலொட்டேன்— போகவிடமாட்டேன்;
மைத்துனன்மார்களை— மைத்துனன்மாரான பாண்டவர்களை
வாழ்வித்து— அரசாள்வைத்து
மாற்றலர் நூற்றுவரை— அவர்களுக்கு சத்ருக்களான துர்யோதநாதிகளை
கெடுத்தாய்— அழியச் செய்தவனே
சித்தம்— என்மநஸ்ஸு [யிருப்பதை
நின்பாலது— உன்விஷயத்தில் ப்ரவணமாயிருப்பது
அறிதி அன்றே— அறிவாயன்றோ.

(க) "மாஸுசஃ"

வயா. எத்தனைகாலமுமித்யாதி. இன்றென்றும், நாளையென்றும், நேற்றென்றுமாய்க் கழிந்தகாலம், எத்தனைகாலமும், எத்தனையூழியும். இத்தனைகாலமும்போய். ஒருநாளாய், ஒருபக்ஷமாய், ஒருமாஸமாய், ஒருஸம்வத்ஸரமாய்; இப்படி கல்பம் கல்பமாகக் கழிந்ததுக் கொரு முடிவில்லை. போய். காலத்துக்கு முடிவில்லாதாப்போலே போனவிடத்துக்கும் முடிவில்லை. கிறிபட்டேன். கிறியாவது - விரகு. அதாவது - யந்த்ரம். ஸர்வபூதங்களும் ப்ரமிக்கும்படி ரூடமாயிருப்பதொரு யந்த்ரம். அஜ்ஞாநாவர்த்தமா பிருப்பதொன்று. பட்டேன். (க)" ஈஹஸ்தேந " என்னும்படி அகப்பட்டேன். நஷ்டனென்னவுமாம். [" தெரிந்துணர் வொன்றின்மையால் " " பழுதேபலபகலும் " இத்யாதி.] இனி. காரணகளேபரங்களைத் தந்து, அஜ்ஞாதஸம்ஸ்கர்த்தத்தைப் பிறப்பித்து, இதரவிஷயத்தில் ருசியைக் குலைப்பித்து, உன்பக்கலிலே ருசியைப் பிறப்பித்து, அபிமதமும் நீயே யென்னுமிடமும் பிறப்பித்தபின்பு. இனி. * நானேது முன்மாயமொன்றறியேன்; இது உன்மாயமென்றறிந்தபின்பு. உன்னை. ரக்ஷகனுமாய், உபாயபூதனுமாய், ப்ராப்யபூதனுமாயிருக்கிற வுன்னை. போகலோட்டேன். " பெற்றினிப் போக்குவனை வுன்னை " என்கிறபடியே - உபாயாந்தரத்திலே அந்வயமுண்டாதல், ப்ராப்யாந்தரத்திலே அந்வயமுண்டாதல், " இரண்டும் நீயானல் பெற்றபோது பெறுகிறேம் " என்றறி யிருத்தல் செய்யிலிறே உன்னைப் போகலம்வதிப்பது.

இப்படிப்போகவொட்டே னென்கிறது என்கொண்டென்ன; மைத்துனன்மாரித்யாதி. நீ ஆச்ரிதஸம்ச்லேஷைக ஸ்வபாவனுகையாலே என்கிறார். மாற்றலர். சத்ருக்கள். (உ) " ஹிஷ்டஹஸ்ய " (ரு) " ஹம்ஸ்ரீகிஹொஜ்யாநுஹாநி. " கெடுத்தாய். " கொத்துத்தவன் குடிகெடத்தோன்றிய, (ச) " ஸிஷ்ய ஹ்ஸ்தஹம்ஸாயிசாங்கம் ப்ரவஹ்ய " என்று அவன்றனுஞ் சொல்லி, (ரு) " யஜ்ஜிம்வாஸிம்மஹ்யம் ஸ்ஹ்ருத்தேஷ்டம் " என்று தாமும் சொல்லும்படிகாணென்று. * தாழ்ந்த தநஞ்சயனைப்போலே உமக்கு நம்பக்கலிலே அந்தரங்கமாகவொன்றுண்டோ வென்ன; சித்தம்நின்பாலது. அவனைப்போலேயோ நான்? அவன், கை நோத்து, ஒக்கவுண்டு, ஒருபடுக்கையிலே கிடந்து கைகழன்றுபோனான்; நான், என் நெஞ்சுக்கு ஒத்துக் கலந்துண்ணுதல், (கூ) " லொஹ்ஹ்ரதே " என்று ஒக்கவுண்ணுதல், உனக்குப் பூவிடுதல், முடித்தபூவை முடித்தல், முடித்துக்கொடுத்தல், பல்லாண்டிசைத்தல், அடிகொட்டுதல், மாறியிட்ட அடிக்குத்தோற்று எழுதிக்கொடுத்தல் செய்யும்படி உன்பக்கலிலே ப்ரவண சித்தனன்றே?. மைத்துனன்மாரென்றது- தோற்புரையிலே ஒருஸம்பந்தமன்றே உள்ளது. " திருமாலே நானுமுனக்குப் பழவடியேன் " என்று - * ஒழிக்கவொழியாத்படி மஜ்ஜாவிலே தட்டினவுறவன்றே விது. நீ சொன்ன மெய்ம்மைப் பெருவார்த்தை கேட்டும் கேளாதானுய்ப்போனனவன், கேட்டு விச்வஸித்திருந்தேன் நானன்றே? என்ன; உம்முடைய விச்வாஸத்தை நாமறியும்படியென்? என்ன அறிதியன்றே. ஸர்வஜ்ஞனை நீதானேயறியாயோ. * விட்டுசித்தன் மனத்தே கோயில்கொண்ட கோவலனை உன்க்குத்தெரியாதோ. [விட்டுசித்தன்மனம்] உன்னுடைய வ்யாப்தி, விபூதியளவிலே; என்னுடைய மநோ

(க) " அஸங்கேந " (உ) " த்விஷதங்கம் " (ரு) " ஸம்ப்ரீதிபோஜ்யாந்யந்நாநி " (ச) " " சிஷ்யஸ்தேஹம் சாதிமாம்த்வாம் ப்ரபந்நம் " (ரு) " யஜிமம்பரமம் குஹ்யம்மத்பக்தேஷு " (கூ) " லொஹ்ஹ்ருதே "

வ்பாப்தி, உன் ஸ்வரூபரூபகுண விபூதிகளிலே. [அரவத்தமளி.] இவ்வளவும் பண்ணின ஸுகர்த்தம், மேலும் உமக்கு எல்லாம் பண்ணித்தர்ராதோ ? என்ன; அந்த ஸுகர்தமும் நீ யென்கிறார். திருமாலிருஞ்சோலையேந்தாய். ரக்ஷகாந்தரமும், உபாயாந்தரமும், உபேயாந்தர மும் என்நெஞ்சைவிட்டு, இவை மூன்றும் நீயே என்னுந் தெளிவைப்பிறப்பித்தது இந்நிலை யன்றே என்கிறார். எந்தாய். இவற்றுக்கடியான பந்தமிருக்கிறபடி. [''சதிரிளமடவார்'' இத்யாதி.] திருமாலிருஞ்சோலையேந்தாய். '' வேற்பென்றிருஞ்சோலை '' இத்யாதி., ''திருமா லிருஞ்சோலை'' இத்யாதி. ... ... அ.

அ. ஒன்பதாம்பாட்டு. அன்றுவயிற்றில். '' எத்தனைகாலமும் எத்தனையூழியும் '' என்ற காலவிசேஷத்திலே ஈச்வரன் பண்ணிவைத்ததோர் காலத்தைச் சொல்லுகிறார்.

மூ.—அன்றுவ்யிற்றிற்கிடந்திருந்தே யடிமைசெய்யலுற்றிருப்பன்
இன்றுவந்திங்குன்னைக் கண்டுகொண்டே னினிப்போக விடுவதுண்டே
(கூ) சென்றங்குவாணனை யாயிரந்தோளுந் திருச்சக்கரமதனுல்
தென்றித் திசைதிசைவீழச்செற்றுய் திருமாலிருஞ் சோலையேந்தாய். கூ.

பதவுரை.

அங்கு— சோணிதபுரத்திலே
சென்று— எழுந்தருளி
வாணனை— பாணஸுரனை
ஆயிரம் தோளும்— ஆயிரந் தோள்களும்
திசை திசை— திக்குக்கள் தோறும்
தென்றி வீழ— சிதறிவிழும்படி
திரு சக்கரம் அதனுல்— திருவாழியாலே
செற்றாய்— நிரஸித்தவனாய்
திருமாலிருஞ்சோலை எந்தாய்!—;
வயிற்றில்— தாயார் கர்ப்பத்திலே
கிடந்திருந்து அன்று— கிடக்கிற அக்கால த்திலேயே
அடிமை செய்யல் — உனக்கு அடிமை செய்கையில்
உற்றிருப்பன் — ஒருப்பட்டிருப்பேன்; (அப்படியே,)
இன்று— இப்போது
இங்கு— இத்திருமலையிலே
வந்து— வந்து
உன்னை— ஸர்வஸுலபனனவுன்னை
கண்டு கொண்டேன்— கண்டு கொண்டேன்;
இனி போகவிடுவது உண்டே?.

வ்யா. அன்றுவயிற்றில். கர்ப்பத்திலே கிடக்கிற காலத்திலே, '' அடிமைசெய்கையே புருஷார்த்தம் '' என்று துணிந் திருப்பன். இன்றுவந்திங்குன்னைக் கண்டுகொண்டேன். அன்றுநான் ப்ரார்த்தித்தபடியே திருமலையிலேவந்து, என்விரோதியைப் போக்கி ஜ்ஞானத் தைப் பிறப்பித்த வுன்னைவந்து கண்டுகொண்டேன். [''புக்கினில் புக்கு.''] இனிப்போக விடுவதுண்டே. கர்ப்பத்திலே க்லேசப்படுகிறவன்று, அடிமையிலே உற்றிருந்த நான், அடிமை கொள்ளுகைக்கு ஸுலபனனவின்று போகவிடுவனே. ஸ்வஸ்வாதந்த்ர்யத்தையும், அந்யசேஷத்வத்தையுங் கழித்துக் கொண்டபடியை மூதலிக்கிறார். சென்றங்கித்யாதி. சோணிதபுரத்திலே, ஸ்ரீமத் த்வாரகையில் நின்றுஞ் சென்றுபுக்கு, வாணனுடைய புஜவ நத்தைத் திக்குக்கள் தோறும் விழும்படி யறுத்தாய்; அந்தச்ரமம் நீவந்து நிற்கிறவிடம் திருமலையாய்த்து. ... ... கூ.

அ. நிகமத்தில், இத்திருமொழியை அப்யஸித்தவர்கள் அவனுக்கு சேஷபூத ராவ ரென்கிறார்.

மூ.—சென்றுலகங் குடைந்தாடுஞ் சுனைத்திருமாலிருஞ் சோலைதன்னுள்
நின்றபிரானடி மேலடிமைத்திறம் நேர்பட விண்ணப்பஞ்செய்
பொன்றிகழ்மாடம் பொலிந்துதோன்றும் புதுவைக்கோன் விட்டுசித்தன்
ஒன்றிலே டொன்பதும் பாடவல்லா ருலகமளந்தான்றமர். ☆.

பதவுரை.

பொன்— பொன்னால் சமைக்கப்பட்டு
திகழ்— விளங்கா நின்றுள்ள
மாடம்— மாடங்களாலே [ற்றுகிற
பொலிந்து தோன்றும்— நிறைந்து தோ
புதுவை— ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு
கோன்— தலைவரான
விட்டுசித்தன்— பெரியாழ்வார்
உலகம்— உலகத்தார் எல்லாரும்
குடைந்து— ஆழ இழிந்து
ஆடும்— நீராடா நின்றுள்ள
சுனை— சுனைகளாலே சூழப்பட்ட
திருமாலிருஞ் சோலை தன்னுள் } தெற்குத் திருமலையிலே
நின்ற— எழுந்தருளியிருக்கிற
பிரான்— உபகாரகனுடைய
அடிமேல்— திருவடிகளிலே
அடிமைத்திறம்— அடிமை விஷயமாக
நேர்பட— அடைவுபட்டிருக்கும்படி
விண்ணப்பம்செய்— அருளிச்செய்த
ஒன்றிலேடு ஒன்பதும்— பத்துப்பாட்டிக் கூடியும்
பாடவல்லார்— பாடவல்லவர்கள்
உலகம்— மூன்று லோகங்களையும்
அளந்தான்— அளந்து கொண்டவனுக்கு
தமர்— அடியாராகப் பெறுவர்கள்.

வ்யா. சென்றுலகம் குடைந்தாடுஞ்சுனை. லோகத்தில் அஜ்ஞரோடு, விசேஷஜ்ஞரோடு, அநுகூலரோடு, ப்ரதிகூலரோடு வாசியறச்சென்று, ஆழ இழிந்து அவகாஹிக்குஞ் சுனைகளாலே சூழப்பட்ட திருமலையிலே ஸந்நிதிபண்ணின உபகாரகன். [மறுவில்வன் சுனை சூழ்மாலிருஞ்சோலை] ஸம்ஸாரிகள் மறுப்போலுல் தனக்குப் போய்த்ததாக நினைத்திருக்கையும், அபேக்ஷிதங்களைக் கொடுக்கையு முடைத்தான அவனைப் போலேயாய்த்து இச்சுனைகளும். நின்றபிரானடிமேல். அவன்றிருவடிகளிலே. அடிமைத்திறம். அடிமை விஷயமாக. இவருடைய தீர்த்தம் இவரிருந்த விடத்திலதவரும். [காலநன்ஞானத்துறை படிந்தாடி]* அப்பன்றிருவருளிறே முழுகுவது. இவர்க்குப் புறம்பு நிழலுமில்லை, நீருமில்லை. "அவனடிநிழற்றடம்" என்னக்கடவதிறே. அடிமைத்திறம். அடிமைவிஷயமாக. நேர்பட. வாய்க்க. விண்ணப்பஞ்செய். ஆழ்வாரருளிச்செய்த.

பொன்றிகழ்த்யாதி. பொன்னாலே திகழப்பட்ட மாடங்களாலே நிறைபட்டுத் தோற்றுகிற ஸ்ரீவில்லிபுத்தூர்க்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்த. "பொன்னுலகு" என்று சொல்லுகிற பரமபதம்போலேயிறே ஆழ்வாரெழுந் தருளியிருக்கிற தேசம். "வைகுந்தமாகுமதம்மூர்" என்னக்கடவதிறே. ஒன்றிலேடொன்பதும். "ஒளித்திடில் நின் திருவாணை" என்றதிதாடே மற்றை யொன்பதையும். இதான்றுமிறே ப்ரதாநம், மற்றையொன்பதும் ஈச்வரன் பெறுவாணையென்ன; அன்றென்று ஸாதித்தவையிறேயிவை. "சொல்லவல்லார்" என்கிற ஸ்தாநத்திலே, "பாடவல்லார்" என்கிறது.(க) "வாழ்மெய் யுயிர்ப்பு" பலம்-ஸ்வ ஸ்வாதந்த்ர்யமும், அந்யசேஷத்வமும் குலையுமென்கிறார். இவை

(க) "பாட்டேயிதுவேயசமதுரம்"

யிரண்டையுங் குலைத்த அபகாரமிதே நிருவுலகளந்தருளினவிடம். [“சதுமுகன்கையில்” இத்யாதி.] ஸ்வரூபஸாதக புருஷார்த்தங்கள் மூன்றும் இத்திருவடிகளிலே. [“உலகளந்த பொன்னடியே” என்றும், “விண்டண்ணளந்த - பொன்னங்கழல்” என்றும், “பொறி நின்ற பொன்னங்கழல்” இத்யாதி.]

“பொன்றிகழ்மாடம் பொலிந்து தோன்றும். புதுவைக்கோன் விட்டுசித்தன் - சென்றுலகங் குடைந்தாடுஞ் சுனைத்திருமாலிருஞ் சோலைதன்னுள்நின்ற பிரானடிமேலுடைமை த்திறம்தேர்ப்பட விண்ணப்பஞ்செய் - வன்றிமிறிடான்பதும் பாடவல்லாருலக மளந்தான்றமர்” என்றன்வயம். ... ... உ.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

அபவரவு.—துக்க வஹத் துனக்குக் காதம் காலும் எருத்
தக்கரை எத்தூ யன்று சென்று சென்னி.

ஆதிருமொழி-சஉ-க்கு, பாட்டு-சரு0.

ஐந்தாம்பத்து - நான்காந்திருமொழி - சென்னியோங்கு, ப்ரவேசம்.

அ. பரவ்யூஹவிபவாந்தர்யாமித்வார்ச்சாவதாரங்களானவிடங்களிலெழுந்தருளினின்றது- சேதநரைத் திருத்துகைக்கும், திருந்தினரை அடிமைகொள்ளுகைக்குமிறே; அதுபூர்ணமாகக் காணலாவது, திருமலையிலெழுந்தருளிநிற்கிற நிலையிலேயிறே. ப்ரதமஸுக்ருதமுமிவர்க்குத்தானேயிறே: “திருமாலிருஞ்சோலைமலையென்றேனென்னத் திருமால்வந்தென்நெஞ்சுநிறையப் புகுந்தான்” என்றாற்போலே;“வெற்பென்று வேங்கடம் பாடினேன் வீடாக்கி நிற்கின்றேன்” என்று இவர் அஹ்ர்தயமாகச்சொல்லிலும், “ஸஹ்ர்தயமாகவிவர்சொன்னர்” என்றிறே அவன் புகுந்தது. [“வெற்பென்றிருஞ்சோலை வேங்கடமென்றிவ்விரண்டும்” இத்யாதி.] ஆகையால், ஈச்வரன், ஸௌஹார்த்தம் முதலான ஆத்மகுணங்களோப் பிறப்பித்து ஆசார்யனோடே சேர்த்து விரோதியில் அருசியையும், ப்ராப்யத்தில் ருசியையும் பிறப்பித்துக் கார்யஞ்செய்யும்; ஆழ்வார்களுக்கு, ப்ரதமகாலத்திலே யிவை யித்தனையும் பிறப்பித்துக் கார்யஞ்செய்யும். இவர்கள் பின்பு இருக்கிறது பகவதிச்சையாலேயிறே. நமக்கு சரீராவஸாநத்திலே இவை யித்தனையும் பிறப்பித்துக் கார்யஞ்செய்யும்; எல்லார்க்கும், பிறக்கும் க்ரமமொழியப்பிறப்பியான். “ஊரவர்” இத்யாதி. [ஊரவர்] நித்யஸம்ஸாரிகள். [கவ்வையெருவிட்டு] அவர்கள் கவ்விமேல்விழுந்து அநுபவிக்கிற அநுபவமாகிற எருவையிட்டு, ஆசார்யோபதேசஜ்ஞாநமாகிற நீரைத்தேக்கி, ஸங்கமாகிற நெல்லை வித்தியிறே பிறப்பிப்பது. இப்படி திருந்தின விவரைக்கண்டு அவனுகக்க, அவனுகப்பைக் கண்டு இவருகக்க, “இவ்வுகப்புக்குமேல் இனிவேமெறுரு பேறுமில்லை” என்று இவரிருக்க, “இவர்கார்யத்திலே நாம் முதலடியிட்டிலோம்” என்று அவன் பதறுகிற பதற்றத்தைக் கண்டு, “விரோதிகளடையப்

போக்குதாகில், அபேக்ஷிதங்களில் பெறவேண்டு மம்சங்களடையப்பெற்றதாகில், இனி தெவ் பதறுகிறதென்?" என்று அவன் பதற்றத்தை அமைக்கிறார். ... ... *

மூ.—சென்னியோங்கு தண்டிருவேங்கடமுடையாயுலகு
தன்னைவாழநின்ற நம்பீ தாமோதரா சதிரா
என்னையு மென்னுடைமையையுமுன் சக்கரப்பொறி யொற்றிக்கொண்டு
நின்னருளேபுரிந்திருந்தேனினியென் திருக்குறிப்பே. க.

பதவுரை.

சென்னி— ஆகாசத்தளவு முயர்ந்திருக்கிற
தண்— குளிர்ந்திருந்துள்ள
திருவேங்கடம்— திருவேங்கட மலையை
உடையாய்— வாஸஸ்தானமாக வுடைய வனுய்
உலகுதன்னை— உலகத்தாரை
வாழநின்ற— வாழ்வித்தருளுகிற
நம்பீ— குணபூர்த்தியையுடையனுய்
தாமோதரா— யசோதைப் பிராட்டியால் கட்டுண்டவனுய்
சதிரா — ஆச்ரிதர் குற்றத்தைக் கண்ணிட்டுப்பாராத சதிரையுடையவனே!

என்னையும்— என் ஆத்மாவுக்கும்
என் உடைமையையும் — என் உடைமையான சரீரத்துக்கும்
உன்— உன்னுடைய
சக்கரப்பொறி ஒற்றிக்கொண்டு } திருவில்லச்சினையை இடுவித்து
நின்— உன்னுடைய
அருளே— க்ருபையையே [தேன்:
புரிந்து இருந்தேன் — விரும்பியிரா நின்
இனி— இப்படியான பின்பு
திருக்குறிப்பு— திருவுள்ளக்கருத்து
என்— எதுவாயிருந்தாலும்.

வ்யா. முதற்பாட்டு. சென்னியோங்கு. திருமலையில் கொடுமுடிகள் ஆகாசத்திலே மூட்டிநிற்கும். இத்தால்- உபயவிபூதிக்கும் முகங்காட்டுகைக்காக நிற்கிறநிலையிறே தோற்றுகிறது. உதயகிரியிலே ஆதித்யன் கிளம்பினால் எல்லார்க்கும் ப்ரகாசிக்குமாபோலே, திருமலையில் நிற்கிறநிலை உபயவிபூதியுங் கண்டு வாழுகைக்கிறே. "வேங்கடம் கோயில்கொண்டதனேடும்- அருக்கன்மேவி நிற்பார்க்கு" என்னக்கடவதிறே. "வானேர்க்கும் மண்ணேர்க்கும் வைப்பு." * மண்ணேர்க்கும் விண்ணேர்க்கும்- என்றும்- கண்ணுவான்- தன்னூர்வேங்கட விண்ணேர்வெற்பனிறே; அங்குள்ளார், திருமலையில் கொடுமுடியிலே வந்து இளைப்பாறுவர்கள்; இங்குள்ளார் * மொய்த்தசோலையிலும் மொய்பூந்தடந்தாழ்வரையிலும் இளைப்பாறுவர்கள். * பூவியல்பொழிலுந் தடமுமவன்கோயிலுங் கண்டிறே * உள்ளுளாவியுலர்ந்துலர்ந்து * ஆவியுள்குளிருவது. தண்திருவேங்கடம். தட்பத்தை யுடைத்தான வேங்கடம். "குளிரருவி வேங்கடம்." இருவர் விடாயையுந்தீர்க்கும். ரக்ஷகனுக்கு ரக்ஷ்யத்தைப் பெறுதவிடாயும், ரக்ஷ்யத்துக்கு ரக்ஷகனைப் பெறுதவிடாயும். *எந்நாளே நாம்மண்ணளந்த விணைத்தாமரைகள் காண்பதற்கு என்று சிலாதிகுணங்களை யநுபவிக்கப்பெறுத நித்யஸூரிகள் விடாயையுந் தீர்க்கும். திருவேங்கடமுடையாய். நிதியுடையாய். ஸ்ரீகௌஸ்துபமுடையாய் என்னுடாபோலே,

உலகுதன்னில்வாழநின்றநம்பீ. " அடிக்கீழ்மர்ந்து புரூந்தடியீர்வாழ்மி னென்றென்ற ருள்கொடுக்கும், " " கானமும் வாரும் வேடுமுடைவேங்கடம் " என்றபடி சேபலர்வரையும் வாழ்விக்கும்படி நம்பி. குணபூர்த்தி. ' நிகரில்புகழாய் ' என்று வாத்ஸல்யம்; 'உலகமுன்றுடையாய் ' என்று ஸ்வாமித்வம்; ' என்னையாள்வானே ' என்று ஸௌசீல்யம்; 'நிரவேங்கடத்தானே' என்று ஸௌலப்யம். இது இங்குள்ளார்க்கு முகங்கொடுத்தபடி. [நீசனேன் நிறைவொன்றுமிலேன்] நீசனேன்-அநாத்மகுணபரிபூர்ணன்; நிறைவொன்றுமிலேன் ஆத்மகுணகந்தரஹிதன். ' நிகரிலமரர் முனிக்கணங்கள் விரும்பும்' என்று அங்குள்ளார்க்கு முகங்கொடுத்தபடி. தாமோதரா. 'நர்பீ' என்று - பூர்த்திகிழ்; அக்குணங்களும் க்ரமம் சென்றபடி இந்தபூர்த்தி. வெண்ணெய் களவுகாண்கையாலே அபூர்த்தி; கட்டுண்கையாலே அசக்தி; தப்ப மீரகரியாமையாலே அஜ்ஞதை. சகிரா. ஆச்ரிததோஷங் காணுதசதிர். * தமக்கடிமைசெய்வார் தமோதரனுரிதே. "சூழ்ந்தடியார் வேண்டினக்கால்" இத்யாதி.

§ ... ...

என்னையு மென்னுடைமையையும். ஆத்மாவையும், சரீரத்தையுங் திருவிலக்கினேன் சாத்தி. ஆத்மாவுக்குச் சாத்தகையாவது - அநந்யார்ஹ சேஷத்வஜ்ஞானம் பிறப்பிக்கை; அதபிறந்தமை தோற்றவிதே தொளுக்குத் திருவிலச்சினையிடுவது. நின்னருளே. இவரடியாகிலிதே புதைத்துவார்ப்பது; அவனடியாக வரில் "விதிவாய்க்கின்று காப்பாரார்" என்னம்படியிதே பொருவது. புரிந்து. ["எத்தனையும் வான்மறந்த காலத்தும்" இத்யாதி.] இருந்தேன். உபாயாந்தரமும், உபேயாந்தரமுங் குலைகை, அநந்யார்ஹ சேஷத்வஜ்ஞானமும் பிறந்து, விரோதிநிவர்த்தியும்பிறந்து, அபேக்ஷிதமும் பெற்றதாகில் இளிப்பதறுதிறதென். இனியென் திருக்குறிப்பே. " என்கொலம்மான் திருவருள்கள். " திருக்குறிப்பு. திருவுள்ளத்தில் நினைவு. ... ... க.

அ. இரண்டாம்பாட்டு. பற்வை. பிரிற்பாட்டிலே, "இனியென் திருக்குறிப்பே" என்று எனக்குச் செய்யவேண்டுவதில்லான் செய்திருக்க, இளிப்பதறுதிற தென்னென்ன; நீர் எல்லாம் பெற்றீரோ, உம்மை நெடுநாள் பற்றிப்போந்த கர்மங்கிடந்தது. மேலில ப்ராப்திக்கடியான பரமபக்தி பிறந்ததில்லையே, அர்ச்சிராதிமூலமாக மேல்செய்யவேண்டும் அம்சங்கள் பிறந்ததில்லையே என்ன; தமக்கு இவையித்தனையும் பிறந்தபடியை யருளிச்செய்கிறார்.

மூ—பறவையேறு பரம்புருடாநீ யென்னைக்கைக்கொண்டபின்
பிறவியென்னுங் கடலும் வற்றிப்பெரும்பதமாகின்றதால்
464 இறவுசெய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்
அறிவையென்னு மமுதவாறு தலைப்பற்றிவாய்க்கொண்டதே. உ.

---

§ இவ்விடத்தில் " தன்னடியார் திறத்தகத்து " என்கிறபாசுரத்துக்குப் பூர்ணமான வ்யாக்யாநம் சில ஸ்ரீகோசங்களில் அச்சிடப்பட்டிருக்கிறது. சில ஸ்ரீதாளகோசங்களிலும் காண்கிறது. இந்தப்பாசுரம், நான்காம்பத்து, ஒன்பதாந்திருமொழியில் இரண்டாம் பாட்டாகையால் கீழே வ்யாக்யாநிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் ஆநுபூர்விக்கும் இவ்விடத்தில் ஆநுபூர்விக்கும் எள்ளத்தனையும் மாறுபாடின்றி யிருத்தலால், அதை மறுபடியு மிங்கு அச்சிடவில்லை. சில ஸ்ரீகோசங்களில் காணுமையும் இதற்கொரு காரணம்.

பதவுரை.

பறவை— பெரியதிருவடியை
ஏறு— (வாஹநமாகக் கொண்டு) ஏறுகின்ற
பரம்புருடா— புருஷோத்தமனே!
நீ— ஸர்வரக்ஷகனான நீ
என்னை— அநந்யகதியான என்னை
கைக்கொண்டபின்— அங்கீகரித்தபின்பு
பிறவி என்னும்— ஸம்ஸாரமாகிற
கடலும்— பெரியஸமுத்ரமும்
வற்றி— சோஷித்து [றது;
பெரும்பதம் ஆகின்றது— பெரியதரம் பெற்
இறவு செய்யும்— இவ்வாத்மாவை முடிக்கிற
பாவம் காடு— பாபஸமூஹமானது
தீக்கொளீஇ— கொருப்புப்பட்டு
வேகின்றது— வெந்திட்டது;
அறிவை என்னும்— ஜ்ஞாநமாகிற
அமுதம் ஆறு— அம்ருதநதியானது
வாய் பற்றி— வாயளவாய்
தலைக்கொண்டது— தலைக்குமேலே போ
கா நின்றது.

வ்யா. பறவையேறுபரம்புருடா. பெரியதிருவடியை வாஹநமாகவுடைய புருஷோத்தமனே; திருவேங்கடமுடையான் பெரியதிருவடிமேலே யெழுந்தருளிவந்து இவரை பரமபதத்துக்குக் கொடுபோகையிலே த்வரிக்கிறபடி. விரோதிநிவர்த்தியைப் பிறப்பித்ததும் திருவேங்கட முடையான் பெரியதிருவடி யின்மேலே வந்திறே. "நங்கள் வினையே" "இலங்கைப்பதி" "பாடுங்குயில்காள்." நீ. ஆச்ரித ஸம்ச்லேஷக ஸ்வபாவனான நீ. என்னை. "வீழிக்குங் கண்ணிலேன் நின்கண்மற்றல்லால்" என்றும், "உனக்குப் பணி செய்திருக்குந் தவமுடையேன்" என்றும், "அங்கோர் நிழலில்லை நீருமில்லை" என்றும் அநந்யகதியுமாய், அநந்யோபாயனுமாய், அநந்ய போகனுமான வென்னை. : னைக்கொண்ட பின். அங்கீகரித்த பின்பு. நானுன்னைப் பற்றும்போதிறே, * ஜந்மாந்தர ஸஹஸ்ரங்களிலே தபோஜ்ஞாந ஸமாதிரூபேண பிறப்பது; * நீ யென்னைக் கைக்கொண்டபின் எல்லாம் ஏக காலத்திலே பிறக்குமிறே. * அடியானிவனென் றெனக்காரருள் செய்யும் நெடியானை நிறைபுகழுந் நிறைப்புள்ளின் கொடியானிறே. * கைக்கொண்டபின் பிறந்த விசேஷஞ் சொல்லுகிறார்மேல் பிறவியென்னும் கடலும்வற்றி. ஸம்ஸாரமாகிற பெரியகடலும் சுவறி. பெரும்பதமாகின்றதால். பெரியதரம்பெற்றபடி. மேல்சாத்தும் பரியட்டமும்பெற்று, * திருப்பொலிந்த சேவடி யென் சென்னியின்மேல் பொறிக்கப்பெற்றுத் திருப்பல்லாண்டு பாடினபடி. ["உடுத்துக்களைந்த" இத்யாதி.] ஆகின்றதால். இது மேன்மேலென வள்ர்ந்து வருகிறபடி. ["எத்திறத்து மின்பம்," "எங்குந் திருவருள்பெற்று."] இழவுக்கு ஸம்ஸாரமும், அதுக்கடியான கர்மமும்போலே, மோக்ஷத்துக்கு ஜ்ஞாநமும் பக்தியும்.

"பிறவியென்னுங் கடலும்வற்றி" என்று - ஸம்ஸாரம்போனபடி சொன்னார்; இனி அதுக்கடியான கர்மம்போனபடி யருளிச்செய்கிறார் இறவுசெய்யுமித்யாதி. [இவ்வாத்மாவை முடிக்கிற கர்மஸந்தாநம் பெருநெருப்புக் கொளுந்தி வெந்திட்டதால். ஆழ்வாரும் ஈச்வரனும் ஸம்ச்லேஷித்த வளவிலே, அதுமதிவேண்டாதே :வெந்ததாய்த்து; காண்டாவநம் வெந்தாப்போலே. அறிவையித்யாதி. அமுதம் - ஜலம்; ஜ்ஞாநாம்ருதமாகிற ஆறுபெருகி, வாயளவாய்த் தலைக்குமேலே போகாநின்றது. "அதனில்பெரிய வென்னவா" என்றபடி. நீயென்னைக் கைக்கொண்டவென்றது - "என்தலைமிசையாய் வந்திட்டு" என்றபடி. அது கூலஜ்ஞாநமாகிற பெருக்காறு. தலைப்பற்றி. சேதநகதமாகவந்த ஜ்ஞாநமாகையிறே பின்பு வற்றிவருவது; ஸஹ்யம்பற்றி வருகிற ஆறிறே. திருமலையிறே ஸஹ்யம்; வர்ஷிக்கிறது

ஒருகாளமேக்மிறை. * கார்முகில்போலும் வேங்கடநல்வெற்பன் என்னுதமிறை. [“பற்பநாபன்” இத்யாதி.] வாய்க்கோண்டதே. எல்லாம் மேன்மேலே ஒருமுகமாய்ப் பெருக்கிடா நின்றது. ... ... உ.

அ. மூன்றும்பாட்டு. எம்மனு. கீழிற்பாட்டில், “ பிறவியென்னுங் கடலும்வற்றி ” என்றும், “ இறவுசெய்யும் பாவக்காடு நீக்கொளீஇ வேகின்றதால் ” என்றும் - உம்முடைய அபேக்ஷிதம் பெற்றீராகச் சொன்னீர், ஒருத்தனுக்குப் பேறுகிறது - தன்விரோதி போகையன்றிக்கே தன்னோடு ஸம்பந்தமுடையார்க்கும் விரோதி போகையாய்த்து; அப்படி நீர்பெற்றதுண்டோ? என்ன; என்னளவன்றிக்கே, என்லம்பந்திகளளவன்றிக்கே, அவர்கள் காட்டியுள்ளார் பாவமும் போய்த்தென்கிறார்.

மூ.—எம்மனுவென்குலதெய்வமே யென்னுடைநாயகனே
நின்னுளனுப் பெற்றநன்மை யிவ்வுலகினிலார் பெறுவார்
நம்மன்போலவீழ்த்தமுக்கு நாட்டுளபாவமெலாம்
சும்மெனுதே கைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே. கூ.

பதவுரை.

எம் ம(ன்)னு— எனக்கு மன்னனுனவனும்
என் குலம்— என் குடிக்கு
தெய்வமே— பரதேவதையானவனும்
என்னுடை நாயகனே— எனக்கு நாதனுனவனே!
நின் உளனுப் — உன் அபிமானத்திலே அந்தர்ப்பூதனும்
பெற்ற— நான் பெற்ற
நன்மை— பேற்றை
இ உலகினில்— இந்த ஸம்ஸாரத்தில்
ஆர் பெறுவார்— மற்று யார்தான் பெறுவர்கள்;
நம்மன் போல— பூதப்ரேதபிசாசங்கள் போலே
வீழ்த்து அமுக்கும் — தள்ளி அமுக்கா நின்றுள்ள
நாடு உள பாவம் எல்லாம்— உலகத்திலுள்ள பாவங்களெல்லாம்
சும் எனுது— மூச்சுவிடாமல்
கைவிட்டு— ஸவாஸநமாக விட்டு
ஓடி.— ஓடிச்சென்று
தூறுகள்— புதர்களிலே
பாய்ந்தன— பாய்ந்து போயின.

வ்யா. எம்மனு. “ எம் அனு ” என்று - தாயாரைச் சொன்னபடி. எனக்குத் தாய்போலே பரிவனுனவனே. என் அபிமதப்ரதனே. தாய்முலைப்பால்போலே, எனக்கு ஜ்ஞாநப்ரதனுனவனே. அன்றிக்கே, “ எம்மனு ” என்று - ராஜாவாய், ஈரசுதவிர்த்தவனே யென்றுமாம். என்ஸ்வாதந்த்ர்யத்தைக் குலைத்தவனே. :துராத்மாவான வெனக்கு சாஸ்தாவானவனே. (க)“ராஜாஸாஸ்தா துராத்மநாம்.” என்குலதெய்வமே. என்குலத்துக்கு பரதேவதையானவனே. இவர்குலத்தை யிட்டிறே இவரை விஷயீகரித்தது. “ ஏழாட்காலும்பழிப்பிலோம் நாங்கள் ” என்றிறே. “ குடிக்கிடந்தாக்களுஞ் செய்து ” என்னக்கடவதிறே. “ எந்தைதந்தை தந்தைதந்தை தம்மூத்தப்பன். ” என்னுடைநாயகனே. “ குலதெய்வமே ” என்கிற ஸம்பந்தத்துக்குமேலே இவர்க்கு அவனுல்வந்த தன்

(க) “ ராஜாஸாஸ்தா துராத்மநாம். ”

னேற்றம். அவர்களுக்கும் இவராலே பேறும்படியிறே இவர் திருந்தினபடி. ஆக, "'எம்மனை, என்குலதெய்வமே, என்னுடைநாயகனே' என்கிற இம்மூன்றுமும் - ஜ்ஞாநவிரோதியும், ஆச்ரயணவிரோதியும், போக்ஷவிரோதியும் போனபடி" என்று ஸ்ரீவசநபூஷணத்தில் சொல்லுகிறது. "தேஹாத்மாபிமாநமும், அந்யசேஷத்வமும், ஸ்வஸ்வாதந்த்ர்யமுங் கழிந்தபடி" என்று உடையவர். உபேயமும், உபாயமும், பரதேவதையும் என்றுமாம். நின்னுளேனுய். உன்னபிமாநத்திலே அந்தர்ப்பூதனுய். பெற்றநன்மை. பெற்ற ப்ரயோஜநம். இவ்வுலகினில். இஸ்ஸம்ஸாரத்தில். ஆர்பேறுவார். நித்யர்க்குங் கிடைக்குமோவிது. ["விண்ணுளார் பெருமான்" இத்யாதி.] அவன்றனக்கும் கிடைக்குமோ!.

நாட்மன்போல வீழ்த்தமுக்கும் நாட்ளோடாவமெலாம். இவனுக்குத் தோற்றுதபடிவந்து, இவனைப் போகவுந் திரியவு மொட்டாதபடி அமுக்கும் பூதப்ரேத பிசாசங்கள் போலேயாய்த்து கர்மங்கள் இவனை அபிபவிப்பது. * இன்னமுமிதனத்தோன்றி முடிக்கும் விஷயங்கள். இவை சில பாபவிசேஷங்கள், தோன்றுமல் வந்து விழவிட்டுப் பாரமேற்றினாற்போலே அமுக்குமாய்த்து. நாட்ளோபாவமெலாம். லோகத்திலுள்ள பாபங்களெல்லாம். சாஸ்த்ரங்களில் சொல்லுகிற பாபங்களெல்லாம். (க)"நநிந்திதகாகுத்ஸ்தலோகே" இத்யாதி. சும்மெனுதே. மூச்சுவிடாதே, போகத்தெடாங்கிற்று. "வஞ்சித்துத் தடுமாற்றற்ற." கைவிட்டு. சிறைவெட்டிவிட்ட தென்பான்ரப்போலே. ஓடி. "கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள் - உய்யப்போமின்" என்னவும் வேண்டிற்றில்லை; யுத்தத்திலே கெட்டவன் கொலைக்களஞ்சி ஓடுமாப்போலே. தூறுகள்பாய்ந்தனவே. "காணே வொருங்கிற்றும் கண்டிலமால்." "'தூறு' என்கிறது - ஸம்ஸாரிகளை" என்று திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்வர். * பாரிலோர்பற்றையிறே. தூறென்பது - செடியாய், ஸம்ஸாரத்தைச் சொல்லுகிறது. "முற்றவிம்மூவுலகும் பெருந்தூறுய்" என்னக்கடவதிறே. "கொடுவினைத்தூறு." கூ.

அ. நான்காம்பாட்டு. கடல். "இறவுசெய்யும் பாவக்காடு தீக்கொளீஇ வேகின்றதால்" என்று - தம்முடைய பாபம்போனபடி சொன்னர்; "நாட்டுள பாவமெலாம்" என்று - தாமிருந்த தேசத்திலுள்ளார் பாபங்களும் போனபடி சொன்னர். தமக்கு யமவச்யதையும் போனபடி சொன்னர். இதில் - தம்முடைய ஆஜ்ஞைநடக்குமிடமெல்லாம் யமவச்யதை புகுரப்பெறுதென்கிறர்.

மூ.—கடல்கடைந்தமுதங்கொண்டு கலசத்தைநிறைத்தாற்போல்
உடலுருகிவாய்திறந்து மடுத்துன்னை நிறைத்துக்கொண்டேன்
கொடுமைசெய்யுங் கூற்றமுமென் கோலாடிகுறுகப்பெறா
தடவரைத்தோட் சக்கரபாணீ சார்ங்கவிற்சேவகனே. சு.

பதவுரை.

தட வரை— பெரியமலைபோன்ற
தோள்— திருத்தோள்களையுடையனுய்
சக்கரபாணீ— திருவாழியாழ்வானைத் திருக்கையிலேயுடையனுய்
சார்ங்கம்— ஸ்ரீசார்ங்கமென்கிற
வில்— வில்லையுடையனுன
சேவகனே— சேவகனே!
கடல்— திருப்பாற்கடலை
கடைந்து—(மந்தரபர்வதத்தாலே) கடைந்து
அமுதம் கொண்டு— அம்ருதத்தை வாங்கி

(க) "நநிந்திதம் கர்மததஸ்திலோகே"

கலசத்தை— கலசத்திலே
நிறைத்தால்போல்— நிறைத்தாப்போலே
உடல் உருகி— உடல் உருகி
வாய்திறந்து— வாயைத்திறந்து
மடித்து— இரண்டு கையையும் மடித்து
உன்னை— நிரதிசயபோக்யனை உன்னை
நிறைத்துக்கொண்டேன்— தேக்கிக்கொண்
[டேன்,

(ஆனபின்பு,)
கொடுமை செய்யும்-கொடிதாக தண்டிக்கிற
கூற்றமும்— யமனும்
என்— என்னுடைய
கோல் ஆடி-செங்கோல்நடக்குமிடமெல்லாம்
குறுகப்பெறு— கிட்டப்பெறுன்.
[கிட்டமாட்டாதவன் என்றபடி.]

வ்யா. கடல்கடைந்தமுதங்கொண்டு கலசத்தைநிறைத்தாற்போல். மஹத்தானகடல் கூடியிதம்பண்ணி, அகில்ஸாரமான அம்ருதத்தைவாங்கிக் கலசத்திலே நிறைத்தாற் போலே. கடலினுடையஸ்தாநே ஸம்ஸாரம்; கலசத்தின்ஸ்தாநே சேதநன். " குடம்நிறைக்கும் " என்றும், " ஏற்றகலங்கள் " என்றும் சொல்லக்கடவதிறே. அம்ருதத்தின்ஸ்தாநே ஈச்வரன். அசேதநமான விதீதாடே சேதநரான தம்மை தர்ஷ்டாந்தமிடுவானென்னென்னில்; உபாயதசையில் அப்படியாய்க்கிடக்கவும், உபேயதசையில் * பலளவாய்காணவும் வல்லனாயிறே யிருப்பது. உபாயதசையில் பாரதந்த்ர்யமும், உபேயதசையில் ஜ்ஞாதர்த்வமும் வேணுமிறே.

உடலுருகிவாய்திறந்து மடித்துன்னைநிறைத்துக்கொண்டேன். " கலசம் "என்று அசித்ப்ராயமாகச் சொன்னார்- அங்கு; இங்கு சைதந்யகார்யஞ் சொல்லுகிறார். சைதந்யம் ஈச்வரன் செய்தவளவறிகைக்கும், நினைவறிந்து பரிமாறுகைக்குமிறே. சந்தந குஸுமாதிகள்போலே மிக்க அம்சம் கழிக்கவேணும். [" தனக்கேயாக. "] ஆத்மா பகவதநுபவாதிசயத்தாலே வெள்ளக்கேடாகர்தபடியிட்ட கரையிறே சரீரம். " நினைதொறுஞ் சொல்லுந்தொறும் நெஞ்சிடிந்துகும்" என்று அமூர்த்தமான நெஞ்சு உருகுகிறபடிகண்டால், இத்தனைதண்டையுடைய உடல் உருகச்சொல்லவேணுமோ. " ஆராவமுதே " இத்யாதி.

வாய்திறந்து. வாய்திறவாதே மௌநியாய் புஜிக்கும் அம்ருதமுமுண்டு போலே காணும். மடித்து. பெருவிடாய்ப்பட்டவன் இரண்டுகையையும் மடக்குமாய்த்து. உன்னை. நிரதிசயபோக்யனை உன்னை. நிறைத்துக்கொண்டேன். தேக்கிக்கொண்டேன். " கடிவார் தண்ணந்துழாய்க் கண்ணன்விண்ணவர் பெருமான் " இத்யாதி. " அடியேன் வாய்மடித்துப் பருகிக்களித்தேனே. " ஸர்வஜ்ஞனுய், ஸர்வசக்தியாயிருக்குமவனிறே கடல்கடைவான். " 'நெஞ்சிடிந்துகும்' என்று, நெஞ்சுமழிந்து, உடலுமுருகுமென்று- இட்டகரையுமழிந்து ஸ்வரூபமும் மளவுபட்டிருக்க, இவர் தேக்கிக்கொண்டபடி எங்ஙனே? " என்று ஜீயர் பட்டரைக் கேட்க, " 'கிட்டுசித்தன்மனம்' என்று அவ்வம்ருதம் வ்யாபித்தவிடமெல்லாம் திருவுள்ளம் வ்யாபிக்கும் " என்று அருளிச்செய்தார். அவன் கொடுத்தது ஸாமபக்தியிறே. " அறிவையென்னை மறுதலாய்" என்று பரமபக்தி பிறந்தபடி கொன்னார்; இங்கு, பிறப்பித்த க்ரமம் சொல்லுகிறார் - உன்னைநிறைத்துக்கொண்டேன் என்று.

கோமைசெய்யுங் கூற்றமும். உக்ரதண்டங்களை மாறுமே புஜிப்பிக்கும் யமனும். அக்நி ருத்ரன் யமன் என்னும் மூவரிலே ஸம்ஹாரகர்த்தாக்கள். (க)" ரு-த்ரோவாவை ஷ்ய ஹிம் " என்னக்கடவதிலே. யமனையொழிந்த மற்றை இருவர்க்கும் காதாசித்கமிலே ஹிம் ஸை; யமனுக்கு நித்யம். (உ) "பாதிக்கைக்கு சக்தனிவன்" என்றிலே இவனையிட்டது. *ஸை யத்தையும், மனிசரையும் பொய்யென்றிலே காலனையுமுடனே படைத்தது. வையமும் மனி சரும் பொய்யாகில் இவனே மெய்யனயிருக்கிறன் என்னில்; [உடனே படைத்தாய்] இவ ற்றுடனே அவனையும் நசிப்பிக்குமென்று தோற்றுகிறது. அவனைப்பிரயணம்படி பண் ணினற்று இவன் பாபவிசேஷமிலே. சிறைக்கூடத்திலே பிறந்து சாவாரைப்போலே, ஸ்ருஷ்டி தொடங்கி ஸம்ஹாரமறுதியாக நரகானுபவமிலே பண்ணுவது. என்கோலாடி குறுகப்பெறு. என்னுடைய ஆஜ்ஞை நடக்குமிடமெல்லாம் புகுரப்பெறுது. குறுகப்பெறு. புகுந்து போ கையன்றிக்கே, அருகும் வரப்பெறுது.

காதாசித்கமாகப் புகுந்ததாகில் செய்வதென்னென்ன; அது என்னையோ கேட்பது உன்கையிலே ஆயுதமிருக்க? தடவரையித்யாதி. தூரஸ்தரை மெட்டம்போலே யுருட்டும்; கிட் ட நின்றவர்களைக் கையில் திருவாழியாலே கொல்லும். ஆழ்வானையேயியும், அம்பையேயி யுமிலே முடிப்பது. தடவரைத்தோள். பெரிய மலைபோலேயுள்ள தோள். மலைபோலே பெரியதோளென்னவுமாம். தடம்- பெருமை. தடம்போலேயும், வரைபோலேயு மென்ன வுமாம். தடம்- ஸமுத்ரம். ... ... சு.

அ. ஐந்தாம்பாட்டு. பொன். மேழ- அம்ருதம்ருஷ்டாந்தமிட்டார்; இதிலே பொன் னை ருஷ்டாந்தமாக இடுகிறார். மீழிற்பாட்டிலே போக்யதை சொன்னார்; இதிலே பாவநத்வஞ் சொல்லுகிறார். " மடித்துன்னை நிறைக்குக்கொண்டேன் " என்று அதினுடைய ச்லாக்ய தையைச் சொல்லுகிறார். *அதிகோரப்பழமாய், அகாதமுமானகடலில் அம்ருதம்ருஷ்டாந்தமிட் டார். *வாக்குத்தாய்மையிற்படியே அயோக்யதாநுஸந்தானம்பண்ணி இவரகலப்புக; " காமி ருவரும் ஏகதத்வம் என்னும்படி கலந்தபின்பு அதுவென்? " என்று ஈச்வரன் ஸமாதானம் பண்ண; ஸமாஹிதராய், செய்த உபகாரத்துக்குத் தோற்று ஸ்தோத்ரூபத்தாலே ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகிறார்.

மூ.—பொன்னைக்கொண்டுரைகன்மீதே நிறமெழுவுரைத்தாற்போல்
உன்னைக்கொண்டென் னுவகம்பான் மாற்றின்றியுரைத்துக்கொண்டேன்
உன்னைக்கொண்டென்னுள்வைத்தே னென்னையு முன்னிலிட்டேன்
என்னப்பா வென்னிருடீகேசா வென்னுயிர் காவலனே. ரு.

பதவுரை.

என் அப்பா—எனக்குத் தந்தையானவனும்	காவலனே— அந்யசேஷமாகாதபடி காக்கு
என் இருடீகேசா—என் இந்த்ரியங்களை நிய	பொன்னை— ஸுவர்ணத்தை [மவனே!
மிக்குமவனும்	நிறம் எழு— நிறம் பர்க்க [கொண்டு
என் உயிர்— என்னுடைய ஆத்மாவை	உரைகல் மீது கொண்டு-உ உரைகல்லிலே

(க) " ருத்ரோவாவை ஷ்யதக்நிஷ் " (உ) வாயிக்கைக்கு.

உரைத்தால்போல்— உரைக்குமாபோலே
உன்னை கொண்டு— உன்னைக்கொண்டு
என் நா அகம்பால்—என் நாக்கினுள்ளே
மாற்று இன்றி— மாற்று அழியும்படி
உரைத்துக்கொண்டேன்—பேசிக்கொடுநின்
றேன்;
உன்னை தொண்டு—உன்னுடையஅங்கீகாரங்
கொண்டு
என் உள் வைத்தேன்— என்னுடைய அநு
பவத்துக்கு விஷயமாக்கினேன்
என்னையும்— என்னுடைய ஆத்மாவையும்
உன்னில்— உன் திருவடிகளில்
இட்டேன்— ஸமர்ப்பித்து விட்டேன்.

வ்யா. பொன்னித்யாதி. பொன்னை நிறம்பார்க்க உரைகல்லிலே உரைக்குமாபோலே. நிறமெழு. நிறமறிய. பொல்லாப்பொன்னை உரைகல்லிலேயுரைத்தபோதாக நல்லநிற முண்டாகிறதன்றே; உள்ளமாற்றிலே காட்டுவது. நல்லபொன்னையும் பொல்லாப் பொன்னையும் உரைகல்லிலே நிறப்பார்க்க வுரைக்கக்கடவதன்றே; அப்படியே. உன்னைக்கொண்டு. வேதங்களாகிற வுரைகல்லிலே யுரைத்தாலும் "நிறமுபர்சோலமும" என்கிறபடியே அவ்வருகான வுன்னை. என்நாவகம்பால். * அற்பசாரங்களிலே மூண்டினவென்நாக்கிலே. *அஸத்கீர்த்தந காந்தாரத்திலே புக்கு அலமரிந்தவென்நாக்கிலே. திருப்பல்லாண்டுதொடங்கி இவ்வளவும் வரக்கிஞ்ஞநுபவம் பண்ணினத்தையு மறிகிறிலர். பூர்வவர்த்தத்தைப்பார்த்து * வாடினேனென்வாடுதொடங்கி திருப்பதிகளிலே மண்டி அநுபவித்த திருமங்கையாழ்வாரும், *மாற்றமுளவிலே அஞ்சினரிதே. என்நாவகம்பால். என்நாக்குள்ளே. அகம்-உள். மாற்றின்றியுரைத்துக்கொண்டேன். மாற்றழியும்படி பேசிக்கொடு நின்றேன். நல்லபொன்னை நல்லகல்லிலே உரைத்தாலிதே அறியலாவது. நாமல்லாத கல்லிலே புனைப்பாரைப்போலே, உன்னை பென்நாக்காலே தூஷித்தேன். "பொன்" என்கிறது-ஈச்வரனை; "கல்" என்கிறது-நாக்கை. மாற்றின்றியுரைத்துக்கொண்டேன். ஒன்றுந் தப்பாதபடி சொன்னே னென்னவுமாம்.

உன்னையித்யாதி. வாரீர் ஆழ்வீர்! நீரிப்படி சொல்லக்கடவீரோ; * உம்மை இராப்பகலோதுவித்து, சொல்பயிற்றிப் பணிசெய்யும்படி பண்ணி, "வயிற்றில் தொழுவைப்பிரித்து" என்று - விரோதிகளையும் போக்கி, * சேருந்திருக்கோயிலாம்படி பண்ணி, *அரவிந்தப்பாவையுந் தானுமாய் * அரவத்தமளியுள்ளிட்ட அகம்படியோடே புகுந்த நம்மைக்கண்டு களித்துக் காப்பிட்டு, "உறகல்" என்று - நித்யரையும் அநிசங்கை பண்ணும்படியான ப்ரேமம் விளையும்படி பண்ணின நம்முன்பே க்ருதக்ருரைப்போலே சொல்லுவீரோ வென்ன; பயப்பட்டு உன்னைக்கொண் டேன்னுள்வைத்தேன் என்கிறார். உன்னைக்கொண்டு. நிரதிசய போக்யபூதனும், ஸ்ப்ருஹணீயனை வுன்னுடைய அங்கீகாரங்கொண்டு. என்னுள் வைத்தேன். "விட்டுசித்தன்மனத்தே கோயில்கொண்ட" என்னும்படி, என்னுடைய அநுபவத்துக்கு விஷயமாக்கினேன். என்னையும். நீ இப்படி மேல்விழுந்து ஆதரிக்கைக்கு யோக்யனை வென்னையும். உன்னிலிட்டேன். உன்திருவடிகளிலே ஆத்ம ஸமர்ப்பணம் பண்ணினேனென்று ஆத்மஸமர்ப்பணம் பண்ணுகிறார். (க) "நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவவாதிநஃ" என்று, அநுபவஜநிதப்ரீதி தலைமண்டையிட்டால் பண்ணுமதிதே. "உண்டுகளித்து" இத்யாதி.

(க) "நித்யாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா நம இத்யேவவாதிநஃ"

என்னப்பா, மாற்றின்றி - கலப்பின்றி, பொன்னே நிறமெழுதுருக்கி பரீக்ஷார்த்தமாக உரைகல்லிலே உரைக்குமாபோலே, மாற்றின்றி யுரைத்துக்கொண்டேன் - கலப்புப்படாதபடி யுருக்கி என் நாக்காகிற உரைகல்லிலே உரைத்துக்கொண்டேன். அவன் பண்ணினவுபகார பரம்பரைகளைச் சொல்லுகிறார் என்னப்பா. எனகது ஜ்ஞகளனவனே. என்னிருடீகேசா. என் இந்த்ரியங்களுக்கு நீயே விஷயபூதனனவனே. ['நாச்சு நின்னையல்லா லறியாது" என்றும், " கண்டுநாலுன்னையுகக்க ". என்றும், "வேறொருதெய்வம் மடனமனம்பற்றாது" என்றும், " மற்றிருபிப்பிடம் நானெங்குங் காண்கின்றிலேன்" என்றும், " உண்ணுநாள் பசியாவ தொன்றில்லை" என்றுமித்யாதி.] "இருடீகேசனெம்பிரான்" என்னக்கடவதிறே.

என்னுயிர் காவலனே. " மாலருளால் " என்று - மீண்டும் அவன் ப்ரஸாதத்தாலே தாமுளரான நம்மாழ்வாரைப்போலே, அயோக்யதாநுஸந்தாநத்தாலே அகன்று முடியாதபடி பண்ணினவனே என்கிறார். அங்ஙனன்றிக்கே, " கருவிருந்தநாள் முதலாக்காப்பு " என்கிறபடியே, யோக்யதையில்லாத காலத்திலும் ஸத்தையை நோக்கினவனே என்றுமாம்.

அதவா, பொன்னித்யாதி. நிறமுண்டான பொன்னே உரைகல்லிலே உரைத்தாற் போலே, " பொன்னிவர் " என்றும், " செம்பொனே திகழுந் திருமூர்த்தி " என்றும் சொல்லுகிற வுன்னை என்நாக்காலே உரைத்து, " மாற்றுமுரையுமுற்ற நல்லபொன்போலே நானுமானேன் " என்று ஸாம்யாபத்தியைச் சொல்லுகிறதென்றுஞ் சொல்லுவர்கள். ...ரு.

அ. ஆரும்பாட்டு. உன்னுடையவித்யாதி. கீழிற்பாட்டில் - " உன்னைக்கொண்டென்னுள் வைத்தேன் " என்றார் ; வைத்த ப்ரகாரம் சொல்லுகிறது - இப்பாட்டில்.

மூ.—உன்னுடைய விக்கிரமமொன் றெழியாமலெல்லாம்
என்னுடைய நெஞ்சகம்பால்சுவர்வழி யெழுதிக்கொண்டேன்
மன்னடங்கமழுவலங்கைக் கொண்டவிராமனம்பீ
யென்னிடைவந்தெம்பெருமா னினியெங்குப்போகின்றதே. சு.

பதவுரை.

உன்னுடைய— உன்னுடைய
விக்கிரமம்— திருவிளையாட்டுக்களில்
ஒன்று ஒழியாமல்— ஒன்றுதப்பாமல்
எல்லாம்— எல்லாவற்றையும்
சுவர்வழி—சுவரி லெழுதும் சித்ரம் கண்ணுக்குத் தோற்றுமாபோலே
என்னுடைய— என்னுடைய
நெஞ்சு அகம்பால்— நெஞ்சிலே
எழுதிக்கொண்டேன்— ப்ரகாசிக்கும்படி பண்ணிக்கொண்டேன்;
மன்—(துஷ்ட) க்ஷத்ரியர்கள்
அடங்க— இருந்த இடம்தெரியாதபடி அழிகைக்கீடாக
மழு— மழுவை
வல கை கொண்ட— வலதுகையில் தரித்த
இராமன்— பரசுராமாவதாரம் செய்தருளின
நம்பீ— குணபூர்த்தியையுடையனுய்
எம்பெருமான்-எனக்குஉபகாரகனனவனே!
என்னிடை—சேஷபூதனன என்னிடத்திலே
வந்து— எழுந்தருளி
இனி— இனிமேல்
எங்கு போகின்றது— எங்கேபோகப்புகுகிறாய்?.

வ்யா. உன்னித்யாதி. உன்னுடைய திவ்யாபதாகங்கள் ஒன்றொழிபாமலெல்லாவற்றையும், சுவரிலே சித்ரமழுதினால் அது கணணுக்குத் தோற்றுமாபோலே, என்னுடைய நெஞ்சிலே யிவையெல்லாம் ப்ரகாசிக்கும்படி பண்ணிக்கொண்டேன். உன்னுடைய ஸ்வரூபரூப குணங்களேயன்று, உன்னுடைய அபதாகங்களையிறே. "எல்லாம்" என்ன நிற்க, "ஒனம்ருழுப்பாஸ்" என்றது - வ்யாஸ வால்மீகிகளுக்கு ப்ரகாசியாதவையு மிவர்க்கு ப்ரகாசிக்கையாலே. "சிமாலிகன்," "ஸ்ரீகைமாமாலே." ப்ரகாசியாமைக்கடி ஸத்வதாரதம்யம்; அதுக்கடி - ப்ரஸாதகாரதம்யம். கர்மவச்யருமாய், அசக்த கேஷத்ரஜ்ஞருமான ப்ரஹ்மாதிகளுடைய ப்ரஸாதமிறே - அவர்களுக்கு; இவர்க்கு. * திருமாலால், * திருமாமகளால்; * பீதகவாடைப் பிராட்டியுடைய ப்ரஸாதத்தாலேயிறே. ஸர்வஜ்ஞனுங்கும் "உனக்கொன்றுணர்த்துவன் நான்" என்றும், "அவனெனக்கு நேரான்" என்றும், "என்மதிக்கு விண்ணெல்லா முண்டோ வீலே" என்றும் இவர்கள் சொல்லும்படியிறே ஸத்வ தேவதையான ஸ்ரீவேச்வரனுடைய ப்ரஸாதத்தாலே பெற்ற ஜ்ஞாநம்.

உன்னுடைய விக்கிரமமித்யாதி. "மல்லாண்ட திண்டோள் மணிவண்ணன்" என்று தொடங்கி இவ்வளவாக அநுபவித்த அபதாகங்களை அருளிச்செய்கிறார்; *தோளை வாயாலும் * குரலையாய்ச்சியரிலும் தன்னுடைய ப்ரணயித்வ குணத்தைக்காட்டி நம்மாழ்வாரையநுபவிப்பித்தாப்போலே. ரிஷிகளுக்குப்போலே புண்யமென்றொரு கையாலே புறைத்து விடுகிற ஜ்ஞாநமல்லாமையாலே இவர்க்கு முற்றாட்டாக்கிக் கொடுக்குமிறே. ஸகலார்த்தங்களும் பகவத் ப்ரேமமுடையார்க்கிறே ப்ரகாசிப்பது. ரிஷிகளைப்போலே கேவலஜ்ஞாநமேயன்றிக்கே ப்ரேம தசையிலேயிறே இவர்களிருப்பது. இதுதான் அவன்கொடுத்த ப்ரேமமிறே. மதியோபாதி நலத்தையுமருளினனிறே. முற்பட்ட ப்ரேமம் அவனது; இது கண்டுகொண்ட ப்ரேமம் இவரது. "கிடந்திருந்து நின்றளந்து" "ஆனைப்பன் மீளவேட்டனமுந் தானனன்" என்கிறபடியே, அவன் அவ்வபதாகங்களை ப்ரகாசிப்பிக்கைக்கடியென்னென்னில்; "என்னில்தானுயசங்கே" என்றருளிச் செய்தாரிறே.

மன்னடங்க. நம்முடைய அபதாகங்கள் இப்படிப்ரகாசித்தவளவில் உட்முடையவிரோதி செய்த தென்னென்ன; என்னளவன்றிக்கே * எங்கும் தன்னதுபிற்படியே முதலிருபத்தொரு படிகால், (க) "கூலம்விஷ்ணோரிஹ" (உ)* கூலம்வபி ராஜநீகூ;கா யோ விற்படியே ஆச்சுதென்கைக்கு தர்ஷ்டாந்தம் மன்னடங்க என்று. அஹங்காரக்ரஸ்தரான ராஜாக்களைநிரஸிக்கைக்கடியான வேஷத்தையும் ஆயுதத்தையும், அதுக்கடியான ஜ்ஞாநசக்த்யாதி குணங்களால்வந்த பரிபூர்த்தியையுமுடையவனே. மழுவலங்கைக்கொண்டு மழுப்பிடித்த பிடியிலே விரோதிகள் முடிந்தபடி; வ்யாபரிக்க வேண்டிற்றில்லை. ["வற்புடையவரை நெடுந்தோள்" இத்யாதி.] அநேகாயுததரராய்க்கொண்டு எதிர்ந்த அநேகராஜாக்களை ஓராயுதங் கொண்டிறே நிரஸித்தது.

என்னித்யாதி. என் சேஷத்வத்தையும், உன் சேஷித்வத்தையும் உதறிப்பண்டத்பின்பு உனக்குப்போக்கு இனியெவ்விடத்திலே?; என் ஸ்வயத்நத்தாலே வந்ததாகிலிறே உனக்குப் போகலாவது; உன்னருளாலே புகுந்த நீ போகக்கடவையோ. இராமன் நம்பி எங்குப்போகின்றதே. "மன்னஞ்ச வாயிரந்தோள் மழுவில் துணித்தமைந்தா, என்னெஞ்சத்துள்ளிருந்திங் கினிப்போய்ப் பிறரொருவர், வன்னெஞ்சம்புக்கிருக்க வொட்டேன்

(க) "குலம்விஷ்ணு பரிக்ரஹம்" (உ) "குலம்பவித்ரம் ஜகதீக்தார்த்தா"

வனைத்துலைத்தேன்" என்று - அவருமொருவர் வனைத்தாரிலேற. போலில் என்செய்வீ ரென்ன; இதிதேதனும் தன்னரசுநாடோ, பெண்ணரசுநாடோ. ["நன்னெஞ்சவன்னம் மன்னும்" இத்யாதி.] "மழுவினில் மன்னாருயிர் வவ்வியமைந்தனும் வாராலில்" என்று - * உன் வரவுபார்த்திருந்த நான் போக ஸம்வதிப்பனோ. "வென்றிநீள்மழுவா வியன்ஞாலமுன் படைத்தாய்," "வடிவாயமழுவேந்தியுலகமாண்டு" "இருநிலமன்னர் தம்மை யிருநாலிமட்டும் - மழுவாளில் வென்றதிறலோன் - பெருநிலமுண்டுமிழ்ந்த பெருவாயர்" என்று - யோக்யதையில்லாத காலத்திலே ஸ்ருஷ்டித்தும் ரக்ஷித்தும், ஆபத்தசை யிலே வயிற்றிலே வைத்துநோக்கியும் போருமவனல்லையோ நீ.

எம்பெருமான், உன் ஸ்வாமித்வத்துக்குப் போருமோ. இனி. உன் க்ரீடபரித்ராண திருப்பல்லாண்டு தொடங்கி இவ்வளவும் வந்தபின்பு போக்குவரத்துண்டாம்படியோ நாமிரு வருங் கலந்தபடி.. ["உன்னைக்கொண்டு டென்னுள் வைத்தேன்" இத்யாதி.] "கொண்ட காளுறி கோலக்கொடுமழு" என்று இடைபர்க்கும் மழுவாயுதம்; ஆயுதஸாம்யத்தாலே இவனையும் க்ருஷ்ணனுடைக்க அங்கீகரிக்கிறார். ["தெய்வவாய மறமன்னர்" இத்யாதி.] * திருக்குலத்தி லிறக்கிதார்க்கோ தர்ப்பநிவர்ணலாவது, எங்களுக்கு தர்ப்பநிவர்ணமா காதோ?

ஆக, இப்பாட்டால் அவன் வந்து புகுந்த ப்ரகாரத்தையும், அவன்போலே தாம் மூடியும்படியான அவஸ்தைபிறந்தபடியையும், அவனுக்குப் போக்கின்றிக்கே நிற்கிறதிலை யையும், நிர்ஹேதுகமாக விஷயீகரித்த ப்ரகாரத்தையும் சொல்லுகிறது. ... ...

அ. ஏழாம்பாட்டு. பருப்பதத்துக் கயல்பொறித்த. கிழிப்பாடடிலே. "என்நாவகம் பால் மாற்றின்றியுரைத்துக்கொண்டேன்" என்றது அவன் நிர்ஹேதுகக்ருபையாலே என்னு மிடத்தை இப்பாட்டிலே அருளிச்செய்கிறார்.

மு.—பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர்குலபதிபோல்
திருப்பொலிந்தசேவடியென் சென்னியின்மேற்பொறித்தாய்
மருப்பொசித்தாய் மல்லடர்த்தா யென்றென்றுன்வாசகமே
உருப்பொலிந்தநாவினேனை யுனக்குரித்தாக்கினையே. எ.

பதவுரை.

பருப்பதத்து— மஹாமேருவிலே
கயல்— தனதுமகரத்வஜத்தை
பொறித்த— நட்ட
பாண்டியர் குலபதி போல்— பாண்டயவம்
சத் காசனப்போலே
திரு பொலிந்த— அழகுவிஞ்சியிருப்பதாய்
சே— செவ்வித யிருந்துள்ள
அடி— திருவடிகளை
என் சென்னியின்மேல்—என்தலையின்மேலே
பொறித்தாய் என்று— அலங்கரித்தவனே!
என்னும்
மருப்பு ஒசித்தாய் என்று— குவலயாபீடத்
தின் கொம்பை முறித்தவனே! என்னும்
மல்— மல்லரை
அடர்த்தாய் என்று-நிரஸித்தவனே!என்னும்
உன் வாசகம்—உன்குணங்களுக்குவாசகமான
திருநாமங்களைச் சொல்லுகையாலே
உரு பொலிந்த— தழும்பேறின
நாவினேனை— நாக்கையுடைய என்னை
உனக்கு— உனக்கே
உரித்து ஆக்கினையே— உரியனாம்படி செய்
தாயே!— என்று ஈடுபடுகிறார்.

வ்யா. பருப்பதமித்யாதி. பாண்ட்யவம்சத்துக்கு நிர்வாஹகனாயிருப்பானொருராஜா தானிருந்த தேசத்தில்நின்றும் மஹாமேருவளவும் வழியிலுள்ள காடுசெய்த்து வன்னியமறுத்துத் தனக்குந் தன்பரிகரத்துக்கும் போகலாம்படி பெருவழிபாக்கிக்கொண்டுசென்று, மஹாமேருவில் தன்னைவெற்றியெல்லாந் தோற்றுமபடி தன்னடையாளத்தையுமிட்டுப் போந்தான். (க) "வாரமாவஸுதஶ்ரீமாந் இந்த்ரத்யும்நோ மஹாபல: தஸ்யபுத்ரோமஹாமேரு பாகோமலயாசலகேதுமாந் ஸர்விஜித்யந்ர்பாந் ஸர்வாந்மேரோர் தக்ஷிணபார்ச்வகாந் மேரௌ ஸ்வநாமநிற்நெளச்சலிதவாந்பஸ்தமஸ்" என்னக்கடவதிறே. அப்படியே, பரமபதம் கலவிருக்கையான ஈச்வரன் இங்குநின்று மிவர் பக்கலிலே வருமளவுமுண்டான * பாவக்காட்டையும் சீய்த்து இவர் வன்னியத்தையு மறுத்து இவர் * சென்னிக்நிடரிலே பாதவிலச்சினை வைத்தபடிக்கு த்ருஷ்டாந்தமாகிறது. இவர் வருதல் இருவரும் பாதிபாதி வழி வருதல் செய்கையன்றிக்கே, அவன்தானே வந்தானுப்பது. மலைக்குள்ளது விலக்காமையிறே. அப்படியே, வருவானும், வழியிலுள்ள விரோதிகளைப் போக்குவானும், தன்விஜயத்துக்கு அடையாளமிடுவானும் தானேயிறே. இவர்க்கும் ஏதங்களாயினவெல்லா மிறங்கலிடுவித்துப் பாதவிலச்சினை வைத்தான். தான் பரமபதத்தில் நின்று மிவர்பக்கல்வந்த ப்ரகார மிருக்கிறபடி. "விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன் - நீண்மதிளரங்கத்தம்மான் திருக்கமலபாதம்வந்தென் கண்ணினுள்ளன" என்னக்கடவதிறே.

திருப்பொலிந்தசேவடி. அழகு விஞ்சியிருப்பதாய் ருஜுவான திருவடிகள். ஆர்ஜவ குணமிருக்கிறபடி. இவன் செவ்வைக்கேடே தனக்குச் செவ்வையாகை. ஐச்வர்யஸ்ஹங்களை யுடைத்தான திருவடிகள். * கதாபுரஸில் சொல்லுகிறபடியே * பார்த்திவவ்யஞ்ஜநான்விதமான திருவடிகள். என்சென்னியின்மேல்பொறித்தாய். அநாதிகாலம் அப்ராப்தவிஷயங்களின் காற்கடையிலே துவண்டவென் தலையின்மேலே, "அமர்சென்னிப்பூ" என்றும் "வானவருச்சிவைத்த பெருமணி" என்றும் நித்யஸூரிகளுக்குத் தலையலங்காரமான பொன்னும் பூவுமான உன் திருவடிகளை என்தலையிலே அலங்கரித்தாய். ["நீள்கழல்சென்னிபொருமே"] பொருமே- பொருந்துமே; கொக்கிலாயும் பகைஞ்ஞியும்போலே. தன்வெற்றிக்கும் என்தோல்விக்கு மடையாளம்- ஸ்வாதந்த்ர்யம் போகையும், சேஷத்வம்பெறுகையும் இவர்க்குகப்பிறே; (உ) "ராஜந்" என்றது போகையும் சேஷத்வம் பெறுகையும் ஸ்ரீபரதாழ்வானுக்கு உகப்பிறே. இதுதான் தானுமவனு மறிந்தவளவுபோராது; "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று அவனும் தானுமறியில் ஸ்வரூபஹாநி யில்லையென்றிருக்கிலும் பிறர்சொல்லில் ஸ்வரூபஹாநியானாற்போலே, புறம்புள்ளாருமறிய சேஷபூதனாகவேணும். பெருமாளும், ஸ்ரீபரதாழ்வானைப்பார்த்து "நம்மை மீட்டுக்கொண்டு போகையிலும், உன்னை 'ஸ்வதந்த்ரன்' என்றவர்கள்முன்னே உன்பாரதந்த்ர்யத்தைப் பெற்றுப்போகப்பார்" என்று திருவடிநிலைகளைக் கொடுத்தாரிறே. "என்தலைமிசையாய்" என்கிறதசை. பொறித்தாய். கர்மபாரதந்த்ர்யத்தால் பொறித்த பொறிபோலன்றே ஈச்வர பாரதந்த்ர்யமாகப் பொறித்த பொறி.

(க) "புரூரவஸுதஶ்ரீமாந் இந்த்ரத்யும்நோ மஹாபல: । தஸ்யபுத்ரோமஹாபாகோமலயாசலகேதுமாந் ॥ ஸர்விஜித்யந்ர்பாந் ஸர்வாந்மேரோர் தக்ஷிணபார்ச்வகாந் । மேரௌ ஸ்வநாமநிற்நெளச்சலிதவாந்பஸ்தமஸ்" (உ) "ராஜந்"

மருப்பொசித்தாய். தோற்றுரிதே வென்றுரை ஸ்தோத்ரம் பண்ணுவார். "ஏத்துகின்றேம் நாத்தழும் பகிசாமன் திருநாமம" என்னக்கடவதிறே. இவரும் அவனுடைய வீரவாதங்களைச் சொல்லி, ஸ்தோத்ரம் பண்ணுகிறார். தானேசென்று விரோதிநிரஸநம் பண்ணினபடி. மருப்பொசித்தாய் மல்லடர்த்தா யென்றென்று, மருப்பொசித்தா யென்றும், மல்லடர்த்தா யென்றும், உன் குணங்களுக்கு வாசகமான திருநாமங்களைப் பலகால்சொல்லி. உருப்பொலிந்த நாவினேனே. செவ்வாய்க்கிழமையை "மங்களவாரம்" என்னுமாபோலே, விபரீத லக்ஷணை. இதர விஷயங்களிலேயிறே என்னுக்கு உருப்பொலிந்தது. உருப்பொலிதைதழும்பேறுகை. "நாத்தழும்பெழ நாரணவென்றழைத்து" என்னக்கடவதிறே. உனக்குத்தாக்கினேயே. இப்படிசெய்தாயே!; நான்சொன்னபடியாகவோ நீ விஷயீகரித்தது; அன்றிக்கே, நிர்ஹேதுகமாக விஷயீகரித்தாயென்கிறார். ... ... எ

அ. எட்டாம்பாட்டு. அனந்தன்பாலும். அதிவிஷதமாக்கி பரபக்தியளவாக இடையிலுள்ள ஆத்மகுணங்களைப் பிறப்பித்து, அநந்தரம் பரஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, விரோதியை அசல்பிளந்தெறிட்டு மாநஸ ஸம்ச்லேஷமாத்ர மன்றிக்கே பாஹ்யஸம்ச்லேஷமாம்படி பண்ணினனென்றார்-கீழ்; ஸத்தையே பிடித்து பகவதநுபவமே யாத்ரையாய்ப் போந்தவர்களன்றே என்றும், இவர் அநாதிகாலமே பிடித்து நித்யஸம்ஸாரியாய் இதர விஷயங்களோடே கலந்து பரிமாறிப் போந்தவரன்றே என்றும், அவர்களேற்றமும், இவர் தண்மையும் இவர் நெஞ்சில் படாதபடி அவன் அநுபவித்தபடியை அருளிச்செய்கிறார்-இப்பாட்டில்.

மூ.—அனந்தன்பாலுங் கருடன்பாலு மைதுநோய்தாகவைத்தென்
மனந்தனுள்ளே வந்துவைகி வாழச்செய்தா யெம்பிரான்
நினைந்தென்னுள்ளே நின்றுநெக்குக் கண்களசும்பொழுக
நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தே னேமிநெடியவனே. அ.

பதவுரை.

நேமி — திருவாழியையத் திருக்கையிலே யுடைய
நெடியவனே — ஸர்வாதிகனனவனுப்
எம்பிரான் — எனக்கு உபகாரகனனவனே!
அனந்தன்பாலும் — திருவனந்தாழ்வானி டத்திலும்
கருடன்பாலும் — பெரியதிருவடி யிடத் திலும்
ஐது நோய்தாகவைத்து — ஸ்நேஹத்தை அத்யல்பமாக வைத்து
என்மனம் தன் உள்ளே — என் மநஸ்ஸி னுள்ளே
வந்து — நிர்ஹேதுகமாய் வந்து
வைகி — பொருந்தி நின்று [னுய்;
வாழச் செய்தாய் — என்னை வாழ்வித்தருளி
(இப்படிப்பட்ட உன்னை,)
என் உள்ளே — என் மநஸ்ஸிலே
நினைந்து நின்று — நினைத்து நின்று
நெக்கு — நெஞ்சுநெகிலமாய்
கண்கள் — கண்களிலே
அசும்பு ஒழுக — அசறுபாயும்படி
நினைந்து இருந்தே — நீபண்ணின உபகார பரம்பரைகளை நினைத்துக்கொண்டிருந்தே
சிரமம் — என் இளைப்பெல்லாம்
தீர்ந்தேன் — தீரப்பெற்றேன்.

வ்யா. அனந்தனித்யா தி. த்ரிபாத்விபூதியிலுள்ளாரெல்லாரு மொத்திருக்கச்செய்தே இவர்களுக்கோரேற்றம் ஸர்வகாலமும் திருமேனியோடே ஸ்பர்சிக்கையும், தர்சநீயத்தினிமையாலே மோம்பழம்போலே முன்னே வைத்துக்கொண்டிருக்கையுமிறே; இப்படிக்கொத்த விவர்கள் பக்கலிலே ஸ்நேஹத்தை அத்யல்பமாக வைத்து. இவ்வளவுதான் வைக்கிறது- இவர்பக்கல் வரும்போதைக்கு * சென்றால் குடையாய், இருந்தால் சிங்காசனமாய், நின்றால் மரவடியாகைக்கும், மணிவிளக்காகைக்கும், பூம்பட்டாகைக்கும், * பொருசிறைப்புள்ளுவந்தேறி இவர்பக்கல் வரும்போதைக்கு வாஹநமாகைக்கும், சேரவிடுகைக்குப் பெரியபிராட்டியாரும் வேணுமிறே; அதுக்குறுப்பாக வாய்த்து அவர்களை விஷயீகரித்தது. இவர்களை விஷயீகரித்ததுதானிவர்க்குறுப்பானால் மற்றுள்ளாரைச் சொல்லவேண்டாவே.

என்மனந்தனுள்ளே. அநாதிகாலம் இதர விஷயத்திலே மண்டினவென்மநஸ்ஸிலே. வந்து. அதிஹ்ருதயமாகவந்து. வைகி. அவஸரித்து; பொருந்தி யென்னவுமாம். " வந்தா யென்மனைப்புகுந்தாய் மன்னிநின்றாய் " " போயறியாய் " என்றிறே ஈடுபடுவது. வாழ. " அனந்தன்பாலும் கருடன்பாலும் ஐதுகொய்தாகவைத்து " என்றது ப்ரதம விவாஹத்துக்குச் செங்கற் சீரைகட்டிக் கூப்பிடாமைக்குச் சோறு வைப்பாரைப்போலே; த்விதீயவிவாஹத்திலேயிறே போக்யமுள்ளது. வாழச்செய்தா யெம்பிரான். என்னுயன் செய்தபடியென்!. எம்பிரான். இவர் தண்மைபாராதே உபகரித்தவுபகார மிருக்கிறபடி. த்ரிபாத்விபூதியிலுள்ளாரெல்லாரோடும் பரிமாறும் பரிமாற்றமெல்லாம் இவரொருவரோடும் பரிமாறின உபகாரம். " கருளப்புட்கொடிச்சக்கரம்- அடிமைகொண்டாய் " என்று நித்யஸூரிகளைவிட்டு நித்யஸம்ஸாரிகளுக்குப் புறம்பான தம்மை அடிமைகொண்ட உபகாரம்.

நினைந்தென்னுள்ளே நின்று. இவர் ப்ராயச்சித்த குடிபோலே, அவர்களேற்றத்தையும், தம்முடைய தண்மையையும்; நினைத்துக் கூசாதபடி பண்ணினபடியும், இவர்கள் பக்கல் ஆதரம் குளப்படி யென்னும்படி தம்பக்கல் கடல்போலே அவன் பண்ணின ஆதராதிசயத்தையும், இவர் தண்மை பாராதே; இவர்நெஞ்சில் புகுந்தபடியையும் நினைத்து, என்னிலே நினைத்துநின்று. நோக்கு. " நினைதொறும் - நெஞ்சிடிந்துகும் " என்கிறபடியே, நெஞ்சு சிதிலமாய். கண்கள் அசும்போழுக. உள்ளுருகினது புறவெள்ளமிட்டபடி. அசும்பு ஒழுக - அசறுபாய.

நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன். நீ பண்ணினவுபகார பரம்பரைகளை அநுஸந்தித்திருந்தே சிரமந்தீர்ந்தேன். ஓடியாடின இளைப்பெல்லாம் இருந்தவிடத்தேயிருந்து ஆறினேன். சிரமம் - ச்ரமம்; இளைப்பு. ஸம்ஸாரிகள் பக்கலுபகார பரம்பரைகளைப் பண்ணிக்கொண்டு போராநிற்க, காதாசித்கமாக உபகாரத்திலே ஒன்று குறைதல் ஒரு உபகாரம் புகுருதல் செய்தால், முன்புபண்ணின உபகாரங்களையும் மறந்து இதொன்றையுமே நினைத்துக் கொண்டிருப்பர்கள்; அநாதிகாலமே பிடித்து இவர்கள்பண்ணும் ப்ராதிகூல்ய பரம்பரைகளொன்றையும் பாராதே, ஓவகாசத்திலே அபுத்திபூர்வகமான ஓராநுகூல்யைகதேசத்தைக் கொண்டு, முன்பு பண்ணினவற்றைப் பொறுத்தாகவிக்கும் ஈச்வரன் என்றநுஸந்தித்து, அல்விழுவு தீர்ந்தேன்- நெஞ்சாறல் கெட்டேன். தோமிலாயவனே. இவர்தாம்பற்றிற்று நிர்விசேஷ வஸ்துவையன்றே. நேடியவனே. கையும் திருவாழியுமான வழகுக்கு ஸல்லக்ஷணவொண்ணுதலவனே. * நிமிர் சுடராழி நெடுமாலிறே - * அழுதிலுமாற்றவிலி

யன். விரோதியற்ற பின்பு அழகுக்குடலிறே திருவாழி. நேடியவன். ஆழ்வார்பக்கல் ப்ரேமம் விளைந்தபடி யென்றுமாம். ... ... அ.

அ. ஒன்பதாம்பாட்டு. பனிக்கடலித்யாதி. கீழிற்பாட்டில் - "அனந்தன்பாலுங் கருடன்பாலும்" என்று - தன்னை புஜிக்கைக்கு போக்தாக்கள் ஒருவிபூதியாக வண்டா யிருக்கக் கிடீர் அவர்களை விட்டு என்னை விரும்பிற்றென்றார்; இப்பாட்டில் - போகஸ்தாநங் கள் பலவுமுண்டா யிருக்கக்கிடீர் அவற்றை உபேக்ஷித்து என்நெஞ்சை போகஸ்தாநமாகக் கொண்டபடி யென்கிறார்.

மூ.—பனிக்கடலிற்பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்தென்
மனக்கடலில்வாழவல்ல மாயமணாளநம்பீ
தனிக்கடலேதனிச்சுடரே தனியுலகேயென்றென்
றுனக்கிடமாயிருக்கவென்னை யுனக்குரித்தாக்கினையே. கூ.

பதவுரை.

பனி— குளிர்ச்சியே ஸ்வபாவமான
கடலில்— திருப்பாற்கடலில்
பள்ளிகோளை— பள்ளிகொள்ளுதலை
பழகவிட்டு— மறந்துவிட்டு
ஓடிவந்து— அங்கு நின்றும் ஓடிவந்து
என்— என்னுடைய
மனம் கடலில்— மஹஸ்ஸாகிற கடலிலே
வாழவல்ல— வாழவல்லவனுய்
மாயம்— ஆச்சர்ய சக்தியுக்தனுய்
மணாளன்— பெரியபிராட்டியாருக்கு வல்
லபனுய்
நம்பீ— குணபூர்ணனானவனே!
தனி கடல்'-அத்விதீயமான திருப்பாற்கடல்'
தனி சுடர்— 'அத்விதீயமான ஆதித்ய
மண்டலம்'
தனி உலகு— 'அத்விதீயமான பரமபதம்'
என்று என்று — என்றிப்புடைகளிலே
சொல்லுகிறதேசங்கள்
உனக்கு இடம் ஆய் இருக்க— உனக்கு வா
ஸஸ்தாநமாயிருக்க
என்னை— என்னை
உனக்கு— உனக்கு [ண்டாயே
உரித்து ஆக்கினையே— சேஷமாக்கிக் கொ
என்று முடிக்கிறார்.

வ்யா. பனிக்கடலில் பள்ளிகோளை. ஸகலதாபஹரமான கடல். ஸம்ஸாரத்தில் தாபத்ரய தப்தரானவர்களுக்குத் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளுகிறபடியை அநு ஸந்திக்கப்போமென்கை. சீதளஸ்வபாவமானகடல். "பாற்கடல் பாம்பணைமேல் பள்ளிகொ ண்டருளுஞ் சீதனை" என்று - அவனுடைய ஸ்வபாவம் இதுக்குண்டா யிருக்கிறபடி. ஸம்பந்தமடியான வாத்ஸல்யம். பள்ளிகோளை. பள்ளிகொண்டபடி யென்னுமித்தனை, பாசுரமிடப் போகாது. "கிடந்ததோர் கிடக்கை" என்றும், "ஏரார்கோலந் திகழக்கிட ந்தாய்" என்றும் சொல்லுமித்தனையிறே. "நாளும் வாய்க்க" என்கிறபாட்டில் ஒரு போலிசொல்லுமித்தனையிறே. இவர்தாமும் "வெள்ளை வெள்ளத்தின்மேல்" என்று - ஆசைப்பட்டபடியே வந்து புகுந்தானுய்த்து. பழகவிட்டு. அங்குண்டான ஆசையை நோக மறந்துவிட்டு.

ஓடிவந்து. காதக்குதிரை கட்டியாய்த்து வந்தது. என்மனக்கடலில் வாழவல்ல. அது பனிக்கடலாகையாலே குளிர்ந்திருக்கும்; இது மனக்கடலாகையாலே குளிர் கெட்டிருக்கும். ஆது ஊற்றுமாறிலும் இது ஊற்று மாறுது பனிக்கடலியும் தனக்குள்ளே அடக்குங்கடலிறே. [" பரவைத்திரை பலமோத " இத்யாதி.] இக்கடலைக் கண்டவாறே பனிக்கடல் காட்டுத்தீயை டொத்தது. வாழவல்ல. செருக்கரான ராஜாக்கள் பழைய படைவீட்டை விட்டு, தாங்களே காடுசெய்த்துச் சமைத்த படைவீட்டிலேயிறே ஆதரத்தோடேயிருப்பது. ஸாதந தசைபோலன்றிறே போகதசை. பனிக்கடலியும் விருப்புகைக்கடி, இவரைச் சேர்த்துக் கொள்ளுகைக்கு * யோகநித்திரை சிந்தை செய்கைக்கிறே. மனக்கடலில் வாழவல்ல. " வாழவல்ல வாசுதேவா. " அக்கடலிடமெங்கும் வாழ்ச்சியிறே. கீழிற் பாட்டிலே, " வாழச்செய்தாய் " என்று - ஆழ்வாரை வாழ்வித்து அவ்வாழ்வுகண்டு தான் வாழுகிறபடி. மாயமணுளாநம்பீ. இவர் திருவுள்ளத்திலே புகுந்தபின்பிறே, குணங்களும், திருமேனியில் செவ்வியும் பூர்த்திபெற்றது.

தனிக்கடலே. அத்விதீயமான கடலே. * குறையில் கடல்கடலிறே. பெரிய பிராட்டியாருக்குப் பிறந்தகமான விடமிறே. * உலகெல்லாம் நன்கொடுங்க யோகவீணையுங் கடலிறே. தனிச்சுடரே. " வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த்தோன்றி " என்று இவன் திருவவதாரம் பண்ணுகைக்கீடான குலகுருவாகையாலே வந்த அத்விதீயத்வம். தனியுலகே. " ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே " என்று - ஒருநாடாக ஒருமிதுநத்துக்கு சேஷமாகையால் வந்த அத்விதீயத்வம். " நலமந்தமில்லதோர் நாடு. " என்றென்றுனக் கிடமாயிருக்க. இப்படிக்கொத்த திருநாமங்களையுடைய தேசங்கள் உனக்கு இருப்பிடமாயிருக்க. என்னை. என்னையுமறியாதே உன்னையுமறியாதே யிருந்த வென்னை. (க) " கூரஸார்யதி. " உனக்கு. அவாப்த ஸமஸ்தகாமனை வுனக்கு. உரித்தாக்கினையே. ஓரிடமில்லாதாரைப்போலே, என்னெஞ்சை உனக்கு வாஸஸ்தாநமாகப் பண்ணிக்கொண்டாயே. இவ்வுபகாரத்துக்குத் தோற்று அடிமைப்படுகிறேன் - உனக்குரித் தாக்கினையே என்று. ... ... கூ.

அ. பத்தாம்பாட்டு. தடவரைபித்யாதி. கீழிற்பாட்டில் - உகந்தருளின நிலங்களோடொக்கத் தம் திருமேனியை விரும்பினனென்றார்; இப்பாட்டில் - அவற்றைவிட்டுத் தம்மையே விரும்பினபடியை யருளிச்செய்கிறார்.

மூ.—தடவரைவாய்மிளிர்ந்து மின்னுந்தவளநெடுங்கொடிப்போல்
சுடரோளியாய் நெஞ்சினுள்ளே தோன்றுமென்சோதிநம்பீ
வடதடமும் வைகுந்தமு மதிட்டவராவதியும்
இடவகைக ளிகழ்ந்திட்டென்பா லிடவகை கொண்டனையே. ஒ.

பதவுரை.

தட— பரப்பையுடைத்தான
வரைவாய்— மலையபர்வதத்திலே
மிளிர்ந்து மின்னும்— தேஜஸ்ஸாலே மிகவும் விளங்காநிற்பதாய்

(க) " அம்ர்யாதஃ "

தவளம்— வெளுத்த
நெடு— பெரிய
கொடிபோல்— கொடிஎல்லார்க்கும் காண லாயிருக்குமாபோலே
சுடர் ஒளி ஆய்— நிரவதிக தேஜஸ்ஸாய்
என் நெஞ்சின் உள்ளே— என் ஹ்ருதய கமலத்திலே
தோன்றுப்— தோன்றுநிற்கிற [வனே!
சோதிகம்பீ— தேஜஸ்ஸால் பூர்ணனான
வடதடமும்— வடதிசையிலுள்ள திருப் பாற்கடலும்
வைகுந்தமும்— ஸ்ரீவைகுண்டமும்
மதில்— மதிளால் சூழப்பட்ட
துவராவதியும்— ஸ்ரீத்வாரகையுமாகிற
இடவகைகள்— இப்படிக்கொத்த இடங் களேயெல்லாம்
இகழ்ந்திட்டு— உபேக்ஷித்துவிட்டு
இடவகை— இவ்விடங்களில் பண்ணும் ஆதரங்களேயெல்லாம்
என்பால்— என்பக்கலிலே
கொண்டனையே— பண்ணியருளினனே!

என்று ஏடுபடுகிறார்.

வ்யா. தடவரைவாய்மிளிர்ந்து மின்னும் தவளநெடுங்கொடிப் போல். ப்ரப்பையுடைத்தான மலையிலே ப்ரகாசமுமாய், தேஜஸ்ஸாலே விளங்காநிற்பதுமாய், பரிசுத்தமுமான பெரியகொடி எல்லார்க்கும் காணலாயிருக்குமா போலே, பெரிய பர்வத சிகரத்திலே அதி தவளமாய் மிளிருகிற பெரிய கொடிபோலே. மிளிருகை - திகழுகை. சுடரொளியாய். நிரவதிக தேஜஸ்ஸாய். நெஞ்சினுள்ளே தோன்றும். ஹ்ருதயகமலத்திலுள்ளே தோன்று நிற்கும். சோதிகம்பீ. தேஜஸ்ஸால் பூர்ணனெனவனே. சுடர் - திவ்யாத்ம ஸ்வரூபம். ஒளி - திவ்யமங்கள விக்ரஹம். சோதி - குணங்கள். நம்பீ, குறைவற்றிருக்கிறபடி. "என்" என்று - இவையெல்லாம் தமக்கு ப்ரகாசித்தபடி. தம்முடைய திருவுள்ளத்தே திவ்யமங்கள விக்ரஹத்தோடே ப்ரகாசித்தபடி. இவர் திருவுள்ளத்தே புகுந்தபின்பு திருமேனியிலே புகருண்டாய், பூர்த்தியுமுண்டானபடி. ["சிக்கெனச்சிறிதோரிடமும்" இத்யாதி.] இவர் சரமத்திலே இப்படி அருளிச் செய்கையாலே அநுபவித்த கர்ஷ்ணவிஷயம் உள்ளே பூரித்தபடி..

வடதடமும்இத்யாதி. ப்ரஹ்மாதிகளுக்கு முகங்கொடுக்கிற திருப்பாற்கடலும், (க) *ஸாரவ ஸ்)தி பிற்படிதேப - நித்யஸூரிகளுக்கு முகங்கொடுக்கிற பரமபதமும், ப்ரணயிகளுக்கு முகங்கொடுக்கிற ஸ்ரீமத்த்வாரகையும். இடவகைகளிகழ்ந்திட்டு. இப்படிக்கொத்த விடங்களேயெல்லாம், "கல்லுங் கனைகடலும் வைகுந்தவாணெடும்புல்" என்கிறபடியே உபேக்ஷித்து. என்பாலிடவகை கொண்டனையே. இவற்றில் பண்ணும் ஆதரங்களெல்லாவற்றையும் என்பக்கலிலே பண்ணினையே!. "உனக்குரித்தாக்கினையே" "என்பாலிடவகை கொண்டனையே" என்று இப்படி செய்தாயே என்று அவன் திருவடிகளிலே விழுந்து கூப்பிட, இவரையெடுத்து மடியிலேவைத்துத் தானும் ஆச்வஸ்தனானபடியைக் கண்டு ப்ரீதராய்த் தலைக்கட்டுகிறார். "அதனில் பெரியவென்னவா" என்று, நம்மாழ்வாருக்கு பகவத் விஷயத்தில் பிறந்த அபிநிவேசமெல்லாம், இப்பெரியாழ்வார் பக்கலிலே ஈச்வரனுக்குப் பிறந்தபடி இத்திருமொழி. தனிக்கடலே. ஈச்வரனுடைய * முனியே நான்முகன். "வடதடமும்" இத்யாதி. ... ...

(க) "ஸதாபச்யந்தி"

அ. வேயர்தங்கள் குலத்துதித்த. இதன்முதலடியை அநேகர்க்கு பலம், தம்மைப்போலே அநன்யார்ஹ சேஷத்வகாரகப் பெறுவர்களென்கிறார்.

மூ.—வேயர்தங்கள் குலத்துதித்த விட்டுசித்தன் மனத்தே
கோயில்கொண்ட கோவலனைக் கொழுங்குளிர் முகில்வண்ணனை
ஆயிரத்தையமர்கோவை யந்தணாதமுதத்தினை
சாயைபோலப் பாடவல்லார்தாமு மணுக்கர்களே. கக.

பெரியாழ்வார் திருமொழி முற்றிற்று.
பெரியாழ்வார் திருவடிகளேசரணம்.

பதவுரை.

வேயர்தங்கள்— வைதிகருடைய
குலத்து— குலத்திலே
உதித்த— திருவவதரித்த
விட்டுசித்தன்— பெரியாழ்வாருடைய
மனத்தே— மநஸ்ஸிலே
கோயில் கொண்ட— திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிற
கோவலனை— கோபகுமாரனுப்
கொழு— செவ்விபெற்றதாய்
குளிர்— குளிர்ந்திருந்துள்ள
முகில்— மேகம்போன்ற
வண்ணனை— நிறத்தையுடையவனுப்
ஆயர்— இடையர்களுக்கு
ஏற்றை— தலைவனானவனுப்
அமரர்— நித்யஸூரிகளுக்கு
கோவை— ஸ்வாமியானவனுப்
அந்தணர்தம்— ஸகாதி ப்ரஹ்மர்ஷிகளுக்கு
அமுதத்தினை— நிரதிசயபோக்யனுபுள்ளவனை
பாடவல்லார்தாம்— பாடவல்லவர்கள்
சாயை போல— நிழல்போலே
அணுக்கர்கள்— அந்தரங்கராகப் பெறுவர்கள்.

வ்யா. வேயர்தங்கள். உதயகிரியிலே ஆதித்யனுதித்தாற்போலே யாய்த்து இக்குடியிலே இவர் வந்தவதரித்தபடி. அவன் கேவலம் அந்தகாரத்தையிறே போக்குவது; "தனிச்சுடரே" என்று அவ்வாதித்யனுமிங்கேயாகையாலே அஜ்ஞாநாந்தகாரத்தைப்போக்கி, ஹ்ருத்தய கமலத்தை அலர்த்தும் ஆதித்யனுப்த்து இவர். விட்டுசித்தன் மனத்தே. விஷ்ணுசித்த ரென்று திருநாமம். மனத்தே. ஹ்ருதயத்திலே. விஷ்ணுசித்தர் என்ற திருநாமமாய், அவரிடமை அதிஷ்டாந பர்யந்தமானபடி. கோயில்கொண்ட கோவலனை. திருப்பல்லாண்டு தொடங்கி இவ்வளவும் இவர் திருவுள்ளத்திலே யிருக்கிற க்ருஷ்ணன், தான்பிறந்த படியையும் வளர்ந்தபடியையும் இவரைக்கொண்டு கேட்டபடி. வால்மீகிபகவான்பாட, குசலவர்களைக் கொண்டு கேட்ட சக்ரவர்த்தி திருமகனைப்போலன்றே ஸ்ரீநந்தகோபர் திருமகன் கேட்டபடி. "வைகுந்தங் கோயில்கொண்ட குடக்கூத்தன்" என்னுமாபோலேயன்று இவர் திருவுள்ளத்திலே கோயில்கொண்டபடி;—

"திருமாலிருஞ் சோலைமலையே திருப்பாற்கடலே யென்தலையே, திருமால் வைகுந்தமே தண்டிருவேங்கடமே யெனதுடலே" என்றும், "திருக்கடித்தானமு மென்னுடைச் சிந்தையும்" என்கிறபடியே உகந்தருளின நிலங்களோடொக்கவிறே ஆழ்வார் திருவுள்ளத்தை ஆதரித்தது. "நன்கென்னுடலங்கைவிடான்" "நங்கள் குன்றங்கைவிடான்;" எதுக்காக?; * நன்னுலகுரர் நலிகைக்காக. உடலங் கைவிடாதது எதுக்காக?; திருவாய்மொழி பாடுகைக்காக. அப்படியன்றிக்கே, "இடவகைகளிகழ்ந்திட்டு" என்கிறபடியே, அவற்றை உபேக்ஷித்திறே இவர் திருவுள்ளத்தை இடவகையாகக் கொண்டது. க்ருஷ்ணன்கோயில் பெரியாழ்வார் திருவுள்ளமாய்த்து. ஆகையாலிறே "மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்" என்றது. உள்ளிருப்பார் சொல்லும் வார்த்தை உடனிருப்பார்க்குத் தெரியுமிறே.

கோவலனை. தாய்த்த முலைத்தீலை வர்ந்தெதரித்து அவர்களுக்கு ஸுலபனாஞ்
போலே யாய்த்து இவர்க்கு ஸுலபனாயது. கொழுங்குளிர் முகில்வண்ணனை. "இவர்
திருவுள்ளத்திலே புருந்தின்பாய்த்து - குளிர்ந்து செவ்வியுண்டாய்த் தன் நிறம்பெற்ற
திருமேனி. முகில்வண்ணனை. இவர்க்குப் பண்ணின ஸுளதார்த்ய பெண்ணையுமாம். ஸுவரிய
பட்ட வடிவழகென்னையும்மம். ஆயரேற்றை. "இடையரோடே கலந்து பரிமாறப்பெற்
றோம்" என்கிற திருவுள்ளத்திலிப்ரியால் வந்த செருக்கோடே யிருக்குமாபோலே
யாய்த்து இவர் திருவுள்ளத்திலே புகுரப்பெற்ற ப்ரீதியால் வந்த செருக்கும். "செங்கனி
வா யெங்கையர் தேமே." அமரர்கோமை. அநுபவம் மாறில் முடியுடைப்படியான நித்ய
ஸூரிகளுக்கு ஸ்வாமியானவனை. "அப்பறுமமர்கள்திபதி." அந்தணர்தமமுதத்திலே
* தெளிகிலும்பிலே கடக்கிற அநுபவம் இவ்விபூதியிலே கடக்கும்படி யிருக்கிற ஸாதகர்
களுக்கு நிரதிசயபோக்யனாய் யிருக்கிறவனை. "பாற்கடல் பாம்பணைமேல் பள்ளிகொண்டா
ரைந்தி நினைவே தொழுவார் வினையுளாரிலுஞ் சீரியர்" என்னக்கடவதிறே. "வேதியர்
முழுவேதத்தமுதத்தை."

சாயைபோலப்பாடவல்லார் தாமுமணுக்கர்களை. எம்பாரைச்சிலர், "இப்படித்
தாக்குப் பொருளென்?" என்றுகேட்க; "நான் உடையவர் ஸ்ரீபாதத்திலே இது கேட்
டிலேன்; ஆகிலும், நீங்கள்கேட்ட வர்த்தம்போராதென்ன வொண்ணாது, இப்போதே
கேட்டு உங்களுக்குச் சொல்லவொண்ணாதபடி உடையவரும் திருக்கோட்டியூர்நம்பி ஸ்ரீப
தத்தே தற வெழுந்தருளினார்; ஆகிலும் உங்களுக்கு இப்போதே சொன்னாகவேணும்"
என்று உடையவர் திருவடிநிலைகளை யெடுத்துத் தம் திருமுடியிலே வைத்துக்கொண்டு
"இப்போது உடையவர் எனக்கருளிச்செய்தார், கேட்கலாகாதோ" என்று, "பாடவ
லார் - சாயைபோல - தாமுமணுக்கர்களை" என்றருளிச்செய்தார்.

"தாமும்" என்கைக்கடி- அவர்களேற்றத்தை நினைத்து. அதாவது ப்ரயோஜநாந்
ரங்களையும், உபாயாந்தரங்களையும் கணிசித்து மங்களாசாஸநம் பண்ணுகையன்றிக்கே, தத்
காலத்துக்கு மங்களாசாஸநம் பண்ணுகையுமன்றிக்கே, கழிந்தகாலத்துக்கும் மங்களாசாஸ
நம் பண்ணுகையிறே எற்றம். இப்படிக்கொத்த தண்மை தம்முடைய வம்சத்தில் ஏழுபடி
யில்லை யென்னுமிடத்தை "ஏழாட்காலும் பழிப்பிலோம்" என்றருளிச்செய்தாரிறே. பா
கையாவது "உன் செல்வடிசெவ்வி திருக்காப்பு" என்கை. சாயைபோலவென்றது- புருஷ
னுடைய சாயை அவன்புக்கவிடத்தே புக்குப் புறப்பட்டவிடத்தே புறப்பட்டு ப்ரவர்த்தி நிவ
ர்த்தி அவனிட்ட வழக்காமாப்போலே, இத்திருமொழி கற்றார்க்கும் தங்களுக்கென்ன ஒரு
ப்ரவர்த்தி நிவர்த்தி களின்றிக்கே ஈச்வரனுக்கு அந்தரங்கராகப் பெறுவர்கள். "செவ்வடி
செவ்வி திருக்காப்பு" என்று பாடவல்லார், * நிழலுமடிதாறுமாகப் பெறுவர்கள்.
அடிதாறு - திருவடிகளில் ரேகைகள். சாயைபோலப் பாடவல்லார் • நிழலுண்டாகப்
பாடவல்லார். நிழலாவது - குளிர்த்தி. "குளிரப்பாடவல்லார்" என்றுஞ் சொல்லுவ
வர்கள். ... ... கக.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

அடிவரவு.—சென்னி பறவை எம்மனு கடல் போன் னுண்
பருப் பனந்தன் பனி தடவரை வேயர் மார்கழி.

ஆகதிருமொழி-ஈகூ-க்கு, பாட்டு-சகூக.

பெரியாழ்வார் திருமொழி வ்யாக்யாநம் முற்றிற்று.

தமிழ் இலக்கம் — ஆட்டவணை

தமிழ்	க	உ	ரூ	ச	ரு	சூ	ள	அ	ஞ	ம
ஆங்கிலம்	1	2	3	4	5	6	7	8	9	10
தமிழ்	கக	கஉ	கரூ	கச	கரு	கசூ	கள	கஅ	கஞ	கம
ஆங்கிலம்	11	12	13	14	15	16	17	18	19	20
தமிழ்			ரூ0	ச0	ரு0	சூ0	எ0	அ0	ஞ0	ம00
ஆங்கிலம்			30	40	50	60	70	80	90	100
தமிழ்		உ00	ரூ00	ச00	ரு00	சூ00	எ00	அ00	ஞ00	கம்0
ஆங்கிலம்		200	300	400	500	600	700	800	900	1000